பணவியல்

{CURRENCY}

கோ. சிவஞானம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—511

பணவியல்

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத் திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்

கோ. சிவஞானம், எம். ஏ.,

துணைப் பேராசிரியர், பொருளியல் துறை,

அரசு ஆடவர் கல்லூரி,

உடுமலைப்பேட்டை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1973
Reprint—May, 1980
Number of Copies—2000

T.N.T.B.S. (C.P.) No. 511

© Government of Tamilnadu

CURRENCY

G. SIVAGNANAM

Price Rs. **8 - 20**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

***Printed by*:**

GANESA PRINTING WORKS,
22, Muthumari Chetty Street,
Madras-600 001

பதிப்புரை

பணவியல் என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **511** ஆவது வெளியீடாகும். இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனையாகிவிட்டன. ஆதலின் இப்பொழுது இந் நூல் மீண்டும் வெளிவருகிறது. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூகநல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

பொருளடக்கம்

பக்கம்

1. பணத்தின் வளர்ச்சியும் பணிகளும் ... 1

முன்னுரை—பண்டமாற்று முறையின் குறைபாடுகள்—பணத்தின் இலக்கணம்—பணம் : தோற்றமும் வளர்ச்சியும்—பணமும் நெருங்கிய பணமும்—பணம் புரி பணிகள்—பணத்தின் இயக்கநிலைப் பணிகளும் சலனமற்ற பணிகளும்—பணத்தின் வகைகள்—நல்ல பணப் பண்டத்தின் இயல்புகள்.

2. பணத்தின் முக்கியத்துவம் ... 22

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் பணம்—சமதர்மப் பொருளாதார அமைப்பில் பணம்—பணத்தின் சுழலோட்டம்—பணத்தின் சுழலோட்டத்தின் முக்கியத்துவம்.

3. பணத் திட்டம் ... 38

பணத் திட்டத்தின் வகைகள்—உலோகத் திட்டங்கள்—இரட்டை உலோக நாணய முறை (இரட்டை உலோகத் திட்டம்)—கிரஷாமின் விதி—தனி உலோக நாணயமுறை (ஒற்றை உலோகத் திட்டம்)—வெள்ளித் திட்டம்—பொன் திட்டம்—பொற்காசுத் திட்டம்—பொற் கட்டித் திட்டம்—பொன்மாற்றுத் திட்டம்—பொன்காப்புத் திட்டம்—பொன் சமன் திட்டம்—உள் நாட்டுப் பொன் திட்டமும் பன்னாட்டுப் பொன் திட்டமும்—உள் நாட்டுப் பொன் திட்டம்—பன்னாட்டுப் பொன் திட்டம்—பொன் திட்டம் செயல்படும் விதம்—பொன் திட்டத்தின் நிறைகளும் குறைகளும்—பொன் திட்டம் முறிவடைந்ததன் காரணங்கள்—நிகழ்காலத்தில் பொன்னின் நிலை—காகிதச் செலாவணித்

பக்கம்

திட்டம் அல்லது நிருவகிக்கப்பட்ட செலாவணி முறை—காகிதப் பண வெளியீட்டு விதிகளும் முறைகளும்—காகிதப் பணத் திட்டத்தின் நிறைகள்—காகிதப் பணத் திட்டத்தின் குறைகள்.

4. **பணத்தின் அளிப்பும், பணத்திற்கான தேவையும், வட்டி வீதமும்** ... **90**

பணத்தின் அளிப்பு—பணத்திற்கான தேவை—வட்டி வீதம்.

5. **பணத்தின் ரொக்கநிலைக் கோட்பாடு** ... **116**

ரொக்கநிலையும் ரொக்கமாகக்கூடிய சொத்துகளும்—நெருங்கிய பணமும் பணத்துறை நிர்வாகமும்.

6. **பணத்தின் மதிப்பு-குறியீட்டு எண்கள்** ... **125**

குறியீட்டு எண்கள்—குறியீட்டெண்கள் அமைக்கும் விதம்—நிறையிட்ட குறியீட்டு எண்கள்—குறியீட்டு எண்ணின் பயன்கள்—குறியீட்டு எண்களின் வகைகள்.

7. **பணத்தின் மதிப்பு** ... **139**

பண அளவுக் கோட்பாடு--பண அளவுக் கோட்பாட்டின் ரொக்க இருப்பு ஆய்வு முறை (அமெரிக்கச் சமன்பாடும் கேம்பிரிட்ஜ் சமன்பாடும்)—வருமானம் மற்றும் செலவு விளக்கம்—சேமிப்பு - முதலீட்டின் சமநிலை (சே = மு).

8. **பணவாக்கக் கைகோள்** ... **183**

நடுநிலைமையான பணக் கொள்கை—மாறாத அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதம்—பொருளாதார முன்னேற்றமும் பணவாக்கக் கைகோளும்—பணவாக்கக் கைகோளும் அரசிறைக் கைகோளும்.

பக்கம்

9. பணச்சந்தை ... **198**

விளக்கம்—பணச் சந்தையின் அங்கங்கள்—வளர்ச்சி பெற்ற பணச் சந்தையின் தன்மைகள்—பணச் சந்தையின் முக்கியத்துவம்—இலண்டன் பணச் சந்தை—இந்தியப் பணச் சந்தை.

10. பணவீக்கமும் பணவாட்டமும் ... **222**

பணவீக்கம்: பொருளும் இயல்பும்—பணவீக்கம்பற்றிய இரு முக்கியமான விளக்கங்கள்—பணவீக்கம் தோன்றுவதன் காரணங்கள்—பணவீக்கத்தின் தன்மைகள்—தேவையால் இழுக்கப்பட்ட பணவீக்கமும், உற்பத்திச் செலவால் உந்தப்பட்ட பணவீக்கமும்—பணவீக்க இடைவெளி—வளர்ச்சி குன்றிய நாடுகளில் பணவீக்கம்—பணவீக்கமும் பொருளாதார வளர்ச்சியும்—பணவீக்கத்தின் வகைகள்—பணவீக்கத்தின் விளைவுகள், பணவாட்டத்தின் தன்மைகள்—பணவாட்டத்தின் விளைவுகள்—பணவீக்கமும், பணவாட்டமும்-ஓர் ஒப்பீடு—பணவீக்கத்தையும் பணவாட்டத்தையும் கட்டுப்படுத்தும் முறைகள்.

11. வாணிபச் சுழல்கள் ... **281**

வாணிபச் சுழலின் இயல்புகள்—வாணிபச் சுழல் வகைகள்—வாணிபச் சுழலின் கட்டங்கள்—வாணிபச் சுழல்பற்றிய கோட்பாடுகள்—வாணிபச் சுழல்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்.

12. இந்தியச் செலாவணியின் வரலாறு ... **325**

சுதந்தரத்திற்கு முன் இந்தியச் செலாவணி—ஐந்தாண்டுத் திட்டங்களும், இந்தியச் செலாவணி முறையும்—இந்தியச் செலாவணியின் நிகழ்காலம்.

மேற்கோள் நூற்பட்டியல் ... **356**

கலைச்சொற்கள் ... **357**

1. பணத்தின் வளர்ச்சியும் பணிகளும்

முன்னுரை

'பணம்' எனும் மோகனமான மூன்றெழுத்துச் சொல் இன்றைய மனித சமுதாயத்தின் பெரும்பகுதியை ஆட்டிப் படைக்கின்றது. 'உலக இயக்கமே பணத்திற்காக' என்றும், 'உலகின் இயக்கமே பணத்தால்தான் நடைபெறுகின்றது' என்றும் கருதுமளவிற்குப் பணத்தைக்கொண்டு எதையுமே சாதித்துவிட முடியும் எனும் பிரமை மக்களிடையில் பரவி யுள்ளது. தற்காலச் சமுதாயத்தில் பணத்திற்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தைக் கண்ணுற்ற சாமர்செட் மாம்[1], 'பணம் மனிதனின் ஆறாவது புலன்' என்றும், 'இந்த ஆறாவது புலன் இல்லாவிடில் மற்ற ஐம்புலன்களும் அவற்றின் இயல்பான இயக்கமற்றுப் போய்விடும்' என்றும் கூறுகின்றார். பணத் திற்கு இத்தகைய முக்கியத்துவம் அளிக்கப்படுவதைப் பலர் இடித்துரைக்கின்றனர். எனினும், நடைமுறை வாழ்வில் பணம் முக்கியப் பங்கேற்பதை மறுப்பதற்கில்லை. மனித வாழ்வை முழுமை பெறச்செய்யும் முக்கியக் காரணியாகக் கருதப்படும் பணத்தின் இயல்பு, வரலாறு, மற்றும் அதனுடன் தொடர் புடைய பல்வேறு பிரச்சினைகள் ஆகியவற்றை அறிய முயல்வதே இந் நூலின் நோக்கமாகும்.

மனித சமுதாயத்தின் தொடக்க காலத்தில் மனிதனுடைய விருப்பங்களும் தேவைகளும் மிகக் குறைவாகவே இருந்தன. ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைத் தாமே முயன்று, அடைந்து, துய்த்தனர். காலப்போக்கில் மனிதனின் விருப்பங்களும் தேவைகளும் பெருகப் பெருக, மனிதன் தனக்குத் தேவை யான பொருள்களைத் தானே உற்பத்தி செய்துகொள்ள முடியாத நிலையை அடைந்தான். அதன் விளைவாகப் பரிவர்த்தனை தோன்றியது. சிறப்புத் தேர்ச்சி, வேலைப் பகுப்புமுறை ஆகியவற்றின் வளர்ச்சியுடன் பரிவர்த்தனையும் வளர்ந்தது. ஆரம்பக் காலத்தில் பண்டங்களுக்கு ஈடாகப்

[1] W. Somerset Maughm

பண்டங்களை மாற்றிக்கொள்ளும் நேர்முகப் பரிவர்த்தனையே நிலவிவந்தது. இம் முறைக்குப் பண்டமாற்று முறை[1] என்று பெயர்.

பண்டமாற்று முறையின் குறைபாடுகள்

நேர்முகப் பரிவர்த்தனையான பண்டமாற்று முறையில் கீழ்க்காணும் இடையூறுகளும் குறைபாடுகளும் நிலவின :

இருமுகத் தேவைப்பொருத்தம் இல்லாமை : பண்டமாற்று முறை திறம்படச் செயல்பட வேண்டுமாயின், இருமுகத் தேவைப் பொருத்தம் இருப்பது அவசியமாகும். பண்டமாற்றில் இருவர் ஈடுபட வேண்டுமாயின், அவ் விருவருள் ஒருவர் அளிக்கத் தயாராக இருக்கும் பொருளை ஏற்றுக் கொள்வதுடன், அவருக்குத் தேவையான பொருளை அளிப்பதற்கும் மற்றவர் தயாராக இருந்தால்தான் பண்டமாற்று நிகழ முடியும். இத்தகைய இருமுகத் தேவைப் பொருத்தம் இல்லாவிடின், அவர்களிடையில் பண்டமாற்று நிகழ்வதற்கே வாய்ப்பில்லை.

எடுத்துக்காட்டாக, விவசாயி ஒருவரும் நெசவாளர் ஒருவரும் பண்டமாற்றை மேற்கொள்ள விரும்பினால், விவசாயியின் நெல்லை ஏற்றுக்கொள்வதற்கும், அவருக்குத் தேவையான துணியை அளிப்பதற்கும் நெசவாளர் தயாராக இருக்கவேண்டும். நெசவாளரும் துணியைக் கொடுத்து அதற்கீடாக நெல்லைப் பெற்றுக்கொள்வதற்கு முன் வரவேண்டும். இந் நிபந்தனை நிறைவு செய்யப்பட்டால், பண்டமாற்று நிகழ்வது எளிதாகும். ஆனால், நடைமுறையில் ஒருவர் அளிக்கும் பொருளுக்கீடாக அவருக்குத் தேவைப் படும் பொருளை அளிப்பதற்கு மற்றவர்களால் இயலாவிடில், பண்டமாற்று நிகழ்வதற்கில்லை.

இருமுகத் தேவைப் பொருத்தம் இல்லாவிடில், பண்டமாற்று நிகழ்வுறாது. அதன் விளைவாக நுகர்வோர் தமக்குத் தேவையான பொருள்களை நுகர்வதும் இயலாது. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் யாவும் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு இடையீட்டுக் கருவி ஒன்று அவசியமாகின்றது. இவ் விடையீட்டுக் கருவியின் துணைகொண்டு ஓர் உற்பத்தியாளர், தமது பொருள்களை விற்பனை செய்து கிடைக்கும் வருவாயைக்கொண்டு தமக்குத் தேவையான பொருள்களை எளிதில் பெறமுடியும்.

[1] Barter Exchange

பொதுவான மதிப்பளவுகோல் இல்லாமை : பண்ட மாற்று முறையில் பொருள்களுக்கு ஈடாகப் பொருள்களே மாற்றிக்கொள்ளப்படுவதால், ஒவ்வொரு பொருளின் மதிப்பையும் துல்லியமாக அளவிடுவது இயலாதது ஆகும். ஒரு பொருளின் மதிப்பை உணர்த்த வேண்டுமாயின், மற்றொரு பொருளின்மூலமே, அதன் மதிப்பை உணர்த்த முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு மூட்டை நெல்லிற்கு ஈடாக இரண்டு இருக்கைகள் அளிக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். இதன்படி ஒரு மூட்டை நெல்லின் மதிப்பு இரண்டு இருக்கைகளின் மதிப்பிற்குச் சமம் என்றாகின்றதே தவிர, ஒரு மூட்டை நெல்லின் உண்மையான மதிப்பையோ இருக்கையின் மதிப்பையோ துல்லியமாக அளவிடுவது இயலாதது ஆகும்.

மேலும், ஒரு பொருளை மற்றொரு பொருளைக்கொண்டு மதிப்பிடுவது நடைமுறையில் இயலாத செயலாகும். உலகில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் வகைகளை அதிகரிக்கும்பொழுது, ஒரு பொருளின் மதிப்பை, மீதமுள்ள ஒவ்வொரு பொருளின்மூலமும் உணர்த்துவது இயலாததாகும். உலகில் 100 வகைப் பொருள்கள் இருப்பதாகவும், அவற்றில் ஒவ்வொன்றின் மதிப்பையும் மற்றுமுள்ள ஒவ்வொரு பொருளின்மூலமும் உணர்த்த வேண்டுமெனவும் வைத்துக் கொண்டால், 4950 மாற்று விகிதங்கள் கண்டுபிடிக்கப்படுவது அவசியமாகும். இவ்வளவு மாற்று விகிதங்களைக் கண்டு பிடிப்பது கடினமானது என்பதுடன், மனித முயற்சியில் பெரும் பகுதியை விரயமாக்கும் செயலுமாகும்.

பணம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இவ் விடையூறு மறைந்தது. பொருளுக்கு அளிக்கப்படும் விலையே, பொருளை மதிப்பிடும் அலகாகவும் பயன்படுவதால், மனிதர்களின் உழைப்பும் காலமும் சிக்கனப்படுத்தப்படுகின்றது.

பண்டங்களைப் பகுக்க முடியாமை : பண்டமாற்று, முறையாக நடைபெற வேண்டுமாயின், பண்டங்களைப் பகுப்பது அவசியமாகும். ஆனால், பண்டங்களைச் சிறுசிறு பகுதிகளாகப் பகுப்பது நடைமுறையில் இயலாததாகும். எடுத்துக்காட்டாக, உயர் மதிப்புள்ள மேலங்கி ஒன்றை அளித்து அதற்கீடாகத் தமக்கு வேண்டிய ரொட்டி, பால், பழம் ஆகியவற்றைப் பெற ஒருவர் விரும்புகின்றார் என்று வைத்துக் கொள்வோம். மேலங்கியின் மதிப்பைக்காட்டிலும் ரொட்டி, பால், பழம் ஆகியவற்றின் மதிப்புக்குறைவாகையால், அவற்றில்

ஒவ்வொன்றிற்கும் ஈடாக மேலங்கியை அளிக்கவியலாது. அவற்றில் ஒவ்வொன்றின் மதிப்பிற்கும் ஏற்ற வகையில் மேலங்கி கிழித்துக் கொடுக்கப்படுமாயின், மேலங்கி பயனற்றுப் போவதுடன், பண்டமாற்றும் நடைபெறவியலாது. இவ்வாறே உயிர் உள்ள ஒன்றினை அளித்து மற்றொரு பொருளைப் பெற முயலும்பொழுதும், உயிருள்ள பொருள் உயர் மதிப்பு உடையதாயின், அதனைக் குறைவான மதிப்புள்ள பொருள் களுக்கு ஈடாகப் பகுக்க முயன்றால், அப் பொருள் உயிரிழந்து பயனற்றுப் போகும்; பண்டமாற்றும் நடைபெறவியலாது.

பொதுவாக, பண்டங்களைத் தேவைக்கு ஏற்பப் பகுத்து அளிப்பதற்கு வாய்ப்பிருந்தால்தான் பண்டமாற்று நடைபெற முடியும்.

பண்டமாற்று முறையில், மேற்காணும் இடர்ப்பாடு நிலவியதால்தான், அதனைக் களைவதற்காக மனித இனம் முயன்றது. அத்தகைய முயற்சியின் விளைவே பணம் ஆகும். பணம் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாகப் பண்டமாற்று முறை மறைந்ததாயினும், அம் முறை முற்றும் வழக்கொழிந்து விட்டதாகக் கொள்வது தவறாகும். தற்காலத்திலும் கிராமப் பகுதிகளில் சில்லறை வியாபாரங்களில், பெருமளவில் பண்ட மாற்று முறை மேற்கொள்ளப்படுகின்றது. வீட்டுப் பணியாளர் களும், விவசாயக் கூலிகளும், அரைவை ஆலைகளில் பணி புரிவோரும் தமது கூலியை முழுமையாகவோ பகுதி யாகவோ பண்டமாற்று முறையில் பெறுகின்றனர். ஆயினும், அவை யாவும் பொருளாதார நடவடிக்கைகளை மாற்றி யமைக்கும் அளவிற்கு முக்கியத்துவம் பெறுவதில்லை.

பணிகளைப் பெற முடியாமை : மனிதனால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அனைத்திற்கும் உருவ அமைப்பு உள்ளது. அவை யாவும் கண்ணுக்குப் புலனாகக்கூடியவை யாகும். எனவே, பண்டமாற்றுப் பொருளாதார அமைப்பில் ஒரு பண்டத்தைக் கொடுத்து அதற்கீடாக மற்றொரு பண்டத்தைப் பெறுவது இயலக்கூடும். ஆனால், உருவ அமைப்பேயற்ற—கண்ணுக்குப் புலனாகாத—பணிகளுக்கு ஈடாக எதனைக் கொடுப்பது? அவற்றின் மதிப்பை எங்ஙனம் கணக்கிடுவது? ஆசிரியர்கள், வழக்குரைஞர்கள், மருத்து வர்கள், தொழில் நுணுக்க ஆலோசகர்கள் போன்றோரின் பணிகளை மதிப்பிடுவதும், அத்தகைய பணிகளைப் பெறும் பொழுது அவற்றிற்கீடான பண்டங்கள் அல்லது பணிகளின்

அளவை நிர்ணயிப்பதும் பண்டமாற்று முறையில் இயலா தவையாகும்.

செல்வத்தைச் சேமித்துவைக்க முடியாமை: மனித உழைப்பின் அடிப்படை நோக்கமே தன்னல முனைப்பு ஆகும். நிகழ்காலத்தில் உழைக்கும் ஒவ்வொருவரும், தமது எதிர்கால வாழ்வு நிம்மதியானதாக அமைவதற்கு ஏற்ற வகையில், நிகழ் கால வருவாயில் சிறு பகுதியையேனும் சேமித்து வைக்க முயலுகின்றனர். இவ்வாறு செல்வத்தைச் சேமித்து வைப்பது என்பது பண்டமாற்று முறையில் இயலாததாகும். எடுத்துக் காட்டாக, பெருநிலக்கிழார் ஒருவர் தமது விளைச்சலில் பெரும்பகுதியைச் சேமித்து வைப்பது நடைமுறையில் இயலாததாகும். இவ்வாறே எளிதில் அழியக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்வோரும் ஒரு குறிப்பிட்ட காலத் திற்கும் அதிகமாகத் தமது பொருள்களைச் சேமித்து வைக்க இயலாது. பொருள்களை நெடுங்காலத்திற்குச் சேமித்து வைத்தால், அவை அழிந்துவிடக்கூடுமென்பதுடன், மனித உழைப்பின் பெரும்பகுதி அத்தகைய முயற்சியில் விரய மாகுமென்பதும் வெளிப்படையாகும்.

கடன் பெறவும் அளிக்கவும் இயலாமை: பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவிலும் துரிதமாகவும் மேற்கொள்ளப் படுவதற்குக் கடன் இன்றியமையாததாகும். வங்கிகளும், காப்பீட்டு நிறுவனங்களும், நிதி உதவி அளிக்கும் நிறுவனங் களும் வளர்ச்சி பெற்றதற்குப் பின்னரே, பேரளவு உற்பத்தி முறை மேற்கொள்ளப்பட்டது எனில், பொருளாதாரப் பொறியை இயக்குவதில் கடனின் பொறுப்பை எளிதில் உணரலாம். பண்டமாற்று முறையில் கடன் பெறுவதும், கடன் அளிப்பதும் இன்னல் மிக்கவையாகும். பொருள் களைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட அளவு பொருள் களைக் கடனாகப் பெற்று, குறிப்பிட்ட காலக் கெடுவிற்குப் பின்னர்த் திருப்பியளிக்க முடியும். ஆனால், உயிர் உள்ள பொருள்களையும் பணிகளையும் கடனாகப் பெறுவது எங்ஙனம்? அத்தகையவற்றைக் கடனாகப் பெறுவதும் திருப்பி அளிப்பதும் பண்டமாற்று முறையில் இயலாதவை யாகும்.

இவ்வாறு இடையூறுகள் மிக்கவையாகப் பண்டமாற்று முறை இருந்ததன் விளைவாக, நேர்முகப் பரிவர்த்தனையைக் கைவிட்டு, அதற்குப் பதிலாக ஏதேனும் ஓர் இடையீட்டுக்

கருவியின் துணையுடன் மறைமுகப் பரிவர்த்தனையை மேற்கொள்ள மனிதன் தலைப்பட்டான். இவ்வாறு பயன் படுத்தப்படும் இடையீட்டுக் கருவியானது எல்லோருக்கும் தெரிந்ததாகவும், அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகவும், மதிப்பில் மாறாததாகவும் இருப்பது அவசிய மாகும். இவ்விதத் தன்மைகள் கொண்ட இடையீட்டுக் கருவியே பணம்[1] ஆகும்.

பணத்தின் இலக்கணம்

பணத்திற்கு இலக்கணம் வரைவதற்குப் பலர் முயன் றுள்ளனர். எனினும், ஒவ்வோர் இலக்கணத்திலும் ஏதேனும் ஒரு குறை உள்ளது. எடுத்துக்காட்டாக, பேராசிரியர் வாக்கர்[2], 'பணத்தின் பணிகளைப் புரிவதே பணம்' என்று கூறியுள்ளார். இவ் விலக்கணம் பணம் என்றால் என்ன வென்பதை விளக்காமல் தெளிவற்றிருப்பதை உணரலாம். இலக்கணம் வரைய முயன்ற சிலர் பணத்தின் பணிகளில் ஏதேனும் ஒன்றிரண்டிற்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து விளக்கியுள்ளனர். சான்றாக டி. எச். ராபர்ட்சன்[3], 'வாணிப வேண்டுகோள்களை நிறைவேற்றும்பொழுதோ பொருள்களுக்கு ஈடாகவோ பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய எதுவாயினும் பணமாகும்' என்றும், செலிக்மேன்[4], 'எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதே பண' மென்றும் கருதினர். இவ் விலக்கணங்கள் பணத்தின் ஏதேனும் ஓர் இயல்பைமட்டுமே விளக்குவதாகவும், நிறைவற்றிருப்ப தாகவும் உணரலாம். பணத்தின் பல்வேறு பணிகளையும், அதன் இயல்பையும் விளக்கும் இலக்கணமே முழுமைபெற்ற இலக்கணமாகும். எனவே, ஜியோஃப்ரி கிரௌதர்[5] பின் வருமாறு பணத்திற்கு இலக்கணமுரைக்கின்றார் : 'பொது வாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதும், பரிவர்த் தனையின்பொழுது இடையீட்டுக் கருவியாகவும் அதே நேரத்தில் மதிப்பளவுகோலாகவும் பணிபுரியக்கூடிய எதுவுமே

[1] பணத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான 'Money', உரோமர் காலத்திலிருந்து பெறப்பட்டதாகும். உரோமப் பேரரசின் முதல் நாணயம் அச்சிடும் சாலை, 'Juno Moneta' எனும் தெய்வத்தின் கோவிலுக்குள் நிறுவப் பட்டது. உரோமப் பேரரசின் நாணயங்களில ஒருபுறத்தில் அத் தெய்வத்தின் உருவமும் அதன் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது. காலப்போக்கில், நாணயச் சாலையிலிருந்து வெளியிடப்பட்ட பொருளுக்கே அப் பெயர் வழங்க லாயிற்று.

[2] Prof. Walker

[3] D. H, Robertson

[4] Seligman

[5] Geoffrey Crowther

பணமாகும்.' இவ் விடையீட்டுக் கருவி உலோகத்திலோ காகிதத்திலோ வெளியிடப்படலாம்.

பணம் : தோற்றமும் வளர்ச்சியும்

பண்டமாற்று முறையின் இடையூறுகளைக் களைந்து, பொதுவான இடையீட்டுக் கருவியாக ஏதேனும் ஒன்று இருக்க வேண்டுமென்பதை உணர்ந்த மனிதர்கள், தாங்கள் வசிக்கும் நாடுகளின் தட்பவெப்ப நிலைக்கும், அங்குக் கிடைக்கும் பொருள்களின் இயல்புகளுக்கும் ஏற்ப, தங்கள் இடையீட்டுக் கருவியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டனர்.

ஆரம்பக் காலத்தில் பண்டங்களே பணமாக வழங்கப் பட்டன. பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் அரிசி, கோதுமை, புகையிலை போன்றவை பணமாகப் பயன் படுத்தப்பட்டன. கடற்கரைப் பகுதிகளில் கிளிஞ்சல்களும், குளிர்மிக்க நாடுகளில் மிருகங்களின் தோலும், வெப்ப நாடு களில் யானைத் தந்தமும், பறவைச் சிறகும், புலிப் பல்லும் பணமாகப் பயன்படுத்தப்பட்டன.

நாகரிகம் வளர்ச்சியுற வளர்ச்சியுற, பண்டங்களை விடுத்துப் பொன், வெள்ளி, செம்பு போன்ற கிடைப்பருமை யான உலோகங்கள் பணமாக வழங்கப்பட்டன. உலோகப் பணங்களின் மதிப்பு நிலைத்திருக்குமென்பதாலும், அவை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுமென்பதாலும் உலோகங் களை அரசுகள் நாணயங்களாக அச்சிட்டு வெளியிட்டன.

17ஆம் நூற்றாண்டில் காகிதப் பணம் உலோகப் பணத் திற்குப் பதிலியாகப் புழக்கத்திற்குவந்தது. எனினும், விரைவில் அவையும் பணமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டன. அண்மைக் காலத்தில் வங்கிகள் வெளியிடும் காசோலைகள்[1], பற்றுரிமைச் சீட்டுகள்[2] போன்ற வங்கிப் பணங்களை வங்கிகள் வெளியிடு கின்றன. அவை ஒரு வரம்பிற்குள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

பணமும் நெருங்கிய பணமும்[3]

ஒரு நாட்டில் எந்தவொரு நேரத்திலும் புழக்கத்திலிருக்கும் பணத்தின் அளிப்பானது, சட்டச் செலாவணி மற்றும் வங்கி

[1] Cheques
[2] Drafts
[3] Money and Near-money

வைப்பின் கூடுதல் தொகைக்குச் சமமாகும். சட்டச் செலாவணி என்பது, மைய வங்கியினால் வெளியிடப்படும் காகிதச் செலாவணிகளையும் காசுகளையும் குறிப்பிடும். சட்டச் செலாவணிகள் ரொக்கமாகவிருப்பதால், அவற்றை விரும்பும்பொழுது உடனடியாகப் பயன்படுத்தலாம். பொது வாகச் சிறு அளவில் கொள்முதல்கள் நடைபெறும்பொழுது சட்டச் செலாவணிகளே பயன்படுத்தப்படுகின்றன. வங்கிப் பணத்தில் காசோலைகள்மூலம் உடனடியாக ரொக்கமாக்கப் படக்கூடிய தேவை வைப்புகள்மட்டுமே அடங்கும். வங்கிப் பணம், பேரளவுக் கொள்முதல்களில் பயன்படுத்தப்படு கின்றன. தொழில் உரிமையாளர்களும், பெரும் வாணிப நிறு வனங்களும் காசோலைகள் போன்ற வங்கிப் பணத்தையே பயன்படுத்துகின்றன. தற்காலப் பொருளாதார வாழ்வில், பணத்தின் மொத்த அளிப்பில், வங்கிப் பணத்தின் வீதம் பெரும்பகுதியாகும்.

பணம் தவிர, உடனடியாக ரொக்கமாக்கக்கூடிய சொத்துகள் பல உள்ளன. அவை யாவும் நெருங்கிய பணம் என்று குறிப்பிடப்படுகின்றன. நெருங்கிய பணத்தை, பண்டங் களையும் பணிகளையும், வாங்கும்பொழுதும் விற்கும் பொழுதும் நேரிடையாகப் பயன்படுத்த முடியாது; ஆனால், நெருங்கிய பணத்தை ரொக்கமாக்கிப் பயன்படுத்தலாம். நெருங்கிய பணமானது ரொக்கத்தின் அளவிற்கு நீர்மைத் தன்மையற்றதெனினும், அதுவும் நீர்மைத் தன்மை உடையதே யாகும். வாணிப உண்டியல்கள், கருவூல உண்டியல்கள், கடன் பத்திரங்கள் போன்றவை நெருங்கிய பணத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இவை யாவும் பணம் கோரும் உரிமையைக் கொண்டவையாகும். இவற்றிற்கென்று இருக்கும் பணச் சந்தையில் இவற்றை வெகு எளிதிலும் விரைவிலும் ரொக்கமாக்கிக்கொள்ள முடியும். அவை பணத்திற்கு நெருக்க மான பதிலிகளாக விளங்குவதால், அவற்றைப் 'பணப் பதிலிகள்' அல்லது 'நெருங்கிய பணம்' அல்லது 'ரொக்க மாக்கக்கூடிய சொத்துகள்' என்று குறிப்பிடலாம்.

நெருங்கிய பணச் சொத்துகள் யாவும் உண்மையிலேயே பணமல்லவாயினும், அவை பணம் கோரும் உரிமையைக் கொண்டவை ஆகும். ஒருவிதத்தில் பணமும், ஒரு நெருங்கிய பணமேயாகும். அவையிரண்டும் பணம் கோரும் உரிமை களாகும். சட்டச் செலாவணியை வைத்திருப்பவர் அதை வெளியிட்ட மைய வங்கி அல்லது அரசிடம் பணத்தைக் கோர

உரிமை உள்ளவராவார். தேவை வைப்புகள் வைக்கப்பட்டிருக்கும் வங்கியிடம் பணம் கோரும் உரிமையை வைப்பாளருக்கு அளிக்கின்றன. இவ்வாறே நெருங்கிய பணமும், அதை வைத்திருப்போருக்குப் பணம் கோரும் உரிமையை அளிக்கின்றது. நெருங்கிய பணத்தை வைத்திருப்பவர் அதை வெளியிட்ட நிறுவனத்திடம் பணம் கோரும் உரிமையைப் பெறுகின்றார்.

பணமும், நெருங்கிய பணமும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். சாதாரணமாக, செலவிட முற்படும் ஒருவர் தம் வசமிருக்கும் ரொக்கத்தைமட்டுமே செலவிடுவார். ஆனால், அவசியம் ஏற்படுமாயின், அவருடைய நெருங்கிய பண அளவிற்கும் ஏற்பச் செலவிடக்கூடும். ஆதலால், பொது மக்களின் செலவுகளைக் கட்டுப்படுத்த விரும்பும் பணவாக்க நிர்வாகத்தினர், ரொக்கத்தைக் கட்டுப்படுத்துவதுமட்டுமன்றி, நெருங்கிய பணத்தையும் கட்டுப்படுத்துவது அவசியமாகின்றது.[1]

பணம் புரி பணிகள்[2]

உலகின் போக்கை எழுதும் கலை, உருளை, பணம் ஆகிய மூன்றும் புரட்சிகரமாக மாற்றியமைத்துவிட்டதாக ஆடம் ஸ்மித் குறிப்பிடுகின்றார். மனிதனின் புத்தாக்கங்கள் அனைத்திலும் பணமே, அடிப்படைப் புத்தாக்கமாகும். 'மனிதன் புனைந்துள்ள புதுமைகளுள் பணம் அடிப்படையானதொன்றாகும். மனித அறிவியலின் ஒவ்வொரு பிரிவிலும் ஓர் அடிப்படையான கண்டுபிடிப்பு உண்டு. பொறித் துறையில் சுழலும் உருளையும், அறிவியலில் நெருப்பும், அரசியலில் வாக்குரிமையும் இத்தகைய கண்டுபிடிப்புகளாகும். அதேபோன்று, பொருளாதாரத் துறையில், ஏன் மனிதனுடைய சமூக வாழ்க்கை அனைத்திலும், பணம் ஓர் இன்றியமையாத கண்டுபிடிப்பாகும். இதை அடிப்படையாகக் கொண்டுதான் மற்றெல்லா மனித நடவடிக்கைகளும் நடந்தேறிவருகின்றன' (கிரௌதர்).

பணத்தின் தோற்றத்தால் பண்டங்களுக்கு ஈடாகப் பண்டங்களை மாற்றிக்கொள்ளும் முறை மறைந்து, பண்டங்களை அங்காடியில் விற்பனை செய்வதன்மூலம் கிடைக்கும்

[1] நெருங்கிய பணம்பற்றி, 'பணத்தின் ரொக்கநிலைக் கோட்பாடு' எனும் கட்டுரையில் விரிவாகக் காண்க.

[2] Functions of money

பணத்தைக்கொண்டு வேறு பொருள்களை வாங்க முடிகின்றது; இருமுகத் தேவைப் பொருத்தம் இல்லாமலேயே பரிவர்த்தனை நிகழவும், பண்டங்களின் மதிப்பை அளவிடவும், செல்வத்தைச் சேமித்து வைக்கவும் முடிகின்றது. பொருளாதார நடவடிக்கைகளை இவ்வாறு எளிமையாக்கிப் பரவலாக்கிய பெருமை பணத்தையே சாரும்.

தற்கால உலகில் பலவகைப் பணிகளைப் பணம் ஆற்றுகின்றதெனினும், அவற்றை மூன்று தலைப்புகளில் ஆராய்வது வழக்கமாகும்.

அவை :

(அ) முதன்மைப் பணிகள்[1].

(ஆ) துணைப் பணிகள்[2].

(இ) பிற வகைப் பணிகள்[3].

(அ) பணத்தின் முதன்மைப் பணிகள்-பரிவர்த்தனைச் சாதனம்: பணம், பண்டங்களை விற்கும்பொழுதும் வாங்கும் பொழுதும் ஓர் இடையீட்டுக் கருவியாகப் பயன்படுகின்றது; இருமுகத் தேவைப் பொருத்தம் இல்லாமலேயே பரிவர்த்தனை நிகழ்வதற்குத் துணை செய்கின்றது. ஒவ்வொருவரும் தமது பொருள்களை அங்காடியில் விற்பதன்மூலம் கிட்டும் பணத்தைக்கொண்டு தமக்குத் தேவையான வேறு பொருள்களை வாங்கிக்கொள்ளலாம். பணம் தோன்றாமலிருந்தால், இருமுகத் தேவைப் பொருத்தம் இல்லாமல் வாணிபம் நடப்பதற்கே வாய்ப்பில்லை. எனவே, பண்டங்களை விற்கும்பொழுதும், வாங்கும்பொழுதும் பணம் ஒரு பரிவர்த்தனைச் சாதனமாக[4] விளங்குவது வெளிப்படை.

மதிப்பளவை[5]: பண்டமாற்று முறையில் பண்டங்களையும் பணிகளையும் மதிப்பிடுவதற்கு ஒரு பொதுப்படையான அளவை இல்லாமலிருந்தது. ஆனால், பணத்தின்மூலம் எவ்வகைப் பொருளையும் மதிப்பிடவும் உணர்த்தவும் முடியும். பண்டங்களையும் பணிகளையும் விலைக்கு வாங்குகின்றோம் அல்லது விற்கின்றோமல்லவா ? இந்த விலைதான் அப் பொருளின் அல்லது பணியின் மதிப்பாகும். துணியை அளப்பதற்கு

[1] Primary functions
[2] Secondary functions
[3] Contingent functions
[4] Medium of exchange
[5] Measure of value

மீட்டரும், திரவங்களை அளப்பதற்கு லிட்டரும் பயன்படு வதைப் போன்று, பொருள்களின் மதிப்பினை அளவிடுவ தற்குப் பணம் பயன்படுகின்றது. அதாவது, பணம் ஒரு மதிப் பளவுகோலாகப் பயன்படுகின்றது. பணத்தின் இரண்டாவது பணியானது, முதல் பணியின் தொடர்ச்சியாகும். பணம் பரிவர்த்தனைச் சாதனமாகப் பயன்படுவதாலேயே, பணத் தைக்கொண்டு பொருள்களை வாங்க முடிகின்றது; மதிப்பை அளவிட முடிகின்றது. பணத்தின் முதன்மைப் பணிகள் இரண்டும் நெருக்கமான தொடர்புகொண்டவையாகும்.

(ஆ) துணைப் பணிகள்: பணத்தின் துணைப் பணிக ளாக மூன்றைக் குறிப்பிடலாம்: பணம் மதிப்பின் வைப்பு[1] ஆகவும், தள்ளிப்போட்ட செலுத்துச் சாதனமாகவும்[2], மதிப்பு மாற்றுச் சாதனமாகவும்[3] பயன்படுகின்றது.

மதிப்பின் வைப்பு: பண்டமாற்று முறையில் பண்டங் களையும் பணிகளையும் சேமித்து வைப்பதியலாது. அவ்வாறு சேமித்து வைப்பதற்கு முயன்றால், அவை அழிந்துவிடக்கூடும். ஆனால், பணம் தோன்றிய பின்னர்ச் செல்வத்தைச் சேமித்து வைப்பது எளிதாயிற்று. பணத்தின் தோற்றத்திற்கு முன்னர், செல்வத்தைச் சேமித்து வைக்கவேண்டுமெனில் செல்வப் பொருள்களைத்தாம் சேமித்து வைக்க வேண்டும். பணம் தோன்றிய பின்னர், செல்வப் பொருள்களை விற்பதன்மூலம் கிட்டும் பணத்தைச் சேமித்து வைப்பதன்மூலம் சொத்தைச் சேமித்து வைப்பதென்பது எளிதாயிற்று.

தள்ளிப்போட்ட செலுத்துச் சாதனம்: பணம், எதிர் காலப் பட்டுவாடா செய்வதற்கு ஏதுவாக உள்ளது. பொரு ளாதார நடவடிக்கைகள் பலவும் கடன் அடிப்படையில்தான் மேற்கொள்ளப்படுகின்றன. வாணிபத்திலும் கடன் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இத்தகைய கடன்கள் அளிக்கப் பெறுவதும் அதற்கான வட்டிவீதங்கள் நிர்ணயிக்கப் பெறு வதும் பணத்தின்மூலமாகத்தான் நடைபெறுகின்றன. இவ் வாறே ஒப்பந்தங்களும் பணத்தின் மூலமாகத்தான் நிர்ணயிக் கப் பெறுகின்றன. பணம் இல்லாவிடில் கடன் எழுப்பு வதற்கும், ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்கும், அவற்றை எதிர்காலத்தில் திருப்பியளிப்பதற்கும் வாய்ப்பில்லை.

[1] Store of value
[2] Standard of deferred payments
[3] Transfer of value

மதிப்பு மாற்றுச் சாதனம்: செல்வத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றுவதற்கும், ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு மாற்றுவதற்கும் பணம் உதவுகின்றது. பணம் அனைவராலும், அனைத்து இடங்களிலும் மதிப்புடன் ஏற்றுக்கொள்ளப்படுவதாகையால், செல்வத்தின் இடப் பெயர்ச்சி எளிதாகின்றது. தற்காலத்தில் செல்வம் இடம் பெயர்வது பணத்தின்மூலம் நடைபெறுவதைக்காட்டிலும் காசோலைகள், பற்றுச்சீட்டுகள்மூலமே நடைபெறுகின்றது.

(இ) **பிற வகைப் பணிகள் - தேசிய வருமானத்தின் பகிர்வு:** தற்காலத்தில் தேசிய வருமானம் நாட்டு மக்களிடையில் பகிர்ந்தளிக்கப்படுவதிலும் பணம் உதவுகின்றது. தற்கால உற்பத்தித் துறை கூட்டு உற்பத்தித் துறையாகும்; உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் ஒவ்வொன்றும் பல்வேறு காரணிகளின் கூட்டு முயற்சியின் விளைவாகக் கிட்டுவதாகும். அத்தகைய பொருள்களிலிருந்து கிட்டும் வருமானமானது கூலி, வட்டி, வாரம், இலாபம் ஆகியவற்றின்மூலம் உற்பத்திக் காரணிகளிடையில் பகிர்ந்தளிக்கப்படுவதற்குப் பணமே உதவுகின்றது.

இறுதிநிலைப் பயன்பாட்டைச் சமமடையச் செய்வது: பணம் புரி பணியின் விளைவாக, நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் உச்சநிலைப் பயன்பாட்டைப் பெற முடிகின்றது. உச்சநிலைப் பயன்பாட்டைப் பெற விரும்பும் நுகர்வோர், தாம் வாங்கும் பொருளின் இறுதிநிலைப் பயன் பாட்டிற்குச் சமமான விலையை அளிப்பதன்மூலம், அதைப் பெற முடியும். இவ்வாறே உற்பத்தியாளர்கள் உற்பத்திக் காரணிகளுக்கு அவற்றிலிருந்து கிட்டும் இறுதிநிலைப் பயன் பாட்டிற்குச் (அவற்றின் இறுதிநிலை உற்பத்திக்குச்) சமமான ஊதியத்தை அளிப்பதன்மூலம் பயனடைய முடியும்.

செல்வத்திற்கு நீர்மைத் தன்மையை அளிக்கின்றது: செல்வத்தை வைத்திருக்கக்கூடிய சொத்துகளில் பணமே முக்கியமானதாகும். அனைத்து வகைச் செல்வங்களையும் பணமாக்க முடியும். அதாவது, பலவிதச் செல்வங்களுக்கும் நீர்மைத் தன்மையளிப்பது பணமே ஆகும். இதன் விளைவாக விரும்பும்பொழுதெல்லாம் செல்வத்தைச் செலவிட முடிகின்றது. பணம் தோன்றியதால்தான் ரொக்கம் வைத்திருப்பது சாத்தியமாயிற்று.

மேலும், தற்காலப் பொருளாதார அமைப்பு கடனின் அடிப் படையில்—கடன் உறுதிமொழியின் அடிப்படையில்—அமைந் துள்ளது. பணம்கூட, ஒருவிதத்தில் கடன் உறுதிமொழியே யாகும். தற்காலத்தில் கடன் பேரங்கள், தவணைமுறைப் பேரங்கள் ஆகியவை நடைபெறுவதற்கும் பணம் அவசிய மாகின்றது.

பணத்தின் இயக்க நிலைப் பணிகளும் சலனமற்ற பணிகளும்[1]

பால் என்சிக் என்பார், பணம் புரி பணிகளை இயக்க நிலைப் பணிகள் எனவும், சலனமற்ற பணிகள் எனவும் இரு வகைப்படுத்துகின்றார். பணத்தின் சலனமற்ற பணிகள் எனப்படுபவை, பொருளாதார அமைப்பின் போக்கினைப் பாதிக்காத வகையில் பணம் புரியும் பணிகளாகும். பணத்தின் சலனமற்ற பணிகள், பொருளாதார அமைப்பின் தங்குதடை யற்ற போக்கினை அடைய உதவும் சாதனங்களாகும். மரபு வழியாகப் பணம் புரியும் பணிகளாக நாம் கருதுபவை—அதா வது பரிவர்த்தனைச் சாதனம், மதிப்பளவுகோல், மதிப்பின் வைப்பு, தள்ளிப்போட்ட செலுத்துச் சாதனம் ஆகியவை— பணத்தின் சலனமற்ற அல்லது தொழில் நுணுக்கப் பணி களாகும்.

மேற்காணும் சலனமற்ற பணிகள் தவிர, மற்றுமொரு தொழில்நுணுக்கப் பணியையும் பால் என்சிக் குறிப்பிடுகின் றார். அதாவது, விலைக் கருவியைச் செயல்படுத்தும் சாதன மாகவும் பணம் பயன்படுவதாகப் பால் என்சிக் குறிப்பிடுகின் றார். தலையீடில்லாத பொருளாதார அமைப்பில் பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியும் பகிர்வும் விலைமட்ட அடிப்படையிலேயே அமைகின்றன. உற்பத்தியாளர்கள் என்ன பொருளை, எங்கு, எப்பொழுது, எவ்வளவு உற்பத்தி செய்வது என்பதை நிர்ணயிப்பதற்கு விலைமட்டமே உதவு கின்றது. நுகர்வோர் நுகரும் பொருள்களையும், நுகரப்படும் அளவையும் விலைமட்டமே நிர்ணயிக்கின்றது. அதாவது, முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் பொருளாதார நடவடிக்கைகளின் போக்கை நிர்ணயித்து, கட்டுப்படுத்தி, வழிநடத்தும் முக்கியப் பங்கை விலைமட்டமே ஏற்கின்றது. விலை என்பதோ, பண்டங்கள், மற்றும் பணிகளின் பண மதிப்பே ஆகும். பணம் இல்லாவிடில், விலைமட்டமே நிலவ

[1] **Static and dynamic functions of money**

முடியாது. எனவே, பணமானது செலுத்துச் சாதனமாகவும், மதிப்பளவுகோலாகவும் பயன்படுவதோடு, தேவையையும் அளிப்பையும் சமநிலைப்படுத்துவதன்மூலம் உற்பத்தியாளர்களின் முயற்சிகளையும், நுகர்வோர்களின் விருப்பங்களையும் சமமாக்கும் சாதனமாகவும் பயன்படுகின்றது.

பணத்தின் இயக்கநிலைப் பணிகள் எனப்படுபவை பொருளாதார நடவடிக்கைகளை மாற்றியமைக்கும் பணம் புரியும் பணிகளைக் குறிப்பிடுவனவாகும். பணமானது, விலைமட்டத்தைப் பாதிப்பதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் மற்றும் பணிகளின் அளவையும், சமுதாயத்தின் செல்வப் பகிர்வையும், நுகர்ச்சியையும், இவைபோன்ற பிறவற்றையும் மாற்ற இயலும். இத்தகைய பணிகளே பணத்தின் இயக்கநிலைப் பணிகள் எனப்படும். பணத்தினால் பொருளாதார வளர்ச்சியையும், சமுதாய வளர்ச்சியையும் எளிமையாக்கவும் அல்லது தடைப்படுத்தவும் முடியுமென்பதால், வரலாற்றின் போக்கையும் நாகரிக வளர்ச்சியையும் பணத்தினால் சாதகமாகவோ பாதகமாகவோ பாதிக்க முடியும். அண்மைக் காலங்களில் பணம்புரியும் இயக்கநிலைப் பணிகளுக்கே பொருளாதார அறிஞர்கள் முக்கியத்துவம் அளிக்கின்றனர். பணத்தின் இயக்கநிலைப் பணிகள், பொருளாதாரப் போக்குகளை நிர்ணயிப்பதில் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

பணத்தின் இயக்கநிலைப் பணிகளுள் விலைமட்டத்தில் ஏற்படும் மாறுதல்களின் (அதாவது பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாறுதல்களின்) மூலம் நாட்டின் பொருளாதாரப் போக்கை மாற்றியமைப்பதே முக்கியமானதாகும். பொது விலைமட்டம் மாற்றமடையும்பொழுது, சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களுக்கும் நன்மை கிட்டலாம்; அல்லது தீங்கு ஏற்படலாம். பணவீக்கம் அல்லது பணவாட்டத்தின் இயல்புகள் ஒரு குறிப்பிட்ட காலத்துடன் நின்றுவிடுவதில்லை. அவற்றின் விளைவுகள் நெடுங்காலத்திற்கு மறைமுகமாகவேனும் நாட்டைப் பாதிக்கும்; வரலாற்றின் போக்கினையே மாற்றிவிடக்கூடும்.

மிகவும் சரியான பணத்திட்டத்தை மேன்மேலும் மேற்கொள்வதன் மூலம் நாட்டின் இயற்கை வளத்தையும் மனித சக்தியையும் முழுமையாகவும் செம்மையாகவும் பயன்படுத்தி, அறிவியல் வளர்ச்சியையும் தொழில்நுணுக்க வளர்ச்சியையும்

அடைய முடியும். அத்தகைய வளர்ச்சியை அடைவதன் மூலம் தேசிய உற்பத்தியைப் பெருக்கவும் உயர்வான வாழ்க்கைத்தரத்தை அடையவும் முடியும். இத்தகைய முயற்சிகளே தற்காலத்தில் பல்வேறு பின்தங்கிய நாடுகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், குறுகிய அளவில் மேற்கொள்ளப்படும் பணத்திட்டங்கள் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும். ஆயினும், தவறான வழியில் மேற்கொள்ளப்படும் பணத்திட்டம் நாட்டையே அழித்துவிடக்கூடும்.

தற்கால அரசுகளைப் பொறுத்தவரையில் பணத்திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பணத்திட்டத்தின் உதவியுடன், அரசுகள் தாம் வரிமூலம் பெறும் வருமானத்தைக் காட்டிலும் மிகையாகச் செலவிட முடிகின்றது. பணத் துறையமைப்புகளிடமிருந்து அரசுகள் எவ்வளவு வேண்டுமானாலும் கடன் பெற முடியும். எடுத்துக்காட்டாக, இந்திய அரசின் பொதுக்கடன் ரூ. 18,000 கோடி என மதிப்பிடப்படுகின்றது. இவ்விதம் பெறும் தொகைகளைக்கொண்டு பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் இராணுவத் திட்டங்களை அரசினரால் மேற்கொள்ள முடிகின்றது. இத்தகைய இயக்கநிலைப் பணிகள் இல்லாவிடில், மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படாமல் போகக்கூடும்.

பழங்காலத்தில் பொருளாதார அறிஞர்கள் பணத்தின் சலனமற்ற அல்லது தொழில்நுணுக்கப் பணிகளுக்குமட்டுமே முக்கியத்துவம் அளித்தனர். அவர்கள், தொழில்நுணுக்கப் பணிகளுக்காகவே பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிருவகிக்கப்படுவதாகவும், விலை மட்டத்தை மாற்றுவதற்காகவோ பொருளாதாரப் போக்கினைக் கட்டுப்படுத்துவதற்காகவோ பணம் தோற்றுவிக்கப்படவில்லை என்றும் கருதினர். மேலும், மனிதனின் அன்றாட வாழ்வில், பணத்தின் தொழில் நுணுக்கப் பணிகள்மட்டுமே பயன்படுகின்றனவே தவிர, இயக்கநிலைப் பணிகள் அல்ல. அவை பின்னணியிலேயே பயன்படுபவை ஆகும். பணவாக்கக் கைகோளைத் தீர்மானிப்போரும், அவற்றைச் செயல்படுத்துவோரும், மதிப்பிடுவோரும் மட்டுமே பணத்தின் இயக்கநிலைப் பணிகளைப்பற்றிக் கருதுவர். பால் என்சிக், பணத்தின் தொழில்நுணுக்கப் பணிகளின் அளவிற்கு இயக்கநிலைப் பணிகளும் முக்கியத்துவம் வாய்ந்தவையே என்று குறிப்பிடுகின்றார். பணவாக்க நிர்வாகிகள் பணத்தின் இயக்கநிலைப் பணிகளை முழுமையாக

உணர்ந்தால்மட்டுமே பொருளாதார வளர்ச்சியையும், சமூக வளர்ச்சியையும் அடைய உதவும் இயந்திரமாகப் பணத்தைப் பயன்படுத்துவதற்கு அவர்களால் முடியும்.

பொதுவாகப் பணத்தின் தொழில்நுணுக்கப் பணிகளைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கிடையே வேறுபாடு ஏதுமில்லை. எனினும், சில நேரங்களில் விதி விலக்குகள் நேரக்கூடும். பணத்தின் தொழில் நுணுக்கப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமாயின், பணத்தின் மதிப்பு மாறுவது அவசியமாகும். எடுத்துக்காட்டாக, இயக்க நிலைப் பணிகளின் அடிப்படையில், பொருளாதார மந்தத்தி லிருந்து விடுபடுவதற்குப் பணத்தின் அளவை அதிகரிப்பதும் (அதாவது பணத்தின் மதிப்பைக் குறைப்பதும்) பணவீக்கம் கட்டுப்படுத்தப்படுவதற்குப் பணத்தின் அளிப்பைக் குறைப் பதும் (அதாவது பணத்தின் மதிப்பை உயர்த்துவதும்) அவசிய மாகும். எவ்வாறாயினும், பணத்தின் இருவிதப் பணிகளுக்கும் போதுமான வாய்ப்புகளை அளிக்கக்கூடிய பணத்துறை நிர்வாகத்தை உருவாக்குவதே சிறந்ததாகும்.

பணத்தின் வகைகள்

பணம் எனும் சொல் ஒன்றேயாயினும் பணம் பல வகைப் படும். காலப்போக்கில் பணம் பல உருவங்களையும் அமைப்புகளையும் எடுத்திருக்கின்றது. அவற்றில் சில வகை இன்றும் புழக்கத்தில் உள்ளன ; சில வழக்கொழிந்துபோயின. பொதுவாக, பணத்தைக் கீழ்க்காணுமாறு மூவகைப் படுத்தலாம் :

(1) உலோகப் பணமும் காகிதப் பணமும்[1].

(2) கணக்கீட்டுப் பணமும் நடைமுறைப் பணமும்[2].

(3) சட்டச் செலாவணியும் வங்கிப் பணமும்[3].

உலோகப் பணமும் காகிதப் பணமும் : ஒரு நாட்டின் பணம் பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களில் அமைந்திருப்பதற்கு உலோகப் பணம் என்று பெயர். உலோகப் பணத்தின் உள்ளூறு மதிப்பும் தோற்ற மதிப்பும் சமமாக இருக்குமானால், அத்தகைய பணத்திற்குப் பிரமாணப் பணம்[4] அல்லது முற்றுருப் பெற்ற பணம்[5] என்று பெயர்.

[1] Metallic money and paper money
[2] Money of account and money proper
[3] Legal tender and bank money
[4] Standard coin
[5] Full-bodied coin

நாணயத்தின் தோற்ற மதிப்பும் உள்ளூறு மதிப்பும் சமமாக இருப்பின், பிரச்சினை எதுவும் எழுவதில்லை. அவற்றிடையே வேறுபாடு இருப்பின், எதிர்பாராத பிரச்சினைகள் எழும். தோற்ற மதிப்பு உள்ளூறு மதிப்பைக் காட்டிலும் அதிகமாக இருப்பின், பொதுமக்கள் உலோகத்தை வாங்கி நாணயமாக அச்சிட்டு இலாபம் பெற முயல்வர். மேலும், நாணயத்தின் அளிப்பு அதிகரிப்பதால், தோற்ற மதிப்பும் உள்ளூறு மதிப்பும் சமமடையும். தோற்ற மதிப்பு, உள்ளூறு மதிப்பைக்காட்டிலும் குறைவானதாயின், நாயணங்களை உருக்கி உலோகமாக விற்பனை செய்வதற்குப் பொதுமக்கள் முற்படுவதால், நாணயத்தின் அளவு குறையும். அதன் விளைவாகத் தோற்ற மதிப்பும் உள்ளூறு மதிப்பும் சமமடையும். எனினும், நாணய அச்சடிப்பு நிறுத்தி வைக்கப் படும்பொழுதும், இலவச அச்சிட்டு முறை நிறுத்தப்படும் பொழுதும், நாட்டின் தேவைக்கு ஏற்பப் பண அளிப்பு அதிகரிக்காத பொழுதும் அவை வேறுபடும். நாணயத்தின் உள்ளூறு மதிப்பைக்காட்டிலும் தோற்ற மதிப்பு அதிகமாயின், அஃது அடையாளப் பணம்[1] அல்லது பிரதிநிதிப் பணம்[2] எனப்படும். அடையாளப் பணத்தின் வெளியீடு அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்டு, நிருவகிக்கப்படுவதால் அடையாளப் பணத்தை நிருவகிக்கப்பட்ட பணம்[3] எனவும் கூறலாம். பொதுவாக, அடையாளப் பணங்கள் குறைந்த மதிப்புடையவை ஆகும். அவை சாதாரணமான உலோகங்களிலேயே அச்சிடப்படுகின்றன. அவை முற்றுரு பெற்ற பணங்களை அடிப்படையாகக்கொண்டே வெளியிடப்படுகின்றன.

பணம் காகிதத்தில் வெளியிடப்பட்டால், அது காகிதப் பணம் எனப்படும். காகிதப் பணம் உலோகப் பணத்திற்குப் பதிலியாகப் புழக்கத்திற்கு வந்ததெனினும், விரைவில் பிரதிப் பணமாக மாறிவிட்டது. காகிதப் பணத்தைப் பிரதிப் பணம் எனவும், கட்டளைப் பணம்[4] எனவும் இரு வகைப்படுத்தலாம். பிரதிப் பணத்தை உலோகப் பணத்திற்கு ஈடாக மாற்றிக் கொள்ளலாம். பிரதிப் பணத்தின் மதிப்பு அதற்கு ஈடாக மாற்றிக்கொள்ளப்படக்கூடிய முற்றுரு பெற்ற பணத்தின் மதிப்பிற்குச் சமமாகும். காகிதப் பணத்திற்கு ஈடாக, அதன் மதிப்பிற்குச் சமமான பொன், வெள்ளி ஆகியவற்றை மைய வங்கியிலிருந்து மாற்றிக்கொள்ள முடியுமானால், அது

1 Token coin
2 Representative money
3 Managed money
4 Fiat money

மாற்றுரிமையுள்ள பணம்[1] எனப்படும்; அவ்வாறு மாற்றிக் கொள்ளும் தகுதியில்லாத பணம் மாற்றுரிமையற்ற பணம்[2] எனப்படும். அரசினால் வெளியிடப்படும் மாற்றுரிமையற்ற காகிதப் பணத்தைக் கட்டளைப் பணம் என்றும் கூறலாம். கட்டளைப் பணம் சட்டபூர்வமானதால், அதைச் சட்டச் செலாவணியாகவும் கருதலாம்.

கணக்கீட்டுப் பணமும் நடைமுறைப் பணமும்: பண்டங்களின் மதிப்பைக் கணக்கிடவும், விலை, கடன், கூலி ஆகியவற்றை அளவிடவும் ஒரு குறிப்பிட்ட அலகு பணத்தைப் பயன்படுத்துகின்றோம். ஆனால், பரிவர்த்தனைச் சாதனமாகப் பயன்படுத்துவதற்கு வேறு சில சில்லறை நாணயங்களையும் வைத்துள்ளோம். எடுத்துக்காட்டாக, நம் நாட்டில் விலை, கடன், கூலி, வட்டி ஆகியவற்றை ரூபாயின் மூலம் கணக்கிடுகின்றோம். அன்றாட வாழ்வில் 50 காசு, 20 காசு, 10 காசு போன்ற சில்லறை நாணயங்களைப் பயன்படுத்துகின்றோம். கணக்கிடப் பயன்படும் ரூபாய் கணக்கீட்டுப் பணமாகும். நடைமுறையில் பயன்படுத்தப்படும் நாணயங்கள் நடைமுறைப் பணமாகும். நடைமுறைப் பணம் மாறினாலும், கணக்கீட்டுப் பணத்துடன் அஃது எப்பொழுதும் தொடர்பு கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் நடைமுறைப் பணமாக இருந்த அணா நாணயங்கள் மறைந்து பைசா நாணயங்கள் புழக்கத்திற்கு வந்துள்ளனவெனினும், பைசா நாணயங்கள் ரூபாயுடன் தொடர்பு கொண்டுள்ளன.

சட்டச் செலாவணியும் வங்கிப் பணமும்: அரசின் ஒப்புதலுடன் சட்டப்பூர்வமாக வெளியிடப்படும் பணம் சட்டச் செலாவணி[3] ஆகும். சட்டச் செலாவணியை மக்கள் அனைவரும் மறுப்பின்றி ஏற்றுக்கொள்வர். ஆயினும், சட்டச் செலாவணியிலும் சிறு மதிப்புள்ள நாணயங்களை ஒரு குறிப்பிட்ட அளவு வரையிலும் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், குறிப்பிட்ட அளவிற்கும் அதிகமாகச் சிறு மதிப்புள்ள நாணயங்களாகவே அளித்தால் அதை ஏற்க மறுக்கலாமென்றும் அரசு அனுமதிக்கும் இத்தகைய பணம் வரையிட்ட சட்டச் செலாவணி[4] எனப்படும். உயர்மதிப்புள்ள சட்டச் செலாவணியாக எவ்வளவு அளித்தாலும் அது மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றும் விதிக்கப்படும். இத்தகைய பணம் வரையற்ற சட்டச் செலாவணி[5] எனப்படும்.

[1] Convertible money
[2] Inconvertible money
[3] Legal tender
[4] Limited legal tender
[5] Unlimited legal tender

இந்தியாவில் 50 காசு நாணயங்கள் 10 ரூபாய் வரையிலும், 1 காசு நாணயங்கள் 1 ரூபாய் வரையிலும் வரையிட்ட சட்டச் செலாவணி ஆகும்.

வங்கிப்பணம், வங்கிகள் வெளியிடும் காசோலைகள், பற்றுரிமைச் சீட்டுகள் ஆகியவற்றால் உருவாக்கப்படுகின்றது. பாங்கின் வைப்பாளர்[1] ஒருவர், வேறொருவருக்குக் காசோலை அளிக்கும்பொழுது, அவர் கணக்கில் காசோலையின் மதிப்பு குறைக்கப்பட்டு, மற்றவர் கணக்கில் அப் பணம் வரவு வைக்கப்படுகின்றது. இவ்வாறு வங்கிப் பணத்தின் மூலம் தற்காலத்தில் கொடுக்கல் வாங்கல் தீர்வு செய்யப்படுகின்றது. காசோலையும் பற்றுரிமைச் சீட்டும் வங்கிப்பணம் அன்று; அவற்றால் உண்டாக்கப்படுவதே வங்கிப் பணம் ஆகும்.

நல்ல பணப் பண்டத்தின் இயல்புகள்[2]

ஒரு பண்டம் அல்லது உலோகம் பணமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால், அதற்குக் கீழ்க்காணும் இயல்புகள் இருக்க வேண்டும் என்பது மரபாகும். ஆனால், மாறிவரும் சூழ்நிலைகளில் இவ்வியல்புகளை அதிகமாக வலியுறுத்துவதில்லை.

பயனுடைமை[3] : பயன்பாடு உள்ள பண்டங்களை மட்டுமே பணமாக அச்சிட வேண்டும். ஏனெனில், பயன் பாடற்ற பொருளுக்கு மதிப்பில்லை. மதிப்பற்ற எதுவும் இடையீட்டுக் கருவியாக இருக்கக் கூடாதென்று லாலின் கருதுகின்றார். பயன்பாடும் மதிப்பும் அற்ற ஒரு பண்டத்தை நீண்ட காலத்திற்குச் சேமித்து வைக்கவும், பொதுவான மதிப் பலகு ஆகவும் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களுக்குப் பயன்பாடும் மதிப்பும் இருப்பதால்தான் அவை பணப்பண்டமாக ஏற்றுக்கொள்ளப் பட்டன. காகிதப் பணத்திற்கு இவ்வியல்புகள் இல்லை யாயினும், மைய வங்கியின் உறுதிமொழியால், அது மதிப்பு பெறுகின்றது.

தெளிவுடைமை[4] : பணமாகப் பயன்படுத்தப்படும் பண்டத்தை மக்கள் எளிதில் இனம் கண்டுகொள்ளும் வகையில் அப் பண்டம் தெளிவுடையதாக இருக்க வேண்டும். இவ்வியல்பு இருந்தால்தான் கள்ள நாணயங்கள் தோன்று

[1] Depositor
[2] Qualities of good money material
[3] Utility
[4] Cognisability

வதைத் தவிர்க்க முடியும். உலோகப் பணங்களின் நிறத் தாலும், அமைப்பாலும், அச்சிடப்படும் முறையாலும் அவற்றில் இவ்வியல்பு இருக்கின்றது. காகிதப் பணத்திற்கும் இவ்வியல்பு இருக்கின்றது.

இடமாற்ற எளிமை[1] : பணப்பண்டம் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு இன்னலின்றி எளிதாக எடுத்துச் செல்லப்படக்கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறிருந் தால் பணம் சுலபமாக இடம் பெயர்வதால், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அதற்குச் சீரான மதிப்பு இருக்கும். பொற் காசுகள், வெள்ளிக் காசுகள், காகிதப் பணம் ஆகியவற்றிற்கு இவ்வியல்பு உண்டு. ஆயினும், வங்கித்துறை வளர்ச்சி பெற்றுள்ள தற்காலத்தில் இவ்வியல்பு அதிகமாக வலியுறுத்தப் படுவதில்லை.

உறுதியுடைமை[2] : பணம் செல்வத்தைச் சேமித்து வைப்பதற்கான சாதனமாகும். எனவே, பணம் அழிவற்ற தாகவும், உறுதியானதாகவும் இருப்பது அவசியம். நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றால் பொன், வெள்ளி ஆகிய வற்றை அழிக்கவியலாது. காகிதப் பணத்திற்கு இவ்வியல்பு இல்லாவிடினும், உறுதியிழந்து அழிவுற்ற காகிதப் பணத் திற்குப் பதிலாகப் புதிய காகிதப் பணத்தை விரைவாகச் செலவின்றி மைய வங்கி வெளியிடுவதால், இக் குறை பெரிது படுத்தப்படுவதில்லை.

மதிப்பு மாறாமை[3] : பணம் மதிப்பீட்டு அலகாகவும் பயன்படுகின்றது. இப் பணி முழுமையாக நிறைவேற வேண்டுமானால், பணத்தின் மதிப்பு மாறாமல் இருப்பது மிக அவசியம். ஏனெனில், நிலையற்ற மதிப்புடைய பணத்தைக் கொண்டு மற்றவற்றை மதிப்பிட முடியாதல்லவா? பொன், வெள்ளி ஆகியவற்றின் அளிப்பு மிகவும் குறைவாக இருப்ப தால், அவற்றின் மதிப்பு மாறுவதில்லை. காகிதப் பணம் முறையாக நிர்வகிக்கப்பட்டால், அதன் அளிப்பைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மதிப்பையும் மாறாமல் நிலைப் படுத்த முடியும்.

பகுப்புடைமை[4] : பணமாகப் பயன்படுத்தப்படும் பண்டம் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுவதற்கு ஏற்றதாகவும்,

[1] Transportability
[2] Durability
[3] Stability of value
[4] Divisibility

அவ்வாறு பகுக்கப்படும் ஒவ்வொரு பகுதியின் மதிப்பும் மாறாமலும் இருக்க வேண்டும். பொன், வெள்ளி ஆகிய வற்றிற்கு இவ்வியல்பு உண்டு. காகிதப்பணத்திற்குச் செயற்கை யாக இவ்வியல்பை அளிக்க முடியும்.

ஓரியல்புடைமை[1] : பணத்தின் பல்வேறு அலகுகளும் ஓரியல்பு உடையனவாக இருத்தல் வேண்டும்; ஒன்றுக் கொன்று உயர்ந்ததாகவோ அல்லது தாழ்ந்ததாகவோ இருப்பின் கள்ள நாணயங்கள் தோன்றிக் குழப்பமேற்படக் கூடும். பொன், வெள்ளி, காகிதப்பணம் ஆகியவற்றிற்கு இவ்வியல்பு இருக்கின்றது.

ஏற்றுக்கொள்ளப்படுதல்[2]: மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய பண்டங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். அப் பண்டம் உலோகமாகவோ அல்லது தானிய மாகவோ அல்லது காகிதமாகவோ இருக்கலாம். அனைவ ராலும் மதிப்புடன் ஏற்றுக்கொள்ளப்படும். பண்டத்தில் பணத்தை வெளியிட்டால்தான் அப் பணத்தை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

இழுப்புத் தன்மையுடைமை[3] : பணப் பண்டம் நீள மாகவும், அகலமாகவும், இழுபட ஏற்றதாகவும் இருக்க வேண்டும். உலோகங்களுக்கு மட்டுமே இவ்வியல்பு உண்டு.

மேற்காணும் இயல்புகள் யாவற்றையும் கொண்டுள்ள பண்டம் ஏதுமில்லை. அவற்றில் பெரும்பான்மையான இயல்பு களைக் கொண்டுள்ள பொன், வெள்ளி போன்றவை பணமாக அச்சிடப் பயன்படுத்தப்பட்டன. செயற்கையாகவேனும் காகிதப் பணத்திற்கு இவ்வியல்புகளை அளிக்க முடிவதால், காகிதமும் நல்ல பணப் பண்டமாகக் கருதப்படுகின்றது.

[1] Homogeneity
[2] Acceptability
[3] Malleability

2. பணத்தின் முக்கியத்துவம்

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் பணம்[1]

இன்றைய உலகில் பொருளாதார வளர்ச்சிக்குப் பணமே அடிப்படையாக இலங்குகின்றது. பணம் படைத்தோர்க்குச் சமுதாயத்திலும், அரசியலிலும், பொருளாதார அமைப்பிலும் சிறப்பான இடம் கிட்டுகின்றது. அறவாணர்களின் அறிவுரைகளையும், தத்துவ வாதிகளின் கோட்பாடுகளையும் செவி மடுப்பாரில்லை. மாறாகத் தற்கால மனிதன் பணத்தின் பக்தனாக வாழ்வு நடாத்துகின்றான்.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் பணம் ஓர் இயக்கியாக இடம் பெற்று இலங்குகின்றது. முதலாளித்துவ அமைப்பின் சிறப்பியல்பு தனி நபர் சுதந்தரமாகும். உற்பத்திக் காரணிகள் யாவும் தனி உடைமையாகும். தனி நபர் தாம் விரும்பும் தொழிலில் ஈடுபடவும், தாம் விரும்பும் வகையிலும், இடத்திலும், பொருள் மற்றும் பணியின் உற்பத்தியிலும் ஈடுபடுவதற்குச் சுதந்தரம் உண்டு. தனி நபர் தாம் விரும்பும் வகையில் செலவிடவும், சேமித்து வைக்கவும் உரிமை உண்டு. மற்றவர்களின் சுதந்தரத்தைப் பாதிக்காத வகையில் ஒவ்வொருவரும் சுதந்தரமாகச் செயல்பட முடியும்.

சமதர்மப் பொருளாதார அமைப்புகளில் காணப்படும் திட்டக் குழுவிற்கு முதலாளித்துவ அமைப்பில் இடமில்லை. சமதர்ம அமைப்பைப் போன்று, முதலாளித்துவ அமைப்பில் உற்பத்தி, நுகர்வு, பகிர்வு ஆகியவற்றைத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்துவதற்கு வாய்ப்பில்லை; உற்பத்திக் காரணிகளுக்கான ஊதியத்தை நிர்ணயிக்கும் விதிகளும் இல்லை. ஆயினும், இவை யாவும் எவ்வித இடர்ப்பாடுமின்றி, முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் செயல்படுகின்றன. திட்டக்குழுவும், திட்டங்களும் இல்லாவிடினும், திட்டமிடப்பட்டதைப் போன்று பொருளாதார நடவடிக்கைகள்

[1] Money in a Capitalist Economy

செம்மையாக நடைபெறுவதற்கு அடிப்படைக் காரணம் பணமே ஆகும். பொருளாதார வல்லுநர்களின் கடும் முயற்சியின் விளைவாக உருவாக்கப்படும் திட்டங்கள் தோல்வியுறக்கூடும். ஆயினும், திட்டமிடப்படுவதைக் காட்டிலும் சிறப்பான வகையில் முதலாளித்துவ அமைப்பில் பொருளாதார வளர்ச்சி அமைவதற்குப் பணமே தூண்டு கோலாகும்.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் உற்பத்திக்கு அடிப்படையாக அமைவதும், உற்பத்தியை நிர்ணயிப்பதும் பணமேயாகும், முதலாளித்துவத்தில் உற்பத்திக்கு அடிப் படை இலாப நோக்கமே ஆகும். இலாபம் மிக்க தொழில் களில் ஈடுபடவே உற்பத்தியாளர்கள் விரும்புவர். இலாபம் என்பது பொருளின் விலைக்கும் அதன் உற்பத்திச் செலவிற்கும் இடையேயுள்ள வேறுபாடாகும். எனவே, உற்பத்திச் செலவைக்காட்டிலும் அதிகமான விலை பெறக் கூடிய பொருள்களை மட்டுமே உற்பத்தி செய்வதற்கு உற்பத்தியாளர்கள் விரும்புவர். அதாவது, நுகர்வோர் எத்தகையப் பொருள்களுக்கு உயர்விலை அளிக்க முன் வருகின்றனரோ அத்தகையப் பொருள்களை மட்டுமே உற்பத்தி செய்வர்; நுகர்வோர் விரும்பாத அல்லது குறைவான விலையில் மட்டுமே வாங்குவதற்கு முன்வரக்கூடிய பொருள் களை உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்ய முன் வரமாட் டார்கள். நுகர்வோர் விரும்பும் பொருள்கள் எவையெவை என்பதைக் கணிப்பதற்கு உதவுவது பொருள்களுக்கு நுகர்வோர் அளிக்க முன்வரும் விலை ஆகும்; விலை பணத்தின் மூலம் உணர்த்தப்படுவதால், உற்பத்தியின் போக்கை நிர்ணயிப்பதற்குப் பணம் உதவுகின்றது என்பது வெளிப்படையாகும். நுகர்வோரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதால், முதலாளித்துவத்தில் நுகர்வோர் இறைமை காணப்படுவதும் தெளிவாகும். தனி ஒரு நபரின் விருப்பு வெறுப்புகள் உற்பத்தியை நிர்ணயிப்பதற்கில்லை ஆயினும், நுகர்வோர் பலரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே உற்பத்தி அமை கின்றது.

முதலாளித்துவ அமைப்பில் நுகர்வோர் இறைமை நிலவுவதால், நுகர்வோரின் மெய்யான தேவைகளுக்கு ஏற்ப, அவர்களுக்கு மனநிறைவு அளிக்கும் வகையில் பொருள் களின் உற்பத்தி அமையுமா என்ற வினா எழுகின்றது.

நுகர்வோரின் மனநிறைவையும், பொருள்களின் பயன் பாட்டையும் அளப்பதற்கு அளவுகோல் ஏதுமில்லையாதலால், பொருள்களின் பயன்பாட்டிற்குச் சமமான விலையே அளிக்கப்படுவதால், குறிப்பிட்ட விலையில் பொருள்களை வாங்குவதற்குத் தயாராக நுகர்வோர் இருப்பாராயின், அவர் களுக்குப் பயன்பாடு அளிக்கும் அளவில் அப் பொருள் அமைந்துள்ளது எனலாம். ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு விலை அளிப்பதற்கு நுகர்வோர் தயாராக இருப் பதால், நுகர்வோருக்குப் பயன்பாடு அளிக்கும் வகை யிலேயே பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன எனலாம்.

விலைமட்டத்தை அடிப்படையாகக்கொண்டு உற்பத்தி அளவு நிர்ணயிக்கப்பட்ட பின்னர், உற்பத்திக்குத் தேவை யான காரணிகளுக்கு உரிய ஊதியத்தை அளிப்பதன் மூலம், காரணிகள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றன. உற்பத்திக் காரணிகள் உற்பத்தித் துறையில் ஈடுபடுத்தப் படுவதற்கும் விலைமட்டமே அடிப்படையாக அமை கின்றது. உற்பத்தி, நுகர்வு மட்டுமின்றிப் பொருள்களின் பகிர்வையும் விலைமட்டமே நிர்ணயிக்கின்றது. எடுத்துக் காட்டாக, ஒரு புதிய பொருள் உற்பத்தி செய்யப்படு வதாகவும், பலர் அப் பொருளை வாங்க விரும்புவதாகவும் வைத்துக்கொள்வோம். தேவை அதிகமாகவும், அளிப்பு குறைவாகவும் இருப்பதால், அப் பொருளை நுகர்வோரிடை பகிர்ந்தளிப்பதற்கு விலைமட்டம் உதவுகின்றது. எவ்வா றெனில், தேவை அதிகமாக இருப்பதால், அப் பொருளின் விலை உயரும். விலை அதிகரிக்கும்பொழுது அதன் தேவை குறையும். இவ்வாறு அளிப்பும் தேவையும் சமமாகும் வரையில் விலை உயரும். இவ்வாறு பற்றாக்குறைப் பொருள்கள் பலரிடம் பகிர்ந்து அளிக்கப்படுவதற்கும் விலைமட்டமே காரணமாகும்.

மக்களுடைய சேமிப்பு மனப்பாங்கும், செலவிடும் பணப் பாங்கும் விலைமட்டத்தில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. ஈண்டு விலைமட்டம் என்பது பணத்திற்கான விலையை— வட்டி வீதத்தைக் குறிக்கும். வட்டி வீதம் மூலதனத்திற்கான தேவையையும், அளிப்பையும் நிர்ணயிப்பதன் மூலம் மக்களிடம் சேமிப்பு நாட்டத்தையும், நுகர்ச்சி நாட்டத்தையும் கட்டுப்படுத்துகின்றது.

பொருள்களின் விலையை அடிப்படையாகக்கொண்டே உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருளும், உற்பத்தி

செய்யப்பட வேண்டிய அளவும் நிர்ணயிக்கப்படுகின்றன. உற்பத்தித் துறையில் உற்பத்திக் காரணிகள் ஈடுபடுத்தப்படு கின்றன. தேவையும் அளிப்பும் சமநிலை எய்துகின்றன. பணத்தேவையும் பண அளிப்பும் ஒன்றுக்கொன்று சமமா கின்றன. ஆனால், விலை எனப்படுவது பணத்தை அடிப் படையாகக் கொண்ட பொருளாதாரத்தில் மட்டுமே நிலவக் கூடியது. பணமே அற்ற ஒரு பொருளாதார அமைப்பில், விலை நிர்ணயம் ஏற்படுவதற்கில்லை. எனவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் திட்டமிட்டு உருவாக்கும் திட்டக் குழு அற்ற முதலாளித்துவ அமைப்பில், பணம் ஓர் அடிப் படைத் தேவை என்பது தெளிவாகின்றது.

முதலாளித்துவ அமைப்பில் உற்பத்தி, நுகர்வு, பகிர்வு ஆகியவை விலைமட்டத்தை அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்கப்படுவதால், முதலாளித்துவம் முழுமையாகச் செயல்படுவதற்கு விலையே முக்கியக் காரணியாகும். பண்ட மாற்றின் குறைபாடுகளைத் தவிர்ப்பதன் மூலம் பணம் பரிவர்த் தனையை எளிதாக்கியது. வேலைப் பகுப்பு முறையும், சிறப்புத் தேர்ச்சியும் பணத்தின் தோற்றத்திற்குப் பின்னரே நடை முறைக்கு வந்தன. பிரச்சினைகள் மிக்க தற்காலப் பொரு ளாதார அமைப்பே, பணமில்லாவிடில் இயங்குவதற்கில்லை. பொருளாதாரச் சக்கரம் சுமூகமாகச் சுழல்வதற்கு ஏற்ற வழுவழுப்பானாகப் பணம் அமைகின்றது. பணத்தின் மூலம் பரிவர்த்தனை நடைபெறுவதால், உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகியோரின் உழைப்பும், நேரமும் கணிசமான அளவில் சிக்கனப்படுத்தப்படுகின்றன. தற்கால உற்பத்தித் துறையின் சிறப்பியல்பான பேரளவு உற்பத்தி முறையானது பணமில்லா விடில் .சாத்தியமற்றுப் போகும். பொருளாதார நடவடிக் கையின் ஒவ்வொரு பகுதியிலும் பணம் பல்வேறு வகையிலும் பயன்படுவதன் மூலம் முக்கியத்துவம் அடைகின்றது.

உலகில் கடன் அங்காடி[1] வளர்ச்சிப் பெறுவதற்குப் பணம் ஓர் அடிப்படைத் தேவையாகும். பண்டமாற்று நிலவிய காலத்திலும் கடன் பெற முடிந்தது. ஆயினும், பொருள்களைக் கடனாகப் பெற்றுப் பிற்காலத்தில் அசலையும், வட்டி வீதத்தையும் பொருளாகவே அளிப்பது குழப்பமிக்க நடவடிக் கையாகும். ஒவ்வொரு பொருளிலும் பலதரப்பட்ட அலகுகள் உற்பத்தி செய்யப்படுவதாலும், உலகில் உற்பத்தி செய்யப்

[1] Credit Market

படும் பொருள்களின் எண்ணிக்கை அதிகமாகையாலும் பண்டமாற்று முறையில் கடன் நடவடிக்கைகள் பல்வகைப் பிரச்சினைகளை உள்ளடக்கியவை ஆகும். பணத்தின் தோற்றத்திற்குப் பின்னரே கடன் வாங்குவதும், அளிப்பதும் எளிமையாகியது. ஒரே வகைப் பணிக்கு ஒரே விகிதத்தில் ஊதியம் அளிக்கப்படுவது எளிமையானதும் பண (கடன்) அங்காடியின் வளர்ச்சிக்குப் பின்னர்தான் கடன் அளவும், வட்டி விகிதமும் பணத்தை அடிப்படையாகக் கொண்டு, பணத்தின் மூலமே நிர்ணயிக்கப்படுகின்றன.

மக்களுடைய பொருளாதாரச் சுதந்தரம் பாதுகாக்கப் படுவதற்குப் பணம் ஒரு கருவியாக உதவுகின்றது. பணமற்ற பொருளாதார அமைப்பில் திட்டக் குழுவினரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே உற்பத்தி செய்யப்படும் பொருள் களே பங்கீடு[1] செய்யப்படும். பணம் தோன்றியதன் விளை வாக நுகர்வோர் தமது விருப்பு வெறுப்புகளை உணர்த்தவும், அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்பப் பொருள்களின் உற்பத்தி அமையவும் வாய்ப்பு உருவாயிற்று. விலையின் போக்கை அடிப்படையாகக் கொண்டு நுகர்வோரின் விருப்பு வெறுப்புகள் கணிக்கப்பட்டு அதற்கேற்ப உற்பத்தி மேற் கொள்ளப்படுவது தெளிவாகும். பணமில்லாவிடின், நுகர் வோரின் இச் சுதந்தரம் பாதிக்கப்படும் என்பது உறுதி.

மனித சமுதாயத்தின் மேம்பாட்டிற்குப் பல்வேறு வகை களிலும் பயன்படும் பணம் முறையாகக் கட்டுப்படுத்தப் படாவிடின் குழப்பத்திற்கும் வீழ்ச்சிக்கும் வித்தாக அமை கின்றது. வளர்ச்சிக்குதவும் கருவி என்ற நிலை மாறுபட்டு, வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் தடையாகவும் மாறக்கூடும். பணம் வெளியிடப்படும் முறை ஒழுங்காக நிர்வகிக்கப் படாவிடின், பணத்தின் மதிப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு அதன் விளைவாகப் பொருளாதார வளர்ச்சியும், பண்பாட்டு வளர்ச்சி யும், சமுதாய அமைப்பும் பாதிக்கப்படக்கூடும். தேசீய உற்பத்திக்கும் அதிகமான அளவில் பணம் வெளியிடப் பட்டால் பணவீக்கம் தோன்றும்; அதன் விளைவாகச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் பாதிக்கப்படுவர். பண வீக்கத்தின் விளைவுகள், பொருளாதார அமைப்பு, கலை, பண்பாடு, அரசியல் ஆகியவற்றிலும் பிரதிபலிக்கும். எதிர் மாறாக, தேசீய உற்பத்திக்கும் குறைவாகப் பணம் வெளியிடப் பட்டால், பணவாட்டம் தோன்றும்; மக்கள் பாதிக்கப்படுவர்;

[1] Rationing

வேலையின்மைப் பிரச்சினை தோன்றும்; சமுதாயப் பண்பாடும், ஒழுக்கமும் பாதிக்கப்படும்.

வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்கும் பணம் ஒரு காரணமாகும். சேமிப்புத் தொகை யாவுமே முதலீடு செய்யப்பட்டால், வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. நடைமுறையில் சேமிப்பு அளவிற்கும் முதலீட்டிற்கும் இடையே வேறுபாடு இருப்பதால், வாணிபச் சுழல்கள் தோன்றுகின்றன. பொருளாதாரப் பூரிப்பும், மந்தமும் தோன்றுவதற்குக் காரணம் சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடே காரணமாகும்.

சிலரிடம் செல்வம் குவிவதற்கும், உழைக்கும் வர்க்கத்தினர் சுரண்டப்படுவதற்கும் பணமே காரணம். இலாப நோக்குடன் உற்பத்தி செய்யப்படுவதால் அமித இலாபமளிக்கும் பொருள்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படவும், இலாபமளிக்காத, ஆனால் மக்களுக்கு அவசியமான பொருள்களின் உற்பத்தி தவிர்க்கப்படுவதற்கும் பணமே காரணமாகும். தற்காலத்தில், சமுதாய நலனுக்குப் புறம்பான, தரக்குறைவான பல்வேறு நடவடிக்கைகளுக்கும் பணத்தின் மீதுள்ள பேராசையே காரணமாகும். எனவேதான், ‘அவர்களுடைய (மனிதர்களுடைய) ஆன்மாவைப் பணப்பேய் ஆட்கொண்டு விட்டது. மதமோ அல்லது தத்துவமோ அதை விரட்டுவதற்கில்லை’ என்று ரஸ்கின் குறிப்பிடுகின்றார். கொலைக்கும், களவிற்கும், துரோகத்திற்கும், ஏமாற்று வேலைகளுக்கும் பணமே காரணமாகக் கருதப்படுகின்றது. விலைமகள் தன் உடலை விற்கும்பொழுதும், கையூட்டு பெற்ற நீதிபதி சட்டத்தைப் புறக்கணிப்பதற்கும் பணமே குற்றம் காட்டப்படுகின்றது[1].

பண வெளியீட்டைக் கட்டுப்படுத்தி, முறையாக நிர்ணயிப்பதன் மூலம், பணத்தால் ஏற்படும் தீமைகளைக் களைவதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கு உற்ற சாதனமாகப் பணத்தைப் பயன்படுத்தவும் முடியும். மனிதனால் உருவாக்கப்பட்ட பணம், அவனுடைய ஏவல்களை நிறைவேற்றும் அடிமையாகவே இருக்க வேண்டும்; அவனை ஆட்கொண்டால் கொடும் விளைவுகளே ஏற்படும். ஏனெனில், பணம், வரம் கொடுத்தவன் மீதே வரத்தைப் பிரயோகிக்கும் பக்தனாக மாறக்கூடும்.

[1] Von Mises

சமதர்மப் பொருளாதார அமைப்பில் பணம்

சமதர்ம நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகள் யாவும் அரசினரால் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. தனி உடைமையும், சுதந்தரமான அங்காடியும் அற்ற சமதர்ம அமைப்பு, பணமின்றியே செயல்பட முடியும் எனும் கருத்தைச் சமதர்மவாதிகள் கொண்டிருந்தனர். கார்ல் மார்க்ஸ், லெனின் போன்றோர் இக் கருத்தைப் பரப்பி வந்தனர். கார்ல் மார்க்ஸ் பணம் இருப்பதால்தான், முதலாளிகள் தொழிலாளிகளைச் சுரண்ட முடிகின்றது என்று கருதினார். பணமேயற்ற, பண்டங் களுக்கு ஈடாகப் பண்டங்களை மாற்றும் முறையைக்கொண்ட பொருளாதார அமைப்பே சிறந்ததாகும் என்றும் மார்க்ஸ் கருதினார். இதன் விளைவாக 1917-ல் அக்டோபர்ப் புரட்சிக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற பொதுவுடைமைக் கட்சியினர் ரஷ்யாவில் சில பகுதிகளில் பணத்திற்குப் பதிலாக அடையாள அட்டை முறையைப் புகுத்தினர். பல்வேறு நேரடிக் கட்டுப்பாடுகள் மூலமும், இலவசப் பகிர்வு மூலமும் பணத்தை ஒழித்துவிட அவர்கள் முயன்றனர். ஆயினும், அவர்கள் முயற்சிகள் பயனற்றுப் போயின. வெகு விரை வில் பணமும், பணக்கணிப்புமின்றிப் பொதுவுடைமைக் கொள்கையை அடைய இயலாது என்பதை உணர்ந்தனர்.

1921-ஆம் ஆண்டில் லெனினின் 'புதிய பொருளாதாரக் கொள்கை[1]'யின் மூலம் 'அரசு முதலாளித்துவம்[2]' தோற்று விக்கப்பட்டது. இப் புதிய அமைப்பில் பணத்தை ஒழிக்கும் முயற்சிகள் கைவிடப்பட்டதுடன் விலை, கூலி ஆகியவற்றை நிர்ணயிப்பதில், பணத்திற்கு உரிய இடமும் அளிக்கப்பட்டது. 1928ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றுவதன் மூலம், ரஷ்யா சமவுடைமை நாடுகளில் முதல்நிலை நாடாக மாறியது. ஆயினும், அங்குப் பணத்திற்குச் சிறப்பான இடமும் அளிக்கப்படுகின்றது. கூலிகள் பணமாக அளிக்கப்படுவதுடன் பண்டங்களும் பணிகளும் பணத்தின் மூலம் விலைப்படுத்தவும் படுகின்றன. நாட்டின் உற்பத்தி, நுகர்வு ஆகியவற்றை நிர்ணயிக்கும் முக்கியக் காரணியாக விளங்காவிடினும், பரிவர்த்தனையில் இடையீட்டுக் கருவி யாகவும் பொதுவான மதிப்பலகு ஆகவும் பணம் பயன் படுத்தப்படுகின்றது.

முதலாளித்துவ அமைப்பில் பொருளாதார நடவடிக் கையை நிர்ணயிப்பதில் விலைமட்டம் முக்கியத்துவம் வகிப்பது

[1] New Economic Policy [2] State Capitalism

போன்றே, சமதர்ம அமைப்பிலும் பொருளாதார நடவடிக்கையை நிர்ணயிப்பதற்கு விலைமட்டம் அவசியமென்று ஆஸ்கார் லாஞ்ச்[1] கருதுகின்றார். பணத்தை அடிப்படையாகக்கொண்டே விலைகள் அமைவதால், சமதர்ம அமைப்புகள் பணமில்லாமலேயே செயல்படுவது இயலாது என்பது தெளிவாகின்றது.

சமதர்ம நாடுகளில் பொருளாதார மூலப்பொருள்களை உற்பத்தித் துறையில் ஒதுக்கீடு செய்வதற்கும் பணம் அவசியமாகின்றது. சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப உற்பத்தி அளவுகள் நிர்ணயிக்கப்படக் கூடும். ஆனால், ஒவ்வொரு துறையிலும் ஈடுபடுத்தப்பட வேண்டிய மூலப்பொருள்களின் அளவை நிர்ணயிப்பதற்கு விலைமட்டமே உதவுகின்றது. விலைமட்டத்தை அடிப்படையாகக்கொண்டு மூலப்பொருள்களை ஒதுக்கீடு செய்தால்தான் மூலப்பொருள்கள் பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்பட்டதன் பயன்களை ஒப்பிட்டு மதிப்பிட முடியும்.

சமதர்ம நாடுகளில் பல்லாயிரக்கணக்கான நுகர்வோரிடையில் பண்டங்களைப் பகிர்வு செய்வதற்கும் பணமே நல்ல அடிப்படையாக அமைய முடியும்.

'ஒவ்வொருவருக்கும் அவரவருடைய தேவைக்கு ஏற்ப' அளிப்பது சிறந்த கோட்பாடாயினும், ஒவ்வொருவருடைய தேவையையும் கணக்கிடுவதற்கு ஏற்ற அளவுகோல் ஏதுமில்லை. தனி நபரின் தேவைகளுக்கு ஏற்பவோ, அல்லது அவர்தம் பொதுப் பணிகளுக்கு ஏற்பவோ அமையும் பகிர்வு முறை பொருத்தமற்றதாகவும், குழப்பமாகவும் அமைவதுடன் மக்களின் வெறுப்பிற்கும் மறுப்பிற்கும் உரியதாகக் கூடும். எனவே, சமதர்ம நாடுகளில் பகிர்விற்கு அடிப்படையாக அமையக்கூடியது விலைமட்டமே என்பது தெளிவாகும்.

மேற்கூறியவற்றால், சமதர்ம அமைப்பிலும் பணம் ஓர் அடிப்படைக் காரணியாக அமைவது தெளிவாகின்றது. ஆயினும், விலைமட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமையால் பணத்திற்கும் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை.

[1]Oskar Lange

பணத்தின் சுழலோட்டம்[1]

தற்காலப் பொருளாதார அமைப்பில் பணம் மூலம் செலுத்தும் நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நொடியிலும் பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன, துய்க்கப்படுகின்றன, பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன, நுகரப்படுகின்றன என நாம் பிரித்துக் குறிப்பிட்டாலும், உலகில் துய்ப்போர், உற்பத்தியாளர் என்று இரு தனித்த பிரிவுகள் இல்லை. ஒரு பொருளை உற்பத்தி செய்பவர், மற்றொரு பொருளை நுகர்பவர் ஆகின்றார். சில விதி விலக்குகள் இருக்கக் கூடுமெனினும், அத்தகைய விதிவிலக்குகளைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டுவதில்லை. சாதாரணமான இயல்புகள் கொண்ட சராசரி மனிதர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டும். சாதாரணமான இயல்புகள் கொண்ட சராசரி மனிதர்களைப்பற்றியே நாம் நம் ஆய்வுகளை மேற்கொள்கின்றோம். சராசரி மனிதர்கள் உற்பத்தியாளர்களாகவும், அதே நேரத்தில் நுகர்வோர்களாகவும் விளங்குகின்றனர். உற்பத்திக் காரணிகள், உற்பத்தியிலீடுபடுவதற்கான ஊதியமாக வாரம், வட்டி, கூலி, இலாபம் ஆகியவற்றைப் பெறுகின்றன; அவ்வாறு பெறும் தொகையைத் தமக்கு வேண்டிய பொருள்களுக்கு விலையாக அளிப்பதன் மூலம் செலவிடுகின்றன. இது போன்றே நுகர்வோர் தாம் வாங்கும் பொருள்களுக்காகக் கொடுக்கும் விலையானது, சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், செய்பொருள் உற்பத்தியாளர்கள் ஆகியோரின் வழியே சென்று வாரம், வட்டி, கூலி, இலாப உருவில் நுகர்வோரை அடைகின்றது. அதாவது சமுதாயத்தின் பல பிரிவினரிடையிலும் பணமானது சுழன்று ஓடிக்கொண்டேயிருக்கின்றது. பணத்தின் சுழலோட்டத்தை அடுத்த பக்கத்திலுள்ள வரைபடத்திலிருந்து அறியலாம்:

படத்திலிருந்து ஒவ்வொரு தொழில் நிறுவனமும் எவ்வாறு தனி நபர்களுக்கும், குடும்பங்களுக்கும், அவர்களிடமிருந்து பெற்ற பணிகளுக்காக ஊதியம் அளிக்கின்றன என்பதையும், எவ்வாறு அவர்களுக்குத் தாம் விற்பனை செய்த பண்டங்களுக்கும் பணிகளுக்குமான விலையாக அவ்வூதியத்தைத் திரும்பப் பெறுகின்றன என்பதையும் விவரிக்கின்றது.

[1] **The circular flow of money**

இதைப் போன்றே தனி நபர்களும் பணத்தைப் பெறுகின்றனர்; செலுத்துகின்றனர். தொழில் நிறுவனங்களிலிருந்து தாம் பெற்ற பொருள்களுக்கு விலையாக அவர்கள்



படம் 1

பணத்தைச் செலுத்துகின்றனர்; அதே நேரத்தில் தாம் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கும் பணிகளுக்குமான ஊதியமாகப் பணத்தைப் பெறுகின்றனர்.

மேற்காணும் வகையில் தொழில் நிறுவனங்கள் உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்களுக்கு அளிக்கும் பணம் முழுமையும் உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்களால் தொழில் நிறுவனங்களுக்கே மீண்டும் திருப்பியளிக்கப்படுவதைப் பணத்தின் தொடர்ச்சியான சுழலோட்டம் எனக் குறிப்பிடலாம். பணத்தின் தொடர்ச்சியான சுழலோட்டம் தடையின்றி நிகழும் வரையில் பொருளாதார நடவடிக்கைகள் எவ்விதப் பிரச்சினைகளும் இன்றிக் கணக்கிடவியலாத காலத்திற்குத் தொடர்ந்து நடைபெறும். நிலவும் விலையில், முன்பு உற்பத்தி செய்யப்பட்ட அளவு பண்டங்களும், பணிகளுமே

உற்பத்தி செய்யப்படும் அதே அளவு பணம் அளிக்கப் பெறும்; திரும்பப் பெறப்படும். பொருளாதார அமைப்பின் இயல்பான போக்கு தொடர்ந்து நடைபெற வேண்டுமாயின், பணக்கசிவு ஏதும் இருக்கக் கூடாது. பொருளாதார அமைப் பில் உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கப்பட்ட பணம் முழுவதும் எவ்விதக் கசிவுமின்றிப் பண்டங்களின்மீதும் பணி களின்மீதும் செலவிடப்படுதல் வேண்டும்.

மேற்காணும் பணத்தின் தொடர்ச்சியான சுழலோட்ட மாதிரி மிகவும் எளிதானதாகும். வருமானமாகப் பெறப்படும் தொகை முழுவதும் செலவிடப்படுவதாகக் கருத்தில் கொண்டு அதனை அமைத்துள்ளோம். நடைமுறை வாழ்வில் வருமான மாகப் பெறப்படும் தொகை முழுவதுமே செலவிடப்படு வதில்லை. வருமானத்தில் ஒரு பகுதி சேமிக்கப்படுகின்றது. சேமிக்கப்பட்ட தொகையின் அளவிற்குப் பணத்தின் சுழ லோட்டத்தில் கசிவு ஏற்படுகின்றது.

சேமிக்கப்படும் தொகை முழுவதும் வீணே முடக்கப்படு வதில்லை. சேமிக்கப்பட்ட தொகை, கடன் தரும் நிதியாகவோ அல்லது மூலதனச் சந்தையிலோ பயன்படுத்தப்படுகின்றது. பணச்சந்தையிலிருந்து தொழில் நிறுவனங்கள் பெற்று முதலீடு செய்கின்றன. பொது மக்கள், மற்றும் தொழில் நிறுவனங் களால் சேமிக்கப்பட்ட தொகையானது, பணச்சந்தை, மற்றும் மூலதனச் சந்தை மூலம் தொழில் நிறுவனங்களால் கடனாகவோ அல்லது கைமாற்றாகவோ பெறப்பட்டு முதலீடு செய்யப்படுமாயின், பணத்தின் தொடர்ச்சியான சுழலோட் டத்தில் தடையேதும் ஏற்படுவதில்லை. பொருளாதார நடவடிக்கைகளின் இயல்பான போக்கிலும் மாற்றமேதும் ஏற்படுவதில்லை. அதாவது, நாட்டினரின் சேமிப்பானது பணச்சந்தை, மற்றும் மூலதனச் சந்தை மூலம் முதலீடு செய்யப்படுமாயின், பணத்தின் சுழலோட்டமானது எவ்விதத் தடையுமின்றித் தொடர்ந்து நடைபெறும்.

நாட்டு மக்களுடைய சேமிப்பானது பணச்சந்தையின் வழியே முதலீடு செய்யப்படுமாயின், பணத்தின் சுழலோட்டம் பாதிக்கப்படுவதில்லை. ஆயினும், நடைமுறையில் சேமிப்பும், முதலீடும் எப்பொழுதும் சமமாகவே இருக்குமென்பது நிச்சய மில்லை. சேமிப்பைக்காட்டிலும் முதலீடுகளுக்காகப் பெறப் படும் கடனின் அளவு குறையும்பொழுது, பணத்தின் சுழ லோட்டம் குறைகின்றது (கசிவு ஏற்படுகின்றது). அதன்

விளைவாகப் பொருள்களுக்கான தேவை குறைவதால், விலை மட்டமும் குறைவடையும். இதைப் போன்றே கடந்த காலத்தில் முடக்கப்பட்ட தொகைகள் புழக்கத்திற்கு விடப்படுமாயின், சேமிப்பைக்காட்டிலும் முதலீடுகளுக்காகப் பெறப்படும் கடன்கள் அதிகமாகும். அந் நிலையில் பணத்தின் சுழலோட்டம் அதிகரிப்பதால் பண்டங்களுக்கும் பணிகளுக்குமான தேவை அதிகரித்து விலைமட்டமும் அதிகரிக்கும். இதைக் கீழ்க்காணும் வரைபடத்திலிருந்து அறியலாம் :



படம் 2

மேற்காணும் ‘மாதிரி’யில் இனிப் பன்னாட்டு வாணிபம், அரசின் அரசிறை நடவடிக்கைகள், பணவாக்க நடவடிக்கைகள் ஆகியவற்றின் விளைவுகளையும் சேர்த்துக் காணலாம்.

பன்னாட்டு வாணிபத்தில் இறக்குமதியும், ஏற்றுமதியும் முக்கிய நடவடிக்கைகளாகும். இறக்குமதிக்கான தொகை

யைப் பிற நாடுகளுக்குச் செலுத்த வேண்டும். ஏற்றுமதிக்கான தொகையைப் பிற நாடுகளிலிருந்து பெறுதல் வேண்டும். ஏற்றுமதியிலிருந்து கிடைக்கும் தொகையும், இறக்குமதிக்காகச் செலுத்த வேண்டிய தொகையும் சமமாக இருக்க வேண்டும் என்ற நியதியில்லை. அவையிரண்டும் சமமாகவிருப்பின், பணத்தின் வட்டச் சுழலோட்டம் தடைபடுவதில்லை. ஏற்றுமதியைக்காட்டிலும் இறக்குமதி குறையுமானால், பணத்தின் சுழலோட்டம் அதிகரிக்கும். பணத்தின் சுழலோட்டம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமாயின், முதலீட்டைக் காட்டிலும் சேமிப்பு அதிகமாகும்பொழுது, அதன் விளைவுகளை இறக்குமதியைக்காட்டிலும் ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம் சமன் செய்யலாம். அவ்வாறு ஒன்றிலேற்படும் சீர்கேட்டை மற்றொன்றைக்கொண்டு சமன் செய்ய முடியாத பொழுதுதான் பணத்தின் சுழலோட்டம் பாதிக்கப்பட்டு, அதற்கேற்ப நாட்டின் உற்பத்தி அளவும் விலைமட்டமும் பாதிக்கப் படுகின்றன.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள், பணத்தின் சுழலோட்டத்தை இரு விதங்களில் பாதிக்கின்றன. அரசாங்கம் தனி நபர்கள்மீதும் தொழில் நிறுவனங்களின்மீதும் வரி விதித்து வசூலிக்கும்பொழுது வரியாகச் செலுத்தப்பட்ட தொகையின் அளவிற்குத் தனி நபர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் செலவிடப்படக்கூடிய வருமானம் குறைவதால் பணத்தின் சுழலோட்டம் பாதிக்கப்படும். அரசாங்கம் தனி நபர்களுக்குப் பல்வேறு இலவச வசதிகளையும், சில வகை வருமானங்களையும் அளிக்கும்போது அவர்களுடைய வருமானம் அதிகரிப்பதால் பணத்தின் சுழலோட்டம் அதிகரிக்கும். இவ்வாறே வாணிப நிறுவனங்களுக்கு இலவசப் பணிகளை அரசாங்கம் ஆற்றும்பொழுது, மானியங்கள், உதவித் தொகைகள் அளிக்கும்பொழுது தொழில் நிறுவனங்களின் வருமானம் அதிகரிக்கின்றது.

பன்னாட்டு வாணிபம் மற்றும் அரசின் நடவடிக்கைகளின் விளைவாகப் பணத்தின் சுழலோட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. அரசின் அரசிறை நடவடிக்கைகள், பணவாக்க நடவடிக்கைகள், பன்னாட்டு வாணிபம் ஆகியவற்றின் விளைவாகப் பணத்தின் சுழலோட்டத்தில் உள்நாட்டிலும் கசிவு ஏற்படலாம்; பன்னாட்டு அளவிலும்

கசிவு ஏற்படலாம். இதனைக் கீழ்க்காணும் வரைபடத்திலிருந்து அறியலாம் :



படம் 3

மேற்காணும் படத்திலிருந்து பணத்தின் சுழலோட்டம் மிகவும் தடைபட்டிருக்குமென்பது தெளிவாகின்றது. உற்பத்திக் காரணிகளுக்கான ஊதியங்களும், நுகர்வுச் செலவுகளும் சம நிலையில் இருக்கும் எனக் கருத முடியாது. இவ்வாறே மூலதனச் சந்தைக்கு அளிக்கப்படும் நிதியும் அதிலிருந்து பெறப்படும் நிதியும் ஏற்றுமதிகளுக்கான வரவுகளும், இறக்கு மதிகளுக்கான செலவுகளும், அரசின் வருமானங்களும், அஃது அளிக்கும் பணங்களின்மீதான செலவுகளும் சமமடையக் கூடுமென நாம் எதிர்பார்க்க முடியாது. அதாவது பணத்தின் சுழலோட்டத்தில் முழு அளவில் கசிவு ஏற்படுவதற்கும், அவ்வாறே புது நிதி இடம் பெறுவதற்கும் வாய்ப்பு உண்டு. ஏற்படும் கசிவு அல்லது புதிய நிதியின் வருகைக்கு ஏற்பப் பணத்தின் சுழலோட்டம் மாறியமைக்கக் கூடுமாதலால், மாறா உற்பத்தி நிலையும் விலை மட்டமும் இயலாதவையாகும்.

மிகவும் எளிதாக்கப்பட்டுள்ள பணத்தின் சுழலோட்ட மாதிரிகளையே நாம் அளித்துள்ளோம். நடைமுறை உலகில் பணத்தின் சுழலோட்டத்தின் பல்வேறு குழப்பங்களான பிரச்சினைகள் நிலவுகின்றன.

தொழில் நிறுவனங்கள் என்பவை உண்மையில் நூற்றுக் கணக்கான தொழில் நிறுவனங்களைக் கொண்டவையாகும். தனி நபர், மற்றும் குடும்பங்கள் என்பவை பல்லாயிரக்கணக் கான நபர்களைக் கொண்டவையாகும். இதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் பணத்தைச் செலுத்துகின்றனர்; அதே நேரத்தில் பணத்தைப் பெறுகின்றனர். அத்தகைய நடவடிக் கைகள் அனைத்தையுமே சேர்க்கும் வகையில் எடுத்துக் காட்டுகளை அமைப்பது கடினம். எண்ணிக்கை எவ்வளவாக இருப்பினும், பணத்தின் சுழலோட்டம் எவ்வாறு அமையும் என்பதைத் தெளிவாக மேலே உணர்த்தியுள்ளோம்.

பணத்தின் சுழலோட்டத்தின் முக்கியத்துவம்

பணத்தின் சுழலோட்டம் எனும் இக் கருத்து தற்காலப் பொருளாதார அமைப்பில் நடைமுறையில் பயன் மிக்கதாகும். பணத்தின் சுழலோட்டம் தடைபடாத வரையிலும் பிரச்சினை ஏதுமின்றிப் பொருளாதார நடவடிக்கைகள் நடைபெறும். ஆனால், பணத்தின் சுழலோட்டத்தில் குறுக்கீடுகள் ஏற்படு மாயின், பொருளாதார நடவடிக்கைகளின் போக்கில் பெரும் இடையூறுகள் ஏற்படும். பணத்தின் சுழலோட்டத்தில் ஏற்படும் எவ்வித இடையூறும் பணத்தின் சுழலோட்டத்தின் பெருக்கம் அல்லது சுருக்கத்தின் மூலம் பிரதிபலிக்கும்.

எடுத்துக்காட்டாக, பொதுமக்களின் சேமிப்பு அதிகரிப்ப தாகவோ அல்லது வங்கிக் கடனின் அளவு குறைவதாகவோ வைத்துக்கொள்வோம். அதன் விளைவாகப் பணத்தின் சுழ லோட்டம் குறையும். பணத்தின் அளிப்பு மாறாமலிருக்கும் பொழுது அதன் சுழலோட்டம் குறைந்தால், மக்களுடைய செலவிடப்படக்கூடிய வருமானமும், செலவுகளும் குறையும். அதன் விளைவாக வேலைமட்டமும், விலைமட்டமும் குறைந்து, நாட்டில் பணவாட்டப் போக்கு தோன்றும். இதற்கு எதிர்மாறாகச் சுழலோட்டம் அதிகரிக்குமாயின் வருமானம், விலைமட்டம், வேலை மட்டம் ஆகியவை அதிகரிப்பதால், நாட்டில் பணவீக்கப் போக்கு தோன்றும். வேலையின்மைப் பிரச்சினையை உண்டாக்கும் பணவாட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்குப் பணத்தின் சுழலோட்டம் அதிகரிக்கப்படுவ தால் ஏற்படும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் புழக்கத்திலிருக்கும் பணத்தின் அளவைக் குறைக்க வேண்டும். இவ்வாறு பொருளாதாரச் சீர்கேடுகளைத் தவிர்ப்பதற்கு இக் கருத்து உதவுகின்றது.

பொருளாதார அமைப்பில் ஏற்படும் சிறு நிகழ்ச்சிகள்கூட, தொடர் விளைவுகளை நல்குவனவாகும். உதாரணமாக, சேமிப்பு அதிகரிக்குமாயின், செலவுகள் குறையும்; பொது மக்களின் செலவு குறைந்தால் தொழில் நிறுவனங்களின் வருமானம் குறையும்; அதன் விளைவாக உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கப்படும் ஊதியம் குறையும்; பொது மக்களின் வருமானம் குறையும். இந் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும். பணத்தின் சுழலோட்டத்தின் ஒரு முறை சிறு கசிவு ஏற்பட்டாலுங்கூட, தொடர்விளைவுகள் ஏற்படுவதால் வருமானம், தேவை, உற்பத்தி அளவு ஆகியவை குறையும். அது போன்றே புதிய பணம் சிறு அளவில் சேர்க்கப் பட்டாலுங்கூடத் தொடர் விளைவுகளினால் நாட்டில் வருமானம், தேவை, உற்பத்தி ஆகியவை அதிகரிக்கும். பணத்தின் சுழலோட்டத்தை அடிப்படையாகக்கொண்டே கெயின்சு முடுக்கி, பெருக்கி ஆகியவற்றை அமைத்துள்ளார்.

பணத்தின் சுழலோட்டத்தைக்கொண்டு ஒரு நாட்டின் தேசீய வருமானத்தைக் கணிக்க முடியும். பணத்தின் ஓட்டமானது பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பை உணர்த்துகின்றது. அனைத்துப் பண மதிப்பையும் கூட்டுவதன் மூலம் தேசீய வருமானத்தை மதிப்பிட முடியும். அனைத்து மக்களின் மொத்தச் செலவை மதிப்பிடுவதன் மூலமோ அல்லது மொத்த வருமானத்தை மதிப்பிடுவதன் மூலமோ தேசீய வருமானத்தை மதிப்பிடலாம்.

3. பணத்திட்டம்

பணம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் பணத்தின் ஒரு பல வீனத்தை மக்கள் உணர்ந்தனர்; பரிவர்த்தனைச் சாதனமான பணத்தின் மதிப்பு மாறக் கூடியதென்பதை உணர்ந்து, அதனைத் தவிர்க்கத் தலைப்பட்டனர்; பணத்தை ஏதேனும் ஒரு நிலையான மதிப்புடைய உலோகத்துடன் இணைப்பதன் மூலம் பணத்தின் மதிப்பை மாறாமல் பாதுகாக்க முடியும் என்று உணர்ந்தனர்; அவ்வாறு பணமும் உலோகமும் இணைக்கப்பட்டால், உலோகத்தின் மதிப்பு மாறினாலன்றிப் பணத்தின் மதிப்பு மாறுவதில்லை என்பதால், பண வெளியீட்டில் ஏதேனும் ஓர் உலோகத்தை அடிப்படையாகக்கொண்டனர். பணத்திட்டமும் பிரமாணப் (நியமனப்) பணமும் ஒன்றே. ஏனெனில், ஒரு நாட்டின் பணத்திட்டத்தை, அந் நாட்டின் மதிப்பலகாகவே பணவாக்க அதிகாரி கொள்கின்றார். நாட்டின் நியமனப் பணத்திட்டம் பொன்னில் அமைந்தால், நாட்டில் பொன்திட்டம் நிலவுவதாகக் குறிப்பிடலாம்.

பணத்திட்டம் தேசீய அளவிலும் பன்னாட்டு அளவிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பணத்திட்டம் தேசீய இயல்பு வாய்ந்ததாகும். ஏனெனில், உள்நாட்டு உபயோகத்திற்காகவே, செலுத்துச் சாதனமாகவும், மதிப்பலகாகவும் பயன் படுவதற்காகவே பணத்திட்டம் நிர்வகிக்கப்படுகின்றது. ஆயினும், பல்வேறு நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டி இருப்பதால், பணத்திட்டம் பன்னாட்டு நோக்கிலும் முக்கியமானதாகும். எனவே, ஒரு நல்ல பணத்திட்டமானது, உள்நாட்டுத் தேவையையும், பன்னாட்டு எதிர்பார்ப்பையும் நிறைவேற்றுவதாக அமைய வேண்டும். நல்ல பணத்திட்டமானது உள்நாட்டில் செலாவணியின் மதிப்பை நிலைபெறச் செய்வதாகவும், செலாவணியின் அயல்நாட்டு மதிப்பை மாறாமல் பாதுகாப்பதாகவும் அமைய வேண்டும்.

பணத்திட்டத்தின் வகைகள்

பணத்திட்டமானது பொதுவாக உலோகத்திட்டம், காகிதத் திட்டம் என இரு வகைப்படும். இவை இரண்டிலும்

சில உட்பிரிவுகளும் உள்ளன. அவற்றைக் கீழ்க்காணுமாறு விவரிக்கலாம் :



உலோகத்திட்டங்கள்

உலோகத்திட்டம் பின்பற்றப்படும் நாடுகளில் பணத்தின் அலகுகள் உலோகத்தில் அச்சிடப்பட்டிருக்கும். மதிப்பலகாக உலோக நாணயங்கள் விளங்கும் நாடுகளில் உலோகத்திட்டம் பின்பற்றப்படுவதாகக் குறிப்பிடலாம். உலோகத்திட்டத்தை ஒற்றை உலோகத்திட்டம், இரட்டை உலோகத்திட்டம் என இரு வகைப்படுத்தலாம்.

இரட்டை உலோக நாணய முறை (இரட்டை உலோகத் திட்டம்) [1]

ஒரு நாட்டின் பிரமாணப் பணமாக இருவித உலோகங்கள் பயன்படுத்தப்பட்டு, அவ்விரு நாணயங்களின் மாற்று வீதமும் அரசால் நிர்ணயிக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டால், அந் நாட்டில் இரட்டை உலோகத்திட்டம் பின்பற்றப்படுவதாகக் கூறுகின்றோம். இருவித உலோக நாயணங்களும்—பொதுவாகப் பொன்னும், வெள்ளியுமே பயன்படுத்தப்படும்—புழக்கத்திலிருக்கும். அவற்றில் ஒன்றிற்குப் பதிலாக மற்றொன்றை மாற்றிக்கொள்ளலாம்; பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, ஒருவருக்குக் கொடுக்க வேண்டிய கடனை ரூபாயாகத்தான்

[1] Bimetalism

கொடுக்க வேண்டும் என்பதில்லை. ரூபாயின் மதிப்பிற்குச் சமமான பொன்னையோ அல்லது வெள்ளியையோ கொடுக்கலாம். இரட்டை உலோகத்திட்டத்தில் கீழ்க்காணும் இயல்புகள் காணப்படும்:

(1) நாட்டின் செலாவணி அலகு, குறிப்பிட்ட அளவு மதிப்பும் தரமும் உள்ள பொன்னின் மூலமும் வெள்ளியின் மூலமும் உணர்த்தப்படும். எடுத்துக்காட்டாக, ஒரு காலத்தில் இந்திய ரூபாய் பொன்னுடனும் வெள்ளியுடனும் 1:15 எனும் விகிதத்தில் பிணைக்கப்பட்டு இருந்தது. (அதாவது 1 அவுன்சு பொன் 15 அவுன்சு வெள்ளிக்குச் சமம்.)

(2) இருவித உலோகங்களையும், சுதந்தரமாகவும் வரம் பேதுமின்றியும் காசுகளாகப் பொதுமக்கள் அச்சிட்டுக் கொள்ளலாம்.

(3) இருவித உலோக நாணயங்களும் நாட்டிற்குள் வரையற்ற சட்டச் செலாவணிகள் ஆகும்.

(4) இருவித உலோகங்களின் ஏற்றுமதிமீதும், இறக்குமதி மீதும் எவ்விதத் தடையும் விதிக்கப்படுவதில்லை.

(5) நாட்டில் புழக்கத்திலிருக்கும் காகிதப்பணம் மற்றும் துணைக்காசுகளைப் பொன் அல்லது வெள்ளியாக மாற்றிக் கொள்வதற்குத் தடையேதுமில்லை.

இரட்டை உலோகத்திட்டத்தில் இருவித உலோக நாணயங்களும் ஒரே சமயத்தில் புழக்கத்திலிருப்பதால், இரு உலோகங்களின் மதிப்பும் ஒரே வகையில் மாற மாட்டா என்று கருதப்பட்டது. அவற்றிடையேயான மாற்று விகிதத்தைப் பொறுத்தவரையில், அங்காடி மாற்று வீதத்திற்கும் அரசு நிர்ணயிக்கும் (நாணய சாலை) மாற்று விகிதத்திற்குமிடையே வேறுபாடு ஏதுமிருப்பின், அது தாற்காலிகமான வேறுபாடே எனவும், அது மிகக் குறைந்த அளவிலேயே ஏற்படும் என்றும் கருதப்பட்டது. உதாரணமாக, அரசு நாணய விகிதம் 1:16 என்றும், அங்காடியில் நிலவும் நாணய விகிதம் 1:15 என்றும் வைத்துக்கொள்வோம். இதனால் பொன் நாணயங்கள் மட்டுமே அச்சிடப்படும் வெள்ளியின் மதிப்பு உயர்ந்துவிட்டதால், அது நாணயமாக அச்சிடப்பட மாட்டாது. பொன் நாணயங்கள் மட்டுமே அச்சிடப்படும்பொழுது பொன்னிற்கான தேவை அதிகரிப்பதால், அதன் மதிப்பு உயர்ந்து அரசு

நிர்ணயிக்கும் மாற்றுவீதமும், அங்காடியில் நிலவும் மாற்று வீதமும் சமமடையும். இவ்வாறு அவற்றின் மதிப்பு சமநிலை அடைவதன் விளைவாக நாட்டின் விலைமட்டமும் நிலையான தாக அமையும் என்றும் கருதப்பட்டது.

நிறைகள் : (1) ஒற்றை உலோகத்திட்டத்தின்கீழ் ஓர் உலோக நாணயமே புழக்கத்திலிருப்பதால், குறிப்பிட்ட உலோகம் கிடைப்பதருமையானதாக இருக்கும். இரட்டை உலோகத்திட்டத்தில் அவ்வுலோகத்தின் பற்றாக்குறை கணிச மாகக் குறைக்கப்படுகின்றது.

(2) ஒற்றை உலோகத்திட்டத்தைக்காட்டிலும் இரட்டை உலோகத்திட்டமே உள்நாட்டு விலைமட்டத்தை நிலைப் படுத்துவதற்கு ஏற்றதாகும். ஏனெனில், ஓர் உலோகத்தின் மதிப்பு குறையும்பொழுது, மற்றோர் உலோகத்தின் மதிப்பு அதிகரிப்பதன் மூலம் பணத்தின் மதிப்பு தானாகவே நிலைப் படுத்தப்படுகின்றது. பணத்தின் மதிப்பு மாறாவிடின் விலை மட்டமும் மாறுவதில்லை அல்லவா?

(3) இரட்டை உலோகத்திட்டத்தில் இரு உலோகங்களின் மொத்த அளிப்பானது, ஓர் உலோகத்தின் அளிப்பைக் காட்டிலும் அதிகமாகையால் பணத்தின் அளிப்பு நாட்டின் தேவைக்கேற்ப அதிகரிக்கப்படுவதால், உள்நாட்டு விலை மட்டம் நிலைப்படுத்தப்படும்.

உள்நாட்டு விலைமட்டம் நிலைப்படுத்தப்படுமாயின், அயல்நாட்டு நாணயமாற்று வீதமும் மாறாமல் காக்கப்படும். இதன் விளைவாக அயல்நாட்டு வாணிபம் வளர்ச்சியுறும்.

குறைகள்: (1) இரட்டை உலோகத்தில் பொன்னின் அளிப்பும், வெள்ளியின் அளிப்பும் ஏக காலத்தில் ஒரே வகையில் மாற்றமடைந்தால் (அதாவது இரண்டின் அளிப்பும் ஒரே சமயத்தில் அதிகரித்தாலோ, அல்லது குறைந்தாலோ) அரசு நிர்ணயிக்கும் மாற்று வீதத்தைத் தொடர்ந்து கடை பிடிப்பது இயலாது. அத்தகைய காலத்தில் விலைமட்டம் பெரும் மாறுதல்களுக்கு உள்ளாகும். அதாவது இரட்டை உலோகத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளான நிலையான விலைமட்டத்தை அடைவதியலாது.

(2) இரட்டை உலோகத்திட்டத்தில் இருவித உலோக நாணயங்களுக்கிடையில் அரசு நிர்ணயிக்கும் மாற்று வீதமும் அங்காடி(சந்தை)யில் நிலவும் மாற்றுவீதமும் வேறுபட்டால்,

கிரெஷாம் விதி செயல்படத் தொடங்கி, அஃது ஒரு தனி உலோகத்திட்டமாகிவிடும். (கிரெஷாம் விதி கீழே விளக்கப் பட்டுள்ளது.)

(3) இரு உலோகங்களின் விலைகளில் விலைமாற்றங்கள் ஏற்படும்பொழுது இரட்டை உலோகத்திட்டம் ஊக வாணிபத் திற்கு இடம் கொடுக்கும்.

(4) உலகில் மற்ற நாடுகள் யாவும் ஒற்றை உலோகத் திட்டத்தைப் பின்பற்றும்பொழுது தனி ஒரு நாடு மட்டும் இரட்டை உலோகத்திட்டத்தைப் பின் பற்றுவது இயலாது. அவ்வாறு பின்பற்றினால், அஃது அந் நாட்டிற்கே பாதகமாக அமையும். இதனைக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டின் மூலம் அறியலாம்: உலகில் இந்தியா மட்டுமே இரட்டை உலோகத் திட்டத்தைப் பின்பற்றுவதாக வைத்துக்கொள்வோம். அவ்வா றாயின், இந்தியாவில் பொன்னிற்கும் வெள்ளிக்குமிடையே அரசு நிர்ணயிக்கும் மாற்றுவீதமானது, உலகில் மற்ற நாடு களில் நிலவும் அவற்றின் விலையைக்காட்டிலும் குறைவாகவே இருக்கும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் வெள்ளியின் விலை குறைவாகவிருப்பின், மற்ற நாடுகள் இந்தியாவிலிருந்து (பொன்னைக் கொடுத்து) வெள்ளியை வாங்கத் தொடங்கும். இதற்கு மாறாக வெள்ளியின் விலை அதிகமாகவிருப்பின், மற்ற நாடுகள் இந்தியாவிற்கு வெள்ளியை ஏற்றுமதி செய்துவிட்டு, அதற்கீடாகப் பொன்னை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்துகொள்ளும். இவ்வெடுத்துக்காட்டிலிருந்து, உலகின் தனியொரு நாடு மட்டுமே இரட்டை உலோகத்திட்டத்தைப் பின்பற்றுமாயின், முடிவில் தனியோர் உலோகத்திட்டமே நடைமுறைக்கு வரும். அதாவது இரட்டை உலோகத்திட்டம் வெற்றி பெறுவதியலாது. பல நாடுகள் இத் திட்டத்தைப் பின்பற்றினால் மட்டுமே இரட்டை உலோகத்திட்டம் வெற்றி பெறும். ஆனால், நடைமுறையில் இஃது இயலாதது ஆகும்; நடைமுறையில் சிக்கல்கள் மிக்கதாகும்.

உலகில் 19ஆம் நூற்றாண்டின் பணத்துறை வரலாற்றில் இரட்டை உலோகத்திட்டம் மிக முக்கிய இடத்தை வகித்தது. 1870 வரையிலும் இங்கிலாந்து தவிர மற்ற முக்கியமான நாடு களிலெல்லாம் இத் திட்டம் பின்பற்றப்பட்டது. அதற்குப் பின்னர், பொன்திட்டத்தின் முன் இத் திட்டம் புகழ் இழந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இத் திட்டத்தைப் புதுப்பிக்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனை அடிப்

படையாக வைத்தே ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஒருவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டார். 1930-ல் மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1934ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வெள்ளி வாங்கும் சட்டம் மூலமும் மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இரட்டை உலோகத்தைப் புதுப்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டக் காலத்திலேயே பொருளாதார மந்தமும் ஏற்பட்டது. தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டா லும் பொது மக்களின் அவ நம்பிக்கையைப் பெற்றுவிட்ட காரணத்தால், இத் திட்டம் மீண்டும் தோன்றுவதற்கான வாய்ப்பு ஏதுமில்லை.

கிரஷாமின் விதி[1]

சர் தாமஸ் கிரஷாம்[2] என்பார் இங்கிலாந்து நாட்டில் வணி கராக வாழ்ந்து, பின்னர் முதலாம் எலிசபெத் பேரரசியின் நிதி யியல் ஆலோசகராக உயர்ந்தவர். எலிசபெத் பேரரசி காலத்தில் ஒரு முறை புதிய நாணயங்களை அச்சிட்டுப் புழக்கத்தில் விட்டனர். புதிய நாணயங்கள் புழக்கத்தில் வந்த பின்னர் எட்டாம் ஹென்றி காலத்தில் வெளியிடப்பட்ட பழைய நாணயங்கள் மக்களிடமிருந்து மறைந்து விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நேர்மாறாகப் புதிய நாணயங்கள் புழக்கத்திலிருந்து விரைவில் மறைந்து விட்டன. இவ்வியத்தகு நிலைக்கான காரணத்தை விளக்க முன் வந்த சர் தாமஸ் கிரஷாம் 'நல்ல பணமும், கெட்ட பணமும் சட்டச் செலாவணியாகப் புழக்கத்திலிருக்குமிடத்தில், கெட்ட பணம் விரைவில் நல்ல பணத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டிவிடும்' என்று கூறினார். அதாவது, தரக் குறைவான பணம், தரமிக்க பணத்தைப் புழக்கத்திலிருந்து விரட்டி விடும் என்று கிரஷாம் விதி விளக்குகின்றது.

இவ் விதி, இரட்டை உலோகத்திட்டம் மட்டுமின்றி, தனி உலோகத்திட்டம், காகிதப் பணத்திட்டம் ஆகிய அனைத் திலும் செயல்படும்.

நம்முடைய அன்றாட வாழ்வில் நாமே நம்மையறியாமல் இவ் விதியைப் பின்பற்றுகிறோம். எடுத்துக்காட்டாக, நம்மிட முள்ள காகிதப்பணத்தில் சில கசங்கி அழுக்கடைந்தும், சில பளிச்சென்று தெளிவாகவும் இருக்கின்றன என்று வைத்துக்

[1] Gresham's Law   [2] Sir Thomas Gresham

கொள்வோம். நாம் பொருள்களை வாங்கும்பொழுது எந்தப் பணத்தை முதலில் கொடுக்கின்றோம்? பளிச்சென்றிருந்த பணம் நம்மிடம் முடங்கி விடுகிறது. அழுக்கேறியது அல்லது தாழ்ந்தது என்று நாம் நினைக்கும் பணந்தான் புழக்கத்தில் விடப்படுகின்றது. இதைத்தான் கிரஷாம் விதி 'கெட்ட பணம் நல்ல பணத்தை விரட்டி விடும்' என்று கூறிகின்றது.

கிரஷாம் விதி செயல்படுவதற்கான காரணங்களாவன:

(1) உயர்ந்த பணத்தைச் சேமித்து (அல்லது பதுக்கி) வைக்க விரும்பும் மக்களுடைய மனப்பாங்குதான் முக்கிய காரணமாகும்.

(2) பணம் உலோகப் பணமாக இருப்பின், பழைய நாணயத்தை உருக்குவதால் கிடைக்கும் பயனைவிடப் புதிய நாணயத்தை உருக்குவதால் கிடைக்கும் பயன் அதிகமாகும். எனவே, நாணயத்தை உருக்கி உலோகத்தைப் பெற விரும்புவோர் உயர்வகை நாணயத்தை மட்டுமே உருக்குவதால் அந் நாணயம் வழக்கொழிந்து போகும் என்பது உறுதி.

(3) நாணயத்தை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோர் நல்ல நாணயங்களை மட்டுமே ஏற்றுமதி செய்வதால், அவை புழக்கத்திலிருந்து மறைந்து விடுகின்றன.

நிபந்தனைகள் : (1) நாட்டில் போதுமான அளவு பண அளிப்பு இருக்கும்பொழுதுதான் மக்கள் கெட்ட பணம் என்றும், நல்ல பணமென்றும் பாகுபாடு செய்து நல்ல பணத்தைச் சேமிக்கவோ அல்லது பாதுகாக்கவோ முற்படுவர். மாறாக, நாட்டில் பணப் பஞ்சம் நிலவினால் இவ் விதி செயல் படாது.

(2) மக்கள் அனைவரும் கெட்ட பணத்தை ஏற்க மறுத்தாலும், அத்தகைய பணத்தைத் தடை செய்தாலும், செல்லாததாக அறிவித்தாலும் இவ் விதி செயல்படாது.

தனி உலோக நாணய முறை (ஒற்றை உலோகத்திட்டம்)[1]

ஒரு நாட்டில் மதிப்பலகாக ஓர் உலோகம் மட்டுமே பயன் படுத்தப்படுவதற்கு ஒற்றை உலோகத்திட்டம் என்று பெயர். ஒற்றை உலோகத்திட்டத்தில் பிரமாணப்பணம் முழு உலோகப் பணமாகும். அது வரையற்ற சட்டச் செலாவணி

[1] Monometalism

ஆகும். இத் திட்டத்தின்கீழ், குறிப்பிட்ட உலோக நாணயங்கள் மட்டுமே தேவைக்கு ஏற்ப வரையற்று வெளியிடப் படும். உலகின் பணவரலாற்றில் வெள்ளித்திட்டம் எனவும், பொன்திட்டம் எனவும் இரு விதங்களில் ஒற்றை உலோகத் திட்டம் பின்பற்றப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் 1893ஆம் ஆண்டு வரையில் வெள்ளித்திட்டமும், 1927 முதல் 1931 வரையில் பொன்திட்டமும் வழக்கத்திலிருந்தன.

நிறைகள் : பணத்திட்டங்களில் நடைமுறையில் மிகவும் எளிமையானது ஒற்றை உலோகத்திட்டமே ஆகும். அதனை நிர்வகிப்பதும், செயல்படுத்துவதும் மிக எளிதாகும்.

இரட்டை உலோகத்திட்டத்தில் தோன்றக் கூடிய கிரஷாமின் விதி, ஒற்றை உலோகத்திட்டத்தில் தோன்றுவதற்கே வாய்ப்பில்லை. எனவே, கிரஷாமின் விதியின் விளைவுகள் நாட்டின் பொருளாதார அமைப்பைப் பாதிப்பதற்கும் வாய்ப்பில்லை.

ஒற்றை உலோகத்திட்டத்தைப் பல நாடுகள் பின்பற்றும் பொழுது, ஒரே உலோகத்திட்டம் அந் நாடுகள் அனைத்திலும் பிரமாணப் பணமாக இருப்பின், அது பன்னாட்டு உலோகத் திட்டமாகவும் ஏற்றுக்கொள்ளப்படலாம். இதனால் பன்னாட்டுச் செலுத்துதல்களை மேற்கொள்வது எளிதாகும். மேலும், அயல்நாட்டு நாணய மாற்று விகிதச் சமநிலையை அடைவதும் எளிதாகும்.

குறைகள் : அனைத்து நாடுகளும் ஒரே உலோகத் திட்டத்தை மேற்கொள்வதியலாது. ஏனெனில், அனைத்து நாடுகளும் உயர் மதிப்புள்ள பொன் அல்லது வெள்ளித் திட்டத்தையே மேற்கொள்ள முயல்கின்றன. அத்தகைய உலோகங்களின் அளிப்பு நெகிழ்ச்சியற்றதாகும். எனவே, அனைத்து நாடுகளும் ஒரே வித உலோகத்திட்டத்தைப் பின்பற்றுவது நடைமுறையில் இயலாததாகும்.

ஒற்றை உலோகத்திட்டத்தில் ஓர் உலோகத்தின் அளிப்பிற்கு ஏற்பவே பண அளிப்பு அமையும். உலோகத்தின் அளிப்பு போதிய நெகிழ்ச்சியற்றதாகும். உலோகத்தின் அளிப்புடன் பிணைக்கப்பட்டுள்ள பணத்தின் அளிப்பும் நெகிழ்ச்சியற்றுப் போகும். நாட்டின் தேவைக்கு ஏற்ப, பணத்தின் அளிப்பு அதிகரிக்கப்படாவிடின் பணவாட்டப் போக்கு தோன்றக் கூடும்.

ஒற்றை உலோகத்திட்டத்தில் பணத்தின் அளிப்பு நெகிழ்ச்சியற்றிருப்பதால், பணவாட்டம் தோன்றக் கூடும் என்பதால், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கக் கூடும்.

வெள்ளித்திட்டம்[1]

ஒரு நாட்டின் பண அலகானது வெள்ளியின்மூலம் குறிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டால், அந் நாட்டில் வெள்ளித் திட்டம் நிலவுவதாகப் பொருள்படும். நடைமுறையில் வெள்ளித்திட்டமே பல நாடுகளில் பின்பற்றப்பட்டது. எனினும், பொன்னைப் போன்று வெள்ளி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படாததாலும், வெள்ளியைக்காட்டிலும் பொன்னின் மதிப்பு நிலைத்திருக்கக்கூடியதாகையாலும் வெள்ளித் திட்டத்தைக்காட்டிலும் பொன்திட்டத்தைக்கொண்டிருக்கும் நாடுகளில் பணத்தின் வாங்குந்திறன் நிலைத்திருக்க முடியுமாகையாலும் வெள்ளித்திட்டம் முறிவடைந்தது.

வெள்ளித்திட்டம் பல்வேறு நாடுகளில் 1873ஆம் ஆண்டு வரையிலும் பின்பற்றப்பட்டது. இங்கிலாந்தில் 1744ஆம் ஆண்டிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1873ஆம் ஆண்டிலும், இந்தியாவில் 1893ஆம் ஆண்டிலும், சீனாவில் 1935ஆம் ஆண்டிலும் வெள்ளித்திட்டம் முறிவுற்றது.

பொன்திட்டம்

பொன்திட்டம் நெடுங்காலமாக மேற்கத்திய நாகரிகத்தின் சிறப்புக் கூறாகக் கருதப்பட்டது. பொன்னின் உயர் மதிப்பின் காரணமாக, பண உலோகங்களிலெல்லாம் பொன்னே சிறந்தது என்று கருதப்பட்டதால், பண வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் பொற்காசுகளும் புழக்கத்திலிருந்தன. பொன்திட்டத்தில் பொன்னே மதிப்பளவுகோல் ஆகும். பொன்திட்டத்தில் ஒரு நாட்டின் பண அலகானது குறிப்பிட்ட அளவு பொன்னின் மூலம் உணர்த்தப்பட்டது. அதாவது பணத்தின் வாங்கு திறனானது குறிப்பிட்ட அளவு எடையுள்ள பொன்னின் மதிப்பிற்குச் சமமாகும். பொன்திட்டம் சிறப்புக்குரியதாகக் கருதப்பட்டது. ஏனெனில், (அ) நாட்டில் பொன் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாகும். பொன் காப்பின் அடிப்படையில் செலாவணி வெளியிடப்படுவதால், மிகையான செலாவணி வெளியீட்டைப் பொன்திட்டம் தவிர்க்கும்.

[1] Silver Standard

(ஆ) பன்னாட்டுச் செலுத்துதல்களைப் பொன்னின்மூலம் செலுத்த முடியும். பொன் உலக நாடுகள் அனைத்தினாலும் மதிப்புடன் ஏற்றுக்கொள்ளப்படும் உலோகமாகையால், ஒரு நாடு தன்னுடைய இறக்குமதிக்கு ஈடாகப் பொன்னைச் செலுத்தலாம்.

ஒரு நாட்டின் செலாவணியின் மதிப்பு பொன்னின் மூலம் உணர்த்தப்பட்டு, பொன்னும், செலாவணியும் மாற்றுதலுக் குரியவையாக இருக்கும் நாட்டில் பொன்திட்டம் நிலவுவதாகக் குறிப்பிடலாம். அந் நாட்டில் பொன்னின் ஏற்றுமதிமீதும் இறக்குமதிமீதும் தடையேதும் இருக்கக் கூடாது.

உலக நாடுகள் பலவற்றிலும் பலவிதப் பொன்திட்டங்கள் வழக்கத்திலிருந்தனவென்பதை வரலாற்றிலிருந்து நாம் அறிய லாம். பொதுவாக, பொன்திட்டத்தை நேர்முகப் பொன் திட்டம்[1], மறைமுகப் பொன்திட்டம்[2] என இரு வகைப்படுத்த லாம். நேர்முகப் பொன்திட்டம் என்பது, பொற்காசுத்திட்டம்[3] அல்லது பொன் செலாவணித்திட்டத்தைக்[4] குறிக்கும். மறைமுகப் பொன்திட்டமானது, பொற்கட்டித்திட்டம்,[5] பொன் மாற்றுத்திட்டம்,[6] பொன் காப்புத்திட்டம்[7] என மூன்று வகைப்படும்.

பொற்காசுத்திட்டம்

பொற்காசுத் திட்டத்தின்கீழ்க் குறிப்பிட்ட அளவு எடை யும் தரமுமுள்ள பொற்காசுகளே நாட்டின் பிரமாணப்பணம் (நியமனப் பணம்) ஆகும். எடுத்துக்காட்டாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1934ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 31ஆம் நாளிற்கு முன்னர் 25·8 கிராம் எடையும், 9/10 தூய தன்மை யுமுள்ள பொன் டாலர்களே பிரமாணப் பணமாக வழக்கத்தி லிருந்தன.

கீழ்க்குறிப்பிட்டுள்ள தன்மைகள் நிலவும் நாட்டில் பொற் காசுத்திட்டம் நிலவுவதாக நாம் குறிப்பிடலாம்:

(1) நாட்டின் முக்கியமான அலகு பொன் ஆகும். குறிப் பிட்ட அளவு எடையும், தூயத்தன்மையும் உள்ள பொற் காசுகளே நாட்டின் பிரமாணப் பணமாகும். மேலும், பொற் காசுகள் முழுமையான சட்டச் செலாவணி ஆகும்.

[1] Direct Gold Standard
[2] Indirect Gold Standard
[3] Gold Coin Standard
[4] Gold Currency Standard
[5] Gold Bullion Standard
[6] Gold Exchange Standard
[7] Gold Reserve Standard

(2) காகிதப் பணம், மற்றும் வெள்ளி, செம்பு, நிக்கல் போன்ற உலோகங்களாலாகிய துணைப்பணங்களும் புழக்கத்தில் இருக்கலாம். எனினும், அவை குறிப்பிடப் பட்டுள்ள விகிதத்தில் பொற்காசுகளுடன் மாற்றுதலுக்குரியவை ஆகும்.

(3) நாணய அச்சடிப்பானது சுதந்தரமானதும், வரம் பற்றதும் ஆகும். பொதுமக்கள் விரும்பும் அளவிற்கு வரம் பின்றி—நாணய அச்சுத் தீர்வை[1] இலாபமின்றி—உலோகங் களைப் பெற்றுக்கொண்டு நாணயங்களை அரசு நாணய சாலை[2] அச்சிட்டுக் கொடுக்கும்.

(4) பொன்னின் இடப்பெயர்ச்சி சுதந்தரமானதாகும். பொன்னின் இறக்குமதிமீதும் ஏற்றுமதிமீதும் எவ்விதத் தடையும் விதிக்கப்படுவது கூடாது.

மேற்காணும் தன்மைகளுள் ஏதேனும் ஒன்று குறைந் தாலும் அந் நாட்டில் பொற்காசுத்திட்டம் நிலவுவதாக நாம் கொள்ள முடியாது.

பொன்னை நாணயமாக அச்சிடுவதும், உருக்குவதும் இலவசமாகையாலும் பொன்னின் ஏற்றுமதிமீதும் இறக்குமதி மீதும் தடையேதுமில்லையாதலாலும், உலோகம் என்ற முறையில் பொன்னின் மதிப்பும் சமமாகவே இருக்கும். இஃது உள்நாட்டிற்கு மட்டுமின்றி உலகம் முழுமைக்கும் பொருந்தும்.

இதனைக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டின் மூலம் அறியலாம்: இந்தியாவிலும், இலங்கையிலும் பொற்காசுத் திட்டம் பின்பற்றப்படுவதாகவும், இந்தியாவில் பொன்னின் விலை குறைவெனவும், இலங்கையில் பொன்னின் விலை அதிக மெனவும் வைத்துக்கொள்வோம். இலங்கையில் பொன் உயர்விலை பெறுவதால், இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பொன் இடம் பெயரும் (ஏற்றுமதி செய்யப்படும்). பொன் ஏற்றுமதியின் விளைவாக இந்தியாவில் பொன் அளிப்பு குறைவதால் பொன்னின் மதிப்பு அதிகரித்து அதன் விலை உயரும். இலங்கையில் பொன் இறக்குமதி செய்யப்படுவதால், பொன்னின் அளிப்பு அதிகரித்து அதற்கான தேவை குறையும். அதன் விளைவாக இலங்கையில் பொன்னின் விலை குறை

[1] Seigniorage : நாணய அச்சடிப்பின்மூலம் அரசிற்குக் கிட்டும் இலாபம்
[2] Mint

வடையும். இவ்வாறு இரு நாடுகளிலும் பொன்னின் விலை சமமாகவே இருக்கும். அதன் விளைவாகப் பொற்காசுகளைக் கொண்டு வாங்கப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் விலைகளும் இரு நாடுகளிலும் சமமாகவே இருக்கும். பொற்காசை அச்சிடுவதும் உருக்குவதும் இலவசமாக இருப்பதாலும், பொன்னின் இடப்பெயர்ச்சிமீதும் தடையேதுமில்லாததாலும் பொன்னின் உள்நாட்டு விலையும், பன்னாட்டு விலையும் சமமாகவே இருக்கும்.

பொற்காசுத் திட்டத்தின் மற்றோர் இயல்பாவது, பொன்னின் இருப்பிற்கு ஏற்பவே பொற்காசுகளும் வெளியிடப் படும். ஒரு நாட்டிலிருந்து பொன் ஏற்றுமதி செய்யப்பட்டால் அந் நாட்டிலுள்ள பொன்னின் அளவு குறைவதால், பொற்காசு களின் அளவும் குறைவடையும். அந் நாட்டிற்குப் பொன் இறக்குமதி செய்யப்பட்டால், நாட்டிலுள்ள பொன் அதிகரிப்ப தற்கேற்பப் பொற்காசுகளின் அளவும் அதிகரிக்கும். பொற் காசுத்திட்டம் வழக்கத்திலிருக்கும் ஒரு நாட்டில் சாதக அயல் நாட்டுச் செலுத்து நிலை[1] நிலவும்பொழுது, வெளிநாடு களிலிருந்து அந் நாட்டிற்குப் பொன் இறக்குமதியாகும். இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பொன் நாணயசாலையில் நாணயங்களாக அச்சிடப்படுவதால், நாட்டில் செலாவணியின் அளவு அதிகரிக்கும். அவ்வாறின்றி, பாதக அயல் நாட்டுச் செலுத்து நிலை[2] நிலவுமாயின், அந் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்குப் பொன் ஏற்றுமதி செய்யப்படும். நாணயங் களை உருக்குவதன் மூலமும், அங்காடியிலிருந்து பொன்னை விலைக்கு வாங்கியும் பொன் ஏற்றுமதி செய்யப்படுவதன் விளைவாக நாட்டிலுள்ள பொன்னின் அளவு குறைவதால், செலாவணியின் அளவும் குறையும். பொன்னின் இறக்குமதிக் கும் ஏற்றுமதிக்கும் ஏற்பச் செலாவணியின் அளவு பெருக்கப் பட வேண்டும்; அல்லது சுருக்கப்பட வேண்டுமென்பது பொன்திட்டத்தின் பொன்னான விதியாகும். இவ் விதி ஒழுங்காகக் கடைபிடிக்கப்பட்டால்தான் பொன்திட்டம் எதிர் பார்க்கப்படும் வகையில் செயல்படும்.

[1] Favourable balance of payments : *ஒரு நாட்டிற்கு அயல் நாடுகளி லிருந்து வர வேண்டிய வரவினங்கள் அதிகமாகவும், அயல் நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய செலுத்தினங்கள் குறைவாகவும் இருக்கும் நிலை.*

[2] Unfavourable balance of payments : *ஒரு நாட்டிற்கு அயல் நாடுகளி லிருந்து வர வேண்டிய வரவினங்கள் குறைவாகவும், அயல் நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய செலுத்தினங்கள் அதிகமாகவும் இருக்கும் நிலை.*

நிறைகள் (1) பொன் உயர் மதிப்புள்ள உலோகமாகை யால், அதை அடிப்படையாகக்கொண்டு அமையும் பொற் காசுத்திட்டத்தைப் பொதுமக்கள் முழு நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்வர்.

(2) பொற்காசுத்திட்டத்தில் பணவாக்க முறையானது எவ்விதத் தலையீடுமின்றித் தானாகவே இயங்க வல்லது. ஆகவே, அஃது ஒரு தானியங்கு[1] திட்டமாகும்.

(3) பொற்காசுத்திட்டத்தில் செலாவணியின் அயல் நாட்டு மாற்று வீதம் (புற மதிப்பு) நிலை நிறுத்தப்படும்.

(4) பொற்காசுத்திட்டம் வழக்கத்திலுள்ள நாடுகளில் விலை மட்டம் நிலை நிறுத்தப்படும். அதாவது, செலாவணியின் அக மதிப்பு மாறாமலிருக்கும்.

பொற்கட்டித்திட்டம் :

முதல் உலகப் போருக்குப் பின்னர்ப் பொற்கட்டித்திட்ட உருவில் பொன்திட்டத்தைப் பல நாடுகள் பின்பற்றின. இத் திட்டத்திலும் பொன்தான் மதிப்பளவுகோல் ஆயினும், பொன் புழக்கத்திலிருக்காது. குறிப் பணங்கள் அல்லது அடையாளப் பணங்கள் மட்டுமே புழக்கத்திலிருக்கும். இத் திட்டம், பொற் காசுத்திட்டத்தைக்காட்டிலும் சிக்கனமானது ஆகும். இத் திட்டம் முதன்முதலாக இங்கிலாந்தில் 1925ஆம் ஆண்டில் பின்பற்றப்பட்டது. இங்கிலாந்தில் ஓர் அவுன்சு தூய பொன் £ 3.17.10½ என்ற விலையில் 400 அவுன்சிற்கும் குறையாமல் காகிதப்பணத்திற்கு ஈடாக மாற்றிக்கொள்ளப்படலாம் என்று அறிவிக்கப்பட்டது. பொற்கட்டித்திட்டத்தைப் போன்ற ஒரு திட்டத்தை 1926ஆம் ஆண்டில் ஹில்டன்—யங் கமிஷன்[2] இந்தியாவிற்குப் பரிந்துரைத்தது. பொற்கட்டித்திட்டத்தின் தன்மைகள் கீழ்க்காணுமாறு அமைந்திருக்கும் :

(1) நாட்டின் பிரமாணப் பண அலகானது குறிப்பிட்ட அளவும் தூய்மையும் உள்ள பொன்னின் மூலம் உணர்த்தப் படும்.

(2) பொற்காசுகள் புழக்கத்திலிருக்க மாட்டா. ஆனல், பொற்கட்டிகளையும் பொற்பாளங்களையும் காப்பாக வைத்துக்கொண்டு வெளியிடப்படும் காகிதப்பணம் புழக்கத் திலிருக்கும்.

[1] Automatic
[2] Hilton—Young Commission

(3) செலாவணி அலகுகளான காகிதப்பணமும், மற்றத் துணைப்பணங்களும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் குறை யாமல் பொற்கட்டிகளாக மாற்றிக்கொள்ளப்படக் கூடியவை யாகும்.

(4) சுதந்தரமான நாணய அச்சடிப்பு அனுமதிக்கப்படு வதில்லை. பொற்கட்டிகளை வைத்திருப்போர் அவற்றை நாணயங்களாக மாற்றிக்கொள்ள முடியாது.

(5) குறிப்பிட்ட அளவு உள்ள பொற்பாளங்களைக் குறிப்பிட்ட விலையில் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி வாங்கு வதற்கும், விற்பதற்கும் கருவூலமோ அல்லது மைய வங்கியோ தயாராக இருக்கும். எடுத்துக்காட்டாக, 1925 முதல் 1931 வரையில் இங்கிலாந்தில் இத் திட்டம் பின்பற்றப்பட்டபொழுது 400 அவுன்சிற்குக் குறையாமல் ஓர் அவுன்சு பொன் £ 3.17.6 எனும் விலையில் வாங்குவதற்கு பாங்க் ஆஃப் இங்கிலாந்து அனுமதிக்கப்பட்டது.

(6) பொற்காசுத்திட்டத்தைப் போன்றே பொற்கட்டித் திட்டத்தின்கீழும் பொன்னின் ஏற்றுமதிமீதும் இறக்குமதிமீதும் தடையேதும் இல்லை.

இத் திட்டம் உலகப்போர்கள் இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் (1919—39) பல நாடுகளில் பின்பற்றப்பட்டது. உள் நாட்டில் பொற்காசுகள் புழக்கத்தில் விடப்படாமல் அயல் நாட்டுச் செலுத்து நிலை சீர்கேடுகளைச் சமன் செய்வதற்கு மட்டுமே பொற்கட்டிகள் பயன்படுத்தப்பட்டதால், இஃது ஒரு சிக்கனமான திட்டமாகும்.

பொற்காசுத்திட்டம், பொற்கட்டித்திட்டம் ஆகிய இரண் டிலுமே செலாவணி அலகுகள் பொன்னின் மூலமே உணர்த் தப்படுவதுடன், அடையாளப் பணங்களும் துணைப்பணங் களும் பொற்காசுகளாகவோ அல்லது பொற்கட்டிகளாகவோ மாற்றுதலுக்குரியவை ஆகும்.

மேலும், இவ்விரு திட்டங்களிலும், அயல் நாட்டுச் செலுத்து நிலை சீர்கேடுகளைச் சமன் செய்வதற்குப் பொன் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இவ்விரு வகைகளில் இவ்விரு திட்டங்களும் ஒரே இயல்பு கொண்டவையாயினும், பலவிதங் களில் அவை வேறுபட்டவை ஆகும்.

பொற்காசுத்திட்டத்தில் அடையாளப் பணங்களுடன் பொற்காசுகளும் புழக்கத்திலிருந்தன. அது சராசரி மனித னுக்கும் புரியும் அளவில் அமைந்திருந்தது. பொற்கட்டித் திட்டத்தில் காகிதப்பணமும், துணைப்பணங்களுமே புழக்கத் திலிருந்தன. சராசரி மனிதர்களின் பொருளாதார நடவடிக்கை களில் பொன் நேரிடையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. எனவே, பொற்கட்டித்திட்டத்தைக்காட்டிலும் பொற்காசுத் திட்டத்தின்மீது பொதுமக்கள் கொண்டிருந்த நம்பிக்கை அதிகமாகும். பொற்காசுத்திட்டத்தில் நாணய அச்சடிப்பும், உருக்குவதும் இலவசமாகவும், சுதந்தரமாகவும் அனுமதிக்கப் பட்டிருந்தன. பொற்கட்டித்திட்டத்தில் பொற்கட்டிகளை மட்டுமே வாங்குவதற்கும், விற்பதற்கும் மைய வங்கி தயாராக இருக்கும். ஆயினும், இரண்டு விதிகளிலும் அடிப்படைக் காரணம் ஒன்றேயாகும்.

பொற்காசுத்திட்டத்தைக்காட்டிலும் பொற்கட்டித்திட்டம் இரு விதங்களில் சிறந்ததாகும்.

பொற்கட்டித்திட்டத்தில் மைய வங்கி அல்லது கருவூலத்தின் வசம் பொன் காப்பு இருக்குமாயினும், பொற்கட்டிகள் பன் னாட்டுச் செலுத்துதல்களைத் தீர்ப்பதற்கு மட்டுமே பயன்படுத் தப்படுமேயன்றி உள்நாட்டு விவகாரங்களுக்குப் பயன்படுத் தப்படுவதில்லை.

பொன்னைப் பயன்படுத்துவதில் சிக்கனம் காண விழை யும் நாடுகளுக்குப் பொற்கட்டித்திட்டமே ஏற்றதாகும். பொற் காசுத்திட்டத்தால் விளையும் நன்மைகளைத் துய்க்க விரும்பும் நாடுகள் இலவசமும் சுதந்தரமுமான நாணய அச்சடிப்பு, மற்றும் உருக்குதலின் விளைவாகப் பன்னாட்டுச் செலுத்து தல்களுக்குப் பொன் கிட்டாமல் போய்விடுமோ என்று அஞ்சின. பொற்கட்டித்திட்டத்தின் மூலம் இவ்வச்சம் தவிர்க் கப்பட்டது.

நிறைகள் : (1) இத் திட்டம் சிக்கனமானதாகும். பொன் உபயோகத்தைச் சிக்கனப்படுத்துவதுடன் பொற்காசுகளை அச்சிடும் செலவுகள் இல்லாமையாலும், பொற்காசுகள் புழக் கத்திலிருப்பின் ஏற்படக்கூடிய தேய்மானம் இல்லாமையாலும் பொன் விரயமாவதை இத் திட்டம் தவிர்க்கின்றது.

(2) இத்தகைய திட்டத்தில் செலாவணியின் அளிப்பு நெகிழ்ச்சி மிகுந்து இருக்கும்.

(3) அயல் நாட்டு நாணய மாற்று வீதம் பொற்கட்டித் திட்டத்தின்கீழ் மாறாமல் நிலைப்படுத்தப்படும்.

குறைகள் : (1) செலாவணியின் ஒவ்வோர் அலகும் பொன்னாக மாற்றுதலுக்குரியது அல்ல.

(2) பொற்காசுகள் புழக்கத்திலில்லாமையால், பொற் காசுத்திட்டத்தைப் போலின்றி இத் திட்டம் பொதுமக்களின் முழு நம்பிக்கையையும் பெற முடியவில்லை.

(3) பொற்காசுத்திட்டத்தைப் போல், இஃது ஒரு தானியங்கு திட்டமன்று.

(4) நெருக்கடி மிக்க காலங்களில் இத் திட்டத்தை நிருவகிப்பது மிகவும் கடினமாகும்.

பொன் மாற்றுத்திட்டம்

பொன் மாற்றுத்திட்டத்தில் பொற்காசுகள் புழக்கத்தில் இருக்க மாட்டா; உள்நாட்டில் காகிதப்பணமும் மற்ற அடையாளப்பணங்களுமே புழக்கத்திலிருக்கும். அவற்றிற்கு ஈடாகப் பொன் காப்பும் இருப்பதில்லை. உள்நாட்டில் செலாவணியைப் பொன்னாக மாற்ற முடியாது. ஆனால், உள்நாட்டுச் செலாவணிக்கு ஈடாகப் பொன்திட்டம் அல்லது பொற்காப்புத் திட்டத்தைப் பின்பற்றும் வேறு நாட்டின் செலாவணியைப் பெற முடியும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் காகிதப் பணத்திற்கு ஈடாகப் பொற்கட்டிகளைப் பெற முடியாது. ஆனால், பொன்திட்டத்தைப் பின்பற்றிய இங்கிலாந்தின் ஸ்டெர்லிங் நாணயத்துடன் இந்திய ரூபாயை மாற்றிக்கொள்ள முடியும். அதாவது, இத் திட்டத்தின்கீழ்ச் செலாவணிகளுக்கும் பொன்னிற்கும் இடையே நேர்முகத் தொடர்பில்லை; ஆனால் மறைமுகத் தொடர்பு உண்டு.

பொன் மாற்றுத்திட்டத்தில் கீழ்க்காணும் இயல்புகள் நிலவும்: (1) நாட்டின் பிரமாணப் (நியமனப்) பண அலகானது குறிப்பிட்ட அளவும் தூய்மையுமுள்ள பொன்னின் மூலம் உணர்த்தப்படும். (2) பொற்காசுகள் புழக்கத்திலிருப்பதில்லை. பொன்காப்பின்றிக் காகிதப்பணம் வெளியிடப் படும். (3) நாட்டின் பணவாக்க அதிகாரி வெளிநாட்டில் காப்பு அல்லது வங்கிக் கணக்கை வைத்திருக்க வேண்டும். (4) புழக்கத்திலிருக்கும் உள்நாட்டுச் செலாவணியும் அந்

நாட்டுடன் தொடர்புள்ள அயல் நாட்டின் செலாவணியும் மாற்றுதலுக்குரியவை ஆகும். (5) நாட்டின் பணவாக்க அதிகாரி உள்நாட்டுச் செலாவணிக்குப் பதிலாக அயல் நாட்டுப் பற்றுரிமைச் சீட்டுகள் (ட்ராஃப்டுகள்) வாங்கு வதற்கும், விற்பதற்கும் தயாராகவிருப்பர்.

பொன்மாற்றுத்திட்டம் எவ்வாறு இயங்குகின்றது என்பதை இந்திய அனுபவத்திலிருந்து விளக்கலாம்.

இந்தியாவில் பொன்மாற்றுத்திட்டம் பின்பற்றப்பட்ட காலத்தில் அடையாளப்பணங்கள் மட்டுமே புழக்கத் திலிருந்தன; பொன்காப்பும் வைக்கப்படவில்லை. ஆனால் இந்தியாவின் சார்பில், இங்கிலாந்திலிருந்த சில வங்கிகளில் காப்பு அல்லது இருப்பு வைக்கப்பட்டிருந்ததுடன் இந்தியா விலும் ரூபாய்க்காப்பு[1] ஒன்றும் நிர்வகிக்கப்பட்டது. மேலும் ரூ. 1 = 1 ஷில்லிங் 4 பென்னி எனும் விகிதத்தில் பவுன்-ஸ்டெர்லிங்[2] மீதான பற்றுரிமைச் சீட்டுகளை வாங்குவதற்கும், விற்பதற்கும் தயாராக இருப்பதாக அரசு உறுதிமொழி அளித் திருந்தது. ஆங்கிலேயர் ஒருவருக்குச் செலுத்த விரும்பும் இந்தியர் ஒருவர் ரூபாயைக் கொடுத்துப் பவுனைப் பெற முடியும். இப் பேரத்தின் விளைவாக இந்தியாவில் உள்ள ரூபாய்க்காப்பு அதிகரிக்கும். இங்கிலாந்திலிருக்கும் பவுன் காப்பு அதே அளவிற்குக் குறையும். ஆங்கிலேயர் ஒருவர் இந்தியருக்குச் செலுத்த முன் வரும்பொழுது, இங்கிலாந்தில் பவுன்-ஸ்டெர்லிங்கைக் கொடுத்து இந்திய ரூபாய்ப் பற்றுச் சீட்டை வாங்கி, அதனை இந்தியாவிற்கு அனுப்புவார். இதன் விளைவாக, இங்கிலாந்தில் உள்ள பொன் காப்பு அதிகரிக்கும்; அதே அளவிற்கு இந்தியாவில் ரூபாய்க் காப்பு குறைவடையும்.

இவ்வாறு இந்திய அரசு ரூபாய்க்குப் பதிலாகப் பவுனை நிர்ணயிக்கப்பட்ட மாற்று வீதத்தில் வாங்கவும், விற்கவும் தயாராக இருக்கும் வரையிலும் அயல்நாட்டு நாணய மாற்று வீதம் மாறாமல் நிலைத்து இருக்கும். மேலும், பொற்காசுத் திட்டத்தில் பொன்னை உருக்கவும் நாணயமாக அச்சிடு வதற்கும் வாய்ப்பிருந்ததால் ஏற்பட்ட விளைவுகளையும், பொற்கட்டித்திட்டத்தில் பொற்பாளங்களை வாங்குவதற்கும், விற்பதற்கும் வாய்ப்பிருந்ததால் ஏற்பட்ட விளைவுகளையும்

[1] Rupee Reserve
[2] Pound - Sterling

போன்றே உள்நாட்டுச் செலாவணிக்கு ஈடாக அயல்நாட்டுச் செலாவணியை வாங்குவதாலும், விற்பதாலும் ஏற்படும் விளைவுகளும் உள்ளன.

நிறைகள் : மற்ற இரு திட்டங்களைக்காட்டிலும் பொன் மாற்றுத்திட்டம் பொன்னைப் பயன்படுத்துவதில் சிக்கனமான திட்டமாகையால் ஏழை நாடுகளுக்கு மிகவும் ஏற்ற திட்ட மாகும்.

(1) பொற்கட்டித் திட்டத்தைப் போன்றே பொன் மாற்றுத்திட்டத்திலும் பொற்காசுகள் புழக்கத்தில் இல்லாமை யால், பொற்காசுகளை அச்சிடுவதற்காகப் பொன்னை வாங்க வேண்டியது இல்லை.

(2) ஒரு நாட்டிலிருக்கும் பொன்காப்பு, இரு நாடுகளின் பணத்திட்டத்திற்குமே அடிப்படையாக அமைகிறது.

(3) வெளிநாட்டு வங்கிகளில் இருப்பு அல்லது காப்பு இருப்பதால், அதற்குரிய வட்டித்தொகை அரசிற்குக் கிடைக் கின்றது. பயனேதுமின்றிப் பொற்கட்டிகளாக வைத்திருப் பதைக்காட்டிலும் இது சிறந்ததாகும்.

(4) வெளிநாட்டுச் செலாவணியை வாங்கும் விலையைக் காட்டிலும் அதனை விற்பனை செய்யும் விலை அதிகமாகும். இந்த இலாபமும் அரசிற்குக் கிட்டும்.

(5) பொன்னை நேர்முகமாகப் பயன்படுத்தாமலேயே பொற்காசுத்திட்டம், பொன்மாற்றுத்திட்டம் ஆகியவற்றின் நன்மைகளை நாடு அடைகின்றது.

(6) இத் திட்டத்தைப் பின்பற்றுவதற்கு வெளி நாட்டில் காக்கப்படும் சிறிதளவு பொற்காப்பே போதுமானதாகையால், சிறிய நாடுகளுக்கு ஏற்ற திட்டம் இதுவேயாகும்.

குறைகள் : (1) பொன்மாற்றுத்திட்டத்தில் பொற்காசுகள் புழக்கத்திலிருப்பதில்லையாதலால், பொற்காசுத்திட்டத்தைப் போல் பொது மக்களின் நம்பிக்கையை இத் திட்டம் பெறுவ தியலாது.

(2) பொன்திட்டங்கள் அனைத்திலும், இத் திட்டமே அதிக அளவில் நிருவகிக்கப்படும் திட்டமாகும்,

(3) வேறு ஒரு நாட்டின் நாணய அமைப்புடன் தமது நாணய அமைப்பை இணைத்திருப்பதைப் பல நாடுகள் கௌரவக் குறைவாகக் கருதியதால், இத் திட்டத்தைப் பின் பற்றவில்லை.

(4) சுதந்தரமாகத் தனித்தியங்க விரும்பும் நாடுகள் தமது பொன்காப்பை வெளிநாட்டில் வைத்திருக்க விரும்ப வில்லை. ஏனெனில், பொன்காப்பு வைக்கப்பட்டிருக்கும் அயல் நாடு எதிரி நாடாக மாறினாலும், பொன்திட்டத்தைக் கைவிட்டாலும் எதிர்பாராத விளைவுகள் ஏற்படக் கூடும். அதனால் இத் திட்டத்தின்மீது பல நாடுகள் நம்பிக்கை வைக்கவில்லை.

பொன்மாற்றுத்திட்டத்தை முதன்முதலாகப் பின்பற்றிய நாடு ஹாலந்து ஆகும். ஹாலந்து 1871-ல் இத் திட்டத்தைப் பின்பற்றத் தொடங்கியது. 1892-ல் ரஷ்யாவில் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாண்டிலேயே ஆஸ்திரியாவும், ஹங்கேரியும் இவ்வேற்பாட்டை மேற்கொண்டன. 1898-ல் இந்தியாவின் ரூபாய் இங்கிலாந்தின் செலாவணியுடன் இணைந்தது. பிலிப்பைன்சு 1903-ல் அமெரிக்காவுடன் இணைந்தது. முதல் உலகப் போருக்குப் பின்னர்ப் பல்வேறு நாடுகளிலும் நிலவிய இத் திட்டம் 1930-க்குப் பின்னர் ஏற்பட்ட மந்தத்தின்பொழுது பல நாடுகளில் முறிவடைந்தது.

பொன்காப்புத்திட்டம்

1936ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள், கிரேட் பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் ஒரு 'முக்கூட்டுப் பண ஒப்பந்தத்தைச்'[1] செய்து கொண்டன. இவ்வொப்பந்தப்படி, அம் மூன்று நாடுகளும் அவற்றின் தேசீய எல்லைகளுக்குள் பொன்னின் சுதந்தரமான இடப்பெயர்ச்சியை அனுமதித்தன. இந் நாடுகளின் கருவூலங்கள் ஒவ்வொன்றும் 'நாணயமாற்றுச் சமன்செய் நிதி'[2] எனும் காப்பு நிதியை நிருவகித்ததால், பொன் இக் காப்பு நிதிகளுக்குள் இடம் பெயர்ந்தது.

இக் காப்பு நிதிகள் ஒவ்வொன்றும் உள்நாட்டுச் செலா வணியைப் பயன்படுத்தி, அவற்றின் செலுத்துதல்களில் ஒரு

[1] Tripartite Monetary Agreement

[2] Exchange Equalisation Fund

குறிப்பிட்ட வீதத்திற்கு அயல்நாட்டுச் செலாவணியையும், பொன்னையும் அடைந்தன. அயல்நாட்டு நாணய மாற்றுச் சந்தையில் ஈடுபடுவதன் மூலம் நாணயமாற்று விகிதத்தை மாறாமல் நிலைப்படுத்த இந் 'நிதி'களால் முடிந்தது. இம் முறை சிறப்பாகச் செயல்படுவதாகக் கூறப்பட்டது எனினும், இரண்டாவது உலகப் போரினால் ஏற்பட்ட நெருக்கடி நிலையின் விளைவாக இத் திட்டம் செயல்பட முடியவில்லை.

பொன் சமன் திட்டம்[1]

பன்னாட்டுப் பண நிதி[2]யின் தோற்றத்திற்குப் பின்னர், பொற்சமன் திட்டம் நடைமுறைக்கு வந்தது, 'நிதி' ஏற்படுத்தப் பட்டபொழுது, உறுப்பினர் நாடுகள் தமது செலாவணிகளின் முகப்பு மதிப்பை[3] ஒரு பொதுவான இனமாகிய பொன்னின் மதிப்பில் உணர்த்தின. இம் முகப்பு மதிப்பை, அயல்நாட்டு நாணய மாற்று வீதத்தை மாற்றியமைப்பதன் மூலம் மாறாமல் பாதுகாக்க வேண்டும். ஆனால், செலாவணியைப் பொன்னாக மாற்றக் கூடாது. பணவாக்கத் துறை பொன்காப்பு வைத் திருக்க வேண்டுமென்ற நியதியில்லை. எனினும், சிறிதளவு பொன்காப்பேனும் அவசியம் என்பதால், ஒவ்வொரு நாடும் சிறிதளவேனும் பொன்காப்பை வைத்துள்ளன.

உள்நாட்டுப் பொன்திட்டமும் பன்னாட்டுப் பொன் திட்டமும்

பொன்திட்டத்தின் பணிகள் இரண்டாகும். அவை: (1) உள்நாட்டில் செலாவணியின் அளவைக் கட்டுப்படுத் துதல்; (2) அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதத்தை மாறாமல் நிலைப்படுத்துவது. முதற்பணியின் உட்கருத்தாவது, செலாவணியின் மதிப்பை நிலைப்படுத்துவதே ஆகும். உள் நாட்டில் செலாவணியின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் செலாவணியின் மதிப்பைக் கட்டுப்படுத்தி, அதன் மூலம் உள்நாட்டு விலை மட்டத்தை மாறாமல் நிலைப்படுத் துவதே பொன்திட்டத்தின் நோக்கமாகும். பொன்திட்டத்தில் உள்நாட்டுப் பணி இதுவேயாதலால், இதனை உள்நாட்டுப் பொன்திட்டம் எனலாம். பொன்திட்டத்தின் இரண்டாவது பணி உள்நாட்டுச் செலாவணியின் அயல்நாட்டு மாற்று மதிப்பை மாறாமல் பாதுகாப்பதேயாகும். இவ்விரண்டாவது

[1] Gold Parity Standard
[2] International Monetary Fund
[3] Par Value

பணியைப் பொன்திட்டத்தின் பன்னாட்டுப் பணி அல்லது பன்னாட்டுப் பொன்திட்டம் என்று குறிப்பிடலாம்.

சுருக்கமாக, செலாவணியின் அகமதிப்பையும், புற மதிப்பையும் நிலைப்படுத்துவதே பொன்திட்டத்தின் பணிகளாகும். உள்நாட்டுப் பொன்திட்டத்தில் செலாவணியின் மதிப்பு பொன்னின் மூலம் உணர்த்தப்படும். செலாவணியின் வெளியீடு பொன்காப்பின் அளவைப் பொறுத்ததாகும். பன்னாட்டுப் பொன்திட்டத்தில் பல நாடுகளின் செலாவணிகள் தொடர்பு கொண்டிருப்பதுடன், அவற்றிடையேயான மாற்று விகிதத்தை மாறாமல் நிலைப்படுத்துவதற்குப் பொன்திட்டம் ஒரு வழியாகும்.

உள்நாட்டுப் பொன்திட்டம்

உள்நாட்டுப் பொன்திட்டத்தின் குறிக்கோள், உள்நாட்டில் செலாவணியின் அளவைக் கட்டுப்படுத்துவதே ஆகும். பொன்காப்பு கிடைக்குமளவிற்கே பணத்தின் அளவு அமையும். பொன் இறக்குமதியின் விளைவாக, நாட்டில் பொன்னின் இருப்பு அதிகரித்தால் செலாவணியின் அளவும் அதிகரிக்கும். பொன் ஏற்றுமதியின் விளைவாக, பொன் காப்பின் அளவு குறைவடைந்தால், செலாவணியின் அளவும் குறையும். பொன்னும், செலாவணியும் மாற்றுரிமை கொண்டவையாதலால், பணவாக்கத்துறையின் வசம் இருக்கும் பொன்காப்பே வெளியிடப்படக் கூடிய காகிதப் பணத்தின் அளவை நிர்ணயிக்கும். அதாவது, பணவாக்கத் துறையின் மீதும், காகிதப்பண வெளியீட்டைப் பொறுத்த வரையில் ஒரு விதக் கட்டுப்பாடு இருக்கின்றது.

பொன், செலாவணியின் அளவைக் கட்டுப்படுத்துவது மட்டுமின்றி, வங்கி வைப்புகளின் அளவையும் நிர்ணயிக்கின்றது. பொன்காப்பு மாறுதலின் விளைவாக, செலாவணியின் அளவு மாறும்பொழுது, வங்கிகள் வசமிருக்கும் ரொக்கத்தின் அளவும் மாறுதலடையும். வங்கிகளின் வசமிருக்கும் ரொக்கத்தின் அளவு மாறுவதற்கு ஏற்ப அவை அளிக்கும் கடனின் அளவும் மாற்றமடையும். கடன் அளவு மாறுவதற்கு ஏற்ப வங்கிகள் வசமிருக்கும் வைப்புகளின் அளவும் மாற்றமடையும். அதாவது, வங்கிப் பணத்தின் அளவு செலாவணியின் அளவைப் பொறுத்ததாகும். செலாவணியின் அளவோ, பணவாக்கத்துறையிடமிருக்கும் பொன்காப்பின் அளவைப் பொறுத்ததாகும். அதாவது, உள்நாட்டுப்

பொன்திட்டத்தில் நாட்டின் பண அமைப்பும், வங்கிக் கடன் அமைப்பும் பொன்னை அடிப்படையாகக்கொண்டே அமைகின்றன.

உள்நாட்டுப் பொன்திட்டத்தில் பொன்னும் செலாவணியும் (பொற்காசுத்திட்டம் மூலம்) நேர்முகமாகவோ அல்லது (பொன் மாற்றுத்திட்டம், பொற்கட்டித்திட்டம், பொன்காப்புத் திட்டம் ஆகியவை மூலம்) மறைமுகமாகவோ பிணைக்கப்படுவதால், உள்நாட்டு விலைமட்டம் நிலைப்படுத்தப்படுமென்றும், வன்மையான பணவீக்கப் போக்கோ அல்லது வன்மையான பணவாட்டப் போக்கோ தோன்றுவதைத் தடை செய்யும் என்றும் கருதப்பட்டது.

உள்நாட்டுப் பொன்திட்டத்தின் குறைபாடு என்னவென்றால், இத் திட்டத்தில் பணத்தின் அளிப்பு நெகிழ்ச்சியற்றிருக்கும் என்பதேயாகும். பொருளாதார வளர்ச்சியடையும் பொழுது, அதற்கேற்ப அதிகரிக்கும் பணத்திற்கான தேவைக்குச் சமமாகப் பணத்தின் அளிப்பை அதிகரிக்கும் சுதந்தரம், நாட்டின் பணவாக்க அதிகாரிக்கு இல்லை. போதிய பொன்காப்பு இருந்தால் மட்டுமே அவரால் பணத்தின் அளிப்பை அதிகரிக்க முடியும். அதிகரிக்கும் தேவைக்கு ஏற்ப, பணத்தின் அளிப்பை அதிகரிக்காவிட்டால், பணப் பற்றாக்குறை ஏற்படுவதால் விலைமட்டம் வீழ்ச்சியடையும். தொழில்துறையும் வாணிபமும் வளர்ச்சியடையும்பொழுது, பொன் அளிப்பும் (உற்பத்தி) அதிகரிக்குமென எதிர்பார்ப்பது தவறாகும். துரிதமாகப் பொருளாதார முன்னேற்றம் கிட்டும் பொழுது, பொன் அளிப்பு அதிகரிக்காததன் விளைவாகப் பணத்தின் அளிப்பு அதிகரிக்காமல் இருப்பின், விலைமட்டம் குறையத் தொடங்கி, பொருளாதார மந்தம் ஏற்படக் கூடும். இதனால்தான் திருமதி ராபின்சன், பொன்திட்டம் பணவாட்டப் போக்கையுடையதென்று கருதுகின்றார். பொன்னின் அளிப்பைக்காட்டிலும் பணத்திற்கான தேவை அதிகரிக்கும்பொழுது, பொன்னின் மதிப்பும் அதிகரிக்கும். அதே நேரத்தில் பொன்னின் விலை மாறாமல் காக்கப்படுமாயின், பொன்னின் மதிப்பேற்றமானது பொது விலைமட்டம் குறைவதன் மூலம் வெளிப்படும். மேலும், பண அளவுக் கோட்பாடு குறிப்பிடுவதைப் போன்று, பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்குமிடையே நேரிடையான தொடர்பு நிலவுவதில்லை. பணத்தின் அளவை நிலைப்படுத்துவதன் மூலமே பொருளாதார அமைப்பையும் நிலைப்படுத்த முடியுமெனக் கருதுவது தவறாகும்.

பணப் பற்றாக்குறை மந்தத்தைத் தோற்றுவிப்பது உண்மையே. பொன்திட்டம் பணத்தின் அளவை நிலைப் படுத்துமே தவிர, பொருளாதார நிலை பேராக்கத்தை வளர்க்காது.

பணத்தின் மதிப்பை மாறாமல் நிலைப்படுத்துவதென்பது பொன்திட்டமின்றியே இயலக் கூடியதாகும். உண்மையில் பொன்திட்டம், பணத்தின் அளவை நிலைப்படுத்துவதில்லை. அது பொன்னின் அளவிற்கும், செலாவணியின் அளவிற்கு மிடையே உள்ள தொடர்பினை மட்டுமே நிலைப்படுத்து கின்றது. பொன்னின் அளவில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும் பொழுது, செலாவணியின் அளவிலும் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவது உண்மையே.

தற்காலத்தில் குறைந்த அளவு பொன்காப்பு வைப்பது கூடத் தவறெனக் கருதப்படுகிறது. நம்பிக்கை எல்லை ஒன்றை நிர்ணயித்து, அவ்வெல்லை வரையிலும் எவ்விதக் காப்புமின்றிச் செலாவணியை வெளியிடுவதே அறிவுடைமை யென்றும், நம்பிக்கை எல்லையானது கால, தேச, வாணிப நிலவரங்களுக்கேற்ப அவ்வப்பொழுது மாற்றப்படுவதே சிறப்பு எனவும் கருதப்படுகிறது. பண நிலைப் பேராக்கத் தையும், பொருளாதார நிலைப் பேராக்கத்தையும், பணத்திற் கான தேவை நிலவரங்களுக்கேற்பப் பணத்தின் அளிப்பை அதிகரிக்கும் சுதந்தரத்தைப் பணவாக்க நிருவாகத்தினருக்கு அளிப்பதன் மூலமே அடைய முடியும். பணம் மதிப்புடைய தாக இருக்க வேண்டுமென்ற நியதி இல்லை. அது பற்றாக் குறையானதாகவும், பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நிருவகிக்கப்படுவதாகவுமே இருக்க வேண்டும். பணத்தின் மதிப்பையும், பொருளாதார வளர்ச்சியையும் ஒரு மஞ்சள் உலோகத்தைக்கொண்டு கட்டுப்படுத்த முயல்வது தவறாகும். ஆதலால்தான், பொன்திட்டம் இயற்கையாகவே உலகிலிருந்து மறைந்துவிட்டது. அதற்கு மீண்டும் உயிரூட்ட மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவும் வீண் முயற்சிகளே.

பன்னாட்டுப் பொன்திட்டம்

பொன்திட்டத்தின் உள்நாட்டு நோக்கத்தைக்காட்டிலும் பன்னாட்டு நோக்கமே ஒரு விதத்தில் முக்கியமானதாகும். பன்னாட்டுப் பொன்திட்டத்தின்கீழ் (அதாவது, பல நாடு களில் பொன்திட்டம் நிலவுவது) அனைத்து நாடுகளிலும்

பரிவர்த்தனைச் சாதனமாகவும், மதிப்பளவுகோலாகவும் பொன்தான் பயன்படுத்தப்படும். மேலும், பொன்னிற்குச் சுதந்தரமான சந்தை உண்டு. அதாவது பொன்னின் ஏற்றுமதி மீதும், இறக்குமதிமீதும் எவ்விதத் தடையும் விதிக்கப்பட மாட்டாது. இந் நிபந்தனையே பன்னாட்டுப் பொன் திட்டத்தின் உயிரோட்டமாகும். இது நிறைவு செய்யப்படாத நாட்டில் நிலவும் பொன்திட்டம் உள்நாட்டுப் பொன்திட்டமே யாகும். பன்னாட்டுப் பொன்திட்டத்தின் நோக்கம் நாணய மாற்று வீதத்தை நிலைப்படுத்துவதேயாகும். பன்னாட்டுப் பொன்திட்டத்தின் உறுப்பு நாடுகள் தமது செலாவணிகளின் மதிப்பைப் பொன்னின் மூலம் உணர்த்திவிடுவதால், அயல் நாட்டு நாணயங்களின் மாற்று விகிதம் தானாகவே சமநிலை அடையும். அத்தகைய சமநிலை மாற்று வீதம் நாணயசாலை மாற்று வீதம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

பன்னாட்டுப் பொன்திட்டம் வெற்றிகரமாகச் செயல் படுவதற்கான நிபந்தனைகள் : (1) பன்னாட்டுப் பொன் திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டுமாயின், பணவாக்கத் துறையினர் கீழ்க்காணும் 'பொன்திட்ட ஆட்டத்தின் விதிகளை'ப் பின்பற்ற வேண்டும் :

(அ) பொன்னின் இறக்குமதிமீதும், ஏற்றுமதிமீதும் தடையேதும் இருக்கக் கூடாது.

(ஆ) பொன் இறக்குமதி செய்யப்படும்பொழுது நாட்டில் செலாவணியின் அளவும் கடனின் அளவும் தாமாகவே அதிகரிக்க வேண்டும்; பொன் வெளியேற்றத்தின்பொழுது நாட்டில் செலாவணி, மற்றும் கடனின் அளவு தாமாகவே சுருங்க வேண்டும்.

(இ) பல்வேறு நாடுகளின் பணவாக்க அதிகாரிகளும் பொன்திட்ட நடைமுறைகள் பாதிக்கப்படாத வகையில், பொன் இருப்பிற்கு ஏற்ப, செலாவணி மற்றும் கடன் அளவு மாற்றமடைவதில் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.

(2) நாடுகளின் பணவாக்க அதிகாரிகள், மாறாத அயல்நாட்டு நாணய மாற்று வீதத்தைக் காப்பதே முக்கிய மென்பதையும், மற்ற நோக்கங்கள் யாவும் இந் நோக்கத்திற்குக் கீழ்ப்பட்டவையே என்பதையும் கருதிச் செயல்படுதல் வேண்டும். அதாவது, நாட்டில் பணவீக்கமோ அல்லது பண

வாட்டமோ ஏற்பட்டாலுங்கூடப் பொன்திட்ட விதிகள் தவறாது பின்பற்றப்படுதல் வேண்டும்.

(3) பன்னாட்டுப் பொன்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு ஒவ்வொரு நாட்டிலும் விலை, கூலி, வருமானம் ஆகியவை நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுடன் இருப்பது அவசியமாகும். ஏனெனில், பொன் ஏற்றுமதி அல்லது இறக்குமதிக்கேற்பச் செலாவணிப் பெருக்கம் அல்லது செலாவணிச் சுருக்கம் ஏற்படும்பொழுது பணவீக்கப் போக்கு அல்லது பணவாட்டப் போக்கு தோன்றும். அத்தகைய விலை நெளிவுகளும், உற்பத்திச் செலவு நெளிவுகளும் இருந்தால் தான், பொன்திட்டம் தானாகவே இயங்கி அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதத்தை மாறாமல் காக்கும். ஒரு நாட்டில் விலைமட்டம் நெளிவுகளின்றி நிருவகிக்கப்பட்டால் பொன் திட்டம் செயல்பட முடியாது.

(4) பொன்திட்டம் மேற்கொள்ளப்படும் நாடுகளில் தலையீடில்லா வாணிபக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும். சுங்கவரிகள் விதிக்கப்படுமாயின், பண்டங்களின் சுதந்தரமான பரிவர்த்தனை தடை செய்யப்படுவதால், செலுத்து நிலைகள் விரைவில் சமநிலையடைவது தடைப்படும். பன்னாட்டுப் பொன்திட்டத்தில், உறுப்பு நாடுகளில் நிலவும் விலைமட்டங்களிடையேயான வேறுபாடுகள், அவற்றின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிலவரங்களின் மூலம் வெளிப்படும்; இவ் வேறுபாடுகள் பொன் வருகை அல்லது வெளியேற்றத்தின் மூலம் சமன் செய்யப்படும். அதனால் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமிடையேயான வேறுபாடுகள் விரைவில் சரிக்கட்டப்படும். ஆனால், ஒரு நாட்டில் இறக்குமதி வரிகள் விதிக்கப்படுமாயின், இறக்குமதி கட்டுப்படுத்தப்படும்; ஏற்றுமதி அதிகமாகவும், இறக்குமதி குறைவாகவும் அமைவதால், அந் நாட்டிற்குச் சாதகச் செலுத்துநிலை கிட்டும். இம் முறையை ஒரே ஒரு நாடு பின்பற்றினால் கூடப் பரவாயில்லை. ஆனால், பொன்திட்டத்தைப் பின்பற்றும் நாடுகள் அனைத்துமே இறக்குமதி வரிகளை விதிக்குமாயின், பன்னாட்டு வாணிபம் கணிசமான அளவில் குறைவடையும். இறக்குமதியை எவ்விதத்திலும் குறைக்க வேண்டுமென்று முயலும் நாட்டில் பொன்திட்டம் நிலவுவதற்கே வாய்ப்பில்லை.

(5) பன்னாட்டுப் பொன்திட்டம் திறம்படச் செயல்பட வேண்டுமாயின், பொன்திட்டத்தை மேற்கொண்டிருக்கும் நாடு

களிடையில் பெருமளவு மூலதனம் இடம் பெயர்வது கூடாது. ஆனால், அயல்நாட்டுச் செலுத்துகளின் இடைவெளியைக் குறைப்பதற்காகக் குறுங்கால மூலதன இடப்பெயர்ச்சி அவசியமாகும். எடுத்துக்காட்டாக, ஏற்றுமதி குறைவாகவும், இறக்குமதி அதிகமாகவும் காணப்படும் ஒரு நாட்டில் பாதக அயல் நாட்டுச் செலுத்துநிலை நிலவும். செலுத்துச் சமநிலைச் சீர்கேட்டைச் சரிப்படுத்த விரும்பும் நாட்டின் பணவாக்க அதிகாரி, வட்டி வீதத்தை உயர்த்துவார். அதிகரிக்கப்பட்ட வட்டி வீதம் அயல்நாட்டு மூலதனத்தைக் கவர்வதால், அயல் நாட்டு மூலதனம் இறக்குமதி செய்யப்படும். இதனால் சீர் கேடுற்ற செலுத்துநிலை சமன் செய்யப்படும். அதாவது, மூலதனத்தின் குறுங்கால இடப்பெயர்ச்சி பயனுடையதே ஆகும். ஆனால், மூலதனத்தின் இடப்பெயர்ச்சியானது உயர்வட்டி வீதத்தால் ஏற்பட்டதாகவும், செலுத்து நிலையைச் சாதகமாகப் பாதிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். ஆனால், அரசியல் காரணங்களுக்காகவும், சமூகக் காரணங்களுக்காகவும், பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்காகவும் மூலதனம் இடம் பெயர்வது பயங்கரமான விளைவுகளை நல்கும். அவ்வாறு வெளியேறும் மூலதனம் கட்டுப்பாட்டிற்குள் அடங்காமல் அதிகமாக வெளியேறக் கூடுமாதலால், பொன்திட்டம் முறிவடையக்கூடும். பொன் திட்டத்தின் வெற்றிக்கு நிலையான அரசியலமைப்பும், நிதி அமைப்பும், குழப்பமான பொன் வெளியேற்றமில்லாமையும் முக்கிய நிபந்தனைகளாகும்.

*1914*ஆம் ஆண்டிற்கு முன்னர் மேற்காணும் நிபந்தனைகள் யாவும் நிறைவு செய்யப்பட்டதால், பொன்திட்டம் சிறப்புடன் செயல்பட்டது. ஆனால், உலகப்போர்கள் இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், இந் நிபந்தனைகள் நிறைவு செய்யப்படாமையால் பொன்திட்டம் முறிவுற்றது. 'பொன்திட்டமானது சந்தேகமிக்க ஒரு கடவுளாகும். அதற்கெனத் தனியாக வழிபாடு செய்தால்தான் அது வேலை செய்யும்' (கிரௌதர்).

பொன்திட்டம் செயல்படும் விதம்

பொன்திட்டத்தின் குறிக்கோள்கள், செலாவணியின் உள்நாட்டு மதிப்பையும் வெளிநாட்டு மதிப்பையும் செயல்படுத்துவதும், பன்னாட்டுச் செலுத்துச் சாதனமாகப் பயன்படுவதும், சீர்கெட்ட அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சமன்

செய்வதுமேயாகும். தானியங்கு நாணயத்திட்டமான பொன் திட்டமானது எவ்வாறு தானாகவே இயங்கி, அதனிடமிருந்து எதிர்ப்பார்க்கப்படும் பணிகளை ஆற்றுகிறதென்பதைக் கீழ்க் காணும் எடுத்துக்காட்டிலிருந்து அறியலாம்:

இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளும் பொன் திட்டத்தைக்கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். இந்தியாவிற்குச் சாதக அயல்நாட்டுச் செலுத்துநிலை—இறக்குமதிகளைக்காட்டிலும் ஏற்றுமதி அதிகமான நிலை—இருப்பதாக வைத்துக்கொள்வோம். உபரி ஏற்றுமதிக்கான தொகை பொன்னின் மூலமே செலுத்தப்படும். அதாவது, இந்தியாவுக்குப் பொன் இறக்குமதி செய்யப்படும். பொன் இருப்பு அதிகரிப்பதால், இந்தியாவில் செலாவணியின் அளவும் கடனின் அளவும் பெருக்கமடையும். இதன் விளைவாக விலைமட்டமும், தொழில் முயல்வோரின் இலாப விகிதமும் அதிகரிக்கும். இலாப விகிதம் அதிகரிப்பதன் விளைவாகப் பெருமளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதால் உற்பத்தி, வேலைமட்டம் ஆகியவையும் அதிகரிக்கும். முடிவில் உற்பத்திக் காரணிகளின் வருமானமும் பொருள்களின் உற்பத்திச் செலவும் அதிகரிக்கும். இந்தியாவில் வருமானம் அதிகரிப்பதால், வெளிநாட்டுப் பொருள்களுக்கான தேவை அதிகரிக்கும். அதே சமயம் உற்பத்திச் செலவு அதிகரிப்பின் விளைவாக விலைமட்டம் உயர்வதால், இந்தியப் பொருள்களுக்கான அயல்நாட்டுத் தேவை குறையும். இதனால் இந்தியாவின் ஏற்றுமதி குறையும்; இறக்குமதி அதிகரிக்கும்.

இதற்கிடையில் பாதக அயல்நாட்டுச் செலுத்துநிலையின் விளைவாக, இந்தியாவிற்குப் பொன்னை ஏற்றுமதி செய்த இலங்கையில் பொன் இருப்பு குறைந்ததால், செலாவணியின் அளவும் குறைந்திருக்கும். இதனால் இலங்கையில் வருமானமும், உற்பத்திச் செலவும் குறைந்திருக்கும்; இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதும் குறைந்திருக்கும்; இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்வது அதிகரிக்கத் தொடங்கும். அதாவது, இலங்கையில் சாதக அயல்நாட்டுச் செலுத்துநிலை நிலவும். இறுதியில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட பொன், மீண்டும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படும்; தான் ஏற்றுமதி செய்த பொன்னை மீண்டும் இலங்கை பெறும். மேற்காணும் விதத்தில், நாடுகளிடையில் பொன்னின் இடப்பெயர்ச்சியானது நெடுங்காலத்தில் தனக்குத் தானே சரி செய்துகொள்ளும். ஒரு நாட்டிலிருந்து மற்றொரு

நாட்டிற்குப் பொன் தொடர்ந்து (திரும்பாமலேயே) இடம் பெயர்வதென்பது இயலாததாகும். பொன்னின் ஒரு வழி இடப்பெயர்ச்சி தொடர்ந்து நிகழ்ந்தால், பொன்திட்டம் முறிவுறும். ஒரு நாட்டில் தொடர்ந்து பாதக அயல்நாட்டுச் செலுத்துநிலை நிலவினால், அந் நாடு தொடர்ந்து பொன்னை ஏற்றுமதி செய்துகொண்டேயிருக்கும். இது தொடர்ந்து நடைபெற்றால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர், அந் நாட்டிடம் பொன் இருப்பே இல்லாமல் போய்விடுமாகையால், அந் நாடு பொன்திட்டத்தைக் கைவிடும். இது போன்றே ஒரு நாட்டில் தொடர்ந்து சாதக அயல்நாட்டுச் செலுத்துநிலை நிலவினுல், வெளி நாடுகளிலிருந்து அந் நாட்டிற்குப் பொன் இறக்குமதி செய்யப்படும். அதன் விளைவாகச் செலாவணியின் அளவும், அதைத் தொடர்ந்து கடனின் அளவும் பெருக்கமடைவதால் வெகு விரைவில் அந் நாட்டில் மிகையான பணவீக்கம் தோன்றும். அதைத் தவிர்க்க விரும்பும் நாடு, இறக்குமதி செய்யப்படும் பொன்னை நீர்க்கச் செய்துவிடும்.

மேற்கூறியவற்றால், பொன்திட்டத்தில் உள்நாட்டிலேற்படும் செலாவணிப் பெருக்கம், செலாவணிச் சுருக்கம், அயல்நாட்டுச் செலுத்துநிலை சீர்கேடு அடைவது ஆகியவை, அரசு அல்லது பணவாக்க அதிகாரியின் எவ்விதத் தலையீடுமின்றித் தானாகவே சரிசெய்துகொள்ளப்படும் என்பது தெளிவாகும். பொன்திட்டம் எவ்வாறு தானாகவே இயங்குகிறதென்பதைப் பின்வரும் அட்டவணையிலிருந்து அறியலாம் :

பொன்னை இழுக்கும் நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையும், பொன்னைப் பெறும் நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையும் மற்றொரு முறையிலும் சமநிலை எய்தக்கூடும். பாதக அயல்நாட்டுச் செலுத்துநிலையை அனுபவிக்கும் நாட்டிலிருந்து பொன் ஏற்றுமதி செய்யப்படும். பொன் ஏற்றுமதி செய்யப்படுவதால், அந் நாட்டில் செலாவணியின் அளவு குறையும். அதைத் தொடர்ந்து கடன் அளவும் குறையும். இதன் விளைவாக, அந் நாட்டில் வட்டி வீதம் அதிகரிக்கும். உயர்வட்டி வீதம், அயல் நாடுகளிலிருந்து குறுங்கால நிதிகளைக் கவர்ந்திழுக்கும். அதனால் அந் நாட்டில் சாதக அயல்நாட்டுச் செலுத்துநிலை தோன்றும். இதற்கு நேர்மாறாகப் பொன்னை இறக்குமதி செய்யும் நாட்டில் செலாவணியின் அளவும், கடனின் அளவும் அதிகரிப்பதால் வட்டி வீதம் குறைவடையும். வட்டி வீதம் குறைவடைவதால், குறுங்கால நிதிகள் அந் நாட்டிலிருந்து

இந்தியா	இலங்கை
சாதக அயல்நாட்டுச் செலுத்து நிலை	பாதக அயல் நாட்டுச் செலுத்துநிலை
↓	←
பொன் இறக்குமதி	பொன் ஏற்றுமதி
↓	↓
செலாவணிப் பெருக்கம் (பண வீக்கம்)	செலாவணிச் சுருக்கம் (பண வாட்டம்)
↓	↓
விலைமட்ட, வருமான உயர்வு	விலைமட்ட, வருமானக் குறைவு
↓	↓
அயல்நாட்டுப் பொருள்களுக் கான தேவை அதிகரிப்பும், குறைவான ஏற்றுமதியும்	அயல்நாட்டுப் பொருள்களுக் கான தேவை குறைவதும், அதிக ஏற்றுமதியும்
↓	↓
பாதக அயல்நாட்டுச் செலுத்து நிலை	சாதக அயல் நாட்டுச் செலுத்துநிலை
→	↓
பொன் ஏற்றுமதி, செலாவணிச் சுருக்கம், பிற நிகழ்ச்சிகள்	பொன் இறக்குமதி, செலா வணிப் பெருக்கம், பிற நிகழ்ச்சிகள்

உயர்வட்டி வீதம் கிட்டும் நாடுகளுக்கு இடம் பெயரும்; சாதக அயல்நாட்டுச் செலுத்துநிலை பாதக அயல்நாட்டுச் செலுத்துநிலையாகும். அதாவது, பொன்னை இழந்த நாடு மீண்டும் பொன்னைப் பெறும்; பொன்னைப் பெற்ற நாடு, முன்னர்ப் பெற்ற பொன்னை இழக்கும்.

பொன்திட்ட நாடுகளில் தானாகவே சமநிலை எவ்வாறு எய்தப்படுகின்றதென்பதை மற்றொரு வகையிலும் விளக்க லாம். பன்னாட்டுப் பொன்திட்டத்தில் பல்வேறு நாடுகளின்

விலைமட்டங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு நிலவும் பொன்திட்ட நாடுகளின் விலைமட்டங்கள் பொன்மூலம் சமமாகவே இருக்கும். பண அலகு பொன்னின்மூலம் குறிக்கப் படுவதால், பொன்திட்ட நாடுகளில் விலைகள் (பணத்தில்) ஒரே விதமாக நெளிவடையும். உதாரணமாக, ஒரு நாட்டில் (இந்தியாவில்) பண்டங்கள், மற்றும் பணிகளின் பொன்னின் மூலம் விலை அதிகமாக இருப்பதாக வைத்துக்கொள்வோம். இதனால் இந்தியா விற்பனை செய்வதற்கு ஏற்ற சந்தை யாகவும், ஆனால் வாங்குவதற்கு மோசமான சந்தையாகவும் ஆகும். அதே நேரத்தில் மற்ற பொன்திட்ட நாடுகள் வாங்கு வதற்குச் சிறந்த சந்தையாகவும், விற்பதற்கு மோசமான சந்தையாகவும் ஆகும். அதன் விளைவாக இந்தியா குறை வான ஏற்றுமதியையும், அதிகமான இறக்குமதியையும் செய்யும். அதனால் இந்தியாவிற்குப் பாதகமான அயல் நாட்டுச் செலுத்துநிலையும், பிற நாடுகளுக்குச் சாதகமான அயல்நாட்டுச் செலுத்துநிலையும் தோன்றும். அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சமன் செய்வதற்காக இந்தியாவிலிருந்து பொன் ஏற்றுமதி செய்யப்படும். பொன்னின் வெளியேற்றத் தால் இந்தியாவில் செலாவணியின் அளவு குறைவதால் விலை மட்டம் குறைவடையும். இதற்கு முன்னர் விலைமட்டம் குறைவாக இருந்த நாடுகளுக்குப் பொன் ஏற்றுமதி செய்யப் பட்டதால், அந் நாடுகளில் செலாவணியின் அளவு பெருக்க மடைந்து விலைமட்டம் உயரும். அனைத்து நாடுகளின் விலைமட்டங்களும் சமமாகும் வரையிலும் அந் நாடுகளில் விலைமட்டம் குறைந்துகொண்டும், இந்தியாவில் விலை மட்டம் உயர்ந்துகொண்டும் இருக்கும். அதாவது, தானியங்கு நாணயத்திட்டமான பொன்திட்டம், பொன்திட்ட நாடு களிடையில் சரியாகப் பொன்னைப் பகிர்வதுடன் விலை மட்டத்தையும் காக்கின்றது.

இவ்வாறு நாடுகளிடையில் சமநிலையை உறுதிப்படுத்து வதை விலைப்பெயர்ச்சி—சுழல் செயல் முறை என்று கூறுவது வழக்கம். பொன்திட்டத்தின் தானியங்குத் தன்மைக்குப் பொன்திட்ட ஆதரவாளர்கள் மிகவும் முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

பொன்திட்டத்தின் நிறைகளும் குறைகளும்

பொன்திட்ட ஆதரவாளர்கள் பொன்திட்டத்தில் கீழ்க் காணும் நிறைகள் இருப்பதாகக் கருதுகின்றனர்:

(1) உலகம் முழுமையும் செலுத்துச்சாதனமாக ஏற்றுக் கொள்ளப்படும் பொன்னுடன் தம் நாட்டுச் செலாவணித்

தொடர்பு கொண்டிருப்பதாலும், தம் நாட்டுச் செலாவணி களுக்கு ஈடாகப் பொற்காசுகள் அல்லது பொற்கட்டிகளைப் பெறலாம் என்பதாலும் பொன்திட்ட நாடுகளின் பொது மக்களுக்குத் தம் நாட்டுச் செலாவணியின்மீது அதிக நம்பிக்கையும் பிடிப்பும் தோன்றும்.

(2) பொன்திட்ட நாடுகள் தமது செலாவணிகளின் மதிப்பைக் குறிப்பிட்ட அளவு எடையுள்ள பொன்னின் மூலம் உணர்த்துவதால், பல்வேறு நாட்டுச் செலாவணி களுக்கும் இடையேயான மாற்றுவீதம் பொன்னை அடிப்படை யாகக்கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது. செலாவணியின் அயல்நாட்டு மாற்று வீதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் பொன்திட்டத்தில் தாமாகவே சமநிலை அடையும். பொன் திட்ட நாடுகளில் அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதம் நெகிழ்ச்சி அடைவது மிகவும் அரிதாகும்.

(3) பொன்திட்டம் ஒரு தானியங்கு நாணயத்திட்டமாகும். பொன்திட்ட நாடுகளில் சீர்கேடுற்ற அயல்நாட்டுச் செலுத்துநிலை, பணவீக்கம், பணவாட்டம் போன்றவை அரசின் எவ்வித் தடையுமின்றித் தாமாகவே திருத்தமடை கின்றன.

(4) பொன்திட்ட நாடுகளில் விலைமட்டம் ஏறத்தாழ நிலையானதாகவே இருக்கும். விலை ஏற்றமும் இறக்கமும் இருக்கக்கூடுமெனினும், அது நாட்டின் வசமுள்ள பொன்னின் இருப்பிற்கேற்ப ஏற்பட்டதாகும். பொன் இறக்குமதியின் பொழுது செலாவணி அதிகரிப்பின் விளைவாக விலைமட்டம் உயருமெனினும், பணவீக்கத்தைத் தோற்றுவிக்குமளவிற்கு உயர்வதில்லை. அவ்வாறே பொன் வெளியேற்றத்தின் பொழுது செலாவணி அளவு குறைவதால் விலை தாழும் எனினும், பணவாட்டத்தைத் தோற்றுவிக்குமளவிற்கு விலை மட்டம் தாழ்வதில்லை. எனவே, பொன்திட்ட நாடுகளில் ஓரளவிற்கு விலை நெளிவுகள் இருப்பினுங்கூட, விலை மட்டம் ஏறத்தாழ நிலைத்ததாகவே இருக்கும்.

(5) பொன்திட்ட நாடுகளிடையில் பொன் செலுத்துச் சாதனமாகையால், பொன்திட்ட நாடுகளிடையில் ஒருவித மான நெருக்கம் உள்ளது. இதன் விளைவாகப் பன்னாட்டு வாணிபமும், பன்னாட்டு முதலீடுகளும் வளர்ச்சி பெறு கின்றன.

குறைகள் : பொன்திட்டம் ஒரு காலத்தில் மிகவும் சிறந்த நாணயத்திட்டமாகக் கருதப்பட்டது. எனினும், காலப் போக்கில் பொன்திட்டத்திற்குக் கிட்டிய ஆதரவைக்காட்டிலும் எதிர்ப்பே அதிகமாகியது. பொன்திட்டத்தினால் விளையும் நன்மைகளெனக் கூறப்படுபவை எவையுமே நடைமுறை உலகில் கிட்டுவதில்லையெனப் பொன்திட்ட எதிர்ப்பாளர்கள் கருதுகின்றனர்.

(1) பொன்திட்டம் அதன் ஆதரவாளர்களால் சிறப்பிக் கப்படுமளவிற்கு எளிமையான திட்டமன்று. பொற்காசுத் திட்டமும், ஓரளவிற்குப் பொற்கட்டித்திட்டமும் எளிமையான திட்டங்களாகக் கருதப்படலாம். ஆனால், ஒரு நாட்டின் செலாவணியைப் பிறிதொரு நாட்டின் செலாவணியுடன் இணைக்கும் பொன்மாற்றுத்திட்டமானது சராசரி மனிதர் களால் உணர்ந்துகொள்ளப்படுமளவிற்கு எளிமையானதன்று. மேலும், பணம் தொடர்பான கருத்தும் காலப்போக்கில் மாறி விட்டது. பழங்காலத்தில் பொதுமக்கள் காகிதச் செலா வணியை ஏற்றுக்கொண்டதற்குக் காரணம், காகிதச் செலா வணிக்கும், பொன்னிற்கும் இடையேயான மாற்றுரிமையே யாகும். தற்காலத்தில் காகிதப்பணங்கள் அவற்றின் இயல் பினாலேயே பணமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எனவே, பொன்திட்டம் பொதுமக்களின் நம்பிக்கைக்குரிய திட்ட மெனக் கூறுவது தற்காலத்தில் பொருளற்ற வாதமாகும்.

(2) பொன்திட்டம் ஒரு 'சமூகக் கால நண்பனாகும்'. அமைதியான சூழ்நிலைகளில் திறமாகச் செயல்படும் பொன் திட்டம் நெருக்கடி நேரங்களில் தோல்வியுற்றுவிடும். இடுக்கண் வருங்கால் நிலைத்து நிற்கும் நட்பே உண்மையான நட்பு என்பதுபோல் நெருக்கடிச் சூழ்நிலைகளில் திறனுடன் செயல்படக்கூடிய பணத்திட்டமே உண்மையில் சிறப்பான பணத்திட்டமாகும். நெருக்கடிக்காலங்களில் தோல்வியுற்ற பொன்திட்டத்தின்மீது பொதுமக்கள் அவநம்பிக்கை கொண்ட தில் வியப்பில்லை.

(3) பொன்திட்ட நாடுகளில் அயல்நாட்டுச் செலாவணி மாற்றுவீதம் மாறாமல் நிலை நிறுத்தப்படுவதற்காக, அந் நாட்டின் உள்நாட்டு வசதிகள் தியாகம் செய்யப்படுகின்றன. பன்னாட்டு வாணிபத்தின் வளர்ச்சிக்கு மாறாத அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதம் அவசியமென்பதால், அக் குறிக் கோளை அடைவதற்காக உள்நாட்டு விலைப்போக்குகளில்

விலை நெளிவுகள் அனுமதிக்கப்படுகின்றன. மாறாத அயல் நாட்டுச் செலாவணி மாற்றுவீதத்தைக்காட்டிலும் உள்நாட்டில் மாறாத விலைமட்டமே மக்களுக்குத் தேவையானதாகும். இவ்விரு கருத்துகளும் ஒன்றிற்கொன்று முரண்பட்டவை யாகும்.

(4) பொன்திட்டம் ஒரு தானியங்கு நாணயத்திட்டம் எனச் சிறப்பிக்கப்படுகின்றது. இஃது உண்மைக்குப் புறம் பானதாகும். ஏனெனில், பொற்கட்டித்திட்டம், பொன் மாற்றுத்திட்டம் போன்றவை ஒரு வகையில் நாட்டின் பணவாக்க அதிகாரிகளால் நிருவகிக்கப்படும் திட்டங்களே.

(5) பொன்திட்டம் ஒரு தானியங்கு நாணயத் திட்ட மென்பதை வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாலுங்கூட, அது பொன்திட்டத்தின் குறையே தவிர நிறையாகாது. எடுத்துக் காட்டாக, ஒரு நாட்டில் தொடர்ந்து பாதகநிலை நிலவி னால், அந் நாட்டில் தொடர்ந்து பொன் வெளியேற்றம் நிகழும். அதனால் பொன்திட்டத்தையே கைவிடுமளவிற்கு அந் நாட்டில் பணவாட்டம் தோன்றும். அந் நாட்டிலிருந்து வெளியேறிய பொன்னைப் பெறும் நாடுகளில் தொடர்ந்து பொன் இறக்குமதி செய்யப்படுவதால், செலாவணிப் பெருக்க மடைவதால், மிகையான பணவீக்கம் ஏற்படுமளவிற்கு விலைமட்டம் உயரும். அதாவது, தானியங்குத் திட்டமான பொன்திட்டத்தின் விளைவாக ஒரு நாட்டில் கொடுமையான பணவாட்டமும், மற்றொரு நாட்டில் மிகையான பணவீக்க மும் ஏற்படும். அத்தகைய சீர்கேடுற்ற நிலை உடனடியாகக் குறுகிய காலத்திற்குள் தானாகவே சீரடைந்தால் பிரச்சினை ஏதுமில்லை. ஆனால், சீர்கேடுற்ற நிலை நெடுங்காலத்திற்குத் தொடர்ந்து, எவ்வித மாற்றமுமின்றி நிலவிடின், பொன்திட்ட நாடுகளின் வீழ்ச்சிக்கு அதுவே பெருங்காரணமாக அமையும். பொன்திட்ட நாடுகளிடையில் பொற்சுரங்கங்கள் உள்ள நாடு களுக்கு நன்மையும், பொற்சுரங்கங்கள் இல்லாத நாடுகளுக் குத் தீமையும் விளைகின்றன.

(6) பொன்திட்ட நாடுகளுக்கிடையில் ஒரு நாட்டில் ஏற்படும் பொருளாதாரச் சீர்கேடுகள் வெகு விரைவில் பிற நாடுகளுக்கும் பரவுகின்றன. பொன்திட்ட நாடுகளில் எதுவும் சுயேச்சையாகச் சுதந்தரமாக இயங்கவியலாது. ஆதலால், வில்லியம் ஜென்னிங்ஸ் பிரையன் என்பார், மனித சமுதாயத் தைப் 'பொன் என்னும் சிலுவையில் அறைந்து கொடுமைப்

படுத்துவதை'த் தவிர்க்கக் கோரினார். எனவேதான், சுயேச்சையான தேசீயப் பொருளாதார வளர்ச்சியடைய முன்வரும் நாடுகள், முதலில் பொன்திட்டத்தைக் கைவிடு கின்றன.

பொன்திட்டம் முறிவடைந்ததன் காரணங்கள்

1821ஆம் ஆண்டில் பிரிட்டனில் முதன்முதலாகப் பொன் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. எனினும், பிற நாடுகளில் சென்ற நூற்றாண்டின் எழுபதுகள் வரையிலும் வெள்ளித் திட்டமும், இரட்டை உலோகத்திட்டமுமே நிலவின. அதற்குப் பின்னர், அமெரிக்கா, செர்மனி, பிரான்சு, மற்றும் பல நாடுகள் பொன்திட்டத்தை மேற்கொண்டன. வெள்ளித்திட்டத்தின் முக்கிய கேந்திரமான இந்தியாவில் பொன்திட்டம் 1900-ல் மேற்கொள்ளப்பட்டது. 1914ஆம் ஆண்டில் சீனா, மெக்சிகோ, மற்றும் சில சின்னஞ்சிறு நாடுகள் தவிர, பிற நாடுகள் யாவற்றிலும் பொன்திட்டம் புகழுடன் விளங்கியது. முதல் உலகப்போருக்கு முன்னர்ப் பொன்திட்டம் ஓரளவிற்கு வெற்றியுடன் நிலவியது. ஆயினும், சீர்கேடுற்ற அயல்நாட்டுச் செலுத்துநிலை தொடர்ந்து நிலவுவதைத் தவிர்ப்பதற்காகவும், ஏற்றுமதி செய்யப்படும் பொன் எதிரி நாடுகளிடம் அகப் பட்டுக்கொள்வதைத் தவிர்ப்பதற்காகவும் 1914 முதல் பொன் திட்டத்தைக் கை விடுவதற்கு ஒவ்வொரு நாடும் ஆரம்பித்தது.

முதல் உலகப்போர் முடிவடைந்த பின்னர், 'பொன் திட்டத்திற்குத் திரும்ப வேண்டும்' எனும் அவா பல்வேறு நாடுகளில் எழுந்தது. செர்மனியிலும், மத்திய ஐரோப்பிய நாடுகளிலும் மிகையான காகிதப்பண வெளியீட்டின் விளை வாக ஏற்பட்ட மிகையான பணவீக்கத்தின் படிப்பினையை உணர்ந்த நாடுகளில் மேற்காணும் கோரிக்கை வலுப் பெற்றது. 1925-ல் பொன்திட்டம் புத்துயிர் பெற்றது. 1928ஆம் ஆண்டில் அத் திட்டம் பரவலாகப் பின்பற்றப்பட்டது. ஆனால், துரதிருஷ்டவசமாக 1929—33-ல் நிலவிய பெருமந்தத் திற்குப் பொன்திட்டமே முதற்பலி ஆகியது. ஒவ்வொரு நாடாகப் பொன்திட்டம் மறையத் தொடங்கியது. 1937ஆம் ஆண்டில் ஒரு நாட்டில்கூடப் பொன்திட்டம் நிலவவில்லை என்பதுடன், ஒரு நாடுகூடப் பொன்திட்டத்தைப் புதுப் பிக்கும் உணர்வைக் காட்டவுமில்லை.

பொன்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்குச் சில நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டுமென்பதை நாம்

அறிவோம். அத்தகைய நிபந்தனைகள் யாவுமே 1914-க்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டதால், பொன்திட்டம் வெற்றி கரமாகச் செயல்பட்டது. ஆனால், இரு போர்களுக்கும் இடைப் பட்ட காலத்திலும், இரண்டாவது போருக்குப் பின்னரும் அவ்வித நிபந்தனைகள் நிறைவு செய்யப்படாமையால், பொன்திட்டம் முறிவடைந்தது.

பொன்திட்டம் முறிவடைந்ததற்கு அதன் செயல் முறை யில் நிலவிய அடிப்படைக் கோளாறே காரணமாகும். உலகப் போருக்குப் பின்னர் உலக நாடுகளின் நோக்கங்கள், செயல் முறைகள், பொருளாதாரச் சூழ்நிலைகள் ஆகியவை பெரும்மாறுதல்களுக்கு உள்ளாகின. குறுகிய தேசீய உணர்வுகள், மாறாத விலைப்போக்கு, பெருமளவில் மூல தனத்தின் இடப்பெயர்ச்சி, பன்னாட்டு வாணிபத்தின் மீதான தடைகள் ஆகியவற்றின் விளைவாகவே பொன்திட்டம் முறிவுற்றது.

பொன்திட்டத்தில், பொன் முக்கிய இடத்தை வகிக் கின்றது. செலாவணி வெளியீட்டிற்குக் காப்பாகவும், அயல் நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சீர்கேடுகளைச் சமன் செய்வதற்கும் பொன் பயன்படுத்தப்படுகின்றது. போதிய அளவில் பொன் இருப்பு இருந்து, அது சமமாக நாடுகளி டையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தால் மட்டுமே பொன்திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட முடியும். இரு போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகள்வசம் பொன் குவிந்தது. அந் நாடுகளில் பொன் குவிந்த அளவிற்குப் பிற நாடுகளில் பொன் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆபத்தை விளைவிக்கக் கூடிய அளவிற்கு மிகவும் குறைவாகப் பொன் இருப்பை வைத்திருக்கும் நாடுகள், பாதக அயல்நாட்டுச் செலுத்து நிலை ஏற்பட்டு, பொன்னை ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்பொழுது, பொன்திட்டத்தைக் கைவிட வேண் டிய கட்டாயத்திற்கு உள்ளாகின.

பல நாடுகள் பொன்திட்ட விதிகளை மீறிச் செயல்பட ஆரம்பித்தன. பொன் இறக்குமதி அல்லது ஏற்றுமதிக்கேற்பச் செலாவணிப் பெருக்கம் அல்லது சுருக்கமடைந்தால்தான் பொன்திட்டம் தானே இயங்கும். இதில் அரசு அல்லது பணவாக்கப் பொறுப்பினரின் எவ்விதத் தடையீடும் இருக்கக் கூடாது என்பது விதியாகும். இரு போர்களுக்கும் இடைப்

பட்ட காலத்தில் பல நாடுகள் இவ் விதியை மீறத் தொடங்கின. பிரிட்டனில் பொன் இருப்பு குறைந்தபொழுது அதன் விளைவு செலாவணி அளவின்மீது பிரதிபலிக்க அனுமதிக்கப்பட வில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டில் பொன் இறக்குமதி செய்யப்பட்டும், இறக்குமதி செய்யப்பட்ட பொன் நீர்த்துப் போகச் செய்யப்பட்டது. அதாவது, பொன் இருப்பிற்கு ஏற்பச் செலாவணியின் அளவு அதிகரிக்கப்படவில்லை. பிரான்சு நாணயத்தின் மதிப்பைக் குறைத்ததால், பிரான்சின் வசமிருந்த பொன் இருப்பு (செலாவணி மதிப்பில்) மிகுதியா யிற்று. ஆயினும், அதற்கேற்பச் செலாவணியின் அளவை அதிகரிக்கப் பிரான்சு முன்வரவில்லை. இவ்வாறு பொன்திட்ட விதிகள் சில நாடுகளில் மீறப்பட்டதன் விளைவாகவும் பொன்திட்டம் முறிவுற்றது.

பொன்திட்டத்தின் முக்கிய நோக்கமாவது, செலாவணியின் உள்நாட்டு மதிப்பைத் தியாகம் செய்தாவது அதன் வெளி நாட்டு மதிப்பை நிலைப்படுத்த வேண்டுமென்பதேயாகும். ஆனால், இரு போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் பணவாக்கப் பொறுப்பினர்தான் குழப்பத்துடன் செயல்பட்டு, செலாவணியின் அக மதிப்பையும், புறமதிப்பையும் ஏக காலத்தில் நிலைப்படுத்த முயன்றனர். இது நடைமுறையில் இல்லாத காரியமாகும். இத்தகைய தவறான நோக்கம் கொண்ட முயற்சியின் விளைவாகவும் பொன்திட்டம் முறிவுற்றது.

தடையிலா வாணிபக் கொள்கை பின்பற்றப்பட்டு, பன்னாட்டு வாணிபம் இயல்பான போக்கில் அனுமதிக்கப் பட்டால்தான் பொன்திட்டம் வெற்றியுறும். ஆனால், இரு போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் பல்வேறு நாடுகளும் குறுகிய தேசீய உணர்வால் உந்தப்பட்டு இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கின. ஒவ்வொரு நாடும் சாதக அயல்நாட்டுச் செலுத்துநிலையை எவ்விதத்திலேனும் பெற முயன்றது. இதன் விளைவாகத் தானியங்குத் திட்டமான பொன்திட்டம், தடைகளுக்கு உட்படுத்தப்பட்டதால் முறி வுற்றது.

பொன்திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட வேண்டு மாயின், பொன்திட்ட நாடுகளிடையில் பெருமளவில் மூலதனம் இடம் பெயரக்கூடாது; ஆனால், குறுங்கால நிதிகள் இடம் பெயர வேண்டும் என்பது நிபந்தனையாகும். இரு

போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் பெருமளவில் மூல தனத்தின் இடப்பெயர்ச்சி பின்வரும் காரணங்களால் தவிர்க்க முடியாததாகி விட்டது:

(அ) பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளும் பின் தங்கிய நாடுகளும் முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்து மூல தனத்தைக் கடனாகப் பெற்று, முதலீடு செய்து, முன்னேற்ற மடைவதற்குத் தொடங்கின. இவ்வாறு கடனாகப்பெற்ற மூல தனத்தையும் அதற்கான வட்டியையும் கடனளித்த நாடு களுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் திருப்பி யளிப்பது (காப்பு வரிகள் விதிக்கப்பட்டதால்) தடை செய்யப்பட்டது. மாறாக, கடனாளி நாடுகள் கடனளித்த நாடுகளுக்குப் பொன்னை ஏற்றுமதி செய்வதன் மூலம் கடன்களைத் தீர்க்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டன.

(ஆ) போர்ப் பிற்காலத்தில், போர் நட்ட ஈடுகள் பொன் னின் மூலமே தீர்க்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டது. நேச நாடுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நட்ட ஈட்டுத் தொகையை, செர்மனி, பொன் மூலமாகவே தீர்க்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது. நேச நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளிடம் பெற்றிருந்த போர்க்காலக் கடன்களும் பொன் மூலமே தீர்க்கப்பட வேண்டுமென நிர்ணயிக்கப் பட்டது. இத்தகைய செலுத்துகள் பொன்திட்டத்தின்மீது ஏற்றப்பட்ட சுமையாகின.

(இ) குறுங்கால நிதிகள் பெருமளவில் பத்திரமான இடங் களை நோக்கி இடம் பெயர்ந்துகொண்டே இருந்தன. இத் தொகை ஏறத்தாழ 2000 மில்லியன் ஸ்டெர்லிங்குகள் என மதிப்பிடப்படுகின்றது. பெருமளவில் ரஷ்யர்களுக்குச் சொந்த மான இத் தொகை ஒரு பணவாக்கக் கேந்திரத்திலிருந்து மற்றொரு பத்திரமான பணவாக்கக் கேந்திரத்திற்கு இடம் பெயரும்பொழுது குழப்பங்கள் ஏற்பட்டன. சுடும் பணத் தின்[1] இடப்பெயர்ச்சியின் விளைவாகப் பெருமளவில் பொன் இடம் பெயர்வதும் தவிர்க்க முடியாததாகியது. இரு போர்களுக் கும் இடைப்பட்ட காலத்தில் இங்கிலாந்தில் பொன்திட்டம் முறிவுற்றதற்கு உண்மைக் காரணம், பெருமளவு மூலதனத் தின் இடப்பெயர்ச்சியே ஆகும்.

பொன்திட்டம் வெற்றி பெற வேண்டுமாயின், பொன்னின் இடப்பெயர்ச்சி குறைந்த அளவிலேயே இருக்க வேண்டும்.

[1] Hot money

பொன்திட்டம் மிகவும் மென்மையான திட்டமாகும். அயல் நாட்டுச் செலுத்துநிலைச் சீர்கேடுகளைச் சமன் செய்வதற்கு மட்டுமே பொன் இடம் பெயர வேண்டும். மேலும், பொன்னின் ஏற்றுமதிச் செலவும், இறக்குமதிச் செலவும் முதல் போருக்குப் பின்னர் அதிகரிக்க ஆரம்பித்து விட்டன. முதல் உலகப் போருக்கு முன்னர் உலகின் முக்கியமான பணச்சந்தையாக இலண்டன் விளங்கியது. இலண்டன் வங்கிகளில் ஒவ்வொரு நாடும் வைப்புக் கணக்குகளை வைத்திருந்தன. நாடுகளிடையேயான செலுத்துதல்கள் இலண்டன் வங்கிகளில் கணக்குப் புத்தகக் குறிப்புகளின் மூலமே நடைபெற்றனவே தவிர, பொன் உண்மையிலேயே இடம் பெயர்வதில்லை. இரு போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் இலண்டனின் முக்கியத்துவம் குறைந்தது. இலண்டனைப் போல முக்கியமான நிதி கேந்திரம் எதுவும் ஏற்படவுமில்லை. ஆதலால், ஒவ்வொரு நாடும் ஏற்றுமதிக்காகப் பெருமளவில் பொன்னை வைத்திருப்பது அவசியமாகிறது. மேலும், பொன்னே நேரிடையாக இடம் பெயர்வதும் தவிர்க்க முடியாததாகியது. இது முறையல்ல என்பதுடன், பல நாடுகள் மிகவும் குறைந்த அளவில் பொன்னை வைத்துக்கொண்டே பொன்திட்டத்தை மேற்கொண்டிருந்ததால், பொன்திட்டத்தின் முறிவு தவிர்க்க முடியாததாகியது.

பொன்திட்டம் முறிவடைந்ததற்குப் பொன் மாற்றுத் திட்டமும் ஒரு காரணமாகும். இரு போர்களுக்கும் இடைப் பட்ட காலத்தில் பொன் மாற்றுத்திட்டத்தை மேற்கொண்டிருந்த பல சிறிய நாடுகள் இலண்டனிலும், நியூயார்க்கிலும் தமது பொன்காப்பை வைத்திருந்தன. ஒரு நாட்டிலிருக்கும் பொன்காப்பு இரு நாடுகளின் நாணயத்திட்டத்திற்கும் அடிப் படையாக அமைவதால், அமைதிக் காலங்களில் பொன் மாற்றுத்திட்டம் எவ்விதக் குழப்பமுமின்றிச் செயல்பட்டது. ஆனால், போர்ப்பீதி அல்லது வாணிப மந்தம் ஏற்படக்கூடும் என்ற அச்சம் நிலவும் காலத்தில், இலண்டனிலும், நியூயார்க் கிலும் பொன்காப்பை வைத்திருந்த நாடுகள் வெகு விரைவில் தமது வைப்புகளைப் பொன் மூலம் திரும்பப் பெறத் தொடங்கின. பல சிறிய நாடுகள் பெருமளவில் தமது பொன் காப்புகளைத் திரும்பப் பெறத் தொடங்கியதாலும் பொன் திட்டம் முறிவுற்றது.

அமைதியான அரசியல் சூழ்நிலைகளில் மட்டுமே பொன் திட்டம் வெற்றி பெறும். ஆனால், முதல் போருக்குப் பின்னர்ப்

பொன்திட்டம் புதுப்பிக்கப்பட்ட நாடுகளில் அமைதியான அரசியல் சூழ்நிலைகள் அமையவில்லை. போர்ப் பீதி, புரட்சிகள், அரசியல் கிளர்ச்சிகள் மலிந்திருந்த நாடுகளில் நிலவிய நிச்சயமற்ற அரசியலின் விளைவாகவும் பொன் திட்டம் முறிவுற்றது. குழப்பங்கள் மிக்க அரசியல் சூழ் நிலைகள் நிலவும் நாடுகளில் வசிக்கும் மக்கள், தமது உயிருக்கும், உடைமைகளுக்கும் ஆபத்து விளையக் கூடு மென்று அஞ்சித் தமது சொத்துகளை ரொக்கமாக்கிக்கொண்டு வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்தனர். குடிபெயர்ந்த நாடு களிலும் பத்திரமற்ற நிலை நிலவும்பொழுது அங்கிருந்து வேறு நாடுகளுக்கு ஏகினர். இதன் விளைவாக, மூலதனம் ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கு இடம் பெயர்வது வழக்க மாகியது. பொன்திட்ட நிபந்தனை இவ்வாறு மீறப்பட்டதன் விளைவாகப் பொன்திட்டம் முறிவுற்றது.

1929 முதல் 1933வரையிலும் உலகைப் பீடித்த பெரும் மந்தமே பொன்திட்டத்தின் முறிவுக்கு உடனடிக் காரண மாகும். மேலே காணும் பல்வேறு பொருளாதாரச் சீர்குலைவு களுக்கும் பெருமந்தமே காரணமாகும். மந்தத்தின் விளை வாக விலைமட்டமும், வேலை மட்டமும் குறைவடைந்த தால், இறக்குமதியைத் தடை செய்வதற்காகப் பல நாடுகள் சுங்க வரிகளை விதித்தன. அதாவது, பன்னாட்டு வாணிபத் தில் தலையீடுகள் ஏற்பட்டன. பெருமந்தத்தின் விளைவாக வெளிநாடுகளில் பொன்காப்பை வைத்திருந்த நாடுகள், அவற்றைத் திரும்பப் பெறத் தொடங்கியதால், பெருமளவில் பொன் இடம் பெயர்ந்தது. மூலதனம் ஒரு நாட்டிலிருந்து பிற நாடுகளுக்குப் பறந்துகொண்டேயிருந்தது. இவ்வாறு பொன்திட்டத்தின் முறிவுக்குப் பெருமந்தத்தின் பல்வேறு கொடும் விளைவுகளும் காரணங்களாகின.

மேற்காணும் காரணங்களுள் சில பொன்திட்டத்தின் அமைப்பிலேயே தோன்றியவை; சில பணவாக்கப் பொறுப் பினர்களின் தவறான போக்கினால் ஏற்பட்டவை; சில பொருளாதாரத்துடன் தொடர்பற்ற புற நிகழ்ச்சிகளின் விளைவாக ஏற்பட்டவை ஆகும்.

நிகழ்காலத்தில் பொன்னின் நிலை

இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற காலத்திலேயே பொன்திட்டத்தின் குறைபாடுகள் இல்லாததும், நிறைகள்

மட்டுமே கொண்டதுமான ஏதேனும் ஒரு திட்டத்தைப் பின் பற்றப் பல நாடுகள் விரும்பின. பொன்திட்டத்தினால் விளையும் முக்கியமான நன்மைகளாவன : (1) நிலையான அயல் நாட்டுச் செலாவணி மாற்று வீதமும், (2) அயல்நாட்டுச் செலுத்துநிலைச் சீர்கேடுகளைத் தானாகவே தவிர்ப்பதுவுமாகும். ஆனால், பல நாட்டுச் செலாவணிகளையும் பிணைப்பதன் மூலம் பணவாக்கப் பொறுப்பினரின் சுதந்தரத்தைப் பறிப்பது பொன்திட்டத்தின் குறையாகும். இக் குறையின் விளைவாக, ஒரு நாடு முழு வேலைமட்டம் எய்தும் வகையில் திட்டமிட்டுச் செயல்பட முடியாத நிலை நிலவும்.

பிரெட்டன்வுட் மாநாட்டின் பரிந்துரையின்மீது தோற்றுவிக்கப்பட்ட 'பன்னாட்டுப் பணநிதி' பொன்திட்டத்தின் நிறைகளைத் தன்னகத்தே கொண்டதாகவும், குறைகளைத் தவிர்த்ததாகவும் அமைக்கப்பட்டுள்ளது. பன்னாட்டுப் பணநிதியின் விதிகளின்படி, உறுப்பினர் நாடுகள் தங்களுடைய செலாவணிகளின் முகப்பு மதிப்பை ஒரு பொது இனமாகிய பொன்னின் மதிப்பில் உணர்த்தின. உறுப்பினர் நாடு ஒவ்வொன்றும் 'நிதி' வசமிருக்கும் அயல்நாட்டுச் செலாவணிகளைக் கொண்டு, தமது சீர்கேடுற்ற அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சமன் செய்துகொள்ளலாம்.

பழைமையான (1920–க்கு முன்னர் நிலவிய) பொன்திட்டத்திற்கும், பன்னாட்டு நாணய நிதிக்குமிடையே வேறுபாடுகளும் உள்ளன. பொன்திட்டத்தில் பொன்னை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படும் செலாவணி மாற்றுரிமை கொண்டதாகும். பன்னாட்டுப் பணநிதியில் செலாவணியின் மதிப்பு, பொன்னின் மூலம் உணர்த்தப்பட்டாலும், செலாவணி மாற்றுரிமை அற்றதாகும். அதாவது, பொன்னிற்குப் பன்னாட்டு அரங்கில் மட்டும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதே தவிர, உள்நாட்டு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. இரண்டாவதாக, பொன்திட்டத்தின் அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதம் நிரந்தரமாக நிலைத்ததாகும். பன்னாட்டுப் பணநிதியின் சாசனத்தில் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் அடிப்படைச் சீர்கேடு போன்ற சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதத்தை நியாயமான அளவிற்கு மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டுப் பணநிதியின் உறுப்பினர் நாடுகளுக்கு நிலையான விலைப்போக்கு, முழு வேலைமட்டும் எய்துதல் போன்ற

குறிக்கோள்களை அடைவதற்கு ஏற்ற வகையில் பணவாக்கக் கைக்கோள்களை மேற்கொள்ளும் சுதந்தரம் அளிக்கப்பட்டு உள்ளது. பொன்திட்டத்தைப் போன்று கண்மூடித்தனமான விதிகளைப் பின்பற்றாமல், பன்னாட்டுப் பணநிதி நெகிழ்ச்சிக் குரிய விதிமுறைகளையே பின்பற்றுகின்றது. பன்னாட்டு வாணிப வளர்ச்சிக்குத் தேவையான மாறாத அயல்நாட்டுச் செலுத்து வீதமும், உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மாறாத விலைப்போக்கும் பன்னாட்டுப் பண நிதியில் ஒத்துப் போகின்றன. பன்னாட்டுப் பணநிதியிலுள்ள திட்டத்தைப் பொன்மாற்றுத்திட்டமாகவே கொள்ளலாம்.

பொன்திட்டத்திற்குத் திரும்புதல்: பன்னாட்டு அரங்கில் பொன்னின் முக்கியத்துவம் தொடர்ந்து நீடிக்கும். உலக நாடுகள் அனைத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும் அவ்வுலோகமே, செலாவணிகளின் மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் அளவுகோலாகும். இவ்வுண்மை, பன்னாட்டுப் பணநிதியின் உறுப்பினர் நாடுகள் தமது செலாவணிகளின் முகப்பு மதிப்பைப் பொன்னின் மதிப்பில் உணர்த்த வேண்டும் எனும் சாசனத்திலிருந்து அறியலாம். பொன்னின் மூலம் ஒவ்வொரு செலாவணியின் மாற்று வீதமும், மற்ற செலாவணிகளுடன் பிணைக்கப்படுகின்றன. மேலும், பன்னாட்டுப் பணநிதியின் உறுப்பினர் நாடுகள் அனைத்தும் டாலர் அல்லது பவுன் ஸ்டெர்லிங் ரூபத்தில் தமது காப்புகளை வைத்துள்ளன. 1965ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிரான்சின் அதிபர் டீ கால், தற்காலப் பன்னாட்டுப் பணப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரே சாதனமான பழைமையான பொன்திட்டத்தை ஆதரித்தார். 1967 அக்டோபர் முதல் ஐரோப்பியப் பொற்கட்டிச் சந்தைகளில் பொன் தேவை பன்மடங்கு பெருகியுள்ளது. 1967 அக்டோபர் முதல் 1968 மார்ச்சு வரையிலும் ஏற்பட்ட பொன் இழப்பின் மதிப்பு 2.75 பில்லியன் டாலர்கள் என மதிப்பிடப் படுகின்றது.

டாலரும், பொன்னும் மாற்றுரிமை உடையவையாதலால், 1968ஆம் ஆண்டு முதல் டாலர்காப்புகளைப் பொன்னாக மாற்றுவது தொடர்ந்து பெருமளவில் நடைபெறுகின்றது. 1958 முதல் 1965 வரையிலும் அமெரிக்காவின் பொன் இருப்பு 25 பில்லியன் டாலரிலிருந்து 15 பில்லியன் டாலராகக் குறைந்துள்ளது. 1971 ஆகஸ்டு மாத மத்தியில் அமெரிக்கப் பொன் காப்பு 10 பில்லியன் டாலராகக் குறைந்துவிட்டது. இதுவே அமெரிக்க டாலருக்கான குறைந்த அளவு காப்பு ஆகும்.

பொன்னை வாங்குவதில் ஊக வாணிபம் ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமானது அமெரிக்கா. 1 அவுன்சு பொன்னின் விலை 35 டாலர்கள் என்று 1934-ல் நிர்ணயிக்கப்பட்டதை அமெரிக்கா தொடர்ந்து கடைப்பிடிக்க முடியாது என்று எதிர்பார்க்கப்பட்டதேயாகும். மேற்காணும் விலையில் பொன்னைத் தோண்டி எடுப்பது இலாபகரமான தொழிலாகாது. மேற்காணும் விலை தொடர்ந்து நிலவினால், 1980-ல் பொன் உற்பத்தியில் 2/3 பகுதி குறைந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், பொன் தொழில் துறைகளில் பயன்படுத்தப்படுவது அதிகமாகி விட்டது. தொழில் துறையினரின் பொன் தேவை இவ்வாறு தொடர்ந்து அதிகரித்தால், 1980-க்கு முன்னதாகவே 35 டாலர் எனும் விலையில் அளிப்பின் தேவை தாண்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய காரணங்களின் விளைவாகப் பொன் தேவை 1968 மார்ச்சு மாதத்தில் திடீரென அதிகரித்தது. 1971 ஆகஸ்டில் அமெரிக்க அதிபர் நிக்சன், டாலரைப் பொன்னாக மாற்று வதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தார். இது டாலர் மதிப் பிறக்கத்துக்கு ஒப்பாகும். 1973 பிப்பிரவரியில் அமெரிக்க டாலர் 107 மதிப்புக் குறைக்கப்பட்டது. ஐரோப்பியப் பொற் கட்டிச் சந்தைகளில் ஓர் அவுன்சு பொன்னின் விலை 42 முதல் 43 டாலர்கள் எனக் குறிப்பிடப்பட்டது. பொன்னின் மீதான ஊக வாணிபம் வரலாறு காணாத வகையில் அதிகரித்து ஓர் அவுன்சு பொன்னின் விலையை 65 டாலராக உயர்ந்தது. இதன் விளைவாகக் கனிசமான அளவில் டாலர் காப்புகளை வைத்திருக்கும் ஜப்பான், மற்றும் ஐரோப்பிய நாடுகளின் மைய வங்கிகளில் குழப்பமும் நிச்சயமற்ற நிலையும் தோன்றின.

பொன்திட்டம் புத்துயிர் பெறுமா எனில், பிரெஞ்சு முயற்சி யைத் தவிர, வேறு எந் நாடும் இம் முயற்சியில் நாட்டமே செலுத்தவில்லை. பொன்திட்டம் பணவாட்டத்தைத் தோற்று விக்குமென்பதால், பொன்திட்டத்தைப் பின்பற்றுவதற்குப் பல நாடுகள் அஞ்சுகின்றன. மேலும், குழப்பமான இனம் புரியாத பொன்திட்டத்தால் தமது சுதந்தரத்தை விட்டுக்கொடுப்ப தற்குப் பணவாக்க அதிகாரிகளும் முன் வரமாட்டார்கள். எனவே, பன்னாட்டு அரங்கில் பொன் தனது வழக்கமான பணியைத் தொடர்ந்தாற்றிக்கொண்டிருப்பினும் பழைய விதி முறைகளுடன்கூடிய பொன்திட்டம் மீண்டும் மேற்கொள்ளப் படுவதற்கு வாய்ப்பில்லை எனலாம்.

காகிதச் செலாவணித்திட்டம் அல்லது நிருவகிக்கப்பட்ட செலாவணி முறை[1]

முதல் உலகப் போருக்குப் பின்னரே காகிதச் செலாவணித் திட்டம் பிரபலமடைந்தது. உலகின் பணத்துறை வரலாற்றில் காகிதப்பணத்திட்டத்தைப் போன்று பொதுமக்களிடம் அவப் பெயர் பெற்ற பணவாக்க முறை வேறு எதுவுமில்லை எனலாம். பொன்திட்டமும் வெள்ளித்திட்டமும் பின்பற்றப்பட்ட பழங் காலத்தில் உலோகத்திட்டத்தைப் பின்பற்றுவதற்கு வசதியற்ற நாடுகள் மட்டுமே, வேறு வழியின்றி மாற்றுரிமையற்ற காகிதப் பணத்திட்டத்தைப்[2] பின்பற்றின. பொதுவாக மிகையான பணவீக்கமும், காகிதப்பணத்திட்டமும் தொடர்புடையவை யாகவே கருதப்பட்டது. ஆயினும், 1931 முதல் இங்கிலாந் திலும் பிற நாடுகளிலும் இத் திட்டம் சிறப்பாகச் செயல்பட் டதன் விளைவாக, இத் திட்டத்தின்மீது பொதுமக்களுக்கிருந்த அவநம்பிக்கை குறைந்ததுடன் இத் திட்டத்திற்கு மதிப்பும் கிட்டியது.

தனி உலோகத்திட்டம், இரட்டை உலோகத்திட்டம் ஆகியவற்றிலிருந்து இத் திட்டம் இரு வகைகளில் வேறுபட்ட தாகும். இத் திட்டத்தின்கீழ், காகிதப்பணத்தைக் கொடுத்துப் பொன்னாகவோ அல்லது வெள்ளியாகவோ மாற்றிக்கொள்ள முடியாதாகையால், இத் திட்டத்தில் பொன்னுக்கும், வெள்ளிக் கும் முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. காகிதப்பணத்தின் வெளியீடு உலோகத்தின் அளிப்புடன் இணைக்கப்படுவ தில்லையாதலால், அரசு மற்றும் பணவாக்க நிர்வாகியின் வசதிக்கும் உசிதத்திற்கும் ஏற்பக் காகிதப்பணத்தை வெளியிட முடியும். ஆயினும் விலைமட்டமும், வருமானமும் நிலை பேறாக்கம் அடையும் வகையில் காகிதப்பண வெளியீடு சரி செய்துகொள்ளப்படும். இரண்டாவதாக, ஒரு நாட்டின் காகிதப்பண வெளியீடானது பிற நாடுகளின் காகிதப் பணங் களுடன் இணைக்கப்படுவதில்லையாதலால், இஃது ஒரு தேசீயத்திட்டம் ஆகும். ஆனால், பொன்திட்டமோ பன்னாட்டுத்திட்டமாகும். தானியங்கு நாணயத்திட்டமான பொன்திட்டத்திலிருந்து காகிதப்பணத்திட்டத்தை வேறு படுத்திக் காட்டும்வகையில், இதை நிருவகிக்கப்பட்ட நாணயத் திட்டம் என்றும் குறிப்பிடலாம். காகிதப் பணத்திற்கு உள்ளுறு

[1] Paper Currency Standard or Manged System

[2] Inconvertible Paper Currency Standard

மதிப்பு இல்லை என்பதோடு, அதன் மதிப்பு அரசின் ஆணையிலிருந்து பெறப்படுவதால், அதை ஆணைச்செலாவணி அல்லது ஆணைத்திட்டம்[1] என்றும் குறிப்பிடுவது உண்டு. காகிதப்பணத்திட்டத்தைத் தாள்பணத்திட்டம் என்றும் குறிப்பிடலாம்.

காகிதப்பண வெளியீட்டு விதிகளும் முறைகளும்

ஒரு சிறந்த காகிதப்பணத்திட்டமானது குறிப்பிட்ட சில தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும். பொதுமக்கள் பணவாக்கத்துறையின்மீது கொண்டிருக்கும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே இத் திட்டம் அமைந்திருப்பதால், அதை உறுதிப்படுத்தும் விதத்தில் போதுமான அளவிற்குப் பொன் அல்லது வெள்ளிக்காப்புடனேயே காகிதப்பணம் வெளியிடப்படுதல் வேண்டும். நாட்டின் தேவைக்கு ஏற்பக் காகிதப் பணத்தின் அளவு அதிகரிக்கும் வகையிலும், குறையும் வகையிலும் இத் திட்டம் நெகிழ்ச்சி மிக்கதாக இருக்க வேண்டும். ஒரு நல்ல காகிதப்பணத்திட்டமானது தானியங்கு நாணயத் திட்டமாகவும், உறுதிப்பாடு மிக்கதாகவும், சிக்கனமானதாகவும் இருப்பது அவசியமாகும். இத்தகைய தன்மைகளைக்கொண்ட காகிதப்பணத்திட்டத்தை உருவாக்குவதற்கு இரு விதமான கருத்துகள் வலியுறுத்தப்படுகின்றன. அவை (1) செலாவணி முறைக் கருத்து, (2) வங்கி முறைக் கருத்து எனப்படும்.

செலாவணி முறைக் கருத்து : நல்ல காகிதப் பணத் திட்டமானது, பொதுமக்களின் நம்பிக்கைக்கு உரியதாக இருக்கவேண்டுமெனில், வெளியிடப்படும் காகிதப்பண அளவிற்குச் சமமான (100 சதவீத) பொன் அல்லது வெள்ளிக் காப்பு இருப்பது அவசியமெனச் செலாவணிக் கொள்கையினர் குறிப்பிடுகின்றனர். வெளியிடப்படும் காகிதப்பணம் ஒவ்வொன்றிற்கும் சமமான பொன் அல்லது வெள்ளிக்காப்பு இருந்தால் மட்டுமே, பொதுமக்கள் விரும்பும் எச் சமயத்திலும் அவர்கள் அளிக்கும் காகிதப்பணத்திற்கு ஈடாகப் பொன் அல்லது வெள்ளியைத் திருப்பியளிக்கப் பணவாக்க அதிகாரிகளால் முடியும்; பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற முடியும். இக் கருத்தின்படி, உயர்மதிப்புள்ள உலோகங்களைப் புழக்கத்தில் ஈடுபடுத்தி விரயமாக்குவதைத் தடுப்பதற்கான சிக்கனமும் வசதியும் மிக்க சாதனமாகவே காகிதப்

[1] Fiat Money

பணம் கருதப்படுகின்றது. இக் கருத்தை அளித்தவர் ஓவர்ஸ்டோன் பிரபு[1] ஆவார்.

வங்கி முறைக் கருத்து : காகிதப்பணத்தைத் தம் வசம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் தமது பணத்தைப் பொன்னாகவும், வெள்ளியாகவும் மாற்றிக்கொள்வதில்லை; ஒரு சிலரே அவ்வாறு முயல்வர். ஆதலால், 'வெளியிடப்படும் காகிதப் பணம் முழுவதற்கும் ஈடாக உலோகக்காப்பு இருக்க வேண்டியதில்லை; ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு மட்டுமே காப்பு இருந்தால் போதுமானது' என்று ஜெ. டபிள்யூ. கில்பர்ட்[2] கருதினார்.

செலாவணி முறைக் கருத்தை எந் நாடும் பின்பற்றுவதில்லை. ஏனெனில், அது நெகிழ்ச்சியேயற்ற முறையாகும்; போதிய உலோகக்காப்பு இல்லாவிடில், பணத்தின் அளிப்பை அதிகரிக்க முடியாது என்பதால், பொற்சுரங்கங்கள் இல்லாத நாடுகளால் இத் திட்டத்தைப் பின்பற்ற முடியாது. பொது மக்கள் அனைவருமே காகிதப்பணத்தை உலோகமாக மாற்றிக் கொள்ள முயல்வர் என்பது கற்பனையேயாகும். எனவே, இந்த அளவிற்கு மிகையான முன்னெச்சரிக்கை தேவை இல்லாததாகும். மேலும், 100 சதவீதக்காப்பை வைத்துக்கொண்டு காகிதப்பணத்தை வெளியிடுமளவிற்குப் பொன்னை வைத்திருக்கும் நாடுகள் நேரிடையாகப் பொன்திட்டத்தையே பின்பற்றலாமே! அந்த அளவிற்கு வசதியுள்ள நாடு, காகிதப் பணத்திட்டத்தைப் பின்பற்ற வேண்டிய கட்டாயமில்லையே!

வங்கி முறைக் கருத்தே தற்காலத்தில் பரவலாகப் பின்பற்றப்படுகின்றது. 'காகிதப்பணம் வைத்திருக்கும் அனைவருமே அதனை உலோகமாக மாற்றிக்கொள்ள முன்வருவதில்லை' என்ற நடைமுறை உண்மையின் அடிப்படையில் எழுந்த இக் கருத்து சிக்கனமிக்கதாகும். இம் முறையில் முன்னதாகவே நிச்சயிக்கப்பட்ட பொருளாதாரக் குறிக்கோளை அடைவதற்காகப் பணத்தின் அளிப்பை அதிகரிக்கவும் அல்லது குறைக்கவும் பணவாக்கப் பொறுப்பாளருக்குச் சுதந்தரம் உண்டு. தற்காலத்தில் இக் கருத்தின் அடிப்படையில்தான் பல்வேறு நாடுகளிலும் காகிதப்பணங்கள் வெளியிடப்படுகின்றன.

[1] Lord Overstone

[2] J. W. Gilbert

காகிதப்பண வெளியீட்டு முறைகள்[1] **:** காகிதப்பண வெளியீட்டு முறைகள் பொதுவாக இரு வகைப்படும். அவை யாவன :

(1) எளிய வைப்புத்திட்டம்[2]

(2) பகுதி வைப்புத்திட்டம்[3]

இவற்றுள் எளிய வைப்புத்திட்டம் செலாவணி முறைக் கருத்தின் அடிப்படையிலும், பகுதி வைப்புத்திட்டம் வங்கி முறைக் கருத்தின் அடிப்படையிலும் அமைந்தவையாகும்.

எளிய வைப்புத் திட்டம் : இத் திட்டத்தில் வெளியிடப் படும் காகிதப்பணத்திற்குச் சமமான அளவிற்கு உலோகக் காப்பு இருக்க வேண்டுமென விதிக்கப்படுகின்றது. சமமான அளவில் பொன் அல்லது வெள்ளிக்காப்பு வைத்துக்கொண்டு வெளியிடப்படும் காகிதப்பணமே பொதுமக்களின் நம்பிக் கையைப் பெறமுடியும் எனும் செலாவணி முறைக் கருத்தின் அடிப்படையில் எழுந்ததாகும். எளிய வைப்புத்திட்டம் எங்குமே நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டதில்லை.

பகுதி வைப்புத்திட்டம் : இத் திட்டத்தில் வெளியிடப் படும் காகிதப்பணத்தில் ஒரு குறிப்பிட்ட காகிதப்பணத்திற்கு உயர்மதிப்புள்ள உலோகக்காப்பும், மீதத்திற்குக் கடன் பத்திரங்களும் இருக்க வேண்டும். வெளியிடப்படும் காகிதப் பணம் முழுவதுமே பொன்னாகவும், வெள்ளியாகவும் மாற்றிக் கொள்ளப்படுவதில்லையாதலால், ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டுமே காப்பு இருந்தால் போதுமானது என வாதிடும் இத் திட்டம் வங்கிமுறைக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட தாகும்.

பல்வேறு நாடுகளிலும் பின்பற்றப்படும் பகுதி வைப்புத் திட்டம் கீழ்க்காணுமாறு பல வகைப்படும் :

(அ) உச்ச அளவு நம்பிக்கை வெளியீட்டு முறை.[4]

(ஆ) மாறா அளவு நம்பிக்கை வெளியீட்டு முறை[5]

[1] Methods of Note-issue
[2] Simple Deposit System
[3] Partial Deposit System
[4] Maximum Fiduciary Issue System
[5] Fixed Fiduciary Issue System

(இ) வீதாசாரக் காப்பு முறை[1]

(ஈ) குறைந்த அளவு காப்பு முறை[2]

(அ) உச்ச அளவு நம்பிக்கை வெளியீட்டு முறை: இம் முறையில் ஓர் உச்சவரம்பை அரசு நிர்ணயிக்கும். இவ் வரம்பு 'நம்பிக்கை எல்லை' எனப்படும். இவ்வெல்லை வரையிலும் உலோகக்காப்பின்றிக் காகிதப்பணம் வெளியிடப் படலாம்; அவ்வப்பொழுது தேவைக்கு ஏற்ப உச்சவரம்பை மாற்றிக்கொள்ளலாம். இவ்வாறு நம்பிக்கை எல்லையை நிர்ணயிக்கும் உரிமை மைய வங்கிக்கு இருப்பதால், பண அளிப்பில் ஓரளவு நெகிழ்ச்சி காணப்படும். ஆயினும், காகிதப் பணத்தின் மிகையான வெளியீடும், பணவீக்கமும் தவிர்க்கப் படும். இம் முறையில் இங்கிலாந்து (1931 வரையிலும்) உள் ளிட்ட பல நாடுகள் காகிதப்பணத்தை வெளியிட்டன. உச்ச வரம்பை அவ்வப்பொழுது மாற்றிக்கொள்வதற்கு வாய்ப்பு இருப்பதால், போதிய நிதி வசதியற்ற நாடுகள் இவ்வுரிமையை அடிக்கடிப் பயன்படுத்துமாயின், மிகையான காகிதப்பண வெளியீட்டின் விளைவாகப் பணவீக்கம் தோன்றக் கூடுமென் பதே இம் முறையின் குறைபாடு ஆகும்.

(ஆ) மாறா அளவு நம்பிக்கை வெளியீட்டு முறை: இம் முறையில் ஒரு குறிப்பிட்ட அளவு வரையில் கடன் பத்திரங்களை வைத்துக்கொண்டு, எவ்வித உலோகக்காப்பு மின்றிக் காகிதப்பணத்தை வெளியிடுவதற்கு மைய வங்கி அனுமதிக்கப்படும். குறிப்பிட்ட அளவிற்கும் அதிகமாக வெளி யிடப்படும் காகிதப்பணத்திற்குச் சமமாக (100 சதவீதம்) பொன்காப்பு இருக்க வேண்டும். இம் முறையில் காகிதப் பணம் முழுமையாக மாற்றுதலுக்குரியதாகும். இம் முறையில் மிகையான காகிதப்பண வெளியீட்டிற்கும், பணவீக்கம் தோன்றுவதற்கும் வாய்ப்பில்லை. ஆயினும், நம்பிக்கையளவு மாறாமல் நிலைத்திருப்பதால், இது நெகிழ்ச்சியற்ற முறை யாகும். காகிதப்பண வெளியீடு நெகிழ்ச்சியற்றிருப்பின், பொருளாதாரச் சீர்கேடுகள் ஏற்படக் கூடும். எனவே, நெகிழ்ச்சியற்ற இம் முறை, தற்காலப் பொருளாதார அமைப் பிற்கு ஒவ்வாதது என்று பலரும் கருதுகின்றனர்.

[1] Proportional Reserve System

[2] Minimum Reserve System

இம் முறை, இங்கிலாந்தில் பாங்குச் சாசனச் சட்டம் (1844)[1] மூலம் மேற்கொள்ளப்பட்டது. அச் சட்டத்தின்படி, நம்பிக்கை வரம்பு £ 14 மில்லியன் ஆகும். இந்தியாவில் 1861-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி நம்பிக்கை வரம்பு ரூ. 4 கோடி என நிர்ணயிக்கப்பட்டது. இவ்வெல்லை அவ்வப் பொழுது மாற்றப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நம்பிக்கை வரம்பு ரூ. 10 கோடியாகவும், முதல் உலகப் போருக்கு முன்னர் ரூ. 14 கோடியாகவும், 1920-ஆம் ஆண்டில் ரூ. 120 கோடியாகவும் உயர்த்தப்பட்டது.

(இ) வீதாசாரக் காப்பு முறை : இம் முறையில் வெளியிடப்படும் மொத்தச் செலாவணியில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்திற்கு ஈடாகப் பொன்காப்பு இருக்க வேண்டும்; மீதத் தொகைக்கு ஈடாக அரசாங்கக் கடன் பத்திரங்களோ அல்லது வாணிப உண்டியல்களோ இருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒரு நாட்டின் மொத்தச் செலாவணியில் 20% பொன் காப்பு இருக்க வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளதாக வைத்துக்கொள்வோம். இதற்கு ஏற்ப, மைய வங்கி ரூ. 100 கோடிக்குக் காகிதப்பணத்தை வெளியிட விரும்பினால், ரூ. 20 கோடிக்குப் பொன்காப்பும், ரூ. 80 கோடிக்கு அரசாங்கக் கடன் பத்திரங்களும், வாணிப உண்டியல்களும் மைய வங்கியிடம் இருக்க வேண்டும்.

தேவை ஏற்படும்பொழுது, இச் சதவீதத்தை மாற்றியமைத்துக்கொள்வதற்கு வசதியிருப்பதால், இத் திட்டத்தின் கீழ், தேவைக்கு ஏற்பப் பணத்தின் அளிப்பை அதிகரிப்பது எளிதாகும். இத் திட்டம் மிகவும் சிக்கனமானதால், ஏழை நாடுகளுக்கு மிகவும் ஏற்ற திட்டமாகும். எனினும், பொன் காப்பின் அடிப்படையில் காகிதப்பண வெளியீடு நிர்ணயிக்கப் படுவதால், பொன்னின் இருப்பில் ஏற்படும் சிறு மாற்றங்கூடச் செலாவணியின் அளவில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும். ஆதலால், பண வீக்கமும், பணவாட்டமும் நாட்டில் வெகு எளிதாக ஏற்படக்கூடும்.

இத் திட்டத்தைச் சில மாறுதல்களுடன், 1927 ஆம் ஆண்டில் இந்தியா பின்பற்றத் தொடங்கியது.

(ஈ) குறைந்த அளவு காப்பு முறை : இம் முறையில் ஒரு மைய வங்கி குறிப்பிட்ட அளவிற்குப் பொன்னையும்,

1 Bank Charter Act—1844

வெளிநாட்டுச் செலாவணிகளையும், அரசாங்கக் கடன் பத்திரங்களையும் காப்பாக வைத்துக்கொண்டு, நாட்டுக்கு அவ்வப்பொழுது தேவைப்படும் அளவிற்குக் காகிதப் பணத்தை வெளியிடலாம். இம் முறை, இரு விதக் கருத்து களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது:

(1) பணத்திற்கான தேவை மிகவும் அதிகமாகவிருக்கும் பொழுது, காகிதப்பண வெளியீட்டைக் கட்டுப்படுத்துவது நடைமுறை நிலவரங்களுக்குப் புறம்பானதாகும்.

(2) வங்கி வைப்புகள் முக்கியத்துவம் பெற்றுள்ள தற்காலத்தில் காகிதப்பணத்தை உலோகமாக மாற்றிக் கொள்ளுவதற்குப் பொதுமக்கள் முயல்வார்கள் என்று கவலைப்படுவது பொருத்தமற்றதாகும்.

மற்ற முறைகளைக்காட்டிலும் குறைந்த அளவு, காப்பு முறை பெருமளவில் நெகிழ்ச்சியுள்ளதாகும். எனினும், பணப் பற்றாக்குறைக்கு உட்பட்ட அரசுகள், தமக்கு அளிக்கப் பட்டுள்ள சுதந்தரத்தை வரம்பு மீறிப் பயன்படுத்தினால், மிகையான காகிதப் பண வெளியீடும், அதனோடு தொடர் புடைய பொருளாதாரச் சிக்கல்களும் ஏற்படக் கூடும்.

இந்தியாவில் தற்பொழுது இம் முறையே பின்பற்றப் படுகின்றது. 1957ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 'ரிசர்வு பேங்க் ஆஃப் இந்தியா' (இரண்டாவது திருத்தச்) சட்டத் தின்படி, மைய வங்கியின் வசம் காப்பாக ரூ. 200 கோடி மதிப் புள்ள பொற்காசு, பொற்கட்டி, அயல்நாட்டுச் செலாவணி ஆகியவை இருக்க வேண்டும். இதில் ரூ. 115 கோடிக்குப் பொன் இருக்க வேண்டும். இக் குறைந்த அளவு காப்பு நிர்வகிக்கப்படுமாயின், நாட்டின் தேவைக்கு ஏற்பக் காகிதப் பணத்தை வெளியிடலாம்.

மேற்காணும் வெளியீட்டு முறைகளுள் பண அளிப்பில் நெகிழ்ச்சியையும், பணவீக்கத்தைத் தோற்றுவிக்காத தன் மையையும் கொண்ட முறையே சிறந்ததாகும். பொதுவாக, காகிதப்பண வெளியீடு சிறப்பாக அமைவதற்குப் பணவீக்கப் போக்கைத் தோற்றுவிக்கக்கூடிய அரசின் தலையீடுகள் இல்லாமலிருப்பது மிக முக்கியமாகும்.

காகிதப்பணத்திட்டத்தின் நிறைகள்

(1) நாட்டின் தேவைக்கும், வசதிக்கும் ஏற்பக் காகிதப் பணத்தின் வெளியீட்டை அதிகரிக்கவும், குறைக்கவும்

எளிதில் முடியுமாகையால், இத் திட்டம் நெகிழ்ச்சி மிக்க திட்டமாகும். நாட்டின் தேவைக்கு ஏற்பப் பணத்தின் அளிப்பு அமைவதால், பொருளாதார வளர்ச்சியும் எளிதாகும். வேலைமட்ட நிறைவு எய்துவதற்கும், விலைமட்ட நிலைப்பாடு அடைவதற்கும் காகிதப் பண வெளியீட்டின் மூலம் அரசு துணிவுடன் முயலலாம்.

(2) காகிதப்பணத்திட்டம் எளிமையானதும், சிக்கன மானதுமாகும். முழுமையான பொன்காப்பின்றி, பெயரள விற்குப் பொன்காப்பை வைத்துக்கொண்டு, காகிதப்பணத்தை வெளியிட முடியுமாகையால், ஏழை நாடுகள்கூட எவ்விதச் சிரமுமின்றி இத் திட்டத்தைப் பின்பற்ற முடியும்.

(3) நெருக்கடி நேரங்களில் இத் திட்டம் வெகுவாகப் பயன்படும். போர்க் காலங்களில் போதிய நிதியின்றி அல்லற்படும் நாடுகளில் இத் திட்டம் பின்பற்றப்படின், நிதி அளிப்பை எளிதில் பெருக்க முடியும். காகிதப்பணத்தை எளிதாக வெளியிட முடியுமாகையால், பொருளாதாரத் திட்ட மிட்டு முன்னேறும் நாடுகள், தமக்குத் தேவையான பணத்தை வெளியிட்டு, வளர்ச்சித்திட்டங்களில் முதலீடு செய்ய முடியும்.

(4) காகிதப்பணத்திட்டம் ஒரு தேசீய அளவுத்திட்ட மாகும்; பிற நாடுகளின் பணவெளியீட்டுடன் பிணைப்பு ஏதுமற்ற, தனித்தியங்கும் நாணயத்திட்டமாகும். பொன் திட்டம் போன்ற பன்னாட்டுத் திட்டங்கள் நிலவும்பொழுது, ஒரு நாட்டில் ஏற்படும் பொருளாதாரச் சீர்கேடுகள் வெகு விரைவாகவும், எளிதாகவும் பிற நாடுகளுக்கும் பரவும். காகிதப்பணத்திட்டம் ஒரு தனித்த திட்டமாதலால், ஒரு நாட்டில் தோன்றும் பொருளாதாரச் சீர்கேடுகள் பிற நாடு களைப் பீடிப்பது இயலாததாகும்.

(5) பொன்திட்டத்தில் பொன் வெளியேற்றத்தின் விளைவாக, உள்நாட்டில் பணத்தின் அளிப்பு குறைவதால், பணவாட்டம் தோன்றி, பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும். காகிதப்பணத்திட்டத்தில் பொன் ஏற்றுமதிக்கும், பணவாட்டம் தோன்றுவதற்கும் வாய்ப்பு ஏதுமில்லை.

(6) பொன்திட்டத்தில் அயல்நாட்டு நாணய மாற்று வீதம் மாறாமல் நிலைத்ததாகவிருக்கும். காகிதப்பணத்திட்

டத்தில் அயல் நாட்டு நாணய மாற்று வீதம் நெளிவடைந் தாலும், அது தானாகவே சமநிலையை அடையும்.

(7) நிருவகிக்கப்பட்ட செலாவணி முறை எனப்படும் காகிதப் பணத்திட்டம் முறையாக நிர்வகிக்கப்பட்டால் மட்டுமே விரும்பிய விளைவுகளை நல்கும். அதன் நிர்வாகத் தில் ஏற்படும் சிறு தவறுகள்கூடப் பயங்கரமான விளைவு களை நல்கும். இத்தகைய அச்சத்திற்கு மற்றைய பணவாக்க முறைகளில் இடமில்லை. நாட்டின் தேவையைக்காட்டிலும் சிறிதளவு மிகையாகக் காகிதப்பணம் வெளியிடப்படு மாயினுங்கூட, அதன் விளைவாகச் சங்கிலித் தொடர்போல் பணவீக்கம் ஏற்படும். அது போன்றே, நாட்டின் தேவையைக்காட்டிலும் சிறிதளவு குறைவாகக் காகிதப்பணம் வெளியிடப்பட்டாலும், பணவாட்டம் தோன்றி, நாட்டைப் பாதிக்கும்.

(8) காகிதப்பணத்திட்டத்தில் ‘விலைமட்டம் நிலைப்பாடு அடையும்’ என்று கருதப்படுகின்றது. இது நடைமுறையில் இயலாததாகும். காகிதப்பணத்திட்டத்தைப் பின்பற்றும் நாடுகளில் பொன்திட்டம் பின்பற்றப்பட்டக் காலத்தைக் காட்டிலும் விலைமட்ட நெகிழ்ச்சிகள் கடுமையாக ஏற்பட் டிருக்கின்றன.

பல்வேறு வகைப் பணவாக்க முறைகளையும் பற்றிய விவரங்களை அறிந்த பின்னர், ‘எவ்விதப் பணவாக்க முறை சிறந்தது?’ எனும் வினா எழுகின்றது. ஒரு சிறந்த பணவாக்க முறையானது, பொன்திட்டத்தின் நிறைகளையும், காகிதப் பணத்திட்டத்தின் நிறைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்க வேண்டும். எடுத்துக்காட்டாக, காகிதப்பணத் திட்டமானது, வேலைமட்ட நிறைவு எய்தும் வகையிலும் உள்நாட்டுக் காகிதப்பணத்திட்டம் நன்மைகள் மிக்கதாகும். காகிதப்பணத்திட்டமானது நெகிழ்ச்சி மிக்கது என்பதாலும், மாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறிக்கொள்ளக் கூடியது என்பதாலும் இத் திட்டத்தை கெயின்சு ஆதரித்தார். ஆயினும், காகிதப்பணத்திட்டத்தின் சிறப்புகளாகக் குறிப் பிடப்படும் எதுவும் நடைமுறையில் நிகழ்வதில்லை என்றும், காகிதப்பணத்திட்டத்தில் பல்வேறு குறைகள் உள்ளன வென்றும் கருதப்படுகின்றது.

காகிதப்பணத்திட்டத்தின் குறைகள்

(1) உள்நாட்டைக்காட்டிலும், அயல்நாடுகளில் விலை மட்டம் அதிகரிக்கும்பொழுது, காகிதப்பணத்திட்டத்தை

மேற்கொண்டிருக்கும் நாட்டின் அயல்நாட்டு நாணய மாற்று விகிதத்தில் நிலையின்மை ஏற்படும். நிலையற்ற அயல்நாட்டு நாணய மாற்று விகிதமானது பன்னாட்டு வாணிபத்தின் வளர்ச்சிக்கு உகந்தது அன்று. நிலைத்த அயல்நாட்டு நாணய மாற்று விகிதம் நிலவினால்தான், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மூலதனம் இடம் பெயரும்.

(2) காகிதப்பணத்திட்டமானது, பணவீக்கப் போக்கை உள்ளடக்கியதாகும். பணப்பற்றாக் குறையை அனுபவிக்கும் அரசுகள் பொறுப்புணர்வின்றிக் காகிதப்பண வெளியீட்டில் ஈடுபடுமாயின், மிகையான காகிதப்பண வெளியீட்டின் விளைவாகப் பணவீக்கம் தோன்றிப் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும். அதன் விளைவாகப் பணவாக்கத் துறையின்மீது பொதுமக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படும்; மக்களின் அவநம்பிக்கையைப் பெறும் பணவாக்க முறை வெற்றி பெறுவதியலாது. விலைமட்டத்திற்கும், அயல்நாட்டு விலைமட்டத்திற்குமிடையே சமநிலை காக்கப்படும் விதத்திலும் நிருவகிக்கப்படுதல் வேண்டும். பொதுமக்களுடைய வருமான நிலையில் சமத்துவம் ஏற்படும் வகையிலும், அத்திட்டம் நிருவகிக்கப்படுதல் வேண்டும். அதே நேரத்தில் பன்னாட்டுப் பொன்திட்டத்தினால் கிட்டும் நன்மையான பண்டங்கள், பணிகள், மற்றும் மூலதனத்தின் இடப்பெயர்ச்சிக்கு உதவும் வகையிலும் காகிதப்பணத்திட்டம் நிருவகிக்கப்படுதல் வேண்டும். பன்னாட்டுப் பண்நிதி[1] இத்தகைய நோக்கத்தையே மேற்கொண்டு செயல்படுகின்றது.

[1] **International Monetary Fund**

4. பணத்தின் அளிப்பும், பணத்திற்கான தேவையும், வட்டி வீதமும்

பொருளாதார இயலில் எந்த ஒரு பொருளின் மதிப்பும் அதன் அளிப்பாலும் தேவையாலுமே நிர்ணயிக்கப்படுகின்றது. அவ்வாறே பணத்தின் மதிப்பும் அதனுடைய அளிப்பாலும் தேவையாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. ஆயினும், பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களைப் பொது விலைமட்டம் அல்லது சராசரி விலைமட்டத்தில் ஏற்படும் மாறுதல்களின் மூலமே நாம் உணர முடியும்.

பணத்தின் அளிப்பு மாறாமலிருக்கும்பொழுது பணத்திற்கான தேவை அதிகரிப்பின், பணத்தின் மதிப்பு உயருவதால், விலைமட்டம் குறையும்; பணத்திற்கான தேவை குறைந்தால், பணத்தின் மதிப்பு குறைவதால் விலைமட்டம் அதிகரிக்கும்.

பணத்திற்கான தேவை மாறாமலிருக்கும்பொழுது பண அளிப்பு அதிகரித்தால் பணத்தின் மதிப்பு குறைந்து விலைமட்டம் அதிகரிக்கும்; பண அளிப்பு குறைந்தால் பணத்தின் மதிப்பு அதிகரித்து விலைமட்டம் குறையும்.

பணத்தின் அளிப்பு, பணத்திற்கான தேவை ஆகியவை பற்றிய விவரங்களைக் கீழ்க்காணுமாறு குறிப்பிடலாம் :

பணத்தின் அளிப்பு[1]

ஒரு நாட்டில் வாழும் பொதுமக்கள், வணிக நிறுவனங்கள், மாநில அரசு, உள்ளாட்சி மன்றங்கள், மற்றும் இவை போன்று பணத்தை வைத்திருப்போர் வசம் இருக்கும் செலவிடப்படக் கூடிய பணத்தின் அளவே அந் நாட்டில் புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவாகும்– பணத்தின் அளிப்பாகும். அந் நாட்டின் மைய அரசு, அரசுக் கருவூலங்கள், மைய வங்கி, மற்றும் வாணிப வங்கிகளின் வசம் உள்ள இருப்பை, அந்

[1] The Supply of Money

நாட்டின் பண அளவுகளில் சேர்ப்பது கூடாது. ஏனெனில், அவற்றின் வசமிருக்கும் ரொக்கப் பணங்கள் வாணிப நோக்கில் பயன்படுத்தப்படக் கூடியவை அல்ல; நிர்வாகத்திற்கும், அரசு நடவடிக்கைகளுக்காகவும் உள்ளதாகும்.

பணத்தின் அளிப்பு அல்லது பணத்தின் அளவு என்பது, புழக்கத்தில் உள்ள பணத்தின் மொத்தத் தொகையாகும். எனவே, குறிப்பிட்ட நேரத்தில் அந் நாட்டில் புழக்கத்தில் உள்ள பணத்தின் மொத்தத் தொகையே அந் நாட்டில் அச் சமயத்தில் அளிக்கப்பட்டுள்ள பணத்தின் அளவாகும்.

தற்காலத்தில் பொதுமக்களுடைய செலவிடப்படக்கூடிய பணத்தின் அளவானது கீழ்க்காணும் இரு இனங்களைக் கொண்டதாகும் : (1) செலாவணிப் பணத்தில் நாணயங்களும், மைய வங்கியால் புழக்கத்தில் விடப்பட்டுள்ள காகிதப்பணங்களும் அடங்கும். (2) வாணிப வங்கிகளின் வசமிருக்கும் உடனே எடுக்கப்படக்கூடிய தேவை வைப்புகளும்[1] நடப்புக் கணக்கில்[2] உள்ள தொகைகளும்.

காகிதப்பணம் சட்டச்செலாவணி ஆகையால், நாட்டில் புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவில் அதுவும் அடங்கும். வங்கிகளின் வசம் உள்ள தேவை வைப்புத்தொகையை எப்போது வேண்டுமானாலும் முன் அனுமதியோ, முன் அறிவிப்போ இன்றி எடுத்துச் செலவிட முடியுமாகையால், அதுவும் பணத்தின் அளவில் அடங்கும். 'காசோலைகள்'[3] மூலம் எடுக்கப்படக்கூடிய தேவை வைப்பைப் பணமாகக் கருதுகின்றோமாயினும், காசோலைகளைப் பணமாகக் கருதக் கூடாது. ஏனெனில், காசோலைகள் சட்டச் செலாவணி அல்ல. தேவை வைப்புகளும் சட்டப்பூர்வமாகப் பணமல்லவெனினும், அவற்றைப் பணமெனக்கொள்வது வழக்கமாகிவிட்டது. தவணை வைப்புகளைக் குறிப்பிட்டக் காலகெடுவிற்குப்பின்னரே எடுக்க முடியுமாகையால், அவற்றைப் பணமாகக்கொள்வதில்லை. தவணை வைப்புகளாக உள்ள தொகையும் ரொக்கப் பணந்தாமெனினும், பணமாகக் கருதப்படும் அளவிற்கு அவை உடனடியாகப் பயன்படுவதில்லை. வங்கிகளால் நடப்புக் கணக்குகளின்மீது அளிக்கப்படும் அதிகப்பற்று வசதிகள்[4], அவை பயன்படுத்தப்பட்டால் மட்டுமே பணமாகக் கொள்ளப்படும்.

[1] Demand Deposits
[2] Current Accounts
[3] Cheques
[4] Overdraft Facilities

ஒரு நாட்டின் பண அளிப்பைக் கணக்கிடும்பொழுது அந் நாட்டின் அரசிடமிருக்கும் பொன் இருப்பைச் சேர்க்கக்கூடாது. ஏனெனில், அப் பொன் பன்னாட்டு விவகாரங்களுக்கு மட்டுமே பயன்படுமேயன்றி உள்நாட்டுப் புழக்கத்திற்கு வருவதில்லை. இவ்வாறே கருவூலங்கள், மைய வங்கி, மற்றும் வாணிப வங்கிகளின் தேவை வைப்புகளையும், காகிதப்பணங்களையும் ஒதுக்கிடுதல் வேண்டும். ஏனெனில், இத்தகைய பண நிறுவனங்கள் அவற்றை (தேவை வைப்புகளையும், காகிதப்பணங்களையும்) காப்புத் தொகையாகவே பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தவிர்ப்பதன் மூலமே ஒரே தொகையை இருமுறைக் கணக்கிடும் தவறை நாம் தவிர்க்க முடியும்.

எனவே, ஒரு நாட்டு மக்களிடம் உள்ள பணத்தின் அளவானது (1) அந் நாட்டு மக்கள்வசம் உள்ள நாணயங்கள், காகிதப் பணங்கள், (2) அந் நாட்டு வங்கிகள் வசம் உள்ள தேவை வைப்பு ஆகியவற்றின் கூடுதல் தொகையே ஆகும்.

செலாவணி[1] ஒரு நாட்டின் செலாவணித்துறைக்கு முதுகெலும்பாக அமைபவை அந் நாட்டின் மைய வங்கி வெளியிடும் காகிதப்பணமும், நாணயங்களுமே ஆகும். பொதுவாக, காகிதப்பணத்தை வெளியிடும் முழு உரிமையும் மைய வங்கிக்கு உரியதே எனினும், சில நாடுகளில் அரசுக் கருவூலமும் இப் பணியை ஆற்றுவது உண்டு. எடுத்துக் காட்டாக, இந்தியாவில் ஒரு ரூபாய்க் காகிதப்பணத்தை இந்திய அரசே வெளியிட்டு நிர்வகிக்கின்றது; மற்றக் காகிதப் பணங்கள் யாவற்றையும், இந்திய ரிசர்வ் பாங்கு[2] வெளியிடுகின்றது.

உலோக நாணயங்களை (நியமனப்பணம், துணைப் பணம், அடையாளப்பணம் ஆகியவற்றை) நாட்டின் பணத் துறைக்குப் பொறுப்பேற்கும் மைய வங்கி அரசின் நிதியமைச்சகம் அல்லது கருவூலத்தின் துணையுடன் வெளியிடுகின்றது. நாணய வெளியீட்டில் மூன்று வகைகள் உண்டு. அவை யாவன :

(1) சுதந்தரமானதும், இலவசமானதுமான[3] முறை

(2) கட்டுப்படுத்தப்பட்டதும், இலவசமில்லாததுமான[4] முறை

[1] Currency
[2] Reserve Bank of India
[3] Free and Gratuitious
[4] Restricted and Non-gratuitious

(3) சுதந்தரமான ஆனால் இலவசமில்லாத முறை.[1]

சுதந்தரமான நாணய முறையில் எவரும் எவ்வளவு உலோகத்தை வேண்டுமானாலும் மைய வங்கியிடம் கொடுத்து நியமனப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு மாற்றிக்கொள்வதற்குக் கட்டணம் விதிக்கப்படாவிட்டால், அஃது இலவசமான நாணய முறை எனப்படும். இம் முறையில் நாட்டில் நியமனப் பணத்தின் அளவைக் கட்டுப்படுத்துவதற்குப் பணவாக்க நிருவாகத்தினரால் இயலாது. ஏனெனில், இலவச நாணய முறை இருப்பதால், மக்கள் தமது விருப்பத்திற்கும், வசதிக்கும் ஏற்ப நிலையான பணத்தை அச்சிட்டுக் கொள்ள முடியும் அல்லவா? ஆதலால்தான் தற்காலத்தில் கட்டுப்படுத்தப்பட்ட இலவசமில்லாத நாணய முறை நிலவுகின்றது.

ஒரு நாட்டில் காகிதப்பண வெளியீடானது, அந் நாட்டுக் காகிதப்பண வெளியீடு சம்பந்தமாகப் பின்பற்றும் விதி முறைகளைச் சார்ந்துள்ளது. பொதுவாகக் காகிதப்பண வெளியீட்டைப் பொறுத்தவரையில் வரையறை செய்த நம்பிக்கைத்திட்டம்[2], வீதாச்சார காப்புத்திட்டம்[3] ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றலாம்; வரையறை செய்த நம்பிக்கைத் திட்டத்தின்கீழ் எவ்விதப் பொன்காப்பும் இன்றி, ஒரு குறிப்பிட்ட அளவு வரையில் காகிதப் பணத்தை மைய வங்கி வெளியிடலாம். நம்பிக்கை மட்டம் எனப்படும் இந்த அளவிற்கும் அதிகமாகச் செலாவணியை மைய வங்கி வெளியிட விரும்பினால் வெளியிடப்படும் செலாவணிக்குச் சமமான மதிப்புள்ள (100 சதவிகித) பொன்காப்பு இருப்பது அவசியமாகும். வீதாசாரக் காப்புத்திட்டத்தின்கீழ் நாட்டில் எவ்விதப் பொன்காப்பும் இன்றி, ஒரு குறிப்பிட்ட அளவு வரையில் காகிதப்பணத்தையே வங்கி வெளியிடலாம். நம்பிக்கை மட்டம் எனப்படும் இந்த அளவிற்கும் அதிகமாகச் செலாவணியை மைய வங்கி வெளியிட விரும்பினால் வெளியிடப்படும் செலாவணிக்குச் சமமான மதிப்புள்ள (100 சதவிகித) பொன்காப்பு இருப்பது அவசியமாகும். வீதாசாரக் காப்புத்திட்டத்தின்கீழ் நாட்டில் வெளியிடப்பட்டுள்ள மொத்தச் செலாவணியில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு ஈடாக மைய வங்கியில் பொன்காப்பு இருக்க வேண்டும். இந்தியாவில் தற்பொழுது குறைந்த அளவு காப்புத்திட்டம்[4]

[1] Free and Non-gratuitious
[2] Fixed Fiduciary System
[3] Proportional Reserve System
[4] Minimum Reserve System

பின்பற்றப்படுகின்றது. இதன்படி மைய வங்கி ஒரு குறிப்பிட்ட அளவு பொன்னையும், வெளிநாட்டுச் செலாவணியையும், அரசாங்கக் கடன் பத்திரங்களையும் காப்பாக வைத்துக்கொண்டு, நாட்டின் தேவைக்கேற்பச் செலாவணியை வெளியிடலாம். ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா (திருத்தச்) சட்டம் (1957)[1]-ல் ரிசர்வ் பேங்கின் வெளியீட்டுத்துறையில் ரூ. 200 கோடி மதிப்புள்ள பொற்காசுகள், அயல்நாட்டுக் கடன் பத்திரங்கள் ஆகியவை இருக்க வேண்டும் எனவும், இதில் ரூ. 115 கோடி மதிப்புள்ள பொன் இருக்க வேண்டும் எனவும், இக்குறைந்த அளவு காப்பைக் கொண்டு நாட்டின் தேவைக்கேற்பச் செலாவணி வெளியிடப்படலாம் எனவும் விதிக்கப்பட்டுள்ளது.

எந்த அளவு மதிப்புள்ள செலாவணியை வெளியிடுவது, மொத்தப் பணத்தின் அளவு எந்த விகிதத்திற்குக் காகிதப் பணத்தை வெளியிடுவது என்பதையெல்லாம் உண்மையில் நிர்ணயிப்பது பொதுமக்களின் நடவடிக்கைகளே ஆகும். நாட்டின் மைய வங்கி, கருவூலம், வணிக வங்கிகள் ஆகியவற்றால் பொதுமக்களின் தேவையைப் பிரதிபலிக்க மட்டுமே முடியுமே தவிர, அவற்றை நிர்ணயிக்க இயலாது. பொதுமக்கள் காகிதப்பணத்தை அதிகமாக வைத்துக்கொள்வதா அல்லது குறைவாக வைத்துக்கொள்வதா, உயர்மதிப்புள்ள செலாவணியை வைத்துக்கொள்வதா அல்லது குறைவான மதிப்புள்ள செலாவணியை வைத்துக்கொள்வதா என்பனவற்றைக் கீழ்க்காணும் காரணங்களில் ஏதேனும் ஒன்றோ அல்லது பலவோ நிர்ணயிக்கின்றன:

(1) வாணிபத்தின் அளவும் இயல்பும், (2) விலைமட்டம், (3) தொகைகள் செலுத்தப்படும் விகிதம், (4) தேவை வைப்புகளின் அளவு, (5) பொதுமக்களின் வங்கிப் பழக்கம், (6) தேசீய வருமானத்தின் பகிர்வு, (7) வரி விதிப்பு முறை, பொதுக் கடன்கள், பற்றாக்குறை நிதியாக்கம் போன்றவை.

தேவை வைப்புகள்: வணிக வங்கிகள் வசமுள்ள தேவை வைப்புகள் காசோலைகள் மூலம் எளிதில் மாறுதல்களுக்கு உரியவையாதலால், நாட்டில் பணத்தின் அளிப்பில் முக்கியப் பங்கை ஏற்கின்றன. காசோலைகள் அளிப்பதன் மூலம் செலுத்துதல்கள் நடைபெறுவதற்கு ஏற்பத் தேவை வைப்பின் அளவும் மாற்றமடையும்.

[1] Reserve Bank of India (Amendment) Act 1957

பணத்தின் அளிப்பைச் செலாவணிப்பணமும் தேவை வைப்பும் நிர்ணயிக்கின்றன. அவை எவ் விகிதத்தில் அமையு மென்பது அந் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்த தாகும். முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் தேவை வைப்பும், வளர்ச்சி குன்றிய நாடுகளில் செலாவணிப்பணமும் அதிக விகிதத்தில் காணப்படும்.

பணத்தின் அளிப்பில் ஏற்படும் மாறுதல்கள் : ஒரு நாட்டில் மைய வங்கி, வாணிப வங்கிகள், அரசுக் கருவூலம் ஆகிய மூன்றுமே பணத்தை உற்பத்தி செய்கின்றன. அவற் றின் நடவடிக்கைகளே பணத்தின் அளிப்பை நிர்ணயிக்கின் றன. அவை பலவிதச் சொத்துகளையும்[1] பெற்று, அதற்கு ஏற்பக் கடன் பொறுப்புகளை[2] வெளியிடுகின்றன. ஆகவே, பணத்தின் அளிப்பு என்பது பணத்தை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் கடன் பொறுப்பையே குறிக்கின்றது.

நாட்டில் பணத்தின் அளவையும், கடனின் அளவையும் நிர்ணயிப்பதில் வாணிப வங்கிகளும், மைய வங்கிகளும் முக்கி யப் பொறுப்பேற்கின்றன. தனியார் நிறுவனங்களான வாணிப வங்கிகள் தேவை வைப்புகளைத் தோற்றுவிக்கின்றன. அரசின் முகவரான மைய வங்கி நாட்டின் பணத்துறையைக் கண்காணிப்பதுடன் காகிதப்பணத்தை வெளியிடும் சர்வா தீனத்தை முழு அளவிலோ அல்லது ஓரளவிற்கோ பயன் படுத்துகின்றது. அரசுக் கருவூலம் மிகவும் குறைந்த அளவு மதிப்புள்ள நாணயங்களையும், காகிதப்பணங்களையும், அடையாளப்பணத்தையும் வெளியிடுகின்றது.

வாணிப வங்கிகளின் பண உற்பத்தி நடவடிக்கைகள்: வங்கிகள் 'கடனை' உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள்' என்று கிரௌதர் குறிப்பிடுகின்றார். வங்கிகளால் அளிக்கப் படும் கடன்கள் பணத்தின் அளிப்பில் முக்கிய பங்கேற் கின்றன.

தேவை வைப்புகளைப் பெருக்குவதன் மூலம் வங்கிகள் பணத்தின் அளிப்பை அதிகரிக்கின்றன. தேவை வைப்புகள் (1) வாடிக்கையாளர்களின் ரொக்க வைப்பின் மூலமும், (2) வங்கிகள் அளிக்கும் கடன்கள் மற்றும் வங்கிகளின் முதலீடுகள் மூலமும் தோற்றுவிக்கப்படலாம். வங்கிகளால், மக்களால் செலுத்தப்படும் வைப்புகள் யாவும் முதனிலை வைப்புகள்[3] எனப்படும். வங்கிகள் கடன் வசதிகளை அளிக் கும்பொழுது தோற்றுவிக்கப்படும் வைப்புகள் வருவிக்கப் பட்ட வைப்புகள்[4] எனப்படும்.

1 Assets
2 Liabilities
3 Primary Deposits
4 Derivative Deposits

ஒரு வங்கி ஒருவருக்குக் கடனளிக்கும்பொழுது ரொக்கமாகவும் அளிக்கலாம்; அல்லது கடன் பெற்றவரின் கணக்கில் அத்தொகை புதிய வைப்பாகவும் குறிக்கப்படலாம். பொதுவாக, இரண்டாவது முறையையே வங்கிகள் பின்பற்றுகின்றன. கடன் பெற்றவரின் வைப்பில் கடன் தொகை சேர்க்கப்பட்டதற்குப் பின்னர், அவர் காசோலைகளை அளிப்பதன் மூலம் உருவாக்கப்பட்ட கூடுதல் பணம் பணத்தின் அளிப்பை அதிகரிப்பதால், 'ஒவ்வொரு கடனும் வைப்பைத் தோற்றுவிக்கும்' என்று கூறப்படுகின்றது, எனினும், வங்கிகளின் தேவைவைப்பைத் தோற்றுவிக்கும் பணிக்கு (1) ரொக்கக்காப்பு விகிதம், (2) உபரியான ரொக்கக்காப்பின் அளவு, (3) வங்கியின் காப்புத்தொகையின் வெளியேற்றம், (4) கடன் வாங்குவோரின் எண்ணிக்கை, (5) மைய வங்கியின் கடன் கட்டுப்பாடு நடவடிக்கைகள் ஆகியவை வரம்பாக அமைகின்றன.

பண உற்பத்தியில் மைய வங்கியின் பங்கும் அரசின் பங்கும்: வாணிப வங்கிகளின் காப்பு நிதியை[1] மாற்றுவதன் மூலம் மைய வங்கி பணத்தின் அளிப்பை நிர்ணயிக்க முடியும். மைய வங்கி பாங்கு வட்டி வீதக் கொள்கை[2], வெளி அங்காடி நடவடிக்கைகள்[3], காப்பு விகித மாறுதல்கள்[4] ஆகியவற்றைப் பின்பற்றுவதன் மூலம் வாணிப வங்கிகளின் கடன் நடவடிக்கைகளை நிர்ணயிக்கலாம். பாங்கு வட்டி வீதம் குறைக்கப்படும்பொழுது, வெளி அங்காடியில் பத்திரங்கள் வாங்கப்படும்பொழுதும் காப்பு விகிதம் குறைக்கப்படும்பொழுதும் வாணிப வங்கிகளின் காப்பு நிதி அதிகரிப்பதால், அவை பெருமளவில் தேவை வைப்புகளைத் தோற்றுவிப்பதன் மூலம் பணத்தின் அளிப்பை அதிகரிக்க முடியும். இதற்கு நேர் மாறான நடவடிக்கைகளில் மைய வங்கி ஈடுபடுமாயின், பணத்தின் அளிப்பு குறைக்கப்படும். அரசுக் கருவூலங்கள் நிதியியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, வாணிப வங்கிகளின் காப்புநிதியை மாற்றியமைக்க முடியுமாகையால், அவையும் பணத்தின் அளவை நிர்ணயிக்க முடியும்.

அரசாங்கம் போர்க்காலத்திலும், பொருளாதார மந்தம் நிலவும் காலங்களிலும் பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொள்ளுமாயின், காகிதப்பண வெளியீடு அதிகரிப்பதால் பணத்தின் அளிப்பு அதிகரிக்கும். பற்றாக்குறை நிதியாக்

[1] Reserve Fund
[2] Bank Rate Policy
[3] Open Market Operations
[4] Variable Reserve Ratio

கத்தை மேற்கொள்வதில் மைய வங்கிக்கும் பங்கு உண்டு. பற்றாக்குறை நிதியாக்கம் மேற்கொள்ளப்படும்பொழுது காகிதப்பணம் அதிகரிப்பதால், தேவை வைப்பும், அதைத் தொடர்ந்து பணத்தின் அளிப்பும் அதிகரிக்கும். அத்தகைய பற்றாக்குறை நிதியாக்கத்தால் பணவீக்கம் தோன்றக் கூடும்.

அரசாங்கம் வங்கித்துறையிடமிருந்து கடன்பெற்றுச் செலவிடுவதன் மூலமும் பணத்தைத் தோற்றுவிக்கலாம். மைய வங்கியிடமிருந்தும், வாணிப வங்கிகளிடமிருந்தும் அரசாங்கம் கடன்பெற்றுச் செலவிடுமாயின் அத் தொகை பொது மக்களை வந்தடையும்; பொதுமக்களின் வாங்குந்திறன் அதிகரிக்கும். அவர்கள் தங்களுடைய வருமானத்தை வங்கிகளில் வைப்பாகச் செலுத்தும்பொழுது வங்கிகளின் மூதனிலை வைப்புகளும், காப்புநிதியும் அதிகரிப்பதால், அவற்றின் கடனளிக்கும் நடவடிக்கைகள் விரிவடையும். இவ் வகையில் பொதுக்கடன்கள் பணத்தின் அளிப்பை அதிகரிக்கின்றன.

அரசாங்கம் பொதுமக்களிடமிருந்து கடன் வாங்கும் பொழுது அவ்வாறு கடனாகப் பெறப்பட்ட தொகை பணத்தின் அளிப்பில் குறையுமெனினும், இது தொடக்கத்தில் மட்டுமே ஏற்படக்கூடியதாகும். ஏனெனில், அவ்வாறு கடனாகப் பெறப்பட்ட தொகையை அரசாங்கம் செலவிடும் பொழுது பணத்தின் அளிப்பு அதிகரிக்கும்.

பணத்தின் அளிப்பை நிர்ணயிப்பதில் அரசின் அரசிறைக் கைக்கோளும் உரிய இடத்தைப் பெறுகின்றது. அரசாங்கம் உபரி வரவு செலவுத் திட்டத்தைப் (செலவைக்காட்டிலும் வருமானம் அதிகமாக இருப்பது) பின்பற்றும்பொழுது உபரித் தொகையின் அளவிற்குப் பணத்தின் அளிப்பு குறையும். அதன் விளைவாக வாணிப வங்கிகளின் காப்புநிதியும் குறைவதால் அவற்றின் கடன் நடவடிக்கைகள் குறையும். ஆதலால் பணத்தின் அளிப்பு குறைவடையும். இதற்கு எதிர்மாறாக, பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டம் பின்பற்றப்படும்பொழுது பணத்தின் அளிப்பு அதிகரிக்கும்.

பணத்தின் அளிப்பு மாறுவதன் காரணங்கள்: ஒரு நாட்டில் பணத்தின் அளிப்பு மாறுதலடைவதற்கு அரசுத்துறை நடவடிக்கைகளும், தனியார்த்துறை நடவடிக்கைகளுமே காரணங்கள் ஆகும்.

அரசுத்துறை தனது வருவாயைக்காட்டிலும் மிகையாகச் செலவிடும்பொழுது, மிகையான இத் தொகையை அரசுப் பத்திரங்களை விற்பது, கருவூல உண்டியல்களை விற்பது ஆகியவற்றின் மூலம் மைய வங்கியிடமிருந்தும், வாணிப வங்கிகளிடமிருந்தும் காகிதப்பணத்தை அச்சிடுவதன் மூலமும் அரசு பெறுகின்றது. அரசின் இந்த நடவடிக்கையால் வங்கித் துறையின் சொத்துகள் அதிகரிப்பதால் வங்கிகளின் கடன் அளவு பெருகி, பணத்தின் அளிப்பு அதிகரிக்கப்படுவதற்குக் காரணமாகின்றது. அரசு, உபரி வரவு செலவுத்திட்டத்தை மேற்கொண்டால், இதற்கு எதிர்மாறான விளைவுகள் ஏற்பட்டு, பணத்தின் அளிப்பு குறையும்.

அரசின் வசமுள்ள அயல்நாட்டுச் செலாவணியின் பற்றாக்குறையும் இவ்வித விளைவுகளை நல்கும். அயல் நாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக அரசாங்கம் மைய வங்கியிடமிருந்து அயல்நாட்டுச் செலாவணியை விலைக்குப் பெறும். இவ்வாறு பெறப்படும் அயல் நாட்டுச் செலாவணியின் அளவிற்கு மைய வங்கியின் பொறுப்பும் குறையும். ஆதலால், மைய வங்கியின் காகிதப் பண வெளியீட்டு வசதி அதிகரிப்பதால், பணத்தின் அளிப்பு அதிகரிக்கும். ஆனால், அரசு மைய வங்கியிடமிருந்து கடன் பெற்று அதனைக் கொண்டு அயல்நாட்டுச் செலாவணியை விலைக்கு வாங்கினால் பணத்தின் அளிப்பு மாறுவதில்லை.

அரசாங்கம் பணத்தின் அளிப்பை நேரிடையாகவும் பாதிக்கக் கூடும். பணத்தின் அளிப்பை அளவிடும்பொழுது கருவூலங்களின் இருப்பை நாம் சேர்த்துக்கொள்வதில்லை. ஆனால், கருவூலங்களின் இருப்பை மாற்றுவதன்மூலம் பணத்தின் அளிப்பை மாற்றியமைக்க முடியும்.

தனியார்த்துறையின் நடவடிக்கைகளும் பணத்தின் அளிப்பைப் பாதிக்கக் கூடும்.

வங்கிகளின் பங்கையும், பத்திரங்களையும் வாங்குவதன் மூலமும், விற்பதன் மூலமும் பணத்தின் அளிப்பை அதிகரிக்கவும் குறைக்கவும் தனியார்த்துறையால் இயலும்.

வங்கிகளிடமிருந்து பெறும் கடனை அதிகரிப்பதன் மூலம் பணத்தின் அளிப்பை அதிகரிக்கவும், கடன் அளவைக் குறைப்பதன் மூலம் பணத்தின் அளிப்பைக் குறைக்கவும் தனியார்த்துறையால் இயலும். அரசாங்கப் பத்திரங்களை

வாங்குவதன் மூலமும் விற்பனை செய்வதன் மூலமும் வங்கித் துறையின் சொத்துகளைத் தனியார்த்துறை மாற்றியமைக் கலாம். இதனால் பணத்தின் அளிப்பும் பாதிக்கப்படும்.

பண அளிப்பின் நெகிழ்ச்சி: பண அளிப்பின் நெகிழ்ச்சி யானது நாட்டின் தேவைக்கு ஏற்ப விலைமட்டத்தைப் பாதிக் காத வகையில் பணத்தின் அளிப்பு மாறும் திறனைக் குறிப் பிடுகின்றது. பணத்திற்கான தேவைக்கேற்ப எவ்விதப் பாதிப்பும் இன்றிப் பணத்தின் அளிப்பு மாறும் விகிதமே அதன் நெகிழ்ச்சியாகும்.

பண அளிப்பின் நெகிழ்ச்சியானது மைய வங்கியின் நட வடிக்கைகளையும் திறமையையும் சார்ந்துள்ளது. அதற்கு ஏற்ப மைய வங்கியின் பணவாக்கக் கைக்கோள் மேற்கொள் ளப்படுதல் வேண்டும். ஆயினும், பணவாக்கக் கைக்கோள் வெற்றி பெறுவது பணச்சந்தையின் நிலவரங்களையும், நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பொறுத்ததாகும். பண அங்காடி சிறப்பாக ஒருங்கிணைந்து வளர்ச்சி பெற்றுள்ள நாடு களிலும் நிதி நிறுவனங்கள் மைய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நாடுகளிலும் பணத்துறை நெகிழ்ச்சி மிகுந்து காணப்படும். இதற்கு நேர் எதிரான நிலவரங்கள் நிலவும் நாடுகளில் பணத்துறை நெகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

பணத்தின் சுழல்வேகம்[1]: இதுவரையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்[2] பணத்தின் அளிப்பைப்பற்றி ஆராய்ந்தோம். இனி ஒருகால இடைவெளிக்குள்[3] பணத்தின் அளிப்பைப்பற்றிக் காணலாம். ஒருகால இடைவெளி என்பது குறிப்பிட்ட இரு காலங்களுக்கிடையுள்ள இடைவெளியைக் குறிப்பிடும். இம் முறையில் பணத்தின் அளிப்பை ஆராயுமிடத்துப் பணத்தின் சுழல்வேகத்தையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்வது அவசியமாகும். பணத்தின் சுழல்வேகம் என்பது ஒரு குறிப் பிட்ட அலகு பணம் குறிப்பிட்ட காலத்தில் எத்தனை முறை கைமாறுகின்றதோ அதனைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு ரூபாய்ப் பணம் ஒரு நாளில் 10 முறை கைமாறினால் அதன் சுழல்வேகம் 10 ஆகும். எனவே, ஒரு நாட்டில் பணத்தின் அளிப்பைக் கணக்கிடும்பொழுது புழக்கத்திலுள்ள பணத்தை அதன் சுழல்வேகத்தினால் பெருக்கினால் கிடைக்கும்

1 Velocity of circulation of money
3 Over a period of time
2 At a point of time

தொகையே பணத்தின் அளிப்பாகும். அதாவது பணத்தின் அளிப்பு = பணத்தின் அளவு × சுழல்வேகம். பணத்தின் சுழல் வேகமானது கீழ்க்கண்டவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றது:

(1) வருமானம் பெறப்படும் காலங்களுக்கு இடையே காணப்படும் இடைவெளி. அடிக்கடி வருமானம் வருமாயின், பணத்தின் சுழல்வேகம் அதிகமாக இருக்கும். நீண்ட காலத்திற்கு ஒரு முறை வருமானம் பெறப்படுமானால், சுழல்வேகம் குறைவாக இருக்கும்.

(2) செலுத்துதல்கள் மேற்கொள்ளப்படுவதில் பொது மக்களின் வழக்கங்களும், பின்பற்றும் முறையும் சுழல் வேகத்தைப் பாதிக்கும்.

(3) பொதுமக்கள் குறிப்பிட்ட காலங்களில் மாறாமல் தொடர்ந்து வருமானம் பெறுவாராயின் சுழல்வேகம் அதிகமாகவும், தடைப்பட்ட நிச்சயமற்ற முறையில் வருமானத்தைப் பெறுவாராயின் சுழல்வேகம் குறைந்தும் காணப்படும்.

(4) பொதுமக்களின் செல்வநிலைக்கு ஏற்பவும் சுழல் வேகம் அமையும். செல்வந்தர்களிடையில் சுழல்வேகம் குறைவாகவும், ஏழை மக்களிடையில் சுழல்வேகம் அதிகமாகவும் காணப்படும்.

(5) பொருளாதாரப் பூரிப்புக் காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுவதால், பணத்தின் சுழல்வேகம் அதிகமாக இருக்கும். பொருளாதார மந்தம் நிலவும்பொழுது சுழல்வேகம் குறைந்து காணப்படும்.

(6) ஒரு நாட்டின் நிதித்துறைக்கடன், அமைப்பு ஆகியவற்றிற்கு ஏற்பச் சுழல்வேகம் அமையும். ரொக்கமும், காசோலைகளும் அடிக்கடி பயன்படுத்தப்படும் நாடுகளில் சுழல்வேகம் அதிகமாக இருக்கும். சில்லறை வியாபாரங்களில் சிறு அளவு மதிப்புள்ள நாணயங்களின் சுழல்வேகமும் மொத்த வியாபாரங்களில் உயர்மதிப்புள்ள பணங்களின் சுழல் வேகமும் அதிகமாகக் காணப்படும். பொதுமக்களிடையில் வங்கி வழக்கம் அதிகமாக இருப்பின் சுழல்வேகம் அதிகமாகவும், வங்கி வழக்கம் குறைவாக இருப்பின் சுழல்வேகம் குறைவாகவும் காணப்படும்.

(7) பொதுமக்களிடையில் ரொக்கப்பண விருப்பமும் அல்லது நீர்மை விருப்பம் மிகுந்திருந்தால், பணத்தின் சுழல்

வேகம் குறைந்து காணப்படும். ரொக்கப்பண விருப்பமும் குறைந்துள்ள மக்களிடையில் பணத்தின் கழல்வேகம் மிகுந்து காணப்படும்.

(8) பொதுமக்களுடைய நுகர்வுச்செலவுகள், சேமிப்பு மனப்பான்மை ஆகியவற்றிற்கு ஏற்பவும் பணத்தின் சுழல் வேகம் அமையும்.

(9) வங்கிகள், மற்றும் நிதி நிறுவனங்களின் காப்புநிதி களின் அளவிற்கு ஏற்பவும் நாட்டில் பணத்தின் சுழல்வேகம் அமையும்.

பணத்தின் சுழல்வேகத்தை மேற்குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு சக்திகள் நிர்ணயிப்பதால், அதைத் துல்லியமாகக் கணக்கிடுதல் எளிது அன்று. ஆதலால், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பணத்தின் அளிப்பைக் கணக்கிடுவதுபோல் எளிதாக ஒருகால இடைவெளிக்குள் பணத்தின் அளிப்பை அளவிட முடியாது.

பணத்திற்கான தேவை

பணம் ஆற்றும் பணிகளை அடிப்படையாகக்கொண்டே பணத்திற்கான தேவை விவரிக்கப்படுகின்றது. பணத்தின் முக்கியமான பணிகள் இரண்டாகும். பணம் பரிவர்த்தனைச் சாதனமாகவும், மதிப்பின் வைப்பு ஆகவும் பணி புரிகின்றது. தொன்மைப் பொருளாதாரிகள்[1] முதல் பணியையும், புதுமைப் பொருளாதாரிகள்[2] இரண்டாவது பணியையும் அடிப்படை யாகக்கொண்டு பணத்திற்கான தேவையை விளக்குகின்றனர்.

தொன்மைப் பொருளாதாரிகளின் கருத்து: பணத்தின் முதற்பணியாகவும், முக்கியப் பணியாகவும், அது பண்டங் களையும், பணிகளையும் வாங்கும்போது ஓர் இடையீட்டுக் கருவியாகப் பயன்படுவதையே தொன்மைப் பொருளா தாரிகள் கருதினர். இக் கருத்தின்படி பணம், பணத்திற்காகத் தேவைப்படுவதில்லை. பண்டங்களையும், பணிகளையும் வாங்குவதற்காகவே தேவைப்படுகின்றது என்றாகின்றது. அதாவது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் பணத்திற்கான தேவை யானது, நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள்,

[1] Classical Economists

[2] **Modern Economists**

மற்றும் பணிகளின் மொத்த அளவால் நிர்ணயிக்கப்படு கின்றது. பொதுமக்கள் தங்கள் வசம் தமது பேர நடவடிக்கை களுக்காக வைத்திருக்க விரும்பும் ரொக்கப்பணத்தின் அளவு, பணத்தின் சுழல்வேகத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றது. இக் கருத்தைப் பணத்திற்கான தேவையைப் பணநோக்கில் அணுகும் முறை என்று குறிப்பிடலாம்.

பணத்திற்கான தேவை பேர நடவடிக்கைகளின் அடிப் படையில் விளக்குவது ஓர் இயந்திரகதியான விளக்கமாகும். பொருள்களை மதிப்பிட உதவும் தேவை விதியை அடிப்படை யாகக்கொண்டே இவ் விளக்கம் அமைந்துள்ளது. பொருள் களுக்கான தேவை அவற்றின் பயன்பாடு அல்லது இறுதி நிலைப் பயன்பாட்டினால் நிர்ணயிக்கப்படுவது போன்றே, பணத்திற்கான தேவையும் பணம் எதற்குப் பயன்படுகிறதோ அதன் அடிப்படையில் அமைவதாக இவ் விளக்கம் கருது கின்றது. அதாவது, மக்களுடைய பேர நடவடிக்கைகளுக் காகத் தேவைப்படும் பணத்தின் அளவானது அவர்கள் வாங்க விரும்பும் பண்டங்கள், மற்றும் பணிகளின் அளவைப் பொறுத்ததாகும்.

தொன்மைப் பொருளாதாரிகள் பணத்திற்கான தேவை யைப் பண்டங்களும், பணிகளுமே நிர்ணயிப்பதாகக் கருது வதால், பணத்திற்கான தேவை சுதந்தரமானதாகும்; உள்ளுணர்வுகளால் கட்டுப்படுத்தப்படாததாகும். மேலும், தொன்மைப் பொருளாதாரிகளின் கருத்துப்படி, பணத்திற்கான தேவை பேர நடவடிக்கைகளின் அளவினால் நிர்ணயிக்கப் படுவதுடன் பேர நடவடிக்கைகள் குறுங்காலத்தில் மாறாமல் நிலையாகவிருப்பதால், பணத்திற்கான தேவையும் குறுங் காலத்தில் மாறுவதில்லை. குறுங்காலத்தில் பணத்திற்கான தேவை மாறாமல் இருப்பதால், பணத்தின் அளிப்பில் ஏற்படும் மாற்றங்களே அதன் மதிப்பை மாற்றியமைக்கின்றன.

புதுமைப் பொருளாதாரிகளின் கருத்து: புதுமைப் பொருளாதாரிகள் பணத்தின் மதிப்பு வைப்புப் பணியையே மிகவும் முக்கியமான பணியாகக் கருதுகின்றனர். அவர்கள் பணமானது அதை ரொக்கப்பணமாக வைத்துக்கொள்வதற் காகவே தேவைப்படுகின்றது என்று கருதுகின்றனர். பண மானது செலவிடப்படக்கூடியது மட்டும் அன்று; மதிப்பின் வைப்பாகவும் பணியாற்றக்கூடியதாகும். பணமே மிகவும் எளிதான நீர்மைச்சொத்து ஆதலால், அது மதிப்பின் வைப்

பாகவும் பயன்படுகின்றது. அதாவது, பணம் பணத்திற்காகவே—பணமாக வைத்திருப்பதற்காகவே, தேவைப்படுகின்றது. இக் கருத்தின் அடிப்படையில் பணத்திற்கான தேவையும், பணத்தின் சுழல்வேகமும் எதிர்மாறானவை ஆகும்.

புதுமைப் பொருளாதாரிகளின் அணுகுமுறையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பொதுமக்களின் மதிப்பின் வைப்பாக வைத்திருக்க விரும்பும் ரொக்கப்பண விருப்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஆதலால், சொத்துகளாக வைத்திருப்பதைக்காட்டிலும் ரொக்கமாக வைத்துக்கொள்ள விரும்புவதன் காரணங்களும் ஆராயப்படுகின்றன. பொதுமக்களின் பணவிருப்பத்தை ரொக்கவிருப்பம்[1] என்றே கெயின்சு குறிப்பிடுகின்றார். கெயின்சின் கருத்தில் பணத்திற்கான தேவை என்பது ரொக்க நிலைக்கான[2] தேவையைக் குறிக்கும். எனவே, பணத்திற்கான தேவை பற்றிய புதுமையான ஆய்வு முறை ரொக்கப் பண ஆய்வு முறை என்றும், ரொக்கவிருப்ப ஆய்வு முறை என்றும் குறிப்பிடப்படுகின்றது.

பணத்தின் தேவைபற்றிய ரொக்கப்பண ஆய்வு முறையும், பரிவர்த்தனை அடிப்படையிலான ஆய்வுமுறையும் அவற்றின் அணுகுமுறையில் வேறுபடுகின்றன. பரிவர்த்தனை அடிப்படையிலான அணுகுமுறையில் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் அளிக்கப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு ஈடாகச் செலவிடப்படும் பணத்தின் அளவே பணத்திற்கான தேவையாகக் கருதப்படுகின்றது. ரொக்கப்பண ஆய்வு முறையில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில், பொதுமக்கள் தங்கள் வசம் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவே பணத்திற்கான தேவை என்று விளங்குகின்றது.

பொதுமக்களின் ரொக்க விருப்பத்தை நிர்ணயிப்பவையாக (1) பேர நோக்கம்[3] (2) எச்சரிக்கை நோக்கம்[4] (3) ஊக இலாப நோக்கம்[5] ஆகியவற்றை கெயின்சு குறிப்பிடுகின்றார்.

பேர நோக்கம்: பொதுமக்கள் தங்களுடைய வருமானத்தைக் கூலி, வாரம், வட்டி, இலாபம் ஆகிய இனங்களாகப் பெறுகின்றனர். பொதுமக்களின் வருமானம் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே கிடைப்பவையாகும். ஆனால்,

[1] Liquidity Preference
[2] Liquidity
[3] Transaction motive
[4] Precautionary motive
[5] Speculative motive

அவர்கள் அன்றாடம் செலவிட வேண்டியுள்ளது. வருமானம் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே கிடைப்பதாலும், செலவுகள் அன்றாடம் தோன்றுவதாலும், அன்றாடச் செலவுக்காக மக்கள் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை ரொக்கமாக வைத்துக்கொள்ள விரும்புகின்றனர். செலவுகள், தொடர்ந்து வருவதைப் போன்றே, வருமானமும் தொடர்ந்து கிடைத்துக் கொண்டு இருக்குமாயின், பொதுமக்கள் ரொக்கமாக வைத்துக் கொண்டிருக்க வேண்டியது இல்லை. வருமானங்களுக்கு இடையில் உள்ள கால இடைவெளி அதிகமாக, அதிகமாகப் பொதுமக்கள் தங்கள் வருமானத்தில் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் தொகையின் அளவும் அதிகமாகின்றது. இவ்வாறு பேர நோக்குடன் வைத்திருக்க விரும்பும் ரொக்கமானது பணத்தைப் பரிவர்த்தனைச் சாதனமாகப் பயன்படுத்தவும், வருமானம் வரும் காலத்திற்கும் செலவுகள் நிகழும் காலத்திற்கும் இடையே உள்ள இடைவெளியை இணைக்கவுமே பயன்படுகிறது. பணமானது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் படக்கூடியதாகவும், எளிதில் எடுத்துச் செல்லக்கூடியதாகவும், செலவின்றிச் சேமித்து வைக்கக்கூடியதாகவும், (ஏறத்தாழ) நிலையான மதிப்பைக் கொண்டிருப்பதாலுமே பேர நோக்கோடு பணம் ரொக்கமாக வைக்கப்படுகின்றது.

பேர நோக்கமானது, வருமான நோக்கத்தையும், வாணிப நோக்கத்தையும் உள்ளடக்கியது.

வருமான நோக்கம்[1] என்பது, பொதுமக்கள் தங்கள் அன்றாடச் செலவுகளுக்காக ரொக்கத்தை வைத்திருக்க விரும்புவதைக் குறிப்பிடும். இது பொதுமக்களுடைய வருமானத்தின் அளவிற்கும், வருமானம் கிடைக்கும் காலங்களின் இடைவெளிக்கும் ஏற்பவே அமையும்.

வாணிப நோக்கம்[2] என்பது தொழில் முயல்வோர், மற்றும் வாணிப நிறுவனங்களின் பேர நோக்கத்தைக் குறிப்பிடுவதாகும். தொழில் முயல்வோரும் வாணிப நிறுவனங்களும் தங்கள் தொழில்களை நடத்திச்செல்வதற்காக ஓரளவு ரொக்கத்தை வைத்திருப்பது அவசியமாகும். இந் நோக்கத்துடன் வைக்கப்படும் ரொக்கமானது, தொழில் நிறுவனத்தின் விற்பனைப் புரள்விற்கு[3] ஏற்ப அமையும்.

[1] The Income motive
[2] Business motive
[3] Turn over

மேற்கூறியவற்றால், பேர நோக்குடன் வைக்கப்படும் ரொக்கமானது (1) பொதுமக்களுடைய வருமானக் காலத்தாலும், வருமானத்தின் அளவாலும், (2) தொழில் முயல்வோர் மற்றும் வாணிப நிறுவனங்களின் விற்பனைப் புரள்வினாலும் நிர்ணயிக்கப்படுவது தெளிவாகும். பொதுவாகப் பண வருமானத்தின் நிலவரத்திற்கு ஏற்ப, பேர நோக்கத்தோடு வைக்கப்படும் ரொக்கத்தின் அளவும் அமையும். பேர நோக்கத்துடன் வைக்கப்படும் ரொக்கமானது வருமானத்தால் நிர்ணயிக்கப்படுவதாகும்; ஏறத்தாழ மாற்றமுடையதாகவும் இருக்கும். அது வட்டி வீதத்தில் நிகழும் மாறுதல்களால் பாதிக்கப்படுவதில்லை. அதாவது, பேர நோக்கத்திற்காகத் தேவைப்படும் பணமானது வட்டி-நெகிழ்ச்சியற்றது[1] ஆகும்.

எச்சரிக்கை நோக்கம் : பொதுமக்களின் வாழ்க்கையில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் எதுவும் ஏற்படும்பொழுது அதை எதிர்கொள்வதற்காகவும் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை ரொக்கமாக வைத்துக்கொள்ள விரும்புகின்றனர். எச்சரிக்கை நோக்கத்துடன் காக்கப்படும் ரொக்கமானது பணத்தின் மதிப்பின் வைப்புப் பணியையே ஆதரிக்கின்றது. பொதுவாக அனைவரும் வருமானம் பெறும்பொழுது அதில் ஒரு பகுதியை எதிர்காலத்தில் ஏதேனும் எதிர்பாராத செலவுகள்—நோய், விபத்து, வேலையின்மை போன்றவை—ஏற்படுமாயின், அப்பொழுது தேவைப்படும் என்பதற்காக ரொக்கமாக ஓரளவு பணத்தை வைத்துக்கொள்ள விரும்புவர். பணத்திற்கான எச்சரிக்கை நோக்கத் தேவையானது எதிர்கால வரவு செலவுகளின் நிச்சயமின்மைக்கு ஏற்ப அமையும். எதிர்பார்க்கப்படும் வருமானத்தின் அளவிற்கு ஏற்ப எச்சரிக்கை நோக்க ரொக்கம் அமையும் எனினும், அதை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கேற்பது எதிர்காலத்தின் மீதான நிச்சயமின்மையாகும்.

பணத்திற்கான எச்சரிக்கை நோக்கத் தேவையானது வருமானத்தினால் நிர்ணயிக்கப்படுவதாகவும், ஏறத்தாழ நிலையானதாகவும், வட்டி வீதத்தால் பாதிக்கப்படாததாகவும் உள்ளது. அதாவது, நிச்சயமின்மையின் நிலவரத்திற்கு ஏற்ப எச்சரிக்கை ரொக்கத்தேவை நிர்ணயிக்கப்படினும், அது வட்டி-நெகிழ்ச்சியற்றதாகும் ; வருமானத்தைப் பொறுத்ததாகும்.

ஊக இலாபநோக்கம் : வட்டி வீதத்தில் காணப்படும் நிச்சயமின்மையின் விளைவாகவே பொதுமக்கள், ஊக இலாப

[1] Interest—inelastic

நோக்கத்துடன் ரொக்கமாக வைத்திருக்க விரும்புவர். இலாப மளிக்கும் வாய்ப்புகள் கிட்டும்பொழுது பணத்துறை முதலீடுகளை[1] மேற்கொள்வதற்காகவே பணத்திற்கான ஊக இலாபத் தேவை தோன்றுகிறது. ஊக இலாபநோக்கமானது பணத்தின் மதிப்பின் வைப்புப் பணியுடன் ஓரளவு தொடர்புடையதாகும். ஊக இலாபநோக்கத்துடன் வைக்கப்படும் ரொக்கமானது மதிப்பின் வைப்பு ஆகும். இத் தொகையைச் சரியான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தி ஊக இலாபம் பெறுவதற்கு முடியும். எடுத்துக்காட்டாக, கடன் பத்திரங்களின் எதிர்கால மதிப்பில் எதிர்பார்க்கப்படும் மாறுதல்கள் எவ்வகையில் இருக்கக் கூடும் என்பதை ஊகித்து, அதற்கேற்பக் கடன் பத்திரங்களை வாங்குவதன் மூலமோ அல்லது விற்பனை செய்வதன் மூலமோ ஒருவர் இலாபமீட்ட முடியும்.

ஊக இலாபநோக்கில் பணமானது ரொக்கமாகவும் வைக்கப்படலாம். அல்லது பலவித நீர்மைத்தன்மை உடைய சொத்துகளில் முதலீடும் செய்யப்படலாம். சில சமயங்களில் ரொக்கமாக இருப்பதே இலாபகரமான முதலீடாகவும் கருதப்படலாம். ஊக இலாபநோக்கத்துடன் வைக்கப்படும் ரொக்கமானது வட்டி வீதத்தைப் பொறுத்ததாகும். வட்டி வீதமும் ஊக இலாபநோக்கில் தேவைப்படும் ரொக்கமும் எதிர் மாறானவை ஆகும். எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட அளவு வருமானத்தைத் தரக்கூடிய கடன் பத்திரத்தின் விலை குறையக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டால், பொது மக்கள் அத்தகைய பத்திரங்களில் முதலீடு செய்வதைக் காட்டிலும் ரொக்கமாகவே வைத்துக்கொள்ள விரும்புவர். வட்டி வீதம் குறையுமென்றும், கடன் பத்திரங்களின் விலை அதிகரிக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டால், பொதுமக்கள் அத்தகைய பத்திரங்களை வாங்குவதற்கும், தம் வசம் உள்ள ரொக்கத்தை முதலீடு செய்துவிடவும் முற்படுவர். வட்டி வீதத்திற்கும் ஊக இலாபநோக்கில் தேவைப்படும் ரொக்கத்திற்கும் இடையே நிலவும் தொடர்பினை அடுத்த பக்கத்தில் காணும் வரைபடத்தின் மூலம் விளக்கலாம் :

வரைபடத்தில் வட்டிவீதம் குறைவாக இருப்பின், ஊக இலாபநோக்கம் அதிகமாகவும், அதிகமாக இருப்பின் ஊக இலாபநோக்கம் குறைவாகவும் இருக்குமென்பதை விளக்கும் வகையில் ரொக்க விருப்பவிலைகோடு மேலிருந்து கீழ்

[1] Monetary investment

சரிகின்றது. வரைபடத்தில் குறைவான வட்டி வீதம் நிலவும் பொழுது, பொதுமக்களுடைய ஊக இலாபநோக்கத்திற்கான தேவை அதிகமாக இருப்பது தெளிவாகும். இதற்கு மாறாக வட்டிவீதம் உயர்ந்து காணப்படும்பொழுது பொதுமக்களுடைய ரொக்க விருப்பம் குறைந்து காணப்படுகின்றது. இதற்குக் காரணம் வட்டிவீதமும் ரொக்க விருப்பமும் தலைகீழ் வீதத்தில் இருப்பதே ஆகும். ஆதலால்தான் வட்டிவீதம் அதிகரிக்கும்பொழுது, கடன்பத்திரங்களின் விலை குறைகின்றது. வட்டிவீதம் குறையும்பொழுது கடன்பத்திரங்களின் விலை அதிகரிக்கின்றது. வட்டிவீதத்திற்கும் ரொக்க விருப்பத்திற்குமிடையேயான தலைகீழ்த் தொடர்பிற்குக் காரணம்



படம் 4

என்னவென்றால், கடன்பத்திரங்களின் விலை (முதல் மதிப்பு) என்பது எதிர்கால (மூலதன ஆக்கமான) வருமானத்தின் நிகழ் கால மதிப்பிலிருந்து குறிப்பிட்ட முதலீட்டில் நிலவும் அங்காடி வட்டிவீதத்திற்கு ஏற்பக் கழிவு செய்யப்பட்டபின் எஞ்சியுள்ள தொகையே ஆகும்.

ஊக இலாபநோக்கில் ஏற்படும் பணத்திற்கான தேவையானது, வட்டிவீதத்தால் நிர்ணயிக்கப்படுவதாகும்; வட்டி-நெகிழ்ச்சி மிக்கதாகும். பேர ரொக்கம், மற்றும் எச்சரிக்கை ரொக்கம் போலின்றி, இந் நோக்கம் வருமானத்தை நிர்ணயிப்பதாகும். எவ்வாறெனில், ஊக இலாபத்துடன் வைக்கப்படும் ரொக்கமானது முதலீடு செய்யப்படுவதற்கு அடிப்படைக்

காரணம் அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும் எனும் விருப்பந் தானே? சரியான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்டால், ஒருவருடைய வருமானத்தை அத் தொகை நிர்ணயிக்கும் அல்லவா?

சுருக்கமாகப் பணத்திற்கான தேவையைப் பேர நோக்கம், எச்சரிக்கை நோக்கம், ஊக இலாபநோக்கம் ஆகியவை நிர்ணயிக்கின்றன. பேர நோக்கமும், எச்சரிக்கை நோக்கமும் வருமானத்தால் நிர்ணயிக்கப்படுவதுடன் அவை ஏறத்தாழ நிலையானவை ஆகும். ஊக இலாபநோக்கம் வருமானத்தை நிர்ணயிக்கக்கூடியது; வட்டி-நெகிழ்ச்சி மிக்கது; எளிதில் மாறக்கூடியது. எனவே, ஊக இலாபநோக்கமானது நிகழ்கால, எதிர்கால வட்டிவீதத்தையும், முதலீடுகளில் கிட்டக்கூடிய இலாப வீதத்தையும் தொடர்புபடுத்துவதன் மூலம் நாட்டின் பொது விலைமட்டப் போக்கு, வேலைமட்டம், உற்பத்தி ஆகியவற்றில் இயக்க நிலையைத் தோற்றுவிப்பதாக கெயின்சு குறிப்பிடுகின்றார்.

பணத்திற்கான தேவையின் வட்டி-நெகிழ்ச்சி[1] : மேற்காணும் விவாதத்திலிருந்து பணத்திற்கான தேவைக்கும், வட்டி வீதத்திற்குமிடையேயான உறவினைக் கீழ்க்காணுமாறு குறிப்பிடலாம்:

பணத்திற்கான பேரத் தேவையானது வட்டிவீதத்தால் பாதிக்கப்படுவதே இல்லை; அல்லது மிக, மிகக் குறைவாகப் பாதிக்கப்படுகின்றது. பணத்திற்கான பேரத் தேவையானது, வட்டி-நெகிழ்ச்சியற்றது; தேசீயப் பண வருவாயின் அளவைப் பொறுத்ததாகும். பேர நோக்கத்துடன் வைக்கப்படும் ரொக்கமானது நடப்புச் செலவுகளை மேற்கொள்ள உதவுவதால், அது செயல் மிக்க ரொக்கமாகும். பணத்திற்கான எச்சரிக்கை நோக்கத் தேவையும் வருமானத்தைப் பொருத்ததே ஆகும். வட்டிவீதத்திற்கும் அதற்குமிடையே உள்ள தொடர்பு ஏதுமில்லையாதலால், அதுவும் வட்டிவீத-நெகிழ்ச்சியற்றதாகும்; தேவை ஏற்படுமாயின், செலவிடப்படும்; இல்லாவிடில் வாளாயிருக்கும்.

பணத்திற்கான ஊக இலாபநோக்கத் தேவைக்கும், வட்டி வீதத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. அதாவது, ஊக இலாபநோக்கத் தேவையானது, வட்டிவீதத்தால் நிர்ண

[1] The interest elasticity of demand for money

யிக்கப்படுவதாகும். அவை தலைகீழான போக்கினை உடையவை ஆகும். அதிகமான வட்டிவீதம் நிலவும்பொழுது ஊக இலாபநோக்கத் தேவை குறைந்து காணப்படும். குறைவான வட்டிவீதம் நிலவும்பொழுது ஊக இலாபநோக்கத் தேவையானது கணக்கிடப்படவியலாத அளவிற்கு அதிகமாகக் காணப்படும்.

வட்டி வீதம்

வட்டி, மூலதனத்திற்கான ஊதியமாகும். நிலம், உழைப்பு, தொழிலமைப்பாற்றல் ஆகிய உற்பத்திக்காரணிகளின் பணிகளுக்கான ஊதியங்களான வாரம், கூலி, இலாபம் ஆகியவை பணத்தின் மூலமே அளிக்கப்படுகின்றன. ஆனால், வட்டி மீதம் மட்டுமே பணத்தின் பணிகளுக்காகப் பணத்தின் மூலம் அளிக்கப்படும் ஊதியமாகும். ஆதலால்தான் ஜே. எம். கெயின்சு, வட்டிவீதம் ஒரு பண வழிப்பிரச்சினை என்றும், மெய்யான காரணங்களுடன் சிறிதும் தொடர்பற்றது என்றும் குறிப்பிடுகின்றார். கெயின்சு, வட்டிவீதமானது, ரொக்கத்தை அதன் உரிமையாளர்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பிரிந்திருப்பதற்காக அளிக்கப்படுவதாகவும், தேவையும் அளிப்புமே அதை நிர்ணயிப்பதாகவும் கருதுகின்றார். பணத்திற்கான தேவை என்பது ரொக்கத்திற்கான தேவையே ஆகும். ரொக்கத் தேவையை நிர்ணயிக்கும் நோக்கங்களை நாம் முன்னரே அறிவோம். அவ்வாறே பணத்தின் அளிப்பைப் பற்றியும் நாம் முன்னரே அறிவோம். எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் பணத்தின் அளிப்பு மாறாமல் நிலையாகவிருப்பதால், பணத்திற்கான (ரொக்கத்திற்கான) தேவையில் ஏற்படும் மாற்றங்களே வட்டிவீதத்தை மாற்றியமைக்கின்றன என்பது கெயின்சின் கருத்தாகும். பொதுமக்களுடைய ரொக்க விருப்பத்திற்கும், வட்டி வீதத்திற்கும் இடையே நிலவும் தொடர்பினை அடுத்த பக்கத்தில் காணும் வரைபடத்தின் மூலம் அறியலாம் :

ரொக்க விருப்பம் 'ரொ ரொ' ஆக இருக்கும்பொழுது, வட்டி வீதம் 'அவீ' ஆக இருக்கின்றது. ரொக்க விருப்பம் ரொ 'ரொ' ஆக உயரும்பொழுது (பணத்தின் அளிப்பு மாறாமலிருப்பதால்) வட்டிவீதம் ஆவீ''யாக அதிகரிக்கின்றது. இதிலிருந்து பணவாக்கப் பொறுப்பினர், பொதுமக்கள் வசமிருக்கும் ரொக்கத்தின் அளவை அதிகரிப்பது அல்லது குறைப்பதன் மூலம் வட்டிவீதத்தைக் குறைக்கவோ அல்லது அதிகரிக்கவோ முடியுமென்பது தெளிவாகின்றது.

கெயின்சின் மேற்காணும் வட்டிவீதக் கருத்து, பல்வேறு காரணங்களால் மறுக்கப்படுகின்றது :

(1) ரொக்க விருப்பக் கோட்பாடு, முதலீட்டிற்கும் சேமிப்பிற்கும் இடையே நிலவும் தொடர்பினைப் புறக்கணிக்கின்றது. சேமிப்பு இல்லாவிடில், கடனளிப்பதற்கு ரொக்கம் இருப்பதே



படம் 5

முடியாதாகையால், சேமிப்பு-முதலீட்டுத் தொடர்பினைப் புறக்கணிக்கும் இக் கோட்பாட்டை ஜேகப் வைனர்[1] மறுத்துரைக்கின்றார்.

(2) ரொக்க இருப்புகளில் ஒருமை நிலவுவதால், வட்டி வீதத்திலும் வேறுபாடு இருக்காதென—பல்வேறு வட்டி வீதங்கள் நிலவ முடியாதென—கெயின்சு கருதுகின்றார். இக் கருத்தைப் பேராசிரியர் ஜியார்ஜ் ஹால்ம்[2] மறுக்கின்றார். கடன் நடவடிக்கைகளில் கால அமிசத்தின் முக்கியத்துவத்தைக் கருதாமையாலும், பலவித வட்டி வீதங்கள் நிலவுவதைப்பற்றி விளக்காமையாலும் இக் கோட்பாடு தவறுடையதென ஜியார்ஜ் ஹால்ம் கருதுகின்றார்.

(3) பணவாக்கம் மற்றும் பணவாட்டக் காலத்தில் நிலவும் உண்மையான வட்டிவீதத்தைப்பற்றிக் கெயின்சின் கோட்பாடு

[1] Jacob Viner

[2] George Halm

விளக்குவதில்லையென ஹென்றி ஹாஸ்லிட்[1] கருதுகின்றார். இக் கோட்பாடு உண்மையானதாயின், ரொக்க விருப்பம் மிகுந்து காணப்படும். பொருளாதார மந்த காலத்தில் வட்டி வீதம் அதிகமாக இருக்கவேண்டும். ஆனால், நடைமுறையில் மந்த காலத்தில் வட்டிவீதம் குறைவாகவே இருக்குமென்பதை நாம் அறிவோம். இவ்வாறே பணவீக்கக் காலத்தில் வட்டி வீதம் குறைந்து காணப்பட வேண்டுமெனினும், நடைமுறையில் வட்டி வீதம் உயர்ந்தே காணப்படும். எனவே, இக் கோட்பாட்டை ஹென்றி ஹாஸ்லிட் மறுத்துரைக்கின்றார்.

(4) தொழில் நிறுவனங்களின் முதலீடானது வட்டி வீதத்தைச் சார்ந்ததாகும் என்பதை இக் கோட்பாடு கருதவில்லை.

வட்டி வீதத்தை நிர்ணயிப்பதில் பணக்காரணிகள் முக்கியமானவை எனினும், பணக்காரணிகள் மட்டுமே வட்டி வீதத்தை நிர்ணயிப்பதாகக் கெயின்சு கருதுவது தவறாகும்.

வட்டிவீதமும் செல்வம் வைத்திருப்பதும் : வட்டி வீதம் சொத்துகளின் விலை, செல்வ உடைமை ஆகியவற்றிற்கு இடையே நேர்முகத் தொடர்பு உள்ளது. பெயரளவு வட்டிவீதமும், மெய்யான வட்டிவீதமும் வேறுபட்டவையாகும். பெயரளவு வட்டிவீதம், பணம் மூலம் நிர்ணயிக்கப்படும் வட்டி வீதத்தைக் குறிப்பிடும். எடுத்துக்காட்டாக, அரசாங்கக் கடன் பத்திரம் ஒன்று 4% வட்டிவீதம் கொண்டதெனில், பெயரளவு வட்டிவீதம் 4% ஆகும். ஆனால், அப் பத்திரத்தின் மெய்யான வட்டிவீதம், பெயரளவு வட்டிவீதத்தைக்காட்டிலும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். அப் பத்திரம் அங்காடியில் ரூ. 90 விலையில் விற்கப்படுமாயின், மெய்யான வட்டிவீதம் 4·4% ஆகும். இஃது எவ்வாறெனில், வட்டிவீதம் 4% ஆயினும், ரூ. 90ஐ முதலீடு செய்பவர் பெறும் வட்டிவீதம் 4% ஆகையால், அவர் பெறும் மெய்யான வட்டிவீதம்,

$$\frac{4}{90} \times 100 = 4{\cdot}4\% \text{ ஆகும்.}$$

மெய்யான வட்டிவீதமானது, அரசாங்கப் பத்திரத்தின் விலையைப் பொறுத்ததாகும். அரசுப் பத்திரங்களின் சந்தை விலை அதிகரிக்கும்பொழுது மெய்யான வட்டிவீதமும் குறையும். அரசுப் பத்திரங்களின் சந்தை விலை குறையும்பொழுது,

[1] Henry Hazlitt

மெய்யான வட்டிவீதம் அதிகரிக்கும். வட்டிவீதத்தில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகச் செல்வ உடைமையாளர்கள், குறைவான வட்டியளிக்கும் சொத்துகளிலிருந்து உயர்வட்டி யளிக்கும் சொத்துகளுக்கு மாறுவார்கள்.

வட்டிவீதமும், பணமும், மற்றும் பத்திரங்களும் : ஒரு நபர் தமது செல்வத்தை ரொக்கமாக வைத்திருப்பாரா அல்லது மாறாத வட்டிவீதமுள்ள பத்திரங்களாக வைத்துக்கொள்வாரா என்பது, அவர் இவ்விரு இனங்களிலிருந்து பெறக்கூடிய தராதரப் பயனைப் பொறுத்ததாகும். பத்திரங்களின் விலை மட்டம் அதிகரிக்குமாயின், மெய்யான வட்டிவீதம் குறை வதால், பத்திரங்களாக வைத்துக்கொள்வதை அனைவரும் தவிர்ப்பார்கள். ஏனெனில், பத்திரங்களிலிருந்து கிட்டும் மெய்யான வருமானம் குறைவதுடன், பத்திரங்களின் விலை குறையக் கூடுமென்றும் பொதுமக்கள் எதிர்பார்ப்பார்கள். ஒருமுறை விலை அதிகரித்தால் எப்படியும் அது குறைந்தே தீரவேண்டுமாகையால், பத்திரங்களை விற்பனை செய்வது தொடங்கிவிடும். இவ்வாறு பத்திரங்களின் விலை உயர்வாக இருக்கும்பொழுது விலை வீழ்ச்சியை எதிர்பார்த்து, பத்திரங்களை விற்பனை செய்வதற்கும், ரொக்கமாக வைத்துக் கொள்ள விரும்புவதற்கும் பல காரணங்கள் உள்ளன. பண வீக்கம் தோன்றினாலன்றிப் பணத்தின் மதிப்பு மாறுவதில்லை என்பதாலும், ரொக்கமாக இருப்பின் வைத்திருப்போருக்குப் பத்திரத்தன்மையும் வசதியும் கிட்டுவதாலும், ரொக்கமாக வைத்திருப்பதற்குச் செலவேதுமில்லை என்பதாலும் பத்திரங் களின் விலை உயரும்பொழுது அவற்றை ரொக்கமாக்கு வதற்கும் பொதுமக்கள் முயல்வார்கள்.

இதுவே கெயின்சு குறிப்பிடும் ஊக இலாபநோக்கமாகும். பத்திரங்களுக்கும் பணத்திற்குமிடையே ஏற்படும் ஊக இலாப விருப்பங்களே வட்டிவீதத்தை நிர்ணயிப்பதாகக் கெயின்சு கருதுகின்றார். வட்டிவீதமானது பலவகைச் சொத்து உடைமை களும் சமமாகும் வகையில் அமைய வேண்டும். அங்காடி வட்டிவீதம் அதிகமாக இருக்கும்பொழுது வருமானமளிக்கும் சொத்துகளை வாங்குவதன் மூலம் பொதுமக்கள் இலாபம் பெற முடியும். அதாவது, வட்டி வீதம் அதிகமாக இருக்கும் பொழுது பத்திரங்களின் விலை குறைவாக இருப்பதால், அவற்றிற்கான தேவை அதிகமாயிருக்கும். குறைவான வட்டி வீதம் நிலவும்பொழுது, பத்திரங்களின் விலை அதிகமாக இருப்பதால், அவற்றிற்கான தேவை குறைவடையும். பொது

மக்கள் அவற்றை விற்று ரொக்கமாக்க முற்படுவார்கள். இவ்வாறு வட்டிவீதம் சமநிலைப்படுத்தும் சக்தியாகச் செயல் படுகின்றது.

ஒரு நாட்டில் தொழில் நடவடிக்கைகள் துரிதகதியில் வளர்ச்சியடைந்துங்கூடப் பணத்தின் அளிப்பு மாறவில்லை யானால், பேர நோக்கங்களுக்கும், எச்சரிக்கை நோக்கங் களுக்குமான பணத்திற்கான தேவை அதிகரிக்கும். ஊக இலாபநோக்கப் பணம் குறைவடையும்; பத்திரங்கள் விற்பனை செய்யப்படும்; அவற்றின் விலை வீழ்ச்சியடையும். அதாவது, பணத்தின் அளிப்பு மாறாமலிருக்கும்பொழுது பொருளாதார வளர்ச்சி ஏற்படுமாயின், வட்டிவீதம் உயர்ந்து, பேர நடவடிக்கைகளுக்கான அதிகப் பணம் கிடைக்கச் செய்யும்.

அரசாங்கங்கள் (பத்திரங்களைத் திரும்ப வாங்குவதன் மூலம்) பணத்தின் அளிப்பை அதிகரிக்குமாயின், பத்திரங்களுக் கான தேவை அதிகரிக்கும். தேவை அதிகரிப்பதால், அவற்றின் விலையும் அதிகரிக்கும். அதனால் மெய்யான வட்டிவீதம் குறைவடையும். வட்டிவீதம் குறைவதால் பொதுமக்கள் ரொக்கமாகவே வைத்துக்கொள்ள விரும்புவார்கள். சாதாரணக் காலங்களில் வைத்திருப்பதைக்காட்டிலும் அதிகமாகவே ரொக்கமாக வைத்துக்கொள்ளப் பொதுமக்கள் முற்படு வார்கள். இதற்கு எதிர்மாறாக, அரசாங்கம் பத்திரங்களை விற்பனை செய்யுமாயின், பத்திரங்களின் விலை குறைவதால் மெய்யான வட்டிவீதம் அதிகரிக்கும். அதன் விளைவாக ரொக்கமாக வைத்திருப்பதைக்காட்டிலும் பத்திரங்களாக வைத்திருப்பதே சிறந்தது என்று பொதுமக்கள் நினைப்பார் களாதலால், அவ்வாறே செயல்படுவார்கள். மேற்காணும் வகையில், பத்திரங்களின் விலையைச் சார்ந்திருக்கும் வட்டி வீதமானது பொதுமக்களுடைய பத்திரங்களுக்கான விருப்பங் களையும், ரொக்கத்திற்கான விருப்பத்தையும் பாதிக்கின்றது.

பத்திரங்களும் உண்டியல்களும் (குறுங்கால வட்டி வீதமும் நெடுங்கால வட்டிவீதமும்) : குறுங்கால வட்டி வீதமும், நெடுங்கால வட்டிவீதமும் சமநிலையடைவதற்கும் வட்டிவீதம் உதவுகின்றது. பத்திரங்களும் உண்டியல்களும் வேறு வகைச் சொத்துகளாகும். அவற்றையும் வட்டிவீதம் சமநிலைப்படுத்துகின்றது. பத்திரங்களும், உண்டியல்களும் வருமானம் நல்கக் கூடியவை என்பதுடன் அதிக மாற்று

மதிப்புடையவையுமாகும். எனினும், பத்திரங்கள் நெடுங்காலத்திலும், உண்டியல்கள் குறுங்காலத்திலும் முதிர்ச்சியடைபவை ஆகும். அவையிரண்டின் விலையும், வட்டிவீதமும் ஒரே வகையில் மாறக்கூடியவை ஆகும். எடுத்துக்காட்டாக, உண்டியல்களின் வட்டி வீதம் அதிகரிப்பதாலும், பத்திரங்களின் வட்டிவீதம் மாறுவதில்லை எனவும் வைத்துக் கொள்வோம். அதாவது, உண்டியல்களின் விலை குறைகிறதெனவும், பத்திரங்களின் விலை மாறுவதில்லையெனவும் பொருள்படும். செல்வ உடைமையாளர்கள் உண்டியல்கள் மலிவாக இருப்பதாலும், அதிக வருமானமளிப்பதாலும் பத்திரங்களை விற்றுவிட்டு உண்டியல்களை வாங்க முற்படுவர். இதன் விளைவாக உண்டியல்களின் விலை உயரும். (அதாவது குறுங்கால வட்டிவீதம் குறையும்.) இறுதியில் குறுங்கால வட்டிவீதமும், நெடுங்கால வட்டிவீதமும் சமமாகும்; பத்திரங்களின் விலையும் சமமடையும்.

குறுங்கால வட்டிவீதமும், நெடுங்கால வட்டிவீதமும் சமமடையும் என்று குறிப்பிடப்பட்டதால், அவற்றினிடையே வேறுபாடு இருக்க முடியாது என்று கருதக் கூடாது. ஏனெனில், பொதுவாகக் கடனீவோர் குறுங்காலக் கடன்களையே அளிக்க விரும்புவர். குறுங்காலக் கடன்களில் உடனே வருமானம் கிட்டுவதும் அவை வசதியாகவும் நிச்சயமாகவும் இருப்பதே இதற்குக் காரணமாகும். ஆனால், கடன் பெறுவோர் நெடுங்காலக் கடன்களைப் பெறவே விரும்புவர். அவர்கள் தாம் அளிக்க வேண்டிய வட்டிவீதங்களில் பெரும்பாலும் மாறாதிருப்பதையே விரும்புவர். குறுங்கால வட்டிவீதம் ஏற்ற இறக்கங்கள் மிக்கதாகையாலும், நெடுங்கால வட்டிவீதம் மாறுவதில்லையாதலாலுமே கடன் பெறுவோர் நெடுங்காலக் கடன்களையே விரும்புகின்றனர்.

குறுங்காலக் கடனீவோர் பலராகவும், நெடுங்காலக் கடனை விரும்புவோர் பலராகவும் இருக்கும்பொழுது நெடுங்கால வட்டிவீதம் அதிகமாகவும், குறுங்கால வட்டிவீதம் குறைவாகவும் இருக்கும். எனினும், குறுங்காலக் கடன்களைப் பெற்று, நெடுங்காலக் கடன்களை அளிக்கும் வாணிப வங்கிகள் போன்ற வங்கித்துறை, மற்றும் நிதித்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகளின் விளைவாகக் குறுங்கால வட்டிவீதம் நெடுங்கால வட்டிவீதம் ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாடு குறைவடையும்.

வட்டிவீதமும், பத்திரங்கள், மற்றும் பங்குகளும்: செல்வ உடைமையாளர்களின் பத்திர உடைமை, பங்கு உடைமை ஆகியவற்றை வட்டிவீதம் எவ்வாறு சமநிலைப் படுத்துகின்றதென்பதை இனிக் காணலாம். பத்திரங்களும், பங்குகளும் வருமானம் அளிப்பவையே. எனினும், பங்குகள் வைத்திருப்பதில் இடர்கள் அதிகம்; பத்திரங்கள் வைத்திருப் பதில் இடர்கள் குறைவு. பத்திரங்கள் மூலம் கிட்டும் வரு மானம் நிலையானவை; பங்குகள் மூலம் கிட்டும் வருமானம் வன்மையான நெளிவுகளுக்கு உட்பட்டவை. பொதுவாகச் செல்வ உடைமையாளர்கள் பத்திரங்கள், மற்றும் பங்கு களுக்கிடையே செயல்படுவதால் அவையிரண்டின் விலை மட்டமும் ஒரே வகையில் மாறும். எடுத்துக்காட்டாக, பத்திரங்களின் விலை அதிகரிப்பதாகவும், பங்குகளின் விலை மாறவில்லையென்றும் வைத்துக்கொள்வோம். சொத்து உடைமையாளர்கள் உயர்விலைப் பத்திரங்களிலிருந்து விடு பட்டுக் குறைந்த விலையுள்ள பங்குகளை வாங்குவதற்கு முற்படுவர். இதன் விளைவாகப் பத்திரங்களின் விலை குறைந்து, பங்குகளின் விலை அதிகரித்து அவையிரண்டும் சமமாகும். எனினும், அவையிரண்டினிடையே வேறுபாடு மிருக்கக்கூடும். எடுத்துக்காட்டாக, பொருளாதாரப் பூரிப்பு நிலவும்பொழுது பங்குகள் மூலம் கிட்டும் வருமானம் அதிக மாகும். ஆனால், பத்திரங்கள் மூலம் கிட்டும் வருமானம் மாறாததாகும். எனவே, அவையிரண்டினிடையே வேறுபாடு இருப்பது தவிர்க்க முடியாததாகும்.

ஒரு குறிப்பிட்ட வகைச் சொத்தை வைத்திருப்பதென்பது பலவிதக் காரணிகளால் நிர்ணயிக்கப்படுவதாகும். செல்வ உடைமையாளர் எவ்வாறு சொத்தை வைத்துக்கொள்வதென் பதை வட்டிவீதம் நிர்ணயிக்கின்றது. எந்த அளவிற்குச் செல்வ உடைமையாளர் தம்முடைய சொத்துகளை மாற்ற முடியுமோ அதற்கேற்பப் பலவிதச் சொத்துகளிலுமிருந்து கிட்டும் வருமானமும் சமமாக இருக்கும்.

5. பணத்தின் ரொக்கநிலைக் கோட்பாடு[1]

கிரேட் பிரிட்டனில் 1959ஆம் ஆண்டில் 'பணத்துறை அமைப்பு பணியாற்றும் விதம் மீதான அறிக்கை'[2]யை ராட்கிளிஃப் கமிட்டி சமர்ப்பித்தது. இவ்வறிக்கையின் விளைவாகவும், ஐரோப்பா, மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த பணத் துறைப் பொருளாதாரிகள் சிலருடைய கட்டுரைகளின் விளைவாகவும், பணத்தின் அளிப்பில் ரொக்கமாகக்கூடிய சொத்துகளின்[3] பங்கு பற்றிய ஒரு புதுக் கருத்து உருவாகியுள்ளது. இப் புதிய கருத்து, பணத்தின் ரொக்கநிலைக் கோட்பாடு என்று குறிப்பிடப்படுகின்றது. இக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து கீழ் வருமாறு: பொருளாதார நடவடிக்கைகளும் பணத்துறை அச்சளவைகளுக்கு[4]மிடையே அடிப்படைப் பிணைப்பை ஏற்படுத்துவது ரொக்கநிலையே தவிர, வருமானமோ அல்லது பணத்தின் பரிமாணமோ (அளவோ) அல்ல என்பதாகும்.

ரொக்க நிலையும், ரொக்கமாகக்கூடிய சொத்துகளும்[5]

பணம் ஒரு பரிவர்த்தனைச் சாதனம் என்ற கருத்துடனேயே ரொக்கநிலைக் கருத்தும் தோன்றுகின்றது. பணம், பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு பரிவர்த்தனைச் சாதனமாகும். ரொக்கநிலை என்பது 'பணம் இருக்கும் நிலை' ஆகும். பணம், உண்மையில் ஒரு ரொக்கச் சாதனமே ஆகும்.

பணம், மிக எளிதில் காலதாமதமின்றி, நட்டமின்றிப் பயன்படுத்தப்படக்கூடிய சொத்தாகும். எல்லா வகைச் சொத்துகளிலும் எளிதில் ரொக்கமாகக்கூடியது பணம் ஒன்றே! இக் கருத்தை ஆராயும்பொழுது பணத்தின் அளிப்புப் பற்றியும்

1 The Liquidity Theory of Money
2 Report on the Working of the Monetary System
3 Liquid Assets
4 Monetary co-ordinates
5 Liquidity and Liquid Assets

சிறிது விளக்கமாகவே ஆராய வேண்டியுள்ளது. பொதுவாகப் பணத்தின் அளிப்பு என்பது புழக்கத்தில் இருக்கும் பணத்தையும், வங்கிகள் வசம் உள்ள தேவை வைப்புகளையுமே குறிப்பிடும். ஆயினும், இவ் விளக்கத்தைப் பணவியல் பொருளாதாரிகள் அனைவருமே ஏற்றுக்கொள்வதில்லை. பணத்தின் அளிப்பில் எவ்வெவற்றைச் சேர்ப்பது, எவ்வெவற்றை ஒதுக்குவது என்பது பற்றி அவர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது. பணத்தின் அளிப்பைக் கணக்கிடும்பொழுது வங்கிகளின் தேவை வைப்புகளுடன் கால (தவணை) வைப்புகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். வேறு சிலர், அவ்வாறு கால வைப்புகளைச் சேர்க்கும்பொழுது, 'பணம் போன்ற' கருவிகளை அல்லது 'நெருங்கிய பணத்தை'[1]யும், வட்டிவீதமுள்ள சொத்துகளையும் ஒதுக்குவது முறையல்லவென்று குறிப்பிடுகின்றனர்.

பண அளிப்புக் கருத்து முழுமை பெற வேண்டுமாயின், பணத்திற்கும் நெருங்கிய பணத்திற்குமிடையேயுள்ள வேறுபாடுகள் வரையறுக்கப்பட வேண்டும். பணம் என்னும் சொல்லிற்கு அளிக்கப்படும் இலக்கணத்திற்கு ஏற்பவே, பணத்திற்கும் நெருங்கிய பணத்திற்குமிடையேயான வேறுபாடுகள் அமையும். பணவாக்கக் கைக்கோளின் நோக்கில் பணம் ஒரு செலுத்துச்சாதனமாகும். பணம் ஒரு செலுத்துச்சாதனமாகக் கருதப்படின், செலுத்துச்சாதனங்களான செலாவணிகளும், தேவை வைப்புகளும் பணத்தின் அளிப்பில் சேர்க்கப்படுதல் வேண்டும். ஆதலால், ரொக்கமாகக்கூடிய சொத்துகள் யாவும் நெருங்கிய பணம் (அல்லது பணம் போன்றவை) ஆகும். அதாவது, நெருங்கிய பணத்தில் கால வைப்புகள், பரிவர்த்தனை உண்டிகள், வங்கிகளின் ஏற்புகள், கடன் பத்திரங்கள், கருவூல உண்டியல்கள் போன்றவை அடங்கும். மேலும், உடனே பெறக்கூடிய ஆயுள் காப்பீட்டுத் தொகை, சேமிப்பு, மற்றும் கடன் நிறுவனங்களில் இருக்கும் (விரைவில்) திரும்பி வாங்கக்கூடிய பங்குகள், பயனியர் காசோலைகள், கட்டடக் கூட்டமைப்பில் உள்ள வைப்புகள், அஞ்சலகச் சேமிப்புகள்,'யூனிட் ட்ரஸ்டில்' உள்ள முதலீடுகள், மற்றுமுள்ள கடன் கருவிகள் யாவும் நெருங்கிய பணத்தில் அடங்கும். அதாவது, பணத்திற்குப் பதிலியாகப் பயன்படக் கூடிய—ஆனால் செலுத்துச்சாதனமாகப் பயன்படாத—ரொக்கமாகக்கூடிய சொத்துகள் யாவுமே நெருங்கிய பணம்

[1] Near money

எனப்படும். நெருங்கிய பணச் சொத்துகளின் விலைகள் ஏறக்குறைய நிலையானவையாதலாலும், மக்கள் விரும்பும் பொழுது எளிதில் ரொக்கமாக்கப்படக்கூடியவையாதலாலும் அவை ரொக்கமாகக் கருதப்படுகின்றன. எனவே, எவ்வளவு எளிதில் ஒரு சொத்தை ரொக்கமாக்க முடியுமோ, அதற்கு ஏற்ப அச் சொத்து பணத்திற்கு நெருங்கிய பதிலியாகக் கருதப்படுகின்றது. மேற்காணும் அடிப்படையில் காகிதப்பணம், நாணயங்கள், தேவை வைப்புகள் ஆகியவை முதல்தர ரொக்க நிலை கொண்டவை எனவும், கால வைப்புகள், சேமிப்பு வங்கி வைப்புகள், கருவூல உண்டியல்கள், அரசாங்கச் சேமிப்புப் பத்திரங்கள், தேசீய சேமிப்புச் சான்றிதழ்கள் போன்றவை இரண்டாந்தர ரொக்கநிலை கொண்டவை எனவும் குறிப்பிடலாம். மூன்றாந்தர ரொக்கநிலையில் தவணைக் கொள் முறை நிறுவனங்களுக்கு வரவேண்டிய தவணைகள், கட்டடங்கள் கட்டும் கூட்டமைப்பிற்கு வரவேண்டிய வரவினங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். எனினும், எளிதில் ரொக்கமாகக்கூடிய சொத்துகளுக்கும், ஓரளவே ரொக்கமாகக்கூடிய சொத்துகளுக்குமிடையே தெளிவான வேறுபாடு எதுவுமில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் யாதெனில், 'ரொக்கநிலை' என்னும் சொல்லே தெளிவற்றும் குழப்பமான அர்த்தத்துடனும் காணப்படுவதேயாகும். ஆகவே, நெருங்கிய பணச்சொத்துகளுக்கும் ரொக்கமாகக்கூடிய சொத்துகளுக்குமிடையே கூறப்படும் வித்தியாசம் எதுவும் தெளிவற்றதாகவே உள்ளது.

ரொக்கமாகக்கூடிய சொத்துகள் தோன்றும் விதம் : பொருளாதார அமைப்பின் பல்வேறு அங்கங்கள் கடனை உற்பத்தி செய்யும் திறன் வாய்ந்தவையாகும். கடனை உற்பத்தி செய்யும் அமைப்புகளே ரொக்கமாகக்கூடிய சொத்துகளை உற்பத்தி செய்யும் முக்கியமான மூலங்கள் ஆகும். தற்காலப் பணச் சந்தைகளும் மூலதனச் சந்தைகளும் ரொக்கமாகக்கூடிய சொத்துகளை உற்பத்தி செய்வதில் தனிப்பட்ட இடத்தைப் பெறுகின்றன. முதல்தரமான ரொக்கமாகக்கூடிய சொத்துகளான செலாவணியையும் தேவை வைப்புகளையும் வாணிப வங்கிகளே உற்பத்தி செய்கின்றன. இரண்டாந்தரமான ரொக்கமாகக்கூடிய சொத்துகளான கால வைப்புகள், சேமிப்பு வைப்புகள் போன்றவற்றையும் அவையே உற்பத்தி செய்கின்றன. எனினும், ரொக்கமாகக் கூடிய சொத்துகளில் கணிசமானப் பகுதி வங்கித்துறைக்கு வெளியேயும் உற்பத்தி செய்யப்படுகின்றது. தற்காலத்தில் அரசாங்கமே, ரொக்கமாகக்கூடிய சொத்துகளில் மிக முக்கிய

மானதாகிய கருவூல உண்டியல்களை வெளியிடுகின்றது. மேலும், காப்பீட்டு நிறுவனங்கள், சேமிப்பு வங்கிகள், தவணைக் கொள்முறை நிதிக் கம்பெனிகள், கட்டடங்கள் கட்டும் கூட்டமைப்புகள், நில அடைமான வங்கிகள் போன்ற வங்கித் துறைக்கு அப்பாற்பட்ட நிறுவனங்களும் ரொக்கமாகக் கூடிய சொத்துகளை உற்பத்தி செய்கின்றன. இத்தகைய இடைநிலை நிதி நிறுவனங்கள்[1] தனி நபர்களின் சேமிப்பையும், வாணிப நிறுவனங்கள் மற்றும் பண்ணைகளின் பணத்தேவையையும் இணைக்கும் பாலங்களாக விளங்குகின்றன. அவற்றின் முக்கியமான பணி, கடன் பெறுவோரிடமிருந்து முதனிலைப் பத்திரங்களை வாங்கிக்கொண்டு கடன் கொடுப்போருக்கு மறைமுகப் பத்திரங்களை அளிப்பதேயாகும். மேலும், அவை பத்திரங்களின்மீது கடன் அளிப்பதால், பத்திரங்களின் ரொக்க நிலையும் அதிகரிக்கின்றது. அதாவது, இடைநிலை நிதி நிறுவனங்கள் பொதுமக்களுக்குத் தேவையான வசதிகள், பிணைகள், வட்டி, வருமானம் ஆகியவற்றை அளிப்பதன் மூலம் சேமிப்பை வளர்க்கின்றன. அவ்வாறு சேமிக்கப்படும் தொகை ரொக்கமாக முடக்கப்படுவதையும் அவை தடுக்கின்றன. அவை நெருங்கிய பணத்தை அளிப்பதன் மூலம் ரொக்கத்திற்கான தேவையையும் குறைக்கின்றன. அவற்றால் அளிக்கப்படும் நெருங்கிய பணம், செலாவணி மற்றும் தேவை வைப்புகளுக்குச் சிறந்த பதிலியாக விளங்குவதால், நடைமுறை பேரங்களுக்கு ரொக்கம் கிடைப்பதற்கும் அவையே காரணமாகும். மேலும், அவற்றின் சொத்துகளால் நாட்டின் ரொக்கநிலை அதிகரிப்பதால், மக்களுடைய வாங்குந்திறனில் ஏற்படும் அதிகரிப்பு, நாட்டின் கூட்டு மொத்தச் செலவிலும் முக்கிய விளைவுகளை ஏற்படுத்துகின்றது. ரொக்கநிலையை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் நிதித்துறைப் பணச் செலவின் வேகத்தை அதிகரிப்பதால், பொருளாதார நடவடிக்கைகளையும் மாற்றியமைக்கின்றது.

நெருங்கிய பணமும் பணத்துறை நிர்வாகமும்

மைய வங்கி, பணவாக்கக் கைக்கோளின் மூலம் நாட்டின் செலவுப்போக்கை மாற்ற வேண்டி, பணத்தின் அளவை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளையும் மாற்றியமைக்கின்றது. மைய வங்கி கடன் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கடன் அளவுகளை (தேவை வைப்புகளை) மாற்றியமைக்க முடியுமாதலால், பணத்தின் அளிப்பையும் மாற்றியமைக்க முடியும். தற்

[1] Financial intermediaries

காலத்தில் பணவியல் பொருளாதாரிகள் பணவாக்க நடவடிக்கைகளின் குறிக்கோள், பண அளிப்பிற்குமதிகமாக ரொக்கநிலையின் அளவை அதிகரிப்பதாகவே இருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர். அவர்கள் இவ்வாறு கருதுவதற்குக் காரணம், தற்காலத்தில் பொதுமக்களிடம் இருக்கும் செலாவணி, தேவை வைப்பு ஆகியவற்றோடு நெருங்கிய பணமும் சேர்ந்து நாட்டின் கூட்டு மொத்தச் செலவை நிர்ணயிப்பதாக அவர்கள் கருதுவதேயாகும். நெருங்கிய பணச் சொத்துகள் பணத்திற்கு நெருக்கமான பதிலிகள் ஆதலால், அவற்றின் அதிகரிப்பு, பொதுமக்களின் செலவிடும் போக்கினை அதிகமாக்குகின்றது. ஏனெனில், பணத்தை நாம் மதிப்பின் வைப்பாகக் கருதும்பொழுது, நெருங்கிய பணச் சொத்துகள் பணத்திற்கு நெருக்கமான பதிலிகளாகவும், செலுத்துச்சாதனமாகக் கருதும்பொழுது அவை பணத்திற்கு உதவியானவையாகவும் பயன்படுகின்றன. இதனால் வருமானத்திற்கும் செலவிற்குமிடையேயான பிணைப்பு எளிமையாக்கப்படுகின்றது. எவ்வாறெனில், வருமானத்தில் ஒரு பகுதி நெருங்கிய பணச் சொத்துகளாக மாற்றப்படும். அல்லது வருமானத்தைக்காட்டிலும் செலவு அதிகமாகும்பொழுது, நெருங்கிய பணச் சொத்துகளைக் குறைப்பதன் (அவற்றை ரொக்கமாக்குவதன்) மூலம் உபரிச் செலவுகள் ஈடு செய்யப் படலாம். நெருங்கிய பணச் சொத்துகள் குறையும்பொழுது, பண இருப்பின் புரள்வுகள் அதிகமாவதால், செலவின் அளவும் அதிகமாகும். மேலும், தற்காலத்தில் பணவாக்கப் பொறுப்பினரின் அதிகார வரம்பிற்கு உட்படாத நிதி நிறுவனங்கள் வளர்ச்சி பெற்றிருப்பதால், மைய வங்கியின் பணவாக்கக் கைக்கோளின் செயல் திறமும் குறைந்துவிட்டது. எனவே, வங்கித் துறையின்பாற்பட்ட நிதியமைப்புகளையும், வங்கித் துறையின்பாற்படாத நிதியமைப்புகளையும் திறமையாகக் கட்டுப்படுத்தி நாட்டின் ரொக்க நிலையை ஒழுங்கு படுத்தும் வகையில் பணவாக்கக் கைக்கோளும் முயற்சிகளும் மாற்றியமைக்கப்படுவது அவசியமாகின்றது. அதாவது பணவாக்கக் கைக்கோள் இயன்றவரைக்கும் பரந்த அடிப்படையிலும், பிற முக்கிய வழிமுறைகளின் உதவியுடனும் அமைக்கப்படுவது அவசியமாகின்றது.

இவ்விடத்தில் ரொக்கநிலை அணுகுமுறை தொடர்பான ராட்கிளிஃப்-சேயர்ஸ் ஆய்வுரைகளையும்[1], கர்லி-ஷா ஆய்வுரைகளையும்[2] கருதுவது அவசியமாகின்றது.

[1] Radcliffe-Sayers Thesis [2] Gurley-Shaw Thesis

ராட்கிளிஃப்-சேயர்ஸ் முடிவுகள் : பணக் கோட்பாட்டின் ரொக்கநிலை அணுகு முறையை அளித்தவர் பேராசிரியர் சேயர்ஸ் ஆவார். அதனை நடைமுறையில் ராட்கிளிஃப் கமிட்டி வலியுறுத்தியது.

ராட்கிளிஃப்-சேயர்ஸ் ஆய்வு 'பணவாக்க நடவடிக்கையின் முக்கிய நோக்கம் பண அளிப்பு அன்று' என்னும் கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. பொதுமக்களின் செலவிடும் முடிவுகளை மாற்றியமைப்பதன் மூலம் கூட்டு மொத்தத் தேவையின் நிலையை மாற்றியமைப்பதே பணவாக்க நடவடிக்கையின் உடனடி நோக்கமாகும் என்று ராட்கிளிஃப் கமிட்டி வலியுறுத்தியது. மக்களின் செலவிடும் முடிவுகளை மாற்றியமைப்பதில் பணத்தின் அளிப்பும் முக்கியப் பொறுப் பேற்கின்றது. எனினும், அம் முடிவுகளை ரொக்க இருப்புகள் மட்டுமே நிர்ணயிப்பதில்லை. ஏனெனில், அத்தகைய முடிவுகளை நிர்ணயிப்பதில் ரொக்கமாகக்கூடிய சொத்துகளை விற்பது, கடன் வாங்குவது போன்ற நிதியெழுப்பக்கூடிய வாய்ப்புகளும் பெரும் பங்கை ஏற்கின்றன. இதனைச் செல விடுவோருடைய சொத்துகளின் ரொக்கநிலையும், நிதி நிறு வனங்களின் ரொக்க நிலவரங்களும் வரையறுக்கின்றன. எனவே, பண்டங்கள், மற்றும் பணிகளின்மீது செலவிடுவதாக மேற்கொள்ளப்படும் முடிவுகள்—மொத்தத் தேவை மட்டத்தை நிர்ணயிக்கக்கூடிய முடிவுகள்—செலவிடுவோருடைய ரொக்க நிலையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவையாகும்.

ஈண்டு ரொக்கநிலை என்பது நாட்டின் பொருளாதாரத்தின் பொது ரொக்கநிலையைக் குறிக்கும். நாட்டின் ரொக்க நிலவரம் என்பது நாட்டில் நிலவும் தனி நபர்கள், நிதி சார்பற்ற வாணிப நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், அரசாங்கம் ஆகிய வற்றினுடைய ரொக்கநிலைகளின் கூடுதல் ஆகும்.

பண அளிப்பைக்காட்டிலும் பொருளாதார அமைப்பின் பொதுவான ரொக்கநிலையே செலவிடுவதற்கான முடிவுகளை நிர்ணயிக்கின்றது. நாட்டின் ரொக்கநிலையில் பணத்தின் அளிப்பு ஒரு பகுதியே ஆகும். அதாவது செலவுகளை வரை யறுப்பவை. பொதுமக்கள் தாம் பெறக்கூடும் என்று கருதும் பணத்தின் அளவே தவிர, பணத்தின் அளிப்பு அன்று. வட்டி வீதமானது நிதி நிறுவனங்களின் ரொக்கநிலையை மாற்றி யமைப்பதன் மூலம் நாட்டின் ரொக்க நிலையையும் மாற்றி யமைப்பதால், ஈண்டு வட்டிவீதமும் முக்கியத்துவம் பெறு

கின்றது. இவ்வாறு கருதுவதன் மூலம் பண அளிப்பின் முக்கியத்துவத்தை ராட்கிளிஃப் கமிட்டி குறைத்து மதிப்பிட வில்லை. ஆனால் வட்டிவீதக் கொள்கை அளவிற்கே அதன் கட்டுப்படுத்தும் திறன் அமைவதாகவே கமிட்டி கருதுகின்றது. வட்டிவீத அமைப்பையும், மட்டத்தையும் மாற்றுவதன் மூலம் நிதி நிறுவனங்களை மறைமுகமாகக் கட்டுப்படுத்தலாம் என்றே கமிட்டி நம்பியது. அதாவது, வட்டிவீதத்தை அதிகரிப் பதன் மூலம் நிதி நிறுவனங்களின் கடனளிக்கும் நடவடிக்கை களைத் தொய்வுறச் செய்யலாம் என்றே கமிட்டி கருதியது. அதாவது, வட்டிவீத அதிகரிப்பு மறைமுகமாகச் செலவு களைக் குறைக்கக்கூடியதாகும். அதாவது, பணவாக்க நடவடிக்கைகளில் இருவித கொள்கைச் சாதனங்களை ராட்கிளிஃப்-சேயர்ஸ் அணுகு முறை குறிப்பிடுகின்றது. அவை: (1) பரந்த அளவில் நிதி நிறுவனங்களின்மீது ரொக்கநிலைக் கட்டுப்பாடுகளை விதிப்பது; (2) வட்டிவீத மாற்றங்களின் ரொக்கநிலை விளைவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் கட்டுப்படுத்தும் திறனைப் பெறுவது. இவை இரண்டில் முதல் ஆலோசனையைச் செயல்படுத்துவது கடினமாகும். ஏனெனில், வாணிப வங்கிகள் தவிர்த்த மற்ற நிதி நிறுவனங்கள் யாவும் மைய வங்கிகளின் அதிகார வரம்பிற்கு அப்பால் உள்ளன. அவற்றை மைய வங்கியின் வரம்பிற்குள் கொண்டுவர முடியு மெனினும், வரம்பிற்கு அப்பாற்பட்ட புதிய நிதி நிறுவனங்கள் தோன்றுவதைத் தவிர்க்கவியலாது. வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மைய வங்கி புதுப் புது வழிமுறைகளை மேற்கொள்ளும்பொழுதே, அதன் கட்டுப்பாட்டின்கீழ் அடங்காத புதுப்புது நிறுவனங்கள் தொடர்ந்து தோன்றிக்கொண்டேயிருக்கின்றன: முடிவேயற்ற இப் பந்தயம் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றது. எனவே, சாதாரணக் காலங்களில் அரசிறைக் கைக்கோளின் உதவியானதாகப் பணவாக்கக் கைக்கோள் அமைவதையும், அவசரக் காலங்களில் அதைக் கடுமையாகக் கடைப்பிடிப்ப தையும் தவிர வேறு வழி எதுவும் ராட்கிளிஃப்-சேயர்ஸ் அணுகு முறைக்கு இல்லை எனலாம். ஆதலால், வங்கி யில்லாத நிதி நிறுவனங்களின் விவரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பாதுகாக்கப்படுதல் வேண்டுமெனவும், மைய வங்கியின் அதிகாரம் தேவையான அளவிற்கு விஸ்தரிக்கப்பட வேண்டு மெனவும் ராட்கிளிஃப் கமிட்டி பரிந்துரைத்துள்ளது.

கர்லி-ஷா கருத்து: பலவகை நிதி நிறுவனங்களும் வளர்ச்சியடைந்து, நிதித்துறையில் காணப்படும் ரொக்கமாகக்

கூடிய சொத்துகளின் வகைகளும் வளர்ச்சியடையும்பொழுது தான் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் என்று கர்லியும், ஷாவும் கருதுகின்றனர். அவர்கள், வங்கிகள் மற்றும் வங்கி களல்லாத நிதி நிறுவனங்களின் முக்கியப் பணி—முக்கியமான பணி என்னவென்றால்—சொத்து வைத்திருப்போர்கள் முதனி லைப் பத்திரங்களை அதிக அளவில் வைத்திருக்கும் வகையில் உதவுவதே என்று கருதுகின்றனர். அதாவது, இடைநிலை நிதித்துறை வளர்ச்சியின் விளைவாக நிதியமைப்பானது பரவ லானதாகவும், எளிதானதாகவும் மாறுகின்றது. அதாவது, நாட்டின் நிதியமைப்பில் இடைநிலை நிதி நிறுவனங்களின் பங்கை உணரும் அளவிற்குப் பணவாக்கக் கைக்கோளும், கோட்பாடுகளும் அமைவது அவசியமாகும். கர்லியும், ஷாவும் நாட்டின் நிதியமைப்பு முழுமையும் கருதும்பொழுது வங்கி யில்லாத நிதி நிறுவனங்களின் பங்கை உணர்ந்து ஏற்றால்தான் பணவாக்கக் கைக்கோள் யதார்த்தமானதாகவும் பரந்த அளவிலும் அமையுமென்று கருதுகின்றனர். இதன் உட் பொருள் என்னவென்றால், ரொக்கம் மற்றும் தேவை வைப்பு களின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பண அளிப் பைக் கட்டுப்படுத்த முயலும் குறுகிய நோக்கமுடைய பண வாக்கக் கைக்கோள் போதிய திறனற்றதாகும். ஒரு பரந்த அடிப்படையிலான பணவாக்கக் கைக்கோள் என்பது வங்கி யில்லாத இடைநிலை நிறுவனங்களையும் கட்டுப்படுத்தும் வகையில் மைய வங்கியின் அதிகார வரம்புகளை அதிகரிப்ப தாக அமைய வேண்டும். இக் கருத்து தோன்றுவதற்கு முன்னர் வாணிப வங்கிகள் கடன் தரும் நிதியை[1] உற்பத்தி செய்பவை என்றும், இடைநிலை நிதி நிறுவனங்கள் கடன் தரும் நிதியைப் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் தரகர்கள் என்றும் வேறுபாடு கூறப்பட்டு வந்தது. இக் கருத்து தவறானது என்று கர்லியும், ஷாவும் கருதினர். மேலும், எல்லா வகை நிதி நிறுவனங்களுமே கடன் தரும் நிதியை உற்பத்தி செய்ய முடியும் என்றும் அவர்கள் கருதுகின்றனர். எனவே, வங்கியில்லாத நிதி நிறுவனங்களையும் கட்டுப் படுத்தும் வகையில் மைய வங்கியின் அதிகார வரம்புகள் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் கருதுகின்றனர். ஆகவே, வங்கியில்லாத நிதி நிறுவனங்களின்மீது குறைந்த அளவு காப்பு விகிதக் கட்டுப்பாட்டைப் பரிசோதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். வங்கியில்லாத நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு மைய வங்கியின்

[1] **Loanable Fund**

கடன் கட்டுப்பாடு நடவடிக்கைகளை விஸ்தரிப்பதன்மூலம் பணவாக்கக் கைக்கோளைப் பரந்த அடிப்படையில் மதிப்புக் குரியதாக மாற்றியமைக்கக் கர்லியும், ஷாவும் கோருகின்றனர். ஆதலால், இவர்களுடைய கருத்து ராட்கிளிஃப்-சேயர்ஸ் கருத்தினைக்காட்டிலும் சிறந்ததாகும். ராட்கிளிஃப்-சேயர்ஸின் ஆய்வுரையும், கர்லி–ஷா ஆய்வுரையும் 'பணக் கோட்பாட்டின் ரொக்கநிலைக் கருத்து' வளர்வதற்கு உதவியுள்ளன. அவர்கள் அனைவரும் முதலீடு செய்வதிலும், செலவு செய்வதிலும், புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவைக்காட்டிலும் பொது மக்களின் ரொக்கநிலையே முக்கிய இடத்தைப் பெறுவதாகக் குறிப்பிடுகின்றனர். பேராசிரியர் ஷ்மால்டர்ஸும்[1] ரொக்க நிலைக் கட்டுப்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றார்.

மேற்காணும் கருத்துப்படி, பணத்தின் அளவைக் கட்டுப்படுத்துவதைக்காட்டிலும், ரொக்கநிலையில் கட்டுப்பாடுகளை மேற்கொள்வதே பயன்தரும் முறையாகும். இதற்கேற்ப மைய வங்கியின் கடன் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் தீவிரம் அமைய வேண்டும்; பணத்தின் அளவை மட்டும் கட்டுப்படுத்தினால் போதாது.

ரொக்கநிலைக் கட்டுப்பாடுகளைக் கட்டுப்பாடு உடையதாக ஆக்குவதன் மூலம் பணவாக்கக் கொள்கையின் மதிப்பையும், தரத்தையும் பணக் கோட்பாடு பற்றிய ரொக்கநிலை ஆய்வுமுறை உயர்த்திவிடுகின்றது.

[1] Prof. Schmolders

6. பணத்தின் மதிப்பு-குறியீட்டு எண்கள்

குறியீட்டு எண்கள்[1]

பணத்தின் மதிப்பு அதன் வாங்குந்திறனைப் பொறுத்த தாகும். பணத்தின் வாங்குந்திறன் அதிகமாக இருப்பின் பணத்தின் மதிப்பு அதிகம் எனவும், வாங்குந்திறன் குறைவாக இருப்பின் பணத்தின் மதிப்பு குறைவு எனவும் கொள்ளப்படும். பணத்தின் வாங்குந்திறன் பொருள்களின் விலை மட்டத்தால் நிர்ணயிக்கப்படுகின்றது. பொருள்களின் விலைமட்டம் குறைவாக இருப்பின், பணத்தின் வாங்குந்திறன்—பணத்தின் மதிப்பு—அதிகமாகவும், விலைமட்டம் அதிகமாக இருப்பின் பணத்தின் வாங்குந்திறன்—பணத்தின் மதிப்பு—குறைவாகவும் அமையும். எடுத்துக்காட்டாக, ஒரு கிலோ பருப்பின் விலை 50 காசுகளாக இருப்பின், ஒரு ரூபாயைக்கொண்டு 2 கிலோ பருப்பு வாங்கலாம். ஒரு கிலோ ஒரு ரூபாயாக விலை உயர்ந் தால், ஒரு ரூபாயைக்கொண்டு ஒரு கிலோ மட்டுமே வாங்க முடியும். இவ்வெடுத்துக்காட்டிலிருந்து விலைமட்டத்திற்கு ஏற்பப் பணத்தின் மதிப்பு வேறுபடுவது தெளிவாகும். விலை மட்டம் குறைவாக இருப்பின் பணத்தின் வாங்குந்திறன் உயர்ந்து இருப்பதாலும், விலைமட்டம் உயர்வாக இருப்பின் பணத்தின் வாங்குந்திறன் குறைவாக அமைவதாலும், விலை மட்டத்திற்கு ஏற்பவே பணத்தின் மதிப்பு நிர்ணயிக்கப்படுவ தாகக் கொள்ளலாம்.

விலைமட்ட மாறுதல்களுக்கு நேர்மாறாகப் பணத்தின் மதிப்பு மாறுதலடைகின்றது. விலைமட்டம் உயர்ந்தால் பணத்தின் மதிப்பு குறையும். விலைமட்டம் குறைந்தால் பணத்தின் மதிப்பு உயரும். பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களை நேரிடையாகக் கணக்கிடுவது இயலாது. பணத்தின் மதிப்பையும் நேரிடையாக மதிப்பிடுவது இயலாது; ஆனால், விலைமட்டங்களைக் கொண்டு மறைமுகமாக மதிப்பிட முடியும். எனவே, பணத்தின் மதிப்பைக் கணக்கிடும்

[1] Index Numbers

பொழுது, விலைமட்டத்தை ஒப்பிடுவது இன்றியமையாத தாகின்றது. உலகில் பல்லாயிரக்கணக்கான பொருள்கள் புழக்கத்தில் இருப்பதால், ஒவ்வொரு பொருளின் விலை யையும் கணக்கிட்டு, அதன்மூலம் பணத்தின் மதிப்பைக் கணக்கிட முயல்வது தவறாக முடியும். இத் தொல்லையைத் தவிர்ப்பதற்கு வல்லுநர்கள் குறியீட்டு எண்களைப் பயன் படுத்துகின்றனர்.

விலைக் குறியீட்டு எண் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தை அடிப்படையாகக்கொண்டு கணக்கிடப்படும் பல்வேறு பொருள்களின் விலைகளின் சராசரியாகும்.

ஒரு குறிப்பிட்ட ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, அவ்வாண்டில் நிலவிய பல்வேறு பொருள்களின் விலைகளின் சராசரியே குறியீட்டு எண்கள் ஆகும். அடிப் படை ஆண்டின் குறியீட்டு எண்ணுடன், வேறு ஆண்டின் அல்லது மாதத்தின் குறியீட்டு எண்ணை ஒப்பிடுவதன் மூலம் விலையிலேற்படும் மாற்றத்தை மதிப்பிட முடியும். குறியீட்டு எண்கள் தயாரிக்கப்படும்பொழுது பல்லாயிரக்கணக்கான பொருள்களின் விலைப்போக்கில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கக்கூடிய சில முக்கியமான பொருள்களின் விலைகள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

குறியீட்டு எண்கள் இரு வேறு காலங்களுக்கு இடையில் விலைமட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை ஏறத்தாழச் சரியாக மதிப்பிட உதவும் சாதனமேயாகும். ஆகவே, பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பிட மட்டுமே குறியீட்டு எண்கள் பயன்படும். குறியீட்டு எண்களைப் பயன்படுத்து வதன் மூலம் பணத்தின் மதிப்பை நிர்ணயிக்க முடியாது. ஆனால் இருவேறு காலங்களுக்கிடையில் பணத்தின் மதிப்பு எவ்வளவு மாற்றமடைந்துள்ளது என்பதை மட்டுமே நிர்ண யிக்க முடியும்.

குறியீட்டு எண்கள் பொதுநோக்குக் குறியீட்டு எண், மொத்த விலைக் குறியீட்டு எண், சில்லறை விலைக் குறியீட்டு எண் எனப் பல வகைப்படும்.

குறியீட்டெண்கள் அமைக்கும் விதம்

குறியீட்டு எண்களைப் பயன்படுத்துவதன் மூலம் பணத் தின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் அளவிடப்படுவதால்,

குறியீட்டு எண்கள் அமைக்கப்படும்போது விழிப்புடனும், திறமையுடனும் அமைக்கப்படுதல் வேண்டும். தேவையான அளவில் விவரங்களும், நடுநிலைப் போக்கும், நேர்மை யான மனப்பாங்கும் இருந்தால்தான் குறியீட்டு எண்கள் முறையாக அமைக்கப்பட முடியும். குறியீட்டு எண்களை அமைக்க முயலும்பொழுது, பின்வரும் விவரங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்:

குறியீட்டு எண் அமைக்க முயலும்பொழுது எந்த நோக்கத் திற்காகக் குறியீட்டு எண் தேர்ந்தெடுக்க வேண்டும்? அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் அதற்கேற்ற பொருள் களையும் அவற்றின் விலை விவரத்தையும் சேகரிக்க முடியும். எடுத்துக்காட்டாக, தொழிலாளர் வாழ்க்கைத்தரத்தை மதிப்பிட விரும்பினால் தொழிலாளர் வாழ்க்கைத்தரக் குறியீட்டு எண் அமைக்கப்படுதல் வேண்டும். மேலும், தொழிலாளர்களால் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் பொருள்கள் மற்றும் பணி களுக்குத் தொழிலாளர்கள் வாழும் பகுதியில் நிலவும் விலை மட்டங்கள் சேகரிக்கப்படுதல் வேண்டும்.

குறியீட்டு எண் அமைக்கப்படும்போது எத்தகைய பொருள்களின் விலைகளைச் சேர்க்க வேண்டும் என்பதையும் முன்னதாகவே முடிவு செய்துகொள்வது அவசியமாகும். பல்லாயிரக்கணக்கான பொருள்கள் புழக்கத்தில் இருப்பதால், அத்தனைப் பொருள்களின் விலையையும் சேர்த்துக் குறியீட்டு எண் அமைப்பது இயலாததாகும். ஆனால் நமது நோக்கத் திற்கு ஏற்ப முக்கியமான பொருள்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் விலையை அடிப்படையாகக்கொண்டு குறியீட்டு எண் அமைப்பது எளிதாகும். பணத்தின் மதிப்பை அள வெடுப்பதற்குக் குறியீட்டு எண் அமைக்கப்படுமானால், கூடிய வரையில் அதிக அளவுப் பொருள்களின் விலைகளைச் சேர்த்துக் குறியீட்டு எண் அமைப்பது அவசியமாகும். ஆனால், தனி நபர் ஒருவரைப் பொருத்தவரையில் பணத்தின் மதிப்பை அளவிட வேண்டுமாயின், அவர் பயன்படுத்தும் பொருள்களின் விலைகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு குறியீட்டு எண் அமைக்கப்பட வேண்டும். குறி யீட்டு எண் அமைக்கப்படும்பொழுது எத்தகைய பொருள் களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது, எந்த நோக்கத் திற்காக் குறியீட்டு எண் அமைக்கப்படுகின்றது என்பதைப் பொறுத்ததாகும்.

குறியீட்டு எண் அமைப்பதற்காகச் சேகரிக்கப்படும் புள்ளிவிவரங்கள் துல்லியமானவையாகவும், ஒப்பிடக்கூடியவையாகவும், விலைமட்டத்தின் போக்கைப் பிரதிபலிக்கக் கூடியவையாகவும், போதுமானவையாகவும் இருப்பது இன்றியமையாததாகும். புள்ளிவிவரங்கள் துல்லியமானவையாக இருந்தால்தான், அவற்றைக் கொண்டு உருவாக்கப்படும் குறியீட்டு எண்ணும் துல்லியமானதாக அமையும். ஒரே வகைப் பொருள் அல்லது பணியின் பல்வேறு விலை விவரங்கள் கிடைத்தால்தான் அவற்றை ஒப்பிட முடியும். பல்லாயிரக் கணக்கான பொருள்களின் விலைப்போக்கைப் பிரதிபலிக்கும் வகையில் புள்ளி விவரங்கள் இருந்தால்தான், குறியீட்டு எண்ணின் நோக்கம் நிறைவேறும்.

போதுமான புள்ளி விவரங்களைக்கொண்டு அமைக்கப் படும் குறியீட்டு எண்ணே முழுமைப் பெற்றதாக அமையும். எடுத்துக்காட்டாக, விவசாயப் பொருள்களின் விலைக் குறியீட்டு எண் அமைப்பதற்குக் கோதுமையின் விலை விவரம் மட்டுமே போதுமானதன்று. அரிசி, சோளம், கேழ் வரகு, பருப்பு போன்ற மற்றப் பொருள்களின் விலை விவரமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவது அவசியமாகும். பொதுவாக, முறையான அங்காடியில் விற்பனை செய்யப்படும் பொருள்களின் விலை விவரங்களைப் பெறுவது எளிதாகும். ஆனால் பண்டமாற்று முறையில் விற்பனை செய்யப்படும் பொருள்கள், பேரளவு பேரத்திற்குப்பின் விற்பனை செய்யப் படும் பொருள்கள் ஆகியவற்றின் துல்லியமான விலை விவரங் களைப் பெறுவது எளிதன்று. அடிப்படை ஆண்டின் குறியீட்டு எண்ணுடன் மற்றக் காலங்களின் குறியீட்டெண்களை ஒப்பிடுவதன் மூலமே பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றங் களை உணர்கின்றோம். எனவே, குறியீட்டு எண்ணை அமைப்பதற்காக நாம் கொள்ளும் அடிப்படை ஆண்டு அல்லது காலத்தைத் தேர்ந்தெடுக்கும்பொழுது நாம் திறமையுடனும், விழிப்புடனும் தேர்ந்தெடுக்க வேண்டும். பொதுவாக, அடிப்படைக் காலமாகக் கொள்ளப்படும் ஆண்டு சாதாரணமான ஆனால் முக்கியமான ஆண்டாக இருப்பதே சிறந்ததாகும். போர், வெள்ளம், வறட்சி, புரட்சி போன்ற இயற்கையான போக்கிற்கு மாறுபட்ட நிகழ்ச்சிகளைக் கொண்ட ஆண்டுகளை அடிப்படை ஆண்டாகக் கொள்வது கூடாது. ஏனெனில், அத்தகைய அசாதாரணமான நிகழ்ச்சி களைக் கொண்ட ஆண்டின் விலை மட்டத்துடன் சாதாரண மான காலங்களில் நிலவும் விலை மட்டங்களை ஒப்பிட்டால் முரண்பட்ட முடிவுகளே கிடைக்கும்.

மேலும், அடிப்படை ஆண்டாக நாம் கொள்ளும் ஆண்டு அந் நாட்டின் வரலாற்றில் முக்கியமான ஆண்டாக இருப்பது நலம். எடுத்துக்காட்டாக, போருக்கு முந்தைய ஆண்டு, போர் முடிந்த ஆண்டு, சுதந்தரமடைந்த ஆண்டு, திட்டமிட்ட பொருளாதார அமைப்பை மேற்கொண்ட ஆண்டு போன்ற வற்றை அடிப்படை ஆண்டாகக்கொண்டால், பிற்காலத்தில் ஒப்பிட்டுப் பார்ப்பது எளிமையானதாகவும், பயனுடைய தாகவும் அமையும்.

குறியீட்டு எண்கள் அமைக்கப்படும்பொழுது ஒவ்வொரு பொருளின் முக்கியத்துவத்திற்கும் ஏற்ப 'நிறைவு' அளிப்பதன் மூலம் துல்லியமான, அறிவியல் பூர்வமான குறியீட்டெண் ணைப் பெறலாம். பொதுமக்கள் செலவிடும்பொழுது பல்வேறு பொருள்களின்மீதும் செலவிடுகின்றனர். அவர்கள் பல்வேறு பொருள்களை விலைக்கு வாங்கினாலும், எல்லாப் பொருள் களுக்கும் சம அளவில் முக்கியத்துவம் அளிப்பதில்லை. சாதாரணமான குடிமகன் பல்வேறு பொருள்களை விலைக்கு வாங்கினாலும், அவன் அரிசிக்கு அளிக்கும் முக்கியத்து வத்தைச் சீனிக்கோ அல்லது தீப்பெட்டிக்கோ அளிப்ப தில்லை. குறியீட்டு எண்ணை அமைக்கும்பொழுது அரிசியின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அதிக 'நிறையும்', தீப்பெட்டியின் முக்கியக் குறைவுக்கு ஏற்பக் குறைவான நிறையையும் அளிப் பதன் மூலம் நிறைவு செய்யப்பட்டக் குறியீட்டு எண்ணைப் பெற முடியும். பொருள்களுக்கு அளிக்கப்படும் நிறையின் மதிப்பு, ஒருவனுடைய மொத்தச் செலவில், அப் பொருளின் மீதான செலவின் விகிதத்தைப் பொறுத்து அளிக்கப்படு கின்றது. பொதுவாக, பொருள்களின் மொத்த மதிப்பில் குறிப் பிட்ட பொருளின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப நிறைவு எண் அளிக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, எல்லாப் பொருள் களின் மொத்த மதிப்பு ரூ. 100 கோடி எனவும், எல்லாப் பொருள்களுக்கும் அளிக்கப்படும் மொத்த நிறைவு 100 எனவும் வைத்துக்கொள்வோம். அதில் அரிசியின் மதிப்பு ரூ. 15 கோடி எனக்கொண்டால், அரிசிக்கு அளிக்கப்படும் நிறை 15 ஆகும். இவ்வாறு ஒவ்வொரு பொருளின் சராசரி விலையும் அதற்கு அளிக்கப்படும் நிறை என்றால், பெருக்கப்பட்டுப் பின்னர்ச் சராசரிக் குறியீட்டு எண் கணக்கிடப்படும்.

குறியீட்டெண்ணை அமைக்கும்பொழுது, சாதாரணச் சராசரி ஜியோமிதி விகித சராசரி போன்ற பல்வேறு வகைச் சராசரிகளில் ஏற்றதான முறையைப் பயன்படுத்த வேண்டும்.

பொதுவாகச் சாதாரண சராசரி விகிதமே பயன்படுத்தப்படுகின்றது. இம் முறையில் பல்வேறு பொருள்களின் விலைகளின் கூட்டுத்தொகையைப் பொருள்களின் எண்ணிக்கையால் வகுக்கின்றோம்.

குறியீட்டு எண்கள் அமைக்கப்படும் விதத்தைக் கீழ்க் காணும் பட்டியலைக் கொண்டு விளக்கலாம் :

பொருள்கள்	அடிப்படை ஆண்டு		நடப்பு ஆண்டு	
	விலை	குறியீடு	விலை	குறியீடு
அரிசி	மூட்டை 20-00	100	மூட்டை 40-00	200
துணி	மீட்டர் 2-00	100	மீட்டர் 5-00	250
சர்க்கரை	கிலோ 2-00	100	கிலோ 4-00	200
எண்ணெய்	லிட்டர் 5-00	100	லிட்டர் 6-25	125
பால்	லிட்டர் 1-00	100	லிட்டர் 2-00	200
பருப்பு	லிட்டர் 2-50	100	லிட்டர் 3-75	150
		600		1125

சராசரி $\frac{600}{6} = 100$ $\frac{1125}{6} = 187{\cdot}5$

இப் பட்டியலில் நுகர்வோரால் பயன்படுத்தப்படுபவற்றில் முக்கியமான பொருள்களை மட்டுமே சேர்த்துக்கொண்டுள்ளோம். ஆயினும், குறியீட்டு எண்கள் அமைக்கப்படும் பொழுது பல்வேறு பொருள்களையும் சேர்த்துக்கொள்வதே வழக்கம். குறியீட்டு எண்ணை அமைப்பதற்கு அடிப்படை ஆண்டில் நிலவும் விலையை 100 எனக் கொள்கின்றோம். நடப்பு ஆண்டில் நிலவும் விலைகளுக்கு ஏற்பக் குறியீடுகளை அளிக்கின்றோம்.

பட்டியலில் பொது விலைமட்டம் 87·5 சதவிகிதம் உயர்ந்திருப்பதைக் காணலாம். அதாவது, பணத்தின் மதிப்பு அடிப்படை ஆண்டில் நிலவியதைக்காட்டிலும் நடப்பு ஆண்டில் 87·5 சதவிகிதம் குறைந்திருப்பதைக் காணலாம்.

நிறையிட்ட குறியீட்டு எண்கள்

மேற்காணும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பொருள்கள் யாவும் சம அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவையன்று ;

அரிசியும், பருப்பும் சம அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவை அன்று. அரிசியும், பருப்பும் சம அளவில் கருதப்படுவதில்லை. அரிசியின் விலை மாறுதல்களால் ஏற்படும் விளைவுகளைப் பருப்பின் விலை மாறுதல்களால் ஈடு செய்ய முடியாது. ஏனெனில், பருப்பைக்காட்டிலும் அரிசி மிக முக்கியமான பொருளாகும். எனவே, பண்டங்களின் தராதர முக்கியத்துவத் திற்கு ஏற்றாற்போல் நிறைவேற்றப்பட வேண்டும். நமது பட்டியலில் பருப்பைவிட அரிசி 6 மடங்கும், துணி 5 மடங்கும், சர்க்கரை 4 மடங்கும், எண்ணெய் 3 மடங்கும், பால் 2 மடங்கும் முக்கியத்துவம் உடையதென்று கொள்வோமாயின், அதற்கு ஏற்றாற்போலக் கீழ்க்காணுமாறு நிறைவேற்றப்பட வேண்டும்:

பொருள்	அடிப்படை ஆண்டு				நடப்பு ஆண்டு			
	விலை	குறியீடு	நிறை	நிறையிட்ட குறியீடு	விலை	குறியீடு	நிறை	நிறையிட்ட குறியீடு
அரிசி	20-00	100	6	600	40-00	200	6	1200
துணி	2-00	100	5	500	5-00	250	5	1250
சர்க்கரை	2-00	100	4	400	4-00	200	4	800
எண்ணெய்	5-00	100	3	300	6-25	125	3	375
பால்	1-00	100	2	200	2-00	200	2	400
பருப்பு	2-50	100	1	100	3-75	150	1	150
			21	2100			21	4175

சராசரி $= \frac{2100}{21} = 100 \qquad \frac{4175}{21} = 198 \cdot 8$

நிறையிட்ட குறியீட்டு எண்ணும், சாதாரணமான முறையில் அமைக்கப்பட்டக் குறியீட்டு எண்ணும் வேறுபடுவதை மேலே காணலாம். சாதாரணமான முறையில் அமைக்கப் பட்டக் குறியீட்டு எண்ணைக்காட்டிலும் நிறையிட்டக் குறியீட்டு எண்களே துல்லியமான முடிவை நல்க வல்லவையாகும்.

நிறையிட்ட குறியீட்டு எண்ணை அமைக்கும்போது அடிப்படை ஆண்டு விலையை 100 எனக்கொண்டு, அப் பொருள்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிறையினால் பெறுகின்றோம்.

எடுத்துககாட்டாக, அரிசியின் விலை ரூ. 20·00 ஆயின், அதை 100ஆகக் கொள்கின்றோம். அரிசிக்கான நிறை 6 ஆகையால், அடிப்படை ஆண்டில் அரிசியின் நிறையிட்ட குறியீடு 600 (100 × 6) ஆகும். இவ்வாறே மற்றப் பொருள்களுக்கான நிறையிட்ட குறியீடுகளும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். பின்னர், நிறையிட்ட குறியீடுகளின் கூட்டுத்தொகையை, நிறையின் கூட்டுத்தொகையால் வகுப்பதன் மூலம் அடிப்படை ஆண்டின் குறியீட்டெண் கண்டுபிடிக்கப்படுகின்றது. (பட்டியலில் 100) நடப்பு ஆண்டிற்கான நிறையிட்ட குறியீட்டு எண்ணும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அவை ஒப்பிடப்படுகின்றன.

மேற்காணும் பட்டியலிலிருந்து அடிப்படை ஆண்டில் இருந்ததைக்காட்டிலும், நடப்பு ஆண்டில் விலைமட்டம் 98·8 சதவிகிதம் அதிகரித்திருப்பதைக் காணலாம். அதாவது, அடிப்படை ஆண்டில் ரூ. 100ஐக்கொண்டு வாங்கப்பட்ட பொருள்களை நடப்பு ஆண்டில் வாங்க வேண்டுமாயின், ரூ. 198·8 தேவைப்படும். எனவே, அடிப்படை ஆண்டில் நிலவியதைக்காட்டிலும், நடப்பு ஆண்டில் பணத்தின் மதிப்பு 100/198 குறைந்துள்ளது.

குறியீட்டு எண்களை அமைப்பதில் உள்ள இடர்ப்பாடுகள் : குறியீட்டு எண்ணை அமைக்கும் விதம் நோக்குவதற்கு எளிதாக இருப்பினும், நடைமுறையில் இடர்ப்பாடுகள் மிக்கதாகும். அவ்விடர்ப்பாடுகள் எளிதில் தவிர்க்கப்படலாமெனினும், சிலவற்றைத் தவிர்ப்பதற்கில்லை.

குறியீட்டு எண்ணை அமைப்பதில் காணப்படும் முக்கிய இடர்ப்பாடு அதை அமைப்பதற்குத் தேவையான, சரியான விலை நிலவரங்களைப் பிரதிபலிக்கக்கூடிய புள்ளி விவரங்களைப் பெறுவதே ஆகும். பொதுவாக, மொத்த விற்பனை அங்காடிகள் முறையாக நிர்வகிக்கப்படுவதால், அவற்றில் விற்பனை செய்யப்படும் பொருள்களின் விலை விவரங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் எளிதில் கிடைக்கும். ஆனால், சில்லறை அங்காடியில் இடம்பெறும் பொருள்களின் விலை விவரங்கள் எளிதில் கிடைப்பது அரிதாகும். ஆகவேதான் சில்லறை விலைக் குறியீட்டு எண்களைக்காட்டிலும் மொத்த விலைக் குறியீட்டு எண்கள் துல்லியமானவையாக உள்ளன.

குறியீட்டு எண்ணை அமைப்பதற்குத் தேவையான அடிப்படை ஆண்டு, பொருள்கள், பொருள்களுக்கு ஏற்பட

வேண்டிய நிறை ஆகியவற்றை நிர்ணயிப்பதும் இடர்ப்பாடு மிக்கதாகும். அடிப்படை ஆண்டு என்பது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஏதுமற்ற சாதாரண ஆண்டாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. சாதாரணமான ஆண்டு எது என்பதை எளிதில் நிர்ணயிப்பதற்கில்லை. இவ்வாறே குறி யீட்டு எண்ணை அமைக்கும்போது கருதப்பட வேண்டிய பொருள்களைத் தேர்ந்தெடுப்பதும் பிரச்சினைக்குரியதாகும். நுகர்வோர் பயன்படுத்தும் பொருள்கள் யாவற்றின் விலை யையும் சேர்ப்பது இயலாததாகும்.

பல்வேறு பொருள்களின் விலைப்போக்கையும் பிரதி பலிக்கக்கூடிய பொருள்களை நிர்ணயிப்பதும் ஓரளவு இடர்ப் பாடு உடையதாகும். ஏனெனில், அத்தகையப் பொருள் களில் சில எதிர்காலத்தில் வழக்கற்றுப் போகவும், புதிய பொருள்கள் புழக்கத்திற்கு வருவதற்கும் வாய்ப்பு உண்டு. அத்தகைய நிலையில் குறியீட்டு எண்களை ஒப்பிடுவது தவறான முடிவையே நல்கும். இவ்வாறே வெவ்வேறு பொருள் களுக்கும் ஏற்றப்படும் நிறையை நிர்ணயிப்பதும் பிரச்சினைக் குரியதாகும். ஒவ்வொரு பொருளின் முக்கியத்துவமும் நுகர் வோரின் விருப்பு, வெறுப்பு, பழக்க வழக்கங்கள், பண்பாட்டு வளர்ச்சி, வருமானம், அவர்கள் வாழும் பகுதிகள் ஆகியவற் றிற்கு ஏற்ப வேறுபடக் கூடுமாதலால், வெவ்வேறு பொருள் களின் தராதர முக்கியத்துவத்திற்கு ஏற்ப அளிக்கப்படும் நிறையை நிர்ணயிப்பதும் பிரச்சினைக்குரியதாகின்றது. எடுத் துக்காட்டாக, 1936ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டக் குறி யீட்டு எண்ணுடன் 1970ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டக் குறியீட்டு எண்ணை ஒப்பிட முயல்வது நிச்சயமாகத் தவறான முடிவுகளையே நல்கும் கேலிக் கூத்தாகும். ஏனெனில், இவ்விரு ஆண்டுகளுக்கும் இடைப்பட்டக் காலத்தில் மக்களின் அக வாழ்வும் புறவாழ்வும் பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளாகி இருக்கின்றன.

1936ஆம் ஆண்டில் முக்கியத்துவம் பெற்ற பொருள்கள் காலப்போக்கில் மிகச் சாதாரணமான பொருள்களாகி விட்டன. எனவே, ஒத்ததல்லாத இரு வேறு காலங்களில் அமைக்கப்பட்டக் குறியீட்டு எண்களை ஒப்பிடுவது தவ றாகவே முடியும்.

உற்பத்தித்துறை ஒவ்வொரு நாளும் மாற்றமடைந்து வருவதால், பொருள்களும் மாற்றமடைகின்றன.

காலப்போக்கில் புதுப்புதுப் பொருள்கள் கண்டுபிடிக்கப் பட்டு அங்காடிக்கு வருகின்றன. வானொலி, தொலைக் காட்சிச் சாதனம், செயற்கைப் பட்டு, மின்சாரச் சாதனங்கள், டெரிலின் துணிகள் போன்ற பொருள்களும், திரைப்படம், தினத்தாள், அரசுப் பேருந்து வசதிகள் போன்ற பணிகளும் அண்மைக் காலத்தில்தான் புழக்கத்திற்கு வந்தன.

ஒரே பொருள் வழக்கில் இருப்பினும், அப் பொருளின் அமைப்பும், தோற்றமும் மாறுபடுவதால், அதனை ஒரே பொரு ளாகக்கொள்வதும் சரியன்று. எடுத்துக்காட்டாக, 1947ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட காரும், 1970ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட காரும் ஒன்றே எனக் கொள்வது தவறாகும். நுகர்வோர், பொருள்கள், பணிகள் ஆகியவற்றைப் பாதிக்கும் வகையில் மாற்றங்கள் ஏற்படக் கூடும். மக்களின் வயது அமைப்பு மாறுவதன் விளைவாக, முன்பு குறைவான அளவில் தேவைப்பட்டப் பொருள்களின் தேவை மாற்ற மடையக்கூடும். பொது மக்களின் வருவாய் அதிகரித்தாலும், செல்வப் பகிர்வில் மாற்றம் ஏற்பட்டாலும் முன்பு போகப் பொருள்களாகக் கருதப்பட்ட பொருள்களுக்கான தேவை அதிகரிக்கக்கூடும். எடுத்துக்காட்டாக, இந்திய நடுத்தர வகுப்பு மக்களால் பயன்படுத்தப்படும் பொருள்கள் பல அண்மைக்காலம் வரையிலும் போகப் பொருளாகக் கருதப் பட்டன. நாட்டு விடுதலை, பொருளாதார வளர்ச்சி ஆகிய வற்றின் விளைவாக இம் மாற்றம் ஏற்பட்டு உள்ளது.

அறிவியல் முன்னேற்றம், தொழில் நுணுக்க வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாகச் சில பொருள்களின் உற்பத்திச் செலவு குறையக் கூடும். விலை குறைவதால் அத்தகைய பொருள்களின் தேவை பெருகிப் பலர் அவற்றைப் பயன் படுத்தவும் கூடும்.

வேறு சில பொருள்கள் முன்பு புழக்கத்தில் இருந்து, இடையில் வழக்கொழிந்து மறைந்து மீண்டும் புழக்கத்திற்கு வரக்கூடும். எடுத்துக்காட்டாக, மது சுதந்தரத்திற்கு முன்னர்த் தொழிலாளர் வாழ்வில் முக்கிய இடம் பெற்றிருக்கக்கூடும். அண்மைக் காலத்தில் மது விலக்கு ரத்து செய்யப்படும் வரையில் மது வழக்கற்றுப் போயிருந்து மீண்டும் புழக்கத்திற்கு வந்து உள்ளது.

மேற்காணும் காரணங்களால் குறியீட்டு எண்ணை அமைப் பதிலும் அதைப் பயன்படுத்துவதிலும் பல்வேறு இடர்ப்பாடுகள்

ஏற்படுகின்றன. குறியீட்டு எண் அமைக்கப்படும் விதத்தி லேயே ஒரு குறைபாடு உள்ளது. இதனை ஓர் எடுத்துக் காட்டின் மூலம் விளக்கலாம். 1939ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டு எனவும், 1965 நடப்பு ஆண்டு எனவும், நடப்பு ஆண்டின் குறியீட்டு எண் 150 எனவும், அடிப்படை ஆண்டின் குறியீட்டு எண் 100 எனவும் வைத்துக்கொள்வோம். இவ்விரு குறியீட்டு எண்களையும் ஒப்பிட்டால், 1939ஆம் ஆண்டில் நிலவியதைக்காட்டிலும் 50 சதவிகிதம் விலைமட்டம் உயர்ந் திருப்பது தெளிவாகும். ஆனால், 1965ஆம் ஆண்டு அடிப் படை ஆண்டாக வைத்துக்கொண்டு 1939ஆம் ஆண்டிற்கான குறியீட்டு எண்ணை அதனுடன் ஒப்பிட்டால், விலைமட்டம் 33·3 சதவிகிதம் மட்டுமே குறைந்திருப்பது தெளிவாகும். அதாவது, 1939ஆம் ஆண்டுடன் 1965ஆம் ஆண்டை ஒப் பிட்டால், விலைமட்டம் 50 சதவிகிதம் அதிகரிப்பதாகவும், 1965ஆம் ஆண்டுடன் 1939ஆம் ஆண்டை ஒப்பிட்டால் விலை மட்டம் 33·3 சதவிகிதம் குறைந்திருப்பதாகவும் தோன்றுகிறது. அதாவது, அடிப்படை ஆண்டை நடப்பு ஆண்டாகவும், நடப்பு ஆண்டை அடிப்படை ஆண்டாகவும் மாற்றி ஒப்பிட் டால், முன்பு பெறப்பட்ட முடிவிலிருந்து வேறான முடிவு கிடைக்கின்றது. இஃது ஒரு கணிதப் பிரச்சினையாகும். மேற்காணும் இடர்ப்பாடுகளில் சில தற்காலத்தில் தவிர்க்கப் பட்டு விட்டன. எடுத்துக்காட்டாக, பேராசிரியர் ஆல்பிரடு மார்ஷலின் தொடர்க் குறியீட்டு எண்[1] முறையில் வழக்கற்ற பொருள்களை விடுத்து, புதிய பொருள்களைச் சேர்த்துக் கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறே நடப்பு ஆண்டை அடிப்படை ஆண்டாக மாற்றினால், குறியீட்டு எண்களை ஒப்பிட முடியாத நிலை ஏற்படுவதைத் திருப்புச் சோதனைகள்[2] பலவற்றை மேற்கொள்ளுவதன் மூலம் தவிர்க்க முடியும்.

குறியீட்டு எண்ணின் பயன்கள்[3]

பணத்தின் வாங்குந்திறனை மதிப்பிடுவது பல்வேறு வகை களிலும் பயனளிக்கக்கூடிய செயலாகும். நாட்டின் பொருளா தார அமைப்பு நிலைப்பாடு அடைய வேண்டுமாயின், பணத்தின் வாங்குந்திறனும் நிலைப்பாடு அடைவது அடிப் படைத் தேவையாகும். பணத்தின் வாங்குந்திறன் நிலைப்

[1] Chain index

[2] Reversal tests

[3] Uses of index number

படுத்தப்பட வேண்டுமாயின், முதலில் அதில் ஏற்படும் மாற்றங்கள் அளவிடப்பட வேண்டும். பணத்தின் வாங்குந் திறனில் ஏற்படும் மாற்றங்களைக் குறியீட்டு எண்களின் உதவி யின்றி அளவிடுவது இயலாது. குறியீட்டு எண்களைக் கொண்டு, பணத்தின் வாங்குந்திறனை நிலைப்படுத்துவதன் மூலம் நாட்டுப் பொருளாதாரமும் நிலைப்பாட்டை அடைவ தால், குறியீட்டு எண்களின் பயன் சிறப்புக்குரியதாகும். ஆதலால்தான், ஒவ்வொரு நாடும் மொத்த விலைக் குறியீட்டு எண், சில்லறை விலைக் குறியீட்டு எண், கடன் பத்திர விலைக் குறியீட்டு எண், இலாப நிலைக் குறியீட்டு எண் போன்ற பல விதக் குறியீட்டு எண்களையும் விழிப்பாகவும், துல்லியமாகவும் மதிப்பிடுகின்றன.

இரு வேறு செலாவணிகளின் வாங்குந்திறனை ஒப்பிடு வதற்கும், அவற்றினிடையே நாணயமாற்று விகிதத்தை நிர்ண யிப்பதற்கும் குறியீட்டு எண்கள் பயன்படுகின்றன. ஒவ்வொரு நாடும் தனித்தனிக் காகிதச் செலாவணிகளைக்கொண் டிருக்கும் தற்காலத்தில் உள்நாட்டுச் செலாவணியின் அயல் நாட்டு மதிப்பை (ஒரு நாட்டுச் செலாவணிக்கு வெளிநாட்டில் உள்ள வாங்குந்திறனை) மதிப்பிடுவதற்குப் பயன்படும் ஒரே சாதனம் குறியீட்டு எண்ணேயாகும். நுகர்வோரின் நோக்கில் பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பிடுவதற்குக் குறியீட்டு எண்கள் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மொத்த விலைக் குறியீட்டு எண்களைக்கொண்டு விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களையும், பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களையும் அளவிட முடியும். சில்லறை விலைக் குறியீட்டு எண்களைக்கொண்டு நுகர்வுப் பொருள் களைப் பொறுத்தவரையில் பணத்தின் மதிப்பு மாற்றமடை வதை அறியலாம். சில்லறை விலைக் குறியீட்டு எண் எனப் படும் வாழ்க்கைத்தரக் குறியீட்டு எண் அதிகரிக்கும்பொழு தெல்லாம் கூலி விகிதம் அதிகரிக்கப்படும். வாழ்க்கைத்தரக் குறியீட்டு எண்ணைக்கொண்டு தொழிலாளர்களின் மெய்யான கூலியில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பிடலாம்.

குறியீட்டு எண்களின் வகைகள்

குறியீட்டு எண்கள் பல வகைப்பட்டவை எனினும், அவற்றுள் முக்கியமான சிலவற்றைப் பற்றிக் கீழே காணலாம் :

1. **பொது நோக்குக் குறியீட்டு எண்** : பணத்தின் பொதுவான வாங்குந்திறனை மதிப்பிடுவதற்குப் பொது

நோக்குக் குறியீட்டு எண் பயன்படுத்தப்படுகின்றது. மொத்த விலை, சில்லறை விலை, கூலி, இலாபம், வட்டிவீதம் ஆகிய வற்றின் குறியீட்டு எண்கள் முதலில் கண்டுபிடிக்கப்பட்டு, பின்னர் அவற்றைச் சேர்த்துச் சராசரி கண்டுபிடிக்கப்பட்டு, அதிலிருந்து பொது நோக்குக் குறியீட்டு எண் கண்டுபிடிக்கப் படுகின்றது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் பொது நோக்குக் குறியீட்டு எண்ணை உருவாக்குவதற்காக 12 விதக் குறியீட்டு எண்கள் அமைக்கப்பட்டு, அவற்றிலிருந்து பொது நோக்குக் குறியீட்டு எண் அமைக்கப்படுகின்றது. பணத்தின் பொது வான மதிப்பை அளவிடுவதற்கு இக் குறியீட்டு எண் பயன் படுகின்றது. ஆயினும், இது குறைபாடு மிக்கதாகக் கருதப் படுகின்றது. ஏனெனில், பொது நோக்குக் குறியீட்டு எண் அமைப்பதற்கு முன்னேற்பாடாகக் கண்டுபிடிக்கப்படும் குறி யீட்டு எண்களின் போக்கு ஒன்றிலிருந்து மற்றொன்று வேறு படக் கூடும். வெவ்வேறு போக்கில் அமைந்துள்ள பல்வேறு குறியீட்டு எண்களின் சராசரி, உண்மையான நிலவரத்தை உணர்த்துவதற்கில்லை.

2. **மொத்த விலைக் குறியீட்டு எண் :** மொத்த விற்பனை அங்காடியில் இடம் பெறும் பொருள்களைப் பொறுத்த வரையில் பணத்தின் மதிப்பு எவ்வாறு வேறுபடு கின்றது என்பதை அறிவதற்கு மொத்த விலைக் குறியீட்டு எண் பயன்படுகின்றது. இக் குறியீட்டு எண் அமைக்கும் பொழுது முக்கியமான உணவுப் பொருள்கள், மூலப் பொருள்கள், தயாரிப்புப் பொருள்கள் போன்ற மொத்த விற்பனை அங்காடியில் இடம் பெறும் பொருள்களின் விலை விவரங்களே பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய விவரங் களைப் பெறுவது எளிது. மேலும், பணத்தின் வாங்குந்திறனை மதிப்பிடுவதற்குப் பெரும்பாலும் இக் குறியீட்டு எண்ணே பயன்படுத்தப்படுகின்றது.

3. ***சில்லறை விலைக் குறியீட்டு எண் :*** நுகர்வோரைப் பொறுத்தவரையில் பணத்தின் மதிப்பை அளவிட இக் குறியீட்டு எண் பயன்படுகின்றது. இக் குறியீட்டு எண்ணை அமைப்பதால், செய்விலை முடிந்த நுகர்வுப் பொருள்கள், பணிகள் (பணச் செலவுகள், வீட்டு வாடகை ஆகியவையும் அடங்கும்) ஆகியவற்றின் விலைமட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. சில்லறை விலைக் குறியீட்டெண்ணைக் காட்டிலும், இக் குறியிட்டு எண் சிறந்ததாகும். இதுவே சிறப் பான பெருமளவில் பயன்படக்கூடிய குறியீட்டு எண்ணாகும்.

ஆயினும், பெருமளவு பொருள்களையும், பணிகளையும் சேர்க்க வேண்டியிருப்பதால், இதனை எளிதில் அமைக்க வியலாது. மேலும், நுகர்வோர் பல்வேறு வருமானத் தொகுப்பைச் சார்ந்தவர்கள் ஆவர். எனவே, நுகர்வுப் பொருள்களை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்படும் இக் குறியீட்டு எண் எந்தவொரு தனி வகுப்பினருக்கும் ஏற்றதாக அமைவதற்கில்லை.

4. தொழிலாளர்கள் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண் : தொழிலாளர்கள் நோக்கில் பணத்தின் மதிப்பை அளவிட இக் குறியீட்டு எண் பயன்படுகின்றது. நுகர்வோர் குறியீட்டெண்ணைப் போன்றதே தொழிலாளர் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண் ஆகும். இக் குறியீட்டெண்ணை அமைக்கும்பொழுது, தொழிலாளர்கள் வாழும் பகுதிகளில் அவர்கள் பயன்படுத்தும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் விலை விவரங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகின்றது. இக் குறியீட்டெண்ணைக் கொண்டு தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை அறிந்துகொள்ள முடியும். மேலும், தொழிலதிபர்கள் தொழிலாளர்களுக்கு அளிக்கும் ஊதியத்தை இக் குறியீட்டெண்ணுடன் இணைப்பதன் மூலம் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்பொழுது ஊதியமும் அதிகரிக்கும்படிச் செய்ய முடியும்.

5. கூலிக் குறியீட்டு எண் : குறிப்பிட்ட காலத்தில் கூலி வீதத்தில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பிடுவதற்காகச் சில நாடுகளில் கூலிக் குறியீட்டு எண் அமைக்கப்படுகின்றது. இக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக்கொண்டு, மெய்யான கூலி வீதத்தைக் கண்டுபிடிக்க முடியும். தொழிலாளர்கள் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணுடன் பணக் கூலியை ஒப்பிடுவதன் மூலம் மெய்யான கூலியைக் கண்டுபிடிக்க முடியும். மேற்காண்பவை தவிர, பல்வேறு வகைக் குறியீட்டு எண்கள் உள்ளன. ஆயினும், மொத்த விலைக் குறியீட்டு எண், தொழிலாளர்கள் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண் ஆகியவையே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

7. பணத்தின் மதிப்பு

பண அளவுக் கோட்பாடு [1]

பண அளவுக் கோட்பாடு, பொது விலைமட்டம் நிர்ணயிக்கப்படும் விதத்தையும், பணத்தின் மதிப்பு மாறுவதற்கான காரணங்களையும் விளக்குகின்றது.

பண அளவுக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தைக் கீழ் வருமாறு குறிப்பிடலாம்: விலைமட்டம் அல்லது பணத்தின் மதிப்பு பணத்தின் அளவைச் சார்ந்துள்ளது. பணத்தின் அளவும், விலைமட்டமும் ஒரே விகிதத்தில் மாறுதல் அடைகின்றன. பணத்தின் மதிப்பும், பணத்தின் அளவும் எதிர் மாறான விகிதத்தில் மாறுதலடைகின்றன. அதாவது, பணத்தின் அளிப்பு இரட்டிக்கப்படுமாயின், விலைமட்டமும் இரு மடங்கு அதிகரிக்கும். பணத்தின் மதிப்போ சரிபாதியாகக் குறைவடையும். இதற்கு மாறாக, பணத்தின் அளவு சரிபாதியாகக் குறைக்கப்படுமாயின், விலைமட்டமும் சரிபாதியாகக் குறைவடையும்; பணத்தின் மதிப்பு இரு மடங்கு அதிகரிக்கும்.

'மற்ற நிபந்தனைகள் மாறாமலிருக்கும்பொழுது பணத்தின் மதிப்பு, அதன் அளிப்பிற்கு எதிர்மாறாக மாற்றமடையும்; பணத்தின் அளிப்பு எதிர்மாறாக மாற்றமடையும்; பணத்தின் அளிப்பு அதிகரிக்கப்படும். ஒவ்வொரு முறையும் அதன் மதிப்பு குறைவடையும். அதன் அளிப்பு குறைவடையும் ஒவ்வொரு முறையும் அதற்குச் சரிசமமான விகிதத்தில் பணத்தின் மதிப்பு அதிகரிக்கும்.'-ஜே. எஸ். மில்[2]

அதாவது, பணத்தின் அளிப்பு மாறுதலடையும் விகிதத்திற்குச் சரிசமமான நேர் விகிதத்தில் விலைமட்டமும், சரிசமமான ஆனால், எதிர் விகிதத்தில் பணத்தின் மதிப்பும் மாறுதலடைகின்றன. பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்

1 The Quantity Theory of Money

2 J. S, Mill

பிற்குமிடையே உள்ள தொடர்பை விளக்குவதே பண அளவுக் கோட்பாடாகும். பண அளவுக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துகள் 16வது நூற்றாண்டில் வெளியிடப் பட்ட பொருளாதார வெளியீடுகளில் காணப்படுகின்றன. எனினும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில்தான், பண அளவுச் சமன்பாடுகளின் மூலம் பண அளவுக்கோட்பாடு திருந்திய வடிவில் அளிக்கப்பட்டது. பண அளவுக் கோட் பாட்டின் இரு முக்கிய பதிப்புகளாகப் (1) பண்டமாற்று அடிப்படையிலான ஆய்வு முறையும்[1], (2) ரொக்க இருப்பு ஆய்வு முறையும்[2] கருதப்படுகின்றன.

1. பண்டமாற்று அடிப்படையிலான ஆய்வு முறை-பண்டமாற்றுச் சமன்பாடு: அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பொருளாதார வல்லுநரான பேராசிரியர் இர்விங் பிஷர்[3] என்பார் 1911ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தமது 'பணத்தின் வாங்குந்திறன்'[4] எனும் நூலில் பண அளவுக் கோட்பாட்டைத் திருந்திய வடிவில் அளித்துள்ளார்.

விலைமட்டம் நிர்ணயிக்கப்படும் முறையை விளக்குவதற் காக பிஷர் ஒரு சமன்பாட்டைப் பயன்படுத்தியுள்ளார். பண்ட மாற்றுச் சமன்பாடு என்றறியப்படும் அச் சமன்பாட்டை பிஷர் கீழ்வருமாறு அமைத்துள்ளார் :

$$\text{ப} \times \text{சு} = \text{வி} \times \text{பொ}$$ [5]

$$\text{அல்லது வி} = \frac{\text{ப} \times \text{சு}}{\text{பொ}}$$

இச் சமன்பாட்டில்

ப - பணத்தின் மொத்த அளவையும்,

சு - பணத்தின் சுழல் வேகத்தையும் (அதாவது ஓர் அலகு

[1] The transactions approach

[2] The cash balance approach

[3] Prof. Irwing Fisher

[4] The Purchasing Power of Money

[5] $MV = PT$ or $P = \frac{MV}{T}$

Where M represents the total quantity of money

V is the velocity of circulation of money

P represents the general prize level

T refers to the total volume of transactions (of goods and services traded) for which money is made.

பணம், குறிப்பிட்ட ஒரு கால இடைவெளியில் எத்துணை முறை கைமாறுகின்றது என்பதையும்),

வி – சராசரி விலைமட்டத்தையும்,

பொ – பணத்திற்கு ஈடாகப் பரிவர்த்தனைக்குள்ளாகும் பொருள்கள் மற்றும் பணிகளின் எண்ணிக்கையையும் குறிப்பிடுகின்றன.

இச் சமன்பாட்டின்படி 'வி × பொ' ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் அங்காடியில் அளிக்கப்படும் பொருள்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பைக் குறிப்பிடுகின்றது. அதாவது, பணத்திற்கான தேவையை வி × பொ நிர்ணயிக்கின்றது. எனவே, ப × சு = வி × பொ என்பது பணத்தின் அளிப்பு = பணத்திற்கான தேவை என்பதற்குச் சமமாகும்.

'பணத்தின் அளவே விலைமட்டத்தை நிர்ணயிக்கின்றது. பணத்தின் அளிப்பு மாறும் விகிதத்திற்குச் சமமான நேர் விகிதத்தில் விலைமட்டமும் மாறுகின்றது' என்பதே மேற்காணும் சமன்பாட்டின் உட்கருத்தாகும்.

மேற்காணும் சமன்பாட்டில் 'ப' அரசால் வெளியிடப்படும் பணத்தை (நாணயங்களையும், காகிதப் பணங்களையும்) மட்டுமே குறிப்பிடுகின்றது. ஆனால், தற்காலப் பொருளாதார அமைப்பில் பாங்குகளால் வெளியிடப்படும் பாங்குப் பணங்களும் முக்கியப் பங்கை ஏற்கின்றன. ஆகவே, பாங்குப் பணத்தையும் சேர்த்து, பிரத்தியட்ச நிலையை விளக்கும் வகையில் பிஷர் தமது சமன்பாட்டை விரிவுபடுத்தி உள்ளார்.

விரிவுபடுத்தப்பட்ட சமன்பாட்டில் பாங்குப் பணம் 'ப' என்றும், பாங்குப் பணத்தின் சுழல் வேகம் 'சு' என்றும் குறிப்பிடப்படுகின்றது. விரிவுபடுத்தப்பட்டச் சமன்பாடு கீழ்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது :

$$\text{ப} \times \text{சு} + \text{ப}^1 \times \text{சு}^1 = \text{வி} \times \text{பொ}$$ [1]

அல்லது

$$\text{வி} = \frac{\text{ப} \times \text{சு} + \text{ப}^1 \times \text{சு}^1}{\text{பொ}}$$

இச் சமன்பாட்டிலிருந்து பொது விலைமட்டத்தை நிர்ணயிக்கும் சக்திகள் எவையெவை என்பது தெளிவாகின்றன.

[1] $MV + M'V' = PT$

or $P = \frac{MV + M'V'}{T}$

அவை யாவன: (1) புழக்கத்திலிருக்கும் பணத்தின் அளவு (ப), (2) பணத்தின் சுழல் வேகம் (சு), (3) பாங்குப் பணத்தின் அளவு ($ப^1$), (4) பாங்குப் பணத்தின் சுழல் வேகம் ($சு^1$), (5) பரிவர்த்தனையின் அளவு. அதாவது பணத்தைக் கொண்டு வாங்கப்பட்ட பொருள்கள் மற்றும் பணிகளின் அளவு (பொ).

இச் சமன்பாட்டிலிருந்து விலைமட்டமானது (வி) ப, சு, ப', $சு^1$, ஆகியவற்றுடன் நேர்விகிதத்திலும், பொ – உடன் எதிர் விகிதத்திலும் தொடர்பு கொண்டுள்ளது தெளிவாகும்.

இச் சமன்பாட்டிலிருந்து பெறப்படும் பண அளவுக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாவது: பணத்தின் அளவும், விலைமட்டமும் சம விகிதத்தில் ஒரே வகையில் மாறுதல் அடைகின்றன என்பதாகும்.

இச் சமன்பாட்டின் மூலம் விலைமட்டத்தை (அல்லது பணத்தின் மதிப்பை) நிர்ணயிப்பது பணத்தின் அளவேயாகும் எனும் தமது அடிப்படைக் கருத்தைப் பிஷர் வலியுறுத்துகின்றார். விலைமட்டத்திற்கும், பணத்தின் அளவிற்குமிடையே நிலவும் தொடர்பினை விளக்கும் ஒரு முக்கியமான சாதனமாகவும் இச் சமன்பாட்டை அவர் கருதுகின்றார்.

பிஷரின் சமன்பாடு கீழ்க்காணும் அனுமானங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும்:

(1) விலைமட்டம் (வி) ஓர் அமைவான சக்தியாகும். விலைமட்டம் தானாகவே மாற்றமடையக் கூடியதன்று. சமன்பாட்டில் காணப்படும் மற்ற சக்திகளே விலைமட்டத்தை நிர்ணயிக்கக்கூடியவையும், கட்டுப்படுத்தக்கூடியவையும் ஆகும். ஆனால், விலைமட்டமோ மேற்குறிப்பிட்டுள்ள மற்ற சக்திகளைக் கட்டுப்படுத்தக்கூடிய திறன் அற்றதாகும். பணத்தின் அளவும் அதன் சுழல் வேகமும் அதிகரிப்பின், விலைமட்டம் அதிகரிக்கும். பணத்தின் அளவும், அதன் சுழல் வேகமும் குறைவடைந்தால் விலைமட்டமும் குறைவடையும். பொருள்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி அதிகரிக்குமாயின் விலைமட்டம் குறைவடையும்.

(2) பொருள்களின் உற்பத்தியளவு (பொ) சுதந்தரமான காரணியாகும். பணத்தின் அளவிலும் மற்ற சக்திகளிலும்

ஏற்படும் மாற்றங்களால் பொருள்களின் உற்பத்தி அளவு பாதிக்கப்படுவதில்லை. ஏனெனில், பிஷர் குறிப்பிடுமாறு, பொருள்களின் அளவை நிர்ணயிப்பவை, சமன்பாட்டில் குறிப்பிடாத இயற்கை மூலங்கள், தொழில் நுணுக்க வளர்ச்சி, மக்கள் தொகை வளர்ச்சி போன்றவற்றால் மட்டுமே நிர்ணயிக்கப்படுவதாகும். எனவே, பணத்தின் அளவில் (ப) ஏற்படும் மாற்றங்களின் விளைவாகப் பொருள்களின் உற்பத்தி (பொ) மாறுவதில்லை. பொருள்களின் உற்பத்தி (பொ) குறுங்காலத்தில் மாறாமல் நிலையாக இருக்கும். பொருள்களின் உற்பத்தியை நிர்ணயிக்கக்கூடிய இயற்கை மூலங்கள், தொழில் நுணுக்க வளர்ச்சி, மக்கள் தொகை ஆகியவை குறுங்காலத்தில் மாற்றமடையாமல் நிலையாக இருப்பதால், அவற்றால் நிர்ணயிக்கப்படும் பொருள்களின் உற்பத்தியும் (பொ) குறுங்காலத்தில் மாறாமல் நிலையாகவே இருக்கும். இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் நாட்டில் பொதுவாக வேலைமட்டம் நிறைவு பெற்றிருப்பதாக பிஷர் அனுமானிக்கின்றார்.

(3) சமன்பாட்டில் பணத்தின் சுழல் வேகமானது (சு) சுதந்தரமானது என்பதுடன், குறுங்காலத்தில் மாறாமல் இருக்குமென்றும் அனுமானிக்கப்படுகின்றது. பணத்தின் சுழல் வேகத்தை நிர்ணயிப்பவை, சமன்பாட்டில் குறிப்பிடப்படாத பொதுமக்களின் செலுத்தும் வழக்கங்கள், வாணிப வழக்கங்கள், மக்கள் தொகையின் அடர்த்தி, போக்குவரத்து வளர்ச்சி போன்றவையாகும். ஆகவே, பணத்தின் அளவில் (ப) ஏற்படும் மாறுதல்களின் விளைவாக, அதன் சுழல் வேகம் (சு) மாற்றமடைவதில்லை. பணத்தின் சுழல் வேகத்தை நிர்ணயிக்கக்கூடியவையாகக் குறிப்பிடப்படும் சக்திகள் குறிப்பாகப் பணத்தைச் சார்ந்த பழக்க வழக்கங்கள் உடனடியாக மாறுவதில்லையாதலால், அவற்றால் நிர்ணயிக்கப்படும் சுழல் வேகமும் (சு) பொதுவாக மாற்றமடையாமல் நிலையாகவே இருக்கும். எனவே, பண அளவில் (ப) ஏற்படும் எவ்வித மாற்றமும் அதன் சுழல் வேகத்தை (சு) மாற்றக்கூடியதன்று. அவ்வாறே பாங்குப் பண அளவில் (ப) ஏற்படக்கூடிய எவ்வித மாற்றமும் அதன் சுழல் வேகத்தை (சு^{1}) மாற்றியமைக்கக்கூடியதல்ல.

(4) அரசினரால் வெளியிடப்படும் பணத்தின் அளவு (ப) தான் பாங்குப் பணத்தின் (ப) அளவை நிர்ணயிப்பதாகும்.

பாங்குப் பணத்திற்கும், சட்டப் பூர்வமான பணத்திற்கு மிடையே உள்ள விகிதம் (ப'/ப) மாறாமல் நிலையாக இருப்ப தாகும். தொழில் வளர்ச்சி, நாகரிக வளர்ச்சி ஆகியவை மாற்றமடைந்தாலுங்கூட இவ் விகிதம் மாறுவதில்லை. அதாவது, பணத்தின் அளவிற்கும், விலைமட்டத்திற்குமிடையே நிலவும் தொடர்பை, பாங்குப் பணத்தின் அளவு எவ் விதத்திலும் பாதிக்கக்கூடியதன்று.

பிஷரின் சமன்பாட்டில் குறிப்பிடப்படுபவற்றுள், ப[1], சு, சு[1], பொ ஆகியவை மாறாமல் நிலையாக இருப்பதால், விலை மட்டத்தில் ஏற்படக்கூடிய எவ்வித மாற்றமும் பணத்தின் அளவில் (ப) ஏற்படும் மாற்றத்தால் மட்டுமே ஏற்படக்கூடியது என்பது தெளிவாகும். மேலும், பணத்தின் அளவும் அதன் வாங்குந்திறனும் நேர் எதிர்மாறானவை என்று நிலை நிறுத்துவதன் மூலம் பணத்தின் அளவிற்கும், விலைமட்டத்திற்கு மிடையே நேரிடையான தொடர்பு நிலவுவதாக பிஷர் குறிப்பிடுகின்றார். பணத்தின் அளவு மாறும் விகிதத்திற்குச் சமமான விகிதத்தில் அதே போக்கில் விலைமட்டமும் மாறுதலடையும் என்றும், பணத்தின் அளவில் ஏற்படும் மாற்றங்கள் விலைமட்டத்தின்மீது இவ்வாறு பிரதிபலிப்பதைத் தடுக்கக் கூடிய சக்திகள் ஏதுமில்லை என்றும் பிஷர் கருதுகின்றார். விலைமட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் யாவுமே பணத்தின் அளவில் ஏற்படும் மாறுதல்களைப் பொறுத்தவையாகும். விலைமட்டம் மாறுதலடைவதற்குக் காரணம் பணத்தின் அளவு மாறுவதேயாகும். ஆகவே, பண அளவில் ஏற்படும் மாறுதல்களுக்குச் சமமாக நேர்விகிதத்தில் விலைமட்டமும், எதிர்மாறான விகிதத்தில் பணத்தின் மதிப்பும் மாறுதலடைகின்றன.

அதாவது, பிஷரின் விளக்கத்தில் பணத்தின் மதிப்பு மாறுவதற்கு முக்கியமான ஒரே காரணம் பண அளவு மாறுவதே யாகும் எனும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

மதிப்பீடு: பிஷரின் கோட்பாட்டைக் குறை காண முடியாத அளவிற்குச் சிறப்பு மிக்கக் கோட்பாடாகக் கருத வியலாது. அக் கோட்பாட்டின் குறைபாடுகள் கீழ்வரும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன :

(1) ஒரு கோட்பாடு சரியானதா அல்லது தவறுடையதா என்பது, அக் கோட்பாட்டை வரைவதற்கு எடுத்துக்கொள்ளப்

பட்ட எடுகோள்களைப் பொறுத்ததாகும். ஒரு கோட்பாடு தவறான எடுகோளை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப் பட்டாலும், அல்லது அவ் வெடுகோள்கள் நடைமுறைக்குப் புறம்பானவையாக இருப்பினும், அக் கோட்பாடும் தவறான தாகவே அமையும். ஃபிஷருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளப் படக்கூடியதா என்பது, அக் கோட்பாட்டின் அனுமானங் களைப் பொறுத்ததாகும்.

ஃபிஷருடைய அனுமானங்கள் குறுங்காலத்தில் மாறக் கூடும் என்பதை ஃபிஷரே ஏற்றுக்கொள்கின்றார். ஆயினும், அத்தகைய மாறுதல்கள்குறுங்காலத்தில் மட்டுமே ஏற்படக்கூடி யவை என்றும், நெடுங்காலத்தில் அத்தகைய அனுமானங்கள் யாவும் தாம் கருதும் வகையிலேயே அமையும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். அதாவது, கூல்பர் குறிப்பிடுமாறு, ஃபிஷரின் கோட்பாடு ஒரு நெடுங்காலக் கோட்பாடே ஆகும். ஆனால், நெடுங்காலம் என்பது பல்வேறு குறுங்காலங்களை உள்ளடக் கியதாகும். ஒவ்வாத அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்றிருப்பதால், இக் கோட்பாடு குறை உடையதாகும்.

(2) இக் கோட்பாட்டில் பணத்தின் மதிப்பை நிர்ண யிக்கும் சக்திகள் எவை என்பது விளக்கப்படவில்லை; உண்மையில் எது எதை நிர்ணயிக்கின்றது என்பது விளக்கப் படவில்லை. அனைவரும் அறிந்த ஒரு விவரத்தை—பொருள் களுக்கு ஈடாகக் கொடுக்கப்பட்ட பணமும் பொருள்களின் மதிப்பு அல்லது விலையும் சமம் எனும் விவரத்தை—மட்டுமே இக் கோட்பாடு கணித வழியாக விளக்குகின்றது. பணத்தைப் பற்றியோ அல்லது விலையைப் பற்றியோ அல்லது இவை யிரண்டில் எது எதனால் நிர்ணயிக்கப்படுகின்றது என்பதைப் பற்றியோ இக் கோட்பாட்டில் விளக்கப்படவில்லை.

பணத்தின் மதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது என்பதை இக் கோட்பாடு மறைமுகமாகக்கூட உணர்த்த வில்லை. பண அளவின் அதிகரிப்பு அல்லது குறைப்பு விலைமட்டத்தின்மீது எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பது விளக்கப்படவில்லை. இக் கோட்பாட்டில் சுழல் வேகமும், பொருள்களின் அளவும் மாறாமலிருக்கும்போது பணத்தின் அளவு மாறுவதற்குச் சமமான விகிதத்தில் விலைமட்டமும் மாறுதலடையும் என்று மட்டுமே குறிப்பிடப்படுகின்றது. இவ் வகை விளக்கம் கணிதப் பூர்வமானதே தவிர விளக்கமான

தன்று. பணத்தின் அளவு மாறுவதால், முடிவில் விலைமட்டம் மாற்றமடையும் என்று மட்டுமே குறிப்பிடப்படுகின்றதே தவிர, பணத்தின் அளவு மாறுவதால், ஒவ்வொரு கட்டத்திலும் விலை மட்டம் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பது விவரிக்கப்பட வில்லை. அதாவது, பணத்தின் அளவிற்கும் விலைமட்டத் திற்குமிடையே நிலவும் தொடர்பை மட்டுமே பண அளவுக் கோட்பாடு விளக்குகின்றது. ஆனால், விலைமட்டம் எவ் வாறு பாதிக்கப்படுகின்றது என்பது விளக்கப்படவில்லை. உண்மையில் பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்கு மிடையேநிலவும் தொடர்பு ஃபிஷர் கருதும் அளவிற்குநேரிடை யானதும் எளிமையானதுமல்ல; மாறாகக் குழப்பமானதும் மறைமுகமானதுமான தொடர்பேயாகும். எனவே, இக் கோட் பாடு கவைக்கு உதவாத கணித விளக்கம் என்றே கருதப்படு கின்றது. மேலும், 'பணத்தின் அளவு மாறுவதேன்?' என் பதையும் இக் கோட்பாடு விளக்கவில்லை.

(3) இக் கோட்பாடு, உண்மைக்குப் புறம்பானவையும், நடைமுறைக்கு ஒவ்வாதவையுமான எடுகோள்களை அடிப் படையாகக் கொண்டு வரையப் பெற்றுள்ளது. ஃபிஷருடைய சமன்பாட்டில் குறிப்பிடப்படுபவற்றுள் விலைமட்டம் அள வால் நிர்ணயிக்கப்படுவதாகவும், மற்றவை யாவும் மாறாம லிருப்பதாகவும் அனுமானிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவற்றில் ஒவ்வொன்றும் மற்றவற்றைப் பாதிப்பதுடன் மற்ற வற்றால் பாதிக்கப்படக்கூடியவையுமாகும்.

(4) விலைமட்ட உயர்விற்குக் காரணம் பண அளவு அதிகரிப்பே என்று குறிப்பிடுவது முழுவதுமே சரியான கருத்து அன்று. ஏனெனில், விலைமட்ட உயர்வின் விளைவாகவும் பணத்தின் அளவு அதிகரிக்கும் என்று குறிப்பிடுவதும் சம அளவில் சரியான கருத்தேயாகும். ஏனெனில், விலைமட்டம் அதிகரிக்கும்பொழுது தொழில் முயல்வோரிடை ஆர்வ நோக்கு ஓங்குவதால், அவர்கள் இலாபகரமான தொழில்களில் முதலீடு செய்வதற்காக வங்கிகளிடமிருந்து பெருமளவில் கடன் பெறக் கூடும். அதன் விளைவாக பாங்குப் பணத்தின் (ப') அளவு அதிகரிக்கப்படும் அல்லவா? அதாவது, பணத்தின் அளவு சுதந்தரமான ஒரு சக்தி அன்று. ஏனெனில், பணத்தின் அள வானது விலைமட்டம் (வி), வாணிப அளவு (பொ) ஆகிய வற்றைச் சார்ந்துள்ளது. தற்காலத்தில் பொதுவாக வாணிப நிலவரங்களுக்கு ஏற்பவே பணத்தின் அளவு நிர்ணயிக்கப்படு கின்றது. பணத்தின் அளவு (ப) அதிகரிப்பதால், வாணிப

அளவு (பொ) மட்டுமன்றிப் பணத்தின் சுழல் வேகமும் (சு) மாற்றமடையும். அதாவது, ஃபிஷருடைய பண அளவுக் கோட் பாட்டில் காரணமும் விளைவுகளும் குழப்பமடைகின்றன.

விலைமட்டம் அமைவானதாக ஃபிஷரால் அனுமானிக்கப் பட்டுள்ளது. இது தவறான அனுமானமாகும். ஏனெனில், விலைமட்டம் மற்றவற்றை இயக்கவும் கூடும். விலைமட்டம் வாணிப அளவைப் (பொ) பாதிக்கும். விலைமட்டம் உயர் வதால், இலாப நோக்கு ஊக்குவிக்கப்படுவதால் பொருள் களின் அளவு அதிகரிக்கப்படுவது உறுதி. அதாவது, விலை மட்டம் மாறுவதால், வாணிப அளவு மாறுதலடையும். அதன் விளைவாகப் பண அளவும் பணத்தின் சுழல் வேகமும் மாறுதல் அடையவும் கூடும்.

(அ) பணத்தின் சுழல் வேகமானது மாற்றமடையா தெனவும், மற்றச் சக்திகளால் மாற்றப்பட முடியாதெனவும் ஃபிஷர் அனுமானித்துள்ளார். ஆனால், வாணிப அளவும்(பொ) விலைமட்டமும் (வி) மாறும்பொழுது பணத்தின் சுழல் வேகமும் (சு) மாற்றமடையும் என்று பேராசிரியர் பிகு குறிப் பிடுகின்றார்.

(ஆ) வாணிப அளவு (பொ) பெருமளவில் பெருக்க மடையுமாயின், பணத்தின் அளவும் (ப), அதன் சுழல் வேகமும் அதிகரிக்கும்.

(இ) பண அளவு (ப) மாறும்பொழுது சுழல் வேகம் (சு) எதிர்மாறாக மாறுமாயின், பண அளவு மாறுவதால் ஏற்படக் கூடிய விளைவுகள் நீர்த்துப் போகும். சில சமயங்களில் பண அளவு அதிகரிப்பதைக்காட்டிலும் மிகையாக விலைமட்டம் அதிகரிக்கக்கூடும். 1920-ல் செர்மனியில் பணவீக்கம் ஏற் பட்டதற்குக் காரணம், பண அளவு அதிகரித்ததைக்காட்டிலும் சுழல் வேகம் அதிகரித்ததேயாகும். அதாவது, பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொன்றும் மற்றவையுடன் பின்னிப் பிணைந்திருப்பதால், அவற்றுள் எது எதனால் நிர்ணயிக்கப் படுகின்றது என்பதையும், எது எதை நிர்ணயிக்கின்றதென் பதையும் வரையறுக்கவியலாது.

(5) ஃபிஷருடைய சமன்பாட்டில் குறிப்பிட்டுள்ள சக்திகள் மட்டுமே விலைமட்டத்தை நிர்ணயிப்பதாகக் கொள் வதும் தவறாகும். ஏனெனில், சமன்பாட்டில் குறிப்பிடப்

படாத வேறு பல சக்திகளாலும் விலைமட்டம் பாதிக்கப்படக் கூடும். இதனை ஃபிஷரே ஏற்றுக்கொள்கின்றார். வாணிப அளவு அதிகரிக்கும்பொழுது மனித விருப்பங்கள் வேறுபடுதல், தொழில்துறையில் ஏற்படும் மாற்றங்கள், போக்குவரத்து வசதி களில் ஏற்படும் மாறுதல் ஆகியவற்றின் விளைவாக விலை மட்டம் குறைவடையும். பணத்தின் சுழல் வேகம் அதிகரிக் கும்போது, மனிதப் பழக்கவழக்கங்கள், எழுத்தளவுக் கடனின் வளர்ச்சி, போக்குவரத்து வளர்ச்சி ஆகியவற்றாலும் விலை மட்டம் அதிகரிக்கும். பணம் அச்சிடப்படுதல், இறக்குமதி செய்யப்படுதல், பண உலோகச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப் படுதல், புதிதாகக் காகிதப் பணம் வெளியிடுதல், இரட்டை உலோகத்திட்டம் பின்பற்றப்பட்டு மலிவான மற்றொரு பணம் வெளியிடப்படுதல் ஆகியவற்றின் விளைவாகப் பணத்தின் அளவு அதிகரிக்குமாயின், அதற்குச் சமமாக விலைமட்டமும் அதிகரிக்கும். பாங்குத்துறை வளர்ச்சியடைவதாலும், எழுத் தளவுக் கடன்கள் அதிகரிப்பதாலும், பாங்கு வைப்புகள் அதிகரிக்குமாயினும் விலைமட்டம் அதிகரிக்கும். மேற்கூறிய வற்றிற்குப் புறம்பான நிகழ்ச்சிகள் ஏற்படுமாயின் எதிர்மாறான விளைவுகள் ஏற்படும்.

(6) முழு வேலைமட்டம் தொடர்பாக இக் கோட் பாட்டின் அனுமானம் நடைமுறைக்குப் புறம்பானதாகும். ஏனெனில், தற்காலத்தில் எந் நாடுமே வேலைமட்ட நிறைவை எய்துவதில்லை எனலாம். நாட்டின் உற்பத்திக் காரணிகள் பணியில் ஈடுபடுத்தப்படாமலிருக்கும்போது பண அளவு அதிகரிக்குமாயின், உற்பத்தியும் அதிகரிப்பதால் வேலை மட்டம் அதிகரிப்பதற்கில்லை. நாட்டில் உற்பத்தியில் ஈடுபடுத் தப்படாத காரணிகள் இருக்கும்வரையிலும், பண அளவு அதிகரித்திடினும் வேலைமட்டம் அதிகரிப்பதில்லை. ஆனால், முழு வேலைமட்டம் எய்திய பின்னர், பண அளவின் அதி கரிப்பு விலைமட்டத்தைப் பாதிக்கும். அதாவது, வேலை மட்ட நிறைவு அடைந்த பின்னரே ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய விளக்கமாகப் பண அளவுக் கோட்பாடு அமைந் துள்ளது. எனினும், குறை வேலைமட்டம் நிலவும்போதுகூட, உற்பத்தித்துறையில் காணப்படும் இக்கட்டுகளின் விளை வாகப் பண அளவு அதிகரிப்பதைத் தொடர்ந்து விலை மட்டமும் அதிகரிக்கக்கூடுமென்று கெயின்சு கருதுகின்றார்.

(7) இச் சமன்பாட்டில் குறிப்பிடப்படும் பண அளவு (ப) ஒரு குறிப்பிட்ட நேரத்தில்[1] புழக்கத்தில் உள்ள தொகை

[1] At a point of time

யாகும். பணத்தின் சுழல் வேகம் (சு) ஒரு கால இடை வெளியில்[1] நிலவும் தொகையாகும். ஆகவே, ப × சு என்பது ஒப்புமை அற்ற இருவேறு இனங்களின் பெருக்குத் தொகை யாகும். இக் குறைபாட்டினாலும் ஃபிஷருடைய சமன்பாட்டின் சிறப்பு குறைவடைகின்றது.

(8) இச் சமன்பாட்டில் அனைத்துப் பொருள்களின் சராசரி விலைமட்டமே கருதப்படுவதால், பணத்தின் மதிப்பை நிர்ணயிப்பதற்கான குறிப்பான அளவை எதுவும் குறிப்பிட வில்லை. எனவே, இக் கோட்பாடு எவருக்குமே பயன்படாத மேலோட்டமான விளக்கமாகவே கருதப்பட வேண்டும். மேலும், பல வகைப் பணப்பேரங்களின் சராசரி மதிப்பை நிர்ணயிப்பதற்கு மட்டுமே இக் கோட்பாடு உதவுமே தவிர, பணத்தின் வாங்குந்திறனை நிர்ணயிக்கும் முறை இக் கோட் பாட்டில் விளக்கப்படவில்லை. எனவே, பணத்தின் வாங்குத் திறனை நிர்ணயிப்பதில் முழுதும் நம்ப முடியாத கோட்பாடு என இதனைக் கெயின்சு குறிப்பிடுகின்றார்.

(9) ஃபிஷரின் சமன்பாட்டில் பொது விலைமட்டத்தின் போக்கினைப்பற்றி விவரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பொருளின் விலைமட்டப் போக்கும் விவரிக்கப்படவில்லை. அதாவது, நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்வு செய்ய இது பயன்படவில்லை.

(10) விலைமட்டம், உற்பத்தி ஆகியவற்றின் சுழற்சியான நடவடிக்கைகள்பற்றி இக் கோட்பாட்டில் எதுவும் விளக்கப் படவில்லை. இக் கோட்பாட்டின் குறைபாடுகளை வரலாற்று நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன. பொருளாதார மந்தம் நிலவும் போது, பண அளவு அதிகரிப்பினும் விலைமட்டம் அதிகரிப்ப தில்லை. பண அளவு குறையாவிடினும் மக்களின் நீர்மைப் பண விருப்பம் குறைவதால், விலைமட்டம் குறையும். பண அளவு அதிகரிக்காவிடினும், நீர்மைப் பண விருப்பம் குறை வடையுமாயின், விலைமட்டம் அதிகரிக்கும். அதாவது, வாணிபச் சுழல்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்றதான பணவியல் கைகோளை நிர்ணயிப்பதற்குப் பண அளவுக் கோட்பாடு உதவுவதில்லை.

பண அளவு அதிகரிப்பதன் விளைவாக விலைமட்டம் அதிகரிக்கும் என்பது உண்மையாயின், பண அளிப்பை

[1] Over a period of time

அதிகரித்துக்கொண்டே இருப்பதன்மூலம் விலைமட்டத்தைத் தொடர்ந்து அதிகரிக்கச் செய்யவும், பண அளவில் சில மாறுதல்களை மேற்கொள்வதன்மூலம் விலைமட்டத்தை நிலைப்படுத்தவும் முடியும். ஆனால், நடைமுறையில் இவை இயலாதவை என்பதிலிருந்து பண அளவுக் கோட்பாடு குறையுடையதென்பது தெளிவாகின்றது.

(11) ஃபிஷரின் விளக்கத்தை முழுமையான விளக்கமாகக் கெயின்சு கருதவில்லை. ஏனெனில், மக்கள் தமது வருமானம் முழுவதையுமே உடனடியாகச் செலவிடுவதாக அனுமானித்துக்கொண்டு ஃபிஷர் தமது சமன்பாட்டை வரைந்துள்ளார். நடைமுறையில் மக்கள் தமது வருமானம் முழுவதையுமே உடனடியாகச் செலவிடுவதில்லை. வருமானத்தில் ஒரு பகுதியை ரொக்கமாக இருப்பில் வைத்துக்கொள்ளக்கூடும். அதாவது, நாட்டில் அளிக்கப்படும் பணம் யாவுமே உறுதிப் பணம் என ஃபிஷர் கருதுவது தவறாகும்.

(12) பண அளவின் மாறுதல்களும் விலைமட்ட மாறுதல்களும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல என்றும், ஏனெனில் அவையிரண்டும் வருமானம், செலவு, சேமிப்பு, முதலீடு ஆகிய அடிப்படைச் சக்திகளால் ஏற்படுபவை என்றும் கெயின்சு குறிப்பிடுகின்றார்.

சேண்ட்லர்[1] என்பார், ஃபிஷரின் சமன்பாட்டில் ப, சு, பொ ஆகியவை விலைமட்டத்தை நிர்ணயிக்கும் உடனடியான சக்திகளாகக் கருதப்படினும், அவை உண்மையான சக்திகள் அல்ல. ஆனால், அவை யாவுமே பல்வேறு சக்திகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. அவை பொருளாதார, தொழில் நுணுக்க, பணவியல், அரசியல் சக்திகளால் நிர்ணயிக்கப்படுவதாகக் குரிகாரா குறிப்பிடுகின்றார். அதாவது, பணத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் சக்திகள் சமன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சக்திகளுக்கு அப்பாலும் உள.

பணத்தின் மதிப்பு மாறுவதற்கான உண்மைக் காரணம் பணத்துறை அமைப்பு அன்று ; வாணிப நிலையே ஆகும்.

பணத்தின் மதிப்பு மாறுவதற்கான உண்மைக் காரணம், ஃபிஷருடைய சமன்பாட்டிற்கும் அப்பாற்பட்டதெனபெுன்காம் குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாக, மக்கள் தொகை

[1] Chandler

வளர்ச்சியடைவது, பணக்கூலி அதிகரிப்பது போன்ற நிகழ்ச்சிகளின் விளைவாகவும் விலைமட்டம் அதிகரிக்கக்கூடுமல்லவா ?

(13) சமன்பாட்டில் குறிப்பிடப்படும் சக்திகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் விலைமட்டத்தை இயந்திரங்களைக் கட்டுப்படுத்துவதுபோல் எளிதில் கட்டுப்படுத்தி விடலாம் என்று ஃபிஷர் கருதுகின்றார். நுகர்வோர், உற்பத்தியாளர்கள் போன்றோர் சேமிப்பு மற்றும் முதலீடு தொடர்பாக மேற்கொள்ளும் முடிவுகள் விலைமட்டத்தைப் பாதிக்குமெனும் உண்மையை ஃபிஷர் கருதவில்லை. அதாவது, மனித முயற்சிக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை.

பணம் தானாகவே இயங்கி விலைமட்டத்தை நிர்ணயிப்பதில்லை. பொதுமக்கள் பணத்தைப் பயன்படுத்தும் முறைக்கு ஏற்பவே விலைமட்டம் அமையும். உண்மையில், விலைமட்டத்தை நிர்ணயிப்பது பொதுமக்களின் செலவேயாகும்.

(14) இக் கோட்பாடு ஓர் ஒருதலைப்பட்ட கோட்பாடாகும். விலைமட்டமானது பணத்தின் அளவால் நிர்ணயிக்கப்படுவதாக விளக்கப்படும்பொழுது, பணத்தின் அளிப்பிற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதே தவிர, பணத்தின் தேவைக்கு உரிய இடம் அளிக்கப்படுவதில்லை. பணத்திற்கான தேவையானது மாறுவதில்லை எனும் அனுமானத்தின் மீது இக் கோட்பாடு வரையப்பட்டுள்ளது. அதாவது, ஃபிஷருடைய சமன்பாட்டில் பணம் பரிவர்த்தனையில் ஓர் இடையீட்டுக் கருவியாகப் பயன்படும் பணிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படுவதுடன், பண மதிப்பின் ஒரு நிலையில் ஏறும் பணி புறக்கணிக்கப்பட்டுள்ளது. அதாவது, பணத்திற்கான தேவையை நிர்ணயிக்கும் சக்திகளும், அவற்றின் விளைவுகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

(15) பண அளவுக் கோட்பாடு, வட்டிவீதத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு வரையப்படாமையால், அதனை முழுமையான கோட்பாடாக ஏற்றுக்கொள்ளக் கூடாது.

பண அளவில் ஏற்படும் மாறுதல்கள் முக்கியமானவை எனினும், வட்டிவீதத்தில் ஏற்படும் மாறுதல்களே மிக முக்கியமானவையாகும். பண அளவு அதிகரிக்குமாயின் பண அளிப்பு அதிகரிப்பதால், வட்டிவீதம் குறைவடையும். வட்டி

விகிதம் குறைவடைவதால் முதலீட்டுச் செலவும், நுகர்வுச் செலவும் அதிகரிப்பதன் விளைவாக விலைமட்டம் மாற்ற மடையும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வட்டிவீதத் தைப்பற்றிக் குறிப்பிடாமையால் பண அளவுக் கோட் பாட்டை முழுமையான கோட்பாடாகக் கருதவியலவில்லை.

(16) ஃபிஷரின் கோட்பாடு சலனமற்ற ஒரு கோட்பாடு எனவும், சலனமிக்க பொருளாதார உலகில் ஏற்றுக்கொள்ளப் படக்கூடியது அன்றென்றும் கருதப்படுகின்றது. மற்ற நிபந்தனைகள் மாறாமலிருக்கும் நிலையில் மட்டுமே இக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், 'மற்ற நிபந்தனைகள்' இயக்கமிக்க உலகில் எப்போதும் மாறிக் கொண்டேயிருக்கின்றன. ஆதலால், இயக்கமிக்க உலகில் நிகழும் வாணிபச் சுழல்களை ஆராய்வதற்கு இக் கோட்பாடு பயன்பட மாட்டாது.

(17) ஃபிஷரால் உருவாக்கப்பட்ட 'ப × சு = பொ × வி' எனும் இச் சமன்பாடு, மதிப்புபற்றிய பொதுக் கோட்பாட்டி லிருந்து பணக் கோட்பாட்டைச் செயற்கையாகப் பிரித்து வைப்பதாகவும் கெயின்சு குறிப்பிடுகின்றார்.

முடிவுரை : பண அளவுக் கோட்பாடு, விலைமட்ட மாறு தல்களைப்பற்றிப் போதுமான அளவில் விளக்குவதில்லை. பண அளவு மாறுவதன் விளைவுகளை விளக்கிடினும், அவ் விளைவுகள் ஏற்படும் விதத்தை விளக்குவதில்லை. தர்க்க ரீதியாக இக் கோட்பாடு சரியானதுதான் எனினும், நடை முறையில் தவறான முடிவை நல்குவதாகும்.

இருப்பினும், பாங்கு வட்டிவீதக் கொள்கை வெளி அங்காடி நடவடிக்கைகள் ஆகிய பணவியல் நடவடிக்கைகள் இக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

தற்காலத்தில் பணவியல் பொருளாதாரத்தில் இக் கோட் பாட்டிற்கு ஒரு வரம்பிற்குட்பட்ட இடமே அளிக்கப்படு கின்றது. குறிக்கோள்களையும் விளக்கங்களையும் அளிப் பதற்கு ஏற்ற சாதனமாக அது கருதப்படுவதில்லை. இருந்த போதிலும் மட்டற்ற பணவீக்கம் நிலவும்போது பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்கும் இடையே நிலவும் தொடர்பை விளக்குவதிலும், பணத்தின் அளவைக் கட்டுப் படுத்துவதன்மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்று உணர்த்துவதிலும் இக் கோட்பாடே உதவுகின்றது.

பண அளவுக் கோட்பாட்டின் ரொக்க இருப்பு ஆய்வு முறை (அமெரிக்கச் சமன்பாடும் கேம்பிரிட்ஜ் சமன்பாடும்)

பரிவர்த்தனைச் சமன்பாட்டை முதலில் அளித்தவர் ஜே.எஸ். மில் என்பவராவார். அச் சமன்பாட்டிற்கு முழு உரு அளித்துப் பிரபலப்படுத்தியவர் இர்விங் ஃபிஷர் ஆவார். அமெரிக்க நாட்டைச் சார்ந்த இர்விங் ஃபிஷரால் அளிக்கப் பட்ட அச்சமன்பாடு ஃபிஷரின்சமன்பாடெனவும், அமெரிக்கச் சமன்பாடு எனவும் பெயர் பெற்றது. இருபதாம் நூற்றாண் டின் தொடக்க காலத்தில் ஃபிஷருடைய பெரு முயற்சியின் விளைவாக, அமெரிக்காவில் பரிவர்த்தனைச் சமன்பாடு பிரபலமாக விளங்கியது. இதே காலத்தில் ஐரோப்பாவில் சிறிது வேறுபட்ட ஆய்வு முறையான ரொக்க இருப்பு ஆய்வு முறை தோன்றியது. ரொக்க இருப்பு ஆய்வு முறையின் முன்னோடி பேராசிரியர் ஆல்ஃபிரட் மார்ஷல் ஆவார். ரொக்க இருப்பு ஆய்வு முறையை உருவாக்கிய பொருளாதார அறிஞர் களான பிகு, ராபர்ட்சன், கெயின்சு போன்றோர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவர்கள். ஆதலால், அவர்களால் அளிக்கப்பட்ட ஆய்வு முறையைக் கேம்பிரிட்ஜ் சமன்பாடு அல்லது பண அளவுக் கோட்பாட்டின் ரொக்க இருப்பு ஆய்வு முறை என்று அழைக்கின்றோம்.

பணம் உருவில் தட்டையாகவும் வட்டமாகவும் உள்ளது. பணத்தின் உருவ அமைப்பானது அதனுடைய பணிகளைப் பிரதிபலிக்கின்றது. பணத்தின் இரண்டு அடிப்படைப் பணிக ளாவன: (1) மதிப்பின் நிலைக்களனாக— மதிப்பின் வைப்பாக இருப்பது; (2) பரிவர்த்தனைச் சாதனமாகப் பயன்படுவது. ஒன்று சேகரிப்பதற்கும், மற்றொன்று வட்டமாகச் சுற்றி வருவ தற்கும் பயன்படுகின்றது. அதாவது, பணம் தட்டையாக இருப்பதால் மதிப்பின் வைப்பாகவும், அது வட்டமாக இருப்ப தால் பரிவர்த்தனைச் சாதனமாகவும் பணி புரிகின்றது. இவ் விரு முக்கியப் பணிகளில் ஃபிஷரின் சமன்பாடு ஒரு பணியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஃபிஷர், தம் முடைய சமன்பாட்டில் பணத்தை ஒரு பரிவர்த்தனைச் சாதன மாக மட்டுமே கருதி, அதன் மதிப்பிலேற்படும் மாற்றத்திற் கான காரணங்களைப்பற்றி ஆராய்கின்றார்.

ரொக்க இருப்பு ஆய்வு முறை, பணத்தை மதிப்பின் வைப்பாகக் கருதி, பணத்தின் மதிப்பிலேற்படும் மாற்றத்திற்

கான காரணத்தைப்பற்றி ஆராய்கின்றது. கேம்பிரிட்ஜ் சமன்பாட்டின் உட்கருத்து பின் வருமாறு:

பணத்தின் மதிப்பானது அதனுடைய அளிப்பாலும் அதற்கான தேவையாலுமே நிர்ணயிக்கப்படுகின்றது. எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் பணத்தின் அளிப்பானது பணத்திற்கான தேவைக்குச் சமமாகவிருக்கும். பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாறுதலானது, பணத்தின் அளிப்பிலோ அல்லது அதற்கான தேவையிலோ அல்லது அவை இரண்டிலுமோ ஏற்படும் மாற்றத்தால் உண்டாவதே ஆகும்.

ரொக்க இருப்பு ஆய்வு முறையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பணத்தின் அளிப்பு, பணத்திற்கான தேவை ஆகியவை மட்டுமே ஆராயப்படுகின்றன.

கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் பணத்தின் அளிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருக்கும் பணத்தின் அளவைக் குறிக்குமே தவிர, ஒரு கால இடைவெளியில் புழக்கத்திலுள்ள பணத்தின் அளவைக் குறிக்காது. ஆதலால், பணத்தின் சுழல் வேகம், கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் கருதப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிலவும் பணத்தின் அளிப்பானது, மக்களிடம் இருக்கும் செலாவணி, மற்றும் வங்கிகளிடம் இருக்கும் காசோலைகள்மூலம் எடுக்கப்படக்கூடிய வைப்புகள் ஆகியவற்றின் கூடுதல் தொகையாகும்.

ஃபிஷருடைய சமன்பாட்டில் பணம் பரிவர்த்தனைச்சாதனமாகப் பயன்படுத்தப்படுவதற்காகவே தேவைப்படுகின்றது என்று கருதப்படுகின்றது. இதற்கு எதிர்மாறாக, கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் பணத்தின் மதிப்பு வைப்புப் பணிக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் பணத்திற்கான தேவை என்பது ரொக்கத்திற்கான தேவையே என்று கொள்ளப்படுகின்றது. எவ்வாறு வீடுகளுக்கான தேவை என்பது விற்பனை செய்வதற்காக வாங்குவோரால் ஏற்படாமல், வீட்டில் குடியிருப்பதற்காக வாங்க விரும்புவோரால்மட்டுமே ஏற்படுகின்றதோ, அதைப் போல், பணத்திற்கான தேவை என்பது அதை வைத்திருக்க விரும்புவோரால் ஏற்படுவதே தவிர, அதை மற்றவர்களிடம் கொடுத்துவிட விரும்புவோரால் ஏற்படுவதில்லை. எனவே, ஒரு பகுதியில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிலவும் பணத்திற்கான தேவையானது அப் பகுதியில், அந்த நேரத்தில் வாழ்வோர் வைத்துக்கொள்ள விரும்பும் ரொக்கத்தின் அளவையே

குறிப்பதாகும். பொதுவாக, பொதுமக்கள் அனைவரும் தமது வருமானத்தில் ஒரு பகுதியை ரொக்கமாகவே வைத்துக் கொள்ள விரும்புவர். ரொக்கமானது பத்திரமானதாகவும், வசதியாகவும், வாணிப நடவடிக்கைகளை எளிமைப்படுத்துவதாகவும் உள்ளது. ஆனால், ரொக்கமாக வைத்திருப்பதற்கு ஓரளவிற்குத் தியாகம் செய்தாக வேண்டும். ஏனெனில், ரொக்கமாகவே வைத்திருக்க வேண்டுமாயின், அந்த ரொக்கத்தைக் கொண்டு நுகர்ந்திருக்கக்கூடிய பொருள்களை நுகர முடியாமல் போகுமல்லவா ? ரொக்கமாக வைத்திருப்பதால், நுகர்வுப் பொருள்களை நுகர்ந்து திருப்தி அடையவும் முடியாது; முதலீடு செய்து வருமானம் பெறவும் முடியாது. எனவே, தனி நபர் ஒவ்வொருவரும் தமது வருமானத்தை ரொக்கமாக வைத்திருப்பதால் ஏற்படக்கூடிய பத்திரத்தன்மை மற்றும் வசதிகள் ஆகியவற்றையும் அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய தியாகம், வருமான இழப்பு ஆகியவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்து, அவருக்கு அதிகப் பயனளிக்கக்கூடிய முடிவை மேற்கொள்வது அவசியமாகின்றது.

பொதுமக்கள் தமது வருமானத்தில் ஒரு பகுதியை ரொக்கமாக வைத்துக்கொள்வதற்கு மூன்றுவித நோக்கங்கள் காரணங்களாகின்றன :

1. பேர நோக்கம்[1]**:** பொதுமக்களுடைய வருமானம் வரும் காலத்திற்கும், செலவுகள் மேற்கொள்ளப்படும் காலத்திற்கு மிடையேயுள்ள இடைவெளியை இணைக்கும் பாலமாகவே ரொக்கத்தை வைத்துக்கொள்ள மக்கள் விரும்புகின்றனர். பொதுமக்கள் தம்முடைய வருமானங்களைக் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே சம்பளமாகவும், கூலியாகவும், இலாபமாகவும், வாரமாகவும் பெறுகின்றனர். ஆனால், அவர்களுடைய செலவுகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. செலவுகள் அன்றாட நிகழ்ச்சிகளாகும். வருமானம் குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே கிட்டுவதாகும். அன்றாடம் வருமானம் கிட்டுமாயின், ரொக்கம் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியமே எழுவதில்லை. ஆனால், வருமானமோ மாதத்திற்கு ஒரு முறை கிட்டுவதானால், மாதத்தின் தொடக்கத்திலிருந்து அடுத்த மாதச் சம்பளம் வரும் வரையிலும் அன்றாடச் செலவுகளுக்காகப் பெருமளவிற்கு ரொக்கமாக வைத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. வருமானம்

[1] Transaction Motive

ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வருவதாயின், மேலும் பெரும் தொகையை ரொக்கமாக வைத்துக்கொள்வது அவசியமாகும். அதாவது, வருமானம் வரும் கால இடைவெளி அதிகமாக அதிகமாக, வைத்திருக்க வேண்டிய ரொக்கத்தின் அளவும் அதிகமாகும். இவ்வாறு பேர நோக்குடன் பொதுமக்கள் வைத்திருக்க விரும்பும் ரொக்கமானது அவர்களுடைய வருமானத்தின் அளவைப் பொறுத்ததாகும். பேர நோக்கத்தில் வருமான நோக்கமும் வாணிப நோக்கமும் அடங்கியுள்ளன.

வருமான நோக்கம் என்பது, பொதுமக்கள் தமது அன்றாடச் செலவுகளுக்காக ரொக்கத்தை வைத்திருக்க விரும்புவதைக் குறிப்பிடும். வாணிப நோக்கம் என்பது வாணிப நிறுவனங்கள், அவற்றின் பல்வேறு செலவுகளுக்காகவும், அவை ரொக்கத்தை வைத்திருக்க விரும்புவதைக் குறிப்பிடும்.

2. எச்சரிக்கை நோக்கம்[1]**:** பொதுமக்கள் அவர்களுடைய வாழ்வில் ஏதேனும் எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏற்படும்பொழுது தேவைப்படும் என்பதற்காகவும், தமது வருமானத்தில் ஒரு பகுதியை ரொக்கமாகவே வைத்துக் கொள்ள விரும்புகின்றனர். எதிர்காலம் எவ்வாறு இருக்கக் கூடுமென்பதையோ, எவ்விதச் செலவுகள் ஏற்படக்கூடுமென்பதையோ, எந்த அளவிற்கு வருமானம் நிச்சயமாக வரக் கூடுமென்பதையோ எவரும் வரையறுத்துக் கூறவியலாது. எதிர்காலம் பற்றிய ஒருவித நிச்சயமின்மை நிலவுவதால், எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகின்றது. பொதுமக்களின் எதிர்காலம் பற்றிய மனப்போக்கிற்கு ஏற்ப, அவர்கள் தமது வருமானத்தில் ஒரு பகுதியை ரொக்கமாக வைத்துக்கொள்ள விரும்புவர்.

பணத்திற்கான எச்சரிக்கை நோக்கத் தேவையானது அவரவரின் வருமான அளவிற்கு ஏற்பவே அமையும். பொதுமக்களுடைய வருமானத்திற்கு ஏற்ப அமையும் எச்சரிக்கை நோக்க ரொக்கத் தேவையானது ஏறத்தாழ நிலையானதாகவும், வட்டிவீதத்தால் பாதிக்கப்படாததாகவுமிருக்கும்.

3. ஊக இலாப நோக்கம்: பொதுமக்கள் ஊக இலாப நோக்கத்துடன் ரொக்கத்தை வைத்திருக்க விரும்புவதற்கு அடிப்படைக் காரணம் வட்டி வீதத்தில் காணப்படும் நிச்சயமின்மையேயாகும். இலாபமளிக்கும் வாய்ப்புகள் கிட்டும்

[1] Precautionary Motive

பொழுது பணத்துறை முதலீடுகளை மேற்கொள்வதற்காகவே பணத்திற்கான ஊக இலாபத்தேவை தோன்றுகின்றது. ஊக இலாப நோக்கமானது பணத்தின் மதிப்பின் வைப்புப்பணி யுடன் ஓரளவு தொடர்பு கொண்டதாகும். இத் தொகையைச் சரியான சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதன்மூலம் இலாபம் ஈட்ட முடியும். உதாரணமாக, அரசாங்கக் கடன் பத்திரங் களின் எதிர்கால மதிப்பில் எதிர்பார்க்கப்படும் மாறுதல்கள் எவ்வாறு இருக்கக்கூடுமென்பதை ஊகித்து, அதற்கேற்பக் கடன் பத்திரங்களை வாங்குவதன்மூலமோ அல்லது விற்பனை செய்வதன்மூலமோ இலாபமீட்ட முடியும்.

ஊக இலாப நோக்கம் வட்டிவீதத்தால் நிர்ணயிக்கப்படுவ தாகும்; எனவே, வட்டி நெகிழ்ச்சி மிக்கதாகும்; எளிதில் மாறக் கூடியதாகும். பேர நோக்கமானது எச்சரிக்கை நோக்கம் போலின்றி வருமானத்தை நிச்சயிப்பதாகும்.

மேற்காணும் நோக்கங்களால் உந்தப்பட்டு ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் பொதுமக்கள் கூடியவரையிலும் குறைந்த அளவு ரொக்கத்தையே வைத்துக்கொள்ள விரும்பு வார்கள். ஏனெனில், ரொக்கமானது உற்பத்தியற்ற சொத் தாகும். பொதுமக்கள் தமது வருமானம் முழுவதையுமே ரொக்கமாக வைத்துக்கொள்ள மாட்டார்கள்; வருமானத்தில் ஒரு பகுதியையே ரொக்கமாக வைத்துக்கொள்ள விரும்பு வார்கள். பொதுமக்களின் வருமானத்திற்கும், அவர்கள் வசமிருக்கும் ரொக்கத்திற்குமிடையேயான விகிதத்தை ‘வீ’ என்போம். இவ் விகிதம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நேரங் களில் குறைவாக இருக்கும் :

(அ) சுலபமாகக் கடன் பெறுவதற்கும், முதலீடுகளை விரைவில் ரொக்கமாக்கிக்கொள்ளவும் ஏற்ற வகையில் நாட்டில் கடன் துறையும், நிதித்துறையும் வளர்ச்சி பெற்றிருக் கும்பொழுதும், (ஆ) தங்குதடையின்றித் தொடர்ந்து வருமானம் கிட்டும்பொழுதும், (இ) பொதுமக்களிடையில் எதிர்காலத்தில் வருமானம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும்பொழுதும், வருமானத்திற்கும் ரொக்கத்திற்குமிடையேயான விகிதம் குறை வாக இருக்கும். இதற்கு எதிர்மாறாக, கடன்துறையும் நிதித் துறையும் போதிய வளர்ச்சியற்றிருக்கும்பொழுதும் வருமானம் வரும் காலம், முறை, வருமானத் தொகை ஆகியவை தடை படக்கூடுமென எதிர்பார்க்கப்படும்பொழுதும், வருமானத்

திற்கும் ரொக்கத்திற்குமிடையேயான விகிதம் அதிகமாக இருக்கும்.

ஒரு நபர் ரொக்கமாக வைத்துக்கொள்ள விரும்புகின்றார் என்றால், பணத்தின் அலகை வைத்துக்கொள்ள விரும்புகின்றார் என்பது பொருள் அன்று; வாங்குந்திறனைப் பண உருவில் வைத்துக்கொள்ள விரும்புகின்றார் என்பதே உண்மையாகும். ஒரு நபர் ஒருமுறை தாம் வைத்துக்கொள்ள வேண்டிய வாங்குந்திறனை நிர்ணயித்துவிட்டால், அதற்குப் பின்னர் விலைமட்டம் மாறுவதற்கு ஏற்ப அவர் வைத்திருக்க வேண்டிய பணத்தின் அளவும் மாறுதலடையும். உதாரணமாக, ஒருவர் 500 அலகு பொருள்களை வாங்குந்திறன் தம்மிடம் இருக்க வேண்டுமெனக் கருதும்பொழுது விலைமட்டம் 2 ரூபாயாக இருப்பின், அவரிடம் ரூ. 1000 இருக்கவேண்டும். விலைமட்டம் ரூ. 10ஆக இருப்பின், அவரிடம் ரூ. 5000 இருக்க வேண்டும்.

பணத்தின் அளிப்பும், பணத்திற்கான தேவையும் சமமாக இருக்கும்பொழுது நிர்ணயிக்கப்படும் விலையே சரியான விலைமட்டமாகும். இச் சரியான விலைமட்டத்தைக்காட்டிலும் விலைகள் அதிகரிக்குமாயின், மக்கள் தம்மிடம் உள்ள ரொக்கம் குறைவானது என்று கருதுவர். எனவே, அவர்கள் தமது செலவைக் குறைத்துக்கொள்வதன்மூலமோ அல்லது கூடுதல் பண்டங்களையும், பணிகளையும் விற்பனைக்கு அளிப்பதன் மூலமோ தமது ரொக்கத்தை அதிகரித்துக்கொள்ள முயல்வர். அதன் விளைவாக விலைகள் சரியான விலைமட்டத்திற்குச் சமமாகக் குறைவடையும். இவ்வாறே விலை குறையுமாயின், பொதுமக்கள் தங்கள் வசமிருக்கும் ரொக்கம் அதிகமானது என்று கருதுவதால் தங்களுடைய செலவை அதிகரிப்பதன்மூலமோ அல்லது விற்றிருக்கக்கூடிய பொருள்களையும் பணிகளையும் விற்பனைக்கு அனுப்பாமலிருப்பதன் மூலமோ தங்களுடைய ரொக்கத்தைக் குறைத்துக்கொள்ள முயல்வதால் விலைகள் சரியான விலைமட்டத்தின் அளவிற்கு அதிகரிக்கும்.

ஒரு நாடு தனது மெய்யான வருமானத்தில் சரிபாதியைப் பண இருப்பாக வைத்துக்கொள்ளத் தீர்மானிப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது இருப்பாக உள்ள பணத்தின் மதிப்பும் ஆண்டு வருமானத்தில் சரிபாதியாக இருக்கும். அவ்வாறே பணத்தின் ஒவ்வோர் அலகின் மதிப்பும் இவ்

விகிதத்திலேயே இருக்கும். இதை ஓர் உதாரணத்தின் மூலம் அறியலாம்: ஒரு நாட்டின் ஓர் ஆண்டின் மெய்யான வருமானம் 1000 மூட்டை நெல் என்று வைத்துக்கொள்வோம். அந் நாடு அதன் மெய்யான ஆண்டு வருமானத்தில் சரிபாதியை ரொக்க மாக வைத்துக்கொள்ளத் தீர்மானிப்பதாகவும் வைத்துக்கொள் வோம். அப்போது அதன் பண அளவு 500 மூட்டை நெல் லுக்குச் சமமானதாக இருக்கும். மேலும், அந் நாட்டின் பண அளவு ரூ. 1000 என்று வைத்துக்கொண்டால், ஒரு ரூபாய் $\frac{1}{2}$ மூட்டை நெல்லுக்குச் சமமாக இருக்கும். நெல்லின் விலை 1 மூட்டை ரூ. 2ஆக இருக்கும்.

மேற்காணும் விளக்கத்தைக் குறிக்கணக்கியல் மூலமும் விளக்கலாம். ஒரு நாட்டின் ஓர் ஆண்டின் மெய்யான வருமா னத்தை 'வ' என்று குறிப்போம். வருமானத்திற்கும், ரொக்க மாக வைத்துக்கொள்ளும் தொகைக்குமுள்ள வீதத்தை 'வீ' என்று குறிப்போம். அவ்வாறாயின், நாட்டில் உள்ள மொத்தப் பணத்தின் மதிப்பு 'வீவ' ஆகும். நாட்டிலுள்ள பணத்தின் அளவை ப 'ப' என்று வைத்துக்கொண்டால், ஓர் அலகு பணத்தின் மதிப்பு $\frac{\text{வீவ}}{\text{ப}}$ ஆகும். ஓர் அலகு பணத்தின் மதிப்பு, விலைமட்டத்திற்குத் தலைகீழானது. ஆதலால், $= \frac{\text{ப}'}{\text{வ வீ}}$ ஆகும்.

ஃபிஷரின் சமன்பாடும் கேம்பிரிட்ஜ் சமன்பாடும்: (1) ஃபிஷருடைய சமன்பாட்டில் 'பொ' என்பது பணத்திற்கு ஈடாகப் பரிவர்த்தனைக்குள்ளாகும் பொருள்கள் மற்றும் பணி களின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பதாகும். கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் 'வ' என்பது மெய்யான வருமானத்தை–அங்கா டிக்கு வரும் இறுதிப் பொருள்களைக் குறிப்பதாகும். அதாவது, கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் மொத்த உற்பத்தியில் கோதுமை சேர்க்கப்படுவதில்லை; ரொட்டி மட்டுமே சேர்க்கப்படும்.

(2) ஃபிஷருடைய சமன்பாட்டில் விலைமட்டம் உற்பத்தி யின் ஒவ்வொரு கட்டத்திலும் பங்கு பெறும் அனைத்துப் பொருள்கள், மற்றும் பணிகளின் சராசரி விலையேயாகும். கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் குறிப்பிடப்படும் விலைமட்டம் உற்பத்தித் துறையிலிருந்து இறுதியாக நுகர்ச்சிக்குக் கிட்டும் பொருள்களின் விலைமட்டமாகும். ஆயினும், இரு சமன்பாடு களிலும் காணப்படும் விலைமட்டங்கள் ஒரே வகையில் மாறக்

கூடும்; ஆனால், சம அளவில் மாறுவதில்லை. அவ்வாறே ஃபிஷருடைய 'பொ'வும், கேம்பிரிட்ஜ் சமன்பாட்டின் 'வ'வும் ஒரே போக்கில் மாற்றமடைந்தாலும் ஒரே அளவில் மாற்ற மடைவதில்லை.

(3) பணத்தின் சுழல் வேகத்திற்கு (சு) இரு சமன்பாடு களும் வெவ்வேறு பொருள்களை அளிக்கின்றன. ஃபிஷரின் சமன்பாட்டில் அது பேரச் சுழல் வேகமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பண அலகும், பேர நடவடிக்கைகளுக்காக எவ்வளவு முறை சுழன்றது என்பதை அது குறிக்கும். கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் வருமானச் சுழல் வேகமே கருதப் படுகின்றது. இறுதிப் பொருளை வாங்குவதற்காக ஒவ்வோர் அலகு பணமும் எவ்வளவு முறை சுழன்றது என்பதையே அது குறிப்பிடுகின்றது. எனவே, ஃபிஷரின் சமன்பாட்டில் காணப் படும் சுழல்வேகமும், கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் காணப்படும் வருமான ரொக்க வீதமும் எதிரெதிரானவை ஆகும். சுழல் வேகம் அதிகரிக்கும்பொழுது வருமான-ரொக்க வீதம் குறை யும். சுழல்வேகம் குறையும்பொழுது வருமான-ரொக்க வீதம் அதிகரிக்கும்.

கேம்பிரிட்ஜ் சமன்பாடு வருமான-ரொக்க வீதத்தை நிர்ண யிப்பதில் மெய்யான வருமானத்திற்கும் அளவிற்கும் அதிகமாக முக்கியத்துவம் அளிக்கின்றது. மக்களுடைய பண வழக் கங்கள், வாணிப ஒருங்கிணைப்புகள், விலைமட்டம் போன்ற வையும் மெய்யான வருமானத்தைப் போன்றே வருமான-ரொக்க வீதத்தை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கேற்கின்றன என்பது இக் கோட்பாட்டில் கருதப்படவில்லை.

மூலதனப் பொருள்கள், நுகர்ச்சிப் பொருள்கள் போன்ற பலவகைப் பொருள்களிடையிலும் பொதுவான தேவையானது எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்பதையும், வேலை மட்டம், விலைமட்டம், வருமானம் ஆகியவற்றை அஃது எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் கேம்பிரிட்ஜ் சமன்பாடு கருதுவதில்லை.

ரொக்க இருப்பு ஆய்வுமுறையில் ஒருவிதச் சுழல்வாதம் காணப்படுகின்றது. இவ்வாய்வு முறையில் விலை மட்டம் அல்லது பணத்தின் மதிப்பை மக்களுடைய ரொக்க விருப்பம் நிர்ணயிப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. அதே சமயத்தில் விலைமட்டம் அல்லது பணத்தின் மதிப்பு மக்கள் விரும்பும்

ரொக்கத்தின் அளவை நிர்ணயிப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது. ஆக இவையிரண்டில் எது எதனை நிர்ணயிக்கின்றதென்பது தெளிவாக வரையறுக்கப்படவில்லை.

(4) இக் கோட்பாடு, பணத்திற்கான தேவை நெகிழ்ச்சியானது தொடர்ந்து ஒன்றுக்குச் சமமாகவே இருப்பதாக அனுமானிக்கின்றது. இவ்வனுமானம் சலனமற்றப் பொருளாதாரத்திற்கே ஏற்றதாகும்; இயக்கப் பொருளாதாரத்திற்கு ஏற்றதன்று.

(5) பணத்திற்கான தேவையை நிர்ணயிக்கும் சக்திகளைப் பற்றி இக் கோட்பாடு முழுமையாக ஆராயவில்லை. குறிப்பாக ஊக இலாப நோக்கினால் ஏற்படும் பணத்திற்கான தேவைபற்றிக் கருதப்படவில்லை. ஆனால், ஊக இலாப நோக்கம், பொதுமக்களுடைய ரொக்க விருப்பத்தில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தக் கூடியதாகும்.

(6) பரிவர்த்தனைச் சமன்பாட்டைப் போலவே இச் சமன்பாடும் வருமான-ரொக்க வீதமும். பொருள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப்படும் அளவு மாறுவதில்லை என்று அனுமானிப்பதால், பரிவர்த்தனைச் சமன்பாட்டில் காணப்படும் குறைகள் யாவும் இச் சமன்பாட்டிலும் காணப்படுகின்றன எனலாம்.

(7) குறுங்காலத்தில் பண அளவில் ஏற்படும் மாறுதல்கள் உற்பத்தி அளவையும், விலைகளையும் பாதிக்கும் என்று குறிப்பிட்டாலும், விலைகள் எந்த அளவிற்கு மாறும் என்பதையும், உற்பத்தி என்ன விகிதத்தில் மாறுதலடையும் என்பதையும் இச் சமன்பாடு விளக்கவில்லை.

(8) வாணிபச் சுழல்களின் போக்கில் பூரிப்பைத் தொடர்ந்து மந்தம் ஏற்படுவதும், மந்தத்தைத் தொடர்ந்து பூரிப்பு ஏற்படுவதும் ஏன் என்பதை இக் கோட்பாடு விளக்கவில்லை.

(9) கேம்பிரிட்ஜ் சமன்பாடு விலைமட்டம் எதனால், எவ்வாறு மாறுகின்றதென்பதை முழுமையாக விளக்கவில்லை. வட்டிவீதம் அதனால் ஏற்படும் விளைவுகளை இச் சமன்பாடு கருதவில்லை. பண அளவில் ஏற்படும் மாறுதல்கள், அதனால் உற்பத்தி, மற்றும் விலைகளில் ஏற்படும் மாறுதல்கள் பற்றிப் போதிய கவனம் செலுத்தப்படவில்லை.

(10) ரொக்க இருப்பு ஆய்வு முறை, விலைமட்ட மாறுதல்களை விளக்கும் உண்மையான சக்திகளைப்பற்றி விளக்கவில்லை. வருமானம், சேமிப்பு, முதலீடு ஆகியவை புறக்கணிக்கப்பட்டுள்ளன. பணத்திற்கான தேவையிலேற்படும் மாற்றங்கள், பணத்தின் மதிப்பை மாற்றும் என்று குறிப்பிடப்பட்டிருப்பினும், பணத்திற்கான தேவையில் ஏற்படும் மாறுதல்களின் அடிப்படைக் காரணங்கள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. ரொக்க இருப்பு ஆய்வுமுறையில் குறைகளிருப்பினும், பொதுமக்களின் ரொக்க விருப்பம் பற்றிய முடிவுகள் விலைமட்டத்தை எவ்வாறு பாதிக்கின்றதென்பதை விளக்குவது இக் கோட்பாட்டின் சிறப்பாகும். பணத்திற்கான தேவையில் ஏற்படும் மாற்றங்களையும் பணத்தின் மதிப்பையும் தொடர்பு படுத்துவது இக் கோட்பாட்டின் சிறப்பாகும்.

வருமானம் மற்றும் செலவு விளக்கம்[1]

வருமானக் கோட்பாடு[2]: முதல் உலகப்போருக்குப் பின்னர், குறிப்பாக 1929ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மந்தத்திற்குப் பின்னர், பணவியல் கோட்பாடுகளின் வரலாற்றில் வருமானம், மற்றும் செலவு விளக்கம் ஒரு திருப்பு மையமாகும். பணம், விலைமட்டம், பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றிடை நிலவும் தொடர்பை விளக்கும். இக் கோட்பாடு உருவாவதற்கு விக்செல்[3], அஃப்டேலியன்[4], ஷீம்பீட்டர்[5], ஹாட்ரே[6], ராபர்ட்சன்[7], கெயின்சு[8] போன்றோர் உழைத்துள்ளனர்.

பணத்தின் மதிப்பை ஆராய்வதற்கு உதவும் பழைமையான பண அளவுக் கோட்பாட்டில் காணப்படும் குறைகளே, புதுமையான வருமானக் கோட்பாடு தோன்றுவதற்குக் காரணங்களாகும். பண அளவுக் கோட்பாட்டினர், பண அளிப்பில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகவே பொருள்கள் மற்றும் பணிகளுக்கான தேவையும், விலைமட்டமும் மாறுவதாகக் கருதினர். ஆனால், பணத் தேவைக்குமிடையே அத்தகைய நெருங்கிய தொடர்பு இருப்பதாக நடைமுறையில் நிரூபிக்கப்படவில்லை.

1 The Income Expenditure Approach
2 The Income Theory
3 Wicksell
4 Aftalion
5 Schumpeter
6 Hawtrey
7 Robertson
8 J. M. Keynes

எடுத்துக்காட்டாக, பணத்தின் அளிப்பு குறையாவிடினும் மொத்தத் தேவை வீழ்ச்சியடைவதால் பொருளாதார மந்தம் ஏற்படுகின்றதல்லவா? வருமானக் கோட்பாட்டினர்[1], பணத்தின் அளிப்பில் ஏற்படும் மாறுதல்களைக்காட்டிலும் வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகவே தேவை மாறுவதாகக் கருதுகின்றனர். பண்டங்களுக்கும், பணிகளுக்குமான மொத்தத் தேவை, சமுதாயத்தின் பண வருமானத்திற்கு ஏற்பவே நிர்ணயிக்கப்படுகின்றது.

பொது மக்களின் பண வருமானம் அதிகரிக்குமாயின், அவர்களுடைய வாங்கும் திறன் அதிகரிப்பதால் பண்டங்களுக்கும் பணிகளுக்குமான தேவை அதிகரிக்கும். பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி நெகிழ்ச்சி மிக்கதாக இருப்பின் மொத்த தேவை அதிகரிக்கும்போது உற்பத்தியும், வேலைமட்டமும் அதிகரிக்கும். விலைமட்டம் பெரும் அளவில் பாதிக்கப்படமாட்டாது. ஆனால், உற்பத்திக் காரணிகள் முழு வேலைமட்டம் எய்திய பின்னரும் உற்பத்திப் பெருக்கத்தை இக்கட்டுகள் தடைபடுத்தும்பொழுதும் உற்பத்தி நெகிழ்ச்சியற்றதாகவோ அல்லது நெகிழ்ச்சி குறைந்ததாகவோ அமையும். அந் நிலையில் தேவைப் பெருக்கத்திற்கு ஏற்ப உற்பத்தி பெருகுவதில்லை. ஆதலால், பொது மக்களின் பண வருமானம் அதிகரிப்பதன் விளைவாக விலை மட்டமும் அதிகரிக்கும்.

அதாவது, நாட்டின் மெய்யான வருமானமும், பண வருமானத்தின் அளவுமே விலைமட்டம், உற்பத்தி, வேலை மட்டம் ஆகியவற்றை நிர்ணயிக்கின்றன. அதாவது, மொத்த வருமானத்தில் ஏற்படும் மாற்றங்கள்தாம் மொத்தத் தேவையை நிர்ணயிக்கின்றனவே தவிர, பணத்தின் அளிப்பில் ஏற்படும் மாற்றங்களன்று. மொத்தத் தேவை பண்டங்கள், மற்றும் பணிகளின் மொத்த அளிப்பு ஆகியவை விலைமட்டத்தையும், பொருளாதார நடவடிக்கைகளையும் மாற்றியமைக்கின்றன. உண்மையில் வருமானத்தின் அளவு, விலைமட்டம், பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு ஏற்பப் பணத்தின் அளிப்பு நிர்ணயிக்கப்படுகின்றனவே தவிர, பணத்தின் அளிப்பிற்கு ஏற்ப வருமானத்தின் அளவு, விலைமட்டம், பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவை நிர்ணயிக்கப்படுவதில்லை. எனவே, பணத்தின் அளவைக்காட்டிலும், மொத்த (கூடுதல்)

1 **Income Theorists**

வருமானமே பணத்தின் மதிப்பை நிர்ணயிக்கப்படுவதாகும் என்பதே இக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாகும்.

இக் கோட்பாட்டின்படி 'வருமானம்' என்பது பண வருமானம், மெய்யான வருமானம் ஆகிய இரண்டையுமே குறிப்பிடும்.

(1) ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு சமுதாயத்தின் கூடுதல் பண வருமானம் என்பது அக் காலத்தில் அச் சமுதாயத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பாகும். கூடுதல் பண வருமானம், கூடுதல் பண உற்பத்திச் செலவிற்குச் (இலாபம் உட்பட) சமமாகும். உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் உற்பத்திக் காரணிகளுக்குத் தொழில் முயல்வோரால் அளிக்கப்படும் ஊதியமே, கூடுதல் பண வருமானத்தை நிர்ணயிக்கும். அதாவது, பல்வேறு உற்பத்திக் காரணிகளிடையும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள ஊதியங்களின் கூடுதல் தொகையே 'பண வருமானம்' ஆகும்.

சமுதாயம் தனது பண வருமானத்தை இரு முக்கிய வகைகளில் பயன்படுத்தும். சமுதாய வருமானத்தில் பெரும் பகுதி புதிய நுகர்வுப் பொருள்களை வாங்குவதற்குப் பயன் படுத்தப்படும்; மற்றொரு பகுதி சேமிக்கப்படும். அதாவது,

வருமானம் = நுகர்வு + சேமிப்பு

வ = நு + சே

இதில் வ வருமானத்தையும்,

நு நுகர்வையும்,

சே சேமிப்பையும்[1] குறிப்பிடுகின்றன.

மேற்காணும் சமன்பாட்டிலிருந்து நுகர்வுப் பொருள்களின் மீது செலவிடப்படாத தொகையே சேமிப்பு என்பது தெளிவாகின்றது. வருமானத்தில் செலவிடப்படாமல் எஞ்சியதே சேமிப்பு ஆகும்.

[1] Income = Consumption + Savings

y = C + S

Where y stands for Income

c stands for Consumption

s stands for Savings

அதாவது

சே = வ — நு[1]

இச் சமன்பாட்டில் செலவிடப்படாது எஞ்சியதே சேமிப்பு என்பது குறிப்பிடப்படுகின்றது. ஆயினும், சேமிக்கப்பட்ட தொகை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடப்படவில்லை. மெய்யான வருமானம் என்பது, சமுதாயத்தின் கூடுதல் உற்பத்தியைக்[2] குறிக்கும். மெய்யான வருமானம் (1) சமுதாயத்தில் உற்பத்தித் துறைக்குக் கிடைக்கக்கூடிய உற்பத்திக் காரணிகளின் அளவையும், (2) அவற்றைப் பயன்படுத்துவதற்குத் தொழில் முயல்வோரால் மேற்கொள்ளப்படும் முடிவுகளையும் பொறுத்ததாகும். உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துவதற்குத் தொழில் முயல்வோரால் எடுக்கப்படும் முடிவுகள் நாட்டில் நிலவும் உறுதித் தேவையால் நிர்ணயிக்கப் படுகின்றது.

(2) கூட்டு மொத்த உறுதித் தேவை[3] என்பது சமுதாயத்தின் கூடுதல் செலவை[4]க் குறிப்பிடுவதாகும். கூடுதல் செலவு என்பது நுகர்வுப் பொருள்கள், முதலீட்டுப் பொருள்கள் ஆகிய அனைத்துப் பொருள்களின்மீதும் செலவிடப்படும் தொகையின் கூடுதல் (தொகை) ஆகும்.

சமுதாயத்தின் நுகர்வுச்செலவை மெய்யான வருமானத்தின் அளவும், பண வருமானத்தைப் பெறுவோரின் நுகர்ச்சி நாட்டமும்[5] நிர்ணயிக்கின்றன. முதலீட்டுச் செலவு, புதிய மூலதனப் பொருள்களின்மீது செலவிடப்படும் தொகையைக் குறிக்கும். முதலீட்டுச் செலவை மூலதனத்தின் இறுதிநிலைத் திறனும்[6], அங்காடியில் நிலவும் வட்டி வீதமும் நிர்ணயிக்கின்றன. மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் என்பது, புதிய மூலதனப் பொருள்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் நிகர வருமான[7]மாகும்.

(3) ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொருளின்மீது செலவிடப்படும் கூடுதல் தொகையானது, விற்பனை செய்யப்பட்ட

[1] S=Y−C
[2] Total output
[3] Aggregate effective demand
[4] Total expenditure
[5] Propensity to consume
[6] Marginal efficiency of capital
[7] Anticipated rate of net return upon the use of new capital goods

பொருள்களின் மொத்த மதிப்பிற்குச் சமமாகும். ஆகவே, சமுதாயத்தின் வருமானமானது நுகர்வுப் பொருளை விற்பனை செய்வதன் மூலமும், முதலீட்டுப் பொருள்களை விற்பனை செய்வதன் மூலமும் கிட்டுவதாகும்.

அதாவது,

கூடுதல் வருமானம் = கூடுதல் செலவு[1]

= நுகர்வுப் பொருள்களின்மீதான செலவுகள் + முதலீட்டுப் பொருள்களின்மீதான செலவுகள்

= நுகர்வுப் பொருள்களின் மதிப்பு + முதலீட்டுப் பொருள்களின் மதிப்பு

= நுகர்வு + முதலீடு

ஆகவே,

வ = நு + மு[2]

இதில் மு — முதலீட்டைக் குறிப்பிடுகின்றது.

(4) பொதுமக்கள் அனைவருடைய வருமானமும் அவர்களுடைய மொத்தச் செலவிற்குச் சமமாகும். ஒருவருடைய வருமானம் என்பது மற்றொருவருடைய செலவாகும். அ என்பவருடைய செலவு ஆ என்பவருடைய வருமானமாகும். ஆ என்பவருடைய செலவு இ என்பவருடைய வருமானம் ஆகும். இவ்வாறு சமுதாயத்தில் ஒருவருடைய வருமானம் மற்றொருவருடைய செலவாக இருப்பதால், நாட்டுமக்கள் அனைவருடைய மொத்த வருமானம் நாட்டுமக்கள் அனைவருடைய மொத்தச் செலவிற்குச் சமமாகும். அதாவது, பொதுமக்களுடைய செலவே அவர்களுடைய வருமானத்திற்குக் காரணமாவதுடன், பொது மக்களின் மொத்த வருமானமும், மொத்த செலவும் சமமானவையாகும்.

(5) அதாவது, வருமானக் கோட்பாட்டினரின் கருத்துப்படி நாட்டின் வருமானம், பொது மக்களிடையில் செலவின்

[1] Total income = Total expenditure
= Expenditure on Consumption goods + Investment goods
= Value of Consumption goods + Investment goods
= Consumption + Investment

[2] $Y = C + I$

புழக்கத்தைப் (சுழற்சியை) பொறுத்ததாகும். மக்களிடையில் செலவு பெருக்கமடைந்தால், பண வருமானமும் பெருக்க மடையும்; செலவு சுருக்கமடைந்தால் பண வருமானமும் சுருக்கமடையும். ஆதலால், பொது மக்களிடையில் செலவு தொடர்ந்து பெருக்கமடைந்தால், பண வருமானமும் தொடர்ந்து பெருக்கமடைந்து பணத்தின் மதிப்பைப் பாதிக்கும்.

(6) சமுதாயத்தின் பண வருமானமே சமுதாயத்தின் செல விடும் சக்தியை நிர்ணயிக்கின்றது. மேலும், சமுதாயத்தின் உறுதித் தேவையால் நிர்ணயிக்கப்படும் மொத்தத் தேவையே சமுதாயத்தின் மெய்யான வருமானத்தை (சமுதாயத்தின் உற் பத்தியை) நிர்ணயிக்கின்றது. அதாவது, சமுதாயத்தின் செலவு மட்டமே சமுதாயத்தின் உற்பத்தி மட்டம், வேலை மட்டம் ஆகியவற்றை நிர்ணயிப்பதாக வருமானக் கோட்பாட்டினர்— குறிப்பாக கெயின்சு—கருதுகின்றனர். தொன்மை நூல் பொரு ளாதார அறிஞர்கள், தேசீய உற்பத்தியும் பணத்தின் அளிப் புமே செலவு மட்டத்தை நிர்ணயிப்பதாகவும், செலவுமட்டம் சமுதாயத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடியதல்ல என்றும் கருதினார்கள். ஆனால், கெயின்சு உற்பத்திச் செலவு மட்டத்தை மாற்றியமைக்குமளவிற்குச் செலவுமட்டம் இயக்கி விடும் தன்மை வாய்ந்தது என்று குறிப்பிடுகின்றார். நாட்டின் மொத்தச் செலவுதான் நாட்டின் உறுதித் தேவையை நிர்ண யிப்பதாகும். நாட்டின் உறுதித் தேவைதான் நாட்டின் உற் பத்திக் காரணிகளின் எந்த அளவு உற்பத்திப் பணிகளில் ஈடுபடுத்தலாம் என்பதை நிர்ணயிப்பதாகும். விலைமட்டத் தைப் போன்றே பொதுமக்களால் செலவிடப்படும் கூட்டுத் தொகையும், வேலைமட்டத்தையும், உற்பத்தியையும் நிர்ண யிக்கக் கூடும்.

(7) அதாவது வருமானம்-செலவுக் கோட்பாட்டின்படி நாட்டின் உற்பத்தியின் அளவையும், உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலையையும் பொதுமக்களின் செலவே நிர்ண யிக்கின்றது. நாட்டில் மொத்த செலவுகள் குறையுமாயின், நாட்டு உற்பத்தியும் (மெய்யான வருமானம்), விலைமட்டமும், பண வருமானமும் குறைவடையும்; பொருளாதார நடவடிக்கை களும் சுருக்கமடையும். மொத்த செலவுகள் அதிகரிக்கும் பொழுது இதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படும்.

(8) அதாவது, வருமானம் மற்றும் மொத்தத் தேவையின் பொருளாதார அடிப்படையிலான விளக்கத்தை விலையின்

வருமானக் கோட்பாடு அளிக்கின்றது. வருமானக் கோட்பாட்டில் விலைமட்டத்தைப் (1) பண வருமானமும், (2) மெய்யான வருமானமுமே நிர்ணயிப்பதாக ஹேன்சென் குறிப்பிடுகின்றார். அதாவது, விலை மற்றும் உற்பத்தி பற்றிய வருமானக் கோட்பாட்டைக் கீழ்வரும் சமன்பாட்டின் மூலம் விளக்கலாம் :

$$வி = \frac{வ^{1}}{உ}$$

இச் சமன்பாட்டில்

வி பொருளின் விலைமட்டத்தையும்,

வ பண வருமானத்தையும்,

உ உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் மற்றும் பணிகளின் அளவைக் (மெய்யான வருமானத்தை) குறிப்பிடுகின்றன.

இச் சமன்பாட்டின்படி உற்பத்தியைக் காட்டிலும் மொத்தத் தேவை அதிகமாயின், விலைமட்டம் அதிகரிக்கும். அதாவது, மெய்யான வருமானத்தைக்காட்டிலும் பண வருமானம் அதிகமாயின், விலைமட்டம் அதிகரிக்கும்; பணத்தின் மதிப்பு குறைவடையும். அதாவது, மெய்யான வருமானத்தைக்காட்டிலும் பண வருமானம் அதிகமாயின், விலைமட்டம் அதிகரிக்கும்; பணத்தின் மதிப்பு குறைவடையும். இதற்கு மாறாக, அதாவது, பண வருமானத்தைக்காட்டிலும் மெய்யான வருமானம் அதிகரிக்குமாயின், விலைமட்டம் குறைவடையும்.

(9) மேற்குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகளை கெயின்சு தமது வருமானம் மற்றும் செலவுக் கோட்பாட்டில் முறையாகவும், விளக்கமாகவும் தெளிவாக்கியுள்ளார். ஆகையால் வருமானம், மற்றும் செலவுக் கோட்பாட்டைச் சேமிப்பு மற்றும் முதலீட்டுக் கோட்பாடாகவும் கருதலாம்.

சேமிப்பு மற்றும் முதலீட்டுக் கோட்பாடு

கெயின்சின் விளக்கத்தின்படி சேமிப்பு, முதலீட்டிற்குச் சமமாகும். வருமானம்(வ) என்பது. நுகர்வு(நு). முதலீட்டை(மு)

[1] $P = \frac{Y}{O}$

Where P represents general price level
Y represents money income
O represents physical volume of goods and services produced i.e. real income

உள்ளடக்கியது என்பதையும், வருமானத்திற்கும் செல விற்கும் இடையில் உள்ள வேறுபாடே சேமிப்பு (சே) என் பதையும் முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம்.

ஆகவே,

வ = நு + மு (வருமானம் = நுகர்வு + முதலீடு)[1]
வ = நு + சே (வருமானம் = நுகர்வு + சேமிப்பு)

ஆதலால்,

மு = வ—நு (முதலீடு = வருமானம்—நுகர்வு)
சே = வ—நு (சேமிப்பு = வருமானம்—நுகர்வு)
∴ மு = சே (முதலீடு = சேமிப்பு) என்பது தெளிவா கின்றது.

நிகழ்கால உற்பத்தியில் நுகர்வுச் செலவு போக எஞ்சியது முதலீடு ஆகும். சேமிப்பு என்பது நிகழ்கால வருமானத்தில் நுகர்வுச் செலவு போக எஞ்சியதாகும். நிகழ்கால வருமானத் தில் நுகர்வுச்செலவு போக எஞ்சியது முதலீடு எனவும் சேமிப்பு எனவும் குறிப்பிடப்படுவதால், முதலீடும் சேமிப்பும் சம மானவையாகும் என்று ஆகின்றது.

மக்கள் தமது வருமானத்தில் சேமிப்பாக எடுத்துக்கொள் ளும் பகுதியைத் தமது வருமானத்தில் முதலீடாகச் சேர்த்து விடுவதால், முதலீடும் சேமிப்பும் சமமாக இருக்கும் வரையில் பொருளாதார அமைப்பு சமநிலையில் இருக்கும் என்று கெயின்சு கருதுகின்றார். அந் நிலையில் உற்பத்தியின் அள வையும் வேலைமட்டத்தையும் மாற்றுவதற்காகத் தொழில் முயல்வோருக்குப் போதிய காரணங்கள் இல்லையாதலால், பொருளாதார நடவடிக்கைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படு வதில்லை. வேலைமட்டம் எந் நிலையில் இருப்பினும், பொருளாதாரச் சமநிலை ஏற்படுவதற்கு முதலீடும் சேமிப்பும் சமமாக இருப்பது ஓர் அடிப்படை நிபந்தனையாகும். வருமான அளவில் ஏற்படும் மாறுதல்களின் விளைவாகவே

[1] $Y = C + I$
$Y = C + S$
Therefore
$I = Y - C$
$S = Y - C$
$\therefore I = S$

முதலீடும் சேமிப்பும் சமமாக இருப்பதாக கெயின்சு கருது கின்றார். ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்திலும் சேமிப்பும், முதலீடும் சமமாக இருந்தால்தான் அக் குறிப்பிட்ட காலத்தில் பண வருமானம் மாறாமல் நிலையாக இருக்கும். முதலீடு மட்டும் அதிகரிக்குமாயின், அதன் விளைவாக அதிகரிக்கப் படும் வருமானத்திலிருந்து கிட்டும் சேமிப்பானது அதிகரிக்கப் பட்ட முதலீட்டிற்குச் சமமாகும் வரையில் வருமானம் அதிகரிக்கும். முதலீடு குறைக்கப்படுமாயின், அதனால் குறைவடையும் வருமானத்திலிருந்து கிட்டும் சேமிப்பு குறைக்கப்பட்ட முதலீட்டின் அளவிற்குச் சமமாகும் வரையி லும் வருமானம் குறையும். இக் கருத்தினை விளக்கமாக இனிக் காணலாம்.

சேமிப்பு-முதலீட்டின் சமநிலை (சே = மு)

சமுதாயத்தின் பணச்சேமிப்பும் சமுதாயத்தால் மேற் கொள்ளப்படும் முதலீடும் சமமாக இருப்பின், சமுதாயத்தின் பொருளாதார அமைப்பும் சமநிலையில் இருக்கும். ஏனெனில், நுகர்வோர், சேமிப்போர், முதலீடு செய்வோர், தொழில் முயல்வோர் ஆகியோரின் முடிவுகள் நாட்டின் வேலைமட்டத் தைப் பாதிப்பதில்லை. செலவின் சுழற்சி மாறுதலால் வருவா யின் போக்கும் மாறுவதில்லை. அந் நிலையில் உறுதித்தேவை மாறுவதில்லையாதலால், தொழில் முயல்வோர், அவர்கள் எதிர் பார்க்கும் இலாபத்தை அடைவர். எனவே, அவர்களே முன் பிருந்த அளவிற்கு வேலை வாய்ப்புகளை அளிப்பர். அதா வது, பொருளாதார அமைப்பு சம நிலையில் இலங்கும். நாடு முழு வேலைமட்டம் அடைந்தபின்னர்தான் இச் சமநிலையை அடைய வேண்டுமென்பதில்லை. நாடு முழு வேலைமட்டம் எய்துவதற்கும் முன்பாகவே பொருளாதார அமைப்பு சம நிலையடையலாம். அதாவது, நாடு முழு வேலைமட்டம் அடையாத நிலையில்கூடச் சேமிப்பும் முதலீடும் சமமடை யலாம்.

பல்வேறு காலங்களுக்கிடையிலும் சேமிப்பும் முதலீடும் சமமாக இருந்தால்தான் பண வருமானமும் சமமாக இருக்கும். இதை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். எடுத்துக் காட்டாக, ஓர் ஆண்டில் ஒரு நாட்டின் பண வருமானம் ரூ. 1000 என்றும், அதில் ரூ. 800 நுகர்விற்காகச் செலவிடப்படுவ தாகவும் வைத்துக்கொண்டால், சேமிப்பு ரூ. 200 ஆகும். 2-வது ஆண்டில் தொழில் முயல்வோர் ரூ. 200-ஐ முதலீடு செய்ய

விரும்பினால், முதலீடும் சேமிப்பும் சமமாகின்றன. 2-வது ஆண்டில் செலவிடப்படும் மொத்தத் தொகையான ரூ. 1000, 3-வது ஆண்டின் உற்பத்திக்காகச் செலவிடப்படுகின்றது. 3-வது ஆண்டிலும் நுகர்வுச் செலவு ரூ. 800 (சேமிப்பு ரூ. 200) ஆயின், முதலீட்டின் அளவு ரூ. 200 ஆகும். சேமிப்பும் முதலீடும் சமமாக வருமானத்தில் 3-வது ஆண்டின் வருமானம் ரூ. 1000 ஆகும். தொடர்ந்து வரும் காலங்களிலும் வருமானம், நுகர்வு, சேமிப்பு ஆகியவை இவ்வாறு இருக்கும்.

முதல் ஆண்டு	2-வது ஆண்டு	3-வது ஆண்டு	4-வது ஆண்டு	5-வது ஆண்டு
வ = 1000	நு = 800	நு = 800	நு = 800	நு = 800
	மு = 200	மு = 200	மு = 200	மு = 200
	வ = 1000	வ = 1000	வ = 1000	வ = 1000
	சே = 200	சே = 200	சே = 200	சே = 200
	மு = சே	மு = சே	மு = சே	மு = சே

சேமிப்பும் முதலீடும் சமநிலையடையாமை: ஒரு நாட்டில் சேமிப்பையும் முதலீட்டையும் மேற்கொள்ளுவோர் வெவ்வேறு பிரிவினர் ஆவர். நுகர்வோர் சேமிக்கின்றனர்; தொழில் முயல்வோர் முதலீடு செய்கின்றனர். சேமிப்பதன் அடிப்படை நோக்கங்கள் முதலீடு செய்வதன் நோக்கங்களி லிருந்து வேறுபட்டவையாகும். முதுமைக் காலத்தில் நிம்மதி யாக வாழ்வதற்கும், தமது வாரிசுதாரர்களுக்கு வசதியான வாழ்வை அமைத்துக் கொடுப்பதற்கும் பணத்தைச் சேமிப்ப தால் மகிழ்வடைவதற்காகவும் நுகர்வோர் தமது வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமிககின்றனர். ஆனால், முதலீட்டிற்கு அடிப்படை இலாப நோக்கு ஆகும். அதாவது, முதலீட்டின் அளவு, வாணிப நிலவரங்களாலும், எதிர்பார்க்கப்படும் இலாப விகிதத்தாலும் நிர்ணயிக்கப்படுகின்றது.

வெவ்வேறு பிரிவு மக்கள் வெவ்வேறு நோக்கங்களுடன் சேமிப்பிலும், முதலீடு செய்வதிலும் ஈடுபடுவதன் விளைவாக, அவை ஒன்றுக்கொன்று சமமாக இல்லாமல் வேறுபடக் கூடும். சில சமயங்களில் முதலீட்டைக்காட்டிலும் சேமிப்பு அதிக மாகலாம்.

சேமிப்பும் முதலீடும் சமமடையாவிடின் ஏற்படும் விளைவுகள்: (1) முதலீடு சேமிப்பைக்காட்டிலும் அதிக மானது (மு > சே). முதலீடும் சேமிப்பும் சமமாகவிருக்கும்

ஒரு நாட்டில் பாங்குகள் அளிக்கும் கடன் வசதிகள் எளிமை யாக்கப்படுவதாகவும், முன்பு சேமிப்பை (முதலீடு செய்யாமல்) முடக்கி வைத்திருந்தோர், தமது சேமிப்பைப் புழக்கத்திற்கு விடுவதாகவும் வைத்துக்கொள்வோம். இவ்விரு நிகழ்ச்சிகளின் விளைவாக, நாட்டு மக்களின் சேமிப்பைக்காட்டிலும் முதலீடு அதிகரிக்கும். அவ்வாறு சேமிப்பைவிட முதலீடு அதிகமாகும்போது, மூலதனப் பொருள்களின் மீதான செலவுகள் அதிகரிப்பதன் விளைவாக (உற்பத்திக் காரணி) நுகர்வோரின் பண வருமானம் அதிகரிக்கும். அவ்வாறு அதிகமாகக் கிடைக்கும் வருமானத்தை நுகர்வோர்கள் செலவிட முற்படுவார்கள் ஆதலால், நுகர்வுப் பொருள்களின் விலை மட்டம் அதிகரிக்கும். நுகர்வுப்பொருள்களின் விலைமட்டம் அதிகரிப்பதால், நுகர்வுப்பொருள்களின் உற்பத்தியாளர்களுக்குக் கிட்டும் இலாபத்தின் அளவும் அதிகரிக்கும். இவ்வாறு கிட்டும் அதிக இலாபத்தால் ஊக்குவிக்கப்படும் உற்பத்தியாளர் மேலும் முதலீடுகளை மேற்கொள்ளுவர். முதலீடு அதிகரிக்கப்படுமாயின், மீண்டும் மேற்கூறியவாறு தொடர்ந்து விலைமட்டம் அதிகரிக்கும். முதலீடு அதிகரிப்பதும், விலை மட்டம் அதிகரிப்பதும் சங்கிலித் தொடர்போலத் தொடர்ந்து நடைபெறும்.

பொருளாதர மந்தத்திலிருந்து மீட்சியடையும் நிலையில் மேற்குறிப்பிட்டுள்ள முறையில் விலைமட்டம் உயருமாயின், அதன் விளைவாக இதுவரையிலும் உற்பத்தியில் பயன்படுத்தப்படாமலிருந்த உற்பத்திக் காரணிகள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும்; வேலையின்மை விகிதம் குறைவடையும்; பொதுமக்களின் பண வருமானம் அதிகரிக்கும். ஓரளவிற்கு விலைமட்டம் அதிகரிக்குமாயின், உற்பத்தியும் அதிகரிக்கப்படுவதால் விலைமட்டம் பெருமளவில் அதிகரிக்காது. நாடு வேலைமட்ட நிறைவு எய்தும் வரையிலும் இந் நிலை தொடர்ந்து நிலவும். ஆனால், நாடு முழு வேலைமட்டம் எய்தியதற்குப் பின்னர், நாட்டின் பண அளிப்பு அதிகரிக்கும் விகிதத்திற்குச் சமமாக விலைமட்டமும் அதிகரிக்கும். சேமிப்பு, வருமானத்தின் ஒரு பகுதி என்பதை அறிவோம். ஆதலால், முதலீடு சேமிப்பைக்காட்டிலும் அதிகமாகும்பொழுது ஏற்படும் வருமான அதிகரிப்பின் விளைவாகச் சேமிப்பும் அதிகரிக்கும். சேமிப்பும் அதிகரிப்பதால் முதலீட்டிற்கும் சேமிப்பிற்கும் இடையில் காணப்படும் இடைவெளியின் அளவு குறைவடையும். ஆகவே, மீண்டும் முதலீடும் சேமிப்பும் சமமாகும் வரையிலும் வேலைமட்டமும் வருமானமும் அதிகரிக்கும்,

அதாவது வருமானமும், விலைமட்டமும் அதிகரித்த நிலையில் மீண்டும் முதலீடும் சேமிப்பும் சமநிலை அடையும்.

முதலீடு, சேமிப்பு ஆகியவற்றிற்கிடையே தோன்றிய இடைவெளி எவ்வாறு மறைகின்றது என்பதை முன்னர் நாம் பயன்படுத்திய எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். எடுத்துக் காட்டில் மூன்றாவது ஆண்டில் நுகர்வுச் செலவு ரூ. 800 ஆகவும், சேமிப்பு ரூ. 200 ஆகவும் இருக்கும்பொழுது முதலீடு ரூ. 250 ஆக அதிகரிக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். அதாவது, சேமிப்பைக்காட்டிலும் முதலீடு ரூ. 50 அதிகமாகும். இதன் விளைவாக 3-வது ஆண்டின் வருமானம் ரூ. 1050 ஆக அதிகரிக்கும். வருமானம் அதிகரிப்பதன் விளைவாக 4-வது ஆண்டில் நுகர்வுச் செலவு அதிகரிக்கும். 4-வது ஆண்டில் நுகர்வுச் செலவு ரூ. 820 ஆக அதிகரிப்பதாக வைத்துக்கொண்டால், சேமிப்பு ரூ. 230 ஆகும். 4-வது ஆண்டில் முதலீட்டின் அளவு மாறாமலிருப்பதாக வைத்துக்கொண்டால், முதலீட்டிற்கும் சேமிப்பிற்குமிடையே உள்ள வேறுபாடு ரூ. 20 ஆகும்; வருமானம் ரூ. 1070 ஆக அதிகரிக்கும். 5-வது ஆண்டில் நுகர்வுச் செலவு ரூ. 830 ஆகவும், சேமிப்பு ரூ. 240 ஆகவும் அதிகரிக்கக்கூடும். அதாவது, 5-வது ஆண்டில் முதலீட்டிற்கும் சேமிப்பிற்குமிடையே உள்ள இடைவெளி ரூ. 10 ஆகக் குறையும். எனவே, 5-வது ஆண்டில் வருமானம் ரூ. 1080 ஆக அதிகரிக்கும். 6-வது ஆண்டில் மொத்த வருமானமான ரூ. 1080-ல் நுகர்வுச் செலவு மாறாமல் ரூ. 830 ஆக இருப்பினும், சேமிப்பு ரூ. 250 ஆக அதிகரிக்கும். அதாவது, பண வருமானம் ரூ. 1080 ஆக மாறாமலிருக்கும்பொழுது முதலீடும் சேமிப்பும் சமமாகும்.

அதாவது

முதல் ஆண்டு	2-வது ஆண்டு	3-வது ஆண்டு	4-வது ஆண்டு	5-வது ஆண்டு	6-வது ஆண்டு
வ=1000	நு = 800	நு = 800	நு = 820	நு = 830	நு = 830
	மு = 200	மு = 250	மு = 250	மு = 250	மு = 250
	வ = 1000	வ = 1050	வ = 1070	வ = 1080	வ = 1080
	சே = 200	சே = 200	சே = 230	சே = 240	சே = 250
	மு = சே	மு > சே	மு > சே	மு > சே	மு = சே

முதலீடும் சேமிப்பும் சமமாக இருக்கும் நிலையில் முதலீடு மட்டும் அதிகரிக்குமாயின், அதன் விளைவாக வருமானமும்

அதிகரித்து, காலப்போக்கில் முதலீடும் சேமிப்பும் மீண்டும் புதிய சமநிலையை எவ்வாறு அடைகின்றன என்பதைப் பின் வரும் வரைபடத்தின் மூலம் விளக்கலாம் :

வரைபடத்தில் செங்குத்து அச்சு முதலீடு, சேமிப்பு ஆகிய வற்றையும் கிடை அச்சு வருமானம், காலம் ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றன. முதலீட்டின் அளவு மு மு எனும் கோட்டிலும், சேமிப்பின் அளவு சே சே எனும் கோட்டிலும் காட்டப் படுகின்றன. முதலீடு மு மு ஆக இருக்கும்போது ச என்னும் புள்ளியில் முதலீடும் சேமிப்பும் சமமாக இருக்கின்றன. வருமானம் ஆ வ ஆகும். முதலீடு மு' மு' ஆக உயரும்போது வருமானம் ஆ வா ஆக அதிகரிப்பதால், சேமிப்பும் அதிகரித்து



படம் 6

ச' எனும் புள்ளியில் அவை இரண்டும் புதிய சம நிலையை அடைகின்றன. ச' எனும் புள்ளியில் வருமானம் அதிகரித்தப் பின்னர் முதலீடும் சேமிப்பும் புதிய சம நிலையை அடை வதைக் காணலாம்.

சேமிப்பு முதலீட்டைக்காட்டிலும் அதிகமாவது : மூலதனத்தின் இறுதி நிலைத்திறன் திடீரென வீழ்ச்சி யடைகையில், அதே விகிதத்தில் வட்டிவீதமும் குறைக்கப் படாவிடில் முதலீட்டைக்காட்டிலும் சேமிப்பு அதிகமாகக் கூடும். பொதுவாக வாணிபச் சுழல்களின் விளைவாகச்

செழுமை நிலவும்பொழுது இவ்வாறு சேமிப்பு அதிகமாகவும், முதலீடு குறையவும் கூடும். சேமிப்பின் அளவு மாறாமலிருக்கும்போது முதலீடு திடீரெனக் குறைவதன் விளைவாகச் சேமிப்பின் அளவு முதலீட்டின் அளவைக்காட்டிலும் அதிகமாகும். முதலீட்டைக்காட்டிலும் சேமிக்கப்படும் பணத்தின் அளவு அதிகமாகும்பொழுது, புதிய பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலம் கிட்டும் வருமானத்தைவிட அவற்றினமீது செலவிடப்படும் தொகை குறைவடையும்; அதாவது நுகர்வோரின் வருமானம் குறைவடையும். நுகர்வோரின் வருமானம் குறைவடைவதன் விளைவாக நுகர்வுப் பொருள்களுக்கான தேவையும், அவற்றின் விலைமட்டமும் குறைவடையும். தொழில் முயல்வோரால் எதிர்பார்க்கப்படும் இலாபத்தைக் காட்டிலும் அவர்கள் அடையும் இலாபம் குறைவடையும். உற்பத்தியாளர்கள் பெறும் இலாபம் குறைவதால், உற்பத்தி, வேலைமட்டம், வருமானம் ஆகியவை குறைக்கப்படும்.

வருமானம் குறைவடையும்போது வருமானத்தின் ஒரு பகுதியான சேமிப்பும் குறைவடையும். அதாவது சேமிப்பிற்கும் முதலீட்டுற்கும் இடையே காணப்படும் இடைவெளி குறைவடையும். மீண்டும் சேமிப்பும் முதலீடும் சமமாகும் வரையிலும், வேலைமட்டமும் வருமானமும் குறைந்து கொண்டே இருக்கும். ஆயினும், இச் சமநிலை குறைவான விலைமட்டமும் குறைவான வருமானமும் நிலவும்பொழுது அடையப்பெறும். இதனைப் பழைய எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். எடுத்துக்காட்டில், 3-வது ஆண்டில் சேமிப்பு ரூ. 200 ஆக மாறாமலிருக்கும்பொழுது முதலீடு ரூ. 150 ஆகக் குறைவதாக வைத்துக்கொள்வோம். முதலீடு குறைந்ததன் விளைவாகப் பண வருமானம் ரூ. 950 ஆகக் குறைவடையும். 3-வது ஆண்டின் வருமானம் குறைந்ததன் விளைவாக 4-வது ஆண்டில் நுகர்வுச்செலவுகள் ரூ. 780 ஆகவும், சேமிப்பு ரூ. 170 ஆகவும் குறையக்கூடும். முதலீடு மாறாமல் ரூ. 150 ஆக இருக்கும்போது சேமிப்பு முதலீட்டைக்காட்டிலும் அதிகமாக இருப்பதாலும் வருமானம் ரூ. 920 ஆகக் குறைவடையும். 6-வது ஆண்டில் நுகர்வுச் செலவுகள் மாறாமல் இருப்பதாக (ரூ. 770 ஆக) வைத்துக்கொண்டால், சேமிப்பு ரூ. 150 ஆகக் குறைவடையும். அதாவது, வருமானம் ரூ. 920 ஆகக் குறைவதன் விளைவாகச் சேமிப்பும் முதலீடும் சமநிலையடைகின்றன.

இதைக் கீழ்க்காணும் பட்டியலின் மூலம் அறியலாம்:

முதல் ஆண்டு	2-வது ஆண்டு	3-வது ஆண்டு	4-வது ஆண்டு	5-வது ஆண்டு	6-வது ஆண்டு
வ = 1000	நு = 800	நு = 800	நு = 780	நு = 770	நு = 770
	மு = 200	மு = 150	மு = 150	மு = 150	மு = 150
	வ = 1000	வ = 950	வ = 930	வ = 920	வ = 920
	சே = 200	சே = 200	சே = 170	சே = 160	சே = 150
	சே = மு	சே > மு	சே > மு	சே > மு	சே = மு

இப் பட்டியலில் முதலீடு குறைவதன் விளைவாக வருமானம் குறைந்த பின்னர், சேமிப்பும் முதலீடும் ச' எனும் புள்ளியில் அடையும் புதிய சமநிலையைப் பின்வரும் வரை படத்தின் மூலம் விளக்கலாம் :

வரைபடத்தில் முதலீடும் சேமிப்பும் ச எனும் புள்ளியில் சமமாக இருக்கின்றன. அப்பொழுது கிட்டும் வருமானம் 'ஆ வ' ஆகும். சேமிப்பு மாறாமலிருக்கும்போது முதலீடு குறைவதால், முதலீட்டுக் கோடு மு' மு' ஆகும். சேமிப்பைக்காட்டிலும் முதலீடு குறைவடைவதன் விளைவாக வருமானம் 'ஆ வா' ஆகக் குறைவதையும், ச[1] எனும் புதிய சமநிலையில் சேமிப்பும் முதலீடும் சமமாவதையும் வரைபடத்தில் காணலாம்.



படம் 7

சேமிப்பு மாறாமலிருக்கும்போது முதலீடு திடீரென வீழ்ச்சி யடைவதால், புதிய சமநிலை எவ்வாறு ஏற்படுகின்றது என் பதை மேற்காணும் வரைபடம் விளக்குகின்றது.

முதலீட்டின் அளவு மாறாமல் நிலையாக இருக்கும்போது சேமிப்பு அதிகரிக்குமாயின், ஏற்படும் விளைவுகளைக் கீழ்க் காணும் வரைபடம் விளக்குகின்றது:



படம் 8

வரைபடத்தில் முதலீட்டின் அளவை முமுக் கோடும், சேமிப்பின் அளவைச் சேமிப்புக் கோடும் காட்டுகின்றன. முதலீடும் சேமிப்பும் ச எனும் புள்ளியில் சமநிலையில் இருக்கும்பொழுது கிட்டும் வருமானம் 'ஆ வ' ஆகும். திடீரெனச் சேமிப்பு அதிகரிப்பதால், புதிய சேமிப்புக் கோடு சே' சே' வரையப்படுகின்றது. முதலீடு மாறாமலிருக்கும்போது சேமிப்பு அதிகரித்ததன் விளைவாக 'ஆ வா' எனும் குறைந்த வருமானத்தில் ச' எனும் புதிய சமநிலையில் சேமிப்பும் முதலீடும் சமநிலை அடைகின்றது. அதாவது, சேமிப்பு முதலீட்டைக்காட்டிலும் அதிகமாகும்பொழுது வருமானம், விலை மட்டம், உற்பத்தி ஆகியவை தொடர்ந்து வீழ்ச்சியடைகின்றன. குறைவான வருமானத்தில் மீண்டும் சேமிப்பும் முதலீடும் சமமாகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்து மந்தமாகவே இயங்கும். மீண்டும் ஏதேனும் ஒரு காரணத்தால் முதலீடு ஊக்குவிக்கப்பட்டால்தான் பொருளாதார நடவடிக்கைகள் துரிதக் கதியில் இயங்கி, வருமானம் உயர்ந்த பின்னர் மீண்டும் சேமிப்பும் முதலீடும் சமமடைய முடியும். ஆகவே, தனி நபர்களைப் பொறுத்தவரையில் சேமிப்பு அதிகரிப்பதால் நன்மையே எனினும், பொதுமக்களுக்குத் தீமையேயாகும்.

கெயின்சு, குறுங்காலத்தில் சேமிப்புமட்டம் மாறுவதில்லையாதலால், முதலீட்டில் ஏற்படும் மாறுதல்களே முக்கிய

மானவை என்று குறிப்பிடுகின்றார். முதலீட்டின் அளவில் ஏற்படும் மாறுதல்கள், வேலைமட்டம், பண வருமானம் ஆகிய வற்றைப் பாதிப்பதன் மூலம் விலைமட்டத்தை மாற்றியமைப் பதாக அவர் கருதுகின்றார். அதாவது, குறுகிய காலத்தில் முதலீட்டின் அளவு மாற்றப்படும்போதுதான் வேலைமட்டம், வருமானம், விலைமட்டம் ஆகியவை மாறுதலடைகின்றன. சேமிப்பிற்கும் முதலீட்டிற்குமிடையே உள்ள விகிதமானது பொருளாதார நடவடிக்கைகளின் உயிர் ஓட்டத்தை நிர்ண யிக்கும் அளவிற்கு முக்கியமானதாகும். சேமிப்பும் முதலீடும் சமமடையாவிடின், பொருளாதார நடவடிக்கைகள் பெரு மளவில் பாதிக்கப்படுகின்றன; நாட்டின் பொருளாதார அமைப்பும் பாதிக்கப்படுகின்றன.

வருமானக் கோட்பாட்டினரின் கருத்தாவது: சேமிப்பு, முதலீடு ஆகியவற்றின் சமமின்மையே விலை நொடிப்பு களுக்குக் காரணமாகும். விலை நொடிப்புகள் ஏற்படும்போது வருமானம் மாறுவதால், பணத்தின் மதிப்பும் மாறுதலடை கின்றது. சேமிப்பும், முதலீடும் சமமாக இருப்பின், பணத்தின் மதிப்பும் மாறாமல் நிலையாக இருக்கும்.

சேமிப்பு மட்டும் அதிகரிக்குமாயின் (விலைமட்டம் குறை வதனால்), பணத்தின் மதிப்பு அதிகரிக்கும். முதலீடு மட்டும் அதிகரிக்குமாயின் (விலைமட்டம் அதிகரிப்பதால்), பணத்தின் மதிப்பு குறைவடையும். வருமானக் கோட்பாட்டினரின் விளக்கம் பண அளவுக் கோட்பாட்டினரின் விளக்கத்திற்கு எதிர்மாறானதாகும். பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றங் களுக்குக் காரணம் வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களே அன்றிப் பணத்தின் அளிப்பில் ஏற்படும் மாற்றங்கள் அல்ல என்பது அவர்கள் கருத்தாகும்.

மதிப்பீடு: 1. வருமானம்-செலவின் அடிப்படையிலான இவ்விளக்கம், மதிப்பு பற்றிய பொதுக் கோட்பாட்டையும், பணக் கோட்பாட்டையும் இணைப்பதால், பண அளவுக் கோட்பாட்டைக்காட்டிலும் சிறந்ததாகும். பண வருமானமும், தேவையும் மாறுவதாலேயே விலைமட்டம் மாறுவதாகக் கருதும் இக் கோட்பாட்டினர் மதிப்பு (அதாவது தனித்தனி விலைகள்), விலைமட்டம் (அதாவது பொது விலைமட்டம்) ஆகிய இரு முரண்பட்ட கோட்பாடுகளையும் இயைபாக இணைக்கின்றனர். எனினும், ஹான்சென் என்பார், பண அளவுக் கோட்பாட்டிற்கும், வருமானக் கோட்பாட்டிற்கும்

இடையில் அடிப்படையிலேயே வேறுபாடு இருப்பதாகக் குறிப்பிடுகின்றார். ஏனெனில், பண அளவுக் கோட்பாட்டில் பணத்தின் அளவும் பணத்தின் சுழல் வேகமுமே வருமானத்தை நிர்ணயிப்பதாகக் கருதப்படுகின்றது. ஆனால், வருமானக் கோட்பாட்டில் பொதுமக்களுடைய செலவின் விகிதமே பணத்தின் அளவையும், அதன் சுழல் வேகத்தையும் நிர்ணயிப்பதாகக் கருதப்படுகின்றது.

2. பண அளவுக் கோட்பாடு, நாடு முழு வேலைமட்டம் எய்திவிட்டதாக அனுமானித்துக்கொண்டு, பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாறுதல்களுக்கான காரணங்களை விளக்குகின்றது. ஆனால், வருமானக் கோட்பாடு அத்தகைய தவறான அனுமானத்தை அடிப்படையாகக்கொண்டு வரையப்பட்டதன்று.

பண அளவுக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு விளக்க முடியாத பணத்தின் போக்கு பற்றிய பல்வேறு பிரச்சினைகளை வருமானக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விளக்க முடியும் என்று கிரௌதர் குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாக, பணத்தின் அளவைக் குறைப்பதன் மூலம் பொருளாதாரப் பூரிப்பைத் தடை செய்ய முடியுமாயினும், பணத்தின் அளிப்பை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார மந்தத்திலிருந்து ஏன் விடுபட முடிவதில்லை என்பதை இக் கோட்பாட்டின் மூலம் விளக்க முடியும். பொருளாதார மநத நிலையிலிருந்து மீட்சியடைய வேண்டுமாயின், சேமிப்பைக் காட்டிலும் முதலீடு அதிகரிக்க வேண்டுமென வருமானக் கோட்பாட்டினர் குறிப்பிடுகின்றனர். அதாவது, பணத்தின் அளவைக்காட்டிலும் முதலீடுதான் முக்கியமான சக்தியாகக் கருதப்படுகின்றது. பொருளாதார மந்தம் நிலவும்பொழுது, பணத்தின் அளிப்பு அதிகரிக்கப்படுவதால் வட்டிவீதம் குறையுமாயினும், மூலதனத்தின் இறுதிநிலைத்திறன் அதிகரிக்காவிடில் முதலீடு அதிகரிப்பதில்லை. பொருளாதார மந்த காலத்தில் தொழில் முயல்வோரின் இலாபக்கணிப்பு குறைவாக இருப்பதால், பணத்தின் அளவு அதிகரிக்கபபடுவதால் மட்டுமே பொருளாதார மீட்சி தோன்றுவதில்லை. பணத்தின் அளிப்பை அதிகரிப்பதால் பொருளாதார மந்தத்திலிருந்து விடுபடுவதற்கு இயலாததாயினும் பணத்தின் அளிப்பு, வங்கிக் கடன் அளவு ஆகியவற்றைக் குறைப்பதன் மூலம் பொருளாதாரப்பூரிப்பைக் கட்டுப்படுத்த முடியும். பணத்தின் அளவுக் குறைப்பு, வங்கிக்கடன் குறைப்பு ஆகியவற்றால் முதலீடு

செய்வதற்குத் தேவையான மூலதனம் குறைவதால் வட்டி வீதம் அதிகரிக்கும்; மக்கள் பெருமளவில் சேமிக்கத் தொடங்குவர். மூலதனப்பற்றாக்குறை, வட்டிவீத அதிகரிப்பு ஆகியவற்றின் விளைவாக முதலீடுகள் குறைக்கப்படுவதால், பொருளாதாரப் பூரிப்பு கட்டுப்படுத்தப்படும். இத்தகைய விளக்கத்தைப் பண அளவுக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு அளிக்கவியலாது.

பண அளவுக் கோட்பாட்டில் பணத்தின் சுழல்வேகத்திற்கு முக்கியமான பங்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும், பணத்தின் சுழல்வேகம் மாறுதலடைவதற்கான காரணங்கள் விளக்கப்படவில்லை. ஆனால், அத்தகைய விளக்கத்தை வருமானம்-செலவு கோட்பாடு அளிக்கின்றது.

இக்கோட்பாட்டின்படி, மக்களுடைய சேமிப்பு அதிகரிக்குமாயின், மக்கள் தமது செல்வத்தின் பெரும்பகுதியைப் பண உருவில் வைத்துக்கொள்ள விரும்புகின்றனர் எனவும், முதலீடு அதிகரிக்குமாயின், அவர்கள் தமது பண வருமானத்தை நெடு வாழ்வுப் பண்டங்களாக வைத்துக்கொள்ள விரும்புகின்றனர் எனவும் பொருள்படும். அதாவது, முதலீட்டைக்காட்டிலும் சேமிப்பு அதிகரிக்குமாயின், சமுதாயம் தனது செல்வத்தில் பெரும்பகுதியை ரொக்க இருப்பாக வைத்துக்கொள்ள விரும்புவதாகப் பொருள்படும். சேமிப்பு அதிகரிக்கும்போது, பெரும் அளவுப் பணம் எவ்விதப் பயனுமின்றி முடக்கப்படுவதால், பணத்தின் சுழல் வேகம் குறைவடையும். அத்தகைய நிலையில் பணத்தின் அளவு அதிகரிக்கப்படுமாயின், பண உருவிலான சேமிப்பு மட்டுமே அதிகரிக்குமே தவிர, முதலீடு அதிகரிக்காது. அதாவது, பொருளாதார மந்தம் நிலவும்பொழுது பணத்தின் அளவு அதிகரிக்கப்பட்டாலுங்கூடச் செலவு ஏன் அதிகரிப்பதில்லை என்பதை இக் கோடு விளக்குகின்றது. அதாவது, ஃபிஷருடைய சமன்பாட்டில் பணத்தின் அளவு மாறுதலடையும் பொழுது சுழல் வேகமும் மாறுவதால், மொத்தப் பண அளிப்பும் மாறுவதில்லை. ஆனால், சேமிப்பைக்காட்டிலும் முதலீடு அதிகரிக்கும்பொழுது சுழல் வேகமும் அதிகரிக்கும். கேம்பிரிட்ஜ் சமன்பாட்டிலும் பணத்தின் சுழல் வேகமானது சமுதாயத்தின் செல்வத்தில் அது ரொக்கப் பணமாக வைத்திருக்க விரும்பும் தொகையின் விகிதத்தால் நிர்ணயிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

பணத்தின் அளவு மாறுவதால், விலைமட்டத்தில் ஏற்படும் மாறுதல்களைச் சாதாரணமாகக் காரண காரியத்தொடர்

பாகவே பண அளவுக் கோட்பாடு விளக்குகின்றது. ஆனால், வருமானம்-சேமிப்புக் கோட்பாடோ அதனைத் தொடர்ச்சி யான விளைவுகளும் எதிர் விளைவுகளும் கொண்ட குழப்ப மான ஆனால் முக்கியமான தொடர் நிகழ்ச்சியென விளக்கு கின்றது. இக் கோட்பாட்டின்படி பணத்தின் அளவில் ஏற் படும் மாறுதல் முதலில் வட்டிவீதத்தை மாற்றியமைக்கும். வட்டிவீதம் மாறுவதால், சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையில் நிலவும் தொடர்புகள் மாறுதலடையும்; அதன் விளைவாக வேலைமட்டம், உற்பத்தி, வருமானம், விலை மட்டம் ஆகியவையும் மாறுதலடைகின்றன. சேமிப்பு, முத லீட்டைவிட அதிகரிக்குமாயின், விலைகள் அதன் சமநிலை யைக்காட்டிலும் குறையும். சேமிப்பு முதலீட்டைவிடக் குறையுமாயின், விலைகள் அதன் சமநிலையைக்காட்டிலும் அதிகரிக்கும். அதாவது, விலைமட்டம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் சுழற்சியான மாறுதல்களுக்கான காரணங்களை அறிவதற்கு வருமானம்-சேமிப்புக்கோட்பாடு உதவுகின்றது. இக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுதான் தேசீய வருமான அளவில் ஏற்படும் மாறுதல் களின் விளைவாகத் தொழிற்சுழல்கள் தோன்றுவதாக கிரௌதர் விளக்குகின்றார்.

பண அளவுக் கோட்பாட்டைப் போலின்றி இக் கோட் பாட்டில் பணத்துறைச் சக்திகளுக்கு முக்கிய இடமளிக்கப் படவில்லை; பண அளவுக் கோட்பாட்டில் பணத்துறைச் சக்திகள் யாவற்றையும் இயக்குவதாகக் கருதப்படுகின்றது. இக் கோட்பாட்டின்படி, பணத்தின் போக்கும் விலைமட்டமும் மேலோட்டமான அடையாளங்கள் எனவும், சேமிப்பு-முதலீடு தொடர்பில் ஏற்படும் போக்குகளின் விளைவாகவே பொரு ளாதார நடவடிக்கைகள் இயங்குவதாகக் கருதப்படுகின்றது.

எனினும், சேமிப்பு-வருவாய்க் கோட்பாட்டின் அடிப் படையில் விலைமட்டம், வேலைமட்டம் ஆகியவற்றில் ஏற்படும் குறுங்கால நொடிப்புகளை மட்டுமே விளக்க முடியும். ஆனால், முழு வேலைமட்டம் எய்திய பின்னர், நெடுங்காலத்தில் விலைமட்டமும் வேலைமட்டமும் மாறுவதற் கான விளக்கத்தைப் பண அளவுக் கோட்பாட்டை அடிப் படையாகக்கொண்டுதான் அளிக்க முடியும். பூரிப்பு நிலவும் போது பணத்தின் அளவு அதிகரிக்காத நிலையிலும் விலை மட்டம் உயரக் கூடும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கின்றது. ஆயினும், பண அளிப்பு அதிகரிக்கப்படாத நிலையில்

தொடர்ந்து விலைமட்டம் அதிகரிக்க முடியாது. இந் நிலையைப் பண அளவுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுதான் விளக்க முடியும். பண அளவுக் கோட்பாட்டின் சமன்பாடுகளைத் தவறானவை என வருமானக் கோட்பாடு நிரூபிப்பதில்லை என்பதுடன், பண அளவுக் கோட்பாட்டில் குறிப்பிடப்படும் சில கருத்துகளை வருமானக் கோட்பாடு விளக்குவதுமில்லை. விலைமட்டத்தில் ஏற்படும் மாறுதல்களுக்கான காரணங்களை விளக்குவதில் வருமானம்-செலவுக் கோட்பாடு ஈடுபடுகின்றதே தவிர, சமநிலையில் நிலவும் விலைமட்டத்தைப்பற்றி விளக்குவதில்லை. பண அளவுக் கோட்பாடு கடலின் சராசரி நிலையைப்பற்றி விளக்குகின்றது; சேமிப்பு-முதலீடு கோட்பாடு அலைகளின் வன்மையான போக்கினைப் பற்றி விளக்குகின்றது என்பது கிரௌதரின் கருத்தாகும்.

8. பணவாக்கக் கைக்கோள்[1]

பொருளாதார விவாதங்களில் அண்மைக் காலத்தில்தான் 'பணவாக்கக் கைக்கோள்' எனும் தொடர் பயன்படுத்தப்படுகிறது. 19ஆம் நூற்றாண்டில்தான் 'பணவாக்கக் கைக்கோள்' பற்றித் தெளிவான கருத்து உருவாயிற்று எனலாம். எனினும், அது வளர்ந்து வரும் கருத்தாகும். பணவாக்கக் கைக்கோளின் வரையறை, வழிமுறை, நோக்கம் ஆகியவை காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டேயிருக்கின்றன.

பொதுவாகப் பணவாக்கக் கைக்கோள் எனும் தொடர் ஒரு நாட்டின் பண அமைப்பையும், பணவியல் விளைவுகளை நல்கக்கூடிய பணத்துறை நடவடிக்கைகளையும், மற்றும் பணத்துறையின்பாற்படாத நடவடிக்கைகளையும் பற்றிக் குறிப்பிடுவதாகும். சுருக்கமாகக் கூறப்படுவதாயின், ஒரு நாட்டில் நிலவும் பணத்தின் அளிப்பு, வட்டிவீதம் ஆகியவற்றை நிர்ணயிப்பதற்காக அந் நாட்டின் அரசும் பணத்துறை அதிகாரியும் மேற்கொள்ளும் முடிவுகளே பணவாக்கக் கைக்கோள் எனப்படும். அதாவது, குறிப்பிட்ட சில முடிவுகளை அடைவதற்காகப் பணம், கடன் ஆகியவற்றின் அளவு, செலவு, பயன்படும் விதங்கள் ஆகியவற்றைப் பணவியல் நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்துவதையே பணவாக்கக் கைக்கோள் எனலாம்.

நடுநிலைமையான பணக் கொள்கை[2]

பணவாக்கக் கைக்கோளின் முக்கிய நோக்கம் 'நடுநிலைப் பணத்தை உருவாக்குவதே' எனும் கருத்தை விக்ஃஸ்டீட், ஹேயத் டி. எச். ராபர்ட்சன் போன்றோர் ஆதரிக்கின்றனர். நடுநிலைப் பண நோக்கம் என்பது பணத்தின் அளவில் ஏற்படும் மாற்றங்கள், விலைமட்டங்களைப் பாதிக்கக்கூடாது என்பதே ஆகும். இக் கருத்தின்படி பணம் பரிவர்த்தனையில் ஓர் இடையீட்டுக் கருவியாக மட்டுமே இருக்க வேண்டுமே

1 Monetary Policy
2 Neutral Money Policy

தவிர, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் ஓர் ஆதிக்கச் சக்தியாக இருக்கக் கூடாது.

நடுநிலைப் பண நோக்கர்கள் பண அளிப்பில் ஏற்படும் மாறுதல்களின் விளைவாகவே நாட்டின் பணத்துறை நடவடிக்கைகளில் இடையூறுகள் ஏற்படுவதாகக் கருதுகின்றனர். பணத்துறை நிர்வாகிகள் நடுநிலை இல்லாத பணக் கொள்கையைப் பின்பற்றுவதாலேயே பணவீக்கமும், பணவாட்டமும் தோன்றுவதாக ஹேயக் கூறுகின்றார். நாட்டில் பண அளிப்பை மாறாமல் நிலைப்படுத்துவதைப் பணத்துறை நிர்வாகிகள் தமது குறிக்கோளாகக் கொள்வாராயின், பணத்தின் அளவு மாறுவதால் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் இடையூறுகளைக் களைய முடியும். பணம் நடுநிலையாக இருக்குமானால் விலைமட்டத்தை அது கட்டுப்படுத்தாவிடின்—விலைமட்டம் நாட்டின் உற்பத்திச் சக்தியால் நிர்ணயிக்கப்படும். விலைமட்டம் நாட்டின் உற்பத்திச் சக்திக்கு எதிர்மாறாக அமையும். ஒரு நாட்டில் புத்தாக்கங்கள் தொழிலாளர்களுடைய உற்பத்தித் திறனின் வளர்ச்சி, திறமையான தொழிலமைப்பு போன்றவையின் விளைவாக உற்பத்திச் சக்தி அதிகரிக்குமாயின், மொத்த உற்பத்தி அதிகரிக்கும்; உற்பத்திச் செலவுகளும், விலைமட்டமும் குறைவடையும். உற்பத்திச் சக்தி குறைவடைவதால், மொத்த உற்பத்தி குறைவதாலும் உற்பத்திச் செலவு அதிகரிப்பதாலும் விலைமட்டம் அதிகரிக்கும்.

பணம் நடுநிலை[1]யானதாக ஆக்கப்பட்டு, பணத்தின் அளிப்பு மட்டத்தைக் கட்டுப்படுத்தாத நிலை ஏற்பட்டால், நாட்டின் விலைமட்டத்தை நிர்ணயிப்பதிலும் செல்வப் பகிர்வை நிர்ணயிப்பதிலும் உற்பத்திச் சக்தியே முக்கியப் பங்கேற்கும். பணத்தின் அளவு விலைமட்டத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது என்பதால் பணத்தின் அளவு மாறாமலேயே இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. நாட்டின் நிலையான பணம், வங்கிப் பணம், அவற்றின் சுழல்வேகம் ஆகியவற்றைச் சார்ந்துள்ள உறுதிப் பணத்தின் அளவு[2] மாறாமல் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பணத்தின் சுழல்வேகம் குறைவடையும் பொழுது பணத்தின் அளிப்பை அதிகரிக்க வேண்டும். அவ்வாறே பணத்தின் சுழல்வேகம் அதிகரிக்கும்பொழுது பணத்தின் அளவு குறைக்கப்பட வேண்டும். ஆகவே, நடுநிலைப் பணக்கொள்கையை மேற்கொள்வதற்குப் பணத்தின்

[1] Neutrality Money
[2] Volume of Effective Money

அளவு மாறாமலிருக்க வேண்டும் என்பதல்ல பொருள். உறுதிப் பணத்தின் அளவு மாறாமலிருக்க வேண்டும் என்பதே பொருள் ஆகும். மேலும், நடுநிலைப் பணக்கொள்கை மேற்கொள்ளப்படும்பொழுது பொருள்களின் உற்பத்தி அளவிற்கு ஏற்பப் பணத்தின் அளிப்பு மாற்றப்படக் கூடாது என்பதும் ஓர் உட்கருத்தாகும். பொருள்களின் உற்பத்திக்கு ஏற்ப விலைமட்டம் மாற்றமடைந்தால்தான் நடுநிலைப் பணம் நிலவுவதாகக் கொள்ளலாம். நடுநிலைப் பணக் கொள்கையால் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கும்பொழுது விலைமட்டம் குறையும்; பொருள்களின் உற்பத்தி குறையும்பொழுது விலைமட்டம் அதிகரிக்கும். விலைமட்டம் குறைவதால், நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் தடைபடாது.

நடுநிலைப் பணக் கொள்கையால் நன்மைகள் விளையும் எனக் கருதப்படினும், அக் கருத்து கீழ்க்காணும் காரணங்களால் மறுத்துரைக்கப்படுகின்றன:

நடுநிலைப் பணக்கருத்து, பண அளவுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவானதாகும். பண அளவு மாறுவதால்தான் விலைமட்டம் மாறுவதாக விளக்கும் பண அளவுக் கோட்பாட்டில் பல்வேறு குறைகள் உள்ளன. குறைகளுடைய அக் கோட்பாட்டைத் தற்காலத்தில் பெரும்பாலோர் ஏற்றுக்கொள்வதில்லை. தவறான அனுமானங்களைக் கொண்ட காலத்திற்கொவ்வாதப் பண அளவுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள நடுநிலைப் பணக் கருத்தையும் ஏற்பதற்கில்லை.

நடுநிலைப் பணக்கொள்கை மேற்கொள்ளப்படின் விலைமட்டம் மாறாது என்பது தவறாகும். ஒவ்வொரு நாளும் தொழில் நுணுக்கமும், உற்பத்தி முறைகளும், உற்பத்தி நுணுக்கமும் முன்னேற்றமடைந்து வரும் தற்காலத்தில் பணத்தின் அளிப்பு மாறாமல் நிலைப்பட்டால், பணவாட்டம் தோன்றுவது உறுதி. உற்பத்திச் செலவு குறைவதால் விலைமட்டம் குறைவதாகவும், விலைமட்டம் குறைவதால் பொதுமக்களுக்குக் குறைந்த செலவில் நிறைந்த வசதிகள் கிடைக்குமென்றும் கருதும் நடுநிலைப்பணக் கொள்கையினர், பணவாட்டம் சிறந்ததென வாதாடுகின்றனர். ஆயினும், பணவாட்டத்தின் விளைவாகப் பொருளாதார முன்னேற்றம் தடைபடும். நடுநிலைப் பணக்கொள்கையால் பணவாட்டம் தோன்றுவதாலும், பணவாட்டத்தின் விளைவாகப் பொருளா

தார முன்னேற்றம் பாதிக்கப்படுவதாலும், நடுநிலைப் பணக் கொள்கை தீமை பயப்பது என்பது தெளிவாகும்.

உற்பத்திச் செலவு மாறாவிட்டாலும் விலை குறையக் கூடிய பொருள்களைப் பொறுத்தவரையில் நடுநிலைப் பணக் கொள்கை ஏற்கக் கூடியது அன்று. மக்கள் தொகை வளர்ச்சி யடைவதால், சில பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கக்கூடும். அத்தகைய பொருள்களின் பழைய விலை-பண அளவு விகிதத்தைக் காப்பதற்காகப் பணத்தின் அளவை அதிகரிக்க வேண்டும். அவ்வாறாயின், நடுநிலைப் பணக்கொள்கைக்கு இது முரண்பட்டதல்லவா?

பொருளாதார மந்தகாலத்தில் பணப்பதுக்கல் அதிகரிப்ப தாலும், பணத்தின் சுழல்வேகம் குறைவதாலும் விலைமட்டம் குறையும். ஆனால், பணத்தின் சுழல்வேகம் மாற்றமடைந்தால், அதற்கேற்பப் பணத்தின் அளவை பணத்துறை நிர்வாகிகள் மாற்றுவது அவசியமாகின்றது. அதாவது, நடுநிலைப் பணக் கொள்கையின் தலையிடாக் கொள்கை கைவிடப்பட வேண்டும்.

நடுநிலைப் பணக்கருத்தும், அதன் நோக்கமும் ஒன்றுக் கொன்று முரண்பட்டவையாகும். நிடுநிலைப் பணக்கருத்து, தலையிடாக் கொள்கையுடன் தொடர்பு கொண்டதாகும். விலைமட்டத்தை நிலைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுக் காலத்தையும், சக்தியையும் பணத்துறை அதிகாரி வீணடிக்கக் கூடாது; மாறாக அவை தம் போக்கிலேயே இயல்பாக அமைய வேண்டும் என்பதே நடுநிலைப் பணக்கொள்கையின் அடிப்படைக் கருத்தாகும். ஆனால், நடுநிலைப் பணக் கொள்கை மேற்கொள்ளப்படுவதற்குப் பணத்துறை அதி காரிகள் உறுதிப்பணத்தின் அளவை மாறாமல் பாதுகாக்க வேண்டும். அவ்வாறாயின், தலையிடாக்கொள்கை மீறப்படு கின்றதல்லவா? வளர்ந்துவரும் நாடுகளில் பண அளவில் மிதமான அதிகரிப்பு அவசியமாகும். நடுநிலைப் பணக் கொள்கையின் பணவாட்டப்போக்கால் ஏற்படும் விளைவு களைக்காட்டிலும் பண அளவு அதிகரிப்பதன் விளைவுகள் நன்மை பயப்பனவாகவே இருக்கும். எனவே, தற்காலத்தில் நடுநிலைப் பணக்கொள்கையை நடைமுறைக்கு ஏற்ற கருத் தாகக் கருதுவதில்லை.

மாறாத அயல்நாட்டுச் செலாவணி மாற்றுவீதம்[1]

பணவாக்கக் கைக்கோளின் அடிப்படை நோக்கம் நெளிவற்ற அயல்நாட்டு நாணயமாற்று விகிதத்தைப் பாதுகாப்பதே எனும் கருத்து நெடுங்காலம் நிலவியது. அயல்நாட்டு நாணய மாற்று விகிதத்தைக் காப்பதே முக்கியக் குறிக்கோளாகும் என்றும், உள்நாட்டு விலைமட்டத்தை நிலைப்படுத்துவது முக்கிய நோக்கத்திற்குப் பிற்பட்ட துணைநோக்கமென்றும் பழங்காலத்தில் கருதப்பட்டது. அயல்நாட்டு நாணயமாற்று விகிதம் மாறாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன.

(1) பன்னாட்டு வாணிபம் இயல்பான போக்கிலேயே செழிப்புறுவதற்கும் உச்ச அளவு நன்மை கிட்டுவதற்கும் நெளிவற்ற நாணய மாற்றுவிகிதம் ஓர் அடிப்படைத் தேவை என்று கருதப்படுகின்றது. பன்னாட்டு வாணிபத்தையே நம்பியிருக்கும் நாடுகள் நெளிவற்ற நாணய விகிதத்தை நிலைப்படுத்துவதன் மூலமே செழிப்புற முடியும் என்று கருதப்படுகின்றது.

(2) ஒரு நாட்டின் நாணய மாற்று விகிதம் நிச்சயமற்று நெளிவுகள் மிக்கதாக இருப்பின், அந் நாட்டுச் செலாவணியின் மீது நம்பிக்கை குறையும். எடுத்துக்காட்டாக, இந்திய ரூபாயின் அயல்நாட்டு மதிப்பு நிலையற்றதாக அமைந்தால் ரொக்கப் பணமும் குறுங்கால மூலதனமும் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு இடம் பெயரும். நாணயமாற்று மதிப்பிறக்கத்தால் ஏற்படக்கூடிய இழப்பைத் தவிர்க்க விரும்புவோர் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவர். எனவே, தனது ரொக்கப் பணமும், குறுங்கால மூலதனமும் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்வதைத் தவிர்க்க விரும்பும் ஒவ்வொரு நாடும் நெளிவற்ற நாணயமாற்று விகிதத்தைப் பாதுகாப்பது அவசியமாகிறது.

(3) அயல்நாட்டு நாணயமாற்று விகிதம் அடிக்கடி மாறிக் கொண்டிருப்பின், விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படக் கூடும். அயல்நாட்டு நாணயமாற்றுச் சந்தையில்[2] ஊகவாணிபம் ஓங்கும் நெளிவுகள் மிக்க நாணயமாற்று விகிதத்தைக் கொண்டிருக்கும் நாடுகளுக்குக் கடனளிக்கவும், அத்தகைய நாடுகளில் முதலீடு செய்யவும் வெளிநாட்டினர் முன்வர

[1] Stable Exchange Rates
[2] Foreign Exchange Market

மாட்டார்கள். நிலையற்ற நாணயமாற்று விகிதம் நாடுகளிடையிலான கடன் வசதிகளையும், முதலீடுகளையும் கடுமையாகப் பாதிக்கும்.

(4) உள்நாட்டு விலைமட்டத்தில் ஏற்படும் பெரும் மாற்றங்களைக்காட்டிலும் அயல்நாட்டு நாணயமாற்று விகிதத்தில் ஏற்படும் சிறு மாற்றங்கள்கூட மக்களின் கவனத்தை ஈர்ப்பதுடன் நாட்டின் மதிப்பையும் பாதிக்கும்.

மாறாத அயல்நாட்டு நாணய மாற்று விகிதத்தைப் பாதுகாப்பதன் மூலமே உச்ச அளவுப் பொருளாதார நலனையும் சமுதாய நலனையும் பெற முடியாமையால், நாணய மாற்று விகிதத்தை நிலைப்படுத்துவதே பணவாக்கக் கைக்கோளின் முக்கியக் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று பொருளாதார வல்லுநர்கள் கருதுகின்றார்கள். ஆயினும், உள்நாட்டில் மாறாத விலைமட்டம் அடைவதை விட்டுக் கொடுப்பதன் மூலமே அயல்நாட்டு நாணய மாற்று விகிதத்தை மாறாமல் பாதுகாக்க முடியும். மேலும், மாறாத நாணய மாற்று விகிதத்தைப் பாதுகாக்கும் நாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து பணவீக்கம், பணவாட்டம் ஆகியவை வெகு எளிதில் பரவுமாகையால், அத்தகைய நாடுகள் அயல் நாடுகளின் தயவில் வளர்வதாகவே கருதலாம். எனவே, அயல்நாட்டு வாணிபத்தைப் பெருமளவில் நம்பியிருக்கும் நாடுகளைத் தவிர மற்ற நாடுகளுக்கு மாறாத அயல்நாட்டு நாணய மாற்று விகிதக் குறிக்கோள் ஏற்றதன்று.

விலைமட்டத்தை நிலைப்படுத்துதல்[1] : உலகில் பொன்திட்டம் பின்பற்றப்பட்ட வரையில் பணவாக்கக் கைக்கோளின் முக்கிய நோக்கம் நெளிவற்ற நாணய மாற்று வீதத்தைப் பாதுகாப்பதே என்று கருதப்பட்டது. ஆனால், உலக முழுமையும் பொன்திட்டம் முடிவுற்ற பின்னர், உள்நாட்டு விலைமட்டத்தை நிலைப்படுத்துவதே முக்கிய நோக்கமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. விலைமட்டத்திற்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதால், உலகப் பெருமந்தத்திற்குப் பின்னர்ப் பணவாக்கக் கைக்கோளின் அடிப்படைக் குறிக்கோளில் இம் மாற்றம் ஏற்பட்டது.

[1] Price stability

விலைமட்டம் மாறக் கூடாது என்பதற்குத் தனித்தனிப் பொருள்களின் விலைகள் மாறக்கூடாது என்பது பொருள் அல்ல. ஆனால், மொத்த விலைக் குறியீட்டு எண் அல்லது நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் மூலமும் அளவிடப்படும் பொருள்களின் சராசரி விலை ஒரு சிறிய அளவிற்கு மிதமாக மாறக் கூடாது என்பதே பொருளாகும்.

புதிய பொருள்களின் உற்பத்தி, உற்பத்தி முறையில் மாறுதல்கள், புதிய மூலப் பொருள்களின் கண்டுபிடிப்புகள் போன்றவையால் தனித்தனிப் பொருள்களின் விலைகள் மாறுதல் அடையலாம்.

விலையேற்றம் அல்லது விலை வீழ்ச்சியின் விளைவுகளைப் பற்றி முன்னரே நாம் அறிந்து இருக்கின்றோம். விலை மாற்றங்களின் விளைவாக உற்பத்தி, நுகர்வு, பகிர்வு ஆகியவை பெருமளவில் பாதுகாக்கப்படுகின்றன. விலையேற்றங்கள், குறிப்பாக உண்மையான விலையேற்றங்கள், செல்வப் பகிர்வைப் பாதித்து, ஏழைகளை வருத்தி, செல்வந்தர்களை மேலும் செல்வந்தர்களாக்கும். விலை வீழ்ச்சி பொருளாதார நடவடிக்கைகளின் வீழ்ச்சிக்கும், உற்பத்திக் குறைப்புக்கும், வேலையின்மைப் பிரச்சினைக்கும் வித்தாகின்றது. எனவே, மாறாத விலைப்போக்கு நிலவினால்தான் பொருளாதார நடவடிக்கைகள் நெளிவுகளின்றிச் செழுப்புறும்.

வன்மையான விலைமாற்றங்கள், பொருளாதார அரசியல் மாற்றங்களுக்குக் காரணமாகின்றன. செர்மனியில் 1923—24-ல் நிலவிய மிகையான பணவீக்கமும், 1923, 33-ல் நிலவிய பொருளாதார மந்தமுமே ஹிட்லர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும், பின்னர் இரண்டாவது உலகப்போர் ஏற்பட்டதற்கும் காரணங்களாகும். எனவேதான், இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர், உள்நாட்டு விலைமட்டத்தை நிலைப் படுத்துவதே பணவியல் அதிகாரிகளின் முக்கிய நோக்கமாயிற்று.

உள்நாட்டு விலைமட்டத்தை நிலைப்படுத்துவதும், வாணிபச் சுழல்களை நீக்குவதுமே பணவாக்கக் கைக் கோளின் முக்கிய நோக்கமாகச் சிறிது காலம் ஏற்றுக்கொள்ளப் பட்டது. இந் நோக்கிற்குப் பின்வரும் எதிர்க் கருத்துகள் நிலவின :

விலைமட்டத்தை நிலைப்படுத்தும் கருத்தே குழப்பமானதாகும். ஏனெனில், அனைவருக்கும் ஏற்றதான விலை மட்டத்தை நிர்ணயிப்பதும், அதனை நிலைப்படுத்துவதும் இயலாத செயல்களாகும். பணவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் விலை வீழ்ச்சியைத் தவிர்ப்பதைக் காட்டிலும் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதே எளிதாகும். விலைமட்டத்தையும், வாணிப நடவடிக்கைகளையும் நிலைப்படுத்துவதென்பது நடைமுறையில் எளிதில் மேற்கொள்ள முடியாத செயல்களாகும்.

விலைமட்டம் நிலைப்படுத்தப்படின், உயர்விலைகளால் உற்பத்தியாளர்களுக்குக் கிட்டும் ஊக்கம் குறைவதால், உற்பத்திக் குறைவும், பொதுவான விலைமட்டத்தில் விவசாயப் பொருள்களின் விலைகள், தொழில்துறைப் பொருள்களின் விலைகள் போன்ற கிளைக் குழுக்களும் அடங்கியுள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விகிதத்தில் மாற்றமடையக் கூடும். பொதுவான விலைமட்டத்தை நிலைப்படுத்த முயன்றால், தனிப்பொருள்களின் விலைமட்ட மாறுதல்களைக் கவனிக்கப்படாமல் ஒதுக்கப்பட வேண்டும்.

பொருள்களின் விலை நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார நடவடிக்கைகள் நிர்ணயிக்கப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு பொருளின் விலை குறையுமானால், அப்பொருளின் அளிப்பு அதிகரிப்பதாகவோ அல்லது அதற்கான தேவை குறைவதாகவோ பொருள்படும். அதற்கேற்ப, உற்பத்தியாளர்களும், உற்பத்திக் காரணிகளும் தமது எதிர்கால நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள முடியும். விலைமட்டம் நிலைப்படுத்தப்படின், இதற்கு வாய்ப்பில்லை.

விலைமட்டம் நிலைப்படுத்தப்படுவதாலேயே வாணிப நடவடிக்கைகளும் நிலைப்படுத்தப்படும் என்பது நிச்சயமில்லை. விலைமட்டம் மாறாமலிருக்கும்பொழுதே வாணிப நடவடிக்கைகள் சீர்கெடவும் கூடும்; ஹேயக் என்பார், விலை மட்டம் நிலைப்படுத்தப்படின், பொருளாதார மந்தம் ஏற்படக் கூடுமெனக் குறிப்பிடுகின்றார்.

மேற்கூறியவற்றால் அயல்நாட்டுச் செலாவணி மாற்று விகிதத்தைப் பாதுகாப்பதைக்காட்டிலும் உள்நாட்டு விலை மட்டத்தை நிலைப்படுத்துவதே சிறந்தது. ஆயினும், இந் நோக்கமும் குறைகளை உடையது என்பது தெளிவாகின்றது.

ஆகவேதான் கெயின்சும், அமெரிக்காவில் ஹான்சனும் "முழு வேலைமட்டம் எய்துவதே பணவாக்கக் கைக்கோளின் முக்கிய நோக்கம் என்பதையும், இந் நோக்கமே மற்ற இரு நோக்கங்களைக்காட்டிலும் சிறந்தது என்பதையும் நிலை நிறுத்தினர்.

முழு வேலைத்திட்டம்[1] எய்துவது: இருபதாம் நூற்றாண்டில் பொருளாதாரச் சிந்தனையில் புரட்சி மிக்க மாற்றத்தை ஏற்படுத்திய ஜான் மேனார்டு கெயின்சின் 'வட்டி, வேலை, பணம் பற்றிய பொதுக் கோட்பாடு' எனும் நூல் வெளிவந்த பின்னர், பணவாக்கக் கைக்கோளின் முக்கிய நோக்கம் முழு வேலைமட்டம் எய்துவதே எனும் கருத்து பிரபலமடைந்தது.

முழு வேலைமட்டம் எனும் கருத்தைத் தெளிவாக விளக்குவது இயலாது. எனினும், வழக்கமாக அக் கருத்திற்கு அளிக்கப்படும் விளக்கம் பின் வருமாறு: ஒரு நாட்டில் வேலை செய்வதற்குத் தகுதியும், விருப்பமும் உடைய அனைவர்க்கும் வேலைகள் கிட்டுமாயின், அந் நாடு முழு வேலைமட்டம் எய்திவிட்டதாகக் கொள்ளலாம். பணி புரிய முன்வரும் அனைவர்க்கும் வேலை கிட்டுமாயினும், 3% முதல் 4% வரையில் வேலையின்மை நிலவுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும். 'தொழில் அமைப்பு முறைகள் மாறுவதாலும், காலநிலைகள் மாறுவதாலும் ஏற்படக்கூடிய வேலையின்மைப் பிரச்சினைகள் மூன்று அல்லது நான்கு மாதங்களில் தீர்ந்துவிடும்' என்று கருதப்படுகின்றது. ஆதலால், ஒரு நாட்டில் 3% முதல் 4% வரையிலும் வேலையின்மைப் பிரச்சினை நிலவினாலுங்கூட அந் நாடு முழு வேலைமட்டம் எய்தியதாகக் கொள்ளலாம். வேலை மட்டத்தைப் பொறுத்தவரையில் முன்னேறிய நாடுகளின் பிரச்சினைகளும், வளம் குன்றிய நாடுகளின் பிரச்சினைகளும் வெவ்வேறுபட்டவையாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் ஏற்கெனவே எய்தப்பட்ட முழு வேலைத்திட்டத்தை நிலைநிறுத்திக் கொள்வதே பிரச்சினையாகும். இந்தியா போன்ற வளங் குன்றிய நாடுகளின் பிரச்சினைகள் இரு வகைப்படும்:

(1) விவசாயிகள் இடையில் காணப்படும் குறைவேலை (அல்லது) மறைவான வேலையின்மையை நீக்குவது.

[1] Full Employment

(2) தகுதியான வேலையின்றித் தவிக்கும் பெரும்பான்மையான மக்களிடையில் வேலை வாய்ப்புகளை அதிகரித்து, அவர்களை வேலை பெறச் செய்வது.

அதாவது, முன்னேறிய நாடுகளின் முழு வேலைத் திட்டத்தைக் காத்துக்கொள்வதும், பின்தங்கிய நாடுகளில் முழு வேலைமட்டம் எய்துவதுமே பிரச்சினைகளாகும்.

வேலையின்மைப் பிரச்சினை நிலவும் நாடுகளில் முதலீடு பற்றாக்குறையின் விளைவாகவே வேலையின்மைப் பிரச்சினை தோன்றுகின்றது. எனவே, முதலீட்டைச் சேமிப்பைக்காட்டிலும் அதிகமாகப் பெருக்குவதன் மூலமே வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். பணத்தின் அளவைப் பெருக்குவது அல்லது பணத்தின் சுழல் வேகத்தைப் பெருக்குவது ஆகியவற்றின் மூலம் வட்டி வீதத்தைக் குறைக்கவும் பணம் மலிவாகக் கிடைக்கச் செய்யவும் முடியும். மலிவுப் பணக்கொள்கை[1] மேற்கொள்ளப்படின், கடன் வசதி பெருகுவதால் முதலீடு அதிகரிக்கும். சேமிப்பைக்காட்டிலும், முதலீடு அதிகரிப்பதால் உற்பத்தி, வேலைமட்டம், தேசீய வருமானம் ஆகியவையும் அதிகரிக்கும். ஆரம்ப முதலீடு அதிகரிக்கப் பட்டால் பெருக்கி, முடுக்கி ஆகியவை செயல்படுவதன் விளைவாக வேலை வாய்ப்புகளும், தேசீய வருமானமும் பன்மடங்காக அதிகரிக்கும். வேலையின்றியிருந்த வேலை தேடுவோர்க்கும்[2] உற்பத்திக் காரணங்களுக்கும் வேலை கிட்டும். முழு வேலைமட்டம் எய்தப் பெறும்வரையிலும் சேமிப்பைக்காட்டிலும் முதலீடு அதிகமாக இருப்பினும் முழு வேலைமட்டம் எய்தப்படும் கட்டத்தில் அவையிரண்டும் ஒன்றுக்கொன்று சமமாகும். முழு வேலைமட்டம் எய்திய பின்னர் முதலீடும் சேமிப்பும் சமநிலையில் இருப்பதைப் பாதுகாப்பதே முக்கியமாகும். ஏனெனில், முழு வேலை மட்டம் எய்திய பின்னர், சேமிப்பைக்காட்டிலும் முதலீடு அதிகமாக இருப்பின், நாட்டில் பணவீக்கம் தோன்றும்; முதலீட்டைக்காட்டிலும் சேமிப்பு அதிகமாக இருப்பின், பண வாட்டம் தோன்றும். எனவே, முதலீட்டையும் சேமிப்பையும் சமநிலையில் காப்பதே பணவாக்கக் கைக்கோளின் நோக்கமாகும்.

1 Cheap money policy
2 Under employment or Disquised unemployment

நாடு முழு வேலைமட்டம் எய்திய பின்னர், அதைப் பாதுகாத்தல் முன்பு குறிப்பிடப்பட்ட குறிக்கோள்கள் யாவும் நிறைவேறும். விலைமட்டம் உயர்ந்துகொண்டே இருப்ப தால்தான் முழு வேலைமட்டத்தை அடைய முடியும். ஆனால், முழு வேலைமட்டம் எய்திய பின்னர் விலைமட்டம் மாறாமல் நிலைப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில், முழு வேலை மட்டம் எய்திய பின்னர் விலைமட்டம் உயர்வதால் பண வீக்கமும், விலைமட்டம் குறைந்தால் பணவாட்டமும் தோன்றி, முழு வேலைமட்டம் எய்தியதைச் சீர்கெடச் செய்யும். அதுபோன்றே முழு வேலைமட்டம் எய்திய பின்னர், அயல்நாட்டு நாணயமாற்று விகிதமும் மாறாமல் பாதுகாக்கப்படும். அயல்நாட்டு நாணயமாற்று விகிதமும் அயல்நாட்டுச் செலுத்துநிலையும் சிறிதளவு சீர்கெட்டாலும் முழு வேலைமட்ட நிலை சீர்கெடுமாகையால், அவையிரண்டும் மாறாமல் பாதுகாக்கப்படும்.

பணவாக்கக் கைக்கோளின் மற்றக் குறிகோள்களை உள்ளடக்கியதாக இருப்பதால், முழு வேலைமட்டம் எய்தும் குறிக்கோளே சிறந்ததாகும். பண்ணாட்டுப் பண நிதி யமைப்பின் தோற்றத்திற்குப் பின்னர் நாணயத்தின் உள்நாட்டு மதிப்பையும், அயல்நாட்டு மதிப்பையும் மாறாமல் பாதுகாக்கக் கூடிய முழு வேலைமட்டம் எய்துவதே சிறந்த குறிக்கோள் என்று பணத்துறை அலுவலர்களால் கருதப்பட்டது.

பொருளாதார முன்னேற்றமும் பணவாக்கக் கைக்கோளும்[1]

வேலை நிறைவு நிலையை அடைவதற்கும், அடைந்த பின்னர் அதனை நிலைநிறுத்திக்கொள்வதற்குமே பணவாக்கக் கைக்கோள் பயன்படுத்தப்பட வேண்டுமென்பது நெடுங் காலமாக நிலவும் கருத்தாகும். ஆயினும், அக் கருத்து பொரு ளாதார வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளுக்கே ஏற்றதாகும். பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் தொடர் விளைவுகள் வளர்ச்சியுற்ற நாடுகளைப் பாதிக்கும் அளவிற்கு வளர்ச்சி குன்றிய நாடுகளில் பெரும் விளைவுகளை ஏற்படுத் துவதற்கில்லை. இந்தியா போன்ற வளர்ச்சி குன்றிய நாடு களின் பிரச்சினைகள் வேறுபட்டவையாகும். வளர்ச்சி குன்றிய நாடுகளில் மூலதனப் பற்றாக்குறையின் விளைவாக உற்பத்திச் சக்திகள் பணிபுரிய வாய்ப்பின்றி வாளாயிருக் கின்றன. வேலையின்மைப் பிரச்சினையும், குறைவேலைப்

[1] Economic Development and Monetary Policy

(மறைவான வேலையின்மை) பிரச்சினையும் மிக அதிகமாகக் காணப்படும். மொத்த வருமானமும், தனிநபர் தலாவருமானமும் மிகக் குறைவாக இருக்கும். அத்தகைய நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகள் துரிதமாக இயங்கிப் பொருளாதார முன்னேற்றம் அடைவதே முக்கியப் பிரச்சினையாகும். வளர்ச்சி குன்றிய நாடுகள் பொருளாதார முன்னேற்றம் அடையும் வகையில் பணவாக்கக் கைக்கோள் அமைய வேண்டும்.

வளர்ச்சி குன்றிய நாடுகள் வளர்ச்சியுறும் வகையில் பணவாக்கக் கைக்கோள் அமைய வேண்டும் எனும் கருத்து சிறந்ததாகக் காணப்படினும், அக் கருத்திற்கு எதிர்ப்பான வாதங்களும் நிலவுகின்றன. எடுத்துக்காட்டாக, ஹோவார்ட் எலிஸ் எனும் அமெரிக்காவைச் சார்ந்த பொருளாதார அறிஞர், வளர்ச்சி குறைந்த நாடுகளில் பொருளாதார முன்னேற்றமடைவதற்கு ஏற்ப மேற்கொள்ளும் பணவியல் கைக்கோள் ஏமாற்றத்தை நல்கும் என்று கருதுகின்றார். அவருடைய கருத்துப்படி அரசியல் நிலவரம், வரியமைப்பு, அயல்நாட்டுச் செலுத்துநிலை, அரசின் குறிக்கோள், முன்னேற்றத்தின் வேகம், சேமிப்புப் பழக்கம் (அல்லது அது இல்லாமை), உள்நாட்டுச் செலாவணிமீது நெடுங்காலமாக நிலவிவரும் (ஆனால் ஆதாரபூர்வமான) நம்பிக்கையின்மை, அரசுப் பத்திரங்களுக்கு அங்காடி இல்லாமை, அயல்நாட்டில் நிலவும் வாழ்க்கைத்தரங்களின் 'கவர்ச்சி விளைவு'[1] இவை யாவும் பணவீக்கப் போக்கில் அமைகின்றன; பணவீக்கம் பொருளாதார முன்னேற்றத்தைக் கடுமையாகப் பாதிக்கும்.

இவ்வாறு மாறுபட்டக் கருத்துகள் நிலவிடினும் பொருளாதார அறிஞருள் பெரும்பான்மையினர், வளர்ச்சி குன்றிய நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் அடைய உதவுவதே பணவியல் கைக்கோளின் நோக்கமாக அமைய வேண்டும் என்று கருதுகின்றனர்.

நாடு பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு ஏதுவாகப் பணவியல்துறைத் தலைவர் கீழ்க்காணும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்:

நாடு பொருளாதார வளர்ச்சியுறும்பொழுது உள்நாட்டு அங்காடிகள் வளர்ச்சி பெறுவதாலும், சிறப்புத் தேர்ச்சியில்

[1] Demonstration effect

பரிவர்த்தனையும் விரிவாக்கப்படுவதாலும் அவற்றின் வளர்ச்சிக்கு ஏற்ப, இடையீட்டுக் கருவியான செலாவணி முறையும் திறம்பட நிர்வகிக்கப்பட வேண்டும்.

நாட்டில் சிறப்புத் தேர்ச்சியும், பரிவர்த்தனையும் விரிவாக்கம் பெருகுவதற்கு ஏற்பப் பணத்தின் அளிப்பும் அதிகரிக்க வேண்டும். உலோக நாணயங்களுக்குப் பதிலாகக் காகிதப் பணங்களும், காலப்போக்கில் காகிதப் பணத்துடன் காசோலைகளும், மற்றக் கடன் கருவிகளும் இடம் பெற வேண்டும். பணம், கடன் ஆகியவை மிகையாக அதிகரிப்பின், பணவீக்கம் ஏற்படும்; போதிய அளவில் அதிகரிக்கப் படாவிடின், பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும். தேசீய வருமானம் அதிகரிக்கும்பொழுது விலைமட்டம் குறையாமலிருக்கும் வகையில் நாட்டின் மெய்யான வருமானம் அதிகரிக்கும் விகிதத்திற்குச் சமவிகிதத்தில் பணத்தின் அளிப்பும் அதிகரிக்கப்பட வேண்டும்.

பொருளாதார வளர்ச்சி முதிர்ச்சி நிலையை அடையும் பொழுது பணவாக்க அமைப்பின் முக்கியத்துவம் குறைகின்றது. பொருளாதார முன்னேற்றத்தின் பிற்பகுதியில் நாட்டின் நிதித்துறையின் ஓர் அங்கமாகவே பணவியல்துறை மாறிவிடும். இடைப்பட்ட காலத்தில் நாட்டின் வங்கித் துறையும், நிதித்துறையும் வளர்ச்சியுறுவதற்குப் பணவியல் துறை பயன்பட வேண்டும்.

பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளில் வங்கித் துறையும் மற்ற நிதித்துறை நிறுவனங்களும் போதிய வளர்ச்சியின்றிக் காணப்படும். நகர்ப்புறங்களில் மட்டுமே இத்தகைய வசதிகள் இருப்பதால், கிராமப் பகுதிகளில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். கிராமியப் பகுதிகளில் சேமிப்பைத் திரட்டி உற்பத்தித்துறையில் ஈடுபடுத்தும் முயற்சிகளில் நிதித் துறை நிறுவனங்கள் ஈடுபட வேண்டும். விவசாயிகள், சில தொழிலதிபர்கள், சிறு வணிகர்களுக்குத் தேவையான கடன் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கேற்ப வாணிப வங்கிகள் பணியாற்றும் வகையில் மையவங்கிகள் செயல்பட வேண்டும். மையவங்கி அத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் பொருளாதார முன்னேற்றமடைய உதவ முடியும்.

வளர்ந்துவரும் நாடுகளில் அயல்நாட்டுச் செலுத்துநிலைச் சீர்கேடுகளைத் தவிர்க்கும் வகையில் பணவாக்கக் கைக்கோள்

செயல்பட வேண்டும். வளர்ச்சியுறும் நாடுகளில் இறக்குமதி, ஏற்றுமதியைக்காட்டிலும் உயர்விகிதத்தில் அதிகரிக்கும் அயல் நாட்டுச் செலுத்துநிலை சீர்கெடும். செலுத்துநிலையில் ஏற்படும் சீர்கேட்டைத் தவிர்க்கும் நிலையில் பணவியல்துறை அதிகாரி அயல்நாட்டுச் செலாவணி போன்ற நேரடி நடவடிக் கைகளையும் வங்கி வட்டிவீதக் கைக்கோள் போன்ற பழமை யான நடவடிக்கைகளையும் பயன்படுத்தப்பட வேண்டும். அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் சீர்கேடுகள் சமன் செய்யப்படாவிடின், நாட்டின் முன்னேற்றத்திற்காக மேற் கொள்ளப்படும் திட்டங்கள் யாவும் உயர்ந்ததாகும்.

பணவாக்கக் கைக்கோளின் அடிப்படை நோக்கமாகப் பொருளாதார முன்னேற்றம் அமைவதே சிறப்பாகும். எனினும், அஃது எளிமையான பணி அன்று. வளர்ச்சியுறும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான சாதனமாகப் பணவியல் கைக் கோள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பணவாக்கக் கைக்கோளும் அரசிறைக் கைக்கோளும்[1]

1920ஆம் ஆண்டிற்கு முன்னர்ப் பணவாக்கக் கைக்கோள் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. பணவாக்கக் கைக் கோளின் இலக்குகளை அடைவதற்கு மையவங்கிகள் பெரு மளவில் பயன்படும் என்று நம்பப்பட்டது. ஆனால் செர்மனி யிலும் மத்திய ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்ட அமிதப் பணவீக்கப் போக்கையும், 1929 முதல் 1933 வரையிலும் நிலவிய உலகப் பெரும் மந்தத்தையும் கட்டுப்படுத்துவதில் மையவங்கிகளின் முயற்சிகள் செயலற்றுப் போனதன் விளைவாக மையவங்கிகளின் கடன் கட்டுப்பாடு நடவடிக் கைகள்மீது பொருளாதார அறிஞர்களும் பொதுமக்களும் கொண்டிருந்த நம்பிக்கை குறைந்தது. பணவாக்கக் கைக் கோளின் செயல்திறம் பற்றி ஐயத்தை எழுப்பிய கெயின்சு பணவாக்கக் கைக்கோளிற்குப் பதிலாக அரசிறைக் கைக் கோளைப் பரிந்துரைத்தார். இங்கிலாந்திலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், மற்றும் சில நாடுகளிலும் நிதியில் கைக் கோள் மேற்கொள்ளப்பட்டுப் போதிய வெற்றியை அளித்த தன் விளைவாகக் காலப்போக்கில் பணவாக்கக் கைக் கோள்கள் முக்கியத்துவம் பெற்றன.

வரி விதிப்பு, அரசாங்கச் செலவுகள், அரசுக்கடன் நிர்வாகம் ஆகியவை பற்றிய அரசின் கொள்கையே அரசிறைக்

[1] Monetary Policy and Fiscal Policy

கைக்கோள் எனப்படும். நிதியியல் கைக்கோள்கள் உலகப் பெரும் மந்தத்திற்குப் பின்னர்ப் பெருமளவில் மேற்கொள்ளப் பட்டன. வேலைமட்டமும், விலைமட்டமும் வீழ்ச்சியடையும் நாடுகளில் வரி விதிப்பைக் குறைப்பதன் மூலமும், பொதுச் செலவுகளை அதிகரிப்பதன் மூலமும் பொதுமக்களின் வருவாயை அரசு அதிகரிக்கலாம். பொதுமக்களின் வருவாய் அதிகரிப்பதால், பொருள்களுக்கும் பணிகளுக்குமான தேவை அதிகரிப்பதால், நாட்டின் விலைமட்டம், உற்பத்தி வேலை மட்டம் ஆகியவை பெருகும். தனியார் செலவுகள் குறை வதால் ஏற்படும் இழப்பை ஈடு செய்வதற்காக அரசாங்கம் முதலீடு செய்வதால், அவை ஈட்டுச் செலவுகள்[1] என்றும், பற்றாக்குறை நிதியாக்கம்[2] என்றும் குறிப்பிடப்படுகின்றன. அரசுப் பொதுத்திட்டங்களில் செலவிடும்பொழுது மையவங்கி மலிவுப் பணக்கொள்கையைப் பின்பற்றினால் குறைவான வட்டிவீதத்தால் ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் கடன் பெற்று முதலீடு செய்வதற்கு முனைவர். அதன் விளைவாகத் தனியார் முதலீடு அதிகரிக்கும் அளவிற்கு அரசின் சுமை குறைவடையும்.

பணவாக்கக் கைக்கோளும், அரசிறைக் கைக்கோளும் ஒன்றுக்கொன்று புறம்பானவை அன்று; அவற்றில் ஒன்று மற்றொன்றிற்கு ஆதரவாகவே விளங்கும். எடுத்துக்காட்டாக, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரும்பணக் கொள் கையை மேற்கொண்டால், முதலீடு குறைவடையும். நிதியியல் நடவடிக்கைகளான அதிக வரி விதிப்பையும், பொதுச் செலவுக் குறைப்பையும், உபரி நிதியாக்கத்தையும் மேற்கொண் டாலும், பணவீக்கம் கட்டுப்படுத்தப்படும். இவ்விரு கைக் கோள்களும் அரசினரால் திட்டமிட்டு அரசின் இருவேறு துறை யினரால் செயல்படுத்தப்படுகின்றன. பணவாக்கக் கைக் கோள் பணத்துறைப் பொறுப்பினர்களும், அரசிறைக் கைக்கோளை நிதித்துறைப் பொறுப்பினர்களும் மேற்கொள்வர் எனினும், அவையிரண்டில் ஒன்றின் வெற்றிக்கு மற்றொன்று உறுதுணையாக விளங்கும்.

[1] **Compensatory spending**
[2] **Dear money policy**

9. பணச் சந்தை[1]

விளக்கம்

குறுங்காலக் கடன் நடவடிக்கைகளில் ஈடுபடும் பல்வேறு நிறுவனங்களின் தொகுப்பே பணச் சந்தை அல்லது பண அங்காடி ஆகும். பணச் சந்தையில் கடனீவோர் தமது சேமிப்பை இலாபம் தரும் வகையில் குறுகிய காலத்திற்கு முதலீடு செய்கின்றனர். கடனாளிகள் தமது குறுகிய தேவையைப் பூர்த்தி செய்கின்றனர். பணச் சந்தையில் பொதுவாக வணிகர்கள், ஊக வணிகர்கள், தரகர்கள், பொறி செய்ப் பொருள்களின் உற்பத்தியாளர்கள்[2], உற்பத்தியாளர்கள் ஆகியோரும், அரசும், மற்ற நிறுவனங்களும் கடன் பெறுகின்றனர். பணச் சந்தையில் வாணிப வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள், மையவங்கி ஆகியவை கடன் அளிக்கின்றன. பணச் சந்தை குறுங்கால நிதிகளின் தேக்கமாகும். தற்காலிகமாக முதலீடு செய்யப்படக் கூடிய நிதியினைப் பணச் சந்தை சேர்த்து, அவற்றைத் தேவைப்படுவோர்க்குக் கிடைக்கச் செய்கின்றது.

பணச் சந்தை என்பது குறுங்காலக் கடன்களைப் பெறுவதையும் அளிப்பதையும் குறிக்கின்றது. பணச் சந்தையில் வாணிப உண்டியல்கள், குறுங்காலப் பத்திரங்கள், வங்கி (ஒப்புகள்) ஏற்புகள்[3] போன்ற நெருங்கிய பணத்தின்மீது ஒரு நாள் முதல் 6 மாதங்கள் வரையில் காலக் கெடு உள்ள கடன்கள் அளிக்கப்படுகின்றன. பலவிதமான நெருங்கிய பணங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் பலவித நிதியமைப்புகளின் தொகுப்பே பணச் சந்தையாகும்.

பணச் சந்தையும் மூலதனச் சந்தையும்[4] வெவ்வேறானவையாகும். மூலதனச் சந்தையில் நெடுங்கால நிதிகளே இடம் பெறுகின்றன எனினும், குறுங்காலக் கடன் மற்றும் நெடுங்காலக் கடன் நடவடிக்கைகளுக்கிடையில் ஓரளவிற்குத்

[1] Money market
[2] Manufacturers
[3] Banker's acceptances
[4] Capital market

தொடர்பு இருப்பதால், பணச் சந்தையும் மூலதனச் சந்தையும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டவையாகும். ஒரே நிறுவனம் இருவிதக் கடன்களிலும் ஈடுபாடு கொண்டிருக்கக் கூடும். ஆயினும், முதலீட்டகங்கள், அடைமான வங்கிகள் போன்ற சில நிறுவனங்கள் நெடுங்காலக் கடன்களை மட்டுமே அளிப்பவையாகும். தீர்வகங்கள்[1], வாணிப வங்கிகள் போன்றவை குறுங்காலக் கடன்களில் மட்டுமே ஈடுபாடு கொண்டவையாகும்.

பணச் சந்தையில் கடனளிப்போரும் கடன் பெறுவோரும் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு கொள்கின்றனர். அவர்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுந்தான் சந்திக்க வேண்டுமென்ற நியதியில்லை. தொலைபேசி, தந்தி, தபால் போன்றவை மூலமும் அவர்களுக்கிடையில் ஒப்பந்தம் ஏற்படலாம். குறுங்கால நிதியின் தேக்கிடமான பணச் சந்தையின் முக்கியப் பணியானது, வாணிப வங்கிகள், வங்கிகளல்லாத நிதி நிறுவனங்கள், வாணிப நிறுவனங்கள், மற்றும் முதலீட்டாளர்களுடைய ரொக்க நிலையைச் சரி செய்துகொள்வதற்கான வசதிகளை அளிப்பதே ஆகும்.

குழப்பமின்றிச் செயல்படும் ஒரு பணச் சந்தையினால் பலவித நன்மைகள் ஏற்படும். அவை நாட்டின் முக்கியப் பணிகளுக்குத் தேவையான நிதியை அளிக்கின்றன; பொருளாதார வளர்ச்சி பெறவும் உதவுகின்றன; உற்பத்திக்கும் பகிர்விற்கும் தேவையான நிதி வசதிகளை அளிக்கின்றன. வணிகச் சமுதாயத்தினரைக் குறுங்கால முதலீடுகளை மேற்கொள்ளச் செய்வதன் மூலம் அவர்கள் ரொக்கத்தைப் பயன்படுத்துவதைச் சிக்கனப்படுத்துகின்றன. பணச் சந்தையின் விளைவாக ரொக்க நோக்கமும், இலாப நோக்கமும் இணைந்து செயல்படுகின்றன. பணச் சந்தை கடன்கட்டுப்பாடு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதில் முக்கியப் பங்கேற்கிறது. பொருளாதார நெருக்கடியும், பூரிப்புகளும் முதலில் பணச் சந்தையில்தான் பிரதிபலிக்கப்படுவதாகவும் கருதப்படுகின்றது. ஆதலால்தான் உற்பத்திச் செலவு, தேவை ஆகியவற்றையும், பணத்தின் அளிப்பையும், பணம் கிடைப்பதையும் கண்காணிக்க முற்படும் மையவங்கிகள் தமது நடவடிக்கைகளைப் பணச் சந்தையுடனேயே நிறுத்திக் கொள்கின்றன.

[1] Discount houses

பணச் சந்தையின் பணிகளில் வேறுபாடு எதுவுமில்லையெனினும், பணச் சந்தையின் அமைப்புகள், கருவிகள், நடைமுறைகள் ஆகியவை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன.

பணச் சந்தையின் அங்கங்கள்[1]

பலவிதமான குறுங்காலக் கடன் நடவடிக்கைளில் ஈடுபடும் பலவிதமான நிதி முகவர்கள் சேர்ந்ததே பணச் சந்தை ஆகும். குறுங்காலக் கடன்கள் பலவிதமாகையால், பணச் சந்தையில் பலவகைத் துணைச் சந்தைகளும் அடங்குகின்றன. பணச் சந்தையின் முக்கியமான துணைச் சந்தைகளைப் பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு :

அழைப்புக் கடன் சந்தை[2] : அழைப்புப் பணச் சந்தை, பணச் சந்தையின் மிக முக்கியமான பகுதியாகும். மிகவும் குறுகியக் காலக் கடன்களுக்கான சந்தையே அழைப்புப் பணச் (கடன்) சந்தை எனப்படும். உண்டியல் தரகர்களும்[3], பங்கு மாற்றுச் சந்தையில்[4] ஈடுபடுவோரும் தமக்காகவும் தமது வாடிக்கையாளர்களுக்காகவும் மிகவும் குறுகிய காலக் கடன்களைப் பெறுகின்றனர். இத்தகைய வாணிப வங்கிகள் துணைஈடு இன்றி அளிக்கின்றன. பொதுவாக, இத்தகைய கடன்களின் காலக்கெடு 7 நாள்களாயினும், அவை பெரும்பாலும் தினசரிக் கடன்களே ஆகும். இத்தகைய கடன்களை வங்கிகள் விரைவில் திருப்பி அழைக்க முடியுமாகையால், அவை அழைப்புப் பணம் எனப்படுகின்றன. வங்கிகள் ரொக்கமாக வைத்திருப்பதைக்காட்டிலும் அழைப்புப் பணமாக வைத்திருப்பதையே விரும்புகின்றன. ஏனெனில், அழைப்புக் கடன்களுக்கு நீர்மைத் தன்மை அதிகமாகும். அவை உடனடியாகத் திரும்பப் பெறக் கூடியவையாதலால், அவை வங்கிகளின் இரண்டாவது காப்புத் தொகையாகக் கருதப்படுகின்றன. மேலும், ரொக்கமாக வைத்திருப்பதைக் காட்டிலும் அழைப்புப் பணத்திலிருந்து வட்டியும் கிட்டுகின்றதல்லவா ?

துணைக்கடன் சந்தை[5] : பங்குகள், பத்திரங்கள் ஆகியவற்றால் பெறப்படும் குறுங்காலக் கடன்களுக்கான சந்தையே துணைக்கடன் சந்தை ஆகும். இச் சந்தை குறுங்காலப் பணச்

[1] Constituents of money market
[2] Call money market
[3] Bill brokers
[4] Stock exchange
[5] Collateral loan market

சந்தைகளுள் பரந்து ஆனால் நெகிழ்ந்து காணப்படுவதாகும். பத்திரங்களின் விற்பனையாளர்கள், மற்றும் தரகர்கள் அவற்றின்மீது பெறும் குறுங்காலக் கடன்களே துணைக் கடன்கள் ஆகும். பொதுவாக வங்கிகள் தமது கிளை வங்கி களிடமிருந்து இத்தகைய கடன்களைப் பெறுகின்றன. வணிகர்களும், சில்லறை வியாபாரிகளும் அரசுப் பத்திரங்கள், பொன், வெள்ளி, பங்குகள் ஆகியவற்றின்மீது இவ்விதக் கடன்களைப் பெறுகின்றனர். துணைக்கடன்கள் அதிகப் பற்று வசதியாகவோ அல்லது ரொக்கமாகவோ அளிக்கப்படும்.

ஏற்புச் சந்தை[1]**:** ஏற்புச் சந்தை என்பது, வாணிப நடவடிக்கைகளால் ஏற்படும் வங்கி ஏற்பு(ஒப்புதல்)களுக்கான சந்தையைக் குறிப்பிடுகின்றது. ஏற்பகங்கள் பணபலமிக்க நிறுவனங்களாகும். இவை உள்நாட்டு வாணிப உண்டியல் களையும், வெளிநாட்டு வாணிப உண்டியல்களையும் ஏற்று, அவற்றின் மதிப்பிற்குச் சான்றாக உறுதிமொழியளிக்கின்றன; இதற்கான கட்டணத்தை வசூலித்துக்கொள்கின்றன. ஏற்பகங் களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்டியல்கள் வங்கிகளாலும், தீர்வகங்களாலும் எளிதில் ஏற்றுக்கொள்ளப்படுவதால் நாட்டில் உண்டியல்களின் புழக்கம் வளர்ச்சியடைகின்றது. வங்கிகளின் ஒப்புதல்கள், காசோலையிலிருந்து வேறுபட்டவை யாகும். வங்கி ஒப்புதல்கள் எதிர்காலத்தில் மட்டுமே ரொக்க மாக்கப்படக் கூடியவை. காசோலைகளைத் தேவைப்படும் பொழுது ரொக்கமாக்கிக்கொள்ள முடியும். வங்கி ஒப்புதல்கள் உள்நாட்டு வாணிப வளர்ச்சிக்கு உதவிடினும், பன்னாட்டு வாணிபத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படக் கூடியவை ஆகும். கடந்த காலத்தில் இருந்த அளவிற்குத் தற்காலத்தில் பணச் சந்தையில் வங்கி ஒப்புதல்கள் முக்கியப் பங்கு ஏற்பதில்லை.

உண்டியல் சந்தை[2]**:** குறுகிய நாளிட்ட தாள்கள் அல்லது உண்டியல்கள் வாங்கவும், விற்கவும்படும் சந்தை உண்டியல் சந்தை அல்லது கழிவுச் சந்தை[3] எனப்படும். குறுகிய நாளிட்ட உண்டியல்களுள் மாற்று உண்டியல்களும்[4], கருவூல உண்டியல்களும்[5] முக்கியமானவையாகும். மாற்று உண்டியல்கள் நிபந்தனையற்ற ஆணையாகும். உண்டியல் எழுதுபவர்[6] ஆணையிடப்பட்டவருக்கு, உண்டியல் எழுதப் பெற்றவரிடம்[7] அவருக்குத் தேவைப்படும்பொழுதோ அல்லது

1. The Acceptance market
2. Bill market
3. Discount market
4. Bills of Exchange
5. Treasury bills
6. Drawyer
7. Drawee

குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னரோ உண்டியலில் கண்டுள்ள தொகையை அளிக்குமாறு எழுதிக் கையொப்பமிட்டிருப்பார். இத்தகைய மாற்று உண்டியல்களைக் கடனளிப்பதற்காகவும், தமது நிதி வசதிகளைப் பெருக்கிக்கொள்வதற்காகவும் வாணிப வங்கிகள் கழிவு செய்வதுடன் மறு கழிவும் செய்கின்றன. மாற்று உண்டியல்கள் வாணிபத்தாள்கள் ஆகும். கருவூல உண்டியல்கள் அரசாங்கத் தாள்களாகும். கருவூல உண்டியல்களை அரசின் சார்பில் மையவங்கி விற்கிறது. அவை 91 நாள்கள் காலவரம்புள்ளவை ஆகும். இவற்றிற்கு அளிக்கப்படும் வட்டிவீதங்களைக் கருவூலம் நிச்சயிப்பதில்லை. மாறாக, அவை மிகவும் குறைந்த வட்டிவீதத்தில் அவற்றை ஏற்றுக்கொள்ள ஒப்புவோருக்கே விற்கப்படுகின்றன. கருவூல உண்டியல்கள் ரொக்க நிலையில் சிறந்தவையாகவும், எளிதில் விற்பனை செய்யப்படக் கூடியவையாகவுமிருப்பதால், அவற்றை வாணிப வங்கிகளும், வணிக நிறுவனங்களும் போட்டியிட்டு வங்கி இரண்டாம் நிலைக்காப்பாகப் பயன் படுத்துகின்றன.

உண்டியல்களைக் கழிவு செய்வதே உண்டியல் சந்தையின் பணியாதலால், பணச் சந்தை முழுவதையுமே உண்டியல் சந்தை எனவும் குறிப்பிடலாம்.

பத்திரச் சந்தை, அரசாங்க நெடுங்காலக் கடன் பத்திரச் சந்தை, கருவூலப் பத்திரங்கள், பங்குமாற்றுச் சந்தை போன்றவை நெடுங்காலக் கடன் வசதிகளை அளிப்பதால், அவை மூலதனச் சந்தையின் அங்கங்களாகும்.

பணச் சந்தையில் கடனளிக்கும் நடவடிக்கையாலும், கடன் பெறும் நடவடிக்கையாலும், வாணிப வங்கிகள், சேமிப்பு வங்கிகள், பிற வகை வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், ஏற்பகங்கள், உண்டியல் தரகு நிறுவனங்கள், உண்டியல் கழிவகங்கள் ஆகியவையும், மையவங்கியும் ஈடுபடுகின்றன.

வாணிப வங்கிகள் பணச் சந்தையின் முக்கியமான அங்கமாகும். அவை தொழில் நிறுவனங்களுக்கும், வாணிப நிறுவனங்களுக்கும் குறுங்காலக் கடன்களை அளிக்கின்றன. அழைப்புக் கடன்களையும், துணை(கால)க் கடன்களையும் உண்டியல் தரகர்களுக்கும், பங்குமாற்றுச் சந்தைகளுக்கும் அளிக்கின்றன. வாணிப வங்கிகள் தவிரச் சேமிப்பு

வங்கிகள், பரிவர்த்தனை வங்கிகள், முதலீட்டு வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவையும் இத்தகையக் கடன்களை அளிக்கின்றன.

ஏற்பகங்களும், உண்டியல் தரகர்களும் உண்டியல் சந்தையில் முக்கியமானவை ஆகும். சில நாடுகளில் வாணிப வங்கிகளே ஏற்பகங்களாகவும் செயல்படுகின்றன. தீர்வகங்களும், உண்டியல் தரகர்களும் வாணிப உண்டியல்களை வாங்குவதன் மூலமும், விற்பதன் மூலமும் வாணிப வளர்ச்சிக்கு உதவுகின்றன.

காப்பீட்டு நிறுவனங்கள், வாணிப நிறுவனங்கள் போன்ற வங்கியல்லாத நிதி நிறுவனங்களும் குறுங்கால நிதி வசதிகளை அளிப்பதால், அவையும் பணச் சந்தையில் இடம் பெறுகின்றன.

இவை யாவற்றைக்காட்டிலும், பணச் சந்தையில் மைய வங்கியே சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. வங்கித் துறையின் தலைமைப்பீடமான மையவங்கி பணவாக்கப் பொறுப்பையும் ஆற்றுகின்றது. பணவாக்கத் துறையைக் கட்டுப்படுத்தும் மையவங்கி உற்றுழி உதவுவோராகவும் செயல்படுகின்றது. தேசீய நிதியின் தேக்கமான மையவங்கியிடமே கடன் அளவைக் கட்டுப்படுத்தும் அளவுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளையும், தரக் கட்டுப்பாடுகளையும் செயல்படுத்தும் திறமை உள்ளது. மையவங்கியின் முயற்சிகள் திறம்படச் செயல்பட வேண்டுமாயின், நாட்டில் முறையான வளர்ச்சி பெற்ற பணச் சந்தை இருப்பது அவசியமாகும்.

வளர்ச்சிப் பெற்ற பணச் சந்தையின் தன்மைகள் [1]

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் பணச் சந்தை உள்ளது. அவற்றுள் சில முழு வளர்ச்சி பெற்றவை; சில வளர்ச்சியுறாதவை. முழு வளர்ச்சிப் பெற்ற பணச் சந்தையின் தன்மைகள் கீழ்வருமாறு :

சிறப்பாக அமைந்துள்ள வாணிப வங்கித்துறை: வளர்ச்சியுற்ற பணச் சந்தையில் சிறப்பாக அமைந்துள்ள வங்கித்துறை இருப்பது அவசியமாகும். பணச் சந்தையின் கருப்பொருளே வாணிப வங்கிகள்தாம். அவை குறுங்காலக்

[1] Characteristics of a Developed Money Market

கடன்களை அளிப்பதில் முக்கிய இடத்தைப் பெறுவதால், அவற்றின் கடன் கொள்கைகள் பணச் சந்தையின்மீது வெகுவாகப் பிரதிபலிக்கும். மையவங்கிக்கும் வாணிப வங்கிக்கும் இடையே நெருங்கிய பிணைப்பு இருப்பதால், பணச் சந்தையின் பல்வேறு அங்கங்களையும் மையவங்கியுடன் இணைக்கும் பாலமாகவும் வாணிப வங்கிகள் செயல்படுகின்றன. வளர்ச்சியுற்ற பணச் சந்தையில் ஒழுங்காக வளர்ந்து அமைந்த வங்கித்துறை இருப்பது அடிப்படைத் தேவையாகும்.

மையவங்கி: ஓர் அரசாங்கம் தலைமையின்றிச் செயல்படவியலாததைப் போன்று, பணச் சந்தையும் மையவங்கியின்றிச் செயல்படவியலாது. மையவங்கி பணச் சந்தையின் தலைமைப்பீடம் மட்டும் இன்றிப் பணச் சந்தையைக் கட்டுப்படுத்தி வழிநடத்தும் பொறுப்பையும் ஏற்கின்றது. மையவங்கியின் வசம் வாணிப வங்கிகளின் ரொக்கக் காப்புகள் உள்ளன. வாணிப வங்கிகளுக்கும் பணச் சந்தைக்கும் நிதி நெருக்கடிகள் ஏற்படும்பொழுது பத்திரங்களை மறுகழிவு செய்வதன் மூலம் அவற்றிற்கு மையவங்கிகள் உதவுகின்றன. பணச் சந்தை முறிவடையக் கூடுமெனும் அச்சம் ஏற்படும் பொழுது அவற்றின் நெருங்கிய பணத்தை ரொக்கமாக மாற்றவும் மையவங்கி உதவுகின்றது. வளர்ச்சி பெற்ற மையவங்கியின்றிப் பணச் சந்தை நிலவ இயலாது. வளர்ச்சி குறைந்த பணச் சந்தை இருக்கும் நாடுகளில் மையவங்கி வளர்ச்சி குறைந்ததாகவோ அல்லது போதிய பலமற்றதாகவோ இருக்கும்.

மேற்காணும் தன்மைகள் இருந்தால் மட்டுமே பணச் சந்தை வளர்ச்சி பெறுவதில்லை. பேராசிரியர் எஸ். என். சென்[1] என்பார், ஆஸ்திரேலியாவில் மையவங்கியும், வங்கித் துறையும் வளர்ச்சி பெற்றிருந்தும் பணச் சந்தை சரியாக அமையவில்லை என்று குறிப்பிடுகின்றார். மேலும், மையவங்கி மற்றும் வங்கித்துறையின் வளர்ச்சியுடன் கீழ்க்காணும் தன்மைகள் இருந்தால் மட்டுமே பணச் சந்தை முழுமை பெறும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

சரியான கடன் கருவிகள் கிடைப்பது: பணச் சந்தை வளர்ச்சி பெறுவதற்கு அதில் வாணிப உண்டியல்கள், கருவூல உண்டியல்கள், அரசின் குறுங்காலக் கடன் பத்திரங்கள்

[1] Prop. S. N. Sen

போன்றவை தொடர்ந்து அளிக்கப்படுவது அவசியமாகும். அவற்றை விலைக்குப் பெறுவதற்காகப் பலர் இருப்பதும் அவசியம் ஆகும். இத்தகைய விற்பனையாளர்களும் தரகர் களுமே வங்கிக்ளிடமிருந்து குறுங்காலக் கடன்களைப் பெறு கின்றனர்; குறுங்காலச் சொத்துகளை இருப்பில் வைத் துள்ளனர். அவர்களே பணச் சந்தைக்கு உயிரூட்டுகின்றனர். அதாவது, குறுங்காலக் கடன்கள் அதிக அளவில் கிடைப் பதும், அவற்றைப் பெறுவோரும் அளிப்போரும் அதிக அளவில் இருப்பதும் பணச் சந்தையின் அடிப்படை அவசிய மாகும். அத்தகைய வசதிகள் இல்லாத இடங்களில் பணச் சந்தை வளர்ச்சிப் பெறுவதில்லை.

அதிக அளவில் துணைச்சந்தைகள் இருப்பது: ஒரு சந்தை வளர்ச்சியுறுவதற்கு, அச் சந்தையில் பலவிதத் துணைச் சந்தைகள் இருப்பது அவசியமாகும். துணைச்சந்தைகளான அழைப்புப் பணச் சந்தை, உண்டியல் சந்தை, வாணிப உண்டியல் சந்தை, கருவூல உண்டியல் சந்தை போன்றவை மிகவும் வளர்ச்சி பெற்றிருப்பதுடன் அவற்றிடையே ஒருங் கிணைந்த நடவடிக்கைகள் இருந்தால் மட்டுமே பணச் சந்தை வளர்ச்சி பெற முடியும். இத்தகைய துணைச்சந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாகப் பணச் சந்தை பரவ லாகவும் திறம்படவும் செயல்படுவது அதிகமாகும். இத் தகைய துணையங்காடிகள் வளர்ச்சியற்றிருப்பினும், எண்ணிக் கையில் குறைவாக இருப்பினும் பணச் சந்தை வளர்ச்சியுறுவ தில்லை.

போதிய நிதி வசதிகள் கிடைப்பது: பணச் சந்தை வளர்ச்சியடைவதற்குத் துணையங்காடியில் புழங்கப்படு வதற்குப் போதுமான அளவில் நிதி வசதிகள் கிடைப்பது அவசியமாகும். குறுங்காலச் சந்தையில் பெரும்பாலும் உள் நாட்டு நிதியே பயன்படுமாயினும், முழு வளர்ச்சி பெற்ற பணச் சந்தையினால் வெளிநாட்டு நிதியையும் கவர முடியும். உள் நாட்டு நிதியையும் வெளிநாட்டு நிதியையும் கவரும் சக்திக்கு ஏற்பவே பணச் சந்தையின் வளர்ச்சி அமையும். இவ்விதச் சக்தி குறைவாகக் காணப்படும் பணச் சந்தைகள் வளர்ச்சி யுறுவதில்லை.

பிற காரணங்கள்: மேற்குறிப்பிடப்பட்டவை தவிர, வேறு சில காரணங்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக, பன்னாட்டு வாணிப வளர்ச்சி, மாற்று உண்டியல் வளர்ச்சிக்கு

உதவுவதன் மூலம் பணச் சந்தையை முழுமை பெறச் செய்யும். இவ்வாறே தொழில் துறையின் வளர்ச்சி பங்கு மாற்றுச் சந்தையின் வளர்ச்சிக்கும் நிலையான அரசியல் நிலவரங்கள் அயல்நாட்டு நிறுவனங்களின்மீது வேறுபாடு காட்டாமையும் பணச் சந்தையின் வளர்ச்சிக்கு உதவும்.

மேற்காணும் தன்மைகள் யாவுமே வளர்ச்சியுற்ற பணச் சந்தை எல்லாவற்றிலுமே காணப்படுமென்பதில்லை. எனி னும், இவ்விதத் தன்மைகள் காணப்படாத பணச் சந்தை முழுமை பெறுவதில்லை எனலாம்.

பணச் சந்தையின் முக்கியத்துவம்

தற்காலப் பொருளாதார அமைப்பில் பணச் சந்தை மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. தொழில் வளர்ச்சி, வாணிப வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாகப் பணச் சந்தை வளர்ச்சியடைந்தாலும், பணச் சந்தையும் அவற்றின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. வாணிப வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் நிதி உதவி செய்வதில் பணச் சந்தை முக்கிய இடத்தை வகிக்கின்றது. பன்னாட்டு வாணிப வளர்ச்சிக்கும் மாற்று உண்டியல் அங்காடி உதவுகின்றது. ஏற்பகங்களும், தீர்வு அகங்களும் பன்னாட்டுப் பேரங்களுக்குப் பெருமளவில் உதவுகின்றன.

வாணிப வங்கிகளின் குறுங்கால நிதிகளை முதலீடு செய்வதிலும் பணச் சந்தை உதவுகின்றது. வாணிப வங்கிகள் பொது மக்களின் வைப்பைக்கொண்டே செயல்படுபவை ஆகும். பொதுமக்கள் எந்த நேரத்திலும் தமது வைப்புத் தொகையைத திரும்பிக் கேட்க முடியுமாதலால், வாணிப வங்கியின் சொத்துகள், நீர்மைத் தன்மை மிக்கவையாக இருப்பது அவசியமாகும். ஆதலால்தான் அவை அழைப்புப் பணச் சந்தையிலும், உண்டியல் சந்தையிலும் ஈடுபடுகின்றன. அதாவது, வாணிப வங்கிகள் தமது நிதியை மிகவும் நீர்மைத் தன்மை உடைய தற்காலிக முதலீடுகளில் ஈடுபடுவதற்குப் பணச் சந்தையே உதவுகின்றது. சில நாடுகளில் வாணிப வங்கிகள் வளர்ச்சியுறாமலிருப்பதற்குப் பணச் சந்தை வளர்ச்சியுறாததே காரணமாகும். அது போன்றே பணச் சந்தை வளர்ச்சி பெறாமலிருப்பதற்கு வாணிப வளர்ச்சி பெறாமலிருப்பதுவும் காரணமாகும்.

ஒரு நாட்டின் மையவங்கியின் பணிகளிலும் பணச் சந்தை உதவுகின்றது. பணச் சந்தையும், பணச் சந்தையில் நிலவும் குறுங்கால வட்டி வீதங்களும் நாட்டின் பணவாக்க மற்றும் வங்கி நிலவரங்களை மதிப்பிட உதவும் 'பாரா மீட்டராகக்'[1] கருதப்படுவதால் மையவங்கியின் கொள்கைகளை நிர்ணயிப் பதில் உதவுகின்றன. பணச் சந்தை ஒருங்கிணைந்த அமைப் பாகையால், மையவங்கி மேற்கொள்ளும் முயற்சிகள் வெகு விரைவில் பணச் சந்தையின் மூலம் பரவுகின்றன. வளர்ச்சி பெற்ற பணச் சந்தை மையவங்கி திறம்படச் செயல்படுவதற்கு உதவுகின்றது. எனினும், பணச் சந்தையின் உதவியின்றியும் மையவங்கி திறனுடன் செயல்பட முடியும்.

பணச் சந்தை அரசிற்கும் உதவுகின்றது. அரசு தனக்குத் தேவையான குறுங்கால நிதி வசதிகளைக் கருவூல உண்டியல் களை வெளியிடுவதன் மூலம் பணச் சந்தையிலிருந்து பெறு கின்றது. பணச் சந்தை இல்லாவிடின், இத்தகைய நிதியை ஆணைச் செலாவணியை[2] வெளியிடுவதன் மூலமோ அல்லது கடன் பெறுவதன் மூலமோ அரசு பெற வேண்டியிருக்கும். மேலும், இவ்விரு வழிகளும் பணவீக்கத்தைத் தோற்றுவிக்கக் கூடியவையாகும். மேலும், அரசின் நெடுங்காலக் கடன் எழுப்பும் முயற்சிகளிலும் அரசிற்குப் பணச் சந்தை உதவு கின்றது. பணச்சந்தை நிலவரங்கள் குறுங்கால வட்டிவீதங் களைப் பாதிப்பதன் மூலம் நெடுங்காலக் கடன்களுக்கான வட்டி வீதத்தையும் பாதிக்கின்றது.

இலண்டன் பணச் சந்தை[3]

உலகின் மிகத் தெளிவான அமைப்புள்ள பணச் சந்தை யாக இலண்டன் பணச் சந்தை கருதப்படுகின்றது. 19ஆம் நூற்றாண்டில்தான் இலண்டன் பணச் சந்தை முக்கியத்துவம் பெற்றது. அதற்கு முன்னர், ஐரோப்பிய நாடுகளில் ஆம்ஸ்டர்டாம்[4] பணச் சந்தையே சிறப்பான பணச் சந்தை யாகக் கருதப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் ஹாலந்து[5] குடியேற்ற நாடுகளை இழந்ததால், நிதி நெருக்கடிக்கு உள்ளா கியது. அதே காலக் கட்டத்தில் இங்கிலாந்து வாணிப வளர்ச்சி

[1] Barometer
[2] Fiat money
[3] London Money Market
[4] Amsterdam
[5] Holland

பெற்றது. தொழிற்புரட்சி, வேளாண்மைப் புரட்சி, வாணிபப் புரட்சி, போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாக, இங்கிலாந்தில் பெருமளவில் மூலதனத்திரட்சி ஏற்பட்டது. நெப்போலியப் போர்கள்[1] நடைபெற்றபொழுது, பிரித்தானிய அரசிற்குப் போர்க்கால நிதி வசதிகளைப் பெருமளவில் அளித்ததன்மூலம், இலண்டன் பணச் சந்தை முக்கியத்துவம் பெற்றது. நெப்போலியப் போர்களுக்குப் பின்னர், இங்கிலாந்தின் பொருளாதார வளர்ச்சியும், செழுமையும், அயல் நாட்டு முதலீடுகளில் அடங்கியிருப்பதாகக் கருதியதால், இலண்டன் பணச் சந்தை கடல் கடந்த நாடுகளின் முதலீட்டில் ஆர்வம் காட்டியது. முதல் உலகப்போர் ஆரம்பமாகும் வரையில், இலண்டன் பணச் சந்தை ஈடு இணையற்ற பணச் சந்தையாக விளங்கியது. உலகப் போர்கள் இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், உலகின் கவனத்தை ஈர்ப்பதில், இலண்டன் பணச் சந்தையுடன் நியூயார்க்கும், பாரிசும் போட்டியிட்டு, ஓரளவிற்கு வெற்றியையும் ஈட்டின. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர், இங்கிலாந்தின் அரசியல் மேலாண்மையும், பொருளாதார முக்கியத்துவமும் குறைவடையத் தொடங்கின; பன்னாட்டுச் செலாவணிகளிடையில் அமெரிக்க டாலர் முக்கியத்துவம் பெறலாயிற்று. நியூயார்க் பணச் சந்தை முதலிடத்தைப் பெற்று, இலண்டன் பணச் சந்தையை இரண்டாவது இடத்திற்குத் தள்ளியது.

உலகின் புகழ்பெற்ற நிதிகேந்திரமாக இலண்டன் வளர்ச்சியடைந்ததற்கும் பல காரணங்கள் உள்ளன. அவை : (1) 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் இலண்டன் மிகப் பெரிய வாணிப கேந்திரமாக விளங்கியதால், மிக முக்கியமான நிதிகேந்திரமாகவும் விளங்கியது. (2) பொருளாதார வளர்ச்சிக்கும், செழிப்பிற்கும் அடிப்படைத் தேவையான நிலைத்த அரசியல் போக்கு அங்கு நிலவியது. (3) இலண்டன் வசம் பெருமளவில் மூலதன வசதிகள் சேர்ந்தன. இவற்றில் ஒரு பகுதி ஏற்றுமதி வாணிப இலாபம் மூலம் கிட்டியது. மற்றொரு பகுதி, இலண்டன் பாங்குகள் வசமிருந்த அயல்நாட்டு அரசுகளின் காப்புகளிலிருந்து கிட்டியது. (4) இலண்டன், தனது செலுத்துகைளையெல்லாம் பொன்னின் மூலம் தீர்க்கும் வழக்கத்தை மரபாகக் கொண்டிருந்தது. பொன், அனைத்து நாடுகளாலும் மதிப்புடன் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாகையால், இலண்டன் பணச் சந்தை மதிப்பு பெறலாயிற்று. (5) பணச் சந்தையில் அங்கம் பெறும் பல்வேறு துணைச் சந்தை

[1] **Napoleonic Wars**

களையும் இலண்டன் சீரமைத்தது. குறுங்காலப் பேரங்களில் ஈடுபடுவதிலும், குறுங்கால நிதி வசதிகளை அளிப்பதிலும், நியூயார்க், பாரிஸ் ஆகியவற்றைக்காட்டிலும், மிகத் திறமையாக இலண்டன் பணச் சந்தை செயல்பட்டது. இலண்டனின் பாங்குத் துறையும், பொதுமக்களுடைய நம்பிக்கையைப் பூரணமாகப் பெற்றதுடன், வெகு வேகமாகவும் வளர்ச்சி பெற்றது. எனவே, அயல்நாட்டு மூலதனம் பெருமளவில் இலண்டனால் ஈர்க்கப்பட்டது.

இலண்டன் பணச் சந்தையில் அழைப்புப் பணச் சந்தை, ஏற்பகம், கழிவுச் சந்தை ஆகியவை அடங்கியுள்ளன. சரியாகக் குறிப்பிடுவதாயின், இலண்டன் பணச் சந்தை என்பது கழிவுச் சந்தையை மட்டுமே குறிக்கும். ஏனெனில், கழிவுச் சந்தையில் அழைப்புப் பணச் சந்தையும், ஏற்பகமும் அடங்கும்.

இலண்டன் பணச் சந்தையை (1) குறுங்கால மூலதனத்திற்கான சந்தை[1], (2) நெடுங்கால மூலதனத்திற்கான சந்தை[2] என்று இரு பிரிவுகளாகச் சிலர் பகுத்துக் கூறுகின்றனர். குறுங்கால மூலதனச் சந்தைதான் உண்மையான பணச் சந்தை ஆகும். நெடுங்கால மூலதனத்திற்கான (மூலதனச்) சந்தையை, (1) புதிய மூலதனத்திற்கான சந்தை[3], (2) பழைய மூலதனத்திற்கான சந்தை (ஸ்டாக் எக்சேஞ்ச்)[4] என்று பிரிக்கலாம். இப்பகுப்பின்படி, இலண்டன் பணச் சந்தையின் அமைப்பைக் கீழ்க்காணுமாறு விளக்கலாம்:



[1] Market for Short term Capital
[2] Market for Long term Capital
[3] Market for New Capital
[4] Market ıor Old Capital (Stock Exchange)

இக் கட்டுரையில் இனிப் பணச் சந்தையின் அங்கங்களைப் பற்றி மட்டும் காணலாம்.

இலண்டன் பணச் சந்தையில் இடம் பெறும் அமைப்புகள்:

இலண்டன் பணச் சந்தையில் வாணிப உண்டியல்களையும், பிற வகை உண்டியல்களையும் வாங்குவதிலும் விற்பதிலும் கீழ்க்காணும் அமைப்புகள் ஈடுபடுகின்றன:

1. **கூட்டுப் பங்கு பாங்குகள்:** இலண்டன் பணச் சந்தையில் மூன்று வகையான பாங்குகள் உள்ளன. அவை யாவன : (1) இலண்டன் தீர்வகத்தின் உறுப்பினர்களான தீர்வகங்கள், (2) ஸ்காட்டிஷ் பாங்குகள், (3) அயல்நாட்டுப் பாங்குகள். இலண்டன் பணச் சந்தையில் பாங்குகள் மூன்றுவிதப் பணிகளை ஆற்றுகின்றன : (1) அவை கழிவகங்களையும், தரகர்களையும் போன்று, நேரிடையாகவே உண்டியல்களைக் கழிவு செய்கின்றன; அல்லது கழிவகங்களிலிருந்து வாங்குகின்றன. உண்மையில் பாங்குகள், அவற்றிற்குத் தேவையான கருவூல உண்டியல்களை இம் முறையில்தான் கழிவ்கங்களிலிருந்து வாங்குகின்றன. (2) பாங்குகள், தமக்கு முன்பே அறிமுகமாயிருக்கும் வாடிக்கையாளர்களுக்காக ஏற்பகப் பணிகளையும் ஆற்றுகின்றன. (3) ஓர் இரவு முதல் 10 நாள்களுக்கு உட்பட்ட மிகக் குறுகிய காலக் கடன்களைக் கழிவகங்களுக்கும், தரகர்களுக்கும் அவை அளிக்கின்றன.

2. **ஏற்பு அகங்கள்:** வியாபார அகங்கள் அல்லது வியாபார பாங்கர்கள் என்றழைக்கப்படும் ஏற்பு அகங்கள் மிகப் பழைமையானவையாகும். கடல் கடந்த வாணிபத்திற்கு நிதி உதவி அளிப்பதன் மூலம், அவை உலகப் புகழ் பெற்றவை ஆகும். அயல்நாட்டு வாணிபத்தில் ஈடுபடும் சிறு வணிகர்களது மாற்று உண்டியல்களை ஏற்பதன்மூலம், அயல் நாட்டு வாணிப வளர்ச்சிக்கு ஏற்பு அகங்கள் பெரும்பணி ஆற்றுகின்றன. ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுடைய பூரண நம்பிக்கையைப் பெற்ற முகவர்களாகவும் அவை பணியாற்றுகின்றன. இறக்குமதியாளர்கள்மீது ஏற்றுமதியாளர்கள் வரையும் உண்டியல்களைச் சிறு அளவு தரகுத் தொகையைப் பெற்றுக்கொண்டு, இந் நிறுவனங்கள் ஏற்கின்றன. ஏற்பகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இத்தகைய உண்டியல்களை ஓரளவு குறைந்த வீதத்தில் சந்தையில் கழிவு (விற்பனை) செய்வது மிக எளிதாகும். ஏற்பகப் பணிகளை

ஆற்றுவதுடன், அயல்நாட்டு வாணிப நிறுவனங்களுக்காகவும், அரசாங்கத்திற்காகவும் அவை குறுங்காலப் பத்திரங்களையும் நெடுங்காலப் பத்திரங்களையும் வெளியிடுகின்றன. சமீப காலத்தில் அயல்நாடுகளில் ஈடுபாடு கொண்டுள்ள பிரிட்டிஷ் நிறுவனங்களுக்காகச் செயல்படுவதில் இலண்டன் ஏற்பகங்கள் அதிக ஈடுபாடு கொண்டுள்ளன.

உண்டியல் தரகர்கள் : இலண்டன் பணச் சந்தையில் தனிநபர் நிறுவனங்களாகவும், கூட்டாளி நிறுவனங்களாகவும் தரகர்கள் ஈடுபட்டுள்ளனர். குறுங்கால நிதிகளை விற்பனை செய்வோருக்கும் வாங்குவோருக்குமிடையே இத்தரகர்கள் செயல்படுகின்றனர். தரகர்கள், வணிகர்கள் உண்டியல்களைக் கழிவு செய்தவுடன், கழிவு செய்யப்பட்ட உண்டியல்களைப் பாங்குகள் வசம் மறுகழிவு செய்துவிடுகின்றனர். அவர்களிடம் போதிய நிதி வசதி இல்லாமையால்தான், இவ்விதம் கழிவு செய்யப்பட்ட உண்டியல்களை உடனடியாக மறுகழிவு செய்து விடுகின்றனர்.

கழிவு அகங்கள்: இலண்டன் பணச் சந்தையில் 12 கழிவு அகங்கள் பிரபலமாக உள்ளன. அவை யாவும் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் ஆகும். தொடக்கக் காலத்தில் தரகர்கள் மற்றும் கழிவு செய்வோரின் பணிகளைப் புரிவதற்காகவே அவை நிறுவப்பட்டன. ஆனால், தரகர்களைப் போலன்றி, கழிவு செய்யப்பட்ட உண்டியல்களை உடனடியாக மறுகழிவு செய்ய வேண்டிய கட்டாயம் அவற்றிற்கில்லை. கழிவு அகங்கள் அவற்றிற்குத் தேவையான நிதிவசதிகளைப் பங்குதாரர்கள் அளிக்கும் மூலதனம், வாணிப பாங்குகள் அளிக்கும் முன்பணம், கடன்கள், பொதுமக்களின் வைப்புகள் ஆகியவற்றிலிருந்து பெறுகின்றன.

மைய பாங்கு: இலண்டன் பணச் சந்தையின் தலைவனாகவும், நெறியாளராகவும், அந் நாட்டின் மைய வங்கியான பாங்க் ஆஃப் இங்கிலாந்து விளங்குகின்றது. அந் நாட்டின் மைய வங்கி என்ற முறையில், அந் நாட்டின் பணத்துறையைச் சீராக்கும் பொறுப்பு அதற்குள்ளது. எனவே, பணச் சந்தையில் பங்கேற்கும் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படக்கூடிய கடனின் அளவைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு அதற்கு உண்டு. ஆகவே, தேவைப்படும் பொழுதெல்லாம் கடன் அளவுக் கட்டுப்பாடுகளையும், பொறுக்குக் கடன் கட்டுப்பாடுகளையும் அது மேற்கொள்ளுகின்றது. மையவங்கி கடன்

அளவுக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றினால், அதன் விளைவுகள் நேரிடையாகக் கழிவுச் சந்தைகள்மீதும், மறைமுகமாகக் கூட்டுப் பங்கு பாங்குகள்மீதும் பிரதிபலிக்கின்றன.

மைய வங்கிக்கும் கழிவுச் சந்தைக்குமிடையில் நேரிடையான, நெருக்கமான தொடர்பு நிலவுகின்றது. சாதாரணமாக, வாணிப பாங்குகளிடமிருந்து கடன் பெற்றுதான், கழிவுச் சந்தைகள் செயல்படுகின்றன. ஆயினும், அவை மைய வங்கியிடமிருந்தும் கடன் பெற முடியும். கழிவு அகங்களின் தகுதி வாய்ந்த உண்டியல்களை அதிகாரப் பூர்வமான வட்டி வீதத்திலோ அல்லது பாங்கு வட்டி வீதத்திலோ கழிவு செய்யவும், மறு கழிவு செய்யவும் மைய வங்கி தயாராக உள்ளது. அதாவது, மைய வங்கியிடமிருந்து, கழிவு அகங்கள் நிதி வசதிகளைப் பெற முடியும்.

பாங்க் ஆஃப் இங்கிலாந்திற்கும், கூட்டுப்பங்கு பாங்குகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு நிலவுகின்றது. வாணிப பாங்குகளுக்குத் தேவைப்படும்பொழுதெல்லாம் மைய வங்கி, காகிதப் பணத்தை அளிக்கின்றது. வாணிப பாங்குகள் மைய பாங்கு வசம் ரொக்கக் காப்பை வைத்துள்ளன. வாணிப பாங்குகளின் உற்றுழி உதவுவோனாகவும் மைய பாங்கு செயல்படுகின்றது. ஆயினும், வாணிப பாங்குகள், மைய பாங்கிடமிருந்து நேரிடையாக நிதி வசதிகளைப் பெற முடியாது ; கழிவு அகங்களின் மூலமே பெற முடியும்.

இலண்டன் கழிவு அகம் செயல்படும் விதம்[1] :

இலண்டன் கழிவகத்தில் கடன் அளித்தலிலும், கடன் பெறுவதிலும் முக்கியமாக உண்டியல்களே பயன்படுத்தப்படுகின்றன. உண்டியல்களில் மாற்று உண்டியல், நிதி உண்டியல் என இருவகை உண்டு.

வாணிப உண்டியல் : வாணிபத் தாள்கள்[2] எனப்படும் மாற்று உண்டியல்கள் வாணிபத்தில், குறிப்பாகப் பன்னாட்டு வாணிபத்தில், இடம் பெறுகின்றன; பண்டங்களின் பன்னாட்டு இடப் பெயர்ச்சிக்குக் கீழ்க்காணுமாறு உதவுகின்றன: இந்தியர் ஒருவர், ஆங்கிலேயர் ஒருவருக்கு ஏற்றுமதி செய்வதாக வைத்துக்கொள்வோம். இந்தியர் ஆங்கிலேயர்மீது மாற்று

[1] The Working of London Discount Market
[2] Commercial papers

உண்டியல் ஒன்றை வரைவார். ஆங்கிலேயர், குறிப்பிட்ட நாளில்—பொதுவாக 90 அல்லது 91 நாள்களுக்குப் பின்னர்—அவருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் பொருள்களுக்கு ஈடாகக் குறிப்பிட்ட அளவு தொகையை அளிக்க வேண்டுமென்று, இம் மாற்று உண்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும். இம் மாற்று உண்டியலை ஓர் ஏற்பகம் ஏற்றிருக்கும்; அல்லது உறுதிமொழி அளித்திருக்கும். இவ்வுண்டியலை இந்திய ஏற்றுமதியாளர், இந்தியப் பாங்கு ஒன்றில், உண்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகைக்குக் குறைவான ஒரு தொகைக்குக் கழிவு (அல்லது மறுகழிவு) செய்வார். (இவ்விரு தொகைகளுக்கு மிடையே காணப்படும் வித்தியாசமே பாங்கிற்குக் கிட்டும் இலாபமாகும்.) இவ்வுண்டியலை வாங்கிய இந்தியப் பாங்கர், உண்டியலை உடனே இலண்டனில் இருக்கும் தமது முகவருக்கு அனுப்புவார். முகவர், உண்டியலை உடனே உண்டியல் தரகர்களிடம் அல்லது கழிவு அகத்தில் கழிவு செய்வார். அல்லது உண்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலம் வரையில் காத்திருந்து, அதற்குப் பிறகு, ஆங்கிலேயரிடமிருந்து தொகையை வசூல் செய்வார். உண்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைச் செலுத்துவதற்குத் தவறுவாராயின், அவ்வுண்டியலை ஏற்றுள்ள அல்லது உறுதிமொழியளித்துள்ள ஏற்பகம் அத் தொகையைச் செலுத்தும். அதாவது, பன்னாட்டு வாணிபத்திற்கு நிதி வசதி அளிப்பதில் வாணிப உண்டியல்கள் பெரும் பங்கு பெறுகின்றன. மேலும், வாணிப உண்டியல்களைச் சிறந்த குறுங்கால முதலீடுகளாகக் கருதும் வாணிப பாங்குகளும் அவற்றில் முதலீடு செய்கின்றன.

நிதி உண்டியல்[1]: நிதி உண்டியல்களும், வாணிப உண்டியல்களும் ஒரே வகையானவைதான். எனினும், நிதி உண்டியல்களைப் பொறுத்த வரையில், பண்டங்கள் இடம் பெயர்வதில்லை; வாணிப உண்டியல்களில் பண்டங்களின் இடப் பெயர்ச்சி அடங்கியுள்ளது. நிதி உண்டியல் எனப்படுபவை, குறுங்கால மூலதனத்தைப் பெறும் ஒருவர், எதிர் காலத்தில், குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்டத் தொகையைத் திருப்பித் தருவதாக அளிக்கும் உறுதி மொழியே ஆகும். நிதி உண்டியல்களுள் கருவூல உண்டியல்கள்[2] முக்கியமானவை ஆகும். பிரிட்டிஷ் அரசின் வருவாயைக்காட்டிலும் செலவுகள் அதிகமாகும்பொழுது, அதைச் சரிக்கட்டுவதற்காகக் கருவூல

[1] Finance Bill
[2] Treasury Bills

உண்டியல்களைப் பயன்படுத்துகின்றது. கருவூல உண்டியலை வைத்திருக்கும் எந்தவொரு நபருக்கும் எதிர்காலத்தில், குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட தொகையை அளிப்பதாகப் பிரிட்டிஷ் அரசு தனது கருவூல உண்டியல்களில் உறுதிமொழி அளித்திருக்கும்.

இலண்டன் கழிவு அகத்தில் சிறப்புத் தேர்ச்சியுள்ள சில நிறுவனங்கள் உள்ளன. அவை, பொதுமக்களிடமிருந்தும், நிதி நிறுவனங்களிடமிருந்தும், வாணிப பாங்குகளிடமிருந்தும், குறுங்கால நிதிகளைக் கடனாகப் பெறுகின்றன. கடனாகப் பெற்ற தொகையைக் கொண்டு, ஏற்புச் சந்தைகள் அளிக்கும் மாற்று உண்டியல்களை வாங்குகின்றன; வாணிப பாங்குகளிடமிருந்து அழைப்புப் பணத்தையே கடனாகப் பெறுகின்றன. அவை கடன் பெறும்பொழுது கொடுக்கும் வட்டிவீதத்தைக் காட்டிலும், கடனளிக்கும்பொழுது வசூலிக்கும் வட்டிவீதம் அதிகமாகும். இவ்விரு வட்டிவீதங்களுக்கும் இடையே காணப்படும் வேறுபாடே, அவை ஈட்டும் இலாபமாகும்.

வாணிப உண்டியல்களின் முக்கியத்துவம் குறைதல் :

உலகின் மிகப் பெரிய பொருளாதார மந்தம் (1930-களில்) ஏற்பட்டபொழுது, வாணிப உண்டியல்களின் அளவும் குறைந்ததால், கழிவு அகங்களின் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. ஆனால், கருவூல உண்டியல்கள் மிகவும் முக்கிய இடத்தைப் பெறலாயின. வாணிப உண்டியல்களின் முக்கியத்துவம் குறைந்து, அவற்றின் இடத்தைக் கருவூல உண்டியல்கள் பிடித்துக்கொண்டன. ஆயினும், கருவூல உண்டியல்களில் இருந்து கிட்டும் இலாபம் மிகவும் குறைவேயாகும். எனவே, அவை, அரசுக் கடன் பத்திரங்களில் ஈடுபட ஆரம்பித்தன. இத்தகைய அரசுக் கடன் பத்திரங்கள் (1) ஒன்று முதல் ஐந்து ஆண்டுக் கால வரையறை கொண்டவை எனவும், (2) 15 முதல் 20 ஆண்டுக் கால வரையறை கொண்ட நெடுங்காலப் பத்திரங்கள் எனவும் இரு வகைப்படும். இவையிரண்டுள்ளும் குறுங்காலப் பத்திரங்களில் ஈடுபடுவதையே கழிவு அகங்கள் விரும்புகின்றன. ஏனெனில், குறுங்காலப் பத்திரங்களிலிருந்து கிட்டும் இலாபம் அதிகமென்பதுடன், அவை நிச்சயமானவையுமாகும். கழிவு அகங்கள், குறுங்காலப் பத்திரங்களில் ஈடுபடுவதற்கு, ஒரு காலத்தில் எதிர்ப்பு இருந்தது. குறுங்காலக் கடன்களைப் பெற்றுச் செயல்படும் கழிவு அகங்கள், தமது நிதி வசதிகளை அரசுப் பத்திரங்களில்

முடக்கிவிடக்கூடாது எனும் கருத்தின் அடிப்படையில் இவ் வெதிர்ப்பு தோன்றியது. ஆயினும், கழிவு அகங்கள் இணைப்பின் மூலமும், தமது மூலதன அமைப்பைப் பலப் படுத்தியதன் மூலமும் இவ்வெதிர்ப்பைச் சமாளித்துவிட்டன. அவை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலவரையறை கொண்ட பத்திரங்களை வாங்கக் கூடாதெனவும், அவற்றின் மூல தனத்தைப் போல 8 மடங்கிற்கும் அதிகமாகக் கடன்பத் திரங்களை வைத்திருக்கக் கூடாதெனவும் விதிக்கப் பட்டுள்ளது. கழிவு அகங்கள் கடனாகப் பெறும் நிதிகளைக் கொண்டு செயல்படுவதால், அவை, இடர்களுக்குத் தம்மை உட்படுத்திக்கொள்ளக் கூடாது என்பதால்தான், இவ் விதிகள் விதிக்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் கழிவு அகங்கள் பத்திரங் களில் ஈடுபடுவது சரியான நடவடிக்கையாகவே கருதப்படு கின்றது. பத்திரங்களை ஈடாகக் கொண்டு, அவை வாணிப பாங்குகளிடமிருந்தும், மைய பாங்கிடமிருந்தும் நிதி வசதி களைப் பெற முடியும்.

இலண்டன் கழிவகத்தில் தற்பொழுது 12 கூட்டுப் பங்கு நிறுவனங்களும், சில தரகு நிறுவனங்களும் உள்ளன. அவற்றின் பணிகளை, வேறு சில நிறுவனங்கள் வெகு எளிதாக ஆற்ற முடியும் என்பதால், கழிவு அகங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டுமா எனும் கேள்வி எழுந்துள்ளது. ஏனெனில், அரசாங்கம் நேரிடையாகவே கருவூல உண்டி யல்களைக் கூட்டுப் பங்கு பாங்குகளுக்கு விற்பனை செய்து விடலாம்; இடையில் கழிவு அகங்கள் தேவையில்லை என்ற கருத்து நிலவுகின்றது. மேலும், தற்காலத்தில் வாணிப உண்டி யல்களின் அளவும் முக்கியத்துவமும் குறைந்துவிட்டன. எனவே, வாணிப உண்டியல்களில் மட்டுமே ஈடுபடும் கழிவு அகங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டியதில்லை; அதன் பணிகளைக் கூட்டுப் பங்கு பாங்குகளே ஆற்றிவிடலாம் எனும் கருத்தும் நிலவுகின்றது.

இலண்டன் கழிவு அகங்களை மூடிவிடலாம் எனும் கருத்து தொடர்ந்து வலுவடைந்துள்ளது. ஆயினும், பேராசிரியர் R.S. சேயர்ஸ் போன்றோர், இலண்டன் கழிவு அகங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். ஏனெனில், கழிவு அகங்கள் எனப்படுபவை, உண்டியல்களைத் தோற்று விப்போருக்கும், வாங்குவோருக்குமிடையே திறமை மிக்க இடைத்தரகர்களாகச் செயல்பட்டு, அவர்தம் நடவடிக் கைகளை எளிமைப்படுத்துகின்றன. மேலும், இம் முறையில்

செயல்படுவதன் மூலம் இலண்டன் கூட்டுப் பாங்குகளின் பணிகளையும் எளிமைப்படுத்துகின்றன. மேலும், கருவூல உண்டியல் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுவதற்கு இலண்டன் கழிவு அகங்களே காரணமாகும். மைய வங்கியின் உற்றுழி உதவும் பணி திறம்பட நிறைவேற்றப்படுவதற்கும், கழிவு அகங்கள் வெகுவாக உதவுகின்றன.

தற்காலத்தில் கழிவு அகங்கள் ஆற்றும் பணிகளை வேறு நிறுவனங்களும் ஆற்ற முடியும். ஆயினும், கழிவு அகங்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடக் கூடாது; அவற்றை மூடிவிடக்கூடாது என்று ராட்கிளிஃப் கமிட்டி கருதுகின்றது.

இந்தியப் பணச் சந்தை[1]

இந்தியப் பணச் சந்தை, "ஒருமுகப்படுத்தப் பெற்ற" அல்லது "அமைப்புள்ள"[2] பணச் சந்தை, "ஒருமுகப்படுத்தப் பெறாத" அல்லது "அமைப்பற்றப்"[3] பணச் சந்தை என இரு வகையாகப் பிரிந்துள்ளது. அமைப்பற்றப் பணச் சந்தையில் பரம்பரைப் பரம்பரையாகப் பாங்குத் தொழிலை ஆற்றிவரும் ஷராஃப்புகள்,[4] முல்தானிகள்,[5] மகஜன்கள்,[6] செட்டியார்கள்[7] போன்ற இனத்தினர் உள்ளனர். அமைப்புள்ள பணச்சந்தையில் ரிசர்வு பாங்கு, இந்தியக் கூட்டுப் பங்கு பாங்குகள்,[8] பாரதீய ஸ்டேட் பாங்கு, மற்றும் அதன் துணைப் பாங்குகள்,[9] பரிவர்த்தனை பாங்குகள்[10] ஆகியவை அடங்கும். இந்தியப் பணச் சந்தையுடன் இந்திய மையவங்கியான ரிசர்வு பாங்கு மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளது. உண்மையில், ரிசர்வு பாங்கே இந்தியப் பணச் சந்தையின் தலைவனாகும். 1935ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வு பாங்கு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே இந்தியப் பணச் சந்தையில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டு வருகின்றன. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

[1] Indian Money Market
[2] Organised Money Market
[3] Unorganised Money Market
[4] Shroffs
[5] Multanis
[6] Mahajans
[7] Chettiars
[8] Indian Joint Stock Banks
[9] State Bank of India and its Subsidiary Banks
[10] Exchange Banks

இந்தியப் பணச் சந்தையின் பல்வேறு அங்கங்களுக்கிடையில் இணக்கமான தொடர்பு காணப்படுவதில்லை; அவற்றினிடையே போதுமான, நல்லிணக்கமான தொடர்பு இல்லை. ஒரு காலத்தில் இந்தியப் பணச் சந்தையின் பல்வேறு அங்கங்களான இம்பீரியல் பாங்கு,[1] பரிவர்த்தனை பாங்குகள், இந்தியர்களுக்கு உரிமையான வாணிப பாங்குகள்,[2] கூட்டுறவு பாங்குகள், நாட்டுப்புறப் பாங்குகள் ஆகியவை அவற்றினிடையே எவ்விதத் தொடர்புமின்றித் தன்னிச்சையாகவே செயல்பட்டன. உண்மையில், அவற்றினிடையில் கடும் போட்டியும், ஒருவிதப் பொறாமைப் போக்கும் காணப்பட்டன. நாட்டுப்புற பாங்குகளுக்கும், அமைப்புள்ள பாங்குகளுக்குமிடையில் கடும் வேற்றுமை நிலவியது. 1935ல் ரிசர்வு பாங்கு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இத்தகைய பொறாமை கலந்த போட்டி மனப்பான்மை மறைந்து வருகின்றது. இத்தகைய பாங்குகள் யாவற்றையும், உரிமம் அளித்தல், கிளைகள் ஆரம்பித்தல், மூலதன அளவை நிர்ணயித்தல், கடனின் அளவை நிர்ணயித்தல் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் ரிசர்வு பாங்கு சமமாகவே பாவிக்கின்றது.

இந்தியப் பணச் சந்தையின் அமைப்புள்ள பிரிவை, ரிசர்வு பாங்கு தனது கடுமையான கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளது. வாணிப பாங்குகளும், கூட்டுறவு பாங்குகளும் தமது உண்டியல்களை மறுகழிவு செய்வதற்கும், தமக்குத் தேவையான கடன் வசதிகளைப் பெறுவதற்கும், ரிசர்வு பாங்கையே சார்ந்துள்ளன. அவற்றின் கடன் கொள்கையை நிர்ணயிப்பதுடன், அவற்றின் கணக்குகளையும், செயல்முறைகளையும் அவ்வப்பொழுது தணிக்கை செய்வதற்கான அதிகாரத்தையும் ரிசர்வு பாங்கு பெற்றுள்ளது.

இந்தியப் பணச் சந்தையில் நாட்டுப்புறப் பாங்குகள் நிலவுவது பெரும் குறையாகும். நாட்டுப்புற பாங்குகள் நவீன வாணிப பாங்குகளிலிருந்து பல வகைகளில் வேறுபட்டவை ஆகும். வெகு காலமாகப் பரம்பரைப் பரம்பரையாக, அவை நடத்தப்படுகின்றன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஷராஃப்புகள், சேட்டுகள், ஷவுகார்கள், மகஜன்கள், செட்டியார்கள் போன்றோர் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் பணியும், அவர்கள் செயல்படும் பரப்பளவும்

[1] Imperial Bank

[2] Co-operative Banks

ஒரே சீராக அமைவதில்லை. சிலர் வெறும் அடகுக் கடைக்காரர்களாக மட்டுமே செயல்படுகின்றனர். சிலரோ, வாணிப பாங்குகளைக்காட்டிலும் விரிவாகவும் செயல்படுகின்றனர். அவர்கள் பழங்காலக் கணக்குமுறையைப் பின்பற்றுகின்றனர். இத்தகைய பணவணிகர்களை ரிசர்வு பாங்கின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியுற்றுவிட்டன. ஆதலால், ரிசர்வு பாங்கினால் இந்தியப் பணச் சந்தையை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு முடியவில்லை.

இந்தியப் பணச் சந்தையின் வெவ்வேறு அங்கங்களுக்கிடையில் பணவட்டிவீதம் வேறுபடுகின்றது. இது, இந்தியப் பணச் சந்தையின் மற்றொரு குறையாகும். இதனால், பணச் சந்தையின் செயல்முறைகள் விரும்பிய முடிவை நல்குவதில்லை. பணச் சந்தையின் வெவ்வேறு அங்கங்களுக்கிடையில் மூலதனம் தங்குதடையின்றி இடம்பெயர முடியாததால்தான், பணவட்டிவீதம் வேறுபடுகின்றது. தற்காலத்தில் இப் போக்கு, ஓரளவிற்குத் தவிர்க்கப்படுகின்றது.

பம்பாய், கல்கத்தா உள்ளிட்ட பல்வேறு பணச் சந்தைக் கேந்திரங்களினிடையில் வட்டிவீதத்தில் வேறுபாடு காணப்படுகின்றது. இதனால் கடன்பத்திரங்களின் விலைகள் பாதிக்கப்படுகின்றன; வாணிபத்தின் போக்கும் பாதிக்கப்படுகின்றது. பல்வேறு பணச்சந்தைக் கேந்திரங்களுக்கிடையில் மூலதனம் தங்கு தடையின்றி இடம்பெயர முடியாததால்தான், இவ்வாறு வட்டிவீதம் வேறுபடுகின்றது. ரிசர்வு பாங்கின் 42 ஆண்டுக் காலப் பணிக்குப் பின்னரும், இக் குறை இன்றும் நிலவுகின்றது. எனினும், இக் குறையைத் தவிர்ப்பதற்குச் சாத்தியமான முயற்சிகள் யாவற்றையும் ரிசர்வு பாங்கு மேற்கொண்டுள்ளது.

பருவ நிலையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப, இந்தியப் பணச் சந்தையில் நிதித்தட்டுப்பாடு ஏற்படுகின்றது. அறுவடை முடிந்தவுடன் தானியங்களை ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு அனுப்புங்காலங்களில் நிதித்தட்டுப்பாடு ஏற்படுகின்றது. இதனால் அத்தகைய காலத்தில் வட்டிவீதம் அதிகரிக்கின்றது; பிற்காலங்களில் வட்டிவீதம் குறைகின்றது. இந் நிலையைத் தவிர்த்து, ஆண்டு முழுவதும் ஒரே சீரான வட்டிவீதத்தை நிலை நிறுத்துவதற்கான முயற்சிகளில் ரிசர்வு பாங்கு ஈடுபட்டுள்ளது.

இந்தியாவில் உண்டியல் சந்தை இல்லாமை இப் பணச் சந்தையின் மற்றொரு குறையாகும். ஒரு நாட்டின் கடன் அமைப்பை இலகுவானதாக ஆக்குவதற்கும், பல்வேறு கடன்தரு நிறுவனங்களுக்கிடையில் சீரான தொடர்பை நிலை நிறுத்துவதற்கும், உண்டியல் சந்தை இன்றியமையாததாகும். ஆயினும், பல்வேறு காரணங்களால் இந்தியாவில் உண்டியல் சந்தை வளர்ச்சி பெறவில்லை. இந்தியாவில் உண்டியல் சந்தையை வளர்ச்சி பெறச் செய்வதற்காக, 1952 ஜனவரியில் உண்டியல் அங்காடித் திட்டத்தை[1] ரிசர்வு பாங்கு அறிவித்தது. ஆயினும், இத் திட்டம் பெயரளவில் மட்டுமே உண்டியல் அங்காடித் திட்டமாக இருந்தது. எனவே, 1970–ல் புதிய உண்டியல் அங்காடித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரிசர்வு பாங்கு தொடங்கியுள்ளது. இப் புதிய முறையில் குறுங் கால வாணிப உண்டியல்கள் வாங்கவும் விற்கவும் படுகின்றன.

இந்தியாவில் வங்கித்துறை போதிய வளர்ச்சி பெறாதது, இந்தியப் பணச் சந்தையின் மற்றொரு குறையாகும். இந்திய வங்கித் துறையில் ஐரோப்பியத் தன்மையும், இந்தியத் தன்மையும் கலந்து காணப்படுகின்றன. இங்குக் கிளை வங்கி முறை வளர்ச்சி பெறவில்லை. 1976ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் நாளன்று இந்தியாவில் உள்ள பாங்குக் கிளை களின் எண்ணிக்கை 21,220 ஆகும். அதாவது சராசரி 26,000 நபர்களுக்கு ஒரு பாங்கு பணியாற்றுகின்றது. இந்தியாவில் மிகப் பெரிய பாங்குகள் எனப்படுபவை மிகச் சிலவேயாகும். அவையும் பெரும் நகரங்களிலும், வாணிப கேந்திரங்களிலும் மட்டுமே அமைந்துள்ளன. மொத்தம் உள்ள 21,220 பாங்குக் கிளைகளில் 13,533 கிளைகள்—அதாவது 64% கிளைகள்— நகர்ப்புறங்களிலும், வாணிப கேந்திரங்களிலும் மட்டுமே அமைந்துள்ளன. இத்தகைய காரணங்களால் மூலதனத்தின் சுதந்தரமான இடப்பெயர்ச்சி தடைபடுகின்றது; வட்டிவீதம் வேறுபடுகின்றது. பாங்குக் கட்டுப்பாடுச் சட்டம் (1949) நிறை வேற்றப்பட்ட பின்னர், இந்தியப் பாங்குத்துறை வளர்ச்சியை முறைப்படுத்திச் சீராக்குவதில் ரிசர்வு பாங்கு ஈடுபட்டுள்ளது.

இந்திய அரசின் தொழிற்கொள்கை, கடுமையான வரி வீதம் ஆகியவற்றின் விளைவாகச் சுமார் ரூ. 7000 கோடி அளவிற்கு இந்தியாவில் கறுப்புப்பணம் இருக்கக்கூடுமென்று மதிப்பிடப்படுகின்றது. கணக்கில் காட்டப்படாத, வரி

[1] Bill Market Scheme

செலுத்தப்படாத கறுப்புப் பணமானது, பாங்குகளில் வைக்கப் படுவதில்லை. மாறாக, இரகசியப் பேரங்களிலும், இரகசிய முதலீடுகளிலும் ஈடுபடுத்தப்படுவதால், இந்தியப் பணச் சந்தை பாதிக்கப்படுகின்றது. கறுப்புப்பணமானது கள்ளக் கடத்தல், பகட்டுச் செலவுகள், இறக்குமதி உரிம ஊழல்கள், அத்தியாவசியப் பண்டங்களில் கறுப்புச் சந்தை போன்ற வற்றில் ஈடுபடுத்தப்படுவதால் சமூக நலனையும் பாதிக் கின்றது. கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்கு இந்திய அரசு மூன்று முறை—*1951, 1965, 1975* ஆகிய ஆண்டுகளில்—சுய வெளியீட்டுத் திட்டத்தை[1] அறிவித்தது. முதல் இரு தடவை களில் வெளியிடப்பட்டதைக்காட்டிலும், மூன்றாவது முறை அதிக வெற்றியளித்தது. *1975*ஆம் ஆண்டு சுய வெளியீட்டுத் திட்டத்தின்கீழ்ச் சுமார் ரூ. *1450* கோடி வெளிக்கொணரப் பட்டது. *1978*ஆம் ஆண்டு ஜனவரி மாதம் *16*ஆம் நாளன்று ரூ. *1000*, ரூ. *5000*, ரூ. *10000* மதிப்புள்ள காகிதச் செலாவணிகள் செல்லாதவையாக அறிவிக்கப்பட்டிருப்பதாலும், கறுப்புப் பணம் ஓரளவிற்கு மறையும்.

இந்தியப் பணச் சந்தை முழு வளர்ச்சி பெறாததாகும். (1) ஒரு பணச் சந்தையானது வெற்றிகரமாகச் செயல்படு வதற்கு அடிப்படைத் தேவையான முழு வளர்ச்சி பெற்ற பாங்குத்துறை இங்குக் காணப்படவில்லை. (2) வாணிப உண்டியல்கள், கருவூல உண்டியல்கள், குறுங்கால அரசுக் கடன் பத்திரங்கள் போன்ற குறுங்காலச் சொத்துகள் போது மான அளவிலும், தொடர்ந்தும் இந்தியப் பணச் சந்தையில் அளிக்கப்படுவதில்லை. (3) அரசாங்கத்திற்கும் பாங்குத் துறைக்குமிடையில் குறுங்காலச் சொத்து வணிகர்கள் காணப் படுவதில்லை. (4) அழைப்புப் பணச் சந்தை, ஏற்பு அகம், வாணிப உண்டியல் சந்தை போன்ற கிளைச் சந்தைகள், இந்தியப் பணச் சந்தையில் போதுமான அளவில் காணப்படு வதில்லை. (5) இந்தியப் பணச் சந்தையின் பல்வேறு அங்கங் களுக்கிடையில் ஒருங்கிணைந்த, நல்லிணக்கமான தொடர்பு காணப்படுவதில்லை. இதனால், அவற்றினிடையில் பண வட்டி வீதம் வேறுபடுகின்றது. (6) இந்தியப் பணச் சந்தையால் வெளிநாட்டு நிதிகளைக் கவர முடிவதில்லை. மேற்கூறிய வற்றால், இந்தியப் பணச் சந்தையானது, போதிய வளர்ச்சி யற்றிருப்பது தெளிவாகும்.

[1] Voluntary Disclosure Scheme—1975

இந்தியப் பணச் சந்தை முழுவளர்ச்சிபெற வேண்டுமாயின், அதில் காணப்படும் குறைபாடுகள் யாவும் களையப்படுதல் வேண்டும். இம் முயற்சியில் இந்திய ரிசர்வு பாங்கு ஈடுபட்டு, கணிசமான வெற்றியும் பெற்றுள்ளது. பணச் சந்தையின் பல்வேறு அங்கங்களுக்கிடையில் பண வட்டிவீதம் வேறுபடு வதைத் தவிர்த்துள்ளது. அயல்நாட்டினரின் பாங்குகளுக்கும் இந்தியர்களின் பாங்குகளுக்குமிடையே நிலவிய வேறுபாடு மறைந்துவிட்டது. வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு வட்டிவீதம் நிலவுவதும் மறைந்து விட்டது. வெளிச் சந்தை நடவடிக்கைகள், மற்றும் உண்டியல் அங்காடித் திட்டம் ஆகியவற்றின் மூலம் சில சமயங்களில் தோன்றக்கூடிய பணத்தட்டுப்பாடும் தவிர்க்கப்பட்டுவிட்டது. இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டதன் மூலம் இந்தியப் பணச் சந்தையின் வளர்ச்சிக்கு, ரிசர்வு பாங்கு பெரும்பணி ஆற்றியுள்ளது.

பணச் சந்தையைக் கட்டுப்படுத்துவதில் ரிசர்வு பாங்கும் கீழ்க்காணும் இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. (1) இந்தியாவில் உண்டியல் சந்தை போதுமான வளர்ச்சி பெறவில்லை. இதனால், பணச் சந்தையிலிருந்து உபரி நிதியைக் குறைப்பது, ரிசர்வு பாங்கிற்குக் கடினமாகின்றது. அழைப்புப் பணச் சந்தை போதிய வளர்ச்சியற்றிருப்பதாலும், ரிசர்வு பாங்கின் பணி கடினமானதாகின்றது. இந்தியப் பணச் சந்தையில் நாட்டுப்புறப் பாங்கர்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள். ஆனால், இவர்களுக்கும், பணச் சந்தையின் பிற அங்கங்களுக்குமிடையே ஒருமித்த—இணக்கமான—தொடர்பு இல்லை. இந்தியப் பணச் சந்தையின் அமைப்புள்ள பிரிவினரை மட்டுமே ரிசர்வு பாங்கால் கட்டுப்படுத்த முடிகின்றது; நாட்டுப்புறப் பாங்கர்களைக் கட்டுப்படுத்துவதற்கு முடிவதில்லை. மேற்காணும் காரணங்களினால், பண அளவுக் கட்டுப்பாடுகள் போதிய பலனளிப்பதில்லை. எனவே, பொறுக்குக் கடன் கட்டுப்பாடுகளையே ரிசர்வு பாங்கு பெருமளவில் பயன்படுத்துகின்றது.

10. பணவீக்கமும் பணவாட்டமும்

பணவீக்கம் : பொருளும் இயல்பும்

பணத்தை அடிப்படையாகக்கொண்டு இயங்கும் தற்கால உலகில் பணவீக்கம் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. பொருளாதார விவாதங்களிலும், அரசியல் விவாதங்களிலும், பணவீக்கம் கணிசமான முக்கியத்துவம் பெறுகின்றது. எனினும், பல்வேறு நாடுகளையும் இடருறச் செய்யும் இப் பொருளாதாரப் பூதம் பற்றி இதுவரையில் தெளிவான இலக்கணம் எதுவும் அளிக்கப்படவில்லை. பொதுவாகப் பண வீக்கம் என்பது விலைமட்டத்தின் வேகமான உயர்வையே குறிக்கும் என்று பலரும் கருதுகின்றனர். விலைமட்ட உயர்வின் விளைவாகப் பணத்தின் வாங்குந்திறன் வீழ்ச்சியடைவதால், விலைமட்ட உயர்வும் பணவீக்கமும் ஒன்றாகவே கருதப்படுகின்றன. கிரௌதர் பணவீக்கத்தைப் 'பணத்தின் மதிப்பு குறைந்துகொண்டும் அதாவது விலைகள் உயர்ந்துகொண்டுமிருக்கும் ஒரு நிலவரம்' என்று விளக்குகின்றார். இவ்வாறே பலரும் பணவீக்கம் நிலவும்பொழுது கணிசமான காலத்திற்கு விலைமட்டம் உயர்ந்துகொண்டிருக்கும் என்று கருதுகின்றனர். எனினும், இத்தகைய விளக்கங்களைக் கொண்டு பணவீக்கத்தை அடையாளம் கண்டுகொள்ள முடியுமே தவிர, அதன் அடிப்படைக் காரணத்தை அறியவியலாது.

பொதுவாக, பணவீக்கம் நிலவும்பொழுது விலைமட்டம் உயரும். விலைக்குறியீட்டெண்களைக்கொண்டு பணவீக்கத்தின் தீவிரத்தை உணரலாம். விலைமட்ட உயர்வு பணவீக்கத்தின் அறிகுறியே தவிர, காரணமன்று. பணவீக்கத்திற்குத் தற்காலத்தில் அளிக்கப்படும் விளக்கங்கள் யாவும் பணவீக்கத்தை ஒரு பணவழிப் பிரச்சினையாகவும், நாட்டின் இயல்பான தேவையைக்காட்டிலும் மிகையாகப் பணத்தின் அளிப்பு அமைவதால் பணவீக்கம் ஏற்படுவதாகவும் குறிப்பிடுகின்றன. பணவீக்கம், 'வாங்குந்திறனின் அளவில் ஏற்படும்

இயல்பிற்கும் அதிகமான அதிகரிப்பே' என்று கிரிகோரி[1] குறிப்பிடுகின்றார். ஹாட்ரே[2] 'செலாவணியின் மிகையான வெளியீட்டினால் பணவீக்கம் ஏற்படுவதாகக் கருதுகின்றார். நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளைக்காட்டிலும் தேவை அதிகரிப்பதால் பணவீக்கம் தோன்றுவதாக கெம்மரர்[3] விளக்குகின்றார். கூல்பர்ன்[4] 'பெருமளவு பணமும் மிகக் குறைவான அளவுப் பண்டங்களும் உள்ள நிலையே பணவீக்கம்' என்று விளக்குகின்றார். மேற்காணும் விளக்கங்கள் யாவும் பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்குமிடையே நிலவும் காரணகாரியத் தொடர்பை விளக்குகின்றன. தேசீய உற்பத்தியைக்காட்டிலும் பணத்தின் அளவு அதிகமாவதால் பணவீக்கம் ஏற்படுவதாக விளக்குகின்றன. கோல்டன் வீசர்[5] என்பாரும் இக் கருத்தை ஒட்டி, தேசீய உற்பத்தியைக்காட்டிலும் மிகையாகத் தேசீயப் பணவருவாய் அமையும்பொழுது பணவீக்கம் தோன்றுவதாகக் கூறுகின்றார். பேராசிரியர் மில்டன் ஃப்ரீட்மென்[6] என்பார், 'பணவீக்கக் காலத்தில் விலைமட்டம் தொடர்ந்து உயர்ந்து கொண்டிருக்குமெனவும், விலைமட்டத்தை இறுதியில் நிர்ணயிப்பது பணத்தின் அளவே' எனவும் கருதுகின்றார். எஃப். டபிள்யூ. பெய்ஷ்[7] என்பார், 'பணவீக்கம் ஒரு பணவழிப் பிரச்சினையே' என்று உரைக்கின்றார். அவர், தனியாரின் பணவருவாய் அதிகரிப்பதாலும், அவை மிகையாகச் செலவிடப்படுவதாலுமே பணவீக்கம் தோன்றுவதாக விவரிக்கின்றார்.

பணத்தின் அளவு அதிகரிப்பதே பணவீக்கத்திற்குக் காரணம் எனவும், விலைமட்ட உயர்வே அதன் விளைவு எனவும் கருதும் பண அளவுக் கோட்பாட்டை முழுமையாக ஏற்பதற்கில்லை. ஏனெனில், செர்மனியில் இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளில் (1920 முதல் 1929 வரையில்) ஏற்பட்ட பணவீக்கம் மேற்காணும் விளக்கங்களுக்கு எதிர்மாறாக அமைந்தது. அங்கு விலைமட்டம் அபரிமிதமாக உயர்ந்ததன் விளைவாகவே பணத்தின் அளிப்பு அதிகரிக்கப் பட்டது. விலைமட்ட உயர்வு விகிதத்திற்கு ஏற்பப் பணத்தின் அளிப்பை அதிகரிக்க முடியாத அளவிற்கு விலைமட்டம் உயர்ந்தது. அதாவது, பணத்தின் அளவு அதிகரிப்பதால்,

1 Gregory
2 Hawtrey
3 Kemmerer
4 Coulbourn
5 Golden Wieser
6 Prof. Milton Friedman
7 F. W. Paish

விலைமட்டம் உயர்வதற்குப் பதிலாக விலைமட்டம் உயர்ந்ததன் விளைவாகவே பணத்தின் அளவு அதிகரித்தது. மட்டற்ற பணவீக்கம்[1] எனப்படும். அத்தகைய பணவீக்கம், பணத்தின் அளிப்பு அதிகரிப்பதால் ஏற்படுவதில்லை.

இவ்வுண்மையை ஏற்கும் வகையில் பால் என்சிக்[2], பணத்தால் ஏற்படும் பணவீக்கம்[3] எனவும், விலைமட்டத்தால் ஏற்படும் பணவீக்கம்[4] எனவும் பணவீக்கத்தை இருவகைப் படுத்துகின்றார். அவரது விளக்கம் கீழ் வருமாறு :

பணவீக்கத்தின் முதல் கட்டம் பணத்தால் ஏற்படுவது ஆகும். இக் கட்டத்தில் இயல்பான தேவைக்கும் அதிகமாகப் பணத்தின் அளிப்பு அமைவதால் விலைமட்டம் உயர ஆரம்பிக்கின்றது. இரண்டாவது கட்டம் விலைமட்டத்தால் ஏற்படும் பணவீக்கம் ஆகும்; இக் கட்டத்தில் விலைமட்டம் வெகு வேகமாக உயர்கின்றது. விலைமட்ட உயர்வின் விகிதத்திற்குச் சமமாகப் பண அளிப்பு அதிகரிப்பின் விகிதம் அமையாமல் குறைகின்றது. எனவே, 'பணவீக்கம் என்பது விலைமட்ட ஏற்றத்தின் காரணமாகவோ அல்லது விளைவாகவோ இருக்கக்கூடிய வாங்குந்திறப் பெருக்குப் போக்கு' என்று பால் என்சிக் கருதுகின்றார். இவ் விளக்கத்தின் மூலம் பணவீக்கம் தோன்றுவதற்குப் பண அளவு அதிகரிப்பது மட்டுமின்றி, கூலிமட்டம், உற்பத்திச் செலவு, விலைச் சுழலெறி[5] ஆகியவையும் காரணமாகுமென்றும், அவை யாவுமே பணவீக்கத்தின் விளைவாக அதிகரிக்கின்றன என்றும் தெளிவாகின்றது. எனினும், இதையும் முழுமையான விளக்கமாக ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனெனில், பணவீக்க விலைப்போக்கினை வளர்க்கும் சக்திகளை மட்டுமே இவ் விளக்கம் விவரிக்கின்றது. ஆனால், பணவீக்கத்தைத் தோற்றுவிக்கும் அடிப்படைக் காரணம் யாது என்பதைக் குறிப்பிடவில்லை. எனவே, பணவீக்கம் பற்றிய ஒரு முழுமையான இலக்கணமானது, விலைமட்டம் உயர்வதற்கான காரணங்களை மட்டுமே குறிப்பிடுவதாக அமையாமல் இக் காரணிகள் எவ் வகையில் இயங்கி எவ்வாறு பணவீக்கத்தைத் தோற்றுவிக்கின்றன என்பதையும் குறிப்பிடுவதாக அமைய வேண்டும்.

பணவீக்கம் ஒரு பணத்துறைப் பிரச்சினையாகக் கருதப் படினும், பேராசிரியர் பிகு[6], கெயின்சு உள்ளிட்ட சில பொரு

[1] Hyper inflation
[2] Paul Einzig
[3] Money inflation
[4] Price inflation
[5] Price spiral
[6] Prof. A. C. Pigou

ளாதார அறிஞர்கள் அதை முழு வேலைமட்டத்துடன் தொடர்புள்ள ஒரு பிரச்சினையாகவே கருதுகின்றனர். விலைமட்டம் உயரும் ஒவ்வொரு முறையும் அதனைப் பணவீக்கமாகக் கருதக் கூடாது என்பது அவர்களுடைய கருத்தாகும். நாட்டில் பொருளாதார மந்தம் நிலவும்பொழுதோ அல்லது நாடு முழு வேலைமட்டம் எய்தாமலிருக்கும் பொழுதோ பணத்தின் அளவையோ அல்லது கூட்டுமொத்தத் தேவையையோ அதிகரிக்கக்கூடிய காரணிகளில் ஏதேனும் ஒன்று அதிகரிக்கப்பட்டால், அதன் விளைவாக, விலை மட்டம் உயரும். ஆனால், அவ்வாறு விலைமட்டம் உயர்வதன் விளைவாக, நாட்டின் வேலைமட்டமும் உற்பத்தியும் பெருகும். அத்தகைய விலைமட்ட உயர்வைப் பணவீக்கமெனக்கொள்வது தவறாகும். அதனைப் பணப்பெருக்கம் என்று குறிப்பிடலாம். இவ்வாறு உற்பத்தியும் வேலைமட்டமும் பெருகுவதால், நாடு விரைவில் வேலைமட்ட நிறைவை எய்தும். அதற்குப் பின்னரும் பணத்தின் அளவோ அல்லது கூட்டு மொத்தத் தேவையோ அதிகரிப்பின், விலைமட்டமும் அதிகரிக்கும். ஆனால், பொருள்களின் உற்பத்தியும் வேலை மட்டமும் அதிகரிக்க மாட்டா. இத்தகைய—உற்பத்தியைப் பெருக்காத—விலைமட்ட உயர்வையே நாம் பணவீக்கமாகக் கொள்ள வேண்டும். நாடு முழு வேலைமட்டம் எய்திய பின்னர் ஏற்படும் விலைமட்ட உயர்வே பணவீக்கமாகும். அதாவது, நாட்டின் அளிப்பு நிலையின் வரம்பை எய்தியதற்குப் பின்னர்த் தேவை மிகுதியாக இருப்பின், பணவீக்கம் தோன்றும்.

அளிப்புச் சக்தியைக்காட்டிலும் மிகையான தேவை நிலவுவதால் ஏற்படும் பணவீக்கமானது தானாகவே வளர்ச்சியடைவதும், தவிர்க்க முடியாததுமாகிய விலைமட்டத்தின் உயர்வான போக்காகும் என்று எமிலி ஜேம்ஸ்[1] குறிப்பிடுகின்றார். அவர்தம் கருத்துப்படி, ஈண்டு 'மிகையான தேவை' என்பது நுகர்வுப் பொருள்கள், முதலீட்டுப் பொருள்கள் ஆகிய இரண்டிற்குமான தேவையைக் குறிக்கும்; 'அளிப்புச் சக்தி' என்பது உற்பக்திச் சத்தியைக் குறிக்கும். தேவை அதிகரிப்பதற்கு ஏற்ப உற்பத்திச் சக்தியும் அதிகரித்தால் பணவீக்கம் தோன்றுவதற்கில்லை. உற்பத்தியை அதிகரிக்க முடியாத நிலையிலும், நாடு முன்னரே முழு வேலைமட்டம் எய்திவிட்டதாலோ அல்லது மூலதனப் பற்றாக்குறை, போக்குவரத்து வசதி

1. Emile James

யின்மை, நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடிகள் போன்ற வற்றின் விளைவாக அளிப்பை அதிகரிக்க முடியாத நிலை யிலும் பணவீக்கம் தோன்றும். இவ் விளக்கத்தின்படி, பண வீக்கம் பின்தங்கிய நாடுகளிலும் தோன்றக் கூடும் என்பது தெளிவாகின்றது. ஏனெனில், பின்தங்கிய நாடுகளில் விலை மட்டம் அதிகரிக்கும்பொழுது உற்பத்தித் துறையில் காணப் படும் இடர்ப்பாடுகளின் விளைவாக ஒரு குறிப்பிட்டக் கட்டத் திற்குப் பின்னர் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வாய்ப்பு இருக்காது (முழு வேலைமட்டம் எய்தாத நிலையில்கூட).

எனவே, விலைமட்ட உயர்வுடன் மிகையான தேவை நிலவுவதையும் பணவீக்கத்தின் இயல்பாக நாம் கொள்ள வேண்டும்.

பணவீக்கம் பற்றிய இரு முக்கியமான விளக்கங்கள்

பண அளவுக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட விளக்கம்: பணவீக்கம் பற்றி வழக்கத்தில் உள்ள விளக்கங்களை இரு வகைகளாகப் பகுக்கலாம். முதல்வகை விளக்கங்கள் பழைமையான பண அளவுக்கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளன. இவ் வகை விளக்கங்களின்படி, பணத்தின் அளவு அதிகரிப்பதாலேயே பணவீக்கம் ஏற்படுவதாகக் கருதப்படுகின்றது. மற்ற நிபந் தனைகள் மாறாமலிருக்கும்பொழுது பணத்தின் அளவு அதிகரிப்பதால், விலைமட்டம் அதிகரிப்பதாகவும், அதன் விளைவாகப் பணவீக்கம் தோன்றுவதாகவும் இவ் விளக் கங்கள் விவரிக்கின்றன. பேராசிரியர் மில்டன் ஃப்ரீட்மென், ஹாட்ரே, கோல்டன்வீசர் போன்றோர் இவ்வடிப்படையில் தான் பணவீக்கத்தை விளக்குகின்றனர்.

பண அளவுக்கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்ட இவ் விளக்கத்தை அடியொற்றி, 'மட்டற்ற பணவீக்க'த்தை விளக்க இயலாது. ஆரம்பத்தில் விலைமட்டம் உயர்வதன் விளைவாகப் பணத்தின் அளவு அதிகரிப்பதால், அதன் விளைவாக மீண்டும் விலைமட்டம் உயர்வதை இவ் வகை விளக்கங்களின் உதவியுடன் விளக்க இயலாது. உண்மையில் பணத்தின் அளவு, விலைமட்டம் ஆகிய இரண்டில் ஒவ் வொன்றும் மற்றொன்றின் அதிகரிப்பிற்குக் காரணமாவதால், இவையிரண்டில் எது காரணம், எது விளைவு என்பதைத் தெளிவாக நிர்ணயிப்பதியலாது. மேலும், பொருளாதார

மந்தம் நிலவும் நாடுகளுக்கு இக் கோட்பாடு ஏற்றதன்று. ஏனெனில், மந்தம் நிலவும் நாடுகளில் பொருளாதார மந்தத்தின் விளைவுகளைத் தவிர்ப்பதற்காக அரசு நிதியியல் நடவடிக்கை களையும், பணவியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடும். அத்தகைய நடவடிக்கைகளின் விளைவாகப் பணத்தின் அளவும் விலைமட்டமும் அதிகரிக்கக் கூடும். பொருளாதார மீட்சிக்கு ஆதரவான அத்தகைய விலைமட்ட உயர்வைப் பணவீக்கம் என்று கருதுவது தவறாகும்.

மிகையான தேவை விளக்கம்[1] : பொருளாதார அறிஞர் களுள் விக்செல்,[2] பென்ட் ஹான்சென்,[3] கெயின்சு உள்ளிட்ட ஒரு பிரிவினர் பணவீக்கம் பற்றிய மிகவும் ஏற்புடையதான ஒரு விளக்கத்தை அளித்துள்ளனர். அவர்களுடைய கருத் துப்படி ஒவ்வொரு பொருளின் விலையும் அதனதன் தேவை யாலும் அளிப்பாலும் நிர்ணயிக்கப்படுவதைப் போன்றே பொதுவான விலைமட்டமும், சம்பந்தப்பட்டப் பொருள்களின் மொத்தத் தேவையாலும் மொத்த அளிப்பாலும் நிர்ணயிக்கப் படுகின்றது; அப் பொருள்களின் விலையே விலைமட்டத்தை நிர்ணயிக்கின்றது. அதாவது. பணத்தின் அளவிற்கு ஏற்ப, அமையும் கூட்டு மொத்தத் தேவையானது சந்தையில் நிலவும் விலையில் அளிப்பைக்காட்டிலும் மிகையாக அமைவதால் தான் பணவீக்கம் தோன்றுவதாக அவர்கள் கருதுகின்றனர்.

இவ் விளக்கத்தின்படி 'மிகையான தேவையே' பண வீக்கம் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணமாகக் கருதப் படுகிறது. எனவே, இவ் விளக்கம் பணவீக்கம் பற்றிய மிகையான தேவை விளக்கம் என்று அறியப்படுகின்றது. 'மிகையான தேவை' என்பது குறிப்பிட்ட விலையில் பொருளின் அளிப்பிற்கும் அதன் தேவைக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் குறிக்கின்றது. இவ்வடிப்படையில் பணவீக்கத்தைப் பின்வருமாறு விளக்கலாம்: சந்தையில் நிலவும் விலையில் அளிக்கப்படும் பொருள்களைக்காட்டிலும் அவற்றிற்கான பணத்தேவை தொடர்ந்து அதிகரிக்கும் நிலையே பணவீக்கம் ஆகும். எனவே, மிகையான தேவை தோன்றுவதாலேயே பணவீக்கம் தோன்றுகிறது; அதாவது, சந்தையில் நிலவும் விலையில் அளிக்கப்படும் பொருள்களைக்

1 Excess demand analysis
2 Wicksell
3 Bent Hansen

காட்டிலும், அவற்றிற்கான தேவை ஏதோ ஒரு காரணத்தால் மிகையாக நிலவுவதாலேயே பணவீக்கம் தோன்றுகின்றது. அதாவது, தேவைக்குச் சமமாக உற்பத்தியை அதிகரிக்க முடியாத நிலையில்தான் பணவீக்கம் தோன்றுகிறது.

அளிப்பைக்காட்டிலும் தேவை மிகுதியாகக் கீழ்க்காணும் காரணங்களால் அமையலாம்: (1) போர்க்காலத்தில் அர சாங்கச் செலவுகள் அதிகரிக்கும். இதன் விளைவாகப் பொது மக்களின் வாங்குந்திறன் அதிகரிக்கும். ஆனால், பொருள் களின் உற்பத்தி அதிகரிப்பதில்லை. பொதுமக்கள் தங்கள் வருவாயைச் செலவிடும்பொழுது, அளிப்பு அதிகரிக்காமை யால், மிகையான தேவை நிலவும். (2) திட்டமிட்டு முன் னேறும் நாடுகளில் பொதுத்துறை முதலீடுகள் அல்லது பொதுப் பணிகளின்மீதான அரசின் செலவுகள் பன்மடங்காக அதிகரிக்கும். இதன் விளைவாகப் பொதுமக்களின் வருவாய் அதிகரிக்குமாயின், நாட்டின் உற்பத்தி அளவு தேவைக்கு ஏற்ப அதிகரிப்பதில்லை. இதன் விளைவாகவும் மிகையான தேவை நிலவக் கூடும். (3) புத்தாக்கங்கள் தொழில் நுணுக்க வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாகத் தொழில் முயல்வோரின் முதலீட்டு வாய்ப்புகளும், முதலீட்டுச் செலவுகளும் அதிகரிப் பதால், பொதுமக்களின் வாங்குந்திறன் அதிகரிக்கும். ஆயினும், உற்பத்தி மாறாமல் இருப்பதால் மிகையான தேவை நிலவக் கூடும். பொதுவாகப் போர்க்காலங்களிலும், நாடு திட்டமிட்டப் பொருளாதார வாழ்வை மேற்கொண்டிருக்கை யிலும் புத்தாக்கங்களும், தொழில் நுணுக்கங்களும் அறிமுகப் படுத்தப்படும்பொழுதும் மிகையான தேவை நிலவுவதாலும், அளிப்பு அதிகரிக்காமையாலும் பணவீக்கம் தோன்றும். மேலும், நாட்டின் தேவையிலும் மாற்றமேதும் ஏற்படாமல் இருக்கும்போது உற்பத்தித்திறன் வீழ்ச்சியடைவதாலோ அல்லது உற்பத்தித்துறையில் ஏற்படும் இடையூறுகளாலோ உற்பத்தி அளவு (அளிப்பு) குறைவடைந்தாலும் மிகையான தேவை தோன்றும். ஒரு முறை 'மிகையான தேவை' தோன்றி விட்டால், அது விலைமட்டத்தை உயர்த்த ஆரம்பித்துவிடும். விலைமட்டம் உயரத் தொடங்கிவிட்டால், மீண்டும் மீண்டும் தொடர்ந்து உயர்ந்துகொண்டேயிருக்கும்.

பணவீக்கம் தொடர்பான பண அளவுக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்ட விளக்கம், மிகையான தேவையை அடிப்படையாகக்கொண்ட விளக்கம் ஆகிய இரு விளக்கங் களுக்கிடையில் பெரும் வேறுபாடு ஏதுமில்லை எனலாம்.

ஏனெனில், மிகையான தேவையை அடிப்படையாகக்கொண்ட விளக்கத்தின்படி, மிகையான தேவை உருவாவதற்கு அடிப் படைக் காரணம் பண அளவு அதிகரிப்பதே ஆகும். ஆகவே, இரு விளக்கங்களிலும் பணத்தின் அளவு அதிகரிப்பதே பண வீக்கத்தின் அடிப்படைக் காரணமாகக் கருதப்படுகின்றது. எனினும், பண அளவுக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட விளக்கத்தில் பணத்தின் அளவு அதிகரிப்பதால், பணவீக்கம் தோன்றுவதாக விவரிக்கப்படுகின்றது.

ஆனால், மிகையான தேவையை அடிப்படையாகக் கொண்ட விளக்கத்தில் பணத்தின் அளவு அதிகரிப்பதால் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு காரணிகளும் எவ்வாறு இயங்கி, எவ்வாறு பணவீக்கப் போக்கைத் தோற்றுவிக்கின்றன என்பது விவரிக்கப்படுகின்றது. 'கெயின்சு' விலைகள் பற்றிய தமது வருவாய்செலவுக் கோட்பாட்டில் இதைத் தெளிவாகக் கீழ் வருமாறு விளக்குகின்றார்:

பணத்தின் அளவு அதிகரிப்பதன் விளைவாகச்சேமிப்பைக் காட்டிலும் அதிக அளவில் முதலீடு செய்யப்படும். இதன் விளைவாகச் சமுதாயத்தின் கூட்டு மொத்த நிகர வருமானம்[1] அதிகரிக்கும். சமுதாயத்தின் வருமானம் அதிகரிப்பதால், இயல்பாகவே செலவுகளும் அதிகரிக்கும். அதன் விளைவாகப் பொருள்களுக்கான பணத் தேவை அதிகரிப்பதால், விலை மட்டம் அதிகரிக்க ஆரம்பிக்கின்றது. ஆனால், இவ்வாறு அதிகரிக்கப்பட்ட செலவிற்கோ அல்லது அதிகரிக்கப்பட்ட தேவைக்கோ சமமாகப் பொருள்களின் அளிப்பு அதிகரிக்கு மாயின், விலைமட்டம் உயர்வதற்கில்லை. நாடு முழு வேலை மட்டம் எய்தும் வரையில் பணத்தின் அளவு அதிகரிக்கும் போது முதலீடு, வேலைமட்டம், வருவாய், உற்பத்தி ஆகிய வையும் அதிகரிப்பதால் விலைமட்டம் உயர்வதில்லை. எனினும், பணத்தின் அளவு அதிகரிக்கும் காலத்திற்கும், உற்பத்தி அதிகரிக்கும் காலத்திற்கும் இடையே கால இடை வெளி இருப்பதால், இவ்வடிப்படைக் காலத்தில் மிகையான தேவை நிலவும்; தற்காலிகமாக விலைமட்டம் அதிகரிக்கும். ஆயினும், இவ் விலைமட்ட உயர்வு பணவீக்கம் அன்று. அதைப் 'போலிப் பணவீக்கம்' என்று கெயின்சு கருதுகின்றார். நாடு வேலைமட்ட நிறைவு எய்திய பின்னர், 'சேமிப்பைக் காட்டிலும் மிகையான முதலீட்டின் விளைவாகப் பொது

[1] Aggregate net income.

மக்களின் செலவுகள் அதிகரிப்பதால், மிகையான தேவை நிலவும். அப்பொழுது அளிப்பு அதிகரிக்கப்படுவதில்லை யாதலால், விலைமட்டம் அதிகரிக்கும்; பணவீக்கம் தோன்றும். இத்தகைய விலைமட்ட உயர்வே உண்மையான பணவீக்கம் என்று கெயின்சு கருதுகின்றார். கெயின்சின் விளக்கத்தி லிருந்து பணவீக்கம் என்பது முழு வேலைமட்டம் எய்திய தற்குப் பின்னர் ஏற்படும் ஒரு நிகழ்ச்சியே என்பது தெளி வாகும்.

பணவீக்கம் தோன்றுவதன் காரணங்கள்

மேற்காணும் விளக்கத்திலிருந்து நாட்டில் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தி அதிகரிக்காதபொழுது, மக்களின் பண வருவாயும், அதன் விளைவாகப் பண்டங் களும் பணிகளுக்குமான தேவையும் அதிகரிப்பதால், பண வீக்கம் தோன்றுவது தெளிவாகும். அதாவது, 'மிகையான தேவை' நிலவுவதாலேயே பணவீக்கம் தோன்றுகிறது. மிகை யான தேவை, (1) தேவை அதிகரிக்கும்போது அல்லது (2) அளிப்பு குறையும்போது தோன்றும். அவை பற்றி இனிக் காணலாம்.

(அ) தேவை அதிகரிப்பதற்கான காரணங்கள்: தேவை அதிகரிப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளனவெனினும், சில முக்கிய காரணங்கள் கீழ்வருமாறு :

(1) அரசு செலவுகள் வேகமாக அதிகரித்தல்: போர்க் காலங்களிலும், திட்டக் காலங்களிலும் அரசின் செலவு பன்மடங்காக அதிகரிப்பதால், பொதுமக்களின் பண வரு வாயும் அதிகரிக்கும். 'கெயின்'சின் விளக்கப்படி நாடு முழு வேலைமட்டம் எய்திய பின்னர், பண்டங்கள் மற்றும் பணி களின் உற்பத்தி அதிகரிக்கப்பட வாய்ப்பில்லை. எனவே, மிகையான தேவை தோன்றும்.

குறைந்த அளவு பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு மிகையான தேவை நிலவுவதால், விலைமட்டம் உயர ஆரம் பிக்கும்; பணவீக்கம் தோன்றும். இவ்வாறே உற்பத்தித் துறையில் காணப்படும் இக்கட்டுகளின் விளைவாக நாட்டின் பணவருவாய் அதிகரிப்பதற்குச் சமமாக உற்பத்தியை அதி கரிக்க முடியாமையாலும் பணவீக்கம் தோன்றும். போர்க் காலங்களிலும் திட்டக்காலங்களிலும் பொருளாதார வளர்ச்

சிக்கு உதவாத அரசின் செலவுகள் அதிகரிக்கும்போது அரசு பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொள்ளக் கூடும். அந் நிலையில் மக்களுடைய பணவருவாய் அதிகரிப்பதற்குச் சமமாக உற்பத்தி அதிகரிக்காவிடில், விலைமட்டம் அதிகரிக்கவும், பணவீக்கம் தோன்றவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

(2) தனியார் செலவுகள் வேகமாக அதிகரித்தல்: செழுமையான வாணிப நிலவரங்கள், புதிய தொழில் நுணுக்கங்கள் போன்றவை தனிப்பட்ட தொழில் முயல்வோர்களை ஊக்குவிப்பதால், அவர்கள் முதலீடுகளை அதிகரிப்பார்கள். அந் நிலையில் நாடு முன்னரே முழு வேலைமட்டம் எய்தியிருந்தாலும் உற்பத்தித்துறையில் இக்கட்டுகள் நிலவிடினும் முதலீடு அதிகரிப்பதன் விளைவாக உற்பத்திக்காரணிகளின் ஊதியங்களும் அதிகரிக்கின்றன; உற்பத்திக்காரணிகளின் வருவாய் அதிகரிப்பதால், நுகர்வின் மீதான கூட்டு மொத்தத் தேவையும் அதிகரிக்கும். அதற்கேற்ப அளிப்பு அதிகரிக்கப்படாவிடில், பொருள்களின் விலைமட்டம் உயரவும், பணவீக்கம் தோன்றவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

(3) வரியமைப்பு குறைக்கப்படுதல்: அரசால் விதிக்கப்பட்டிருந்த சில வரிகள் நீக்கப்படுமாயின், அதன் விளைவாக மக்களுடைய மெய்யான வருவாயும் அதிகரிக்கப்படும். எடுத்துக்காட்டாக, போர்க்காலத்தில் விதிக்கப்பட்ட ஒரு தற்காலிக வரியை அரசு நீக்கிவிடுமாயின், அதன் விளைவாக மக்களுடைய வாங்குந்திறன் மீதமாகின்றதல்லவா? எஞ்சிய வாங்குந்திறனை மக்கள் செலவிடத் தொடங்குவதால் விலைமட்டம் உயரவும், பணவீக்கம் தோன்றவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

(4) அரசு தனது கடன் வாங்கும் திட்டத்தை நிறுத்துவதும், கடன்களைத் தீர்ப்பதும்: அரசு பொது மக்களிடமிருந்து கடன் வாங்கும் திட்டத்தை நிறுத்திவிடும் பொழுதும் தளர்த்தும்பொழுதும் அரசிற்குக் கடனாக அளிக்கப்படவிருந்த தொகை, பொதுமக்களிடம் மீதம் ஆகின்றது. இவ்வாறு அரசு முன்பு பெற்றிருந்த உள்நாட்டுக் கடன்களைத் திருப்பும்பொழுது அரசு வசமிருந்த வாங்குந்திறன் பொது மக்களை அடைகின்றது. மக்களிடம் வாங்குந்திறன் எஞ்சுவதால், அவர்கள் செலவிடும் தொகை அதிகரிக்கும். இதன் விளைவாக மிகையான தேவையும், பணவீக்கமும் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

(5) ஏற்றுமதிக்கான தேவை அதிகரித்தல்: ஒரு நாட்டின் ஏற்றுமதி வாணிபம் செழித்து ஓங்குவதாக வைத்துக் கொள்வோம். ஏற்றுமதி செழித்தோங்கினால் ஏற்றுமதிப் பொருள்களுக்கான தேவை அதிகரிப்பதுடன் இத்தகைய பொருள்கள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுவதால், உள் நாட்டு உபயோகத்திற்குக் கிட்டும் பொருள்களின் அளவு குறைவடையும். உள்நாட்டுத் தேவையில் மாற்றம் ஏதும் ஏற்படாவிடிலுங்கூட உள்நாட்டு உபயோகத்திற்காக முன்னர் அளிக்கப்பட்ட அளவிற்குப் பொருள்கள் அளிக்கப்படாமை யால், மிகையான தேவை தோன்றும். மேலும், ஏற்றுமதி அதிகரிப்பதால், நாட்டு வருவாயும் அதிகரிக்கும். இவ்வாறு அதிகமாகக் கிட்டும் வருவாயை இறக்குமதிக்குப் பயன்படுத் தாமல் உள்நாட்டுப் பொருள்களை வாங்குவதற்குப் பயன் படுத்தினாலும் மிகையான தேவை தோன்றும். மிகையான தேவை நிலவிடின், பணவீக்கம் தோன்றும் என்பதை நாம் முன்னரே அறிவோம்.

(ஆ) அளிப்பைக் குறைக்கும் காரணிகள்: இதுவரை தேவையை அதிகரிக்கும் காரணிகளைப் பற்றிக் கண்டோம். இனி அளிப்பைப் பாதிக்கும் காரணிகளைப் பற்றிக் காண் போம்:

(1) உற்பத்திச் சாதனங்கள் பற்றாக்குறை: பொருள் களும் பணிகளும் அளிக்கப்படுவதற்கு நிலம், உழைப்பு, மூலதனம், மூலப் பொருள்கள் ஆகியவை அடிப்படைத் தேவைகளாகும். உற்பத்திக்குத் தேவையான இச் சாதனங்கள் போதுமான அளவில் கிடைக்காவிடில், அச் சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்யக் கூடிய பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கில்லை. எனவே, அத்தகைய பொருள் களின் அளிப்பு பாதிக்கப்படும். உற்பத்திச் சாதனங்களின் பற்றாக்குறை உற்பத்தித்துறையைப் பாதிக்கும் இக்கட்டாகும்.

(2) ஏற்றுமதியின் அதிகரிப்பு: ஏற்றுமதி வெகுவாக அதிகரிக்கும்போதும் உற்பத்தி மாறாமலிருக்கும்போதும் உள் நாட்டு அங்காடியில் அளிப்பு குறையும்.

(3) குறைந்து செல்விளைவு விதி (உயர்ந்து செல் செலவு விதி) செயல்படுவது: உற்பத்திச் சாதனங்கள் ஒன்றுக்கொன்று பதிலீடு செய்யப்படக் கூடியவையாக இருப்பின், குறைந்து செல்விளைவு விதி செயல்படாது.

ஆனால் காரணிகளைத் துல்லியமாகப் பதிலீடு செய்வது இயலாததாகையால், குறைந்து செல்விளைவு விதி செயல் பட்டு, உற்பத்தியைக் (அல்லது அளிப்பை) கட்டுப்படுத்து கிறது. அதாவது, ஒரு பொருளின் விலை மாறாமல் இருக்கும் போது அதன் இறுதிநிலை உற்பத்திச் செலவு அதிகரிக்கு மாயின், இ. உ. செலவையும் விலையையும் சமமடையச் செய்வதன்மூலம் இலாபம் ஈட்ட விரும்பும் உற்பத்தியாளர்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவர்; அளிப்பு பாதிக்கப்படும். அதாவது, தொழிலின் அளிப்புக்கோடு கீழே இறக்கப்படும்.

(4) **பொருள்கள் பதுக்கப்படுதல் :** விலைமட்டம் தொடர்ந்து அதிகரிக்குமாயின், எதிர்காலத்தில் அமித இலாபம் எய்த விரும்பும் வணிகர்களும், எதிர்கால உபயோகத்திற்காக நுகர்வோர்களும், பொருள்களைப் பதுக்க ஆரம்பிப்பார்கள். இவ்வாறு பொருள்கள் பதுக்கப்படுவதாலும், முடக்கப்படுவ தாலும் அங்காடியில் அளிப்பு குறையவும் பணவீக்கம் தோன்றவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

பணவீக்கத்தின் தன்மைகள்

(1) பணவீக்கம் சலனமிக்க நடவடிக்கையாகும். குறிப் பிட்ட ஒரு காலத்தில் அதை உணர முடியாது; ஏறத்தாழ நெடுங்காலத்திலேயே உணர முடியும்.

(2) பணவீக்கம் நிலவும்போது விலைமட்டம் தங்குதடை யின்றி உயர்ந்துகொண்டே இருக்கும். உண்மையில் பணவீக் கத்தையும் விலைமட்ட உயர்வையும் பிரித்துணர இயலாத அளவிற்கு அவை ஒன்றையொன்று சார்ந்துள்ளன.

(3) பணவீக்கம் அடிப்படையில் ஒரு பொருளாதார நடவடிக்கையாகும். பொருளாதார அமைப்பிற்குள் தோன்றும் பணவீக்கம் பொருளாதாரச் சக்திகளின் தொடர் நடவடிக்கை யால் வளர்ச்சியடைகின்றது.

(4) பணவீக்கம் ஒரு பணவியல் பிரச்சினையாகும். பொதுவாக, மிகையான தேவை நிலவுவதாலேயே பணவீக்கம் தோன்றுகின்றது. அதாவது, பணவீக்கம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம், நாட்டின் இயல்பான தேவைக்கும் அதிகமாகப் பணத்தின் அளிப்பு பெருக்கமடைவதேயாகும். உண்மையில் (நடைமுறையில்) மிகுதியான காகிதப்பண

வெளியீடும் வங்கிக் கடன் வசதிகளின் பெருக்கமுமே பண வீக்க விலைப்போக்கைத் தோற்றுவிக்கின்றன.

(5) பணவீக்க விலைப்போக்கு தனக்குத்தானே வளர்த்துக் கொள்ளக் கூடியதாகும். அதை உடனடியாகத் தடுப்பதிய லாது. விபத்துகளாலும், வாணிபச்சுழல்களாலும், தற்காலிகப் பற்றாக் குறையாலும் ஏற்படக்கூடிய விலைமட்ட உயர்வி லிருந்து அது வேறுபட்டதாகும்.

(6) வாணிபச்சுழல்களின் நடவடிக்கையும், பணவீக் கமும் வெவ்வேறானவையாகும்.

(7) தூய பணவீக்கம், வேலைமட்டம் நிறைவு எய்திய தற்குப் பின்னரே ஏற்படக் கூடும்.

(8) அனைத்துப் பொருள்களின் அளிப்பைக்காட்டிலும் மிகையாக அவற்றிற்கான தேவை அமைவதே பணவீக்கத்தின் முக்கியக்கூறு ஆகும்.

(9) பணவீக்கம் தேவையால் இழுக்கப்பட்டதாகவோ அல்லது உற்பத்திச் செலவால் உந்தப்பட்டதாகவோ இருக்க லாம். அல்லது இவையிரண்டும் கலந்ததாகவும் இருக்கலாம்.

தேவையால் இழுக்கப்பட்ட பணவீக்கமும் உற்பத்திச் செலவால் உந்தப்பட்ட பணவீக்கமும்[1]

பணவீக்கம் தோன்றுவதற்கான ஏற்புடைய காரணங்கள் தொடர்பாக இருவிதக் கருத்துகள் பொருளாதார அறிஞர் களிடையே நிலவுகின்றன. ஒரு பிரிவினர் பணவீக்கம் தோன்றுவதற்குத் தேவையை இழுக்கும் காரணங்களே முக்கிய மானவை என்றும், மற்றொரு பிரிவினர் செலவை 'உந்தும்' காரணங்களே முக்கியமானவை என்றும் கருதுகின்றனர்.

தேவையால் இழுக்கப்பட்ட பணவீக்கம்: பணவீக்கம் தேவையால் இழுக்கப்படுவதே எனக் கருதும் பிரிவினர், பண்டங்கள் மற்றும் பணிகள் அளிப்பைக்காட்டிலும் தேவை மிகையாக இருப்பதாலேயே பணவீக்கம் தோன்றுவதாகக் கருதுகின்றனர். இக் கோட்பாட்டினர், நாடு வேலைமட்ட நிறைவு எய்தி இயங்கிக்கொண்டிருக்கும் நிலையில், பணத்தின் அளவு அதிகரித்தால் பணவீக்கம் தோன்றுமென விவரிக்

[1] Demand pull inflation and cost-push inflation

கின்றனர். பணத்தின் அளவு அதிகரிப்பதால், வட்டி விகிதம் குறைவடையும். குறைவான வட்டிவிகிதம் நிலவிடின் முதலீடுகள் அதிகரிக்கும். முதலீடுகள் அதிகரிப்பதன் காரணமாகப் பல்வேறு உற்பத்திக்காரணிகளின் ஊதியங்களும் அதிகரிக்கப்படும். இதன் விளைவாக நுகர்வுசெலவு அதிகரிப்பதால், உறுதித்தேவை அதிகரிக்கும். நாடு முன்னரே முழு வேலைமட்டம் எய்தி இயங்கிக்கொண்டிருப்பதால், (பொருள்களின் அளிப்பு அதிகரிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லாமையால்) விலைமட்டம் உயர்ந்து பணவீக்கப்போக்கு வளர்ச்சியடையும். அதாவது, பொதுவான அளிப்பைக்காட்டிலும் பொதுவான பணத்தேவையானது அதிகரிக்கும்போது, தேவை விலைமட்டத்தை மேலே இழுத்துவிடுகின்றது. (ஈண்டு விலைமட்டம் என்பது பொருள்களின் விலைமட்டத்தையும், உற்பத்திக்காரணிகளின் பொதுவான விலைமட்டத்தையும் குறிக்கும்.) ஆதலால், பணத்துறை அதிகாரிகளின் செயல்திறமிக்க ஒத்துழைப்போ அல்லது அமைவான ஈடுபாடோ இருந்தாலும், அல்லது அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் தோல்வியுற்றாலும் தேவையால் இழுக்கப்பட்ட பணவீக்கம் தன்னைத்தானே வளர்த்துக்கொள்கின்றது.

பணத்தின் அளவு அதிகரிக்கும்பொழுதுகூடச் சில காலங்களில் தேவையால் இழுக்கப்பட்ட பணவீக்கம் தோன்றும். மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் [1] அதிகரித்தாலும் அல்லது மக்களிடையில் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம்[2], அதனால் முதலீட்டுச் செலவுகள் அதிகரிப்பதன் விளைவாக மொத்தத் தேவையும் அதிகரிக்கும். நாடு முன்னரே வேலைமட்ட நிறைவு எய்தியிருந்தால், மொத்தத் தேவையின் அதிகரிப்பு விலைமட்டத்தில் பிரதிபலிக்கும்; விலைமட்டம் உயரும்; பணவீக்கம் தோன்றும்.

இக் கோட்பாட்டினர் போர்க்காலங்களில் போதிய பணவாட்டப் பணவியல் நடவடிக்கைகளையும், நிதியியல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு தவறினால், உறுதித் தேவை மிகவும் அதிகரிப்பதால் விலைமட்டத்தை இழுத்துவிடும் என்றும் கருதுகின்றனர்.

இப் பிரிவினர் விலைமட்டம் உயரும்போதோ அல்லது அதற்குப் பின்னரோ கூலி விகிதம் உயரும் என்றும், இஃது ஓர்

[1] Marginal efficiency of capital
[2] Marginal propensity to consume

இயல்பான விளைவே என்றும் கருதுகின்றனர். ஏனெனில், விலைமட்டம் உயர்ந்துகொண்டிருக்கும் நிலையில் இலாப விகிதம் அதிகரிப்பதால் ஊக்குவிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் முதலீட்டையும், வேலை வாய்ப்புகளையும் பெருக்க முயல் வதால் தொழிலாளர்களுக்கான தேவை அதிகரிக்கும். அதன் விளைவாகத் தொழிலாளர்களின் விலையான கூலி விகிதமும் அதிகரிக்கும்.

பணவியல் அதிகாரிகளும், நிதியியல் அதிகாரிகளும் பணவாட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தேவையால் இழுக்கப்பட்ட பணவீக்கத்தைத் தவிர்க்க முடியும் என்பதால் அவர்களுடைய அமைவான[1] செயல் முறைகளே தேவையால் இழுக்கப்பட்ட பணவீக்கத்திற்கான பொறுப்பா கின்றன.

செலவால் உந்தப்பட்ட பணவீக்கம்: பொருளாதார அறிஞர்களுள் ஒரு பிரிவினர் 'மிகையான தேவை நிலவுவதால் பணவீக்கம் தோன்றும்' எனும் கருத்தை மறுக்கின்றனர். அவர்கள் பொருளின் உற்பத்திச் செலவுகள் அதிகரிப்ப தாலேயே பணவீக்கம் தோன்றுவதாக விளக்குகின்றனர். அவர்கள் கருத்து பின்வருமாறு: உற்பத்திக்காரணிகள் தமது ஊதியங்களை உயர்த்த முயல்வதன் விளைவாகப் பொருள் களின் விலைகள் உயர ஆரம்பிக்கின்றன. விலைமட்டம் உயர்வதன் விளைவாகப் பணவீக்கம் தோன்றுகின்றது. அதாவது, பணவீக்க விலைப்போக்கு தோன்றுவதற்குக் காரணம் உற்பத்திக்காரணிகளுக்கு அளிக்கப்படும் ஊதி யங்கள் அதிகரிப்பதே ஆகும். பணவீக்கம் செலவால் உந்தப் பட்டதாகும்.

செலவால் உந்தப்பட்ட பணவீக்கம் கூலி உயர்வதாலும், இலாபம் உயர்வதாலும் தோன்றக் கூடும். பொருள்களுக்கான அங்காடியிலும், உழைப்பிற்கான அங்காடியிலும் சர்வாதீனப் போக்குகள் நிலவிடின், இத்தகைய பணவீக்கம் தோன்றக் கூடும். உழைப்பிற்கான அங்காடியில் சர்வாதீனம் நிலவிடின், கூலிமட்டம் உயர்த்தப்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இவ்வாறு கூலிமட்டம் உயர்த்தப்படின், அதன் விளைவாகப் பொருள் களின் விலை உயர வாய்ப்பு உண்டு. பொருள்களுக்கான அங்காடியில் சர்வாதீனப் போக்கு நிலவிடின், அமித இலாபம்

[1] Possive

ஈட்ட விரும்பும் சர்வாதீனன் விலைமட்டத்தை உயர்த்தக் கூடும். இவ்வாறு இலாபம் உயர்த்தப்படுவதாலும், விலை மட்டம் உயரக் கூடும். எனினும், இலாபத்தை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் சுதந்தரமான முயற்சிகள், விலை மட்டத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு ஏற்பதாகக் கொள் வதற்கில்லை. ஏனெனில், மொத்த விலையில் இலாப விகிதம் மிகவும் குறைவானதேயாகையால் இலாபம் அதிகரிக்கப்படு வதால், விலைமட்டம் பெருமளவில் மாறுவதில்லை; மேலும், தேவையை உயர்த்திவிடும். காரணங்கள் இல்லாதபொழுது பொதுவாகச் சர்வாதீனர்கள் விலையை உயர்த்தும் முயற்சியில் ஈடுபடுவதில்லை. கூட்டமைப்புகளில் விலைமட்டம் உயர்த் தப்படுவதால், அத்தகைய முடிவெடுத்தோர் நேரிடையாகப் பயனடைவதில்லையாதலால், அவர்களிடையில் இலாப நோக்கு வலுவானதாகக் கொள்ளப்படுவதில்லை.

மேற்கூறியவற்றால் செலவால் உந்தப்பட்டப் பணவீக்கம் என்பது பொதுவாகக் கூலி விகிதத்தால் உந்தப்பட்டப் பண வீக்கத்தையே குறிக்கும் என்பது தெளிவாகும். **பொதுவாகக்** கூலி விகிதம் அதிகரிக்கும்போது உற்பத்திச்செலவுகள் கணிச மாக அதிகரிப்பதால் விலைமட்டமும் உயரும். கூலி உயர் வதற்கான கோரிக்கைகள் தொழிற்சங்கங்களால் நிறை வேற்றப்படுவதால் கூலி விகித உயர்வால் ஏற்படும் பண வீக்கத்தைத் தொழிற்சங்கங்களால் தோற்றுவிக்கப்பட்டப் பணவீக்கம் என்றும் குறிப்பிடலாம். பல்வேறு நாடுகளிலும் தொழிற்சங்கங்கள் பலம் பொருந்தியவையாக இருப்பதால், ஒவ்வோர் ஆண்டிலும் மனித முயற்சியால் ஒரு மணி நேரத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மதிப்பைக்காட்டிலும் அதிகமான கூலி விகிதம் கோரி அவை வெற்றியடைகின்றன என்று ‘சிலிட்சர்’[1] என்பார் கருதுகின்றார். தொழிலாளர்களின் மொத்த உற்பத்தித்திறனைக்காட்டிலும் அதிகமாகக் கூலி விகிதம் அளிக்கப்படும்பொழுது வேலைமட்டம் காக்கப்பட வேண்டுமாயின், விலைமட்டம் அதிகரித்தேயாக வேண்டும்; விலைமட்ட உயர்வைத் தவிர்ப்பதாயின் வேலையின்மைப் பிரச்சினையை ஏற்க நேரிடும்.

தொழிற்சங்கங்களின் கூலி உயர்வுக் கோரிக்கை நிறை வேற்றப்படும்பொழுது தொழிலாளர்கள் மறைமுகமாகப் பாதிக் கப்படுவதாக ‘ரிக்கர்டு பேர்ல்மேன்’[2] என்பார் கருதுகின்றார்.

[1] **S. C. Slitcher**
[2] **Ricord Peerlman**

கூலி உயர்வு கோருவோர் தமது கோரிக்கையினால் விலை மட்டம் உயராது எனவும், ஆனால் தொழில் உரிமையாளரின் இலாபத்தில் ஒரு பகுதியையே தாம் கோருவதாகவும் அனுமானித்துக்கொண்டு கூலி உயர்வு வேண்டுகின்றனர். அவர்தம் அனுமானம் உண்மையாயின், உற்பத்திச்செலவு அதிகரிப்பதன் விளைவாகப் பணவீக்கம் தோன்றுவதற்கில்லை. ஆனால் நடைமுறையில் கூலிவிகிதம் உயர்வதால் பணவீக்கம் தோன்றுவதிலிருந்து தொழிற்சங்கங்களின் அனுமானம் தவறானது என்பது தெளிவாகும்.

கூலிவிகிதம் அதிகரிப்பதால் விலைமட்டம் உயர்வதன் விளைவாக வேலையின்மைப் பிரச்சினையும் அதிகரிக்கக் கூடும். தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களுக்கான தேவை நெகிழ்ச்சிக் குறைவாகவும், அவர்களால் உற்பத்திச் செய்யப் படும் பொருள்கள் தேவை நெகிழ்ச்சியற்று இருப்பதாகவும் தவறாக அனுமானிப்பதால், இதை உணர்வதில்லை. ஆனால், நடைமுறையில் விலைமட்டம் உயர்வதால் பொருள்களுக்கான தேவை வீழ்ச்சியடைகின்றது. தேவை வீழ்வதால் உற்பத்தி அளவு குறைக்கப்படுவது அவசியமாகின்றது. பொருள்களின் உற்பத்தி குறைக்கப்படின் வேலைமட்டமும் வீழ்ச்சியடைவது இயற்கையாகும்.

இக் கோட்பாட்டினருள் சிலர், உற்பத்தித்துறையின் ஒரு துறையில் தேவை மாற்றமடைந்தால் அத் துறையில் கூலியும், விலைமட்டமும் மாறுதலடைவதாகவும், இம் மாற்றங்கள் மற்றத் துறைகளுக்கும் பரவுவதாகவும் கருதுகின்றனர். ஒவ்வொரு பொருளும் மற்றப் பொருள்களுடன் பிணைந்திருப்பதால்தான் ஒரு துறையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றத் துறைகளுக்கும் எளிதில் பரவுகின்றன.

ஒரு தொழிலில் உற்பத்தி செய்யப்படும் பொருள் மற்றொரு தொழிலில் இடுமானமாகப் பயன்படக் கூடும். அவ்வாறாயின், முதல் தொழிலில் கூலிமட்டம் அதிகரிக்கப்படும் பொழுது, அத் தொழிலில் உற்பத்தி செய்யப்படும் பொருளை இடுமானமாகப் பயன்படுத்தும் தொழிலில் உற்பத்தி செய்யப் படும் பொருளின் விலையும் அதிகரிக்கும். எடுத்துக்காட்டாக, எஃகுத் தொழிலில் கூலிவிகிதம் அதிகரிக்கப்பட்டால் எஃகுவின் விலை அதிகரிக்கும். தொடர்ந்து எஃகைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் வாகனங்கள், இயந்திரங்களின் விலையும் அதிகரிக்கின்றன. வாகனங்களின் விலை அதிகரிப்

பதால், போக்குவரத்துச் செலவுகளும் உற்பத்திப் பொருள் களின் விலையும் அதிகரிக்கும். இவ்வாறே விவசாய இயந் திரங்களின் விலை அதிகரிப்பின், விவசாயப் பொருள்களின் விலையும் அதிகரிப்பதால், மூலப்பொருள்கள், நுகர்வுப் பொருள்கள் ஆகியவற்றின் விலைகளும் அதிகரிக்கின்றன. இவை யாவும் சேர்ந்து வாழ்க்கைச் செலவுகளை அதிகரிப்ப தால், கூலிவிகிதத்தை மீண்டும் உயர்த்துவது அவசிய மாகின்றது. அதாவது பணவீக்கம் ஒருமுறை தோற்றுவிக்கப் பட்டுவிட்டால், அது தொடர்ந்து செயல்பட்டு, பல்வேறு உற்பத்தித்துறைகளுக்கும் பரவி விடும்.

முடிவுரை : பணவீக்கப் போக்கு தோன்றுவதற்கு அடிப் படைக் காரணம் மிகையான தேவையா அல்லது உற்பத்திச் செலவின் அதிகரிப்பா என்பதைத் தெளிவாக வரையறுக்க இயலாது. மிகையான தேவையும் உற்பத்திச் செலவு அதிகரிப்பும் கலந்தே பணவீக்கத்தைத் தோற்றுவிப்பதாகவே நாம் கொள்ளலாம். ஏனெனில், பணவீக்கப் போக்கிற்கு உற்பத்தியாளர்களும், தொழிலாளர்களுமே பொதுவாகக் காரணமாகின்றனர். விலைமட்டம் தேவையால் உந்தப்படும் போது தமது ஊதியத்தைப் பெருக்கிக்கொள்ள விரும்பும் தொழிலாளர்கள் அத்தகைய முயற்சியில் ஈடுபடுகின்றனர். அவ்வாறே ஊதியம் உயர்த்தப்படும்பொழுது முன்னர்ப் பெற்றிருந்த அளவு இலாபத்தைப் பெற விரும்பும் தொழில் உரிமையாளர்கள் விலைமட்டத்தை உயர்த்திவிடுவர். அதா வது, தேவையால் உந்தப்பட்ட பணவீக்கம், உற்பத்திச் செல வால் உந்தப்பட்ட பணவீக்கமாகி, தேவையால் உந்தப்பட்ட பணவீக்கத்தைத் தூண்டிவிடுகின்றது. எனவே, பணவீக்க மானது, தேவையால் உந்தப்படுவதா அல்லது உற்பத்திச் செல வால் உந்தப்படுவதா என்பதைத் தெளிவாக வரையறுக்க இய லாது. தேவையால் உந்தப்பட்ட பணவீக்கத்தைக்காட்டிலும், உற்பத்திச் செலவால் உந்தப்பட்ட பணவீக்கத்தைக் கட்டுப் படுத்துவது கடினமாகும். மக்களிடையில் நிலவும் மிகையான பணத்தேவையைத் தவிர்க்கும் வகையில் கட்டுப்பாடான பணவியல் நடவடிக்கைகளையும், நிதியியல் நடவடிக்கை களையும் மேற்கொள்வதன்மூலம் தேவையால் உந்தப்பட்ட பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால், செலவால் உந்தப்பட்ட பணவீக்கத்தை நேரிடை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன்மூலம் கட்டுப்படுத்த இயலாது. அதைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின், தொழில் உரிமையாளர்கள்

தமது இலாபக் கொள்கையையும் வெகுவாகக் கட்டுப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

பணவீக்க இடைவெளி[1]

'பணவீக்க இடைவெளி' எனும் இக் கருத்தை அளித்தவர் ஜே.எம். கெயின்சு ஆவார். 'அடிப்படை விலையில் கிடைக்கக் கூடிய உற்பத்தியைக்காட்டிலும் எதிர்பார்க்கும் செலவு அதிகமாக' இருப்பதையே இக் கருத்து குறிப்பிடுகின்றது.

போர்க்காலங்களில் செலவுகள் அதிகமாக இருப்பதால், வருமானமும் அதிகமாக இருக்கும்; ஆனால் பொதுமக்கள் துய்ப்பதற்காகக் கிட்டும் பொருள்களின் அளவு குறைவாகவே இருக்கும். எனவே, பணவீக்க இடைவெளி தோன்றும். போர்க்காலங்களில் போர்த்தளவாடங்கள்மீதும், இராணுவத்தின்மீதும் போர் வெற்றியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட அரசு செலவிடும். அரசின் இத்தகையச் செலவுகளுடன் பொதுமக்களின் நுகர்வுச் செலவுகளும் சேர்ந்து, பொதுமக்களின் வருமானத்திற்குச் சமமாக இருக்கும். பொதுமக்களின் பண வருமானம் அதிகமாக இருப்பினும், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் அளவு குறைவாகவே இருக்கும். எனவே, பொதுமக்களுக்கு அளிக்கப்படும் பொருள்களின் அளவிற்கும் அவர்களுடைய பண வருமானத்திற்குமிடையே இடைவெளி தோன்றுகின்றது.

இந்தியா போன்ற திட்டமிட்டப் பொருளாதார வாழ்வை மேற்கொள்ளும் நாடுகளிலும் பணவீக்க இடைவெளி தோன்றக்கூடும். பல்வேறு திட்டங்களிலும் அரசு பெருமளவில் முதலீடு செய்வதால், பொதுமக்களின் வருமானம் மிகுந்திருக்கும். ஆனால், பெருந்திட்டங்கள் முதலீட்டிற்கும் உற்பத்திக்குமிடையேயுள்ள கால இடைவெளியின் காரணமாக உற்பத்திக் குறைவாகவே இருக்கும். பொதுமக்களின் வருமானம் அதிகமாகவும், உற்பத்தி அளவு குறைவாகவும் இருப்பதாலும் பணவீக்க இடைவெளி தோன்றக் கூடும்.

பணவீக்க இடைவெளியை ஒரு பட்டியலின் துணையுடன் நாம் அறியலாம் :

1.	நாட்டின் மொத்த வருமானம்	ரூ.	10000 கோடி
2.	வரியாகச் செலுத்தப்பட்ட தொகை	ரூ.	1000 கோடி

[1] The inflationary gap

3.	வரி செலுத்திய பின்னர், செலவிடப்படக்கூடிய[1] தொகை	ரூ.	9000 கோடி
4.	பொதுமக்களின் சேமிப்பு (10% எனும் அனுமானத்தில்)	ரூ.	900 கோடி
5.	செலவிடப்படக்கூடிய நிகரத் தொகை	ரூ.	8100 கோடி
6.	தேசீய உற்பத்தி	ரூ.	9000 கோடி
7.	போர்க் காரணங்களுக்கான ஒதுக்கீடு	ரூ.	2000 கோடி
8.	பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடிய பொருள்களின் மதிப்பு (6-7)	ரூ.	7000 கோடி
9.	பணவீக்க இடைவெளி (5-8)	ரூ.	1100 கோடி

மேற்காணும் பட்டியல் கற்பனையானதாயினும், பணவீக்க இடைவெளி தோன்றும் வகையை எளிதில் விளக்குவதாகும். மக்களிடம் உள்ள செலவிடப்படக்கூடிய தொகையும், மக்களுக்குக் கிடைக்கும் பொருள்களின் அளவும் சமமாக இருக்கும் வரையிலும் பணவீக்கம் ஏற்படுவதில்லை. ஆனால், மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பொருள்களின் அளவைக் காட்டிலும் அவர்களால் செலவிடப்படக்கூடிய தொகை அதிகமாக இருப்பின், அவ்வாறு அதிகமாக இருக்கும் அளவிற்குப் பணவீக்க இடைவெளி தோன்றுகின்றது.

பணவீக்க இடைவெளி குறைக்கப்படுவதற்கு (1) மக்களுடைய தன்னிச்சையான சேமிப்பு அதிகரிக்க வேண்டும். (2) மக்களிடம் உள்ள மிகையான வாங்குந்திறனைக் குறைக்கும் வகையில் வரி விதிப்புகள் அதிகரிக்கப்படுதல் வேண்டும். (3) மக்களிடம் உள்ள செலவிடப்படக்கூடிய வருமானத்திற்குச் சமமாக மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பொருள்களின் மதிப்பு (விலையேற்றத்தின்மூலம்) உயர்த்தப் படுதல் வேண்டும்.

மேற்காணும் மூன்று தீர்வு முறைகளில் முதலிரண்டு முறைகளை மட்டுமே திறமையான அரசாங்கம் தேர்ந்தெடுக்கும். மக்களிடையில் சேமிப்புப் பழக்கத்தை அதிகப் படுத்தியும், வரி விதிப்பை அதிகரித்தும் செயல்படுவதே நல்லரசுகளின் இயல்பாகும். திறமைக் குறைவான அரசுகள்

[1] Disposable

மட்டுமே விலையேற்றத்திற்கு வழி கோலுவதன்மூலம் வெளிப்படையான பணவீக்கத்திற்கு அடி கோலும்.



படம் 9

பணவீக்க இடைவெளிக் கருத்தை மேலேயுள்ள வரை படத்தின்மூலம் விளக்கலாம். வரைபடத்தில் கிடை அச்சு நாட்டின் வருமானத்தையும், செங்குத்து அச்சு நுகர்வையும் முதலீட்டையும் குறிப்பிடுகின்றன. 45° கோடு நுகர்வு = முதலீட்டுக் கோடு எனப்படும். அக் கோடு வருமானம் அதிகரிக்கும்பொழுது அதன் விளைவாக நுகர்வுச் செலவு அதிகரிக்கும் அளவைக் காட்டுகின்றது. நுகர்வுச் செலவு அதிகரித்தாலும், அல்லது குறைந்தாலும் நுகர்வுக்கோடு 45°-யில் அமையாமல் வேறுபடும். வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வும் முதலீடும் அதிகரிக்கும் அளவை நு+மு கோடு காட்டுகின்றது. நு+மு கோடு, நு=வ கோட்டை வெட்டும் புள்ளியே சமநிலை வருமானத்தைக் காட்டுகின்றது; அதாவது, தேசீய உற்பத்தி சமநிலையிலிருப்பதைக் காட்டு கின்றது. அரசோ அல்லது தனி நபரோ அல்லது அரசும் பொதுமக்களுமோ முன்பு செலவிட்டதைக்காட்டிலும் அதிக மாகச் செலவிடுவாராயின், ஒரு புதிய நுகர்வு மற்றும் முதலீட்டுக் கோடு வரையப்படும். வரைபடத்தில் அதிகரிக்கப்பட்ட நுகர்வு மற்றும் முதலீட்டை நு' + வ' கோடு காட்டுகின்றது. நுகர்வு, மற்றும் முதலீட்டுச் செலவுகள் அதிகரிக்கப்பட்டதால் புதிய சமநிலை தோன்றுகின்றது. ஆ வ' அல்லது வ' ச' புதிய சமநிலையைக் காட்டுகின்றது. புதுச் செலவுகளின் விளை வாக அதிகரிக்கப்பட்ட வருவாய், நாடு முழு வேலைமட்டம் எய்தியபொழுது நிலவிய தேசீய உற்பத்தியான ஆ வ-வைக்

காட்டிலும் மிகையாக உள்ளது. தேசீய உற்பத்தியைக்காட்டிலும் நுகர்வு, மற்றும் முதலீட்டுச் செலவு அதிகமாக இருக்கும் அளவே பணவீக்க இடைவெளி ஆகும். வரைபடத்தில் பணவீக்க இடைவெளி வ வ' ஆகும்.

பணவீக்க இடைவெளிக் கருத்தின் துணையுடன் பணவீக்கத்தின் தீவிரத்தைப் புள்ளி விவரங்கள் மூலம் மதிப்பிடலாம். இக் கருத்தின் துணையுடன் பணவீக்கக் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் அரசிறைக் கைக்கோள் வகிக்கும் முக்கிய இடத்தை, கெயின்சு சுட்டிக் காட்டுகின்றார். அரசு தேர்ந்தெடுக்க வேண்டிய சரியான பணவீக்கக் கட்டுப்பாட்டு நடவடிக்கை எஃது என்பதை அறியவும் இக் கருத்து உதவுகின்றது.

வளர்ச்சி குன்றிய நாடுகளில் பணவீக்கம்[1]

நாட்டின் உற்பத்தியைக்காட்டிலும் உறுதித் தேவை மிகையாக நிலவுவதாலேயே பணவீக்கம் தோன்றுகிறது. உறுதித் தேவைக்கும், உற்பத்திக்கும் இடையே நிலவும் இடைவெளிக்கு ஏற்பவே பணவீக்கப் போக்கும் அமையும். பொதுவாக, நாடு முழு வேலைமட்டம் எய்தியதற்குப் பின்னரே பணவீக்கம் தோன்றுமெனவும், வேலைமட்டம் நிறைவடையும் வரையில் உறுதித்தேவை அதிகரிக்கும்பொழுது வேலைமட்டம், வருமானம், உற்பத்தி ஆகியவை அதிகரிக்குமே தவிர, விலை மட்டம் அதிகரிப்பதில்லை எனவும் கருதப்படுகின்றது. அதாவது, நாட்டில் வேலையின்மைப் பிரச்சினையோ குறைவான வேலைமட்டமோ நிலவும்போது பணவீக்கம் தோன்றுவதில்லை என்பது கோட்பாடாகும். ஆனால், முழு வேலைமட்டம் எய்தாத நிலையில் பணவீக்கப் போக்கு தோன்றாது என்பது இதற்குப் பொருள் அன்று. நாட்டின் உற்பத்திச் சக்தியைப் போதுமான அளவில் பயன்படுத்திக்கொள்ளாத நாடுகளிலும், குறைவான அளவில் பயன்படுத்திக்கொள்ளும் நாடுகளிலும் பணவீக்கம் தோன்ற மாட்டாது என்று வரையறுக்க இயலாது. இதற்கு மாறாக, வேலைமட்டம் நிறைவெய்திய நாடுகளைக்காட்டிலும், வேலைமட்ட நிறைவு எய்தாத நாடுகளில் பணவீக்க விலைப்போக்கு அபரிமிதமாக அமையவும் கூடும்.

[1] Inflation in under-developed countries

நாடு முழு வேலைமட்டம் எய்தாத நிலையிலுங்கூடப் பொருள்கள் மற்றும் பணிகள் அளிப்பில் தூயநெகிழ்ச்சி[1] இல்லாவிடில் பணவீக்கம் தோன்றக் கூடும். அளிப்பு நெகிழ்ச்சி குறையுடையதாக இருப்பின், அத்துடன் உற்பத்திச் செலவை உயர்த்திவிடும் காரணங்களும் சேர்ந்து, நாடு முழு வேலைமட்டம் எய்துவதற்கு முன்னரும், தொடர்ச்சியான விலைமட்ட உயர்வைத் தோற்றுவிக்கக் கூடும். நாடு முழு வேலைமட்டம் எய்தாத நிலையிலும் கீழ்க்காணும் காரணங் களால் பணவீக்கம் தோன்றக்கூடும் என 'கெயின்சு' குறிப் பிட்டுள்ளார்:

(1) பண அளிப்பு மாறுதலடையும் விகிதத்திற்குச் சமமான விகிதத்தில் உறுதித் தேவையும் மாறுதலடையா விடின், பணவீக்கம் தோன்றும்.

(2) உற்பத்திச் சக்திகள் உற்பத்தியில் ஈடுபடும்போது குறைந்து செல்விளைவு விதி செயல்படுமாயின், இந் நிலை தோன்றும். உற்பத்திச் சக்திகள் தர வேறுபாடு உடையவை யாதலாலும், அவை பதிலிகளாகப் பயன்படாமையாலும் குறைந்து செல்விளைவு விதி செயல்படுகின்றது. இவ் விதி செயல்படும்போது மக்களின் வாங்குந்திறன் பெருகும் அளவிற்கு உற்பத்தி பெருகாமையால் விலைமட்டம் உயரக் கூடும்.

(3) உற்பத்திச் சக்திகள் ஒன்றுக்கொன்று முழுமையான பதிலியாக இல்லாமையால், நாட்டில் சில உற்பத்திச் சக்திகள் உற்பத்தியில் ஈடுபடாத நிலையிலேயே, சில பொருள்களின் அளிப்பு நெகிழ்ச்சியற்றும் போய்விடக் கூடும்.

(4) நாடு முழு வேலைமட்டம் எய்துவதற்கு முன்னரே கூலி விகிதம் அதிகரிக்கத் தொடங்கி விடின், விலைமட்டம் உயரக் கூடும்.

(5) இறுதி நிலை உற்பத்திச் செலவை நிர்ணயிக்கும் உற்பத்திக் காரணிகளின் ஊதியங்கள் சமமான விகிதத்தில் மாற்றமடையாவிடினும் இந் நிலையானது தோன்றக் கூடும்.

மேற்காணும் காரணங்களால் பணத்தின் அளிப்பு அதிகரிக் கும்போது, மொத்தப் பணத்தேவை அதிகரிப்பதற்குச் சமமாகப்

[1] Perfect elasticity of supply

பொருள்களின் அளிப்பு (நெகிழ்ச்சிக் குறைவால்) அதிகரிப்பதில்லை. முழு வேலைமட்டம் எய்தப்படாத நிலையிலும் இத்தகைய இக்கட்டுகள்[1] நிலவுவதால், அளிப்பானது பெருகுவதில்லையாதலால், பொருள்களின் இறுதிநிலை உற்பத்திச் செலவு அதிகரிக்கப்படுகின்றது. பொருளாதார அமைப்பின் பல்வேறு பகுதிகளிலும் இத்தகைய இக்கட்டுகள் நிலவுவதால், பணத்தின் அளவு அதிகரிக்கும்போது விலைமட்டமே அதிகரிக்கின்றதே தவிர, உற்பத்தி, வேலைமட்டம், வருமானம் ஆகியவை அதிகரிப்பதில்லை.

மேற்காணும் பொதுவான இக்கட்டுகளுடன் பின்தங்கிய நாடுகளில் காணப்படும் வேறு சிலவகை இக்கட்டுகளும் அளிப்பு நிகழ்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றன.

நிறை குறைந்த அங்காடிகள்: (1) பின் தங்கிய நாடுகளில் நிறை குறைந்த அங்காடிகள் நிலவுவதால், உற்பத்திக் காரணிகளிடையில் உத்தம ஒதுக்கீடு நிலவுவதில்லை. அதன் விளைவாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களும் உத்தம அளவில் பங்கீடு செய்யப்படுவதில்லை. அங்காடி நிலவரங்கள் பற்றிய போதிய விவரமின்மை, வாங்குவோரின் அறியாமை, உற்பத்திக்காரணிகளின் இடப்பெயர்ச்சியில் தடைகள் நிலவுவது, உற்பத்திக்காரணிகளைத் துல்லியமாகப் பகுக்க முடியாமை, அவற்றைப் பதிலீடு செய்ய முடியாமை, கடுமையான கட்டுப்பாடுகள் நிறைந்த சமுதாய அமைப்பு, போதிய சிறப்புத் தேர்ச்சியின்மை ஆகிய இக்கட்டுகளின் விளைவாக உற்பத்திச் சக்திகள் உத்தம அளவில் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. அதன் விளைவாகப் பொருள்களின் அளிப்பு நெகிழ்ச்சியற்றதாகவோ அல்லது நெகிழ்ச்சி குறைந்ததாகவோ காணப்படுகின்றது.

(2) முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் வேலையின்மைப் பிரச்சினை நிலவும்போது தேவை அதிகமாக இருப்பதன் விளைவாக உற்பத்திப் பெருக்கத்திற்கு வாய்ப்பு உண்டு எனவும், ஆனால் பெருமளவு மறைவான வேலையின்மையும், குறைவான வேலைமட்டத்தையும் கொண்டுள்ள இந்தியா போன்ற நாடுகளில் இதற்கு வாய்ப்பில்லை எனவும் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ்[2] கருதுகின்றார்.

[1] Bottle necks
[2] Dr. V. K. R. V. Rao

உறுதித் தேவையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப வேலையின்மைப் பிரச்சினையில் மாற்றங்கள் ஏற்படும். ஆனால், அந்த அளவிற்கு 'மறைவான வேலையின்மை'யில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. உறுதித்தேவையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மறைவான வேலையின்மையில் மாற்றங்கள் ஏற்படாத அளவிற்கு அளிப்பும் மாற்றமடைவதில்லை. ஆகவே, பின்தங்கிய நாடுகளில் பணத்தின் அளவு அதிகரிப்பின் மொத்தத் தேவை அதிகரிப்பதால் விலைமட்டம் அதிகரிக்கும்.

(3) பின்தங்கிய நாட்டில் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் உயர்ந்து காணப்படுவதாலும், அளிப்பு அதிகரிக்கப்படுவது தடைபடுகின்றது. டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் குறிப்பிடுமாறு, இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் உயர்ந்து காணப்படின், உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் பெரும்பகுதி (குறிப்பாக விவசாயத் துறையில்) உற்பத்தியாளர்களாலேயே நுகரப்படுவதால், அங்காடியில் அளிப்பு குறைவாக இருக்கும். ஆகவே, விலைமட்டமும் உயர்ந்து காணப்படும்.

மேலும் பின்தங்கிய நாடுகள் உற்பத்தி செய்யும் முதன்மைப் பொருள்களில் பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதாவது, உள்நாட்டு நுகர்ச்சிக்கு ஏற்ப அளிப்பு அமைவதில்லை. இதன் விளைவாக விலைமட்டமும் உயரக் கூடும். மேலும் ஏற்றுமதிமூலம் சம்பாதிக்கப்படும் வருவாய், இறக்குமதிக்காகப் பயன்படுத்தப்படாமல் உள்நாட்டுப் பொருள்களின்மீது செலவிடப்படுமாயின், விலைமட்ட உயர்வின் தீவிரம் மேலும் அதிகமாகும்.

பின்தங்கிய நாடுகளில் வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபடும் அரசு தனது முதலீட்டுச் செலவை அதிகரிக்கக் கூடும். நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் போதிய ஆர்வம் காட்டாமல், சமுதாயத்திற்குப் பயன்படும் தொழில்கள், கனரகத் தொழில்கள் போன்றவற்றில் முதலீடு செய்வதால் முடிவில் நுகர்வுப் பொருள்களுக்கான மொத்தத் தேவை அதிகரிக்கும். அதன் விளைவாக விலைமட்டம் அதிகரித்துப் பணவீக்கப் போக்கு உருவாகும். அரசாங்க முதலீட்டிற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்குக் கூடுதலான பண உற்பத்தியில் அரசு ஈடுபடுமாயின், பிரச்சினை இன்னும் தீவிரமடையும்.

பின்தங்கிய நாடுகளில் நாட்டின் அளிப்பைக்காட்டிலும் உறுதித்தேவை மிகையாக இருப்பதால், ஒவ்வோர் உற்பத்தித் துறையிலும் அளிப்பைக்காட்டிலும் உறுதித்தேவை மிகையாக இருப்பதால் பணவீக்கம் தோன்றுகின்றது. பின்தங்கிய நாட்டு மக்கள், தமது வாழ்க்கைத்தரத்தை உடனடியாக உயர்த்திக் கொள்ள விரும்புவதன் விளைவாகவே விலைமட்டம் அதிகரிக்கின்றது.

பின்தங்கிய நாடுகளில் பணத்தின் அளவு அதிகரிக்கப்படுவதால்தான் இந் நிலை தோன்றும். வெகு விரைவில் பொருளாதார முன்னேற்றமடைய விரும்பும் அரசு தனது சக்திக்கும் மீறிய வகையில் பெருந்திட்டங்களை மேற்கொள்ளுமாயின், பல்வேறு உற்பத்தித்துறைகளும் சம அளவில் வளர்ச்சியடைவதில்லை. இதன் விளைவாகப் பணவீக்கம் மேலும் ஊக்குவிக்கப்படும் 'போகூழின்'[1] விளைவாகத் தனிநபர் வருமானம் குறைந்து காணப்படும் நாடுகளில் அரசு தேவையான வருமானத்தை வரிவிதிப்பின் மூலமும் பெற முடியாதாகையால், பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொள்கின்றன.

மேற்கூறியவற்றால் வளர்ச்சி குன்றிய நாடுகளில் விரும்பிய அளவிற்கு விரைவில் முன்னேற்றமடைய முயலும் அரசு மிகையாக முதலீடு செய்வதன் விளைவாகவே பணவீக்கம் தோன்றுவது தெளிவாகும்.

பணவீக்கமும் பொருளாதார வளர்ச்சியும்[2] :

பணவீக்கத்தின் விளைவாகப் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுமா அல்லது பயனடையுமா என்பது பற்றிப் பலத்த கருத்து வேறுபாடு நிலவுகின்றது. கெயின்சு உள்ளிட்ட பொருளாதார வல்லுநர்களில் ஒரு பிரிவினர் பொருளாதார வளர்ச்சிக்குப் பணவீக்கம் ஏதேனும் ஒரு வகையில் உதவுவதாகவே கருதுகின்றனர். பொருளாதார வளர்ச்சிக்குப் பணவீக்கம் உதவுவதாகக் கருதுவோர் தம் கருத்திற்கு ஆதரவாக இருவித வாதங்களை அளிக்கின்றனர்.

பணவீக்கம் தோன்றுவதால் நாட்டின் செல்வமும் வருமானமும் மறுபகிர்விற்கு[3] உள்ளாகின்றன. மறுபகிர்வின்

[1] Unfortunately
[2] Inflation and Economic Development
[3] Redistribution

விளைவாக, இலாபம் ஈட்டும் தொழில் உரிமையாளர்களின் வருவாய் அதிகரிக்கின்றது. பொதுவாக, செல்வந்தர்களிடையில் இறுதிநிலைச் சேமிப்பு நாட்டமும்[1], குறைவான வருமான முடையோரிடையில் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டமும்[2] அதிக மாக இருப்பதால், செல்வம், வருமானம் ஆகியவற்றின் மறு பகிர்வின் விளைவாகச் சமுதாயத்தின் சேமிப்பு விகிதம் அதிகரிக்கும்.

இவ்வாறு கூடுதலாகச் சேமிக்கப்பட்ட தொகை இலாப கரமான தொழில்களில் முதலீடு செய்யப்படுமாயின், நாட்டில் வேலைமட்டம், உற்பத்தி, வருமானம் ஆகியவையும் அதிகரிக்கும். பணவீக்கத்தால் நாட்டு மக்களின் வரு மானத்தில் இலாபத்தின் விகிதம் அதிகரிக்கும். இலாபத்தின் விகிதம் அதிகரிப்பதால், தொழில் உரிமையாளர்கள் கடன் பெற்று முதலீடு செய்வதைத் தவிர்த்துத் தமது இலாபத்தி லிருந்து சேமித்து முதலீடு செய்யும் அளவிற்கு இலாபம் அதிகரிக்கும். பணவீக்கக் காலத்தில் விலைமட்டம் அதிகரிப் பதால் வணிகர்களிடையில் ஆர்வ நோக்கு மிளிர்கின்றது. அதைத் தொடர்ந்து வேலைமட்டம், உற்பத்தி, வருவாய் ஆகியவையும் அதிகரிக்கும் என்பதால் மிதமான பணவீக்கம் நாட்டிற்கு நன்மை பயப்பதாகும் என்று கெயின்சு கருது கின்றார். சுருக்கமாக, விலைமட்ட உயர்வு இலாபத்தை அதிகரிக்கும் என்பதாலும், இலாப விகிதம் அதிகரிப்பதால் வேலைமட்டமும், உற்பத்தியும் பெருக்கமடையும் என்ப தாலும் பணவீக்கத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என்று கருதப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சி அடைவதற்குப் பணவீக்கம் பயன் படும் என்னும் கருத்திற்கு ஆதரவாகக் கீழே காணும் மற்றொரு வாதமும் அளிக்கப்படுகின்றது:

பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளில் வருமானமும் சேமிப்பும் குறைவாகவே இருப்பதால் தேவைப்படும் அள விற்கு வரி விதிக்கவும், கடன் பெறவும் அந் நாட்டு அரசால் இயலாது. அத்தகைய நாடுகளில் அரசு பற்றாக்குறை நிதி யாக்கத்தை[3] மேற்கொண்டு பணத்தின் அளிப்பைப் பெருக் கினால் பணவீக்கப் போக்கு தோன்றுமாயினும், அம் முயற்சி

[1] Marginal propensity to save
[2] Marginal propensity to consume
[3] Deficit financing

பொருளாதார வளர்ச்சியடைய உதவும். போதிய நிதியற்ற நிலையில் பணத்தின் அளிப்பை அதிகரித்து, அவ்வாறு அதிகரிக்கப்பட்ட பணத்தை வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியடைய முடியும். போர்க்காலங்களில் மேற்கொள்ளப்படும் பற்றாக்குறை நிதி யாக்கங்களைப் போலின்றிப் பொருளாதார வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் பற்றாக்குறை நிதியாக்கங்களால் நற் பயன்களே கிட்டும். ஏனெனில், அது நாட்டின் வளர்ச்சியைத் தடைப்படுத்தக் கூடிய இக்கட்டுகளைத் தவிர்த்துவிடும்.

உற்பத்தி மிக்க துறைகளில் முதலீடு செய்வதற்காகப் பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொள்ளும்பொழுது ஏற் படும் பணவீக்கமானது தானே மறையக்கூடியதாகும் என்று பேராசிரியர் ஆர்தர் லூயிஸ்[1] கருதுகின்றார். எவ்வாறெனில், பற்றாக்குறை நிதியாக்கத்தின் மூலம் உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்யப்படும்பொழுது தொடக்கக் காலத்தில் பண வீக்கப் போக்கு நிலவுமாயின், அத் துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் அங்காடிக்கு வரும் காலத்தில் அளிப்பு அதிகரிப்பதால் பணவீக்கப் போக்கு மறைந்துவிடும்.

மேலும், பின்தங்கிய நாடுகளில் முதலீடு செய்யும் பழக்கம் அதிக அளவில் காணப்படுவதில்லை. அத்தகைய நாடுகளில் மக்களுடைய நிகழ்காலச் சேமிப்பில் கணிசமானப் பகுதி முதலீடு செய்யப்படாமல் பணவடிவில் முடங்கிக் கிடக்கும். எனவே, பற்றாக்குறை நிதியாக்கத்தின்மூலம் பணத்தின் அளவு அதிகரிப்பதாலும், அதில் கணிசமான பகுதி பதுக்கப்படுவ தாலும் பணவீக்கம் தோன்றுவதில்லை. 'பொருளாதார வளர்ச்சிப்போக்கில் பணவீக்கத்தைத் தவிர்க்க இயலாது' எனும் கருத்தைத் திட்டமாக அவர் மறுக்கிறார். பணவீக் கத்தின் மூலம் வளர்ச்சியடைய முடியும் என்பதற்கு ஆதரவாகக் கூறப்படும் வாதங்களில் பொருள் ஏதுமில்லை என்றும் அவர் கருதுகின்றார். பணவீக்கத்தால் மக்களுடைய செல்வமும், வருமானமும் மறுபகிர்விற்கு உள்ளாவதால், சில நன்மைகள் முற்காலத்தில் ஏற்பட்டவை உண்மைதான் எனினும், இத் தகைய நன்மைகள் என்றுமே ஏற்படக் கூடியவை அன்று என்பது அவர் கருத்தாகும். திட்டமிட்டு அதற்கேற்பச் செயல் படும் தற்காலத்தில் பணவீக்கத்தால் பயனடையவியலாது என்றும் அவர் கருதுகின்றார். ஏனெனில், அரசு திட்டமிட்டு

[1] Arthur Lewis

இத்தகைய பணவீக்கத்தைத் தோற்றுவித்தால் பொருளாதார வளர்ச்சி கிட்டுவதற்குப் பதிலாக மிகையான பணவீக்கமே தோன்றக்கூடும். அரசு திட்டமிட்ட அளவிற்குப் பண வீக்கத்தைத் தோற்றுவிக்கும்பொழுது பணவீக்கத்தின் அளவைப் பொதுமக்களும் அறிந்துகொள்வதால், அவர்கள் அதற்கு ஏற்பத் தம்மை மாற்றி அமைத்துக்கொள்வார்கள். அதன் விளைவாகப் பணவீக்கம், வருமானம், மற்றும் செல்வப் பகிர்வைப் பாதிப்பதில்லை. எதிர்பாராதவிதமாகப் பணவீக்கம் தோன்றிவிடின் வருமானப் பகிர்வும், செல்வப் பகிர்வும் பாதிக்கப்படக் கூடும். எடுத்துக்காட்டாக, அரசு, ஆண்டிற்கு 3 சத வீதம் பணவீக்கத்தைத் தோற்றுவிப்பதாக வைத்துக்கொள் வோம். உடனே பொதுமக்களும் தம்மை மூன்று சதவீதம் மாற்றியமைத்துக்கொள்வாராயின்,செல்வப்பகிர்வும், வருமானப் பகிர்வும் பாதிக்கப்படுவதில்லை. பணவீக்கத்தால் பயனடைய அரசு விரும்பிடின், பொதுமக்கள் தம்மை மாற்றியமைத்துக் கொண்டிருக்கும் அதிகமான விகிதத்தில் பணவீக்கத்தைத் தோற்றுவிக்க வேண்டும். ஆனால் பொதுமக்களும், இப் புதிய விகிதத்திற்கு ஏற்பத் தம்மை மாற்றியமைத்துக்கொள்ள முடியும் அல்லவா? அரசு பணவீக்கத்தின் விகிதத்தை அதி கரிக்கும் ஒவ்வொரு முறையும் மக்கள் தம்மை மாற்றியமைத்துக் கொள்வாராயின், முடிவில் மிகையான பணவீக்கம் தோன்றுமே தவிர, பொருளாதார வளர்ச்சி கிட்டுவதற்கில்லை.

விலைமட்ட உயர்வு எதிர்பாராததாகவும், நிர்ணயிக்க இய லாததாகவும் இருந்தால்தான் பணவீக்கத்தைப் பயன்படுத்தி நாட்டின் முதலாக்கத்தைப் பெருக்க முடியுமெனப் பேராசிரியர் ராக்னார் நர்க்ஸ்[1] என்பவர் கூறுகின்றார். ஏனெனில், விலை மட்டம் உயருமென எதிர்பார்க்கப்படும்பொழுதும், விலை மட்ட உயர்வு நிச்சயமெனக் கருதப்படும்பொழுதும், பணத்தின் சுழல் வேகம் அதிகரிப்பதாலும், சேமிப்பு விகிதம் குறைவடை வதாலும் முதலாக்கத்தைப் பெருக்கும் கருவியாகப் பண வீக்கம் பயன்பட மாட்டாது. மேலும், பணவீக்கம் அங்காடி நிலவரங்களை மாற்றியமைப்பதன் மூலந்தான் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடுமே தவிர, உற்பத்திப் பெருக்கத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதில்லை. ஏனெனில், பணவீக்கத்தின் விளைவாக, ரொக்கப் பணத்தின் மெய்யான மதிப்பு குறைவடையும்; நிலங்கள் வாங்குவதில் முதலீடு அதிகரிக்கும். ஏற்றுமதித் துறையில் முதலீடு குறையும்; பண

[1] Prof. Ragnar Nurkse

வீக்க விலைப் போக்கால் ஊக வாணிபமும், பொருள்களைப் பதுக்குவதும் அதிகரிக்கும்.

வரி விதிப்பு, கடன் பெறுதல் ஆகிய இரண்டிலுமிருந்து வேறுபட்ட வருவாய் மூலமாகப் பற்றாக்குறை நிதியாக்கம் அல்லது பணத்தை அச்சிடுதலைக் கொள்வது தவறெனவும் மில்டன் ஃப்ரீட்மென்[1] கருதுகிறார். ஏனெனில், பணத்தை அச்சிடுவதும் ஒருவகைக் கடனெனவும், ஒரு வகை வரி விதிப்பு எனவும் அவர் குறிப்பிடுகின்றார். நாட்டில் பணத்தை அச்சிட்டு அதிகரிப்பதன் விளைவாக விலைமட்டம் அதிகரிக்காத வரையிலும் அரசாங்கம் கடன் பெற்றே தனது நிதியைப் பெருக்கிக்கொள்கின்றது. ஏனெனில், அவ்வாறு புழக்கத்தில் விடப்படும் காகிதப் பணத்தை அரசு வெளியிடும் வட்டியில்லாக் கடன் பத்திரங்களாகவே கருத வேண்டும். அத்தகையப் பணத்தை அதிக அளவில் வைத்துக்கொள்ளப் பொதுமக்கள் முன்வந்தால், அவர்கள் வட்டி விகிதம் எதுவுமின்றி அரசிற்குக் கடன் அளிக்க முன்வருவதாகவே நாம் கொள்ள வேண்டும். பணத்தின் அளவு அதிகரிக்கப்பட்டதன் விளைவாக விலைமட்டம் அதிகரிக்குமாயின், அதை ரொக்க இருப்பின்மீது விதிக்கப்படும் ஒருவித வரி விதிப்பாகவே நாம் கருத வேண்டும். விலைமட்டம் உயரும் அளவிற்கு ரொக்கப் பணத்தின் வாங்குந்திறன் வீழ்ச்சியடைவதால், ஒரு வகை வரி விதிப்பே ஆகும். எனினும், வேறு சிலவகைப் பணவீக்கங்களைக்காட்டிலும் இத்தகைய பணவீக்கம் ஓரளவு உயர்ந்ததாகும்.

மேலும், பணவீக்கம் மக்களிடையில் சேமிப்புப் பழக்கத்தை நசிவுறச் செய்வதுடன் அவர்களிடையில் ஊதாரித்தனத்தையும், விரயமான வீண் செலவுகளில் ஈடுபடும் வழக்கத்தையும் தோற்றுவிக்கின்றது. பணவீக்க விகிதம் அதிகமாக இருக்குமாயின், நாட்டின் முதலாக்கம் பாதிக்கப்படுவதுடன் மூலதன வாயில்களும் பாதிக்கப்படவும், உள்நாட்டு மூலதனம் வெளிநாடுகளுக்கு இடம் பெயரவும் வாய்ப்புகள் உண்டு.

பொருளாதார வளர்ச்சியின் விளைவாகவும் பணவீக்கம் தோன்றக் கூடும் எனப் பொருளாதார அறிஞர்களுள் பெரும் பகுதியினர் கருதுகின்றனர். பொருளாதார வளர்ச்சியடையும் போது பணவீக்கம் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது

[1] Milton Friedman

என்றும் அவர்கள் கருதுகின்றனர். குறைந்தபட்சம் பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளின் ஆரம்பக்கட்டத்தில் நுகர்வோரின் பண வருவாய், நுகர்வுப் பண்டங்களின் அளிப்பைக் காட்டிலும் மிகையாக அதிகரிப்பதால், விலைமட்டம் உயர்ந்து காணப்படும்; அதாவது, பணவீக்கப் போக்கு தோன்றும். குறிப்பாக, முதலீட்டைக்காட்டிலும் மெய்யான சேமிப்பு குறைவாக இருக்கும்போது, பணவீக்கம் தோன்றுவது நிச்சயமாகும்.

பொருளாதார அறிஞர்களில் மற்றொரு பிரிவினர் மேற்காணும் கருத்துகளை மறுப்பதுடன் பொருளாதார வளர்ச்சிக்குப் பணவீக்கத்தால் ஊறு விளைவதாகவும் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, மில்டன் ஃப்ரீட்மென், 'பணவீக்கத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சி'யடைய முடியாதெனக் கருதுகின்றார். பணவீக்கக் காலத்தில் உற்பத்திப் பெருக்கத்திற்குச் சாதகமாகத் தொழில் முயல்வோரின் போக்கும் நடவடிக்கைகளும் எப்போதுமே அமைவதில்லை; சில நேரங்களில் மாறுபடக் கூடும். எடுத்துக்காட்டாக, உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவாமல் ஊக வாணிப நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளக் கூடும். மேலும், பணவீக்கத்தின் விளைவாக ஏற்றுமதிப் பொருள்களுக்கு அயல்நாட்டுத் தேவை வீழ்ச்சியடையக் கூடும். அதன் விளைவாக ஏற்றுமதித் தொழில்களில் வேலைமட்டமும் உற்பத்தியும் பாதிக்கப்படவும், அவ்விளைவுகள் மற்றத் தொழில்களுக்கு விரைவாகவும் பரவக் கூடும்.

மேற்கூறியவற்றால் பொருளாதாரச் சிக்கல்களுக்கு ஏற்ற பரிகாரம் பணவீக்கம் அன்று என்பது தெளிவாகும். பணவீக்கம் தீமை பயப்பது என்பதால், அதைத் தடுப்பதே சமுதாய நலனுக்கு உகந்ததாகும்.

பணவீக்கத்தின் வகைகள்

1. தவழும், நடக்கும், ஓடும், தாவும் பணவீக்கங்கள்[1] : விலைமட்டம் உயர்வதன் வேகத்தை அடிப்படையாகக்கொண்டு (1) தவழும் பணவீக்கம், (2) நடக்கும் பணவீக்கம், (3) ஓடும் பணவீக்கம், (4) தாவும் பணவீக்கம் என்று பணவீக்கத்தை வகைப்படுத்தலாம். இவை ஒவ்வொன்றிலும் விலைமட்ட உயர்வின் வேகம் வேறுபடுகிறது.

[1] Creeping, walking, running and galloping inflations

(1) தவழும் பணவீக்கம்: மிக மேலோட்டமான விலை மட்ட உயர்வைத் தவழும் பணவீக்கம் எனலாம். விலைமட்ட உயர்வு மிகவும் மேலோட்டமாக இருப்பதால், இத்தகையப் பணவீக்கத்தால் பெரும் விளைவுகள் ஏதும் ஏற்படமாட்டாது என்று கருதுகின்றனர். நாட்டின் பொருளாதாரம் தேக்க நிலையிலிருந்து விடுபடுவதற்கு விலைமட்ட உயர்வு அவசியமென்று அவர்கள் கருதுகின்றனர். ஆயினும், பொருளாதார அறிஞர்களுள் மற்றொரு பிரிவினர் இக் கருத்தை மறுக்கின்றனர். ஏனெனில், தவழும் பணவீக்கம் ஒரு முறை தோன்றினால், காலப்போக்கில் தாவும் பணவீக்கம் தோன்றக் கூடும். சின்னஞ்சிறுக் குழந்தை தொடக்கத்தில் தவழ்கின்றது. எனினும், காலப்போக்கில் நடக்கவும், ஓடவும், தாவவும், குதிக்கவும் அறிந்துகொள்வதுபோலத் தவழும் பணவீக்கமும் நடக்கும் பணவீக்கமாகவும், ஓடும் பணவீக்கமாகவும், இறுதியில் தாவும் பணவீக்கமாகவும் மாறக்கூடும். எனவே, பணவீக்கதனைக் காலம் கடப்பதற்கு முன்னர் முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். ஒரு நாட்டில் விலைமட்டம் 10 ஆண்டுகளுக்கு 10 சதவிகிதத்திற்குக் குறைவாகவும், ஓர் ஆண்டிற்கு ஒரு சதவிகிதத்திற்குக் குறைவாகவும் அதிகரிக்குமாயின், அந் நாட்டில் தவழும் பணவீக்கம் நிலவுவதாகக் கொள்ளலாம். எனினும், ஒரு நாட்டில் விலைமட்டம் ஆண்டு ஒன்றிற்கு மூன்று சதவீதத்திற்கும் குறைவாக அமையுமாயின், அத்தகையப் பணவீக்கத்தால் கொடும் விளைவுகள் ஏதும் ஏற்படா. ஆகையால், அதனைத் தவழும் பணவீக்கமெனக் கொள்ளலாம் என்று கென்ட் என்பார் கருதுகின்றார்.

(2) நடக்கும் பணவீக்கம்: தவழும் பணவீக்கக் காலத்தில் விலைமட்டம் உயர்வதைக்காட்டிலும் அதிக விகிதத்தில் நடக்கும் பணவீக்கக் காலத்தில் விலைமட்டம் அதிகரிக்கும். தோராயமாக, 10 ஆண்டுகளுக்குள் விலைமட்டம் 30 முதல் 40 சதவிகிதத்திற்குள் அதிகரித்தாலும் அல்லது ஓர் ஆண்டில் 3 முதல் 4 சதவிகிதத்திற்குள் அதிகரித்தாலும் அதனை நடக்கும் பணவீக்கமாகக் கொள்ளலாம். எனினும், நடக்கும் பணவீக்கம், ஓடும் பணவீக்கம், தாவும் பணவீக்கம் ஆகியவற்றின் முன்னறிவிப்பாகும்.

(3) ஓடும் பணவீக்கம்: விலைமட்டம் வெகுவேகமாக அதிகரிக்கும்போது ஓடும் பணவீக்கம் தோன்றுகிறது. ஓடும் பணவீக்கம் நிலவும் காலத்தில் விலைமட்டம் 10 ஆண்டுக்

காலத்திற்குள் 100 சதவீதத்தைக்காட்டிலும் மிகையாக அதிகரிக்கும். அதாவது, ஒவ்வோர் ஆண்டிலும் விலைமட்ட உயர்வு 10 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கும்.

(4) தாவும் பணவீக்கம்: மிகையான பணவீக்கம் நிலவும் காலத்தில் விலைமட்டம் வரம்பின்றி ஒவ்வொரு நொடியும் அதிகரிக்கும். ஆகவே, விலைமட்ட உயர்வு விகிதத்தைக் கணிப்பது இயலாததாகும். ஓர் ஆண்டின் விலை மட்டம் 100% அதிகமாக உயர்வடையுமாயின், தாவும் பண வீக்கம் நிலவுவதாகக் கொள்ளலாம். முதல் உலகப் போருக்குப் பின்னர் செர்மனியில் நிலவிய பணவீக்கம் இத்தகையதாகும்.

மேற்காணும் நான்கு வகைப் பணவீக்கக் காலங்களிலும் நான்கு வகைப் பணவீக்கங்களிடையிலுள்ள வேறுபாடு களைக் கீழ்க்காணும் வரைபடம் விளக்கும்:



படம் 10

1. தவழும் பணவீக்கம்; 2. நடக்கும் பணவீக்கம்; 3. ஓடும் பணவீக்கம்; 4. மிகையான (தாவும்) பணவீக்கம்.

2. மிகையான, உற்பத்திச்செலவு, பற்றாக்குறை, பறக்கும் பணவீக்கங்கள்[1]: பணத்தின் அளவு அதிகரிப்பது,

[1] Excessive, cost. deficit and flight inflations

பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான தேவை அதிகரிப்பது ஆகியவற்றிற்கான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு (1) மிகையான பண அளிப்பால் ஏற்படும் பண வீக்கம், (2) உற்பத்திச் செலவால் உந்தப்பட்ட பணவீக்கம், (3) பற்றாக்குறை நிதியாக்கத்தால் ஏற்படும் பணவீக்கம், (4) பறக்கும் பணவீக்கம் எனப் பணவீக்கத்தை வகைப் படுத்தலாம்.

(1) மிகையான பண அளிப்பால் ஏற்படும் பண வீக்கம் : நாட்டின் பண்டங்கள் மற்றும் பணிகள் அளிப்பைக் காட்டிலும் மிகையாகப் பணம் வெளியிடப்படுவதால் ஏற்படும் பணவீக்கத்தை 'மிகையான பண அளிப்பால் ஏற்படும் பண வீக்கம்' எனலாம். பழைமையான பண அளவுக்கோட் பாட்டின்படி, தேசிய உற்பத்தியைக்காட்டிலும் மிகையாகப் பணம் வெளியிடப்பட்டாலும் அல்லது பண அளிப்பு அதிகரிப்பதன் விளைவாக நாட்டின் மெய்யான வருவாயைக் காட்டிலும் மிகையாகப் பணவருவாய் அமைந்தாலும் பண வீக்கம் தோன்றும். இத்தகைய பணவீக்கம் வாணிபச்சூழல் களுடன் தொடர்பு கொண்டவை என்றும், பணவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் இதனைக் கட்டுப் படுத்த முடியும் எனவும் கருதப்படுகின்றது.

(2) உற்பத்திச் செலவால் உந்தப்பட்ட பணவீக்கம்: பொருள்களின் உற்பத்திச் செலவு அதிகரிப்பதன் விளை வாகப் பொருள்களின் விலைமட்டமும் உயரக் கூடும். உற்பத்திக் காரணிகளுக்கான ஊதியம் (குறிப்பாகக் கூலி விகிதம்) அதிகரிப்பதன் விளைவாகப் பொருள்களின் இறுதி நிலை உற்பத்திச் செலவு அதிகரிக்கும். அதன் விளைவாகப் பொருள்களின் விலைமட்டமும் அதிகரிப்பதால், இத்தகைய விலைமட்ட உயர்வு, உற்பத்திச் செலவால் உந்தப்பட்டப் பணவீக்கம் எனப்படும். பொதுவான வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்குமாயின், வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண் அதிகரிக்கும். வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பதைச் சரிக் கட்டுவதற்காகத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோருவர். தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கும் உற்பத்தி யாளர்கள், அதை ஈடுசெய்வதற்குப் பொருள்களின் விலையை உயர்த்துவர். இதன் விளைவாக வாழ்க்கைத்தரக் குறியீட் டெண் மீண்டும் அதிகரிப்பதால், தொழிலாளர்கள் மீண்டும் ஊதிய உயர்வு கோருவர். இவ்வாறு உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பதால், விலைமட்டம் உயர்வதை உற்பத்திச் செல

வால் உந்தப்பட்ட பணவீக்கம் எனலாம். இத்தகைய பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பணவியல் நடவடிக் கைகள் மட்டுமே போதுமானவை அல்ல.

(3) பற்றாக்குறை நிதியாக்கத்தால் ஏற்படும் பண வீக்கம்: பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொள்ளும் அரசு, கூடுதலாகப் பணவீக்கத்தைத் தோற்றுவிப்பதால், மக்க ளுடைய வாங்குந்திறன் அதிகரிக்கும். அதன் விளைவாக விலைமட்டமும் அதிகரிக்கும். திட்டமிட்டு முன்னேற்றமடை வதற்கு முயலும் அரசுகள் போதிய மூலதனமில்லாவிடினும், பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொண்டு, பெரும் திட்டங் களில் முதலீடு செய்யும்பொழுது, மக்களுடைய வாங்குந்திறன் அதிகரிக்கும். ஆனால், அதற்கு ஏற்ப நுகர்வுப் பொருள் களின் உற்பத்தி அதிகரிப்பதில்லையாதலால், பணவீக்கம் தோன்றும்.

(4) பறக்கும் பணவீக்கம்: அரசு தொடர்ந்து பற்றாக் குறை நிதியாக்கத்தைப் பெருமளவில் மேற்கொள்ளுவதன் விளைவாகப் பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடையும். பணத்தின் மதிப்பு நொடிக்கு நொடி வீழ்ச்சியடைவதால் மக்கள் ரொக்கப் பணமாக வைத்திருப்பதைத் தவிர்க்க முயல்வர். அதாவது பணத்திலிருந்து 'பறக்க'—விடுபட விரும்புவார்கள். இத் தகைய பணவீக்கம் பறக்கும் பணவீக்கம் எனப்படும்.

3. போர்க்கால, போர்ப் பிற்கால, அமைதிக்காலப் பணவீக்கங்கள்[1]: பணவீக்கம் தோன்றும் காலத்தை அடிப் படையாகக்கொண்டு பணவீக்கத்தைப் (1) போர்க்காலப் பணவீக்கம், (2) போர்ப் பிற்காலப் பணவீக்கம், (3) அமைதிக் காலப் பணவீக்கம் என மூவகைப்படுத்தலாம்.

(1) போர்க்காலப் பணவீக்கம்: போர்க்காலங்களில் போர் வெற்றியே அரசின் முக்கியக் குறிக்கோளாகும். இக் குறிக்கோளை அடையும் வகையில் அரசு பெருமளவில் செல விடும். ஆனால், தேசிய உற்பத்தியில் பெரும்பகுதி போர்ச் செயல்களுக்காகப் பயன்படுத்தப்படுவதால், அங்காடியில் பொருள்களின் அளிப்பு குறையும். அரசுச் செலவு அதிகரிப்ப தாலும், அளிப்பு குறைவதாலும் தோன்றும் இத்தகைய பண வீக்கம் போர்க்காலப் பணவீக்கம் எனப்படும்.

[1] War, post-war and peace-time inflation

(2) போர்ப் பிற்காலப் பணவீக்கம்: இது, போர் முடிந்த பின்னர், போரின் விளைவாக நாட்டிற்குக் கிட்டும் பரிசாகும். போர் முடிந்தவுடன், உடனே போர்க்கால வரி விதிப்புகள் ரத்து செய்யப்படும்பொழுது மக்கள் வசம் இருக்கும் செலவிடப்படக்கூடிய வருமானம் அதிகரிப்பதால் பணவீக்கம் தோன்றும். இது, போர்ப் பிற்காலப் பணவீக்கம் எனப்படும்.

(3) அமைதிக்காலப் பணவீக்கம்: சாதாரணமான காலங்களில் ஏற்படும் பணவீக்கம் அமைதிக்காலப் பணவீக்கம் எனப்படும். அரசாங்கம் பெரும் திட்டங்களில் முதலீடு செய்வதன் விளைவாக இத்தகைய பணவீக்கம் ஏற்படும்.

4. பரவலான பணவீக்கமும். ஒழுங்கற்ற பணவீக்கமும்[1]: பணவீக்கம் பரவும் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு பணவீக்கத்தைப் பரவலான பணவீக்கம் எனவும், ஒழுங்கற்ற பணவீக்கம் எனவும் இரு வகைப்படுத்தலாம்.

(1) பரவலான பணவீக்கம்: ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் யாவற்றின் விலைமட்டமும் அதிகரிக்குமாயின் அதனை நாடு முழுமையும் வியாபித்துள்ள பணவீக்கம் அல்லது பரவலான பணவீக்கம் எனக் குறிப்பிடலாம். பொதுவிலைமட்டம் அதிகரிப்பதே பணவீக்கத்தின் பொதுவான இயல்பாகும்.

(2) ஒழுங்கற்ற பணவீக்கம்: ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளில் ஏதேனும் ஒரு சிலவற்றின் விலைமட்டம் அதிகரிக்கும்பொழுது, மற்றப் பொருள்களின் விலைமட்டம் மாறாமலிருக்குமாயின், ஒழுங்கற்ற பணவீக்கம் நிலவுவதாகக்கொள்ளலாம்.

5. வெளிப்படையான பணவீக்கமும் ஒடுக்கப்பட்ட பணவீக்கமும்[2]: பணவீக்க விலைப்போக்கு நிலவும்பொழுது அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஏற்பப் பணவீக்கம் வெளிப்படையானதாகவோ அல்லது ஒடுக்கப்பட்டதாகவோ அமையும்.

[1] Comprehensive inflation and sporadic inflation
[2] Open inflation and repressed inflation

(1) **வெளிப்படையான பணவீக்கம்:** பணவீக்க விலைப்போக்கு நிலவும்பொழுது அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எவ்வித எதிர் நடவடிக்கையையும் மேற்கொள்ளாமலிருப்பின், விலைமட்டம் தன்போக்கில் எவ்விதத் தடையுமின்றி அதிகரிக்கும். இத்தகைய வெளிப்படையான பணவீக்கம் நிலவும்பொழுது பொருள்கள் மற்றும் பணிகளின் பகிர்வை விலைமட்டமே நிர்ணயிக்கும். பொதுமக்களில் வாங்குந்திறன் உள்ளோரிடையில் மட்டுமே பொருள்கள் பகிர்ந்தளிக்கப்படும். அதாவது, வெளிப்படையான பணவீக்கம் நிலவும்பொழுது விலைமட்டமே பண்டங்கள் மற்றும் பணிகளின் பகிர்வை நிர்ணயிக்கின்றது. 1920-க்குப் பின்னர் செர்மனியில் நிலவிய பணவீக்கம் வெளிப்படையான பணவீக்கமாகும்.

(2) **ஒடுக்கப்பட்ட பணவீக்கம்:** பணவீக்க விலைப்போக்கைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமாயின், ஒடுக்கப்பட்டப் பணவீக்கம் நிலவும். பணவீக்க விலைப்போக்கு நிலவும்பொழுது அதைத் தற்காலிகமாகக் கட்டுப்படுத்துவதற்கு விலைக் கட்டுப்பாடு[1], பங்கீடு[2] போன்ற நேரடி நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். ஆயினும், எதிர்காலத்தில் இத்தகைய நேரடி நடவடிக்கைகள் இரத்து செய்யப்படும்பொழுது, விலைமட்டம் அதிகரிக்கும். போர்க்காலங்களில் விலைமட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், போர்ப் பிற்காலங்களில் இரத்து செய்யப்படும்பொழுது, முன்னர் ஒடுக்கப்பட்டிருந்த பணவீக்கம், வெளிப்படையான பணவீக்கமாக மாற்றமடையும். வெளிப்படையான பணவீக்கம் நிலவும்பொழுது, பண்டங்கள் மற்றும் பணிகளின் பகிர்வை விலைமட்டம் நிர்ணயிக்கின்றது. ஒடுக்கப்பட்டப் பணவீக்கம் நிலவும்பொழுது, பண்டங்கள் மற்றும் பணிகளின் பகிர்வை அரசின் நிர்வாகம் கட்டுப்படுத்துகின்றது. எனவே, ஒடுக்கப்பட்ட பணவீக்கம் நிலவும்பொழுது அரசின் தலையீடு நிலவும் என்பது வெளிப்படையாகும்.

மில்டன் ஃப்ரீட்மென்[3], ஜி. என். ஹால்ம்[4] போன்றோர் ஒடுக்கப்பட்டப் பணவீக்கம், வெளிப்படையான பணவீக்கம்

1 Price controls
2 Rationing
3 Milton Freidman
4 G. N. Halm

ஆகியவற்றுள் வெளிப்படையான பணவீக்கமே ஏற்றுக் கொள்ளக்கூடியதாகும் என்று கருதுகின்றனர். ஒடுக்கப்பட்டப் பணவீக்கம் நிலவும்பொழுது, கள்ளச் சந்தை, கட்டுப்பாடு, மற்றும் பங்கீட்டுத்துறை அலுவலர்களின் எதேச்சாதிகாரம், பொருளாதார நலனுக்குப் புறம்பான முறையில் பொருள் களின் உற்பத்தி, முதலீடு செய்வோர்க்கு ஏகபோக இலாபம் ஆகிய தீமைகள் ஏற்படுவதால், வெளிப்படையான பண வீக்கமே ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும்.

பணவீக்கத்தின் விளைவுகள் :

பணத்தின் அளவில் ஏற்படும் மாறுதல்கள் பணத்தின் மதிப்பை மாற்றியமைப்பதன்மூலம் சமுதாயத்தைப் பல்வேறு வகைகளிலும் பாதிக்கின்றது. பணவீக்கமும், பணவாட்டமும் சமுதாயத்தைப் பாதிப்பதிலிருந்து இவ்வுண்மையை நாம் உணரலாம். பணத்தின் மதிப்பு குறைவதால் ஏற்படும் பண வீக்கமும், பணத்தின் மதிப்பு அதிகரிப்பதால் ஏற்படும் பண வாட்டமும், சமுதாய அமைப்பையும், ஒழுக்கத்தையும், பண்பாட்டையும், பொருளாதார அமைப்பையும் பாதிக்கக் கூடியவை ஆகும்.

1. பொருளாதார விளைவுகள் : பொருளாதார அமைப் பில் குளறுபடிகளை ஏற்படுத்துவதன் மூலம் பணவீக்கம் நாட்டின் உற்பத்தியையும், வருமானப் பகிர்வையும் மாற்றி யமைக்கின்றது. அதாவது, உற்பத்தி வேகம் மாறுவதுடன், வருமானமும் செல்வமும் மறு பகிர்விற்கு உள்ளாக்கப்படு கின்றன.

நாடு முழு வேலைமட்டம் எய்தாத நிலையில் மிதமான விலைமட்ட உயர்வு அல்லது 'தவழும் பணவீக்கம்' நாட்டின் உற்பத்திச் சக்தியை அதிகரிக்கும் என்று கெயின்சு கருது கின்றார். தவழும் பணவீக்கம் நிலவும்பொழுது, உற்பத்திச் செலவைக்காட்டிலும் விலைமட்டம் அதிகமாகவிருப்பதால், இலாப விகிதம் அதிகமாகவிருக்கும். இலாப விகிதம் உயர்வ தால் கவரப்பட்ட உற்பத்தியாளர்கள் ஆர்வ நோக்குக் கடன் உற்பத்தி நடவடிக்கைகளில் துரிதகதியில் ஈடுபடுவதால், நாட்டில் வேலைமட்டமும், உற்பத்தியும், வருமானமும் பெருக்கமடையும். எனினும், இதற்கு ஓர் எல்லையுண்டு. நாடு முழு வேலைமட்டம் எய்திய பின்னரும் விலைமட்டம் உயரு மாயின், நாட்டின் மெய்யான வருமானம் குறைவடையும்.

ஆகவே, முழு வேலைமட்டம் எய்துவதற்கு முன்னர், தவழும் பணவீக்கத்தால் ஓரளவு கொடுமைகள் விளைந்தாலும், கிட்டும் நன்மைகள் அதிகமாகும். இத்தகைய நன்மைகளுங் கூட விலைமட்ட உயர்வு மிதமாக இருக்கும்பொழுதுதான் கிட்டுமே தவிர, தாவும் பணவீக்கம் நிலவிடின் கிட்டமாட்டா. அதாவது, பணவீக்கம் முதிர்ச்சியடைந்துவிட்டால் சமுதாயத்திற்கு ஏற்படும் நன்மைகளைக்காட்டிலும் தீமைகளே அதிகமாகும்.

பணவீக்கத்தால் பொருளாதார அமைப்பில் விளையக் கூடிய தீமைகளைக் கீழ்க்காணுமாறு குறிப்பிடலாம்:

(1) சாதாரணமான காலத்தில் விலைமட்டம் சீராக இயங்குவதால், பொருளாதார அமைப்பு சீராகச் செயல்படும். பணவீக்கக் காலத்தில் விலைமட்டத்தில் ஏற்படும் குளறுபடிகளின் விளைவாக நாட்டின் பொருளாதார அமைப்பு பாதிக்கப்படும்.

(2) பணவீக்கத்தின் விளைவாக நாட்டின் முதலாக்கம்[1] பாதிக்கப்படும். நடைமுறையில் நிலவும் மூலதனத்தின் அளவு குறைவதற்கும், மூலதனம் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்வதற்கும் பணவீக்கமே காரணமாகும்.

(3) பணவீக்கக் காலத்தில் பணத்தின் வாங்குந்திறன் வீழ்ச்சியடைவதால், மக்களிடையில் சேமிப்பு நாட்டம்[2] வீழ்ச்சியடையும். சேமிப்பு நாட்டம் குறைவடைவதால் முதலாக்கமும் குறைவடையும்.

(4) பணவீக்கக் காலத்தில் நாட்டின் பொருளாதார அமைப்பில் ஒருவித நிச்சயமின்மை காணப்படும். இவ்வித நிச்சயமின்மையைப் பயன்படுத்தி அமித இலாபம் ஈட்ட விரும்பும் தொழில் முயல்வோர் ஊக வாணிபத்தில் ஈடுபடுவர். தொழில் முனைவோரின் ஆற்றலும் திறமையும் உற்பத்தித் துறையில் பயன்படுத்தப்படுவதற்குப் பதில் ஊக வாணிபத்தில் ஈடுபடுத்தப்படும்.

(5) பணவீக்கக் காலத்தில் விலைமட்டம் துரிதமாக அதிகரிப்பதால், பெரும் அளவில் பொருள்களை இருப்பில் வைத்திருப்போர் இலாபம் பெறுவர். இதன் விளைவாகப்

[1] Capital formation
[2] Propensity to save

பதுக்கல் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கப்படுகின்றன. பெருமளவில் பொருள்கள் பதுக்கப்படுமாயின், அங்காடியில் அவற்றின் அளிப்பு குறையும். அதிகரிக்கும் தேவைக்கு ஏற்ப அளிப்பு அதிகரிக்காமையால், நாட்டில் கள்ளச் சந்தை நடவடிக்கைகளும் பெருகும்.

(6) பணவீக்கம் நிலவுகையில் பொருளாதாரச் சூழ் நிலையில் ஏற்படும் நெருக்கடிகளின் விளைவாக உற்பத்தி யாளர்களின் உளப்பாங்கும் பாதிக்கப்படும். நிச்சயமற்ற சூழ் நிலையில் இடர்களை ஏற்று உற்பத்தியில் ஈடுபட அவர்கள் விரும்ப மாட்டார்கள். இதனால் தேசீய உற்பத்தி கணிச மாகக் குறையும்.

(7) உற்பத்தி அளவைக் குறைப்பதுடன், உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் வகையையும் பணவீக்கம் பாதிக்கும். பொதுவாக, இன்றியமையாதப் பொருள்களின் உற்பத்தியைக்காட்டிலும் பகட்டுப் பொருள்களின் உற்பத் திக்கே முதலிடம் அளிக்கப்படும். சமுதாய நலனுக்கு உகந் தவையல்லாத பகட்டுப் பொருள்களின் உற்பத்தி பெருகி, முடிவில் பொருளாதார அமைப்பு முறிவடையும்.

(8) பணவீக்கக் காலத்தில் 'விற்பனையாளர்களின் அங்காடி'[1] வளர்ச்சியுறும். சமுதாயத்தின் பணவருவாய் அதிகரிப்பதால், உற்பத்தி செய்யப்படும் பொருள் எதுவாயி னும், அஃது எளிதில் விற்பனை செய்யப்பட முடியும். இக் காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தரமும் வெகுவாகக் குறையும்.

(9) உற்பத்திச் சக்திகளின் இடப்பெயர்ச்சியைக் கட்டுப் படுத்துவதன் மூலம் பொருளாதார அமைப்பின் நெகிழ்ச்சி யையும் பணவீக்கம் தடை செய்கின்றது. விலைக்கணிப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் இலாபத்திற்கு ஏற்ப முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதில்லையாதலால், உற்பத்தி மூலங்களின் ஒதுக்கீடு[2] முறையாக மேற்கொள்ளப்படுவதில்லை.

(10) மிகையான பணவீக்கம் நிலவும்பொழுது, பணத்தின் மதிப்பு ஒவ்வொரு நொடியிலும் வீழ்ச்சியடைவதால், பொது

[1] Seller's market

[2] Allocation of resources

மக்கள் தமது சேமிப்பைப் பண உருவில் வைத்திருப்பதைக் காட்டிலும் பொருள்கள் உருவில் வைத்திருப்பதே இலாபகர மானது என்று கருதுவர். பொதுமக்களிடையில் ரொக்கப்பண விருப்பம் வீழ்ச்சியடையும். அவர்கள் ரொக்கப் பணத்தை உதறிவிட்டுப் பொருள்களை வாங்கிக் குவிக்க முயல்வர்.

2. பணவீக்கமும் பகிர்வும்: பணவீக்கம் நிலவும் பொழுது விலைமட்டம் உயருமாயினும், அனைத்துப் பொருள் களின் விலைகளும் சம விகிதத்தில் உயர்வதில்லை. ஒவ்வொரு பொருளின் விலையும் ஒவ்வொரு விதமாக உயர்வதால், சமுதாயத்தில் ஒவ்வொரு பிரிவினரின் வருவாயும் ஒவ்வொரு விகிதத்தில் அதிகரிக்கும். இதனால் சமுதாயம் பலவிதமாகப் பாதிக்கப்படும். பணவீக்கக் காலத்தில் தொழிலாளர்களின் வருவாயைக்காட்டிலும் தொழில் முயல்வோரின் இலாபம் பன்மடங்காக அதிகரிக்கும். உற்பத்திச் செலவு உயர்வதைக் காட்டிலும் விலைமட்டம் வேகமாக அதிகரிப்பதால், உற்பத்தி யாளர்கள், வணிகர்கள், ஊக வணிகர்கள் ஆகியோர் நிலை யான வருமானத்தை உடையோரைக்காட்டிலும் அதிக வருமானம் பெறுவர். மேலும், விலைமட்டம் உயரும்பொழுது வணிகர்களின் இருப்பில் உள்ள பண்டங்களின் மதிப்பு அதிகரிப்பதாலும் அவர்கள் பயனடைவர். பொதுவாக, பண வீக்கத்தால் நெகிழ்ச்சியடையும் வருமானம் உடையோர் பயனடைவர். நிர்ணயிக்கப்பட்ட வருமானம் உடையோர் பாதிக்கப்படுவர். நிலையான வருமானம் பெறுவோரிலும் தமது நலனைப் பாதுகாப்பதற்குப் பலமான சங்கங்களைக் கொண் டோர் சிறிதளவே பாதிக்கப்படுவர்.

பணத்தின் மதிப்பு குறைவதால், சமுதாயத்தின் செல்வப் பங்கீடு மறு பகிர்விற்கு உள்ளாகின்றது. ஏனெனில், (1) பண வீக்க விலைப்போக்குச் சமமாக அமையாமல், சில பொருள் களின் விலை வன்மையாகவும், சிலவற்றின் விலை மிதமாகவும் அதிகரிக்கின்றன. (2) கடன்கள் பணத்தின் மூலமே உணர்த் தப்படுகின்றன. நிலையான வருமானம் பெறுவோரைக் கடுமை யாகவும், நெகிழ்ச்சியான வருமானம் பெறுவோரை மிதமாகவும் பாதிப்பதால், பணவீக்கத்தை ஒரு மிதமான தளர்வீத வரி யாகவும் நாம் கொள்ளலாம். பணவீக்கம், சமுதாயத்தில் ஒவ் வொரு பிரிவினரையும் கீழ்க்காணுமாறு பாதிக்கின்றது:

கடன் பெறுவோரும், கடன் அளிப்போரும்: பண வீக்கக் காலத்தில் கடனாளிகள் பயனடைவர்; கடன் ஈந்தோர்

பாதிக்கப்படுவர். பணத்தின் மதிப்பு அதிகமாகவிருந்த காலத்தில் கடனாகப் பெறப்பட்ட தொகையைப் பணத்தின் மதிப்பு குறைந்துவிட்ட காலத்தில் திருப்பிக்கொடுப்பதால் கடன்பெற்றோர்க்கு நன்மையே. பணத்தின் மதிப்பு அதிகமாக விருந்த காலத்தில் கடனளித்தோர், அதன் மதிப்பு குறைந்த காலத்தில் திரும்பப் பெறுவதால், அவர்கள் பாதிக்கப்படு கின்றனர். பணவீக்கக் காலத்தில் பயனடைவதால், கடன் பெற்றோர் எப்பொழுதுமே பணவீக்கத்தை விரும்புவர் என்பது பொருள் அன்று. ஏனெனில், கடனாளிகளும் பண வீக்கத்தால் பாதிக்கப்படும் சமுதாயத்தின் ஓர் அங்கமன்றோ ?

வணிகர்கள் : தொழில் முயல்வோரும், வணிகர்களும் பணவீக்கத்தை விரும்புவர். ஏனெனில், அவர்களிடம் இருப் பில் உள்ள பொருள்களின் பண மதிப்பு உயர்வதாலும், அவர்கள் ஒரு பொருளின்மீது செலவிடும் தொகையைக்காட் டிலும், அப் பொருளிலிருந்து பெறும் வருமானம் அதிகமாக இருப்பதால், அமித இலாபம் பெறுகின்றனர். விலைமட்டம் அதிகரிக்கும் காலம் முழுமையும் வணிகர்களுக்கு இலாபம் கிட்டும். எனினும், மரபுப்படி விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள பொருள்களை உற்பத்தி செய்வோர், மின்சக்தி, போக்குவரத்து வசதிகளை அளிப்போர் போன்றோருக்கு அதிக இலாபம் கிட்டுவதில்லை. ஏனெனில், அவற்றின் விலை மரபு வழி யாகவோ அல்லது சட்ட விதிப்படியோ நிர்ணயிக்கப்படுபவை ஆகும். பணவீக்கக் காலத்தில் இத்தகையப் பொருள்களின் உற்பத்திச் செலவு அதிகரிக்குமாயினும், அவற்றின் விலை உயர்வதில்லையாதலால், அவற்றை உற்பத்திச் செய்வோர் பெறும் இலாப விகிதம் தொடர்ந்து குறைவடையும்.

நிலையான வருமானம் பெறுவோர் : பணவீக்கத்தால் தொழிலாளர்களும், ஊதியம் பெறுவோரும் கடுமையாகப் பாதிக்கப்படுவர். தொழிலாளர்களிடையில் பலம் வாய்ந்த தொழிற்சங்கங்கள் இருப்பதால், விலைமட்ட உயர்விற்கு ஏற்ப ஊதிய உயர்வு கோரி அவர்கள் வெற்றி பெறக்கூடும். ஆயினும், அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுவதால், பொருளின் உற்பத்திச் செலவு அதிகரிக்கப்படுவதன் விளை வாக விலைமட்டம் மீண்டும் உயரக் கூடும்; அதனால் அவர்தம் மெய்யான வருமானம் குறைவடையும்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை மட்டுமே நம்பி வாழ்வோர் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவர். ஆசிரியர்கள், எழுத்

தர்கள், அரசு ஊழியர்கள், ஓய்வு ஊதியம் பெறுவோர் போன்றோரின் ஊதியம், விலைமட்ட உயர்விற்கு ஏற்ப உயர்வதில்லையாதலால், அவர்களுடைய மெய்யான வருமானம் குறைவடையும். அவர்தம் நலனைக் காப்பதற்குப் போதுமான பலமுடைய தொழிற்சங்கங்கள் இல்லாமையால் தொழிலாளர்களைக்காட்டிலும் அதிகமாக இப் பிரிவினர் பாதிக்கப் படுவர்.

முதலீடு செய்வோர்: நிர்ணயிக்கப்பட்ட வட்டிவீதத்தைக் கொண்ட கடன் பத்திரங்களில் முதலீடு செய்பவர்கள் விலையேற்ற காலத்தில் இழப்பிற்கு உள்ளாகின்றனர். சம பங்கு அளிக்கும் பத்திரங்களில்[1] முதலீடு செய்வோர் இலாபம் பெறுவர்.

நடுத்தரமான முதலீட்டாளர்கள் நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீதத்தைக்கொண்டுள்ள கடன் பத்திரங்கள், காப்பீட்டு நிறுவனங்கள், சேமிப்புக் கணக்குகள் போன்றவற்றில் முதலீடு செய்வதால், விலையேற்றக் காலத்தில் அவர்களும் இழப்பிற்கு ஆளாகின்றனர். நில உரிமையாளர்கள் பெறும் வாரம் ஒப்பந்தப்படி நிர்ணயிக்கப்படுவதாகையால், அவர்களும் பாதிக்கப்படுவர். முதலீடு செய்யும் மக்களுடைய சேமிப்புச் சக்தியைக் குறைப்பதுடன், அவர்களிடம் சேமிப்பு நாட்டம் வளர்வதற்கான சூழ்நிலையையும் பணவீக்கம் கெடுத்துவிடுவதாகக் கெயின்சு குறிப்பிடுகின்றார்.

விவசாயிகள்: பணவீக்கக் காலத்தில் வேளாண்மைப் பொருள்களின் விலைமட்டம் கூடுவதாலும், விவசாயிகள் அளிக்கும் விலையைக்காட்டிலும் அவர்கள் பெறும் விலை அதிகமாகையாலும் அவர்கள் பயனடைவர். மேலும், பொதுவாகவே கடனாளிகளான விவசாயிகள், சாதாரணமான காலத்தில் பெற்றிருந்த கடன் தொகையைப் பணவீக்கக் காலத்தில் திருப்புவதன் மூலமும் பயனடைகின்றனர்.

மேற்கூறியவற்றால் பணவீக்கம் நிலவும்பொழுது உற்பத்தியாளர்கள், வணிகர்கள், கடனாளிகள், விவசாயிகள் ஆகியோருக்குச் சாதகமாகவும், நுகர்வோர், கடனளிப்போர், சிறு முதலீட்டாளர்கள், தொழிலாளர்கள், நடுத்தரக் குடும்பத்தினர், நிலையான ஊதியம் பெறுவோர் ஆகியோருக்குப் பாதக

1 Equity shares

மாகவும் செல்வமும், வருமானமும், மறுபகிர்வும் செய்யப்படு கின்றன என்பது தெளிவாகும். ஒரு பிரிவினரை வருத்துவதன் மூலம் மற்றொரு பிரிவினருக்கு வசதிகள் கிட்டுவதற்குப் பண வீக்கம் காரணமாகின்றது. மேலும், குறைந்த அளவு வருமானம் பெறுவோரைக் கடுமையாகவும், பெருமளவு வருமானம் பெறுவோரை எளிதாகவும் பணவீக்கம் பாதிக்கும் என்பதுவும் தெளிவாகின்றது.

3. சமுதாய விளைவுகளும் அரசியல் விளைவுகளும்: சமுதாய மாற்றங்களுக்கும் அடிப்படைக் காரணமாகவும் பணவீக்கம் அமையும். பணவீக்கக் காலத்தில் ஏற்படும் வருமான மறுபகிர்வு, செல்வ மறுபகிர்வு ஆகியவற்றின் விளை வாகச் சமுதாயநீதி குலையும் செல்வர்களிடம் செல்வம் மேன் மேலும் குவியும்; ஏழைகளின் நிலை மேலும் மோசமடையக் கூடும். பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மேன்மேலும் அதிகரிப்பதால், நடுத்தர மற்றும் குறைவான வருமானமுடை யோருக்கு அதிக வருமானமுடையோர்மீது காழ்ப்புணர்ச்சியும், அவநம்பிக்கையும் தோன்றும். இதன் விளைவாகச் சமுதாய அமைப்பில் குழப்பங்கள் ஏற்படும்.

செல்வந்தர்களும், கள்ளச் சந்தைக்காரர்களும் பணவீக்கத் தால் பயனடைவர். விலையேற்றக் காலத்தில் முறைகேடான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அமித இலாபம் ஈட்டும் வாய்ப்பால் கவரப்பட்ட வணிகர்கள் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால் வணிக ஒழுக்கம் நசிவடையும். பணவீக்கக் காலத்தில் எத்தகைய பொருளை யும் இலாபத்துடன் விற்பனை செய்யவியலுமாகையால், விற்பனையாளர்கள் அங்காடி பலம் பெறும். அதன் விளை வாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தரம் குறைவ துடன், கலப்படப் பொருள்களும் விற்பனை செய்யப்படும். நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவைப் பயன்படுத்தி இலாப வேட்டையில் ஈடுபடுவோரும், கள்ளச் சந்தைக்காரர்களும், பதுக்கல்காரர்களும் பயனடைவதால் அவநம்பிக்கையும் ஏமாற்றமும் அடைந்த ஏழைகளும், நடுத்தர வர்க்கத்தினரும், அரசின்பாலும் சமுதாய அமைப்பின்மீதும் நம்பிக்கையிழப்பர். பெரும்பான்மை மக்கள் இன்னல்களுக்கும் ஏமாற்றங்களுக்கும் உள்ளாவதால், அரசை எதிர்த்தும், சமுதாய அமைப்பை எதிர்த்தும் கிளர்ச்சியில் ஈடுபடுவர். அதாவது பணவீக்க மானது, நாட்டின் பொருளாதார அமைப்பின் இயல்பான போக்கைச் சீர்குலையச் செய்வதுடன் அரசியல் கிளர்ச்சி

களுக்கும், சமுதாய ஒழுங்கீனங்களுக்கும் வித்தாகும். 1920-க்குப் பின்னர் செர்மனியில் நிலவிய மிகையான பண வீக்கமே ஹிட்லர் சர்வாதிகாரியாக எழுச்சி பெற்றதற்குக் காரணமாகும். ஆதலால்தான் அடால்ஃப் ஹிட்லர் 'பண வீக்கத்தின் வளர்ப்புக் குழந்தை'யாகக் கருதப்படுகின்றார்.

வளர்ச்சி குன்றிய நாடுகளில் ஏற்படும் பணவீக்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் தடைப்படுத்தும். அத்தகைய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவில் மூலதனத்திரட்சி இன்றியமையாததாகும். மூல தனத் திரட்சி பொதுமக்களின் சேமிப்புச் சக்தியையும், சேமிக்கும் மனப்பான்மையையும் சார்ந்துள்ளது. விலையேற்ற காலத்தில் நிலவும் நிச்சயமின்மையின் விளைவாகச் சோர்வு நோக்கமடையும் மக்களிடையில் சேமிப்புச் சக்தியும், சேமிக்கும் மனப்பான்மையும் வீழ்ச்சியடைவதால், நாட்டின் மூலதனத் திரட்சியும் குறைவடையும். மேலும், நாட்டில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு மாறாக ஊக வாணிப நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படும். இத் தகைய நடவடிக்கைகள் முன்னேறும் நாடுகளின் நலனுக்குப் புறம்பானவை ஆகும். மேலும், பணவீக்கம் நிலவும் நாட்டில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டினர் முன் வரமாட்டார்கள். இதனால் மூலதனத்தின் இறக்குமதியும் பாதிக்கப்படும்.

பணவாட்டத்தின் தன்மைகள்[1]:

பணவாட்டம், பணவீக்கத்திற்கு நேர் எதிர்மாறானதாகும். நாட்டின் பணவருவாயைக்காட்டிலும் அதிகமாகத் தேசீய உற்பத்தி அமைவதால், பணவாட்டக் காலத்தில் விலைமட்டம் குறைந்துகொண்டேயிருக்கும். நடைமுறையில் நிலவும் விலை மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைவிடக் குறைவாகப் பொதுமக்கள் செலவிடுவதால் பணவாட்டம் தோன்றும். விலைமட்டம் குறைவதால் பணவாட்டக்காலத்தில் பணத்தின் மதிப்பு அதிகரித்துக்கொண்டேயிருக்கும். பண வாட்டத்தின்பொழுது விலைமட்டம் வீழ்ச்சி அடையும் என்று குறிப்பிடுவதால், விலைமட்டம் குறையும்பொழுதெல்லாம் பண வாட்டம் நிலவுவதாகக்கொள்வது தவறாகும். பண வீக்கத்தைத் தடுப்பதற்காக அரசு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொழுது நாட்டின் உற்பத்தியும் வேலை

[1] Deflation

மட்டமும் பாதிக்கப்படாமல் விலைமட்டம் குறைவடையும். இவ்வாறு அரசின் திட்டமிட்ட முயற்சியால் விலைமட்டம் குறைவடையும் நிலையைப் பணச் சுருக்கம் எனக் கூறலாம். பணவீக்கத்தின் கொடும் விளைவுகளிலிருந்து நாட்டைப் பாது காப்பதற்காகப் 'பணச் சுருக்கம்' மேற்கொள்ளப்படும். பொது மக்களின் நன்மைக்காக அரசு திட்டமிட்டு, எல்லா வகைச் செலவுகளையும் குறைப்பதன் மூலம் 'பணச் சுருக்கம்' மேற் கொள்ளும். ஆனால், பணவாட்டம் பொதுமக்களின் நன்மைக்கு உகந்தது அன்று. பணவாட்டக் காலத்தில் விலை மட்டம் குறையும்பொழுது நாட்டின் வேலைமட்டமும், தேசிய உற்பத்தியும், தேசிய வருமானமும் குறைவடையும். அதாவது, முழு வேலைமட்டத்திற்குக்கீழ் விலைமட்டம் குறையுமாயின், அந் நிலையே பணவாட்டம் ஆகும். வாணிபச் சுழல்களின் இறங்கு முகத்தைப் பணவாட்டம் என்று குறிப்பிடலாம். ஆனால், முழு வேலைமட்டம் அடைந்த பின்னர்ப் பணவீக்கக் கட்டுப்பாடு நடவடிக்கைகளால் ஏற்படும் விலை இறக்கம் பணச் சுருக்கம் ஆகும்.



படம் 11

பணப் பெருக்கம், பணவீக்கம், பணச் சுருக்கம், பண வாட்டம் ஆகியவற்றை மேற்காணும் வரைபடத்திலிருந்து அறியலாம்,

பணப் பெருக்கம்: நாட்டின் பொருளாதார அமைப்பை மந்தநிலையிலிருந்து விடுபடச் செய்வதற்காக அரசு திட்ட மிட்டு விலைமட்டத்தை உயர்த்தும்பொழுது பணப் பெருக்கம் தோன்றும். பொருளாதார மந்தம் நிலவும் நாட்டில் முழு வேலைமட்டம் எய்தும் வரையில் பணப்பெருக்கத்தின் விளை வாக விலைமட்டம் அதிகரிப்பதால், வேலைமட்டமும், தேசீய உற்பத்தியும், தேசீய வருமானமும் அதிகரிக்கும். வரை படத்தில் மந்த நிலையிலிருந்து முழு வேலைமட்டம் எய்தும் வரையில் பணப்பெருக்கம் நிலவுவது குறிக்கப்படுகின்றது.

பணவீக்கம்: நாடு முழு வேலைமட்டம் எய்தியதற்குப் பின்னரும் விலைமட்டம் உயருமாயின், விலைமட்டம் மட்டுமே உயருமே தவிர, வேலைமட்டம், உற்பத்தி வருமானம் ஆகியவை அதிகரிக்கப்படுவதில்லை. இத்தகைய நிலை பண வீக்கம் எனப்படும்.

பணச் சுருக்கம்: பணவீக்கம் தோன்றிய பின்னர், அதைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு திட்டமிட்டு, சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அந் நடவடிக்கைகளின் விளைவாக விலைமட்டம், உற்பத்தி, வருமானம் ஆகியவை பாதிக்கப்படுவதில்லை. ஆயினும், விலைமட்டம் குறையும்.

பணவாட்டம்: முழு வேலைமட்டத்திற்குப் பின்னர், விலைமட்டம் குறைவடையும்பொழுது வேலைமட்டம், உற்பத்தி, வருமானம் ஆகியவையும் குறைவடையும். இந் நிலையே பணவாட்டம் ஆகும். பணப் பெருக்கம், பணச் சுருக்கம் ஆகியவற்றால் நாட்டிற்கு நன்மையே. பணவாட்ட மும், பணவீக்கமும் தீமை பயப்பவை ஆகும்.

பணவாட்டத்தின் விளைவுகள்

பணவாட்டத்தின் விளைவுகள் பணவீக்கத்தின் விளைவு களுக்கு நேர் எதிர்மாறானவையாகும். ஆயினும், பொருளா தாரச் சூழ்நிலையைச் சீர்குலையச் செய்வதில் பணவாட்டம் பணவீக்கத்தைக்காட்டிலும் முதலிடம் பெறுகின்றது.

உற்பத்தியின்மீது ஏற்படும் விளைவுகள்: வேலை மட்டம், தேசீய உற்பத்தி, வாணிப நடவடிக்கைகள் ஆகிய வற்றைப் பணவாட்டம் பாதிக்கும். பணவாட்டக் காலத்தில் உற்பத்திச் செலவுகள் குறைவதைக்காட்டிலும் துரிதமாக விலைமட்டம் குறைவதால், உற்பத்தியாளர்களுக்கு இழப்பு

ஏற்படும். இழப்பைத் தவிர்க்க விரும்பும் உற்பத்தியாளர்கள் முதலீட்டின் அளவைக் குறைப்பதற்கு முற்படுவதால், வேலை மட்டம், உற்பத்தி, வருமானம் ஆகியவையும் குறைவடையும். இதன் விளைவாக மொத்த வருமானமும் குறையும். மொத்த வருமானம் குறைவதால், மொத்தத் தேவையும் குறையும். மொத்தத் தேவை குறைவதால் விலைமட்டம் மேன்மேலும் குறைவடையும். வணிகரிடை சோர்வு நோக்கு நிலவுவதால் பொருளாதார நடவடிக்கைகளில் மந்தநிலை தோன்றும். நாட்டின் உற்பத்திச் சக்திகள் முழுமையாகப் பயன்படாத நிலையில் பொருளாதார நடவடிக்கைகளும், வேலைமட்டமும், தேசீய உற்பத்தியும், வருமானமும் வீழ்ச்சி அடைவதால், இந் நிலையைச் 'செழுமைக்கிடையில் வறுமை' என்று நாம் கொள்ளலாம். அதாவது, பணவாட்டக் காலத்தில் நிலவும் வறுமைக்குப் போதிய தேவையின்மைதான் காரணமே தவிர, உற்பத்திச் சக்திகளும் அளிப்பும் அன்று.

பகிர்வின்மீது ஏற்படும் விளைவுகள் : செல்வம், வருமானம் ஆகியவற்றின் பகிர்வையும் பணவாட்டம் பாதிக்கின்றது. தேசீய வருமானத்தில் தொழில் முயல்வோரின் இலாப விகிதம் குறைவடையும் ; தொழிலாளர்களின் கூலி விகிதம் அதிகரிக்கும். அதாவது, பணவாட்டத்தால் நுகர்வோர் பயன் அடைவர்; உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவர். பணவாட்டக் காலத்தில் கடனளித்தோர் பயனடைவர்; கடன் பெற்றோர் பாதிக்கப்படுவர். பணத்தின் மதிப்பு அதிகரிக்கப் படுவதால், நிலையான வருமானம் உடையோரும், வாரம் பெறுவோரும் நிச்சயிக்கப்பட்ட வட்டி வீதத்தைக்கொண்ட கடன் பத்திரங்களில் முதலீடு செய்தோரும் இலாபமடைவர். பொதுவாக நிலையான வருமானம் உடையோர் அனைவரும் பயனடைவர். நெகிழ்ச்சியான வருமானம் உடையோர் அனைவரும் பாதிக்கப்படுவர். பணவாட்டக் காலத்தில் சேமிப்பு மனப்பான்மை அதிகரிக்கப்படுமாயினும், சேமிக்கும் சக்தி குறைவு அடையும்.

பணவாட்டம் அதிக வருமானம் உடையோரை வருத்தவும், நடுத்தர வகுப்பினரைப் பயனடையவும் செய்யும். ஆயினும், வேலைமட்டத்தைக் குறைப்பதால், பணவாட்டம் சமுதாய நலனுக்கு உகந்தது அன்று. ஏனெனில், வேலையின்மைப் பிரச்சினை அதிகரிக்குமாயின், சமுதாயத்தில் நிறைவின்மை தோன்றும்.

பணவீக்கமும் பணவாட்டமும்-ஓர் ஒப்பீடு

பணவீக்கம், பணவாட்டம் ஆகிய இரண்டினாலும் சமுதாயத்திற்குத் தீமை விளையுமெனினும், பணவீக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறைவானவையாகும். 'பணவீக்கம் நீதிக்குப் புறம்பானது ; பணவாட்டமோ ஏற்றுக்கொள்ளக் கூடாததாகும். இவையிரண்டில் பணவாட்டமே மிக மோச மானதாகும்' என்பது கெயின்சின் கருத்தாகும்.

பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடையிலும் வருமானம் தவறாகப் பகிர்ந்தளிக்கப்படும் ; பொருளாதார அமைப்பு சீர் குலையும். அதாவது, இவை இரண்டும் பொருளாதார நலனுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் உற்பத்தியையும், பகிர்வையும் பாதிக்கும் எனினும், பணவீக்கம் நீதிக்குப் புறம் பானதாகக் கருதப்படுகின்றது.

பணவீக்கம் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடையும் வருமானத்தைத் தவறான முறையில் பகிர்வதன் விளைவாகச் செல்வந்தர்களிடம் செல்வம் குவியும்; ஏழைகள் மேன்மேலும் ஏழைகள் ஆவர். பணவீக்கக் காலத்தில் ஏற்படும் மறு பகிர்வின் விளைவாகப் பொதுமக்களின் வருமானத்தில் காணப் படும் இடைவெளி மேன்மேலும் விரிவடையும். வறியோரின் வருமானம் செல்வந்தர்களிடம் குவியும்.

பணவீக்கத்தால் குறைவான வருமானம் உடையோர் பெருமளவில் பாதிக்கப்படுவர். குறிப்பாக நடுத்தர வகுப்பினர் களுக்குப் பெருமளவில் இன்னல்கள் ஏற்படும்.

சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரையும், பல்வேறு வகை களில், பல்வேறு விகிதத்தில் பாதிப்பதால் பணவீக்கம் நீதிக்குப் புறம்பானதாகக் கருதப்படுகின்றது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் சம அளவில் பாதிக்கப்படுவாராயின் சமுதாயத்தின் பொருளாதார நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படாது. ஆனால் பணவீக்கக் காலத்தில் பலருடைய செல்வம் சிலரிடம் குவிவதால், பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும். போர்க்காலங்களில் அரசு மேற்கொள்ளும் பண வீக்க நடவடிக்கைகள் ஒருவித மறைமுக வரி விதிப்பே ஆகும். ஏனெனில் அத்தகைய நடவடிக்கைகளால், பொது மக்களின் நுகர்வு கணிசமான அளவில் பாதிக்கப்படும்.

பேராசிரியர் என். வக்கீல், பணவீக்கத்தைக் கண்ணுக்குப் புலனாகாதக் கொள்ளையாகக் கருதுகின்றார். பணவீக்கம் ஒரு கொள்ளையனைப் போன்றது. இரண்டாலும் சொத்து வைத்திருப்போர் பாதிக்கப்படுகின்றனர். ஆனால், கொள்ளையனைப் பார்க்க முடியும்; அவன்மீது வழக்குத் தொடர முடியும். பணவீக்கம் கண்ணுக்குப் புலனாகாதது; சட்டப்பூர்வமானது என்றும் அவர் கூறுகின்றார்.

பணவீக்கத்தால் பொது ஒழுக்கம் நசிவுறும்; பொது மக்களின் தார்மீக வாழ்வு சீர்குலையும்; பொதுமக்களிடையில் சூதாட்ட மனப்பான்மையைத் தோற்றுவிக்கும்; ஊக வாணிப நடவடிக்கைகளையும், பதுக்கல் நடவடிக்கைகளையும் ஊக்குவிக்கும்; பொதுமக்களிடையில் சேமிக்கும் வழக்கத்தைக் குறைக்கும்; வட்டி வீதத்தை உயர்த்துவதன் மூலம் பண அங்காடியின் சமநிலையைப் பாதிக்கும்.

பணவீக்கத்தின் விளைவாக, நாட்டில் தற்காலிகமான செயற்கையான செழுமை தோன்றும். பணவீக்கம் முடிவதற்கான சூழ்நிலைகளும் பணவீக்கத்தாலேயே உண்டாகும். பணவீக்கக் காலத்தில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளின் விளைவாக விலைமட்ட உயர்வு தடைப்படும்; விலையிறக்கம் தோன்றும். பணத்தின் மதிப்பில் ஏற்படும் இத்தகைய மாற்றத்தால் பொருளாதார நிலைப்பாடு பாதிக்கப்படும்.

பணவீக்கம் அநீதியானதெனினும், பணவாட்டம் மந்தமானதாகும். ஏனெனில், வேலையின்மைப் பிரச்சினையை அதிகரிப்பதன் மூலமும் உற்பத்தியைக் குறைப்பதன் மூலமும் பணவாட்டம் தேசீய வருமானத்தைக் குறைக்கும். மொத்த வருமானம் குறைவதால், சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தரித்திரர்கள் ஆவார்கள். சமுதாயத்தில் வேலையின்மைப் பிரச்சினை பெரிதாக வளர்ச்சி அடையும்.

பொருளாதார நடவடிக்கைகளில் இறங்கு முகத்தைத் தோற்றுவிப்பதன்மூலம் பொருளாதார மந்தம் தோன்றுவதற்கும் பணவாட்டம் காரணமாகின்றது. பொருளாதார மந்தம் நிலவும்பொழுது பொருளாதார நடவடிக்கைகள் மந்தமடையும்; உற்பத்தி குறைக்கப்படும் அல்லது நிறுத்தப்படும்; புதிய முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை; வேலை மட்டம் வீழ்ச்சி அடையும்; சமுதாயத்தின் பண வருமானமும் வீழ்ச்சியடையும். விலைமட்டம் குறைவதன் விளைவாகப்

பொதுமக்களின் வாங்கும் திறன் அதிகரிக்குமாயினும், அவர்கள் பொருள்கள் வாங்க முடிவதில்லை. அதாவது, மொத்தத் தேவை குறைவடையும்; இலாப விகிதமும் குறைவு அடையும்; இலாபம் குறைந்து இழப்பு ஏற்படுவதால் உற்பத்தியாளர்கள் முதலீடு செய்வதைத் தவிர்ப்பர்; உற்பத்தியைக் குறைப்பர். உற்பத்தி அளவு குறைவதால், மீண்டும் வேலை வாய்ப்புகளும் வருமானமும் குறைவடையும். அதாவது, சங்கிலித் தொடர் போல விலைமட்டமும் வேலைமட்டமும் ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாகக் குறைவடையும்.

பணவாட்டப் போக்கு ஒரு முறை தொடங்கிவிட்டால், இச் சுழல் வெகு துரிதமாக இயங்கும். இதனால் பொருளாதார அமைப்பில் காணப்படும் தொடர்புகள் யாவும் சீர்குலையும்; வெகு விரைவில் பொருளாதார அமைப்பு அழியும்.

மேற்கூறியவற்றால் பணவாட்டத்தைக்காட்டிலும் பணவீக்கமே ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும் என்பது தெளிவாகும். பணவீக்கம், பணவாட்டம் ஆகியவற்றுள் பணவீக்கமே குறைந்த அளவில் தீமை பயப்பது என்பதால், அதுவே ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும் என்று கெயின்சு கருதுகின்றார் என்றும், விலைமட்டம் நிலைப்படுத்தப்படுதையே சிறந்தது என்றும் அவர் கருதுகின்றார். ஆனால், இருவித விலை மாற்றங்களில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமாயின், பணவீக்கமே ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என்பது அவர் கருத்தாகும்.

ஏனெனில், பணவீக்கத்தால் தேசீய வருமானம் குறைவதில்லை; பணவாட்டத்தால் தேசீய வருமானம் குறைவடையும். பணவீக்கக் காலத்தில் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் ; பணவாட்டக் காலத்தில் வேலை வாய்ப்புகள் வீழ்ச்சி அடையும்.

பணவீக்கத்தைப் பெரும்பாலும் கட்டுப்படுத்தி விடலாம். அரசு போதிய பணவியல் நடவடிக்கைகளையும், நிதியியல் நடவடிக்கைகளையும் முறையாக மேற்கொள்ளத் தவறினால் மட்டுமே பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த இயலாது. ஆனால், பணவாட்டத்தைக் கட்டுப்படுத்துதல் எளிது அன்று. பணவாட்டக் காலத்தில் சோர்வு நோக்கு நிலவுவதால், மூலதனத்தின் இறுதி நிலைத்திறன் குறைவடையும். அதன் விளைவாக, முதலீடுகள் குறைவடைந்து, வெகு விரைவில் பொருளாதார

மந்தம் ஏற்படும். அந் நிலையில் பணவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதால் பயன் ஏற்படுவதில்லை. ஆனால், பணத்தின் அளவையும் கடனின் அளவையும் கட்டுப்படுத்துவதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது எளிதாகும்.

மிதமான பணவீக்கம் பொருளாதார வளர்ச்சி பெற உதவுமெனக் கெயின்சு குறிப்பிடுகின்றார். அரசு பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொண்டு முதலீடு செய்வதன் மூலம் செழுமைக்கு இடையில் வறுமை நிலவும் நிலையில் இருந்து விடுபடுவதற்கு முடியுமென்று அவர் குறிப்பிடுகின்றார்.

பணவாட்டத்தைக்காட்டிலும் பணவீக்கம் சிறந்ததென கெயின்சு குறிப்பிட்டாலும், அதன் தீய விளைவுகளையும் அவர் குறிப்பிடுகின்றார் ; மிதமான பணவீக்கமே சிறந்ததெனவும், மிகையான பணவீக்கம் பொருளாதாரத்தைச் சீர் குலைக்கும் என்றும் குறிப்பிடுகின்றார்.

பணவீக்கத்தையும் பணவாட்டத்தையும் கட்டுப்படுத்தும் முறைகள்

பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குக் கீழ்க்காணும் முறைகளை அரசு மேற்கொள்ளலாம்: (1) பணவாக்கக் கைக்கோள், (2) அரசிறைக் கைக்கோள், (3) நேரடிக் கட்டுப்பாடுகளும் பிற நடவடிக்கைகளும்.

(1) பணவாக்கக் கைக்கோள்: பணத்தின் மதிப்பை நிலைப்படுத்துவதற்காகப் பணம் மற்றும் கடன் அளவுகளை அதிகரிக்கும் அல்லது குறைக்கும் மையவங்கியின் முயற்சியே பணவாக்கக் கைக்கோள் எனப்படும். பணத்தின் மதிப்பை மாறாமல் பாதுகாப்பதற்காக மையவங்கி (1) பாங்கு வட்டி வீதக் கொள்கை[1], (2) வெளிச் சந்தை நடவடிக்கைகள்[2], (3) காப்பு விகித மாறுதல்கள்[3] ஆகிய பணக்கணியக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளலாம்.

பொதுவாக முழு வேலைமட்டம் எய்திய பின்னர் மொத்தச் செலவுகள் அதிகரிப்பதால்தான் பணவீக்கம் தோன்றும். எனவே, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்

[1] Bank rate policy
[2] Open market operations
[3] Valuable reserve ratios

கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவும் மக்களிடம் உள்ள மிகையான வாங்கும் திறனைக் குறைப்பதாகவே அமைய வேண்டும். தேசீய உற்பத்தியைக்காட்டிலும் மக்களின் வாங்குந்திறன் (பணத்தேவை) அதிகரிப்பதால்தான் பண வீக்கம் தோன்றுவதாகக் கருதப்படுவதால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சி எதுவாயினும் அது நாட்டில் புழக்கத்திலுள்ள வங்கிக் கடனின் அளவைக் கட்டுப்படுத்துவதாக அமைய வேண்டும். எனினும், கடனின் அளவைக் கட்டுப்படுத்துவதில் பண அளவுக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் திறம்படச் செயல்படுவதில் பல இடையூறுகள் இருப்பதால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் பண வாக்கக் கைக்கோளை பலம் வாய்ந்ததாகக் கருதவியலாது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மிதமான பணவியல் நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொள்வதால் பயனேது மில்லை. ஆனால் பணவியல் கைக்கோளைக் கடுமையாக மேற்கொண்டாலும், பொருளாதார அமைப்பு சீர் குலையும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கை யாக அரும் பணக்கொள்கை உதவுமா? என்பது பற்றி ஐயப்படுகின்றார் பேராசிரியர் கால்பிரெய்த்[1]. பணவீக்கக் காலத்தில் வருமானம் உயர்ந்து காணப்படுவதால், மூலதனத் தின் இறுதிநிலைத் திறனும் மிகுந்து காணப்படும். அத்தகைய நிலையில் வட்டி வீதத்தில் ஏற்படும் மாறுதல்களின் விளைவாக முதலீடுகள் பெருமளவில் பாதிக்கப்படுவதில்லை என்பது அவர் கருத்தாகும். அரும் பணக்கொள்கை தேவைப்படும் அளவிற்குப் பயன்படாது என்பதற்கு மற்றொரு காரணம் மெய்யான முதலீட்டைக் கட்டுப்படுத்துவதற்கு அரசால் இயலாது என்பதாகும். மேலும், இக் கொள்கை மிகவும் எளிமையானதாகையால், நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதனால் இயலாது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப் படும் முயற்சிகளுள் பணவாக்கக் கைக்கோளுக்கு இரண்டாவது இடத்தையே பேராசிரியர் ஹான்சன் அளிக் கின்றார். பணவீக்கக் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் பண வாக்கக் கைக்கோள் முதல் இடத்தைப் பெற முடியாது. ஏனெனில், நாட்டின் பணத்துறையும், வங்கித்துறையும் அவற்றின் இயல்பான பணிகளை ஆற்ற வேண்டுமாயின், அவை நெகிழ்ச்சி மிக்கவையாக அமைய வேண்டும். பண

[1] Prof. Galbraith

அளவைக் கடுமையாகக் குறைப்பதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியுமாயினும் அத்தகைய பண அளவு குறைப்பு ஒரு பயங்கரமான முறையாகும். அதாவது, பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பணவியல் நடவடிக்கைகள் மிதமான அளவில் மேற்கொள்ளப்படுமாயின், அவை திறம்படச் செயல்படமாட்டா. அவை கடுமையாக மேற்கொள்ளப்படுமாயின், பொருளாதாரச் சீரழிவே ஏற்படும்.

மேலும், தற்காலப் பொருளாதார அமைப்பில் கடனின் அளவையும் பணத்தின் அளவையும் சுருக்குவதன் மூலம் பொது மக்களின் செலவு விகிதத்தைக் கடுமையாகக் குறைக்கலாம் என்பது தவறான கருத்தாகும். தற்காலத்தில் செல்வங்கள் கடன் பத்திரங்கள் போன்ற நெருங்கிய பண உருவில் சேமிக்கப்படுகின்றன. நெருங்கிய பணத்தை வெகு எளிதில் பணமாக மாற்றிவிடலாம். அவை பொருளாதாரத்தில் நீர்மைத் தன்மையை அதிகரிக்கின்றன. இச் சூழ்நிலையில் பணத்தின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் முதலீட்டின் அளவையும் செலவின் அளவையும் கட்டுப்படுத்துவது இயலாததாகும். அதாவது, தற்காலத்தில் பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்கும் இடையே நெருங்கிய நேரிடையான தொடர்பு நிலவுவதில்லை.

பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்குமிடையே நெருங்கிய நேரிடையான தொடர்பு நிலவுவதாக அனுமானித்து அதன் அடிப்படையில் அமைந்துள்ள பணவாக்கக் கைக்கோள் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துமென எதிர் பார்ப்பது தவறாகும்.

எனினும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பண வாக்கக் கைக்கோளைத் துணை நடவடிக்கைகளாகப் போதிய அளவிற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். பணவீக்கக் காலத்தில் பணக்கட்டுப்பாடுகளில் சில அவசியமானதும் விரும்பத்தக்கதுமாகும். பணவீக்க விலைப்போக்கு நிலவும் காலத்தில் எளிமையான கடன் வசதிகளை அளிப்பதன் மூலம் பணவீக்கத்தை மேலும் வளர்ச்சியுறச் செய்வது தவறாகும். எனவே, மற்ற நடவடிக்கைகளுடன் சேர்த்துப் பணவியல் நடவடிக்கைகளையும் பயன்படுத்துவதன் மூலம் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

(2) அரசிறைக் கைக்கோள்: வரி விதிப்பு, பொதுக் கடன் செலவிடுதல் ஆகியவற்றைப் பற்றிய அரசின் கொள்கைகள்

அரசிறைக் கைக்கோள் எனப்படும். நிதியியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் மொத்தச் செலவை மாற்றி அமைக்கலாம்; பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வரி விதிப்பை அதிகரிப்பது, அரசு செலவைக் குறைப்பது போன்ற நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். பணவீக்கத்தில் தனியார்ச் செலவுகள் அதிகரிப்பதற்கு எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மொத்தச் செலவைக் குறைக்கலாம். அரசு தன் செலவுகளைக் குறைத்துக்கொள்வதன் மூலம் தனி நபர்கள் கட்டுப்பாடின்றிச் செலவிடுவதால் ஏற்படும் விளைவு களில் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்தலாம். அரசாங்கச் செலவுகள் குறைக்கப்பட்டால் நாட்டின் பண வருவாய்க்கும் தேசீய உற்பத்திக்குமிடையே பணவீக்கக் காலத்தில் ஏற்படும் இடைவெளி குறையும்.

ஆனால், அரசின் செலவுகள் குறைக்கப்படுவது மட்டுமே போதுமானது அன்று; அரசின் செலவுகள் குறைக்கப்படும் அதே சமயத்தில் அதிக அளவில் வரிகள் விதிக்கப்பட்டால் பொதுமக்களின் செலவும் குறைவடையும். அரசுச் செலவும் பொதுமக்களின் செலவும் குறைவடைந்தால் பணவீக்க விலைப்போக்கு கட்டுப்படுத்தப்படும். அதிக அளவில் வரிகள் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டால், பொதுமக்கள் செலவிடக் கூடிய வருமானம் குறைவடைவதால், பணவீக்க இடைவெளி குறைவடையும்; அரசுச் செலவும், பொது மக்களின் செலவும் குறைக்கப்படுவதால், தனியார்த் துறையில் உற்பத்தித் துறைக்குத் தேவையான உற்பத்திச் சக்திகளின் ஒதுக்கீடு அதிகரிப்பதுடன் பணத்தேவை குறைவதால் அளிப்புக்கோடு மேல் நோக்கி எழும்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் திறமையான வரி விதிப்புக் கொள்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய வரிவிதிப்பின் விளைவாகப் பொருள்களுக்கான தேவை குறைக்கப்படுமாயினும் உற்பத்தி பாதிக்கப்பட மாட்டாது. எடுத்துக்காட்டாக, சுங்க வரி, விற்பனை வரி போன்றவற்றால் நுகர்வோரின் வாங்குந்திறனில் ஒரு பகுதி அரசின் வசம் மாற்றப்படுமாயினும், சம்பந்தப்பட்டப் பொருள் களின் உற்பத்தி பாதிக்கப்படுவதில்லை. எனினும், இம் முறை தளர் வீதத்தில் அமைவதால் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவ தற்குச் சிறந்த முறையாகப் பொருளாதார அறிஞர்களுள் சிலர் இதை ஏற்பதில்லை. ஏனெனில் சுங்க வரி, விற்பனை வரி போன்ற வரிகளின் விளைவாகச் சம்பந்தப்பட்டப் பொருள்

களின் விலைமட்டம் உயர்வதால் மீண்டும் பணவீக்கம் தோன்றி ஒவ்வோர் உற்பத்தித் துறைக்கும் பரவக் கூடும். ஆயினும், பணவீக்கக் காலத்தில் வளர்வீத நேர்முக வரியே சிறந்ததாகும். அத்தகைய வரி சமுதாயச் சமத்துவ நோக்கிலும் சிறந்ததாகும். அரசின் செலவுகள் குறைவடைவதாலும், வரிவிதிப்பு அதிகரிப்பதாலும் வரவு-செலவுத் திட்டத்தில் அரசிற்கு உபரி கிட்டும்.

பணவீக்க எதிர் நடவடிக்கையான தள்ளி வைக்கப்பட்ட கூலி[1] அல்லது திணிக்கப்பட்ட சேமிப்பு[2] போன்ற கட்டாயச் சேமிப்பு முறையை கெயின்சு பரிந்துரைக்கின்றார். தள்ளி வைக்கப்பட்ட கூலி முறையில் நுகர்வோர் தமது கூலியில் ஒரு பகுதியைச் சேமிப்புப் பத்திரங்களாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இச் சேமிப்புப் பத்திரங்கள் குறிப்பிட்ட காலவரையறைக்குப் பின்னர்ப் பணமாக மாற்றிக்கொள்ளப்படலாம். கட்டாயச் சேமிப்பு முறையால் நுகர்வோரின் வருமானம் கணிசமாகக் குறைக்கப்படுவதால், விலைமட்டம் கட்டுப் படுத்தப்படும். கட்டாயச் சேமிப்பு முறை போர்க்காலப் பணவீக்கத்தையும், போர்ப் பிற்காலப் பணவீக்கத்தையும் கட்டுப்படுத்த உதவுமாயின் மக்களாட்சி முறை பின்பற்றப் படும் நாடுகளில் அமைதிக் காலப் பணவீக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்கு உதவாது.

தனி நபர் சேமிப்பு, பணச்சுருக்கத்திற்கும் உதவும். தனியார்ச் சேமிப்பு அதிகரிக்கும் அளவிற்குப் பணவீக்க விலைப்போக்கு கட்டுப்படுத்தப்படும். ஆகவே, பொது மக்களிடையில் சேமிப்பை அதிகரிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். பொது மக்களின் சேமிப்பு அதிகரிக்கும் அளவிற்கு அவர்களுடைய செலவிடப்படக்கூடிய வருமானம் குறையும்; விலைமட்ட உயர்வும் கட்டுப்படுத்தப்படும். அதிக வரி விதிப்பினாலும் ஏற்படும் தீய விளைவுகள், சேமிப்புப் பெருக்கத்தினால் ஏற்படுவதில்லை.

பற்றாக்குறை நிதியாக்கத்தால் ஏற்படும் பணவீக்கத்தைத் தவிர்ப்பதற்குப் பற்றாக்குறைத் தொகைக்குச் சமமாகப் பொதுமக்களிடமிருந்து அரசு கடன் பெற வேண்டும். மேற்

[1] Deferred pay
[2] Forced savings

காணும் கடன் தொகை வங்கித்துறையில்லாத மற்றவர்களிட மிருந்து பெறப்பட்டால் மட்டுமே பணவீக்கத்தைக் கட்டுப் படுத்த முடியும். மேலும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசுக் கடன்கள் நிர்வகிக்கப்பட வேண்டும். பழைய கடன்களைப் பணவீக்கக் காலத்தில் திருப்பியளிப்ப தால் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆதலால், பழைய கடன்கள் பணவீக்கக் காலத்தில் தீர்வு செய்யப்படக் கூடாது. வரவு-செலவுத் திட்டத்தில் கிட்டும் உபரியைக்கொண்டு மைய வங்கியிடம் பட்டிருக்கும் கடனை அரசு அடைக்கலாம். அரசு கடன் பத்திரங்கள் வணிக வங்கிகள் வசம் இருக்கும் வரையில் அவை கடனின் அளவைப் பெருக்கும். அத்தகையக் கடன் பத்திரங்கள் வணிக வங்கிகளிடம் இருக்கும் வரையிலும் அரசின் பணவியல் நடவடிக்கைகள் முழுப் பயனை அளிக்க முடியாது. அரசின் பணவியல் நடவடிக்கைகள் வெற்றி பெற வேண்டுமாயின், மேற்காணும் நிதியியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனினும், நிதியியல் நடவடிக்கைகள் மட்டுமே பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் போதுமானவை அன்று. பணவீக்கத்தைத் தவிர்ப்பதற்குப் பணவாக்கக் கைக்கோளும், அரசிறைக் கைக்கோளும் ஒன்றுக்கொன்று ஆதரவான வகை யில் இணைந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) நேரடிக் கட்டுப்பாடுகளும், பிற நடவடிக்கை களும்: வெளிப்படையான பணவீக்கத்தை ஒடுக்கப்பட்ட பணவீக்கமாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நேரடி விலைக்கட்டுப்பாடு, பற்றாக்குறைப் பொருள்களின் பங்கீடு ஆகியவை நேரடிக் கட்டுப்பாடுகளில் அடங்கும். பணவீக்கக் காலத்தில் விலைமட்டத்திற்கு ஓர் உச்சவரம்பை அரசு நிர்ணயிக்கும். விலைமட்டத்திற்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப் பட்ட பின்னர், விலைமட்டம் அதைவிட அதிகரிக்காமல் அரசு அதிகாரிகள் நிர்வகிப்பர். அதாவது, வெளிப்படையான பணவீக்கம் ஒடுக்கப்படும் மிகையான தேவை நிலவினாலுங் கூட உற்பத்தியாளர்கள் பொருள்களின் விலையை உயர்த்த முடியாது. போர்க்காலங்களில் நிர்வகிக்கப்படும் விலைக் கட்டுப்பாடுகள் இத் தன்மையனவேயாகும்.

விலைக்கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பான கெயின்சின் வாதம் கருதப்பட வேண்டியதாகும். விலைக் கட்டுப்பாடு களினால் வாங்குந்திறனையும், பொருள்களின் அளிப்பையும்

சமநிலை அடையச் செய்ய இயலாது. பழைமையான பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு விலைக் கட்டுப்பாடுகள் ஏற்றவை அல்ல. வாங்குந்திறனைக் குறைக்காமல் விலைக் கட்டுப்பாடுகளை நிர்ணயிப்பதால் பயனேதும் கிட்டாது. மேலும், விலைக்கட்டுப்பாடுகள் நுகர்வோரின் திறைமையை யும், சுதந்தரத்தையும், நலனையும் புறக்கணிக்கின்றன. விலை நிர்ணயிப்பதில் ஏற்படும் நிர்வாகப் பிரச்சினைகளையும், கள்ளச் சந்தைகளை ஒடுக்குவதில் ஏற்படும் சட்டப் பிரச்சினை களையும் கவனிக்குமிடத்து, பணவாக்கக் கைக்கோள், அரசிறைக் கைக்கோள் ஆகியவற்றைக்காட்டிலும், விலைக் கட்டுப்பாடுகள் உயர்ந்தவை அல்ல என்று பேராசிரியர் குரிகாரா[1] கருதுகின்றார்.

உணவுப் பண்டங்கள் போன்ற குறிப்பிட்ட சில பொருள் களில் கடுமையான பற்றாக்குறை நிலவும்பொழுது, விலைக் கட்டுப்பாடுகள் மட்டுமன்றிப் பங்கீட்டு முறையையும் அரசு மேற்கொள்ள வேண்டும். பங்கீட்டு முறையின் விளைவாகப் பலருக்கும் குறிப்பிடப்பட்ட பொருள் எளிதில் கிடைக்கும். பங்கீட்டு முறையால் பொருள்களின் தரமும் வகைகளும் கட்டுப்படுத்தப்படும். எனினும், பங்கீட்டு முறையின் விளை வாக நுகர்வோர் இறைமை அழிக்கப்படுவதாக கெயின்சு கருதுகின்றார். ஆனால், நியாயமான பங்கீட்டு முறை சிறப் பானதாகும் என்பது பேராசிரியர் குரிகாராவின் கருத்தாகும்.

பணவீக்கக் காலத்தில் பகட்டுப் பொருள்களின் உற் பத்தியை விடுத்து இன்றியமையாதப் பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலமும் விலைமட்ட உயர்வைத் தடுக்க முடியு மென்று கருதப்படுகின்றது. கூலி விகிதம், இலாபம் ஆகியவற் றிற்கு உச்ச வரம்பு விதிப்பதன் மூலமும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். கூலி விகிதமும், இலாப விகிதமும் குறைக் கப்படுமாயின், பொதுமக்களின் செலவிடப்படக்கூடிய வருமானமும் குறைவடையும். அதன் விளைவாக உறுதித் தேவை குறைவதால் விலைமட்டமும் குறையும்.

குறிப்பிட்ட சில பொருள்கள்மீதான இறக்குமதி கட்டுப் பாடுகளை ரத்து செய்வதன் மூலம் அவற்றின் இறக்குமதி அதிகரிக்கப்பட்டால் பணவீக்கப் போக்கு மிதப்படுத்தப்படும். ஆயினும், நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலைக்கு ஏற்பவே இம் முறையைப் பின்பற்ற முடியும். இவ்வாறே ஏற்றுமதி குறைக்கப்படுமாயின், அளிப்பு அதிகரிப்பதால் பண வீக்கப் போக்கு மிதப்படுத்தப்படும். ஆனால் சீர்கெட்ட

[1] Pro. K. K. Kurihara

அயல்நாட்டுச் செலுத்துநிலை நிலவும்பொழுது எந்த நாடும் ஏற்றுமதியைக் குறைக்கவும், இறக்குமதியை அதிகரிக்கவும் துணியாது. ஏனெனில், அத்தகைய முயற்சியால் ஏற்படும் தீய விளைவுகள் அவற்றால் ஏற்படும் நன்மைகளைக்காட்டிலும் அதிகமாகும்.

மேற்கூறியவற்றால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்து வதற்குப் பல்வேறு நடவடிக்கைகளும் ஒரே சமயத்தில் இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும், தனியான ஒரு நடவடிக்கையால் பயன் எதுவும் கிட்டாது என்பதும் தெளிவாகும்.

பணவாட்டத்தைக் கட்டுப்படுத்துதல்: பொதுவாக மொத்த உறுதித் தேவையை உயர்த்துவதன் மூலம் பணவாட் டத்தைக் கட்டுப்படுத்தலாம். நாட்டின் நுகர்ச்சி நிலையை அதிகரிப்பதன் மூலமும், முதலீடுகளுக்கு ஊக்கமளிப்பதன் மூலமும் உறுதித் தேவையை அதிகரிக்கலாம். தேசீய வரு மானத்தைச் செல்வந்தர்களிடமிருந்து ஏழைகளுக்கு ஆதரவாக மறுபகிர்வு செய்வதன் மூலம் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டத்தை உயர்த்தலாம். அதாவது, வளர்வீதத்தில் விதிக்கப்படும் வருமான வரி, மற்றும் நேர்முக வரிகள் மூலமும் ஏழைகளுக்கு மானியங்கள் அளிப்பதன் மூலமும் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டத்தை உயர்த்தலாம். இவ்வாறே முதலீட்டை அதிகரிப் பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந் நோக்கில் பணத்தின் அளிப்பை அதிகப்படுத்துவதன் மூலம் வட்டி வீதத்தைக் குறைப்பது, பொது முதலீடுகள் அதிகரிக்கும் வகையில் வரிச்சலுகைகள் அளிப்பது, தனியார்த் துறையைப் பாதிக்காத வகையில் பொதுத்துறை வளர்ச்சி அடைவது, தனியார்த்துறையில் மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் அதிகரிக்கும் வகையில் வசதிகள் அளிப்பது ஆகியவை முக்கியமானவை ஆகும். பொதுத்துறையில் முதலீடு செய் வதற்குத் தேவையான மூலதனத்தைப் பெறுவதற்கு வரிவிதிப் பைக்காட்டிலும் பொதுக்கடன் பெறுவதே சிறந்ததாகும். பற்றாக்குறை நிதியாக்கமும் பயன்படுத்தப்படலாம். பொதுப் பணிக் கொள்கை முறையாகத் திட்டமிட்டுச் செம்மையாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

பணவாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பலமுனை முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பணவாக்கக் கைக்கோள், அரசிறைக் கைக்கோள், நேரடி நடவடிக்கைகள் ஆகியவை யாவும் திறமையுடன் ஒருங்கிணைந்து செயல்படு வதன் மூலமே பணவாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியும்,

11. வாணிபச் சுழல்கள்

பல்வேறு நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் கடந்த கால வரலாற்றை ஒப்பிட்டு நோக்கிடின், அவை சீராக அமையாமல், ஏற்ற இறக்கங்களுடன் அமைந்திருப்பது அறிய வரும். சில காலங்களில் பொருளாதார நடவடிக்கைகள் துரிதகதியில் இயங்கி இருக்கின்றன. அத்தகைய காலங்களில் தேசீய உற்பத்தி, வேலை வாய்ப்புகள், வாரம், வட்டி, கூலி, இலாபம் ஆகியவை உயர்ந்து காணப்பட்டுப் பொருளாதாரச் செழுமை நிலவுகின்றது. இதற்கு மாறாக, வேறு சில காலக் கட்டங்களில் பொருளாதார நடவடிக்கைகள் மந்தமாக இயங்கியிருப்பதும், தேசீய உற்பத்தி, வேலை வாய்ப்பு, வாரம், வட்டி, கூலி, இலாபம் ஆகியவை மிகவும் குறைவாக இருப்பதுவும் தெளிவாகும். பொருளாதார நடவடிக்கைகளில் காணப்படும் இத்தகைய ஏற்ற இறக்கங்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் ஒன்றை ஒன்று தொடர்வதையும் அறியலாம். பொருளாதார நடவடிக்கைகளில் காணப்படும் இத்தகைய ஏற்ற இறக்கங்களே வாணிபச் சுழல்கள்[1] என்றும், தொழிற் சுழல்கள்[2] என்றும் குறிப்பிடப்படுகின்றன. வாணிப நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றங்களையும், தொழிற்துறையில் ஏற்படும் மாற்றங்களையும் குறிப்பிடுவதால், அவை வாணிபச் சுழல்கள் என்றும், தொழிற்சுழல்கள் என்றும் பெயர் பெறுகின்றன. பொருளாதார ஏற்றமும், இறக்கமும் ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாகச் சுழன்று சுழன்று வருவதால், அவை 'சுழல்கள்' எனப்படுகின்றன.

வெஸ்லி சி. மிட்செல்[3] என்பாரின் கருத்து கீழ் வருமாறு: நாட்டின் மொத்தப் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் நெளிவுகளே வாணிபச் சுழல்கள் ; பொருளாதாரப் பூரிப்புக் காலத்தில் ஒவ்வொரு துறையும் வளர்ச்சியடைவதுடன், பொருளாதாரப் பூரிப்பைத் தொடர்ந்து பொருளாதார மந்தம்

[1] Business cycle
[2] Trade cycle
[3] Wesley C. Mitchell

தொடங்குகின்றது. பொருளாதார மந்தக் காலத்தில் ஒவ்வொரு துறையும் மந்தமடைவதுடன், அதைத் தொடர்ந்து பொருளாதாரப் பூரிப்பிற்கான வாய்ப்புகள் உருவாகின்றன.

J. M. கெயின்ஸ்[1], விலை உயர்வு, மிகக் குறைவான வேலையின்மை விகிதம் ஆகிய இயல்புகளைக் கொண்டுள்ள செழுமையான வாணிபச் சூழ்நிலைகளும், விலை வீழ்ச்சி, அதிகமான வேலையின்மை விகிதம் ஆகிய இயல்புகளைக் கொண்டுள்ள மோசமான வாணிபச் சூழ்நிலைகளையும் உள்ளடக்கியதே தொழிற்சுழல்கள் என்று விளக்குகின்றார்.

வான் ஹெபர்லர்[2] 'வாணிபச் சுழல் என்பது வேளாண்மை நடவடிக்கைகள், அதன் உற்பத்தி, வேலைமட்டம் ஆகிய வற்றில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளே' என்று வாணிபச் சுழல்களை விளக்குகின்றார். 'நியதியற்ற சில அதிர்வுகளின் விளைவே வாணிபச் சுழல்கள்' என்று டிம்பர்கன்[3] கருது கின்றார்.

பேராசிரியர் ஹாட்ரே பணத்தின் அளவிலும், அதன் விளைவாக விலைமட்டத்திலும் ஏற்படும் நெளிவுகளே வாணிபச் சுழல்கள்; வாணிபச் சுழல்களின் போக்கில் ஏற்படும் அமிதமான வேகம், அதற்கான தீர்வை அளிப்பதுடன் அதற்கு நேர்மாறான போக்கிற்கான அடிப்படைக் காரணங்களுக்கும் வழிகோலுகின்றது என்று குறிப்பிடுகின்றார்.

வாணிபச் சுழலின் இயல்புகள்

வாணிபச் சுழல்கள் பற்றிய மேற்காணும் விளக்கங்களி லிருந்து வாணிபச் சுழல்களுக்குக் கீழ்க்காணும் இயல்புகள் இருப்பது தெளிவாகும்: வாணிபச் சுழல்களின் பல்வேறு கட்டங்களும் ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக மாறி மாறிச் சுழன்று சுழன்று தோன்றுகின்றன ; ஆயினும், அவை சம அளவில் நிலவ வேண்டும் என்பதும், தீவிரமானதாக இருக்க வேண்டும் என்பதும் நியதியன்று. அவற்றின் தீவிரமும் மாறு படுகின்றன. சில வாணிபச் சுழல்கள் மிகவும் தீவிரமானவை யாகவும், சில மேலோட்டமாகவும் அமையக் கூடும்.

வாணிபச் சுழல்களின் இயல்புகளை அமெரிக்கப் பொரு ளாதாரக் கழகத்தினர் பின் வருமாறு வரையறுத்துள்ளனர்:

[1] J. M Keyness
[2] Von Heburler
[3] Timbergan

(1) விலைமட்டமும், உற்பத்தியும் ஒரே கதியில் இயங்கு கின்றன. விலை அதிகரித்தால் உற்பத்தியும் அதிகரிக்கும்; விலை குறைந்தால் உற்பத்தியும் குறையும். வாணிபச் சுழல் களின் பொதுவான இவ்வியல்புக்கு ஒரே விதிவிலக்காக வேளாண்மைத் தொழில்களைக் குறிப்பிடலாம். விவசாயப் பொருள்களின் விலை, மந்த காலத்தில் குறையுமானால், முன்பு நிலவிய அளவு வருமானத்தைப் பெறுவதற்காக விவசாயிகள் அதிக உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். எனவே, வேளாண் மைத் துறை நீங்கலாக மற்றத் துறைகள் யாவற்றிலும் உற்பத் தியும், விலைமட்டமும் ஒரே போக்கில் அமைகின்றன.

(2) நுகர்ச்சிப் பொருள்கள், எளிதில் அழியும் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் வேலை வாய்ப்பிலும் ஏற்படும் மாற்றங்களைக்காட்டிலும் நீடித்த உறுதியான பொருள்கள்[1], மூலதனப் பொருள்கள்[2] ஆகியவற்றின் மொத்த உற்பத்தி யிலும், வேலை வாய்ப்பிலும் ஏற்படும் மாற்றங்கள் அதிக மாகும்.

(3) மொத்த உற்பத்தி, வேலை வாய்ப்பு, விலைமட்டம் ஆகியவற்றில் ஏற்படும் பெரும் மாற்றங்களுடன் தொடர்ந்து பொதுவாகச் செலாவணி, கடன், பணத்தின் சுழல்வேகம் ஆகியவற்றிலும் பெருமளவில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

(4) வேளாண்மைப் பொருள்களின் விலை பொதுவாக அதிகமாக நெகிழ்ச்சியடைகின்றன. அவற்றுடன் செய் பொருள்களை[3] ஒப்பிடின், செய்பொருள் உற்பத்தியாளர்கள்[4] உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதால், அத்தகையப் பொருள் களின் விலைகள் மாற்றமடைவதில்லை.

(5) வாரம், வட்டி, கூலி ஆகியவற்றைக்காட்டிலும் இலாபம் பெருமளவில் ஏற்ற இறக்கத்திற்கு உள்ளாகின்றது.

(6) தொழில்கள் பலவும் ஒன்றுடன் ஒன்று இணைந் திருப்பதால், ஒரு தொழில் ஏற்படும் நெளிவுகள் மற்றத் தொழில்களுக்கும் பரவுகின்றன. எனவே, வாணிபச்சுழல்கள் விரைவில் அனைத்துத் தொழில்களுக்கும் பரவுகின்றன.

(7) ஒரு நாட்டில் ஏற்படும் பூரிப்பு, மந்தம் ஆகியவை அந் நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்டுள்ள மற்ற நாடு

[1] Durable goods
[2] Capital goods
[3] Manufacture goods
[4] Manufacturers

களுக்கும் பரவுகின்றன. அயல்நாட்டு வாணிபத்தின்மூலம் வாணிபச் சுழல்கள் உலகம் முழுமையும் பரவுகின்றன.

பல்வேறு வாணிபச் சுழல்களிடையிலும் மேற்காணும் இயல்புகள் நிலவுகின்றன. ஆயினும், கீழ்க்காணும் இயல்புகள் ஒவ்வொரு சுழலிலும் வேறுபடுகின்றன என்று அமெரிக்கப் பொருளாதாரக் கழகத்தினர் கருதுகின்றனர் :

(1) ஒவ்வொரு சுழலும் சராசரி $3\frac{1}{3}$ ஆண்டுகள் நிலவு கின்றது என்பது மாறுபடுகின்றது.

(2) சுழல்களின் தீவிரம் நிச்சயமற்றதாகும். எடுத்துக் காட்டாக, ஒவ்வொரு சுழலிலும் உற்பத்தி எத்தனை சதவிகிதம் மாறும் என்பதை அறுதியிட்டுக் கணிக்க இயலாது.

(3) சில சுழல்களைப் பொறுத்த வரையில், பூரிப்புக் காலத்தில் முழு வேலைமட்டம் எய்திய பின்னரும் மாறாமல் இருக்கின்றது; சிலவற்றில் உச்சக் கட்டம் எய்திய பின்னரும் வேலையின்மைப் பிரச்சினை இருக்கக் கூடும்.

(4) வாணிபச் சுழல்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை ஆயினும், அவை இரட்டைப் பிறவிகள் அன்று; ஒன்றிலிருந்து ஒன்று பல்வகைகளிலும் வேறுபடுகின்றன.

(5) எதிர்காலப் பொருளாதார நடவடிக்கையை எளிதாகக் கணிக்கவியலாது.

வாணிபச் சுழல் வகைகள்

பொதுவாக, வாணிபச் சுழல்கள் பருவகால நெளிவுகள்[1] நியதியற்ற நெளிவுகள்[2], சுழல் நெளிவுகள்[3], நெடுங்கால நெளிவுகள்[4] என்று நான்கு வகைப்படும்.

பருவகால நெளிவுகள் குறுங்கால வாணிபச் சுழல்கள் ஆகும். பருவநிலைக்கு ஏற்ப வாணிப நடவடிக்கைகளில் ஏற்படும் பூரிப்பையும், மந்தத்தையும் இது குறிக்கும். எரிமலை யின் குமுறல், பூகம்பம், கொள்ளை நோய்கள் போன்ற நாட்டின் உற்பத்தி சக்தியைப் பாதிக்கும் நிகழ்ச்சிகளாலும், மன்னரின் முடிசூட்டு விழா, போர் ஆகியவற்றாலும் ஏற்படும்

[1] Seasonal fluctuations
[2] Random fluctuations.
[3] Cyclical fluctuations
[4] Secular fluctuations

பொருளாதாரப் பூரிப்பும், அதைத் தொடர்ந்து வரும் மந்தமும் நியதியற்ற நெளிவுகளாகும். சுழல் நெளிவுகள் வாணிப நடவடிக்கைகளில் அலை அலையாக ஏற்படும் நெளிவு களைக் குறிப்பிடும். சுழல் நெளிவுகள் வாணிப நடவடிக்கை களில் குறுங்காலச் சுழல்கள் ஆகும். பல சிறு சுழல்கள் சேர்ந்து பெருஞ்சுழல் உருவாகின்றது. மக்கள் தொகையின் பெருக்கமும், தொழில் நுணுக்க வளர்ச்சி போன்றவையால் ஏற்படும் நெடுங்கால மாற்றங்கள் நெடுங்கால நெளிவுகள் ஆகும்.

வாணிபச் சுழல்களைப் பெருஞ்சுழல்கள்[1] என்றும், சிறு சுழல்கள்[2] என்றும் வகைப்படுத்துவது வழக்கம். பெருஞ் சுழல்கள் எட்டு ஆண்டுக் காலம் நிலவக் கூடியவை. பெருஞ் சுழல்கள் என்பவை பல்வேறு சிறு சுழல்கள் அடங்கியவை. ஒவ்வொரு சிறு சுழலும் சராசரி $3\frac{1}{3}$ ஆண்டுகள் அல்லது 40 திங்கள்கள் நிலவக்கூடியவை. பெருஞ்சுழல்களின் ஒரு பகுதியாகச் சிறு சுழல்கள் நிலவுவதால், அவற்றை ஊசலாடும் சமநிலை[3]யாகக் கொள்வதே வழக்கம். சிறு சுழல்களைக் காட்டிலும் பெருஞ்சுழல்களே சமுதாயத்தைப் பல்வேறு வகை களிலும் பாதிப்பதால் அவையே முக்கியத்துவம் பெறுகின்றன. பெருஞ்சுழல்களை ஜூக்லார்[4] சுழல்கள் என்றும் குறிப்பிட லாம்.

வாணிபச் சுழலின் கட்டங்கள்[5]

ஒவ்வொரு வாணிபச் சுழலிலும் ஏறுமுகமும், இறங்கு முகமும் உள்ளன. இவ்விரு கட்டங்களுக்கு இடையே நான்கு அல்லது ஐந்து கிளைக் கட்டங்களும் உள்ளன. வாணிபச் சுழல்களின் பல்வேறுபட்ட கட்டங்கள் பற்றி ஒருமித்த கருத்து இல்லையெனினும், பொதுவாக அவை மந்தம்[6], மீட்சி[7], முழு வேலைமட்டம், பூரிப்பு[8], பின்னிறக்கம்[9] என்று குறிப்பிடப்படு கின்றன. பணவியலில் இவ்வைந்து கட்டங்களுக்கும் சம மானவையாக மந்தம், பணச்சுருக்கம், முழு வேலைமட்டம், பணப் பெருக்கம், பணவீக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட லாம்.

[1] Major cycles
[2] Minor cycles
[3] Oscillating equilibrium
[4] Juglar
[5] The stages of trade cycles
[6] Depression
[7] Recovery
[8] Boom
[9] Recession

கீழேயுள்ள வரைபடத்தில் வாணிபச் சுழலின் பல்வேறு முகங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. 'மு. வே' கோடு முழு வேலைமட்ட நிலையைக் குறிப்பதாகும். இக் கோட்டிற்கு மேல் பொருளாதாரப் பூரிப்பும், கீழே பொருளாதார மந்தமும்



படம் 12

உள்ளன. வாணிபச் சுழல் ஒரு தொடர் நிகழ்ச்சியாதலால், அஃது எங்கு தொடங்குகின்றதென்பதை வரையறுக்கவியலாது. எனினும், வாணிபச் சுழலின் கீழ்ப்பகுதியிலிருந்து தொடங்குவது வழக்கமாகும்.

1. மந்தம்: பொருளாதார மந்தத்தின்பொழுது நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் மிகவும் குறைந்தே காணப்படும். விலைமட்டம் மிகவும் குறைவாகக் காணப்படுவதால், உற்பத்தியாளர்கள் போதிய இலாபமின்றி இழப்பிற்கு உள்ளாகின்றனர். போதிய ஊக்குவிப்பு இன்மையால் அவர்கள் உற்பத்தியிலீடுபடுவதில்லை. அதன் விளைவாக வேலையின்மைப்பிரச்சினை தொடங்கித் தொடர்ந்து அதிகரிக்கின்றது. வட்டி வீதம், வாரம், கூலி ஆகியவை மிகவும் குறைவாகவே காணப்படும். இதன் விளைவாகச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும், பல்வேறு வகைகளிலும், பல்வேறு அளவுகளிலும் பாதிக்கப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக, விலைமட்டத்திற்கு ஏற்ப உற்பத்தி அளவை மாற்றியமைக்க முடியாமையால் வேளாண்மைப் பொருள்களின் விலைமட்டம் மிகவும் குறைவ

தால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுவர். தொழில் துறையினர் அந்த அளவிற்குப் பாதிக்கப்படுவதில்லை. வருமானம் குறைந்து விடுவதாலும், வேலையின்மைப் பிரச்சினை அதிகரிப்பதாலும், தொழிலாளர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். குறைவான வருமானம், வேலையின்மைப் பிரச்சினை ஆகியவற்றால் பாதிக்கப்படுவதால் பொதுமக்களிடையில் சோர்வு நோக்கே நிலவும்.

2. மீட்சி: மந்தம் தொடர்ந்து நிலவுவதன் விளைவாகப் பொருள்களின் செலவு-விலை விகிதத்தில்[1] மாற்றங்கள் ஏற்படுகின்றன. கையிருப்புச் சரக்குகள் குறைவதால், பண்டங்களின் அளிப்பு குறைவதன் விளைவாக, விலைமட்டம் அதிகரிக்கத் தொடங்கும். நெடுவாழ்வுப் பண்டங்கள் தேய்மானமடைவதால், பழையனவற்றிற்குப் பதிலாகப் புதியனவற்றை உற்பத்தி செய்வது அவசியமாகின்றது. சிறிது சிறிதாகப் பண்டங்களுக்கான தேவை அதிகரிப்பதால் பற்றாக்குறை தோன்றுகின்றது. இதன் விளைவாகப் பொருளாதார மந்தத்திற்குக் காரணமான சக்திகள் குறைய ஆரம்பிக்கின்றன. மந்த காலத்தில் தொடங்கிய கூலிக் குறைவு, வட்டி வீதக் குறைவு, வாரமட்டக் குறைவு ஆகியவற்றின் விளைவாகப் பொருள்களின் உற்பத்திச் செலவு குறைவதால், உற்பத்தித் துறையில் கணிசமான இலாபம் கிட்டுகின்றது.

பங்குமாற்றுச் சந்தையில் பங்குகளின் விலைகள் உயர ஆரம்பிக்கின்றன. பங்குகளின் விலையேற்றம் உற்பத்தி அதிகரிப்பிற்கு வழி கோலுகின்றது. அதன் விளைவாகப் பொருளாதார மீட்சிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. சூழ்நிலை மாற்றமடைவதால் பாங்குகளின் கடனளிப்புக் கொள்கை எளிமையடைவதால், உற்பத்தியாளருக்கு மூலதனம் எளிதில் கிடைக்கத் தொடங்குகின்றது. இதன் விளைவாகப் பொருளாதார நடவடிக்கைகள் ஆக்கம் பெறுகின்றன. பண்டங்களுக்கும் பணிகளுக்குமான தேவை அதிகரிப்பதால், அவற்றின் உற்பத்தியும் அதிகரிக்கின்றன. பொருள்களின் விலைமட்டம், கூலி, வட்டி வீதம், இலாபம், வாரம் ஆகியவை அதிகரிக்கின்றன; வேலைமட்டமும் தேசீய உற்பத்தியும் அதிகரிக்கின்றன. மக்களிடையில் ஆர்வ நோக்கு துளிர்க்கின்றது. பொருளாதார நடவடிக்கைகள் துரித கதியில் இயங்க ஆரம்பிக்கின்றன. மக்களுடைய வருமானம் பெருக்கமடை

[1] Cost-price ratio

கின்றது. அதிகரித்த வருமானத்தில் ஒரு பகுதி செலவிடப்படு வதால், மீண்டும் வருமானம் அதிகரிக்கின்றது; இவ்வாறு மீட்சிக்கான அடிப்படை ஆரம்பித்தவுடன், வெகு விரைவில் செயல்படத் தொடங்குகின்றது.

3. முழு வேலைமட்டம்: மீட்சி நடவடிக்கைகள் சங்கிலித் தொடராக நிகழ்வதன் விளைவாக, முழு வேலைமட்டம் எய்தப்படும். முழு வேலைமட்டம் என்பது, நாட்டில் உள்ள விரும்புவோர் அனைவருக்கும் ஏற்ற வேலைகள் கிடைக்கும் நிலையாகும். சிலர் வேலையின்றி இருக்கக் கூடுமாயினும், அத்தகையோர் தன்னிச்சையாகவே வேலையின்றி இருப்போர் ஆவார். விரும்புவோர் அனைவருக்கும் வேலை கிடைப்பின் முழு வேலைமட்டம் எய்திவிட்டதாகக்கொள்ளலாம். இக் காலத்தில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் உச்சக் கட்டத்தை அடைகின்றன. தேசீய உற்பத்தி, வேலைமட்டம், கூலிமட்டம், வட்டி வீதம், வாரம், இலாபம் ஆகியவை உச்ச அளவை அடைவதுடன், நிலைப்படுத்தவும் படுகின்றன. சில நாடுகளில் முழு வேலைமட்டம் எய்தப்படாமலேயே பொரு ளாதார நடவடிக்கைகள் பின்னிறக்க நிலையை அடையவும் வாய்ப்பு உண்டு.

4. பூரிப்பு: மீட்சி நடவடிக்கைகள், முழு வேலை மட்டம் எய்தியதுடன் நின்றுவிடாமல், முன்னதைக்காட்டிலும் வெகு வேகமாக இயங்குவதால், பூரிப்பு தோன்றுகின்றது. வேலைமட்டம் முழுமை எய்திய பின்னரும் முதலீடு அதிகரித் துக்கொண்டேயிருப்பதால், உழைப்பிற்கும், பண்டங்களுக்கு மான தேவை அதிகரிக்கின்றது. அதன் விளைவாக விலைமட்டமும் கூலியும் அதிகரிக்கின்றன. பொருளாதார நடவடிக்கைகள் துரித கதியில் இயங்குகின்றன. புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்படும்; புதிய கட்டடங்கள் கட்டப்படுவதுடன், புதுப்புதுத் தொழில்கள் தொடங்கப் படுகின்றன; வெகு குறுகிய காலத்தில் ஒரு வினோதமான நிலையே உருவாகின்றது. அதாவது, வேலை வாய்ப்புகள் மிகையாகவும், உழைப்பாளர்களின் எண்ணிக்கை குறை வாகவும் அமையும். தொழிலாளர்கள் பற்றாக்குறையின் விளைவாக, ஊதியம் பன்மடங்காக அதிகரிக்கும்; இலாபமும் வட்டி வீதமும் அதிகரிக்கும்; வங்கிக் கடனின் அளவும் அதிகரிக்கும்; பல்வேறு பகுதியிலும் ஆர்வ நோக்கு ஓங்கி நிற்கும். ஆனால், பூரிப்பை அடைந்துள்ள பொருளாதார நடவடிக்கைகளின் ஊடே பூரிப்பைக் குலைக்கும் வித்துக்

களும் உருவாகின்றன. உற்பத்திக் காரணிகளின் ஊதியம் பன்மடங்காக உயர்ந்துவிடுவதால், உற்பத்தியாளர்களின் இலாபம் பற்றியக் கணிப்பு எதிர்பார்க்கும் அளவில் வெற்றி யடைவதில்லை. இதன் விளைவாக உற்பத்தியாளர்கள் மிகை யான முன்னெச்சரிக்கையுடன் செயல்படத் தொடங்கு கின்றனர். எதிர்காலம் பற்றிய அவர்களுடைய மிகையான கணிப்பே, எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கைக்கு வழி கோலு கின்றது. மக்களுடைய ஆர்வ நோக்கு தளர்ச்சியடைகின்றது. இக் காலத்தில் எங்கேனும் ஒரு நிறுவனமோ அல்லது வங்கியோ முறிவடைந்தால், அதைத் தொடர்ந்து சங்கிலித் தொடர் போலப் பல்வேறு நிறுவனங்களும் முறிய ஆரம்பிக் கின்றன.

5. **பின்னிறக்கம்:** எதிர்காலம் பற்றிய உற்பத்தியாளர் களின் கணிப்புகள் மிகையான நம்பிக்கையுடனும், அவசர மானதாகவும் அமைவதால், அவர்களுடைய கணிப்புகள் தோல்வியுறத் தொடங்குகின்றன. ‘பொருளாதாரப் பூரிப்பு’க் காலத்தில் அவர்கள் காணும் இனிமையான கனவுகள், கொடுமையான நனவுகளாகின்றன. மிகையானவையும் அவசரமானவையுமான அவர்களுடைய கணிப்புகள் தோல்வி யுறுவதன் விளைவாக அவர்கள் எதிர்காலம் மீது அச்சம், அவநம்பிக்கை, எரிச்சல் கொள்கின்றனர். புதிய தொழிற் சாலைகளைத் தொடங்குவது தவிர்க்கப்படுவதுடன், சில தொழில்கள் மூடவும் படுகின்றன. உற்பத்தியாளர்களிடம் காணப்படும் இவ்வவநம்பிக்கை, வங்கிக் கடன் கொள்கை மீதும் பிரதிபலிக்க ஆரம்பிக்கின்றது. வங்கி முறிவுக்கு[1] அஞ்சும் வங்கிகள் கடனளிப்பதைக் குறைக்க ஆரம்பிப்பதால், மூலதனப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. அதன் விளைவாகப் பொருளாதார நடவடிக்கைகளின் இயக்கம் தடைப்படுகின்றது. பொதுமக்களிடையில் ரொக்க விருப்பம்[2] அதிகரிப்பதால், முதலீட்டின் அளவும் குறைகின்றது. கட்டுமானத் தொழில்கள்[3] தவிர்க்கப்படுவதால், அத் தொழிலில் வேலையின்மைப் பிரச்சினை உருவாகி, தொடர்ந்து மற்றத் தொழில் துறை களுக்கும் பரவுகின்றது. பெருக்கி[4] செயல்படுவதன் விளை வாக வேலையின்மைப் பிரச்சினை வெகு வேகமாகவும், வெகு தீவிரமாகவும் பரவுகின்றது. தேசீய வருமானம், தேசீய செலவு, விலைமட்டம், இலாபம், தொழில், மற்றும் வாணிப

[1] Bank failures
[2] Liquidity preference
[3] Construction industries
[4] Multiplier

நடவடிக்கைகள் யாவும் வீழ்ச்சியுறுகின்றன. பங்குமாற்றுச் சந்தையில் குழப்பங்கள் ஏற்படுவதால், பங்குகளின் விலைகள் வீழ்ச்சியுறுகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் வீழ்ச்சியுறத் தொடங்கினால், மீண்டும் அவற்றைப் புதுப்பிப்பதற்கான வாய்ப்புகள் அற்றுப் போகின்றன; வெகு விரைவில் மந்த நிலை உருவாகின்றது.

மேற்காணும் வகையில் வாணிபச் சுழலின் பல கட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டாலும், அவை ஒரே விதமாக அமையுமென்ற நியதியில்லை. வாணிபச் சுழலின் போக்கு, சில காலங்களில் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி அமையக் கூடும் ; ஒவ்வொரு கட்டத்திற்குமிடையேயான காலம் மாறலாம்.

வாணிபச் சுழல் பற்றிய கோட்பாடுகள்

வாணிபச் சுழல்களின் தெளிவற்ற, குழப்பமான போக்கின் விளைவாக, அதனை ஆராய முற்படும் பல்வேறு கோட்பாடுகளும் முழுமையற்றே விளங்குகின்றன. வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்குத் தனியான ஒரு காரணம் ஏதுமில்லை என்பதால், அதனை விளக்க முற்படும் கோட்பாடுகளும் குறையுடையவையாகவே விளங்குகின்றன. தொன்மைநூல் பொருளாதார அறிஞர்கள்[1] வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்கு வாய்ப்பேயில்லை என்று கருதினர். அரசின் தலையீடு, தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றின் விளைவாகவே வேலையின்மைப் பிரச்சினை தோன்றுவதாகவும், நாட்டில் நிறைவுப் போட்டி நிலவினால் வேலையின்மைப் பிரச்சினை தோன்றுவதற்கில்லை என்றும் அவர்கள் கருதினர். தொன்மைநூல் பொருளாதார அறிஞர்களுள் ஒருவரான ஜே. பி. சே[2] என்பாரே, வாணிபச் சுழல்கள் பற்றி முறையாக ஆய்ந்தவர் ஆவார். அவர் வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்கே வாய்ப்பில்லை என்று கருதினார். இக் கருத்தை வலியுறுத்தும் வகையில் அவருடைய அங்காடி விதி[3] அமைந்துள்ளது. சேயின் அங்காடி விதிப்படி, பொருள்களுக்கு ஈடாகப் பொருள்கள் பரிவர்த்தனை செய்யப்படுவதால், உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பொருளின் விளைவாகவும் மற்றொரு பொருளுக்குத் தேவை ஏற்படுகின்றது. நிறைவுப்

[1] Classical Economists
[2] J. B. Say
[3] Law of market

போட்டி நிலவும்பொழுது உழைப்பும் மூலதனமும் தடையின்றி இடம் பெயர்வதால் பொருள்கள் உற்பத்திச் செய்யப்படும் பொழுதே அதற்கான தேவையும் தோன்றி விடுகின்றது. எனவே, வெளிக்காரணங்களின் தலையீடு இல்லாவிடில், பொருள்களின் அளிப்பே தேவையை உருவாக்கி விடுகின்றது. உற்பத்தியும், தேவையும் சமநிலை எய்தினால், வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்கில்லை என்பதே அவருடைய கருத்தாகும்.

தொன்மைநூல் பொருளாதார அறிஞர்கள், வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை என்று கருதிடினும், தற்காலப் பொருளாதார வல்லுநர்கள் வாணிபச் சுழல்களை ஆராய்ந்து அளித்துள்ளனர். வாணிபச் சுழல்களை விளக்கும் கோட்பாடுகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை யாவன:

(1) மெய்யான காரணங்கள்[1]

(2) உளத்தத்துவக் காரணங்கள்[2]

(3) பணவழிக் காரணங்கள்[3]

(4) சேமிப்பு-செலவு மாற்றங்களால் ஏற்படும் காரணங்கள்[4].

மெய்யான காரணங்களை அடிப்படையாகக்கொண்டுள்ள கோட்பாடுகள், உற்பத்தி முறை, நுகர்வோரின் சுவை போன்றவை மாறுவதால் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றங்களை விளக்கும். மனிதர்களின் உளப்பாங்கு மாற்றமடைவதால் ஏற்படும் பொருளாதார மாற்றங்களை விளக்குபவை உளத்தத்துவக் கோட்பாடுகள் எனப்படும். பணத்தின் அளிப்பில் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக்கொண்டு வாணிபச் சுழல்களை விளக்கும் கோட்படுகள் பணவழிக் கோட்பாடுகள் எனப்படும். நாட்டின் மொத்த சேமிப்பிலும், முதலீட்டிலும் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகவே வாணிபச் சுழல்கள் ஏற்படுகின்றன என்று விளக்குபவை நான்காவது வகைக் கோட்பாடுகள் ஆகும்.

1 Real causes
2 Psychological causes
Monetary causes
Causes associates with variations in spending and saving

காலநிலைக் கோட்பாடு[1]: வாணிபச் சுழல்கள் பற்றிய கோட்பாடுகளில் காலநிலைக் கோட்பாடே மிகப் பழமையான விளக்கம் ஆகும். இக் கோட்பாட்டின்படி சூரியனின் புறப் பரப்பில் அவ்வப்பொழுது ஏற்படும் புள்ளிகளுக்கு ஏற்பவே கால நிலைகள் மாறுகின்றன. மோசமான காலநிலை ஏற்பட்டால் விவசாயம் பொய்க்கின்றது. அறுவடை தோல்வி யுறுவதால், விவசாயிகளின் வருவாய் குறைகின்றது. எனவே, தொழிற்துறைப் பொருள்களுக்கான தேவையும் வீழ்ச்சியடை கின்றது. சாதகமான பருவநிலை தோன்றினால், இதற்கு எதிர்மாறான விளைவுகள் ஏற்படுகின்றன. பருவநிலையில் ஏற்படும் மாற்றங்கள், பகலைத் தொடர்ந்து இரவு வருவது போலத் தொடர்ந்து ஏற்படுவதால், பொருளாதாரச் செழுமை யும், மந்தமும் தொடர்ந்து ஏற்படுகின்றன.

சூரியப் புள்ளிக் கோட்பாடு[2] என்று அறியப்படும் பருவ நிலைக் கோட்பாடு உருவாவதற்கு ஜெவான்ஸ்[3], மூர்[4] ஆகியோர் காரணமாவார்கள். தற்காலத்தில் இக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. விவசாயத் துறையில் ஏற்படும் தோல்விகள் தொழிற்துறையையும் பாதிக்கும் எனும் உண்மையை மறுப்பதற்கு இயலாது. ஆயினும், பருவ நிலையில் ஏற்படும் மாற்றங்கள் மட்டுமே வாணிபச் சுழல்கள் ஏற்படக் காரணம் என்பதை ஏற்பது இயலாததாகும். இக் கோட்பாடு சரியானதாயின் விவசாயமல்லாத துறைகளில் வாணிபச் சுழல்களின் விளைவுகள் தீவிரமற்றுக் காணப்படுவ துடன் ஒரு நாடு தொழில் மயமாகும்பொழுது அந் நாட்டில் வாணிபச் சுழல்கள் மறைந்து விடுவது அல்லது குறைந்து விடுவது அவசியமாகும். ஆனால், நடைமுறையில் தொழில் மயமாகிவிட்ட முன்னேறிய நாடுகளை வாணிபச் சுழல்கள் தீவிரமாகப் பாதிக்கின்றன என்பதால், இக் கோட்பாடு குறை யுடையது என்பது தெளிவாகும்.

உளத்தத்துவக் கோட்பாடு[5]: வணிகர்களின் மனப் பாங்கில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பவே பொருளாதார நடவடிக்கைகள் அமைகின்றன என்று விளக்கும் கோட்பாடே உளத்தத்துவக் கோட்பாடாகும். வணிகர்களிடையில் ஆர்வ நோக்கு[6] ஓங்கி நிலவினால் அதன் விளைவாகச் செழுமையும்,

[1] Climatic theory
[2] Sun-spot theory
[3] W. S. Jevons
[4] H. C. Moore
[5] Psychological theory
[6] Optimism

சோர்வு நோக்கு[1] நிலவினால் அதன் விளைவாக மந்தமும் ஏற்படும் என்பது இக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாகும். இக் கோட்பாடு உருவாவதற்குக் காரணமானோரில் ஒருவரான ஜான் ஸ்டூவர்ட் மில்[2] என்பார், வாணிப நடவடிக்கைகளை நிர்ணயிப்பதில் பொருளாதாரக் காரணங்களைக்காட்டிலும் உளத்தத்துவக் காரணங்களே முக்கியமானவை என்று கருதினார். ஆயினும், பேராசிரியர் பிகு[3] அவர்களே உளத் தத்துவக் காரணங்களையும், அதன் பொருளாதார விளைவுகளையும் தொடர்புபடுத்தி வாணிபச் சுழல் பற்றிய கோட்பாட்டை முதன்முதலில் உருவாக்கியவர் ஆவார். அவருடைய கருத்துப்படி, கூட்டமுறை உளவியலில்[4] இருந்தும், கூட்டமுறை மனக் குழப்பங்களில் இருந்தும் வணிகர்கள் விடுபட்டவர்கள் அல்லர். சாதாரணமானவர்களைப் போன்றே அவர்களும் மற்றவர்களின் செயல்களால் பாதிக்கப்படுகின்றனர்; மற்றவர்களைப் போன்றே செயல்படுகின்றனர். ஒரு வணிகர் எதிர்காலத்தைப் பற்றி மிகையாக மதிப்பிட்டு, அமித இலாபம் பெறும் நோக்குடன் ஆர்வ நோக்குடன் செயல்படத் தொடங்கினால் மற்றவர்களும் அவரைப் போன்றே செயல்படத் தொடங்குகின்றனர். எதிர்காலத்தைப் பற்றி மிகையாக மதிப்பிடுவதன் விளைவாக, முதலீடும், உற்பத்தியும், உத்தம அளவையும் மீறுகின்றன; ஊக வாணிப நடவடிக்கைகள் அதிக அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. அமிதலாப போதைக்கு அடிமையான உற்பத்தியாளர்கள் எதிர்காலம் பற்றி மிகையாக மதிப்பிடுவதன் விளைவாக இலாபமளிக்க முடியாத செழிப்புறவியலாத தொழில்களைக்கூடத் தொடங்குகின்றனர். எனவே, ஒருகாலக் கட்டத்திற்குப் பின்னர் நுகர்வைக்காட்டிலும் உற்பத்தி அதிகமாகின்றது. தேவையைக் காட்டிலும் அளிப்பு அதிகமாகின்றது. எனவே, விலைமட்டம் வீழ்ச்சியடைந்து, உற்பத்தியாளருக்கு இழப்பு ஏற்படுகின்றது. இழப்பிற்கு ஆளான உற்பத்தியாளர்களின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படுகின்றது. எதிர்காலம் பற்றிய தமது கணிப்புகள் தோல்வியுற்றதை உணர்ந்த வணிகர்கள் மறுதிசையில் தீவிரமாகச் செயல்படுகின்றனர். அதன் விளைவாக உற்பத்தி அளவுகள் குறைக்கப்படுவதும், பொருள்களின் உற்பத்தி நிறுத்தப்படுவதுமான சூழ்நிலை தோன்றுகின்றது. இவ்வாறு

1 Pessimism
2 John Stuart Mill
3 Prof. Pigou
4 Mass psychology

வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்கு வணிகர்களின் உளப்பாங்கில் ஏற்படும் மாற்றங்களே காரணமாக அமைகின்றன என்று உளத்தத்துவக் கோட்பாடு விவரிக்கின்றது.

வணிகர்களின் நம்பிக்கையே வணிக நடவடிக்கைகளை நிர்ணயிக்கின்றன எனும் உண்மை இக் கோட்பாட்டில் காணப் படுகின்றது. ஆயினும், வணிகர்களிடையில் ஆர்வ நோக்கு, சோர்வு நோக்கு ஆகியவை தோன்றுவதற்குக் காரணம் எது என்பதை இக் கோட்பாடு விளக்குவதில்லை. வாணிப நெளிவுகளின் தீவிரத்தை நிர்ணயிப்பதில் உளப்பாங்கு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆயினும், வாணிபச் சுழல்கள் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பின்னர்த் தொடர்ந்து ஏற்படுவது எவ்வாறு என்பதையும் இக் கோட்பாடு விளக்குவதில்லை.

ஹாட்ரேயின் பணவழிக் கோட்பாடு[1]: 'வாணிபச் சுழல்கள் முற்றிலும் ஒரு பணத்துறை நிகழ்ச்சியே' என்று ஆர். ஜி. ஹாட்ரே கருதுகின்றார். அவருடைய கோட்பாடு ஒரு தூய பணவழிக் கோட்பாடாகும்[2]. அவர்தம் கருத்துப்படி, போர், பூகம்பம், வேலை நிறுத்தங்கள், வேளாண்மைத் தோல்விகள் போன்ற சில நிகழ்ச்சிகளின் விளைவாக நாட்டில் பொருளாதார மந்தங்கள் ஏற்படக்கூடுமாயினும் அத்தகைய மந்தங்கள் தற்காலிகமானவை ஆகும். தற்காலிக மந்தங்களின் விளைவாக நிரந்தரமான மந்தமும், பேரளவு வேலையின்மைப் பிரச்சினையும், வாணிபச் சுழல்களும் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால், பணத்தின் அளிப்பில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகப் பொருளாதார நடவடிக்கைகள் மாற்றமடைகின்றன. அதன் விளைவாகச் செழுமை, மந்தம், பூரிப்பான வாணிப நிலவரங்கள், சீர்கேடுற்ற வாணிப நிலவரங்கள் ஆகியவை தோன்றுகின்றன.

முழுமையான பணவீக்கம், பணவாட்டம் ஆகியவற்றின் சுருக்கப் பதிப்பாகவே பூரிப்பும், மந்தமும் கருதப்பட வேண்டும் என்று ஹாட்ரே வாதிடுகின்றார். அவர்தம் கருத்துப்படி, பணத்தின் அளவு, பாங்குக்கடனின் அளவு, பணத்தின் சுழல்வேகம் ஆகியவை அதிகரிப்பதன் விளைவாகவே வாணிபச் சுழல்களில் ஏறுமுகம்—மீட்சி, செழுமை, பூரிப்பு ஆகியவை—தோன்றுகின்றன. இதற்கு எதிர்மாறாகப்

[1] Hawtrey's monetary theory
[2] Pure monetary theory

பணத்தின் அளிப்பு, பாங்குக்கடனின் அளவு, அவற்றின் சுழல் வேகம் ஆகியவை குறையும்பொழுது, வாணிபச் சுழலின் இறங்குமுகம் தோன்றுகின்றது. வாணிபச் சுழலின் இறங்கு முகத்தின் இயல்புகளுக்கும் பணவாட்டத்தின் இயல்புகளுக்கு மிடையில் பெரும் வேறுபாடு ஏதுமில்லை. எனவேதான் பணவீக்கம், பணவாட்டம் ஆகியவற்றின் பிரதிபலிப்பே வாணிபச் சுழல்கள் என்று ஹாட்ரே கருதுகின்றார்.

ஹாட்ரேயின் கருத்து பின் வருமாறு: வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்குக் காரணம் பணத்தின் அளிப்பு நெகிழ்ச்சி மிக்கதாக இருப்பதே ஆகும். பணத்தின் அளிப்பு நெகிழ்ச்சி அற்று இருப்பின், வாணிபச் சுழல்கள் தோன்ற மாட்டா. பணத்தின் அளிப்பு நெகிழ்ச்சி மிக்கதாக இருப்பதுடன், பாங்குத்துறையும் நெகிழ்ச்சி மிக்கதாக இருப்பதால், பாங்குக் கடன் வசதிகளும் நெகிழ்ச்சி மிக்கவையாகக் காணப்படு கின்றன. பணத்தின் அளிப்பும் பாங்குக்கடனும் நெகிழ்ச்சி மிக்கவையாக அமைவதால், அவற்றில் ஏற்படும் மாற்றங் களுக்கு ஏற்பவே பொருளாதார நடவடிக்கைகளும் அமை கின்றன.

மேற்காணும் கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு வாணிபச் சுழல்களின் இயல்பினை ஹாட்ரே கீழ் வருமாறு விளக்குகின்றார்:

குறைவான வட்டிவீதத்தில் மலிவாகக் கடன் கிடைப்பதன் விளைவாக வணிகர்கள் பொருள்களை அதிக அளவில் இருப்பில்[1] வைத்துக்கொள்ளவும், அதிக அளவில் கடன் பெறவும் ஆரம்பிக்கின்றனர்; வங்கிகள் தளர்த்தப்பட்ட கடன் கொள்கையின் விளைவாக அதிக அளவில் கடன் அளிக் கின்றன. மலிவாகவும் அதிக அளவிலும் கடன் கிடைப்ப தால், வணிகர்கள் அதிக அளவில் பொருள்களை அளிக்கு மாறு உற்பத்தியாளர்களுக்கு ஆணை[2]யிடுகின்றனர். தேவை அதிகரிப்பதன் விளைவாக உற்பத்தியாளர் உற்பத்தி அளவைப் பெருக்குகின்றனர்; அதனால் உற்பத்திக் காரணி களுக்கான தேவை அதிகரிக்கின்றது. உற்பத்திக் காரணிகள் அதிக அளவில் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுவதால் அவற்றின் வருமானம் அதிகரிக்கும். மக்களிடையில் வாங்கும் சக்தி அதிகரிப்பதால் பொருள்களுக்கான தேவை மீண்டும்

[1] Stock
[2] Order

அதிகரிக்கும். தேவை அதிகரிப்பதால், உற்பத்திக் காரணி களின் வேலை வாய்ப்பும் வருமானமும் மீண்டும் அதிகரித்து அதன் விளைவாகப் பொருள்களுக்கான தேவையும் மீண்டும் அதிகரிக்கும். இவ்வாறு சங்கிலித் தொடர்போல் பொருளாதார நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்து முழு வேலைமட்டம் எய்தப் பெறுகின்றது. வாணிபச் சுழல்களின் ஏறுமுகம் தொடங்கியவுடன், பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்து துரித கதியில் இயங்கி விரைவில் பணவீக்கப் போக்கு அல்லது பொருளாதாரப் பூரிப்பு நிலை தோன்றுகிறது.

பொருளாதாரப் பூரிப்பு நிலவும்பொழுதே பொருளாதார மந்தத்திற்கான வித்தும் தோற்றுவிக்கப்படுகின்றது. பொரு ளாதாரச் செழுமை உச்சக்கட்டத்தில் இருக்கும்பொழுது வங்கிகள் தாம் அளித்த கடன்களைத் திரும்பிப் பெறத் தொடங்குகின்றன. வங்கிகள், தாம் அளிக்கக்கூடிய கடன் எல்லையை எய்தி விட்டதாகக் கருதியாவது, அல்லது துரித கதியில் இயங்கும் பொருளாதார நடவடிக்கைகள் வெகு விரைவில் முறிவுறக் கூடும் என்று அஞ்சியாவது கடனைத் திரும்பப் பெறும் முயற்சிகளில் ஈடுபடுகின்றன. வங்கிகள், வணிகர்களுக்கு அவர்கள் பெற்றக் கடன்களை உடனே திருப்புமாறு ஆணையிடுகின்றன. கடனை உடனே திருப்பு மாறு ஆணையிடப்பட்ட வணிகர்கள் குழப்பத்திற்கு ஆளா கின்றனர். வங்கிகளிடமிருந்து தாம் பெற்றிருந்த கடன்களைத் திருப்புவதற்காகத் தம்மிடம் இருப்பில் உள்ள பொருள்களை விரைவாக விற்பனை செய்ய முயல்கின்றனர். இதன் விளை வாகப் பொருள்களின் விலை குறைய ஆரம்பிக்கும். விலை குறைந்தாலும் தமக்குத் தேவையான தொகையைப் பெற விரும்பும் வணிகர்கள் விலைக் குறைவை ஈடு செய்வதற்காக விற்பனைக்கு அளிக்கும் பொருள்களை அதிகரிப்பதிலும், இருப்பைக் குறைப்பதிலும் ஈடுபடுகின்றனர். இதன் விளை வாக விலைமட்டம் வீழ்ச்சியடைகின்றது. விலைமட்டம் வீழ்ச்சியடைவதால், உற்பத்தி அளவுகள் குறைக்கப்படு கின்றன; உற்பத்திக் காரணிகளின் வேலை வாய்ப்புகள் குறைகின்றன. உற்பத்தித் துறையில் நிலவும் இத்தகைய குழப்ப நிலையால் எச்சரிக்கையுற்ற வங்கிகள் தாம் அளித் துள்ள கடன்களை விரைவில் வசூல் செய்வதில் தீவிரமாக ஈடு படுகின்றன. அதன் விளைவாகக் கடன் கொள்கைகள் மிகக் கண்டிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன. கடனை எப்படி யும் திருப்ப வேண்டிய நெருக்கடிக்கு ஆளான வணிகர்கள் தமது இருப்பில் உள்ள பொருள்களைக் கிட்டும் விலையில்

விற்பனை செய்ய முயல்கின்றனர். இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் விளை வாக, விலை வீழ்ச்சி, தேவை வீழ்ச்சி, உற்பத்திக் குறைப்பு, வேலையின்மைப் பிரச்சினை, வருமான வீழ்ச்சி ஆகியவை தோன்றுகின்றன. அதாவது, வாணிபச் சுழலின் இறங்குமுகம் அல்லது பணவாட்டம் தொடங்குகின்றது.

பொருளாதார மந்தத்தில் இருந்து மீட்சி எவ்வாறு ஏற்படு கின்றது என்பதை ஹாட்ரே பின்வருமாறு விளக்குகின்றார்: பொருளாதார மந்தம் நிலவும்பொழுது வங்கி வட்டிவீதம் மிகவும் குறைகின்றது. குழப்பமான பொருளாதார நடவடிக் கையில் அவநம்பிக்கையடைந்த உற்பத்தியாளர்களும், வணி கர்களும் வங்கிகளிலிருந்து கடன் பெறுவதை நிறுத்தியதாலும், வங்கிகள் கடுமையான கடன் கொள்கையினை மேற்கொண்ட தாலும் வங்கிகள்வசம் கடனாக அளிக்கக்கூடிய தொகையின் அளவு அதிகரிக்கின்றது. வங்கிகள் கடனாக அளிக்கக்கூடிய தொகையின் அளவு அதிகமாயிருப்பதால், தமது கடன் கொள்கையினைத் தளர்த்துகின்றன. வட்டி வீதம் குறைவாக இருப்பதால், கவரப்பட்ட வணிகர்கள் கடன் பெற்றுத் தொழிலைத் தொடங்க ஆரம்பிக்கின்றனர். இந் நடவடிக்கை களைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகள் ஊக்கம் பெறுகின்றன. முன்னர் விளங்கியவாறு, பொருளாதார நட வடிக்கைகள் துரிதகதியில் இயங்கி, வாணிபச் சுழலின் ஏறுமுகம் தோன்றுகின்றது; தொடர்ந்து செழுமையும், அதற்குப் பின்னர் மந்தமும் தோன்றுகின்றன.

வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்குத் தற்காலப் பண அமைப்புகளின் நிரந்தரமற்ற நிலையும், கடன் அமைப்பின் குறைபாடுகளுமே அடிப்படைக் காரணங்கள் என்பதை ஹாட்ரே மேற்கூறியவாறு விளக்குகின்றார்.

வாணிபச் சுழல் பற்றிய ஹாட்ரேயின் கோட்பாடு சிறப்புக் குரியதாகும். தற்காலத்தில் வணிகத்திற்கும் உற்பத்தித் துறைக்கும் நிதி ஓர் அடிப்படைத் தேவையாகும். வாணிபம் மற்றும் உற்பத்தித்துறைக்குத் தேவையான நிதியை அளிப் பதில் வங்கிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆயினும், வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்கு வங்கிகள் மட்டுமே காரணம் என்பதை ஏற்பதியலாது. ஏனெனில், வட்டி வீதத் தைப் பொறுத்தே கடனளவும் முதலீடும் அமைவதாக ஹாட்ரே கருதுவதை ஏற்பதற்கில்லை. மிக அதிகமான வட்டி

வீதம் நிலவும்பொழுது, உற்பத்தியாளர்கள் கடன் பெறவும், முதலீடு செய்யவும் முன்வர மாட்டார்கள் என்பதுவும், மலிவான வட்டிவீதத்தின் விளைவாகக் கடனளவும் முதலீட்டின் அளவும் அதிகரிக்கும் என்பதுவும் எல்லா நேரங்களுக்கும் ஏற்புடைய கருத்து அன்று.

மேலும், வங்கிக் கடனின் பெருக்கமும் சுருக்கமும் மட்டுமே பொருளாதாரச் செழுமைக்கும், மந்தத்திற்கும் போதிய காரணங்கள் அல்ல. வங்கிக் கடன் அதிகரிப்பதன் விளைவாகவே பொருளாதாரச் செழுமையும் பூரிப்பும் தோன்றுவதாக ஹாட்ரே கருதுவதை ஏற்பதியலாது. அவ்வாறு வங்கிக் கடன் சுருக்கமடைவதால், பொருளாதார மந்தம் ஏற்படும் எனும் கருத்தையும் ஏற்பதற்கில்லை. ஏனெனில், பொருளாதார நடவடிக்கைகளால் ஏற்படும் செழுமை அல்லது மந்தத்திற்கு ஏற்பவே வங்கிக் கடனின் அளவும் அமையும் என்பது நடைமுறை உண்மையாகும். மேலும் வட்டி வீதக் குறைப்பும் கடன் அளிக்க வங்கிகள் தயாராக இருப்பதாலும் மட்டுமே வணிகர்கள் கடன் வாங்குவதற்கு முன்வர மாட்டார்கள். பொருளாதார நடவடிக்கைகள் அவர்தம் மனதில் போதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தால் மட்டுமே அவர்கள் கடன் பெற்று முதலீடு செய்ய முன்வருவர் என்பதே உண்மையாகும்.

மேலும், தற்காலத்தில் நிறுவனங்கள் நிதியீட்டும் முறையே மாற்றமடைந்துள்ளது எனலாம். கடன் பெறுவதைக்காட்டிலும் கடந்த கால இலாபத்திலிருந்து நிதி வசதிகளை அதிகரித்துக்கொள்ளும் முயற்சிகளில் நிறுவனங்கள் ஈடுபடும். தற்காலத்தில் வங்கிக் கடனுக்கு ஏற்பவே வாணிபம் வளர்ச்சியுறும் எனும் கருத்து குறையுடையதாகும்.

மேற்கூறியவற்றால் வங்கிக் கடன்கள் செழுமையையோ அல்லது மந்தத்தையோ வளர்ச்சியுறச் செய்ய உதவுமே தவிர, அவற்றைத் தோற்றுவிக்க இயலாது என்பது தெளிவு. எனவே, வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்கு வங்கிக் கடன்கள் ஒரு துணைக் காரணமே தவிர, முழுமுதற்காரணமன்று என்பதே சரியான முடிவாகும்.

மிகையான முதலீட்டுக் கோட்பாடு[1]: வாணிபச் சுழல்களின் விளைவாக நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியில்

[1] Over-investment theory

ஏற்படும் நெளிவுகளைக்காட்டிலும் மூலதனப் பொருள்களின் உற்பத்தியில் ஏற்படும் நெளிவுகள் வன்மையானவையாகும். இதனை ஹாட்ரேயின் பணவழிக் கோட்பாடு தெளிவாக விளக்குவதில்லை. ஆனால், வான் ஹேயக்கின்[1] மிகையான முதலீட்டுக் கோட்பாடு இக் குறையைப் போக்குகின்றது. அக் கோட்பாட்டைக் கீழ் வருமாறு விவரிக்கலாம் :

உற்பத்தி அமைப்பை உயர்வான கட்டங்கள்[2], தாழ்வான கட்டங்கள்[3] என இரு வகைப்படுத்தலாம். உற்பத்தித்துறை சம்பந்தப்பட்ட மூலப்பொருள்களின் உற்பத்தி, சாதனங்களின் கட்டுமானம் போன்றவை உற்பத்தியின் உயர்வான கட்டம் ஆகும். உற்பத்தித் துறையின் இந் நடவடிக்கைகளுக்கும் நுகர் வோருக்குமிடையே நெருங்கிய தொடர்பின்மையால், இவை உயர்வான கட்டங்கள் எனப்படும். நுகர்வுப் பொருள்களின் உற்பத்திக்கும், நுகர்வோருக்குமிடையே அதிக இடைவெளி இல்லாமையால், நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியைத் தாழ்வான கட்டங்கள் என்று குறிப்பிடலாம்.

ஒரு சமுதாயம் தனது சேமிப்பையும் செலவையும் பகிர்ந் தளிக்கும் விகிதத்திற்கு ஏற்பவே, உற்பத்தித் துறையின் அமைப்பும் அமையும். ஒரு சமுதாயத்தில் சேமிப்பு அதிகமாக இருப்பின், அச் சமுதாயம் தனது உற்பத்திச் சாதனங்களை உற்பத்தியின் உயர்வான கட்டத்தில் ஈடுபடுத்துவதாகப் பொருள்படும். அவ்வாறில்லாமல், நுகர்வும் பொருள்களின் மீது செலவிடுமாயின், உற்பத்தியின் தாழ்வான கட்டத்தில் தனது பொருளாதாரச் சாதனங்களை ஈடுபடுத்த அச் சமுதாயம் விரும்புவதாகப் பொருள்படும். ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பு சரிவர இயங்க வேண்டுமாயின், அந் நாட்டில் மூலதனப் பொருள்களின் உற்பத்திக்கும், நுகர்வுப் பொருள்களின் உற்பத்திக்கும் இடையேயுள்ள விகிதமும், அந் நாட்டின் சேமிப்புக்கும், செலவிற்கும் இடையேயுள்ள விகிதமும் சமமாக இருக்க வேண்டும். ஆனால், சேமிப்பிற்கும் செலவிற்கும் இடையேயுள்ள விகிதம் மாறுபடுவதால், மூல தனப்பொருள்களின் உற்பத்திக்கும், நுகர்வுப் பொருள்களின் உற்பத்திக்கும் இடையே உள்ள விகிதமும் நடைமுறையில் ஒத்துப் போவதில்லை.

[1] Hayek, Von
[2] Higher stages
[3] Lower stages

சமுதாயம் செலவிடும்பொழுது நுகர்வுப் பொருள்கள்மீது நேரிடையாகச் செலவிடப்படுகின்றது. ஆனால், சேமிப்பு நேரிடையாக மூலதனப் பொருள்கள் ஆவதில்லை. ஏனெனில், மக்களின் சேமிப்பானது வங்கி, காப்பீட்டு நிறுவனங்கள் போன்ற நிதி நிறுவனங்களின் வழியாகவே தொழில் முயல்வோருக்குக் கடனாக அளிக்கப்பட்டு முதலீடு செய்யப் படுகின்றது.

நாட்டின் சேமிப்பும், முதலீடும் சமமாவதற்கு வட்டி வீதம் முக்கியமான காரணமாகும். நாட்டில் வட்டி வீதம் இயல்பாக அமையுமாயின், நாட்டில் சேமிப்பின் அளிப்பும் தேவையும் சமநிலை அடையும். அத்தகைய வட்டி வீதம் இயற்கையான வட்டி வீதம்[1] அல்லது சமநிலை வட்டி வீதம்[2] எனப்படும். சமநிலை வட்டி வீதத்தைக்காட்டிலும் மிகையான வட்டி வீதத்தின் விளைவாக முதலீடு செய்யப்படக்கூடியதைக் காட்டிலும் அதிக அளவில் நிதி கிடைக்கும்; குறைவான வட்டி வீதத்தின் விளைவாகச் சேமிப்பைக்காட்டிலும் அதற்கான தேவை அதிகமாக ஏற்படும். இம் மாறுபட்ட நிலைக்கு வங்கிக் கடனின் நெகிழ்சியே[3] காரணமாகும். சமநிலை வட்டி வீதத்தைக்காட்டிலும் குறைவான வட்டிவீதம் நிலவும்பொழுது முதலீட்டில் ஏற்படும் அதிகப்படியான தேவை மக்களின் தன்னிச்சையான சேமிப்பு, வங்கிக்கடன் ஆகியவற்றால் நிறைவு செய்யப்படுகின்றது.

வட்டி வீதத்தின் விளைவுகள் தடை செய்யப்படாவிடின், சேமிப்பின் அளவில் ஏற்படும் மாற்றங்களுக்குச் சமமாக மூலதனப் பொருள்களின் உற்பத்தியும் மாற்றமடையும். நாட்டில் சேமிப்பு அதிகரிக்குமானால் வட்டி வீதம் குறையும். மலிவான வட்டி வீதத்தில் மூலதனம் கிடைப்பதால், மூலதனப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கும்; நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி குறையும். வட்டி வீதம் அதிகரிக்கும்பொழுது எதிர்மாறான விளைவுகள் ஏற்படும். நாட்டில் சேமிப்பு-செலவின் அளவில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மூலதனப் பொருள்களின் உற்பத்தி அளவும், நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியும் மாற்றமடையும். ஆயின், 'உற்பத்தி முறை' மாற்றமடைந்தால், நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. ஆயினும், நடை

[1] Natural rate of interest
[2] Equilibrium rate of interest
[3] Elasticity of bank credit

முறையில் உற்பத்தியின் ஒரு கட்டத்திலிருந்து மறு கட்டத்திற்கு உற்பத்திச் சாதனங்களைத் திருப்புவது எளிது அன்று. வங்கித்துறையின் அமைப்பே இதற்குக் காரணம் என்று ஹேயக் கருதுகின்றார். அவர்தம் கருத்துப்படி, வங்கிகளின் பணிகள் இரு வகைப்படும். வங்கிகள், சேமிப்பாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்குமிடையில் இடைத்தரகராகப் பணியாற்றுவதுடன் பணத்தை உற்பத்தி செய்யும் பொறுப்பையும் ஏற்றுள்ளன.

வங்கிகள் மக்களின் சேமிப்பைத் திரட்டி, அவ்வாறு திரட்டப்பட்ட தொகையை முதலீட்டாளர்களுக்குக் கடன் அளிக்கும் பணியை மட்டும் ஆற்றுமாயின், நாட்டில் தானாகவே சமநிலை ஏற்பட்டு விடும். ஆனால், பணத்தை உற்பத்தி செய்யும் பொறுப்பையும் வங்கிகள் ஆற்றுவதால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஏனெனில், மக்களின் சேமிப்பைக்காட்டிலும் மிகையாக முதலீடு செய்யவும், தேவை ஏற்படின் சேமிப்பைக்காட்டிலும் குறைவாக முதலீடு செய்யவும் வங்கிகளால் முடியும். சமநிலை வட்டி வீதத்தைக்காட்டிலும் குறைவாக அங்காடி வட்டி வீதம் இருப்பின், முதலீட்டாளர்கள் கடன் பெற்று முதலீட்டை அதிகரிப்பதால் சேமிப்பைக்காட்டிலும் முதலீடு அதிகமாக இருக்கும். சமநிலை வட்டி வீதத்தைக் காட்டிலும் அதிகமாக அங்காடி வட்டி வீதம் அமையுமானால், சேமிப்பைக்காட்டிலும் முதலீட்டின் அளவும் குறையும். வங்கிக்கடனின் அமைப்பில் காணப்படும் நெகிழ்ச்சியின் விளைவாகச் சேமிப்பிற்கு எவ் வகையிலும் தொடர்பின்றி முதலீட்டின் அளவை மாற்றியமைக்க முடியும். இத்தகைய மாறுதல்களின் விளைவாகவே வாணிபச் சுழல்கள் ஏற்படுகின்றன.

வாணிபச் சுழல்கள் ஏற்படுகின்ற விதத்தை ஹேயக் கீழ்க் காணுமாறு விவரிக்கின்றார்; ஒரு நாட்டில் அனைத்து உற்பத்திக் காரணிகளும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுப் பொருளாதாரம் சம நிலையடைந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். பொருளாதாரச் சமநிலை நிலவும்பொழுது வங்கிகள் வட்டிவீதத்தைக் குறைக்குமானால், தொழில் முயல்வோர் கடன் பெற்று, முதலீட்டின் அளவை அதிகரிப்பர். வட்டிவீதக் குறைப்பால் நுகர்வுப் பொருள்களைக்காட்டிலும் மூலதனப் பொருள்களின் விலை அதிகரிப்பதால், மூலதனப் பொருள்களின் உற்பத்தியில் உற்பத்தியாளர்கள் ஈடுபட ஆரம்பிக்கின்றனர். வங்கியில் கடன் பெற்று முதலீட்டை அதிகரிப்பதன் மூலம் மூலதனப்

பொருள்களின் உற்பத்தி குறைவதால், அவற்றின்மீது சமுதாயம் செலவிடக்கூடிய தொகை சேமிக்கப்படுகின்றது. இச் சேமிப்பு கட்டாயச் சேமிப்பு[1] ஆகும். நுகர்வுப் பொருள்களின் விலை மாறுபட்டாலும், மக்களின் நுகர்ச்சிப் பழக்கங்கள் மாறுபடாமையால், மேற்காணும் நிலை தொடர்ந்து நிலவுவதற்கில்லை. உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்களுக்கு முதலீட்டாளர்கள் அதிக ஊதியம் அளிப்பதால், மக்களுடைய வருமானம் அதிகரிக்கின்றது. இவ்வாறு அதிகமாகக் கிடைத்த வருமானத்தையும் நுகர்வுப் பொருள்களின் மீதே செலவிட மக்கள் முயல்வதால், நுகர்வுப் பொருள்களுக்கான தேவை அதிகரிக்கின்றது. அவற்றின் அளிப்பைக் (உற்பத்தியைக்) காட்டிலும் தேவை பன்மடங்காக அதிகரிப்பதால், நுகர்வுப் பொருள்களின் விலையேற்றம், உற்பத்தி அமைப்பின் மாற்றத்தைத் தவிர்க்கின்றது.

ஏனெனில், முன்பு உற்பத்தி அமைப்பில் ஏற்பட்ட மாற்றம் குறைவான வட்டி வீதத்தால் கவரப்பட்ட முதலீட்டாளர்களால் ஏற்படுத்தப்பட்டதே தவிர, நுகர்வோரின் விருப்பப்படி ஏற்பட்டது அன்று. எனவே, இதுவரையில் நிலவியதற்கு எதிர்மாறான போக்கில் உற்பத்தித்துறையின் அமைப்பு இயங்க ஆரம்பிக்கின்றது. இந் நிலை தவிர்க்கப்பட வேண்டுமாயின், வங்கிக் கடன்களின் அளவு மீண்டும் மீண்டும் அதிகரிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், வங்கிக் கடன் அதிகரிப்பதற்கு ஓர் எல்லை உண்டு. ஏனெனில், வங்கிகள் வட்டி வீதத்தைக் குறைப்பது இயலாது. ஆகையால், அதற்குப் பின்னர் உற்பத்தி அமைப்பில் ஏற்படக்கூடிய மாற்றத்தைத் தவிர்ப்பதற்கு இல்லை. வங்கிக் கடன்கள் அதிக அளவில் அளிக்கப்படும் வரையில் செழுமை நிலவும். ஆனால் குறிப்பிட்ட அளவிற்கு மேலும் வங்கிக் கடன்கள் அளிக்க இயலாமையால், செழுமை மறைந்து மந்தம் தோன்றுவதைத் தவிர்ப்பதற்கில்லை.

ஹேயக்கின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துகளைக் கீழ் வருமாறு குறிப்பிடலாம்: சமநிலை வட்டி வீதத்திற்கும் குறைவான வட்டிவீதத்தின் விளைவாக ஏற்படும் மிகையான முதலீட்டின் விளைவாகச் செழுமை ஏற்படுகின்றது. மிகையான முதலீட்டின் விளைவாக உற்பத்தி அமைப்பில் ஒரு செயற்கையான மாறுதல் ஏற்படுகின்றது. வங்கிக் கடனால் ஊக்கப்படும் மிகையான முதலீடு தொடர்ந்து நிலவுவது இயலாது.

[1] Forced saving

மக்கள் போதுமான அளவில் சேமிப்பதில்லையாதலால், செழுமை முறிந்து மந்தம் உருவாகின்றது. மந்தத்தின் விளைவுகள் கடுமையானவையாகும்.

மேற்காணும் விளக்கத்திலிருந்து வாணிபச் சுழல்களைத் தவிர்ப்பதற்குச் சமுதாயத்தின் சேமிப்பு-செலவு விகிதத்திற்கு ஏற்ற வகையில் உற்பத்தி அளவை மாற்றுவதே வழியாகும் என்பது தெளிவாகும். வங்கிக்கடன் நெகிழ்ச்சியைத் தவிர்ப்பதே இதற்கு ஏற்ற தீர்வாகும். பணத்தின் அளிப்பைக் கட்டுப் படுத்தும் கொள்கையே வாணிபச் சுழல்களைத் தவிர்ப்பதற்கு ஏற்ற கொள்கையாகும்.

இக் கோட்பாடு, வட்டிவீதத்திற்கு மிகையான முக்கியத் துவம் அளிப்பதாலும், நாடு முழு வேலைமட்டம் எய்தி விட்டது என்று அனுமானிப்பதாலும் மறுத்துரைக்கப்படு கின்றது. நாட்டில் முழு வேலைமட்டம் எய்தப் பெறாத வரையிலும் இக் கோட்பாடு விவரிக்கும் வகையில் பொருளாதார நடவடிக்கைகள் அமைவதில்லை.

மேலும், வட்டி வீதம் பெருமளவில் நெகிழ்ந்து கொடுக்கக் கூடியது அன்று என்றும், அதில் ஏற்படும் மாற்றங்கள் அளவில் குறைந்தவை என்பதுடன் அவற்றால் உற்பத்தித் துறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது என்றும் கருதப்படுகின்றது. வட்டிவீத மாற்றங்கள், உற்பத்தித்துறையில் நெடுங்கால மாற்றங்களைமட்டுமே ஏற்படுத்த முடியுமே தவிர, குறுங்கால மாற்றங்களான வாணிபச் சுழல்களை உண்டாக்க முடியாது என்றும், புத்தாக்கம், புதுக்கண்டுபிடிப்புகள், இலாபம் ஆகியவற்றால் கவரப்பட்ட உற்பத்தியாளர்களால் உண்டாக்கப்படுவதே வாணிபச் சுழல்கள் என்றும் கருதப்படு கின்றது.

இம் மறுப்பிற்கு மறுப்பளிக்கும் வகையில் ஹேயக் தமது கோட்பாட்டைச் சிறிது மாற்றியமைத்துள்ளார். அக் கோட் பாட்டில் வட்டிவீதம் மாறாமலிருக்கும்பொழுதுகூட இலாபத் தில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக வாணிபச் சுழல்கள் ஏற்படக்கூடும் என்று அவர் விவரிக்கின்றார். அக் கோட் பாட்டைக் கீழ்க்காணுமாறு விளக்கலாம் :

வளர்ச்சிக்காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் நுகர்வுப் பொருள்களுக்கான தேவை அதிகரிப்பதால் மூல

தனப் பொருள்களுக்கான தேவையும் அதிக விகிதத்தில் அதிகரிக்கும். கூலி விகிதம் உயரும்போது நுகர்வுப் பொருள் களுக்கான தேவை மீண்டும் அதிகரிக்கும். நாடு முழு வேலை மட்டம் எய்தும் வரையில் நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கக்கூடும். முழு வேலைமட்டம் எய்திய பின்னர் அளிப்பு நெகிழ்ச்சியற்றுப் போவதால், நுகர்வுப் பொருள் களுக்கான தேவை அதிகரிப்பதன் விளைவாக அவற்றின் விலைமட்டம் உயர ஆரம்பிக்கும். விலைமட்டம் உயர்வதால், மெய்யான கூலி குறையும்; நுகர்வுப் பொருள்கள் உற்பத்தியில் இலாபம் அதிகரிக்கும். இலாபம் அதிகரிப்பதன் மூலம் மூல தனப் பொருள்களுக்கான தேவை அதிகரிக்கும். ஆனால், மெய்யான கூலி குறைவதால், மூலதனத்தைக்காட்டிலும் உழைப்பு மலிவாக மாறும். ஆகவே, இயந்திரங்களுக்குப் பதிலாக உழைப்பு பயன்படுத்தப்படும். இதன் விளைவாக முதலீட்டுப் பொருள்களுக்கான தேவை குறைய ஆரம்பிக்கும். விலைமட்டமும், இலாபமும் அதிகரிக்கும் வரையிலும் இப் போக்கே நிலவும். இதன் விளைவாக மூலதனப் பொருள் களின் உற்பத்தி தீவிரமாகக் குறைக்கப்படும். அதாவது, நுகர்வுப் பொருள்களுக்கான தேவை அதிகரிப்பதால், மூலதனப் பொருள்களுக்கான தேவை குறைகின்றது. இதனால் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குப் பின்னர், உற்பத்தியின் ஆரம்ப நிலையில் வேலையின்மைப் பிரச்சினை உருவாகி, மந்தத்திற் கான சூழ்நிலைகள் தோன்றுகின்றன. முதலீட்டுப்பெருக்கத் தால் அதிகரிக்கப்பட்ட கூடுதல் வருவாயைப் பொதுமக்கள் சேமித்தாலும் அல்லது உற்பத்திச் சாதனங்கள் எளிதாக இடம் பெயர்ந்தாலும் மந்தத்தைத் தவிர்க்க முடியும். கூடுதல் வருவாய் செலவிடப்பட்டாலும், உற்பத்திச் சாதனங்கள் இடப்பெயர்ச்சியற்றிருந்தாலும் மந்தத்தைத் தவிர்க்க முடியாது.

மீண்டும் முதலீடு அதிகரிக்கும் வரையில் மந்தம் நிலவும்; இலாபம் குறைவதன் விளைவாகவே மீட்சி தோன்றும். மந்த காலத்தில் மெய்யான கூலி அதிகரிப்பதன் விளைவாகத் தொழில் முயல்வோர் முதலாட்சி உற்பத்தி முறையை மேற் கொள்கின்றனர். முதலீடு அதிகரிப்பதால், வருவாய் அதி கரிக்கும்; அதன் விளைவாக மூலதனப் பொருள்களின் உற்பத்தி விரிவடையும்; செழுமை தோன்றும். பொருளாதார அமைப்பு ஒரு முறை சமநிலையிலிருந்து விடுபட்டால், ஒன்றன் பின் ஒன்றாக வாணிபச் சுழல்கள் தோன்றும்.

மிகைச் சேமிப்பு அல்லது குறைநுகர்வுக் கோட்பாடு[1]: மால்தஸ்[2], சிஸ்மாண்டி[3], கார்ல் மார்க்ஸ்[4], அண்மைக் காலத்தில் ஹாப்ஸன்[5] ஆகியோரின் விளக்கங்கள் வாணிபச் சுழல்பற்றிய குறைநுகர்வுக் கோட்பாடுகளாகக் கருதப்படுகின்றன. நுகர்ச்சிக் குறைவின் விளைவாகவே மந்தம் ஏற்படுவதாகக் கருதுவோருள் மால்தஸே முதன்மையானவர். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் இயல்புகளில் மந்தமும் ஒன்றெனக் கருதும் மால்தஸ், உறுதித் தேவையை அடிப்படையாகக்கொண்டே உற்பத்தி நிர்ணயிக்கப்படுவதாகவும் கருதுகின்றார். பொருள்களின் உற்பத்திச் செலவைக் காட்டிலும் அதிகமாகவும், உற்பத்தியாளர்களுக்கு ஓரளவு இலாபம் அளிக்கக்கூடியதாகவும் விலைமட்டம் அமையும் வகையில் உறுதித்தேவை இருக்க வேண்டும். ஆனால், பொருள்களுக்கு இறுதியில் விதிக்கப்படும் விலையானது அப் பொருளை உற்பத்தி செய்வதற்கு அளிக்கப்பட்ட தொகையைக்காட்டிலும் அதிகமாக இருப்பதாக அவர் கருதுகின்றார். எனவே, உழைப்பாளர்களால் உற்பத்தியாளர்களுக்கு இலாபம் அளிக்கக்கூடிய அளவிற்குத் தேவையை உயர்த்த முடியாது. தேவையின் இக் குறைபாட்டை வேறு வகைகளில் சமன் செய்வது அவசியமாகின்றது. மூலதன உரிமையாளர்கள் செலவு செய்வதைக்காட்டிலும் சேமிப்பதில் நாட்டம் கொண்டு இருப்பதால், தேவையில் நிலவும் குறைபாட்டை அவர்களாலும் சமன்செய்ய முடியாது. எனவே, அத் தேவை உற்பத்தித் திறன் அற்ற நுகர்வோர்கள்[6] என்று மால்தஸால் குறிப்பிடப்படுகின்ற நில உரிமையாளர்கள், பணியாள்கள், அரசியல் வாதிகள், வழக்குரைஞர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பாதிரியார்கள் போன்றோரால் உருவாக்கப்படுதல் வேண்டும். இப் பிரிவினர்கள் செலவிடாமல் சேமிப்பார்களாயின் உறுதித் தேவை குறைந்து உற்பத்தி தேக்கமடையும். இதனைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி, உற்பத்தியற்ற நுகர்வோர்களிடை நுகர்ச்சியைப் பெருக்குவதே ஆகும் என்று மால்தஸ் கருதுகின்றார்.

குறைநுகர்வுக் கோட்பாட்டை ஆதரிக்கும் தற்காலப் பொருளாதார அறிஞர்களுள் ஜே.ஏ. ஹாப்ஸன் முன்னோடியாவார்.

[1] Over saving or under Consumption Theory
[2] Malthus
[3] Sismondi
[4] Karl Marx
[5] Hobson
[6] Unproductive consumers

அவர் அளிக்கும் விளக்கம் மால்தஸின் விளக்கத்தில் இருந்து வேறுபட்டதாகும். மக்களுடைய செல்வநிலையில் காணப் படும் ஏற்றத்தாழ்வின் விளைவாகத் தன்னிச்சையான சேமிப்பு[1] அதிகரிப்பதே வாணிபச் சுழல்கள் தோன்றுவதற் கான அடிப்படைக் காரணமென அவர் கருதுகிறார். அவர் மக்களிடையில் காணப்படும் அவசியமற்ற சேமிப்புப் பழக் கத்தின் காரணமாகச் சமுதாயத்தின் நலனே பாதிக்கப்படுவ தாகவும், உழைப்பவர்கள் வேலை இழப்பதாகவும், கூலி மட்டம் குறைவதாகவும், வாணிபத்துறையில் மந்தம் ஏற்படுவ தாகவும் கருதுகின்றார். நாட்டில் உற்பத்தி நடவடிக்கைகள் நிலைப்படுத்தப்பட வேண்டுமாயின், சேமிப்பு விகிதத்திற்கும் செலவு விகிதத்திற்கும் இடையே சரியான சமநிலை ஏற்பட வேண்டும். நடைமுறையில் சிலரிடம் மட்டுமே செல்வம் குவிந்துவிடுவதன் விளைவாகச் செலவு விகிதமும் சேமிப்பு விகிதமும் சமமாக அமைவதில்லை. முதலாளித்துவத்தின் சிறப்பியல்பு செல்வக்குவிப்பு ஆகும். சிறுபான்மையினர் வசம் தேசிய வருவாயின் பெரும்பகுதி அடங்கி இருக்கும். பெரும் பான்மையினரான உழைக்கும் வர்க்கத்தினரோ தேசிய வருவாயில் மிகச் சிறு பகுதியையே கூலியாகப் பெறுகின்றனர். ஏழைகள் தமது வருவாயில் பெரும்பகுதியைச் செலவிடும் பொழுது செல்வந்தர்களோ மேலும் மேலும் சேமிக்கின்றனர். செல்வந்தர்கள் மிகையாகச் சேமிப்பது மட்டுமன்றி ஒவ்வொரு முறை வருவாய் அதிகரிக்கும்பொழுதும் அவர்களுடைய சேமிப்பு விகிதமும் அதிகரிக்கின்றது. தொடர்ந்து அதிகரித்து வரும் வருவாயைச் செலவிட முடியாத நிலைக்குச் செல்வந் தர்கள் உள்ளாகின்றனர். அதாவது, நுகர விரும்பினாலும் நுகர முடியாதவர்களாக ஒரு பிரிவும், நுகர வாய்ப்பிருந்தும் நுகர விருப்பமில்லாதவர்களாக ஒரு பிரிவும் ஆக ஒரு விநோத நிலை உருவாகின்றது.

செலவிடப்படாத தொகையெல்லாம் சேமிக்கப்பட்டு முதலீடு செய்யப்படுவதாக ஹாப்ஸன் கருதுகின்றார். கூடுதல் சேமிப்பு, முதலீடு ஆகியவற்றுடன் புது மூலதனப் பொருள்களின் உற்பத்தி ஆவதுடன் நுகர்வுப் பொருள் களின் அளிப்பும் அதிகரிக்கின்றது. பொருளாதார நடவடிக் கைகள் அதிகரிப்பதால், வங்கிக் கடனளவு அதிகரிப்பதுடன் விலைமட்டமும் உயர்கின்றது. அதன் விளைவாகச் சேமிப்பும்

[1] Voluntary saving

முதலீடும் மீண்டும் அதிகரிக்கின்றன. பொருளாதார நடவடிக் கைகளின் வளர்ச்சி, விலைமட்ட உயர்வு ஆகியவற்றின் விளைவாக அதிகரித்த வருமானமும் உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்களிடையில் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படுவ தில்லை. விலையைக்காட்டிலும் கூலிவிகிதம் குறைவாகவே இருக்கும். செழுமையின் விளைவாக அதிகரித்த வருவாய் தொழிலாளர்கள் அல்லாத மற்றவர்களிடையில் குவிகின்றது. ஆனால், வருமான உயர்வு பெற்றோர் அவர்தம் நுகர்ச்சியை அதிகரிப்பதில்லை. நுகர்வுப் பழக்கங்கள் மரபை ஒட்டியன வாகவும் பழைமையானவையாகவும் இருப்பதாகவும், இப் பழைமைப் போக்கு மக்களுடைய சேமிப்புப் பழக்கத்திலும் பிரதிபலிப்பதாகவும் ஹாப்சன் கருதுகின்றார்.

சேமிப்பும் முதலீடும் அதிகரிக்கும் ஒவ்வொரு முறையும் நுகர்வுப் பொருள்களின் அளிப்பும் அதிகரிக்கின்றது. வருவா யின் பெரும்பகுதி சேமிக்கப்படுவதால், நுகர்வுப்பொருள்களுக் கான தேவை அதன் அளிப்பைக்காட்டிலும் குறைகின்றது. இந் நிலை தொடர்ந்து நிலவினால் பெரும்பான்மையான பொருள்களை இலாபம் அளிக்கும் விலையில் விற்க முடியாத நிலை உருவாகக் கூடும். இலாபகரமாக விற்க முடியாத பொருள்கள் அங்காடியில் குவிகின்றன; விலைமட்டம் வீழ்ச்சி அடையும். இழப்பைத் தவிர்க்க வேண்டி உற்பத்தித் துறையின் இயக்கம் நிறுத்தப்படும். அதன் விளைவாக வேலையின்மைப் பிரச்சினையின் அளவு அதிகரிக்கும்; அதாவது மந்தம் தொடங்கும்.

இழப்பைத் தவிர்க்க வேண்டி உற்பத்திச்சாலைகளை மூடியதன் விளைவாக மக்களுடைய நுகர்வுத்திறன் குறை வடையும்; தேசிய வருவாயும் வீழ்ச்சியடையும். அங்காடியில் மிகையான இருப்புச் சரியாகும் வரையில் மந்தகாலம் நிலவும். சேமிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக வட்டிவீதக் குறைப்பு, நுகர்ச்சியை ஊக்குவிப்பதற்காகக் குறைவான விலைமட்டம் ஆகிய முயற்சிகள் அக் காலத்தில் பயனற்றுப் போகின்றன. சிறிது காலத்திற்குப் பின்னர்ச் சேமிப்பும் செலவும் ஒன்றுக் கொன்று சமமாகின்றன. அதன் விளைவாக முதலீடும் இலாபகரமானதாக அமையும்; புதிய செழுமையான காலம் தோன்றும்; மிகையான சேமிப்பு அல்லது குறைவான நுகர்ச்சி நிலை மீண்டும் தோன்றும் வரையில் இச் செழுமை தொடர்ந்து நிலவும்.

ஹாப்சனின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துக் கீழ் வருமாறு: சேமிப்பின் விளைவாக நுகர்வுப்பொருள்களுக்கான தேவை குறைவதுடன் உற்பத்தியும் அதிகரிக்கின்றது. இதன் விளைவாக விலைமட்டமும் வாணிப நடவடிக்கைகளும் குறைகின்றன. எனவே, செல்வப் பங்கீட்டில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளின் விளைவாக ஏற்படும் மிகையான சேமிப்பே வாணிபச் சுழல்கள் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணமாகும். இந் நிலை நிலவும் வரையிலும் நுகர்வுப் பழக்கங்கள் புரட்சிகரமாக மாற்றமடையாத வரையிலும், வாணிபச் சுழல்கள் தோன்றுவதிலிருந்தும், வேலையின்மைப் பிரச்சினையிலிருந்தும் விடுபட இயலாது.

இக் கோட்பாட்டில் வாணிப மந்தம், வேலையின்மைப் பிரச்சினை ஆகியவற்றைத் தீர்ப்பதற்குச் சமுதாயத்தின் நுகர்வுத்திறனை அதிகரிக்க வேண்டும் என்றும், செல்வப் பங்கீட்டில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைச் சமன்படுத்துவதன் மூலமே நுகர்வுத்திறனை அதிகரிக்க முடியும் என்றும் ஹாப்சன் விளக்குகின்றார். வருமான ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பதன் மூலமே வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் அவர் கருதுகின்றார். இதை அடைவதற்காக உயர்வான வருமானத்தின்மீது வரி விதிப்பையும், கூலி மட்டத்தை உயர்த்துவதற்காகத் தொழிற்சங்கம் அல்லது அதைப் போன்ற அமைப்பினையும் அவர் ஆதரிக்கின்றார். மக்களில் பெரும்பான்மையினரின் மெய்யான வருவாயை அதிகரிக்கும் வகையில் சர்வாதீன விலைகளைக் கட்டுப்படுத்துவதையும் அவர் ஆதரிக்கின்றார். பொதுவாக, இக் கோட்பாட்டில் சமவுடைமைக் கருத்துகள் காணப்படுகின்றன.

இக் கோட்பாடு நீண்டகாலம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆயினும், காலப்போக்கில் இக் கோட்பாட்டில் உள்ள உண்மை ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளை நிர்ணயிப்பதில் நுகர்விற்குப் பெரும்பங்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும், சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை இக் கோட்பாடு உணர்த்துவதில்லை. இக் கோட்பாட்டினர் கருதுமாறு, சேமிப்பு யாவுமே முதலீடு செய்யப்படின், மந்தமே ஏற்படுவதற்கில்லை. ஆயினும், சேமிப்பு முழுவதுமே முதலீடு செய்யப்படுவதாகக் கருதப்படுவதை ஏற்பதற்கில்லை. முதலீட்டின் விளைவாக, வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதால் முதலீடு செய்யப்பட்ட சேமிப்பின் விளைவுகளும் செலவின் விளைவுகளும் சம

மாகவே இருக்கும். முதலீட்டைக்காட்டிலும் சேமிப்பு அதிகரிக்குமாயின், வேலையின்மைப் பிரச்சினையும் மந்தமும் தோன்றும். மேலும், பொருளாதாரப் பூரிப்பு ஏற்படுவதற்கான காரணங்களையும் இக் கோட்பாடு விளக்குவதில்லை. இக் கோட்பாடு சரியானதாயின், உலகில் மந்தம் மட்டுமே தொடர்ந்து நிலவ வேண்டும். ஆனால், நடைமுறையில் மந்தத்தைத் தொடர்ந்து பூரிப்பு ஏற்படுவதிலிருந்தே இக் கோட்பாடு குறையுடையது என்பதை உணரலாம்.

கெயின்சின் சேமிப்பு—முதலீட்டுக் கோட்பாடு[1]: வாணிபச் சுழல்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்குக் கெயின்சின் கருத்துகள் பெருமளவில் பயன்படினும், வாணிபச் சுழல்கள்பற்றித் தனியான கோட்பாடு எதையும் அவர் அளிக்கவில்லை. மூலதனத்தின் இறுதிநிலைத் திறனில் ஏற்படும் நெளிவுகளை அடிப்படையாகக்கொண்டு வாணிபச் சுழல்களை விளக்கவும் ஆராயவும் முடியுமென்று அவர் கருதுகின்றார். கெயின்சின் கோட்பாட்டைக் கீழ்வருமாறு விளக்கலாம் :

இலாப நோக்குடன் இயங்கும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் ஒவ்வொரு நிறுவனமும் அமித இலாபம் அளிக்கும் வகையில் தொழிலாளர்களை உற்பத்தியில் ஈடுபடுத்தும். ஒரு நாட்டில் வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, அந் நாட்டின் பல்வேறு உற்பத்திச் சாலைகளிலும் வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமாகும். கெயின்சின் கருத்துப்படி, ஒரு நாட்டின் வேலைமட்டமானது, அந் நாட்டின் உறுதித் தேவையைச்[2] சார்ந்ததாகும். உறுதித் தேவை என்பது அந் நாட்டினரின் நுகர்வுச் செலவு, முதலீட்டுச் செலவு ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாகும். இச் செலவு அதிகரித்தால் வேலைவாய்ப்பு அதிகரிக்கும்; குறைந்தால் வேலைவாய்ப்பும் குறையும். வாணிப நடவடிக்கைகளில் நெளிவுகள் ஏற்படுவதற்கான காரணத்தை அறிவதற்கு மொத்தச் செலவு அல்லது உறுதித் தேவையில் மாற்றம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்வது அவசியம். இவற்றை அறிவதற்கு நுகர்வு; முதலீடு ஆகியவற்றை நிர்ணயிக்கும் காரணிகளை விவரிப்பது அவசியமாகின்றது.

1 Keynesian Savings-Investment Theory
2 Effective demand

நுகர்வுச் செலவுகள் வருவாய் மட்டத்தையும்[1], நுகர்ச்சி நாட்டத்தையும்[2] பொறுத்ததாகும். மொத்த வருவாய்க்கும் நுகர்வுச் செலவுகளுக்குமிடையிலுள்ள விகிதம் பெரும்பாலும் மாறாமல் நிலையாக இருக்கும். வருவாய் அதிகரிக்கும் பொழுது நுகர்வுச் செலவுகள் அதிகரிக்குமாயினும், வருவாய் அதிகரிக்கும் வேகத்தில் நுகர்வுச் செலவுகளும் அதிகரிப்ப தில்லை. மக்களுடைய நுகர்வுப் பழக்க வழக்கங்கள், வரியமைப்பு, வருமானப் பகிர்வு போன்றவையால் நிர்ணயிக்கப் படும் நுகர்வுச் செலவுகள் பெரும்பாலும் மாற்றமடைவதில்லை. ஒரு குறிப்பிடப்பட்டுள்ள அளவு வருமானத்திற்கும் அதிலிருந்து நுகர்வுப் பொருள்களின்மீது செலவிடப்படும் தொகைக்கும் இடையேயுள்ள விகிதமே நுகர்ச்சி நாட்டம் எனப்படும். கணித முறைப்படி,

$$\text{நுகர்ச்சி நாட்டம்} = \frac{\text{மொத்த நுகர்வுச் செலவு}^{3}}{\text{மொத்த வருவாய்}}$$

வருமானம் அதிகரிக்கும்பொழுது, அதிகரித்த வருமானத்திற்கும் அதன் விளைவாக அதிகரித்த நுகர்ச்சிச் செலவிற்குமிடையே யுள்ள விகிதம் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் எனப்படும். அதாவது,

$$\begin{array}{l}\text{இறுதிநிலை} \\ \text{நுகர்ச்சி நாட்டம்}\end{array} = \frac{\text{நுகர்வுச் செலவில் ஏற்பட்ட மாற்றம்}^{4}}{\text{வருவாயில் ஏற்பட்ட மாற்றம்}}$$

நுகர்ச்சி நாட்டம் அதிகமாக இருப்பின், வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். வருவாய் அதிகரிக்கும்பொழுது சராசரி நுகர்ச்சி நாட்டம்[5] 100 விழுக்காடாக இருப்பின், (அதாவது அதிகரித்த வருவாய்க்குச் சமமாக நுகர்வுச் செலவும் அதிகரித்தால்) சுலப மாக முழு வேலைமட்டம் எய்துவதுடன், அதனினும் அதிக மாக வேலைவாய்ப்புகள் உருவாகலாம். ஆனால், நுகர்ச்சி நாட்டம் அவ்வாறு அதிகரிப்பதில்லை. எனவே, வருமானத் திற்கும், நுகர்வுச் செலவுக்குமிடையே இடைவெளி ஏற்படு கின்றது. இவ்விடைவெளியை முதலீட்டுச் செலவுகளைக்[6] கொண்டு ஈடு செய்தாலன்றி வேலை வாய்ப்புகள் அதிகரிப்ப

[1] Level of income
[2] Propensity to consume
[3] $\frac{\text{Total consumption}}{\text{Total Income}}$
[4] $\frac{\text{Change in consumption}}{\text{Change in income}}$
[5] Average propensity to consume
[6] Investment expenditure

தில்லை. அதாவது, வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதற்கு முதலீட்டுச் செலவுகளை அதிகரிப்பது அவசியமாகின்றது.

நுகர்வுச் செலவுகள் மாறாமல் இருப்பதால், முதலீட்டில் ஏற்படும் நெளிவுகளே வேலைமட்டம், வருமானம், உற்பத்தி ஆகியவை மாறுவதற்குக் காரணமாக அமைகின்றன. முதலீடானது மூலதனத்தின் இறுதிநிலைத் திறனையும் வட்டி வீதத்தையும் பொறுத்ததாகும். மூலதனத்தின் இறுதிநிலைத் திறனும் வட்டிவீதமும் சமமாகும் வரையில் முதலீடு மேற்கொள்ளப்படும். மக்களுடைய ரொக்கப்பண விருப்பத்தாலும் பணத்தின் அளவாலும் நிர்ணயிக்கப்படும் வட்டி வீதமானது குறைந்தபட்சம் குறுங்காலத்திலாவது மாறாமல் இருக்கும்; எனவே, வாணிபச் சுழல்கள் ஏற்படுவதற்கு வட்டிவீதத்தை ஒரு காரணமாகக் கொள்வது தவறாகும். மீதமிருப்பது மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் மட்டுமே. எனவே, மூலதனத்தின் இறுதிநிலைத் திறனில் ஏற்படும் மாற்றங்களே வாணிபச் சுழல்களுக்கான அடிப்படைக் காரணமெனக் கெயின்சு கருதுகின்றார்.

மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் என்பது இறுதிநிலை முதலில் இருந்து எதிர்பார்க்கப்படும் விளைவுக்கும், அதனை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவிற்குமிடையேயுள்ள விகிதமாகும்; புதிய மூலதனத்திலிருந்து கிடைக்கக்கூடிய இலாப விகிதமென்று அதைக் குறிப்பிடலாம். மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் என்பது (1) புதிய மூலதனத்தில் இருந்து கிடைக்கக்கூடிய விளைவு, (2) அதனை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு ஆகிய இரண்டினாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. முதலீட்டிலிருந்து கிடைக்கக்கூடிய விளைவு நிச்சயமற்றிருப்பதால், மூலதனத்தின் இறுதிநிலைத் திறனும் நிச்சயமற்றுக் காணப்படுகின்றது. எதிர்காலம்பற்றிக் கணக்கிட்ட பின்னரே முதலீடு மேற்கொள்ளப்படுகின்றது; இத்தகைய கணிப்புகள் வெற்றி பெறவோ தோல்வியுறவோ கூடும். எதிர்காலம் நிச்சயமற்றிருப்பதால், முதலீடும் நெளிவுகளுக்கு உள்ளாகின்றது ; மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் குறுங்காலத்தில் நிச்சயமற்றுக் காணப்படுகின்றது; நெடுங்காலத்தில் குறைந்து போகின்றது. நெடுங்காலத்தில் மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் குறைவதற்குக் காரணம், நெடுங்காலத்தில் மூலதனத்தின் இருப்பு அதிகரிப்பதால், அதன் எதிர்பார்க்கப்படும் விளைவு குறைவதேயாகும். மக்கள்தொகைப் பெருக்கம், தொழில் நுணுக்க வளர்ச்சி ஆகியவற்றால் இப் போக்குத் தடைப்

பட்டாலும் தவிர்க்கப்படுவதில்லை. எதிர்பார்க்கும் விளைவுகள் குறைவதாலும் அல்லது இறுதிநிலை முதலீன் உற்பத்திச் செலவு அதிகரிப்பதாலும் மூலதனத்தின் இறுதி நிலைத் திறன் குறைவது நிச்சயமாகின்றது.

வாணிபச் சுழலின் பல்வேறு முகங்களும் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதைக் கீழ்க்காணுமாறு விளக்கலாம்: வசதி குறித்து 'மீட்சி'யிலிருந்து விளக்கத்தைத் தொடங்கலாம். மீட்சிக் காலத்தில் முதலீட்டின் அளவு வேகமாக அதிகரிக்கின்றது. வணிகர்கள் எதிர்காலம்பற்றி நம்பிக்கையுடன் செயல்படுவதால் ஆர்வ நோக்குடன் உள்ளனர். மூலதனத்தின் இறுதிநிலைத் திறனும் அதிகமாகவிருக்கும். புதிய முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதன் விளைவாக வேலைவாய்ப்பு அதிகரிப்பதால், பல்வேறு காரணிகளுக்கும் வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன ; அவற்றின் வருமானம் அதிகரிக்கின்றது. புதியதாக முதலீடு மேற்கொள்ளப்படும்பொழுது பெருக்கியின்[1] விளைவாக வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். முதலீட்டின் விளைவாக வருமானம் எத்தனை மடங்கு அதிகரிக்கும் என்பதை இறுதிநிலை நுகர்ச்சி நாட்டத்தைக் கொண்டு அளவிடலாம். ஒரு நாட்டில் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் $\frac{4}{5}$ என்று வைத்துக்கொண்டால், இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் $\frac{1}{5}$ ஆகும்; எனவே, பெருக்கி 5 ஆகும். ஆனால் வருமானம் அதிகரிக்க அதிகரிக்க, இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் குறைவதால் பெருக்கியும் குறையும். வாணிப நடவடிக்கைகள் மீட்சிக் கட்டத்திலிருந்து செழுமையை அடையும்பொழுது மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் குறையும். மூலதனப் பொருள்களின் உற்பத்திச் செலவு அதிகரிப்பதாலும், தொழிலாளர் பிரச்சினைகளாலும், தொழிற் பிணக்குகளாலும், மூலதனப் பொருள்களின் இருப்பு அதிகரிப்பதாலுமே மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் குறைகின்றது. உற்பத்திச் செலவு அதிகரிப்பதாலும், போட்டியின் தீவிரத்தாலும் தொழில் முயல்வோரிடை ஊக்கம் குறைகின்றது; ஆர்வ நோக்கு தளர்ச்சியுற்று, சோர்வு நோக்கு தலையெடுக்

[1] Multiplier

முதலீடு அதிகரிக்கப்படுவதன் விளைவாக இறுதியில் வருமானம் பன்மடங்காக அதிகரிக்கின்றது. ஆரம்பக்கால முதலீட்டிற்கும் (initial investment) இறுதியில் அதிகரிக்கப்படும் வருமானத்திற்கும் இடையேயுள்ள விகிதமே 'பெருக்கி' என்று ஜே. எம். கெயின்சால் குறிப்பிடப்படுகின்றது. அதாவது, அதிகரிக்கப்பட்ட முதலீட்டிற்கும், அதன் விளைவாக அதிகரித்துள்ள வருமானத்திற்குமிடையேயுள்ள விகிதமே 'பெருக்கி' ஆகும்,

கின்றது. ஆகவே, மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் வெகு வேகமாக வீழ்ச்சியுறுகின்றது.

மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் வீழ்ச்சியுறுவதால், வாணிபச் சுழலின் இறங்குமுகம் ஆரம்பமாகி வெகு வேகமாகச் செயல்படுகின்றது. முதலீடு குறைவதால் வேலைவாய்ப்பும் வருமானமும் வீழ்ச்சியுறுகின்றன. எதிர்பார்ப்புகள் பொய்த்த தன் விளைவாகச்சோர்வு நோக்கு மக்களிடையில் நிலவுவதால், ரொக்கப்பண விருப்பம் அதிகரிக்கின்றது; வட்டி வீதமும் அதிகரிக்கின்றது. அவ்வாறு தோன்றிய வட்டிவீதத்தைக் காட்டிலும் மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் குறைவாக இருப்பதால், முதலீடு வீழ்ச்சியுறுகின்றது. இக் கட்டத்தில் வட்டிவீதக் குறைப்புச் சுலபமன்று என்பதுடன் அத்தகைய முயற்சி பயனுமற்றதாகும். வாணிபச் சுழல்களின் இறங்கு முகம் மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரையிலும் நிலவக் கூடியது என்று கெயின்சு கருதுகின்றார்.

மக்களிடையில் அவநம்பிக்கை மறைந்து, ஆர்வ நோக்கு துளிர்க்கும்பொழுது மீட்சி தோன்றும். வாணிபச் சுழலின் இறங்குமுகத்தின்பொழுது முதலீடு குறைவதாலும், இருப்பில் உள்ள முதலீட்டுப் பொருள்கள் தேய்மானமடைவதாலும் மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் அதிகரிக்க ஆரம்பிக்கும். மந்த காலத்தில் அதிகரித்த நுகர்ச்சிப்பொருள்களின் இருப்பும் குறைவடையும். மூலதனப் பொருள்களும் நுகர்ச்சிப் பொருள் களும் பற்றாக்குறையாவதால், இலாபமும் இலாபம்பற்றிய எதிர்பார்ப்பும் அதிகரிக்கும். இதன் விளைவாக மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் அதிகரிக்கும்பொழுதே (ரொக்கப்பண விருப்பம் குறைவதால்) வட்டி வீதமும் குறைவதால், 'மீட்சி' தொடங்கும்.

மூலதனப் பொருள்களின் இருப்பு அதிகரித்தால், மூல தனத்தின் இறுதிநிலைத் திறன் குறையுமென்பது, இக் கோட் பாட்டின் அடிப்படைக் கருத்தாகும். 'பூரிப்பு'க் காலத்தில் மூலதனப் பொருள்களின் இருப்பு அதிகரித்தால், மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் குறையும்; வாணிபச் சுழலின் இறங்குமுகம் ஆரம்பமாகும். மந்த காலத்தில் மூலதனப் பொருள்களின் இருப்புக் குறைவதால், மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் அதிகரிக்கும்; மீட்சி தொடங்கிப் பூரிப்புத் தோன்றும். மீட்சிக் காலத்தில் பெருக்கி அதிகமாக இருப்பதால், பொருளாதார விரிவாக்கம் சுலபமாக நடைபெறும். பூரிப்புக் காலத்தில் பெருக்கி குறைவாகவிருக்கும்.

பொருளாதார மந்தம் நிலவும்பொழுதுகூட, வேலைவாய்ப் பேயற்ற நிலை தோன்றுமெனக் கருதக் கூடாது. ஏனெனில், மந்த காலத்தில் வருமானம் குறையும்பொழுது, ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குப் பின்பு, மக்கள் தமது வருமானம் முழுவதையுமே நுகர்ச்சிப் பொருள்கள்மீது செலவிடத் தொடங்குவர். நுகர்ச்சி நாட்டம் ஒன்றுக்கு[1]ச் சமமாக மாறுவதால், உற்பத்தியாகும் பொருள்களே அவற்றிற்கான தேவையை உருவாக்கும். அதற்கும் கீழே வேலைமட்டம் தாழ்வதற்கில்லை. மீட்சிக் காலத்தில் நுகர்ச்சி நாட்டம் ஒன்றுக்கும் குறைவாகவிருப்பினும், சமநிலை எய்தப்படலாம். நுகர்ச்சி நாட்டம் ஒன்றுக்கும் குறைவாகவிருப்பதால், வருமானத்திற்கும் குறைவாக நுகர்வுச் செலவு இருக்கும். இவ் வேறுபாட்டிற்குச் சமமாக முதலீட்டுச் செலவுகள் இருக்க வேண்டும். முழு வேலைமட்டம் எய்த வேண்டுமாயின், வருமானத்திற்கும் நுகர்ச்சிச்செலவிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை அரசாங்கம் முதலீடு செய்வதன்மூலம் சமன் செய்வது அவசியம். சமநிலைச் சீர் கேட்டைச் சமன் செய்வதற்காக மட்டுமன்றி, முழு வேலை மட்டம் எய்துவதற்காகவும், அதை நிலைப்படுத்துவதற்காகவும் பொதுச் செலவுகள்[2] மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கெயின்சு கருதுகின்றார்.

வட்டிவீதத்தைப் பொறுத்தவரையில் கெயின்சின் கருத்து மற்றவர்களிடமிருந்து மாறுபட்டதாகும். மிகையான வட்டி வீதத்தால் சேமிப்பும், முதலீடும் அதிகரிக்கும் என்பதை அவர் மறுத்துரைக்கின்றார். அவை எதிர்மாறான விளைவுகளை நல்கும் என்றும் அவர் கருதுகின்றார். ஆகவே, அவர் மிகக் குறைவான வட்டிவீதமே, முழு வேலைமட்டம் எய்த உதவும் என்பதால் மலிவுப் பணக் கொள்கையை[3] ஆதரிக்கின்றார்.

வாணிபச் சுழலின் ஏறுமுகம், இறங்குமுகம் ஆகியவற்றில் ஏற்படும் தொடர்விளைவுகளைத் தெளிவாக விளக்குவதால், கெயின்சின் கோட்பாடே சிறப்பான கோட்பாடாகக் கருதப்படுகின்றது. அரசாங்க முதலீடு பற்றிய அவர்தம் கருத்தைப் பல்வேறு அரசுகள் செயல்படுத்துகின்றன. ஆயினும், கெயின்சின் கோட்பாட்டில் பின்காணும் குறை பாடுகள் இருப்பதை மறுப்பதற்கில்லை.

[1] Unity
[2] Public expenditures
[3] Cheap money policy

தொழில் முயல்வோரின் முதலீட்டுக் கொள்கையை நிர்ணயிக்கும் முக்கியக் காரணியாக மூலதனத்தின் இறுதி நிலைத் திறனைக் கெயின்சு குறிப்பிடுகின்றார். இத்தகைய முக்கிய சக்தியான மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் எதைச் சார்ந்து உள்ளது? மூலதனத்தின் இறுதிநிலைத் திறன், தொழில் முயல்வோரின் எதிர்காலம்பற்றிய மதிப்பீட்டை—அவர்தம் உளப்பாங்கைப் பொறுத்ததாகும். அவ்வாறாயின், கெயின்சின் கோட்பாட்டிற்கும் பேராசிரியர் பிகுவின் உளத்தத்துவக் கோட்பாட்டிற்குமிடையில் வேறுபாடு இல்லையெனலாம்.

கெயின்சின் கோட்பாட்டில் வட்டிவீதத்திற்கு மிகச் சாதாரணமான இடமே அளிக்கப்பட்டு உள்ளது. வட்டி வீதத்தைக் குறிப்பிட்ட அளவு குறைப்பதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்தால் தொழில் முயல்வோரிடையே நம்பிக்கையை உருவாக்க முடியுமென்று அவர் கருதுகின்றார். ஆயினும், முதலீட்டை நிர்ணயிப்பதற்கு வட்டிவீதம் பயன் படாது என்னும் முரண்பட்ட கருத்தையும் அவர் விவரிக் கின்றார்.

வாணிபச் சுழல்களின் கால வரையறைபற்றியும் இக் கோட்பாடு விளக்கவில்லை.

ஹாஸ்லிட் போன்றோர், வட்டிவீதம் பற்றிய கெயின்சின் கருத்து, அங்காடி நிலவரத்துடன் ஒத்துப்போவதில்லை என்று கருதுகின்றார். எடுத்துக்காட்டாக, பின்னிறக்கக் காலத்திலும் மந்தத்தின்பொழுதும் மக்களிடையில் ரொக்கப்பண விருப்பம் அதிகமாகவிருப்பதால் வட்டிவீதம் அதிகமாக இருக்க வேண்டும் என்று கெயின்சு கருதுகின்றார்; ஆனால் நடை முறையில் இத்தகைய காலங்களில் வட்டிவீதம் குறைவாக இருக்கும். இவ்வாறே பூரிப்பின்பொழுது ரொக்கப்பண விருப்பம் குறைவாக இருப்பதால், வட்டிவீதம் குறைவாக இருக்குமென்று கெயின்சு கருதிடினும் நடைமுறையில் வட்டி வீதம் அதிகமாக இருக்கும்.

ஹிக்ஸின் கோட்பாடு: வாணிபச் சுழல்கள் தொடர் பாகத் தற்காலத்தில் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களுள் பேராசிரியர் ஹிக்ஸ்[1] என்பாரின் கோட்பாடு முதன்மையான தாகும். இக் கோட்பாட்டில் அவர் பெருக்கி[2], முடுக்கி[3] ஆகிய

[1] Prof. J.R. Hicks: 'A Contribution to the Theory of Trade Cycle'
[2] Multiplier
[3] Accelerator

இரு கொள்கைகளை இணைத்தும், சுயேச்சையான முதலீடு[1], ஊக்குவிக்கப்பட்ட முதலீடு[2] ஆகிய இரு கருத்துகளைச் சேர்த்தும் வாணிபச் சுழல்களின் இயல்பை விளக்குகின்றார். பெருக்கி, முடுக்கி ஆகிய இரு கருத்துகளுக்கான அடிப் படையைக் கெயின்சிடமிருந்தும், இருவகை முதலீடுகளுக்கான அடிப்படைக் கருத்தை ராய் ஹராட்[3] என்பாரிடமிருந்தும் பெற்று, அவர் தமது கோட்பாட்டை அமைத்துள்ளார்.

முதலீட்டை ஹிக்ஸ் சுயேச்சையான முதலீடு, ஊக்குவிக் கப்பட்ட முதலீடு என இரு வகைப்படுத்துகின்றார். வருவாயில் ஏற்படும் நெளிவுகளைச் சாராமல், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவற்றிற்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் முதலீடு சுயேச்சையான முதலீடு ஆகும். சுயேச்சையான முதலீடு தொடர்ந்து ஒரே விகிதத்தில் அதிகரிப்பதாகவும் அவர் கருது கின்றார். சுயேச்சையான முதலீட்டின் அளவிற்குத் தொடர் பாகக் குறிப்பிட்ட அளவு பண வருமானமும் அமையும். வருமானத்திற்கும் முதலீட்டிற்குமிடையேயான விகிதம் பெருக்கி, முடுக்கி ஆகியவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றது. ஆகவே, சுயேச்சையான முதலீட்டுக்குச் சமமான விகிதத்தில் பண வருவாயும் அதிகரிக்கும் என்றும் அவர் விளக்குகின்றார்.

உற்பத்தி அளவில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது நெளிவு களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் முதலீட்டை ஊக்குவிக்கப் பட்ட முதலீடு என்று ஹிக்ஸ் குறிப்பிடுகின்றார். எடுத்துக் காட்டாக, ஒரு நிறுவனத்தின் பொருள்களுக்கான தேவை அதிகரித்தால், நிறுவனத்தின் உற்பத்தி அளவும் வளர்ச்சி யடையும். அதிகரிக்கப்பட்ட தேவை நிரந்தரமானதாகக் கருதப்படின், அதிக முதலீடு செய்து நிறுவனத்தின் மூலதன இருப்பை அதிகரிப்பது அவசியமாகின்றது. உற்பத்தி அதிகரிப் பதால் மேற்கொள்ளப்படும் முதலீடு ஊக்குவிக்கப்பட்ட முதலீடு ஆகும்.

மேற்கண்ட இரு வகை முதலீடுகளும் வருமானத்தையும் வாணிப நெளிவுகளையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஒரு வரைபடத்தின் மூலம் விளக்கலாம் :

1 **Autonomous Investment**
2 **Induced Investment**
3 **Roy Harrod**

கீழ்க்காணும் வரைபடத்தில் செங்குத்து அச்சு பொருளாதார நடவடிக்கைகளின் நிலையையும், கிடை அச்சு ஆண்டுகளையும் குறிக்கின்றன. 'அ, ஆ' எனும் கோடு சுயேச்சையான முதலீட்டைக் குறிக்கின்றது. ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் சுயேச்சையான முதலீடு அதிகரிப்பதை உணர்த்தும் வகையில் அக் கோடு உயர்ந்து செல்கின்றது. 'இ, ஈ' எனும் கோடு, சுயேச்சையான



படம் 13

முதலீட்டின் விளைவாக அதிகரிக்கும் வருமானத்தைக் (அல்லது உற்பத்தி அளவை) காட்டுகின்றது. சுயேச்சையான முதலீட்டிற்கும் வருமானத்திற்கும் இடையேயுள்ள இடைவெளி, பெருக்கி, முடுக்கி ஆகியவை செயல்படும் அளவிற்கு ஏற்ப அமையும். 'உ ஊ' எனும் கோடு முழு வேலைமட்டத்தில் நிலவும் வருமானத்தைக் காட்டும்.

நாட்டின் பொருளாதார அமைப்பு 'க' எனும் புள்ளியில் இருப்பதாகவும், அப்பொழுது ஒரு புதிய பொருள் அறிமுகப் படுத்தப்படுவதாகவும் வைத்துக்கொள்வோம். இதன் விளைவாகக் குறுகிய காலத்திலாயினும் சுயேச்சையான முதலீடு பன்மடங்காக அதிகரிக்கும். ஆனால், ஊக்குவிக்கப்படும் முதலீட்டின் விளைவாக உற்பத்தி அளவு, வேலைமட்டம் ஆகியவை அதிகரிக்கும். அவை முழு வேலைமட்ட எல்லை

யையும் மீறி கக$_1$ வரையில் அதிகரிக்கும். அவ்வாறு அதிகரிக்கும் வருமானம் க$_1$ எனும் புள்ளியைத் தாண்ட முடியாது. அதிக பட்சம் அவ்வதிகரிப்பு க$_1$ எனும் புள்ளிக்குச் சமமாகவே இருக்க முடியும். சிறிது காலத்திற்குப் பின்னர் அவ்வதிகரிப்பு குறைவதைத் தவிர்க்க முடியாது; பொருளாதார நடவடிக்கைகளின் இறங்குமுகத்தைத் தவிர்க்க இயலாது என்பது ஹிக்ஸின் கருத்தாகும். சுயேச்சையான முதலீடு முதலில் அதிகரித்தது ஒரு குறுங்கால நிகழ்ச்சியே; ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பின் அது பழையபடியும் வழக்கமான நிலையை அடையும். ஆனால், சுயேச்சையான முதலீடும் உற்பத்தியும் அதிகரித்ததால், அதிகரிக்கப்பட்ட ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டின் விளைவாகப் பொருளாதார நடவடிக்கைகள் க க$_1$ வழியில் இயங்கும். ஆயினும், பொருளாதார நடவடிக்கைகள் உ ஊ கோட்டில் தொடர்ந்து இயங்குவதற்கு ஊக்குவிக்கப்பட்ட மூலதனம் போதாது. எனவே, உற்பத்தி அளவு உ ஊ கோட்டில் சிலகாலம் இருந்த பின்னர் மீண்டும் இ ஈ கோட்டை அடையும்.

வாணிபச் சுழலின் இறங்குமுகம் சீராக க$_2$ ப ப$_1$ எனும் வழியாக அமையும்; அல்லது க$_2$ ப ப$_2$ எனும் வழியில் வேகமாக அமையலாம். இறங்குமுகம் ஆரம்பத்தில் சீராக இருந்தாலும் பிறகு தீவிரமாகச் செயல்படும். ஏனெனில், உற்பத்தி ஒரு முறை குறைய ஆரம்பித்தால், பிறகு வெகு வேகமாகக் குறைவது இயற்கையாகும். இந் நிலைக்குக் கீழ்க் காணும் பணவழி விளக்கத்தை ஹிக்ஸ் அளித்துள்ளார்: இறங்குமுகம் ஆரம்பித்தவுடன், பொருள்களை விற்பனை செய்ய முடியாத நிலை தோன்றுவதால், நிறுவனத்தின் மாறாச் செலவுகளின்[1] சுமை அதிகரிக்கின்றது; நிறுவனங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் திவாலாகின்றன. ரொக்கப்பண விருப்பம் திடீரென அதிகரிப்பதால், கடன் வசதிகள் பாதிக்கப்படுகின்றன. கடன் அங்காடியும் வெகுவாகக் கட்டுப்படுத்தப்படுகின்றது. இவற்றின் விளைவாக இறங்குமுகம் வெகு வேகமாக அமைகின்றது.

சுயேச்சையான முதலீடு, ஊக்குவிக்கப்பட்ட முதலீடு ஆகியவற்றில் ஏற்படும் நெளிவுகளைப் பெருக்கி, முடுக்கி ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தி, ஹிக்ஸ் தமது கோட்பாட்டை அளித்துள்ளார். உற்பத்தி, வருமானம், விலை

[1] Fixed costs

மட்டம், வேலைமட்டம் ஆகியவற்றால் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கு அடிப்படைக் காரணம் ஊக்குவிக்கப்பட்ட முதலீடே ஆகும். ஆயினும், ஊக்குவிக்கப்பட்ட முதலீடு என்பது முடுக்கியே ஆகும். முடுக்கியை அடிப்படையாகக் கொண்டு வாணிபச் சுழல்களை விவரிக்க முயல்வதை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கில்லை.

புத்தாக்கக் கோட்பாடு[1]: முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் சிறப்பியல்புகளில் ஒன்றான தொழில் நுணுக்கம் மாற்றமடைவதாலேயே வாணிபச் சுழல்கள் தோன்றுவதாக ஜோசப் ஷும்பீடர்[2] கருதுகின்றார். உற்பத்தி முறையும், பணத்தின் அளிப்பும் மாறாமல் இருப்பின், வாணிபச் சுழல்கள் ஏற்பட மாட்டா. இயக்கமேயற்ற அத்தகைய பொருளாதார அமைப்பிலும், போர், வேளாண்மைத் தோல்விகள், புதிய சட்டங்கள் போன்ற புறச்சக்திகளின் விளைவாக மாற்றங்கள் ஏற்படக் கூடும். எனினும், அத்தகைய மாற்றங்கள் தொடர்ந்து ஏற்படுவதில்லை. மக்கள் தொகைப் பெருக்கம் மூலதன வளர்ச்சிபோன்ற தொடர்ந்து நிகழும் மாற்றங்கள்கூடப் பொருளாதார நடவடிக்கைகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துவதில்லை. புத்தாக்கங்களே வன்மையான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. புத்தாக்கங்கள் இல்லாவிடில் பொருளாதார நடவடிக்கைகளில் தேக்க நிலை ஏற்படும். உற்பத்தி முறையும் நுகர்வோரின் பழக்க வழக்கங்களும் மாற்றமடைவதில்லை.

உலகில் பொருளாதார அமைப்புகள் சலனமற்றவை அல்ல; அவை வெகு வேகமாக மாறிக்கொண்டிருக்கின்றன. தொழில் முயல்வோரே இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துகின்றனர். தொழில் முயல்வோரின் முக்கியப்பணி, நிர்வாகம் இடர்தாங்குதல் ஆகியவற்றைக்காட்டிலும் புத்தாக்கங்களை அறிமுகப்படுத்துவதே ஆகும். புத்தாக்கம் என்பது, (1) புதுப் பொருளை அறிமுகப்படுத்துதல், (2) புதிய உற்பத்தி முறையை அறிமுகப்படுத்துதல், (3) புதிய உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்துதல், (4) புது அங்காடிகளைத் தோற்றுவித்தல், (5) புதிய தொழில்களை உண்டாக்குதல் ஆகியவற்றைக் குறிக்கும். மேற்காணும் புத்தாக்கங்களின் விளைவாகவே வாணிபச் சுழல்கள் தோன்றுகின்றன என்று ஷும்பீடர்

[1] Theory of Innovation
[2] Joseph Shumpeter

விளக்குகின்றார். பொதுவாக, எந்தவொரு நிறுவனம் அல்லது தொழிலின் தேவை அல்லது அளிப்பை மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் [முயற்சிகள் யாவுமே புத்தாக்கங்கள் ஆகும். தொழில் முயல்வோரின் எதிர்காலம் பற்றிய கணிப்பை மாற்றுவதன் மூலம் அவர்தம் பொருளாதார, வாணிபக் கணிப்புகளையும் புத்தாக்கங்கள் மாற்றியமைக்கின்றன. இம் மாற்றங்களின் விளைவாக உற்பத்திச் செலவு மாற்றமடைவதால், தேவைக்கோடும் மாற்றமடைகின்றது. ஆகவே, உற்பத்தித் துறையின் இறுதிக்கட்டம்பற்றி நிர்ணயிக்கவியலாத நிலை நிலவுகின்றது. எனவே, ஒவ்வொரு புத்தாக்கத்தின் விளைவாகவும் பொருளாதார அமைப்பானது பழைய சமநிலையில் இருந்து விடுபட்டுப் புதிய சமநிலைக்குத் தன்னை மாற்றிக் கொள்கின்றது. ஆகவே, வாணிப நடவடிக்கையில் ஏற்படும் தொடர்மாற்றங்களுக்குப் புத்தாக்கங்களே காரணமென்று கீழ்க் காணுமாறு ஷும்பீடர் விவரிக்கின்றார் :

ஒரு நாடு முழு வேலைமட்டம் எய்தியிருப்பதாக வைத்துக் கொள்வோம். இந் நிலையில் உற்பத்திக்காரணிகள் அதிக ஊதியம் பெற்றுக்கொண்டிருப்பதால், பொது மக்களின் வருமானமும் வாங்கும் சக்தியும் அதிகமாக இருக்கும். அப்பொழுது ஒரு புதிய பொருள் அறிமுகப்படுத்தப்படுவதாக வைத்துக்கொள்வோம். புதுப்பொருளை உற்பத்தி செய்வதற்கு உற்பத்திச் சாதனங்களும், உற்பத்திச் சாலையும் தேவை. ஏற்கெனவே முழு வேலைமட்டம் எய்தப்பட்டுவிட்டதால், புதுப்பொருளுக்குத் தேவையான உற்பத்திச் சாதனங்களைப் பெற வேண்டுமாயின், முன்பே உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உற்பத்திச் சாதனங்களுக்கு அதிக ஊதியம் அளித்தே பெற முடியும்.

உற்பத்திச் சாதனங்களுக்கு அதிக ஊதியம் அளிக்கப்படுவதன் விளைவாகப் பழைய தொழில்களில் உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பதுடன், உற்பத்தி அளவும் குறைவடையும். புதுப்பொருளின் உற்பத்தியாளர்கள், உற்பத்திச் சாதனங்களுக்கு அதிக ஊதியம் அளிப்பதற்காக வங்கிகளிடமிருந்து கூடுதலாகக் கடன் பெறுவர். இதன் விளைவாகப் பழைய தொழில்களிலும், புதிய தொழில்களிலும் பணியாற்றும் உற்பத்திச் சாதனங்களின் ஊதியம் அதிகரிக்கும். அவற்றின் வருமானம் அதிகரிப்பதால், அதிக அளவில் பொருள்களையும் பணிகளையும் வாங்க முயல்வதால் விலைமட்டம் அதிகரிக்கும். பழைய பொருள்களின் அளிப்புக் குறைவதுடன், அவற்றிற்

கான தேவையும் அதிகரிப்பதால் பொருள்களின் விலை மட்டம் அதிகரிக்கும். ஆயினும், எல்லாத் தொழில்களிலும் தேவைப் பெருக்கமும் உற்பத்திச் செலவு அதிகரிப்பும் சமமாக இருக்க வேண்டுமென்ற நியதியில்லை. பழைய தொழில்களின் உற்பத்திச் செலவைக்காட்டிலும் அதிகமாக விலைமட்டம் உயர்வதால், அத் தொழில்களில் அமித இலாபம் கிட்டும்; ஆகவே, அத் தொழில் வளர்ச்சியுறும். வங்கிகளிடமிருந்து பெற்ற கடனைக்கொண்டு முதலீடு செய்யப்படும் அளவிற்கு ஏற்பப் பொருள்களின் உற்பத்திச் செலவும் விலைமட்டமும் அதிகரிக்கும்.

புதிய பொருள்கள் வாணிப ரீதியாக வெற்றி பெற்றால், உற்பத்தியாளர்க்கு அதிக இலாபம் கிட்டும். எனவே, அங்காடியில் அதைப் போன்ற பொருள்களையும், போலிப் பொருள்களையும் போட்டி நிறுவனங்கள் உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபடுத்தும். போட்டிப் பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பதால், அதனுடன் தொடர்புகொண்ட பல்வேறு தொழில்களும் வளர்ச்சியுறும்; வாணிப நடவடிக்கைகள் செழுமையை நோக்கித் தொடர்ந்து பீடுநடை போடுகின்றன.

செழுமை நிலவும்பொழுதே மந்தத்திற்கான அடிப்படைக் காரணங்களும் தோன்றுகின்றன. புதிதாக அறிமுகப்படுத்தப் பட்ட பொருளைப் போன்றே பல்வேறு பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதால், காலப்போக்கில் புதிய தொழிலி லிருந்து அமித இலாபம் கிட்டுவது இயலாமற்போகின்றது. சில நிறுவனங்களில் இழப்பும் ஏற்படக் கூடும். இழப்பிற்கு அஞ்சும் நிறுவனங்கள் உற்பத்திப் பணியை நிறுத்தி விடுவ தால், உற்பத்திக் காரணிகளும் தொழிலாளர்களும் வேலை யிழக்கின்றனர். அதன் விளைவாகப் பொருள்களுக்கான தேவை குறைகின்றது; பணவாட்டப் போக்கு உருவாகின்றது. இதைப் போன்றே புத்தாக்கத்தை மேற்கொள்ளும் நிறு வனங்கள் வங்கியில் பெற்ற கடன்களைத் திருப்பும்பொழுதும் பணவாட்டப் போக்கு உருவாகும்.

ஷும்பீடரின் இவ் விளக்கத்தை முழுமையான விளக்க மாக ஏற்பதற்கில்லை. ஏனெனில், நாடு முழு வேலைமட்டம் எய்தியிருப்பதாகவும், வங்கிக் கடன்கள் பெற்றுப் புத்தாக் கங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் இரு அனுமானங்களின் அடிப்படையில் இக் கோட்பாடு அமைந்துள்ளது. முழு வேலைமட்டம் எய்தப்படாத வரையில் புத்தாக்கங்களினால்

மேற்கண்ட விளைவுகள் ஏற்படுவதில்லை. மேலும், புத்தாக்கங்களை மேற்கொள்வோர் தாமே முதலீடு செய்வதன் மூலம் புதுப்பொருளை உற்பத்தி செய்கின்றனரே தவிர, வங்கியில் கடன் பெற்றுப் புதுப்பொருளை உற்பத்தி செய்வதாகக் கருதுவதும் தவறாகும்.

வாணிபச் சுழல்கள் ஏற்படுவதற்குப் புத்தாக்கங்களும் ஒரு காரணமாயினும், அவை மட்டுமே காரணமெனக் கொள்வது தவறாகும். பணவழி விளக்கமின்றிப் புத்தாக்கங்களை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு வாணிபச் சுழல்களை விளக்குவது இயலாது எனும் ஹேயக்கின் கருத்தை மறுப்பதற்கில்லை.

வாணிபச் சுழல்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்

வாணிப நடவடிக்கைகளில் ஏற்படும் நெளிவுகளால் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் பாதிக்கப்படுகின்றனர். விரிவாக்கக் காலத்தில் உற்பத்தியாளர்க்கும் ஊகவணிகர்க்கும் அமித இலாபம் கிட்டுமாயினும் நிலையான வருமானம் பெறுவோர் இழப்பிற்குள்ளாகின்றனர். மந்த காலத்தில் நிறுவனங்கள் மூடப்படுவதாலும், வங்கி முறிவுகளாலும் பெருமளவு வேலையின்மை, வறுமை, இல்லாமை ஆகிய தொல்லைகளுக்கு ஏழை மக்கள் ஆளாகின்றனர். எனவே, சமுதாயத்தில் அனைவரும் குறிப்பாக உழைக்கும் வர்க்கத்தினர், வாணிபச் சுழல்களைக் கட்டுப்படுத்தவும் தவிர்க்கவும் விரும்புகின்றனர். பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்களுள் வாணிபச் சுழல்களை நீக்குவதும், முழு வேலைமட்டம் எய்தி அதை நிலைப்படுத்திக்கொள்வதும் முக்கியமானதாகும். உண்மையில் பணவாக்கக் கைக்கோள், அரசிறைக் கைக்கோள் ஆகியவற்றிற்கு இதுவே அடிப்படை நோக்கமாகும்.

பணவாக்கக் கைக்கோள் : விலைமட்டத்தை நிலைப்படுத்துவதற்கும் வாணிபச் சுழல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பணவாக்கக் கைக்கோள் பெரும்பான்மையினரால் ஆதரிக்கப்படுகின்றது. நாட்டின் மைய வங்கியிடம் நாட்டின் வங்கித்துறை, பணத்துறை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் பல்வேறு பொறுப்புகள் உள்ளன. இப் பொறுப்புகள் கடன் அளவு கட்டுப்பாடுகள், கடன் தன்மைக் கட்டுப்பாடுகள் என்று குறிப்பிடப்படுகின்றன. பணவாக்கக் கைக்கோளின் அடிப்படை நோக்கம் வங்கிக்கடனின் பெருக்கத்தையும்

சுருக்கத்தையும் கட்டுப்படுத்துவதாகும். எடுத்துக்காட்டாக, நாட்டில் பூரிப்பு நிலவுவதாகவும், இப் பூரிப்பு ஏற்பட்டதற்கு வங்கிக் கடன் பெருக்கமும் ஒரு காரணம் என்றும் வைத்துக் கொள்வோம். இந் நிலையைத் தடுப்பதற்கு மையவங்கி வட்டி வீதத்தை உயர்த்தலாம் அல்லது அதைப் போன்ற கடன் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இதைப் போன்று நாட்டில் மந்தம் நிலவும்பொழுது வங்கிக் கடன் அதிகரிப்பின் மூலம் முதலீடு அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் வங்கி வட்டிவீதம் குறைக்கப்படலாம் அல்லது கடன் கட்டுப்பாடு நடவடிக்கைகள் தளர்த்தப்படலாம். 1929-ஆம் ஆண்டிற்கு முன்னர் வாணிபச் சுழல்களைக் கட்டுப் படுத்துவதற்காகப் பெரும்பாலும் பணவாக்க நடவடிக்கை களே மேற்கொள்ளப்பட்டன. ஆனால், உலகப் பெரும் மந்தத் தின்பொழுது பொருளாதார அமைப்பிற்குப் புத்துயிர் ஊட்டு வதற்காக மேற்கொள்ளப்பட்ட பணவாக்க நடவடிக்கைகள் வெற்றி அளிக்கவில்லை. எனவே, பெரும் அறிஞர்களுள் பலர் பூரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படும் அள விற்குப் பணவாக்க நடவடிக்கைகள், மந்தத்தை நீக்கு வதற்குப் பயன்படுவதில்லை என்று கருதுகின்றனர்.

அரசிறைக் கைக்கோள்[1]**:** 1930ஆம் ஆண்டிற்குப் பின்னர் வாணிபச் சுழல்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும், விலைமட்டத்தை நிலைப்படுத்துவதற்காகவும் அரசிறைக் கைக்கோள் பெரும் அளவில் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கிலாந்தில் கெயின்சும், அமெரிக்காவில் ஹேன்சனும் அரசிறைக் கைக்கோள்களைத் தீவிரமாகப் பிரபலப்படுத்தினர். அரசிறைக் கைக்கோள் என்பவை, பற்றாக்குறை நிதியாக் கத்தின் மூலம் சில குறிப்பிட்ட பொதுப்பணித் திட்டங்களை மேற்கொள்வதைக் குறிப்பிடுவதாகும். விரிவாகக் குறிப்பிடுவ தாயின், அரசிறைக் கைக்கோளில் வரி விதிப்பு, பொதுச் செலவுகள், பொதுக் கடன்கள் ஆகியவை அடங்கும். இம் முறை பெரும் மந்தத்தின்பொழுது கையாளப்பட்டுப் போதிய வெற்றியையும் அளித்தது.

நேரடி நடவடிக்கைகள்: வாணிபச் சுழல்களைக் கட்டுப் படுத்துவதற்கு விலை கட்டுப்பாடு[2], விலை ஆதரவு[3] ஆகியவை சிறந்த நேரடி நடவடிக்கைகளாகும். போர்க்காலப்

[1] Fiscal policy
[2] Price control
[3] Price support

பணவீக்கம் போன்ற பொருளாதாரப் பூரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு விலைக்கட்டுப்பாடு, பங்கீடு[1] ஆகியவை சிறந்த சாதனங்களாகும். ஆனால், அமைதிக் காலத்தில் குடியரசு நாடுகளில் விலைக் கட்டுப்பாடு போதிய வெற்றி அளிப்பதற்கில்லை. ஆதலால், அமைதிக் காலத்தில் பொருளாதாரப் பூரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு விலைக் கட்டுப்பாடுகள் பயன்படுமா என்பது சந்தேகத்திற்கு உரியதாகும். விலை வீழ்ச்சி அடையும்போது ஒரு குறிப்பிட்ட அளவிற்குப் பின்னரும் விலை குறையாமல் இருப்பதற்காக விலை ஆதரவு அளிக்கப்படலாம். இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்காவில் இம் முறை பெரும் அளவில் மேற்கொள்ளப் பட்டது. ஆயினும், இம் முயற்சி ஒரு தற்காலிகத் தீர்வாகத் தான் அமையும்; நிரந்தரமான தீர்வாக அமைவதற்கில்லை.

ஐரோப்பா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகளில் வாணிபச் சுழல்களைக் கட்டுப்படுத்துவதற்கு வேலையின்மை காப்பீட்டுத்திட்டம்[2] மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. இம் முறையில் உழைப்பாளர்களிடம் இருந்து காப்பீட்டுக் கட்டணம் கட்டாயமாக வசூலிக்கப்படும். நிதியை அரசு நிர்வகிக்கும். விலை வீழ்ச்சி ஏற்பட்டு வேலையின்மைப் பிரச்சினை தோன்றும்பொழுது இந் நிதியில் இருந்து உழைப் பாளர்களுக்கு நிதி வசதி அளிக்கப்படுவதால், அவர்கள் அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் வழக்கமான வாழ்க்கைத் தரத்தை மேற்கொள்ள முடியும். இதனால் பொருள்களுக்கும் பணிகளுக்குமான தேவை மாறாமல் இருப்பதால் உற்பத்தி அதிகரிப்பிற்கும் இஃது உதவும் எழுத்தளவில் இத் திட்டம் சிறப்பானதாகவும், எளிதில் மேற்கொள்ளக்கூடியதுமாகும். இருப்பினும், நடைமுறையில் சமுதாயக்காப்பீட்டுத் திட்டங்கள் எல்லாவற்றிலும் இத் திட்டமே குறைவான வெற்றிப் பெறக் கூடியதாகும். மேலும், இம் முயற்சிகள் வாணிப மந்தத்தையும் வேலையின்மைப் பிரச்சினையையும் தடை செய்யப் பயன் படுமே தவிர, தவிர்ப்பதற்குப் பயன்பட மாட்டா.

வாணிபச் சுழல்களை நீக்குவதற்கு ஏற்றதாக எந்த ஒரு நடவடிக்கையையும் குறிப்பிட இயலாது. முதலாளித்துவ அமைப்புகளில் வாணிபச் சுழல்களைத் தவிர்ப்பதற்கில்லை என்று காரல்மார்க்ஸ் கருதுவதால், சமதர்மப் பொருளாதார அமைப்பை மேற்கொள்வதன் மூலமே வாணிபச் சுழல்களை நீக்க முடியும் என்று கூறலாம்.

[1] **Rationing**
[2] **Unemployment Insurance Scheme**

12. இந்தியச் செலாவணியின் வரலாறு[1]

சுதந்தரத்திற்கு முன் இந்தியச் செலாவணி

இந்திய ரூபாயின் கடந்த கால வரலாறு சுவை மிக்க ஒரு படிப்பினையாகும். இந்தியாவின் நிலையான பணமாக இந்திய ரூபாய் 1835ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு முன்னர் வெவ்வேறு மதிப்பும் அளவுமுள்ள நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. பணவாக்கத் துறையில் காணப்பட்ட இக் குழப்பத்தால் கிழக்கிந்தியக் கம்பெனியின் வாணிப உறவுகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. எனவே, நிதித்துறையிலும், செலாவணித் துறையிலும் கிழக்கிந்தியக் கம்பெனி பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டது. இந்தியா, வெள்ளித் திட்டம், பொன் மாற்றுத் திட்டம், பொற்கட்டித் திட்டம், ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டம் ஆகியவற்றை ஒன்றன் பின் ஒன்றாக மேற்கொண்டது. செலாவணிச் சட்டம் (1835) மூலம் இந்தியாவில் இரட்டை உலோகத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. பொன் மொகராக்களும், வெள்ளி ரூபாயும் புழக்கத்தில் இருந்தன. அவற்றின் நாணயச்சாலை மாற்று விகிதம் 1 : 15 ஆகும். ஆனால், பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் 180 மஞ்சாடி நிறையுள்ள வெள்ளி ரூபாயே நிலையான பணம் ஆகும்.

1835ஆம் ஆண்டு முதல் இரட்டை உலோகத் திட்டம்: இந்திய அரசால் 1835-ல் மேற்கொள்ளப்பட்ட இரட்டை உலோகத் திட்டம் வெற்றி பெறவில்லை. ஆஸ்திரேலியாவிலும், கலிஃபோர்னியாவிலும் பொற்சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக இந்தியாவில் வெள்ளியைக்காட்டிலும் பொன்னின் மதிப்பு வீழ்ச்சியடைந்தது. அதன் விளைவாகக் கிரஷாம் விதி செயல்பட்டு, வெள்ளிப் பணங்கள் புழக்கத்திலிருந்து மறைந்தன. எனவே, அரசு பொன்னின் மதிப்பைக் குறைத்தது. அமெரிக்காவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் விளைவாக, இந்தியாவில் பொன்னின்

[1] History of Indian Currency

இறக்குமதி அதிகரித்ததால், இந்தியாவில் பொற்காசுகளை வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது.

1873ஆம் ஆண்டில் செர்மனி வெள்ளித் திட்டத்தைக் கைவிட்டதைத் தொடர்ந்து டென்மார்க், நார்வே, சுவீடன் ஆகிய நாடுகளும் வெள்ளித் திட்டத்தைக் கைவிட்டன. அதே சமயத்தில் வெள்ளிச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்ட தாலும், புதிய உற்பத்தி நுணுக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட தாலும் வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியுற்றது. வெள்ளித் திட்டத்தை மேற்கொண்டிருந்த இந்தியா, சீனா ஆகிய நாடு களில் வெள்ளி குவிய ஆரம்பித்ததால், வெள்ளியின் விலை கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்தது. வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியடைந்ததால், இந்திய ரூபாயின் பொன் மதிப்பும் குறைய ஆரம்பித்தது. 1874ஆம் ஆண்டு முதல் இந்தியர் களிடையில் 'வெள்ளித் திட்டத்தைக் கைவிட வேண்டும்' எனும் கோரிக்கை வலுப் பெற்றது. எனவே, 1892ஆம் ஆண்டில் வெள்ளித் திட்டத்தைக் கைவிடுதல், பொன் திட்டத்தை மேற்கொள்ளுதல் போன்ற செலாவணிப் பிரச் சினைகளை ஆராய்ந்து ஆலோசனைகளை அளிப்பதற்காக ஹெர்சல் கமிட்டி[1]யை இந்திய அரசு நியமித்தது. ஹெர்சல் கமிட்டியின் பரிந்துரைகளின்மீது, அது வரையில் நடைமுறை யிலிருந்த பணத் திட்டம் கைவிடப்பட்டது. இலவச நாணய முறையும் கைவிடப்பட்டு, இந்திய ரூபாய் வெறும் அடை யாளப் பணமாக அறிவிக்கப்பட்டது. 1893ஆம் ஆண்டின் செலாவணிச் சட்டத்தின்படி மேற்காணும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் கீழ்க்காணும் நிர்வாகக் குறிப்பு களும் அறிவிக்கப்பட்டன: (1) முதற்குறிப்பு இந்திய ரூபாய்க் கும் இங்கிலாந்து நாட்டுப் பணத்திற்குமிடையே மாற்று வீதம் ரூபாய்க்கு 1 ஷில்லிங் 4 பென்சு என்று குறிப்பிட்டது. (2) இரண்டாவது குறிப்பு வரி, மற்றும் பொது வரவினங்களுக்கு ஈடாகச் சவரன், அரைச்சவரன்களை அரசு ஏற்றுக்கொள் வதற்கு அனுமதித்தது. (3) இங்கிலாந்தில் இந்திய அரசுச் செயலர் பொன் நாணயங்கள், மற்றும் பொற்கட்டிகளுக்குப் பணம் வெளியிடுவதற்கு இந்திய அரசிற்கு மூன்றாவது குறிப்பு அனுமதி அளித்தது. பொன் திட்டத்தை மேற்கொள்ளு வதற்கு முன்னோடியான இச் சீர்திருத்தங்கள் ரூபாயின் பொன் மதிப்பு மேலும் வீழ்ச்சியடைவதைத் தவிர்க்கவும், மக்க ளிடையில் பொன்னைப் பிரபலப்படுத்தவும், ரூபாய்க்கும் ஸ்டெர்லிங்கிற்கும் இடையில் நாணயமாற்று விகிதத்தை

[1] Herschell Committee

நிலைப்படுத்தவுமே மேற்கொள்ளப்பட்டன. ஒரு ரூபாயில் 16 அணாக்கள் அடங்கியிருந்ததால் இந்திய ரூபாய்க்கும் இங்கிலாந்து நாணயத்திற்குமிடையே மாற்று விகிதம் 1 ஷில்லிங் 4 பென்சு என்றிருந்ததால், 1 அணாவும் 1 பென்னியும் மதிப்பில் சமம் என்றாகியது.

ஃபௌலர் கமிட்டி (1898)[1] : இந்திய ரூபாயின் மாற்று விகிதத்தை நிலைப்படுத்தவும், இந்தியப் பணத்துறையைச் சீர்படுத்தவும் தேவையான வழி வகைகளைக் காண்பதற்குச் சர். ஹென்றி ஃபௌலர்[2] என்பாரின் தலைமையில் ஒரு கமிட்டி 1898ஆம் ஆண்டில் இந்திய அரசினரால் நியமிக்கப் பட்டது. ஃபௌலர் கமிட்டியின் முக்கியப் பரிந்துரைகள் கீழ் வருமாறு :

(1) பொன் நாணயங்கள் வரையற்றச் சட்டச் செலாவணியாக இருக்க வேண்டும். அத்துடன் வெள்ளி ரூபாயும் சட்டச் செலாவணியாகப் புழக்கத்தில் இருக்க வேண்டும்.

(2) சவரன்களையும், அரைச்சவரன்களையும் அச்சிடுவதற்காக அரசு ஒரு பொன் நாணயச்சாலையை ஆரம்பிக்க வேண்டும்.

(3) ரூபாய் அச்சடிப்பதிலிருந்து கிடைக்கும் இலாபத்தைக் கொண்டு பொன் திட்டக் காப்பு[3] ஒன்று இந்தியாவில் உருவாக்கப்படுதல் வேண்டும்.

(4) இந்திய ரூபாய்க்கும் இங்கிலாந்தின் நாணயத்திற்கும் இடையே நாணயமாற்று விகிதம் ஒரு ரூபாய்க்கு 1 ஷில்லிங் 4 பென்சு ஆக இருக்க வேண்டும்.

(5) இந்தியாவின் அயல்நாட்டு வாணிபம் பாதக நிலையை அடையும்பொழுது, ஏற்றுமதிக் காரணங்களுக்குப் போதிய அளவில் பொன் கிடைக்குமாறு அரசு கவனித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஃபௌலர் கமிட்டியினரால் பரிந்துரைக்கப்பட்டுள்ள பொன் திட்டம் வழக்கமான பொன் திட்டத்திலிருந்து வேறுபட்டிருப்பதை உணரலாம்.

[1] Fowler Committee (1898)
[2] Sir Henry Fowler
[3] Gold Standard Reserve

குழுவினரின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட அரசு அவசியமான சட்டங்களை நிறைவேற்றியது. ஆயினும், பொன் நாணயங்களைப் புழக்கத்தில் ஈடுபடுத்துவதற்கு இந்தியர்கள் போதிய உற்சாகத்தைக் காட்டாமையாலும், இந்தியாவில் நாணயச் சாலை திறப்பதற்குப் 'பிரித்தானியக் கருவூலம்' எதிர்ப்பு தெரிவித்தமையாலும் ஃபெளலர் குழுவினரின் பரிந் துரைகள் செயல்படுத்தப்படவில்லை. எதிர்பாராத இச் சூழ் நிலையில் அயல்நாட்டு வாணிபம், இங்கிலாந்தில் இந்தியாவின் நிர்வாகச் செலவுகள் ஆகியவற்றை எளிமை படுத்துவதற்காக வாவது இந்திய ரூபாயின் மாற்று விகிதத்தை நிலைப்படுத்த இந்திய அரசு விரும்பியது. இம் முயற்சியின் விளைவாகவே பொன் மாற்றுத் திட்டம் இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது.

பொன் மாற்றுத் திட்டம் (1898-1917): *1898* முதல் *1917* வரையில் இந்தியாவில் பின்பற்றப்பட்ட பொன் மாற்றுத் திட்டம் ஹெர்சல் குழுவினரின் பரிந்துரையாலோ ஃபெளலர் குழுவினர் பரிந்துரையாலோ மேற்கொள்ளப்பட்டது அன்று. அரசின் ஒரு முயற்சி தோல்வியுற்றபோது எதிர்பாராத வித மாக மேற்கொள்ளப்பட்டதே இத் திட்டமாகும்.

ஃபெளலர் குழுவினரின் பரிந்துரைகளைச் செயல்படுத்து வதில் தோல்வியுற்ற இந்திய அரசு அயல்நாட்டு வாணிபம், இங்கிலாந்தில் இந்தியாவின் நிர்வாகச் செலவுகள் ஆகிய வற்றை எளிமைப்படுத்துவதற்காகவாவது இந்திய ரூபாயின் அயல்நாட்டு மதிப்பை நிலைப்படுத்துவதற்கு முயன்றது. பல்வேறு நிர்வாக ஆலோசனைகளுக்குப் பின்னர் இந்திய ரூபாயின் மதிப்பு 1 ஷில்லிங் 4 பென்சு ஆக நிர்ணயிக்கப் பட்டது. இவ் விகிதத்தில் ஸ்டெர்லிங்கை வாங்குவதற்கும் விற்பதற்கும் அரசு தயாராக இருக்கும் வரையில் இம் மாற்று விகிதம் பின்பற்றப்படும். இந்திய அரசின் சார்பில் அரசுச் செயலாளர் இங்கிலாந்தில் குழு உண்டியல்களை[1] 1 ஷில்லிங் $4\frac{1}{8}$ பென்சு என்னும் விகிதத்தில் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார். இவ்வுண்டியல்களுக்கு ஈடாக இந்தியா வில் ரூபாயைப் பெற முடியாமையால், இவ்வுண்டியல்கள் ரூபாய்ப் பற்றுச் சீட்டுகள் என்றழைக்கப்படுகின்றன. இவ் வுண்டியலை இலண்டனில் விற்பனை செய்வதன் மூலம் இங்கிலாந்தில் இந்திய அரசின் நிர்வாகச் செலவுகளுக்குப் போதுமான நிதியைப் பெற முடிந்தது. இதற்கு முன்னர்ச்

[1] British Treasury

சாதக வாணிப நிலையிலிருந்த இந்திய அரசு வெளிநாட்டிலிருந்து பொன்னை இறக்குமதி செய்த பின்னர் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்வது வழக்கம். பொன் மாற்றுத் திட்டத்தை மேற்கொண்டதன் மூலம் செலவு மிக்க இம் முறை கைவிடப்பட்டதுடன் ரூபாயின் மாற்று விகிதத்திற்கு உச்சவரம்பும் நிர்ணயிக்கப்பட்டது.

1908ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாதக வாணிப நிலையின் விளைவாக ரூபாய்க்கான தேவையைக்காட்டிலும் ஸ்டெர்லிங்கிற்கான தேவை உயர்ந்தது. இதன் விளைவாக ஸ்டெர்லிங் உண்டியல்களை விற்க வேண்டிய கட்டாயம் இந்திய அரசிற்கு ஏற்பட்டது. இதன்படி இங்கிலாந்திற்குச் செலுத்த வேண்டிய வணிகர்கள் இந்திய அரசிடமிருந்து ஸ்டெர்லிங் உண்டியல்களைப் பெற்று, அவற்றை இங்கிலாந்திற்கு அனுப்பினால், இங்கிலாந்தில் உள்ளோர் அங்கு இருக்கும் அரசுச் செயலரிடம் அவ்வுண்டியல்களை அளித்து ஸ்டெர்லிங்கைப் பெற முடியும். இதன் விளைவாகப் பாதக வாணிபநிலை நிலவும்பொழுது இங்கிலாந்திற்குப் பொன்னை ஏற்றுமதி செய்யும் இக்கட்டான நிலை தவிர்க்கப்பட்டதுடன் ரூபாயின் மாற்று விகிதம் 1 ஷில்லிங்கு $3\frac{29}{32}$ பென்சிற்கும் குறையாமல் பாதுகாக்கப்பட்டது. இத் திட்டம் ஒழுங்காக இயங்குவதற்காக இந்திய அரசு இலண்டனில் ஒரு பொற்காப்பையும்[1], இந்தியாவில் ரூபாய்க் காப்பையும்[2] நிர்வகித்தது.

இந்தியாவில் நிலவிய பொன் திட்டத்தின் முக்கிய இயல்புகள் கீழ்வருமாறு :

(1) வரையிட்ட சட்டச் செலாவணியான வெள்ளி ரூபாய்கள், அரை ரூபாய்கள், காகிதப் பணங்கள் போன்ற அடையாளங்கள் புழக்கத்தில் இருந்தன.

(2) உள்நாட்டில் அடையாளப் பணத்திற்கீடாகப் பொன்னை மாற்றிக்கொள்ள முடியாது. அயல்நாட்டு வாணிபம் போன்ற காரணங்களுக்காகக் குறிப்பிட்ட விகிதத்தில் நாணயங்களுக்கு ஈடாகப் பொன்னைப் பெற முடியும். ஆனால், நடைமுறையில் பொன் இடம் பெயர்ந்ததே இல்லை.

(3) இலண்டனில் பொன் காப்பும்[3], இந்தியாவில் ரூபாய் காப்பும்[4] ஆக இரு நிதிகள் நிர்வகிக்கப்பட்டன.

[1] Council Bill
[2] Rupee Draft
[3] Gold Reserve
[4] Rupee Reserve

பொன்மாற்றுத் திட்டம் 1900 முதல் 1917 வரையில் நடைமுறையில் இருந்தது. கெயின்சு போன்றோரால் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கும் இத் திட்டமே சிறிய நாடுகளுக்கு ஏற்ற திட்டமென்று உலகநாடுகள் மன்றத்தில் பொருளாதார மாநாடும்[1] பரிந்துரைத்து உள்ளது. பொன் திட்டத்தின் நன்மைகள் யாவற்றையும் கொண்டதாயினும், பொன்மாற்றுத் திட்டத்தைச் சராசரி மனிதர்களால் எளிதில் புரிந்துகொள்ள முடியாது; எனவே, இந்தியாவில் பொன்திட்டமாக அஃது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

முறிவுக்குக் காரணம்: முதல் உலகப் போரின்போது இந்தியாவின் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை மிகவும் சாதகமாக விளங்கியதால், அதிக அளவில் ரூபாய் வெளியிடுவது அவசியமாயிற்று. அதே நேரத்தில் வெள்ளிக்கான தேவை அதிகரித்ததால், இந்திய ரூபாயின் தோற்ற மதிப்பைக் காட்டிலும் உள்ளுறு மதிப்பு உயர்ந்தது. இதன் விளைவாக இந்திய ரூபாய்கள் உருக்கப்பட்டன. இந்திய ரூபாய்க்கும், இங்கிலாந்து நாணயத்திற்கும் இடையே 1 ரூ. = 1 ஷில்லிங் 4 பென்சு எனும் விகிதத்தைத் தொடர்ந்து கடைபிடிக்க முடியாமல் போனதால், 1917ஆம் ஆண்டில் நாணய மாற்று வீதம் 1 ரூ. = 1 ஷில்லிங் 5 பென்சு என்று மாற்றப்பட்டது. தொடர்ந்து வெள்ளியின் விலை அதிகரித்துக்கொண்டே இருந்ததால், நாணயமாற்று விகிதம் மாற்றமடைந்துகொண்டே இருந்தது; முடிவில் 1920-ல் 2 ஷில்லிங் 10 பென்சாக நிர்ணயிக்கப்பட்டது. பொன்மாற்றுத் திட்டம் முறிவுற்றது.

பொன்மாற்றுத் திட்டம் முறிவடைந்ததற்கு இந்திய ரூபாயின் அடையாளப்பணம் என்ற நிலை மாறி முற்றுரு பெற்ற பணமாகியதும், நாணய மாற்று விகிதம் மாற்றமடைந்ததுமே காரணங்களாகும்.

பாபிங்டன் சுமித் கமிட்டி 1919[2]: 1919ஆம் ஆண்டு மே மாதத்தில் ரூபாயின் மதிப்பை உயர்த்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அரசிற்கு ஆலோசனைகள் அளிப்பதற்காக, பாபிங்டன் சுமித் என்பாரின் தலைமையில் ஓர் ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டது. அக் குழு பின்வரும் பரிந்துரைகளை அளித்தது:

[1] Economic Conference of the League of Nations
[2] The Babington Smith Committee 1919

(1) ரூபாய் இந்தியாவின் வரையற்ற சட்டச் செலாவணியாக நீடிக்க வேண்டும்.

(2) நாணய மாற்று விகிதம் ரூபாய்க்கு 2 ஷில்லிங்காக (11·30016 மஞ்சாடி பொன்) நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்திய மாற்று விகிதத்தின் விளைவாக ரூபாய் அடையாளப் பணமாகவே நீடிக்கும். இந்திய மாற்று விகிதம், இந்தியாவின் ஏற்றுமதியைப் பாதிக்காமல், ஆனால் இறக்குமதிப் பொருள்களை மலிவானவை ஆக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும், இப் புதிய மாற்று விகிதத்தால், இங்கிலாந்தில் இந்தியாவின் நிர்வாகச் செலவுகளில் ரூ. 12 கோடி மீதப்படும் என்றும் மதிப்பிடப்பட்டது.

(3) பம்பாயில் சவரன், அரைச்சவரன் நாணயங்களை அச்சிடுவதற்காக ஒரு நாணயச்சாலை ஆரம்பிக்கப்படும்.

(4) இந்தியாவில் பொன், வெள்ளி ஆகியவற்றின் ஏற்றுமதிமீதும், இறக்குமதிமீதும் நிலவும் தடைகள் யாவும் நீக்கப்பட வேண்டும். வெள்ளியின்மீது விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித் தீர்வை நீக்கப்பட வேண்டும்.

(5) பொன் திட்டக் காப்பில் கணிசமான விகிதத்தில் பொன் இருப்பது அவசியம். பொன் இருப்பில் 50 சதவிகிதம் இந்தியாவிலேயே இருக்க வேண்டும்.

குழுவின் பரிந்துரைகளில் பெரும்பான்மையானவை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. புதிய நாணயமாற்று விகிதம் 2.2.1920 முதல் நடைமுறைக்கு வந்தது. கருவூல அலுவலர்களும் சவரன்களை ரூ. 10-க்கும், அரைச்சவரன்களை ரூ. 5-க்கும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், ஆனால் அவற்றை விநியோகிக்கக் கூடாது என்றும் அரசு அறிவித்தது. ஆயினும், பொன் நாணயச்சாலை திறக்கப்படவில்லை.

ஆனால், 1920ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு ஏற்பட்ட பாதகச் செலுத்து நிலையின் விளைவாக, ஸ்டெர்லிங்கிற்கான தேவை பன்மடங்காக அதிகரித்ததால், நாணய மாற்று விகிதம் இந்தியாவிற்குப் பாதகமாகப் பரவ ஆரம்பித்தது. நாணய மாற்று விகிதம் ரூபாய்க்கு 1 ஷில்லிங் 3 பென்சு ஆக வீழ்ச்சியடைந்தது. இந் நிலையைத் தவிர்ப்பதற்காக அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. ரூபாயின் மதிப்பு

அதன் போக்கிலே அமையட்டும் என்று அரசு தன் முயற்சிகளைக் கைவிட்டது.

ஹில்டன் யங் குழு[1]: 1921 முதல் 1925 வரையிலும் இந்திய அரசு பின்பற்றிய செலாவணிக் கொள்கை[2] திறம்பட இயலாமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். 1926 ஏப்பிரலில் நாணயமாற்று விகிதம் ரூபாய்க்கு 1 ஷில்லிங் 6 பென்சாகக் குறைந்தபொழுது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1925ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 25ஆம் நாள் ஹில்டன் யங் என்பாரின் தலைமையில் இந்தியச் செலாவணி முறையையும், அதன் நடைமுறையையும் ஆராய்ந்து செலாவணியில் மேற்கொள்ளப்படும் மேல் நடவடிக்கைகள் இந்திய நலனுக்கு உகந்ததாக இருக்குமா என்பதை அறிவிப்பதற்காகவும் தேவையான பரிந்துரைகளை அறிவிப்பதற்காகவும் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக் குழு கீழ்க்காணும் மூன்று முக்கியப் பிரச்சினைகளைப் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டது :

(1) இந்தியாவின் நலனுக்கு உகந்த சிறந்த செலாவணித் திட்டத்தைத் தீர்மானிப்பது.

(2) ரூபாய்க்கும் ஸ்டெர்லிங்கிற்கும் இடையே சரியான நாணய மாற்று விகிதத்தை நிர்ணயித்து நிலைப்படுத்துவது.

(3) மைய வங்கி ஒன்றை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றிப் பரிந்துரைப்பது.

மேற்காணும் மூன்று பிரச்சினைகளைப் பற்றிய ஹில்டன் யங் குழுவின் பரிந்துரைகளை விரிவாக்கக் காணலாம்.

பொற்கட்டித் திட்டம்: பல்வேறு வகை பொன் திட்டங்களையும் பரிசீலித்த பின்னர் இந்தியாவிற்கு ஏற்றது பொற்கட்டித் திட்டமே என்று குழு பரிந்துரைத்தது. முதற்போருக்கு முன்னர், வெற்றிகரமாகச் செயல்பட்டதாயினும், பொன் மாற்றுத் திட்டம் சராசரி மனிதர்கள் புரிந்துகொள்ளக்கூடியதன்று என்பதாலும், விதிகளை அடிப்படையாகக்கொண்டு அமையாதது என்பதாலும், வெள்ளியின் விலை உயரும்

---

[1] The Hillton-Young Commission
[2] Currency Policy

பொழுது தோல்வியுறக்கூடியது என்பதாலும், அயல்நாட்டுச் செலாவணியைச் சார்ந்தே செயல்படக்கூடிய திட்டம் என்பதாலும் கைவிடப்பட்டது.

பொற்காலத் திட்டம் மேற்கொள்ளப்படுவதற்குப் பெரு மளவில் பொன் தேவைப்படும் என்பதாலும், ஐரோப்பிய நாடுகளில் பல ஏற்கெனவே பொன் திட்டத்தைக் கைவிட்டு விட்டன என்பதாலும், இந்தியா போன்ற நாடுகளுக்கு ஒவ்வாத செலவு மிக்கத் திட்டம் என்பதாலும் பொன் திட்டமும் இந்தியாவிற்கு ஏற்றது அன்று என்று குழு கருதியது. எனவே, பொற்கட்டித் திட்டமே இந்தியாவிற்கு ஏற்ற திட்டம் என்று கீழ்க்காரணங்களை அடிப்படையாகக்கொண்டு குழு முடிவு செய்தது:

(1) பொற்கட்டித் திட்டத்தில் உள்நாட்டு நாணயமும் பொன்னும் மாற்றுதலுக்குரியவை; நாணயத்தின் மாற்று மதிப்பையும் அது பாதுகாக்கும்.

(2) பொற்கட்டிகள் 400 அவுன்சு அளவுடையதாய் இருப்பதால், பணத்துறையல்லாத பணிகளுக்குப் பொன் கிடைக்காது.

(3) பொற்கட்டித் திட்டம் ஒரு தானியங்கு திட்டமாகும்.

(4) இங்கிலாந்தில் பொற்கட்டித் திட்டமே பின்பற்றப் படுகின்றது.

பொற்கட்டித் திட்டத்தைப் பரிந்துரைத்த குழு சவரன் நாணயங்களைக் கைவிட வேண்டுமெனக் குறிப்பிட்டது. குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட அரசு அவற்றை 1924ஆம் ஆண்டில் செலாவணிச் சட்டத்தின் மூலம் நடை முறைக்குக் கொண்டு வந்தது. அச் சட்டத்தின்படி (1) சவரன், அரைச் சவரன் ஆகியவற்றின் வெளியீடு நிறுத்தப்படும். (2) அரசு 40 தோலா அளவுள்ள பொற்கட்டிகளைத் தோலா ஒன்றுக்கு ரூ. 21–3–10 வீதம் எந்த அளவிற்கும் பம்பாயில் வாங்கும். (3) பம்பாயில் அல்லது இலண்டனில் பொன் அல்லது ஸ்டெர்லிங் உடனடியாகப் பட்டுவாடா செய்யப் படும். பொன் 1065 தோலா(400 அவுன்சு)விற்குக் குறையாமல் தோலா ஒன்றுக்கு ரூ. 23–3–10 விலையில் விற்பனை செய்யப் படும். ஸ்டெர்லிங்கின் விற்பனை விலை $5\frac{49}{64}$ பென்சு ஆகும்.

1927 ஆம் ஆண்டின் செலாவணிச் சட்டப்படி, இந்தியாவில் பொன்மாற்றுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டதாயினும், இந்திய ரூபாய்க்கு ஈடாகப் பொன் அல்லது ஸ்டெர்லிங்கை மாற்றிக் கொள்ளலாம் என்று விதிப்பதால், அஃது உண்மையில் பொன் ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டமே ஆகும். 1931–க்குப் பின்னர் இங்கிலாந்தைத் தொடர்ந்து இந்தியாவும் பொற்கட்டித் திட்டத்தைக் கைவிட்டபொழுது இந்தியப் பணத் திட்டம் சாதாரணமாக ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டமாகவே இருந்தது.

இந்தியர்கள் ஹில்டன் யங் குழுவின் பரிந்துரைகளையும், 1927 ஆம் ஆண்டின் செலாவணிச் சட்டத்தின் விதிகளையும் எதிர்த்தனர். கோகலே, திலகர் போன்றோர் இத் திட்டத்தின் விளைவாக இந்தியச்செலாவணியை இங்கிலாந்தின் செலாவணி அடிமைப்படுத்தி விடும் என்று கருதினர். நாணயங்களுக்கு ஈடாகப் பொற்கட்டிகளைப் பெறும் முறை சராசரி மனிதர் களால் உணர்ந்துகொள்ள முடியாத அளவில் இருப்பதாகக் கருதப்பட்டது. மேலும், இத் திட்டம் நடைமுறையில் ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டமாக இருந்ததே தவிர, பொற்கட்டித் திட்டமாக இல்லை என்று கருதப்பட்டது.

ரூபாயின் மதிப்பை நிலைப்படுத்துதல்: ஹில்டன் யங் குழு, ரூபாயின் மாற்று மதிப்பு 1 ஷில்லிங் 4 பென்சிற்குச் சமம் என்று பரிந்துரைத்தது. ஒரு ரூபாயின் பொன் மதிப்பு 8—47512 மஞ்சாடித் தங்கம் எனவும், இங்கிலாந்தில் 1 பவுனில் 113-0016 மஞ்சாடித் தங்கம் இருப்பதால், ரூபாய்க்கும் பவுனிற்கும் இடையே மாற்று விகிதம் கீழ் வருமாறு அமையும் என்றும் குழு கருதியது:

ரூ.1 = 1 ஷில்லிங் 6 பென்சு

$$£\,1 = \text{ரூ. } 13{\cdot}3 \left[\frac{113\text{-}0016}{8{\cdot}47512}\right]$$

இந்திய அரசு இப் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு 1927ஆம் ஆண்டின் செலாவணிச் சட்டத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. ஒரு ரூபாய்க்கு 1 ஷில்லிங் 6 பென்சு அல்லது ஒரு தோலா பொன்னுக்கு ரூ. 23–3–10 என்ற விலையில் ரூபாய்க்கு ஈடாகப் பொற்கட்டிகளைப் பெறலாம் என்றும் விதிக்கப்பட்டது. குழுவின் இப் பரிந்துரையும் அரசு இதனை ஏற்றுக்கொண்டதும் இந்தியாவில் பெரும் கருத்து வேறுபாட்டைத் தோற்றுவித்தது. குழுவின் உறுப்பினர்

களிடையிலேயே இம் முடிவு குறித்துக் கருத்து வேறுபாடு தோன்றியது. குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் நாணயமாற்று விகிதம் 1 ஷில்லிங் 6 பென்சு என்று கருதினாலும், மாற்று விகிதம் 1 ஷில்லிங் 4 பென்சு ஆக இருக்க வேண்டும் என்று மற்ற உறுப்பினர்கள் கருதினர். இவ்விரு கருத்துகளின் சாதக பாதகங்களைக் காணலாம்.

ரூபாயின் மாற்று மதிப்பு 1 ஷில்லிங் 6 பென்சு ஆக இருக்க வேண்டும் என்பதற்கு ஆதரவாக ஹில்டன் யங் குழு கீழ்க் காணும் வாதங்களை அளித்தது: (1) நடைமுறையில் நிலவும் 1 ஷில்லிங் 6 பென்சு என்ற விகிதத்தில் இந்திய விலைமட்டம் உலகின் விலைமட்டத்திற்கு ஏற்பச் சரி செய்துகொண்டு விட்டதால், இனி மாறுதல் ஏதும் தேவை இல்லை. (2) இதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளில் இம் மாற்று விகிதம் நிலவிய பொழுது சமநிலைச் சீர்கேடு[1] எதுவும் ஏற்படவில்லை. இந் நிலையில் ரூபாயின் மதிப்பை மிகையாக மதிப்பிட்டால், அயல் நாட்டு வாணிப நிலையின் சமநிலை சீர்கெடக் கூடும். (3) இங்கிலாந்தில் இந்தியாவின் நிர்வாகச் செலவுகளுக்காகச் செலவிட வேண்டியுள்ள இந்தியாவிற்கு உயர்வான நாணய மாற்று விகிதமே ஏற்றதாகும். (4) அயல்நாட்டுச் செலாவணியை அதிக அளவில் பெறுவதற்கு இந்தியாவிற்கு உதவும். (5) இந்தியாவின் ஏற்றுமதிப் பொருள்கள் தேவை நெகிழ்ச்சியற்றிருப்பதால், உயர்வான மாற்று விகிதத்தின் விளைவாக ஏற்றுமதி பாதிக்கப்படாது. மேலும், ஏற்றுமதி மூலம் அதிக வருவாய் கிடைக்கும். (6) ஒரு ரூபாய்க்கு 1 ஷில்லிங் 6 பென்சு சமம் எனும் விகிதத்தில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாலும், கூலிகள் முன்னதாகவே நிர்ணயிக்கப் பட்டிருப்பதாலும் இனி நாணய மாற்று விகிதம் மாற்றப் பட்டால் கடனளித்தோர், தொழிலாளர் ஆகியோருக்கு இழப்பு ஏற்படும். (7) நிலவரிச் சுமை[2] அதிகரிக்குமாயினும், விவசாயப் பொருள்களின் விலை அதிகரிப்பதால் அது சரி கட்டப்பட்டு விடும்.

ஹில்டன் யங் குழுவின் மேற்காணும் முடிவிற்கு இந்தியர் களிடையில் போதிய ஆதரவில்லை. இக் குழுவின் உறுப்பினர் களில் ஒருவரான சர். புருசோத்தம தாசு என்பார், உயர்வான நாணயமாற்று விகிதத்திற்கு ஆதரவான குழுவின் வாதங் களைப் பின்வரும் வகையில் மறுத்துரைத்தார்:

[1] Disequilibrium
[2] Burden of Land Revenue

(1) உயர்வான (1 ஷில்லிங் 6 பென்சு) மாற்று விகிதத்தில் உள்நாட்டு விலைமட்டமும், உலக விலைமட்டமும் ஒத்துப் போய் விட்டன என்பது தவறாகும். உண்மையில் இம் மாற்று விகிதம் இந்திய அரசால் உருவாக்கப்பட்டதே தவிர, பன்னாட்டு வாணிபத்தின் விளைவாக இயல்பாக ஏற்பட்டது அன்று. (2) குறைவான (1 ஷில்லிங் 4 பென்சு) மாற்று விகிதமே இயல்பான மாற்று விகிதமாகும். அவ் விகிதமே நீண்ட காலமாக (1900 முதல் 1917 முடிய) நிலவியதாகும். பிற்காலத்தில் இவ் விகிதம் தோல்வியுற்றதற்குக் காரணம் போர்க்கால நிலவரங்களே ஆகும். (3) உயர்வான மாற்று விகிதத்தின் விளைவாக விவசாயிகளும் கடனாளிகளும் பாதிக்கப்படுவர். (4) புதிய மாற்று விகிதத்தில் இந்திய ரூபாய் மிகையாக மதிப்பிடப்படுவதால், இந்தியாவின் ஏற்றுமதியின் போட்டியாளர்களுக்கு 12½% நன்மை கிடைக்கும். ஆகவே, மந்தம் ஏற்படும்பொழுது இந்தியா பெருமளவில் பாதிக்கப்படும்.

இந்திய அரசு உயர்வான மாற்று விகிதத்தை ஏற்றுக் கொண்டிருக்கக் காரணம், இங்கிலாந்தில் இந்தியாவின் நிர்வாகச் செலவின் சுமை குறையுமென்பதும், ஏற்றுமதியை ஆதரிப்பதன் மூலம் விவசாயிகள் தமது வருமானத்தை ஆதரிக்க முடியுமென்பதுமே ஆகும். ஆயினும், உயர்வான மாற்று விகிதத்தின் விளைவாகப் பொருளாதார மந்தம் ஏற்படும் பொழுது, இந்தியா பெருமளவில் பாதிக்கப்படும் எனும் உண்மையையும் மறுப்பதற்கில்லை.

மைய வங்கி: ஹில்டன் யங் குழு நியமிக்கப்படுவதற்கு முன்னர் இந்தியாவின் பணத்துறை இருவேறு அதிகாரிகளால்[1] நிர்வகிக்கப்பட்டு வந்தது. இந்திய அரசு செலாவணிக் கட்டுப்பாடு அதிகாரி மூலம் செலாவணியின் அளவையும் இந்திய இம்பீரியல் பேங்கு[2] கடன் கட்டுப்பாட்டையும் நிர்வகித்து வந்தன. இவ்விரு நிர்வாகக் குழுக்களிடையிலும் போதிய ஒருங்கிணைப்பு இல்லாமையால், இந்தியச் செலாவணித்துறையில் குழப்பங்கள் மலிந்து காணப்பட்டன. மேலும், இந்தியப் பணச்சந்தையில் பல்வேறு குறைகள் நிலவி வந்தன. எனவே, இந்தியச் செலாவணியையும் கடனையும் கட்டுப்படுத்தி நிர்வகிப்பதற்காக ஒரு மைய வங்கி ஆரம்பிக்கப் படவேண்டும் என்று ஹில்டன் யங் குழு பரிந்துரைத்தது.

[1] Controller of Currency
[2] Imperial Bank of India

மைய வங்கி பங்குதாரர்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும், சட்டமன்றங்களின் கட்டுப்பாடின்றி அது சுதந்தரமாக இயங்க வேண்டும் என்றும் குழு கருதியது. இப் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட அரசு 1920ஆம் ஆண்டின் இம்பீரியல் பாங்குச் சட்டத்திற்கு ஒரு திருத்த மசோதாவையும் கொண்டுவந்தது. இம் மசோதாக்களுக்குப் பலத்த எதிர்ப்பு இருந்தமையால், அரசு அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. மைய வங்கி பற்றிய பரிந்துரையை 1927ஆம் ஆண்டில் செயல்படுத்த முடியவில்லை.

உலகப் பெருமந்தத்தின்பொழுது, இந்தியா பொற்கட்டித் திட்டத்தைக் கைவிட்டு, ரூபாயை ஸ்டெர்லிங்குடன் இணைத்தது. குறைவான நாணய மாற்று வீதத்திற்குப் பரவலான ஆதரவு இருந்தபொழுதிலும், நாணய மாற்று விகிதம் மாற்றப்படவில்லை. 1935ஆம் ஆண்டில் மைய வங்கியின் பணிகள் யாவற்றையும் நிறைவேற்றுவதற்கு ரிசர்வ் பாங்கு ஆஃப் இந்தியா[1] ஆரம்பிக்கப்பட்டது.

பொன் ஏற்றுமதி : *1931*-க்குப் பின்னர்ப் பெருமளவு பொன் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. 1931 முதல் 1939 வரையிலும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப் பட்ட பொன்னின் மதிப்பு ரூ. 382 கோடி என்று மதிப்பிடப்படு கின்றது. தொன்றுதொட்டுப் பொன்னை இறக்குமதி செய்து வந்த இந்தியாவிலிருந்து பொன் ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலை தோன்றியது. பொன் வெளியேற்றத்தின் விளைவாக இந்திய அரசிடமும் மக்களிடமும் பலத்த கருத்து வேறுபாடு நிலவியது.

பொன்னின் வெளியேற்றத்திற்கு முக்கியமாக இரு காரணங் களைக் குறிப்பிடலாம். நாட்டில் நிலவிய பொருளாதார மந்தமும், அரசு பின்பற்றிய கொள்கையுமே அவ்விரு காரணங் களாகும். இக் காலத்தில் விவசாயப் பொருள்களின் விலை 56-4% குறைந்தது; வேலையின்மைப் பிரச்சினையும் வெகுவாக அதிகரித்தது. மக்கள் தமது வருவாயில் ஏற்பட்ட இழப்பைச் சமன் செய்வதற்குத் தமது கடந்த காலச் சேமிப்பைப் பொன்னாக வைத்திருந்தமையால், அவர்கள் தமது பொன் இருப்பை விற்பது அவசியமாயிற்று. இதனால் பொதுவான இயல்பிற்கு எதிர்மாறாகப் பொன்னின் விலை குறைய

[1] **Reserve Bank of India**

ஆரம்பித்தது. பொருளாதார மந்தம் மக்களுடைய வருமானத்தைக் குறைத்ததுடன் இந்தியாவின் அயல்நாட்டு வாணிபத்தையும் பாதித்தது. அயல்நாட்டு நாணய மாற்று விகிதத்தை மாற்ற விரும்பாத அரசு தலையிடாக் கொள்கையைப் பின்பற்றியதால், பொன் ஏற்றுமதியைத் தவிர்க்க முயலவில்லை.

இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குப் பொன் ஏற்றுமதி செயல்பட்டிருக்கக் காரணம் இங்கிலாந்தில் பொன்னின் விலை அதிகரித்ததே ஆகும். பொன் திட்டம் முடிவுற்ற பின்னர், பொன்னின் ஸ்டெர்லிங் மதிப்பு தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருந்தது. இங்கிலாந்தில் பொன்னின் விலை மிகுந்து காணப்பட்டதால், இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குப் பொன்னை ஏற்றுமதி செய்து விற்பனை செய்வதில் நிறைய இலாபம் கிட்டியது. பொன் வணிகர்கள் இந்தியாவில் குறைந்த விலையில் பொன்னைப் பெற்று இங்கிலாந்தில் அதிக விலையில் விற்றதன் மூலம் இலாபமீட்டினர்.

இந்தியாவிலிருந்து பெருமளவு பொன் ஏற்றுமதி செய்யப் படுவது இந்தியாவின் நலனுக்குப் புறம்பானது என்பதால், பல்வேறு நாடுகளும் பொன்னை இறக்குமதி செய்து கொண்டிருக்கும்பொழுது இந்தியா பொன்னை ஏற்றுமதி செய்வதை அரசு தலையிட்டுத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்து மக்களிடையில் பரவியது. இந்தியாவின் பொன் இருப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்திய அரசு தலையிட்டு நேரிடையாகவோ அல்லது இந்தியாவின் தலைமை வங்கி மூலமாகவோ ஏற்றுமதி செய்யப்படும்; பொன்னை விலைக்கு வாங்குதல் வேண்டும் என்றும் ஆலோசனை கூறப்பட்டது. ஆனால், அரசு தொடர்ந்து தலையிடாக் கொள்கையைப் பின் பற்றியதால், மக்களிடையில் பலத்த கண்டனத்தை ஏற்க வேண்டியிருந்தது.

இந்திய அரசு கீழ் வரும் காரணங்களின் அடிப்படையில் தொடர்ந்து தலையிடாக் கொள்கையைப் பின்பற்றியது; பொன் ஏற்றுமதி என்பது ஒரு சாதாரணமான நடவடிக்கை என்று கருதிய அரசு, பொன் ஏற்றுமதி தடை செய்யப்பட்டால், மக்களின் தொல்லைகள் அதிகரிக்கும் என்றும் கருதியது. பொன் ஏற்றுமதிமீது விதிக்கப்படும் தடை பொன்னின் விலையைக் குறைக்குமாதலால், பொதுமக்கள் துயர் அடைவர் என்றும் அரசு கருதியது.

பொன் ஏற்றுமதியின் விளைவாக அயல்நாட்டு வாணிபம் செழிப்புற்றதுடன் பொதுமக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வாங்குவதும் எளிதாகியது என்றும் அரசு கருதியது. பொன் ஏற்றுமதியால் இந்தியாவின் பொது நிதிகளின் மதிப்பு அதிகரித்ததாகவும், கடன்வசதிகள் எளிமையானவையாகவும், மாற்று விகிதம் சாதகமான விகிதத்தில் நிலைப்படுத்தப்பட்டதாகவும் அரசு கருதியது. பொன் வெளியேற்றத்தின் விளைவாக அரசு தனது 15 மிலியன் கடனைத் தீர்க்க முடிந்ததாகவும் கருதப்பட்டது.

பொன் ஏற்றுமதியைத் தடை செய்யாததன் விளைவாக, இந்தியப் பொன்னை இலண்டனுக்கு எடுத்துச் சென்று, பிரிட்டனுக்குச் செலாவணியைப் பலப்படுத்திக்கொள்வதற்கு அரசு திட்டமிட்டுச் செயல்படுவதாகப் பொதுமக்கள் சந்தேகப்பட்டனர். பொன்னின் ஏற்றுமதிமீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டம்[1]: 1927ஆம் ஆண்டின் பொற்கட்டி-ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டம் இந்தியாவில் போதிய வரவேற்பைப் பெறவில்லை. 1931 செப்டெம்பர் 21ஆம் நாள் இங்கிலாந்தில் பொன் திட்டம் முறிவுற்றபொழுது இந்தியாவும் பொன்மாற்றுத் திட்டத்தைப் புறக்கணிக்க வேண்டியதாயிற்று. அதே நாளில் இந்தியாவின் ஆட்சித் தலைவர்[2] பிறப்பித்த அவசரச் சட்டத்தின்படி, பொன்னை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டன. மற்றோர் அவசரச் சட்டத்தின்படி ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் மூலம் இந்திய ரூபாய்க்கும் பொன்னிற்கும் இடையே நிலவிய பிணைப்பு துண்டிக்கப்பட்டு, ஸ்டெர்லிங்குடன் 1 ஷில்லிங் 6 பென்சு என்ற விகிதத்தில் பிணைக்கப்பட்டது. மற்றுமோர் அறிவிப்பின்படி உண்மையான வாணிப நடவடிக்கைகளுக்காகவும் ஸ்டெர்லிங் அல்லது பொன்னை ரூபாய் ஒன்றுக்கு 1 ஷில்லிங் 5·49/64 பென்சு எனும் விகிதத்தில் விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்திய ரூபாயை ஸ்டெர்லிங்குடன் பிணைத்ததற்கு ஆதரவாகப் பின்வரும் கருத்துகள் குறிப்பிடப்பட்டன:

1 The Sterling Exchange Standard
2 Governer-general

(1) இங்கிலாந்தில் இந்தியாவின் நிர்வாகச் செலவுகளுக்காக ஆண்டுதோறும் பெருந்தொகையை இந்தியா செலுத்த வேண்டியுள்ளது. இந் நிலையில் ரூபாய்—ஸ்டெர்லிங் மாற்று விகிதம் மாறாமல் நிலையாக இருப்பது இந்தியாவிற்கு உகந்த தாகும். இல்லாவிடில், இந்தியாவின் வரவு-செலவுத் திட்டம் மாற்று விகிதத்திடையே மேற்கொள்ளப்படும் சூதாட்டமாகவே முடியும் என்று கருதப்பட்டது. இக் கருத்தை முழுமையான தாக ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில், ஸ்டெர்லிங்-பொன் தொடர்பு துண்டிக்கப்படின், ஸ்டெர்லிங்கின் மதிப்பு குறைவதையும் பொன்மாற்றுத் திட்டத்தைக்கொண்டிருப்பின், ரூபாயின் மதிப்பு அதிகரிப்பதையும் தவிர்க்க இயலாது. அத்தகைய சூழ்நிலை தோன்றிடின், இந்தியா தனது செலவு களைக் குறைவான தொகையினைக்கொண்டே ஈடுகட்ட முடியும்.

(2) இங்கிலாந்துடனும், ஸ்டெர்லிங் பகுதியைச் சேர்ந்த மற்ற நாடுகளுடனும் இந்தியாவின் அயல்நாட்டு வாணிபம் குறிப்பிடத் தக்கது ஆகும். எனவே, இந்தியாவின் அயல் நாட்டு வாணிபத்தைக் காப்பதற்கு ரூபாய்-ஸ்டெர்லிங் மாற்று விகிதம் மாறாமலிருப்பது அவசியமாகும் என்று கருதப்பட்டது.

இப் புதிய திட்டத்தினால் இந்தியாவின் ஏற்றுமதி வாணிபம் செழிக்கும் என்றும், ரூபாயை ஸ்டெர்லிங்குடன் இணைக்கா விடில் ஏற்படக்கூடிய தொல்லைகள் தவிர்க்கப்படக் கூடும் என்றும் கருதப்பட்டது.

ரூபாயை ஸ்டெர்லிங்குடன் இணைக்காவிடில், நாம் பொன் திட்டத்தை மேற்கொள்வதே மாற்று வழியாகும். ஆனால், போதிய அளவு பொன் இல்லாமையால் ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டத்தை ஏற்பது அவசியமாயிற்று. ரூபாயை ஸ்டெர்லிங் குடன் இணைத்ததன் விளைவாக இந்தியா மற்றொரு நாட்டின் செலாவணியைச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. ரூபாயின் உள்நாட்டு மதிப்பைச் சுதந்தரமாக நிர்ணயிக்கும் உரிமையை இந்தியா விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று; ஸ்டெர் லிங்கிற்கு ஏற்படும் விளைவுகளில் ரூபாயும் பங்கேற்க வேண்டியதாயிற்று. இங்கிலாந்தின் உள்நாட்டு நிலவரத்திற்கு ஏற்ப ஸ்டெர்லிங்கின் மதிப்பு குறைந்தால், இந்திய நிலவரம் எப்படி இருந்தபோதிலும் ரூபாயின் மதிப்பு பாதிக்கப் படுவதைத் தவிர்க்க முடியாது போயிற்று. இந்தியாவின் அயல்நாட்டு வாணிப உறவுகள் தம் இயல்பான போக்கிலிருந்து மாற்றமடைந்து ஸ்டெர்லிங் பிரதேசங்களுடன் வலுப்

பெறலாயின. நாணயமாற்று விகிதம் உயர்வாக நிர்ணயிக்கப்பட்டதால், இந்தியாவிலிருந்து பொன்னின் வெளியேற்றம் அதிகரித்தது.

ரூபாய்-ஸ்டெர்லிங்கின் இணைப்பிற்கு எதிர்ப்பாக மேற்காணும் கருத்துகள் குறிப்பிடப்படினும், அத்தகைய இணைப்பில் சில நன்மைகளும் விளைந்தன. அயல்நாட்டுக் கொடுப்பினைகள் மிக்கக் கடனாளி நாடான இந்தியாவில் இணையற்ற ரூபாயால் பெரும் நன்மை விளைவதற்கில்லை. அத்தகைய முயற்சி இந்தியாவில் நெளிவு மிக்க மாற்று விகிதத்தையும், அது தொடர்பான இன்னல்களையும் விளைவித்து இருக்கக் கூடும்.

*1934*ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் பாங்குச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டம் அதிகாரப் பூர்வமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ரூபாய்-ஸ்டெர்லிங் மாற்று விகிதத்தை 1 ஷில்லிங் 6 பென்சு விகிதத்தில் மாறாமல் பாதுகாக்கும் பொறுப்பை நாட்டின் செலாவணித் துறைக்குத் தலைமை ஏற்கும் ரிசர்வு பாங்கே ஏற்றுக்கொண்டது. நாட்டின் தலைமை வங்கி ஸ்டெர்லிங்கை 1 ஷில்லிங் $5\frac{63}{64}$ பென்சிற்குக் குறையாமல் விற்கவும், 1 ஷில்லிங் $6\frac{3}{16}$ பென்சிற்குள் வாங்கவும் அனுமதிக்கப்பட்டது; நிர்வாக வசதிக் குறித்து 10000–க்குக் குறைவான ஸ்டெர்லிங்கு வாங்கவும் விற்கவும் கூடாது என்றும் விதிக்கப்பட்டது.

நிர்வகிக்கப்பட்ட அயல்நாட்டுச் செலாவணித் திட்டம்[1]: பன்னாட்டுப் பண நிதியில் இந்தியா உறுப்பினராகும் (*8–4–1947*) வரையிலும் ஸ்டெர்லிங் மாற்றுத் திட்டம் இந்தியாவில் பின்பற்றப்பட்டது. பன்னாட்டுப் பண நிதி[2]யில் உறுப்பு நாடானதும், இந்தியாவின் பணத் திட்டத்தில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. 'நிதி'யின் அமைப்புச் சட்டப்படி உறுப்பு நாடுகள், தமது செலாவணியின் மதிப்பைப் பொன்னின் மூலமோ அல்லது அமெரிக்க டாலர் மூலமோ அறிவிப்பதுடன், குறிப்பிட்ட அளவிற்குள் பொன் விற்பனை அல்லது வாங்குவதைச் சுதந்தரமாக மேற்கொள்ள வேண்டும். எனவே, ஸ்டெர்லிங்கிற்கும் ரூபாய்க்கும் இடையே உள்ள இணைப்பு 1947ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் கைவிடப்

[1] Managed Foreign Exchange
[2] International Monetary Fund

பட்டது. ஆனால், இந்திய ரூபாய்க்கும் மற்ற நாட்டு நாணயங்களுக்கும் இடையே உள்ள நாணய மாற்று விகிதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்தியத் தலைமை வங்கி ஏற்றுள்ளது. இதனால் இந்திய ரூபாய், வெளி நாட்டு நாணயங்கள் அனைத்துடனும் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது தெளிவாகும். எனவே, தற்போது வழக்கத்தில் உள்ள திட்டத்தை நிர்வகிக்கப் பட்ட அயல்நாட்டு மாற்றுத் திட்டம் அல்லது பன்னாட்டுப் பொன்-டாலர் மாற்றுத் திட்டம்[1] என்று குறிப்பிடலாம். இப்பொழுது நாணயமாற்று விகிதத்தை மாற்றுவதாயின், 'நிதி'யின் ஒப்புதலுடன் அரசே மாற்றுதல் வேண்டும்.

இந்தியக் காகிதச் செலாவணி அமைப்பு[2]: இந்தியாவில் காகிதச் செலாவணி வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதற்காகக் காகிதச் செலாவணிச் சட்டம்[3] 1861ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அதற்கு முன்னர் வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மூன்றிடங்களிலுமிருந்த மாநில வங்கிகள்[4] காகிதச் செலாவணியை வெளியிட்டு வந்தன. புதிய சட்டத்தின் படி ரூ. 10, 20, 50, 100, 500, 1000, 10,000 மதிப்புள்ள காகிதச் செலாவணியை வெளியிடும் உரிமை அரசிற்கு அளிக்கப் பட்டது. கல்கத்தா, பம்பாய், சென்னை என்று மூன்று வெளியீட்டு வட்டங்கள்[5] முதலில் நிர்ணயிக்கப்படினும், பின்னர் அவை ஏழாக உயர்ந்தன. காகிதப்பணம் வெளியிடப் பட்ட வட்டத்திற்குள் வரையற்ற சட்டச் செலாவணியாகும். காகிதப்பணங்கள் வெளியிடப்பட்ட வட்டத்தின் தலைமை அலுவலகத்தில் மட்டுமே ரூபாய்களாக மாற்றிக்கொள்ளப்படலாம் என்றாலும், அரசிற்குச் செலுத்தும்பொழுது எவ் வட்டத்தில் வெளியிடப்பட்ட காகிதப்பணமாயினும் அதைப் பயன்படுத்தலாம். வெளியீட்டு வட்டங்கள் முறையில் காகிதப் பணம் மக்களிடையில் பிரபலமாவது தடுக்கப்பட்டதால், இம் முறை பிற்காலத்தில் கைவிடப்பட்டது. 5 ரூபாய்க் காகிதப் பணம் 1903-லும், 1910-ல் ரூ. 50 காகிதப்பணமும், 1911-ல் ரூ. 100 காகிதப்பணமும் நாடு முழுமையும் சட்டச் செலாவணியாக அளிக்கப்பட்டன.

1861-ஆம் ஆண்டின் காகிதச் செலாவணிச் சட்டத்தின்படி வரையறை செய்த நம்பிக்கைத் திட்ட அடிப்படையில் காகிதப்

[1] International Gold-Dollar Exchange Standard
[2] Indian Paper Currency System
[3] Paper Currency Act (1861)
[4] Presidency Banks
[5] Circles of Issue

பணம் வெளியிடப்பட்டது. இத் திட்டப்படி ரூ. 4 கோடி வரையிலும் அரசாங்கக் கடன் பத்திரங்களைக் காப்பாகக்கொண்டு காகிதப்பணம் வெளியிடப்படும். அவ்வெல்லைக்கும் அதிகமாக வெளியிடப்படும் காகிதப்பணத்திற்குக் காப்பாக 100% ரூபாய் நாணயங்கள், பொற்கட்டிகள் ஆகியவை இருக்க வேண்டுமென விதிக்கப்பட்டது. தொடர்ந்து பல்வேறு திட்டங்களுக்குப்பின் வரையறை செய்த நம்பிக்கை எல்லை 1919ஆம் ஆண்டில் ரூ. 20 கோடியாக உயர்த்தப்பட்டது. 1898ஆம் ஆண்டின் பொன் நாணயச் சட்டம் காகிதப்பணக் காப்பு இருப்பில் ஏதேனும் ஒரு பகுதியைப் பொன்னாக வைத்துக்கொள்வதற்கு அரசை அனுமதித்தது. 1900ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு சட்டம் காகிதப்பணக் காப்பிருப்பில் எப் பகுதியையும் இலண்டனில் வைத்து இருக்க அரசை அனுமதித்தது. வரையறை செய்யப்பட்ட நம்பிக்கை எல்லைக்கும் அதிகமாக வெளியிடப்படும் காகிதப்பணத்திற்கு 100% காப்பு இருக்க வேண்டும் எனும் விதி அளவுக்கும் அதிகமான பாதுகாப்பு நடவடிக்கையாயினும், காப்பின் பெரும்பகுதி உற்பத்தியற்ற வகையில் பாதுகாக்கப்படுவதால் செலவு மிக்க விதியாகக் கருதப்பட்டது.

இந்தியக் காகிதச் செலாவணி முறையில் 1920ஆம் ஆண்டில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இத் திருத்தங்கள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டுக் காகிதச் செலாவணிச் சட்டம் (1923) ஆகியது. இச் சட்டம் காகிதச் செலாவணிக்காப்பின் அமைப்பில் கீழ்க்காணும் மாற்றங்களை ஏற்படுத்தியது:

(1) காப்பின் மொத்த அளவில் 50% உலோகமாக இருக்க வேண்டும்.

(2) இந்தியாவில் ரூ. 20 கோடி மதிப்புள்ள பத்திரங்கள் இருக்க வேண்டும். இதற்கும் அதிகமான காப்பு இங்கிலாந்தில் 12 மாதக் காலத்தைத் தாண்டாத குறுங்காலக் கடன் பத்திரங்கள் உருவில் இருக்க வேண்டும்.

(3) 90 நாள்களுக்குள் முதிர்ச்சியுறக்கூடிய கழிவு செய்யப்பட்ட உள்நாட்டு மாற்று உண்டியல்கள்மீது ரூ. 5 கோடி வரையிலும் காகிதச் செலாவணி வெளியிடலாம்.

(4) இலண்டனில் அரசுச் செயலர் வசம் பொற்கட்டிகளாக 5 மில்லியனுக்குமதிகமாக இருக்கக் கூடாது.

இந்திய ரிசர்வ் பாங்குச் சட்டம் (1934) வீதாசாரக் காப்புத் திட்ட அடிப்படையில் காகிதச் செலாவணியை வெளியிட வழி வகுத்தது. இச் சட்டம் காகிதச் செலாவணியை வெளி யிடும் முழு உரிமையையும், நாட்டின் தலைமை வங்கிக்கு அளித்தது. மொத்த வெளியீட்டில் 40%-க்குக் குறையாமல் பொற்காசுகள், பொற்கட்டிகள், ஸ்டெர்லிங் பத்திரங்கள் உருவில் காப்பு வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. குறைந்த பட்சம் ரூ. 40 கோடி மதிப்புள்ள பொற்காசுகள், பொற் கட்டிகள் இருக்க வேண்டும் எனவும் விதிக்கப்பட்டது. எஞ்சிய 60%-க்கும் ரூபாய் நாணயங்கள் இந்திய அரசின் கடன் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்று உண்டியல்கள் போன்றவையாக இருக்கலாம். அரசாங்கக் கடன் பத்திரங் களின் அளவு, சொத்தில் 25% அல்லது 50 கோடி இவை யிரண்டில் எஃது அதிகமோ அதற்கும் அதிகமாக இருக்கக் கூடாது. ஆட்சித் தலைவர்[1] அனுமதியுடன் இவ்வெல்லை ரூ. 10 கோடி வரையில் அதிகரிக்கப்படலாம். மாற்று உண்டியல்களும், வெண்கடன் பத்திரங்களும் பதிவுப் பெற்ற வங்கியொன்றால் உறுதியளிக்கப்பட்டதாகவும், மதிப்புக்குரிய நபர் ஒருவரின் கையெழுத்துடனும் இருக்க வேண்டும். ஆட்சித் தலைவரின் முன் அனுமதியுடன் 40% காப்பு பற்றிய விதிகள் குறுகிய காலத்திற்குத் தளர்த்தப்படலாம்.

முன்பு வழக்கிலிருந்த காகிதச் செலாவணி வெளியீட்டுத் திட்டத்தைக்காட்டிலும் இப் புதிய திட்டம் சிறந்ததாகக் கருதப் பட்டது. ஏனெனில், இத் திட்டத்தின் மூலம் செலாவணிக் காப்புகள் யாவும் ஒன்றுபடுத்தப்பட்டன. இதற்கு முன்னர்ப் பொன் திட்டக் காப்பு, காகிதச் செலாவணிக் காப்பு என்று பல் வகைக் காப்புகள் நிர்வகிக்கப்பட்டன.

மேலும், மாற்று உண்டியல்கள், வெண்கடன் பத்திரங்கள் ஆகியவற்றைக் காப்பாகக்கொள்ளலாம் எனும் விதி காகிதச் செலாவணி வெளியீட்டை நெகிழ்ச்சி மிக்கதாக மாற்றியது விவசாய நாடான இந்தியாவிற்கு இவ் விதியால் பெரும்பயன் விளைந்தது. 1935-க்கு முன்னர் அறுவடைக் காலங்களில் இந்தியப் பணச்சந்தையில் இக்கட்டுகள் ஏற்படுவது வழக்கம். 1935-க்குப் பின்னர் அத்தகைய இக்கட்டுகள், காகிதச் செலாவணி வெளியீட்டின் மூலம் தவிர்க்கப்பட்டன.

தற்காலத்தில் காகிதச் செலாவணி வெளியீட்டுத் திட்டம்: இந்திய ரிசர்வ் பாங்குச் சட்டம் 1956, 1957 ஆகிய

[1] Governer-general

ஆண்டுகளில் திருத்தப்பட்டது. காகிதச் செலாவணி வெளி யீட்டின் தற்பொழுதைய நிலையைக் கீழ்க்காணுமாறு சுருக்க மாகக் குறிப்பிடலாம்:

(1) இந்திய ரிசர்வ் பாங்கிடம் காகிதச் செலாவணியை வெளியிடும் முழு உரிமையும் உள்ளது. வேறு எந்த வங்கியோ அல்லது நபரோ காகிதச் செலாவணியை வெளியிட முடியாது.

(2) ரிசர்வ் பாங்கால் வெளியிடப்படும் காகிதச் செலாவணி யாவும் அரசால் உறுதியளிக்கப்பட்டுள்ள வரையற்ற சட்டச் செலாவணியாகும். ரூ. 2, மற்றும் அதற்கும் அதிகமான மதிப்புள்ள காகிதச் செலாவணிகளை ஒரு ரூபாய் நாணயங் களாகவோ, காகிதச் செலாவணியாகவோ மாற்றிக்கொள்ள லாம். காகிதச் செலாவணி வெளியீட்டை மைய வங்கியின் வெளியீட்டுத் துறை[1] நிர்வகிக்கின்றது. இப் பிரிவு வங்கித் துறையுடன் சிறிதும் தொடர்பற்றதாகும்.

(3) ரிசர்வ் பாங்கு தனது சொத்தில் ஒரு பகுதியாக ரூ. 115 கோடிக்குச் சமமாகப் பொற்காசுகள், பொற்கட்டிகள் ஆகியவற்றையும் ரூ. 85 கோடிக்குச் சமமாக அயல்நாட்டுக் கடன் பத்திரங்களையும் வைத்துக்கொள்ள வேண்டும். குடியரசுத் தலைவரின் முன் அனுமதியுடன் அயல்நாட்டுக் கடன் பத்திரங்களின் மதிப்பை ரூ. 85 கோடியிலிருந்தும் குறைத்துக்கொள்ளலாம். அதாவது, மொத்தக் காப்பான ரூ. 200 கோடியும் பொன் உருவில் இருக்கலாம். ரிசர்வ் பாங்கின் சொத்தில் எஞ்சியவை ரூபாய் நாணயங்கள். ரூபாய்க் காகிதச் செலாவணிகள் இந்திய அரசின் கடன் பத்திரங்கள், மாற்று உண்டியல்கள், வெண்கடன் பத்திரங்கள் உருவில் இருக்கலாம்.

குறிப்பிட்ட அளவு பொன்னும், அயல்நாட்டுக் கடன் பத்திரங்களும் இருக்குமாயின், காகிதச் செலாவணி வெளி யீட்டிற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை. ரிசர்வ் பாங்கின் மொத்தச் சொத்தும் வெளியிடப்பட்டுள்ள காகிதச் செலாவணி யின் மொத்த அளவும் சமமாக இருக்க வேண்டும்.

(4) பொற்காசுகள், பொற்கட்டிகள் ஆகியவை ரூபாய்க்கு 2·88 மஞ்சாடி பொன் அல்லது 1 தோலா பொன் ரூ. 62/50 என்ற விகிதத்தில் மதிப்பிடப்பட வேண்டும்.

[1] Issue Department

இந்திய ரிசர்வ் பாங்குச் சட்டம் இரு முறை திருத்தப் பட்டதற்குக் காரணம், இதற்கு முன்பு பின்பற்றப்பட்ட காகிதச் செலாவணி வெளியீட்டு விதியின் விளைவாகக் காகிதச் செலாவணியை அதிகரிக்கும் வாய்ப்பு கட்டுப்படுத்தப் பட்டிருந்ததே ஆகும். இத் திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப் படாமலிருந்திருப்பின், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 1200 கோடிக்குப் பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற் கொண்டிருக்க முடியாது. 1956ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம் ரிசர்வ் பாங்கின் காப்பில் ரூ. 115 கோடிக்குப் பொற் காசுகள், பொற்கட்டிகள் ஆகியவையும், ரூ. 400 கோடிக்கு அயல்நாட்டுக் கடன் பத்திரங்களும் இருக்க வேண்டும் என்று விதித்தது. 1957ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம், ரிசர்வ் பாங்கு வசம் காப்பாக ரூ. 200 கோடிக்குப் பொற்காசுகள், பொற்கட்டிகள், அயல்நாட்டுக் கடன் பத்திரங்கள் ஆகியவை இருந்தால் போதுமென்று விதித்தது. அயல்நாட்டுச் செலாவணி நெருக்கடியைத் தவிர்ப்பதற்கும், அரசின் கொடுப்பினைகளை நிறைவேற்றுவதை எளிமையாக்குவதற்காகவுமே இத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ரிசர்வ் பாங்கு வசம் இருக்கும் பொன் இருப்பை மதிப்பிடும் முறையாலும் சில மாறுதல்களை 1956ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம் விதித்தது.

காகிதச் செலாவணி வெளியீட்டு விதி காகிதச் செலாவணி யின் மிகையான வெளியீட்டைக் கட்டுப்படுத்துவதற்கு உதவு கின்றது. 1956ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம் ரிசர்வ் பாங்கிற்கு அதிக சக்தியை அளித்துள்ளது. கொள்கையளவில் ரிசர்வ் பாங்கு, இந்திய அரசிற்கு முழுமையாகக் கட்டுப்பட்ட தாகும். திருத்தச் சட்டத்தின் மூலம் அரசு விரும்பும் அளவிற்குக் காகிதச் செலாவணியை வெளியிடும் வாய்ப்பு அரசிற்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வுரிமை சில சூழ்நிலை களில் பயங்கர விளைவுகளை நல்கக் கூடும்.

ஜனவரி 1946-ல் ரூ. 500, ரூ. 1000, ரூ. 10,000 ஆகிய உயர் மதிப்புக் காகிதப் பணங்களைச் செல்லாதவை என்று அரசு அறிவித்தது. அவை சட்டச் செலாவணிகள் அல்லவென்று அவற்றை வைத்திருப்போர், குறிப்பிட்ட நாளுக்குள் தமது தொழில் பற்றிய விவரங்களை அறிவித்து உயர்மதிப்புள்ள காகிதச் செலாவணியை அளித்து, அவற்றிற்கு ஈடாகக் குறைவான மதிப்புள்ள செலாவணியைப் பெறலாமெனவும் அரசு அறிவித்தது. இம் முயற்சியின் விளைவாகக் கள்ளச் சந்தை, கையூட்டு, வரி ஏய்ப்பு ஆகியவை நீங்கும் என்று அரசு

கருதியது. மேலும், பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பணம் உற்பத்தித் துறையில் பயன்படுத்தப்படும் என்று அரசு கருதியது. உயர் மதிப்புச் செலாவணியை மாற்றிக் கொண்டோர் பற்றிய விவரங்களை அரசு பொதுமக்களுக்கு அறிவிக்கவில்லையாதலால், இம் முயற்சியின் வெற்றித் தோல்வியினை மதிப்பிட இயலாது.

உயர்மதிப்புச் செலாவணிகள் செல்லா என்று அறிவிக்கப் பட்டதால், வணிகச் சமுதாயத்தினர் பெருமளவில் பாதிக்கப் பட்டனர். 1952ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் உயர்மதிப்புச் செலாவணிகளை வெளியிட அனுமதிக்கும் வகையில் ரிசர்வ் பாங்குச் சட்டம் திருத்தப் பெற்றது. ஆதலால் ரிசர்வ் பாங்கு ரூ. 1000, ரூ. 5000, ரூ. 10,000 காகிதச் செலாவணிகளையும் வெளியிட்டு வந்தது. ஆனால், 1978ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் நாளன்று, ரூ. 1000, ரூ. 5000, ரூ. 10,000 காகிதச் செலாவணிகளைச் செல்லாதவை என்று இந்திய அரசு அறிவித்தது. இவ்விதம் மதிப்பிழக்கச் செய்யப்பட்ட உயர் மதிப்புச் செலாவணிகளின் அளவு சுமாராக, ரூ. 150 கோடி முதல் ரூ. 200 கோடி வரையில் இருக்குமென மதிப்பிடப்படு கின்றது.

ஐந்தாண்டுத் திட்டங்களும், இந்தியச் செலாவணி முறையும்

பொருளாதாரத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக் காகவே மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்பொழுது, பணவாக்கத் துறையிலும், நிதியியல் துறையிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இந்தியப் பொருளாதாரத் திட்டங்களின் விளைவாகத் தேசீய உற்பத்தியும் வாணிபமும் பெருகியதால், பண அளிப்பில் நெகிழ்ச்சி ஏற்படுவது அவசியமாயிற்று. திட்டக் காலத்தில் பல்வேறு முறைகளிலும் மூலதனத்தைச் சேர்த்து முதலீடு செய்ததன் விளைவாகப் பணவீக்கப் போக்கு உருவாவதைத் தவிர்க்க முடியவில்லை. ஆயினும் இறக்குமதிப் பெருக்கமும், ஏற்றுமதிப் பெருக்கமும் அயல்நாட்டுச் செலுத்து நிலையைச் சீர்கேடுறச் செய்தன. இத்தகைய பிரச்சினை களின் விளைவாக இந்தியச் செலாவணியின் அமைப்பில் ஒரு திருப்பமே ஏற்பட்டது எனலாம்.

பற்றாக்குறை நிதியாக்கம்: இந்தியத் திட்டங்களின் பொதுத்துறை முதலீடு திட்டத்திற்குத் திட்டம் வளர்விகிதத்தில்

அதிகரித்து வருகின்றது. முதல் திட்டத்தில் ரூ. 1960 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 4600 கோடி ரூபாயும், மூன்றாவது திட்டத்தில் ரூ. 7500 கோடியும் பொதுத்துறை முதலீடுகள் ஆகும். முதல் திட்டத்திற்கும் இரண்டாவது திட்டத்திற்கும் இடையே 10 சதவிகிதமும், மூன்றாவது திட்டக் காலத்தில் 14 சதவிகிதமும் பொதுத்துறை முதலீடுகள் அதிகரித்தன. நான்காவது திட்டக் காலத்தில் பொதுத்துறை முதலீடு ரூ. 15,902 கோடி ஆகும்.

முதலீடு செய்வதற்கான மூலதனத்தைப் பெறுவதற்காக அரசாங்கத்தின் வசமிருக்கும் வருமான வாயில்களெல்லாம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. வரி விதிப்பு, சிறு சேமிப்பு, உள்நாட்டுக் கடன், அயல்நாட்டுக் கடன், பொதுத் துறை இலாபங்கள், பற்றாக்குறை நிதியாக்கம் ஆகிய அனைத்து வழிகளும் மேற்கொள்ளப்பட்டன. பற்றாக்குறை நிதியாக்கம் தவிர்த்த வேறு வழிகளில் மூலதனம் சேமிக்கப் பட்டால் பிரச்சினை ஏதுமில்லை. ஆனால், பற்றாக்குறை நிதியாக்கம் மேற்கொள்ளப்படும்பொழுது, பணவீக்கப் போக்கு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஏழைநாடான இந்தியாவில் பணவீக்கத்தைத் தோற்றுவிக்காத நிதிமூலங்கள் யாவும் எதிர்பார்க்கும் அளவிற்கு இல்லாமையால், பற்றாக் குறை நிதியாக்கத்தை மேற்கொள்வது அவசியமாயிற்று.

முதல் திட்டத்தில் பற்றாக்குறை நிதியாக்கம் ரூ. 290 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டிருந்து, ரூ. 420 கோடிக்கு மேற் கொள்ளப்பட்டது. ஆயினும், பணவீக்கப்போக்கு தோன்ற வில்லை. இரண்டாவது திட்டத்தில் பற்றாக்குறை நிதியாக்கம் மூலம் ரூ. 1200 கோடி எழுப்பத் தீர்மானிக்கப்பட்ட போதிலும், இரண்டாவது திட்டத்தின் முதலிரண்டு ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தின் விளைவாக ரூ. 950 கோடியாகக் குறைக்கப் பட்டது. மூன்றாவது திட்டத்தில் ரூ. 550 கோடி என்று தீர்மானிக்கப்பட்டிருந்தும், ரூ. 1130 கோடிக்குப் பற்றாக்குறை நிதியாக்கம் மேற்கொள்ளப்பட்டது. 1966 முதல் 69 வரை யிலும் மேற்கொள்ளப்பட்ட மூன்று ஆண்டுத் திட்டங்களிலும் மொத்தம் ரூ. 1000 கோடிக்குப் பற்றாக்குறை நிதியாக்கம் மேற் கொள்ளப்பட்டது. நான்காவது திட்டக் காலத்தில் ரூ. 850 கோடிக்குப் பற்றாக்குறை நிதியாக்கத்தின் மூலம் நிதியெழுப்பு வதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொள்ளும்பொழுது ரிசர்வ் பாங்கிடமிருந்து முன் பணமாகவும் அல்லது அரசாங்கப்

பத்திரங்களையும், கருவூல உண்டியல்களையும் மையவங்கியிடம் விற்றும் அரசு நிதியைப் பெறுகின்றது. அரசு வாணிப வங்கிகளிடம் அரசுப் பத்திரங்களை விற்பனை செய்வதன் மூலமும் நிதியைப் பெறலாம். இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாக இந்தியாவில் பணத்தின் அளிப்பும் அதிகரித்தது. பொது மக்களிடம் இருக்கும் பண அளிப்பின் அளவு முதல் திட்டக் காலத்தில் ரூ. 1850 கோடியிலிருந்து ரூ. 2200 கோடியாகவும், இரண்டாவது திட்ட முடிவில் ரூ. 2870 கோடியாகவும், மூன்றாவது திட்ட முடிவில் ரூ. 4530 கோடியாகவும், 1969-70ஆம் ஆண்டில் ரூ. 6400 கோடியாகவும் அதிகரித்தது. 1973ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்திய மக்கள் வசமிருக்கும் பண அளிப்பின் அளவு ரூ. 8728 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

பற்றாக்குறை நிதியாக்கம் மேற்கொள்ளப்படுவதால், செலாவணியின் அளிப்பும், வங்கிப் பணத்தின் அளிப்பும் அதிகரித்ததால், திட்டக்காலத்தில் பணவீக்க விலைப்போக்கு தொடர்ந்து நீடித்தது.

முதல் திட்டம் மேற்கொள்ளப்பட்ட பொழுது இந்தியாவின் விலைமட்டத்தில் பணவீக்கப் போக்கு நிலவியது எனலாம். எனினும், முதல் திட்டக் காலத்தில் பருவமழை சாதகமாக இருந்ததாலும், விவசாய உற்பத்தி அதிகமிருந்ததாலும், தொழில் உற்பத்தி பெருகியதாலும் (1952–53–ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு) 1955 மார்ச்சு மாதத்தில் விலைக் குறியீட்டெண் 92·5 ஆகக் குறைந்தது. இதனால் ஊக்குவிக்கப் பட்ட திட்டக்குழுவினர் முன்னேற்றத் திட்டங்கள் பண வீக்கத்தைத் தோற்றுவிக்குமென நியதியில்லை என்றே கருதினர்.

ஆனால் 1955ஆம் ஆண்டின் பிற்பகுதியில் விலைப்போக்கு உயர ஆரம்பித்தது. 1957 மார்ச்சு மாதத்தில் மொத்த விலை குறியீட்டெண் 115 ஆக உயர்ந்தது. விலைமட்டம் தொடர்ந்து அதிகரித்ததால், 1961 மார்ச்சு மாதத்தில் பொதுவிலைக் குறியீட்டெண் 127·5 ஆக அதிகரித்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் மொத்தவிலைக் குறியீட்டெண் 38 சதவீதம் உயர்ந்தது. மூன்றாவது திட்டக்காலத்தில் மொத்தக் குறியீட்டெண் 35% உயர்ந்ததாயினும், உணவுப்பொருள்களின் விலை 49% உயர்ந்தது. விவசாய உற்பத்தியும், தொழில் உற்பத்தியும் அதிகரித்துங்கூட, விலைமட்டம் 1970–71 வரையிலும் தொடர்ந்து அதிகரித்தது. விலைமட்டம் உயர்விற்கு

முக்கியக் காரணங்கள் பொதுமக்களுடைய வாங்குந்திறன் அதிகரித்ததும், பொதுமக்களிடையில் பண அளிப்பு அதிகரித்ததும் சில ஆண்டுகளில் விளைச்சல் பொய்த்ததும், உணவுப் பொருள்களில் ஊக வாணிபம் தலைதூக்கியதும், பதுக்கல்களுமே ஆகும்.

விலையேற்றப் போக்கைக் கட்டுப்படுத்துவதற்காக உணவுப் பொருள்களின் மீதான ஊக வாணிபத்தைக் கட்டுப் படுத்தும் வரையில் மையவங்கி கடன்கட்டுப்பாடுகளை மேற் கொண்டது; மேலும், அமெரிக்காவிலிருந்து பொதுச்சட்டம் 480–இன்கீழ் உணவுப்பொருள்களை இறக்குமதி செய்தது.

ஐந்தாண்டுத் திட்டங்களும் அயல்நாட்டுச் செலா வணிப் பற்றாக்குறையும்: பொருளாதாரத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்துநிலை பாதகமாக இருப்பது கீழ்க்காணும் பட்டியலி லிருந்து தெளிவாகும்:

ஆண்டு	அயல்நாட்டுச் செலுத்துநிலை (நடப்புக்கணக்கு) ரூ. கோடிகளில்
1951-52	*—162·6*
1955-56	*+ 6·7*
1961-62	*—392·4*
1965-66	*—489·8*
1966-67	*—812·9*
1967-68	*—804·3*
1968-69	*—365·2*
1969-70	*—217·0*
1970-71	*—331·0*

திட்டக் காலத்தில் பெருமளவில் இயந்திரங்களையும், ஓரளவிற்கு மூலப்பொருள்களையும், உணவுப் பண்டங் களையும் இறக்குமதி செய்ததன் விளைவாக இறக்குமதி அதிகரித்தது. ஆனால், அதற்கு ஏற்ப ஏற்றுமதி அதிகரிக்க வில்லை. உற்பத்தியில் பெருமளவு உள்நாட்டிலேயே நுகரப் பட்டதாலும், ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் நெகிழ்ச்சி யற்ற தேவையைக் கொண்டவையாதலாலும் இவ்விதம் நேர்ந்தது. இதன் விளைவாக இந்தியா வசமிருந்த ஸ்டெர்லிங்

இருப்பும் தீர்ந்தது. அயல்நாட்டுச் செலாவணிப் பற்றாக் குறையைச் சமன் செய்வதற்காக இந்திய உதவி கிளப்பிடமும், ரஷ்யா போன்ற நாடுகளிலும் உதவியையும் பன்னாட்டுப் பண நிதியிடம் கடனும் பெற்றது. எனினும், சீர்கேடுற்ற அயல்நாட்டுச் செலுத்துநிலை தொடர்ந்து நிலவியதால், 1966ஆம் ஆண்டில் இந்திய நாணயம் மதிப்பிறக்கம் செய்யப் பட்டது. ஆனால், அதற்குப் பின்னரும் செலுத்துநிலைச் சமன்கேடு சீரடையவில்லை. செலுத்துநிலைச் சமன்கேட்டின் விளைவாக இந்தியாவின் அயல்நாட்டுச் செலாவணி இருப்பு குறைந்தது. இந்தியாவிடமிருக்கும் அயல்நாட்டுச் செலாவணி அளவைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து அறியலாம்:

ஆண்டு	அந்நியச் செலாவணி இருப்பு
1950-51	ரூ. 950 கோடி
1955-56	ரூ. 825 கோடி
1964-65	ரூ. 250 கோடி

இந்தியாவின் அயல்நாட்டுச் செலாவணி குறைந்ததன் விளைவாக இந்திய ரிசர்வு பாங்குச் சட்டம் திருத்தப்பட்டது. முன்னர்ப் பின்பற்றப்பட்ட விதிமுறைகளின்படி இந்தியாவின் காகிதப்பண வெளியீட்டில் 40% அயல்நாட்டுக் காப்பு இருந்தால் போதுமானது. மாறிய சூழ்நிலைகளுக்கு ஏற்கும் வகையில் 1956ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வு பாங்குச் சட்டம் திருத்தப் பெற்றது. திருத்தச் சட்டத்தின்படி ரிசர்வு பாங்கு ரூ. 400 கோடி மதிப்புள்ள பொன்னும் அயல் நாட்டுச் செலாவணியும் காப்பாக வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டது. இச் சட்டம் மீண்டும் 1957-ல் திருத்தப்பட்டு, ரூ. 200 கோடி மதிப்புள்ள காப்பு இருந்தால் போதுமானது என்றும், ஆனால் அதில் பொன்மதிப்பு ரூ. 115 கோடிக்குக் குறையக் கூடாதெனவும் விதிக்கப்பட்டது. திட்டங்கள் மேற்கொள்ளப் படுவதற்கு முன்னர் இந்தியச் செலாவணி அமைப்பின் முதுகெலும்பாக விளங்கிய அயல் நாட்டுச் செலாவணிக் காப்பு தற்பொழுது முக்கியத்துவம் இழந்தது.

இந்தியா அடைந்துள்ள பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமன்றிச் செலாவணிப் பெருக்கம், விலைமட்ட உயர்வு, கடன் பெருக்கம், அயல்நாட்டுச் செலாவணி இழப்பு ஆகியவற்றிற்கும் நமது பொருளாதாரத் திட்டங்களே காரணமாகும்.

ரூபாயின் மதிப்புக் குறைப்பு: சுதந்தர இந்தியாவில் ரூபாய் இருமுறை மதிப்புக் குறைப்பு[1] செய்யப்பட்டது. 1949ஆம் ஆண்டு செம்டெம்பர் மாதத்தில் ஸ்டெர்லிங் பகுதி[2] நாடுகளுடன் இந்திய ரூபாயும் டாலரில் மதிப்புக் குறைப்பும் செய்யப்பட்டது. டாலர், மற்றும் அருமைப் பணப்[3] பகுதி களுடன் இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்துநிலை சீர் கேடடைந்ததைச் சமன் செய்வதற்காகவே அம் முயற்சி மேற் கொள்ளப்பட்டது. மீண்டும் 1966ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்திய ரூபாய் பொன்மதிப்பில் 36·5% குறைக்கப் பட்டது. நாணய மதிப்புக் குறைப்புக்கு முன்னரும் பின்னரும் ரூபாய், டாலர், பவுன் ஆகியவற்றிடையேயான நாணயமாற்று வீதம் பின் வருமாறு:

		மதிப்புக் குறைப்புக்கு முன்பு	மதிப்புக் குறைப்புக்கு பின்பு
டாலர் 1	=	ரூ. 4·76	ரூ. 7·50
இங்கிலாந்து பவுன் 1	=	ரூ. 13·3	ரூ. 21·00

இங்கிலாந்தின் பவுன் 1967ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மதிப்புக்குறைப்பு செய்யப்பட்டதால், புதிய மாற்று வீதம் £ 1 = ரூ. 18·96 ஆகும். 1973ஆம் ஆண்டு பிப்பிரவரியில் அமெரிக்க டாலர் 10% மதிப்புக்குறைப்பு செய்யப்பட்டிருப்ப தால், ரூபாய்–டாலர் மாற்று வீதம் மாறக்கூடும்.

1966ஆம் ஆண்டில் ரூபாயின் மதிப்புக்குறைப்புக்கு அயல் நாட்டுச் செலுத்துநிலையிலேற்பட்ட அடிப்படைச் சீர்கேடே முக்கியக் காரணமாகும். நாட்டின் ஏற்றுமதி வாணிபம் வீழ்ச்சி யடைந்ததாலும் உள்நாட்டில் விலைமட்டம் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருந்ததாலும், இறக்குமதி பெருகிக் கொண்டேயிருந்ததாலும், இதற்கு முன்னர் ரூபாய் மிகை மதிப்பு செய்யப்பட்டிருந்ததாலும், அன்னியச் செலாவணி கையிருப்பு குறைவடைந்ததாலும் ஏற்பட்ட அயல்நாட்டுச் செலுத்துநிலைச் சீர்கேட்டை ரூபாயின் மதிப்புக் குறைப்பின் மூலம் சமன் செய்ய இந்திய அரசு முயன்றது.

ரூபாயின் மதிப்புக்குறைப்பின் விளைவாக ஏற்றுமதி பெருகுமென்றும், இறக்குமதி குறையுமென்றும், அயல்நாட்டுச்

[1] Devaluation
[2] Sterling block
[3] Hard currency

செலுத்துநிலை சீரடையுமென்றும், அந்நிய உதவிகள் பெருமளவில் கிட்டுமென்றும் எதிர்பார்க்கப்பட்டன. உற்பத்திச் செலவுமிக்க காலத்திற்கு ஒவ்வாத உற்பத்தித் துறையின்மூலம் ஏற்றுமதி எதிர்பார்த்த அளவிற்குப் பெருக வில்லை. தேவை நெகிழ்ச்சியற்ற அல்லது நெகிழ்ச்சிக் குறைவான பொருள்களே இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதால், ஏற்றுமதி பெருகவில்லை. ஆனால், இறக்குமதிப் பொருள்களின் விலை உயர்ந்ததால், செலுத்துகள் அதிகரித்தன. அயல்நாட்டுக் கடன் பணிச்செலவுகளும் பண மதிப்புக்குறைப்பின் விளைவாக அதிகரித்தன. ரூபாயின் மதிப்புக்குறைப்பின் விளைவாக இந்தியாவின் அயல்நாட்டுக் கடன் ரூ. 2733 கோடியிலிருந்து ரூ. 4102·57 கோடியாக உயர்ந்தது.

ரூபாயின் மதிப்புக்குறைப்பு வணிகச் சமூகத்தினரால் வரவேற்கப்பட்டது. எனினும், ரூபாயின் மதிப்புக்குறைப்பின் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட அளவிற்குப் பயன் கிட்ட வில்லை.

இந்தியச் செலாவணியின் நிகழ்காலம்

சுதந்தர இந்தியாவின் பணவாக்கத் துறையை இந்தியாவின் ரிசர்வு பாங்கு நிருவகிக்கின்றது. தற்பொழுதைய பணத் திட்டம் மாற்றுரிமையற்ற காகிதப் பணத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். உள்நாட்டு நடவடிக்கைகளில் ரூபாய் நாணயங்களும் காகிதப் பணங்களும் பயன்படுத்தப்படு கின்றன. அயல்நாட்டு நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் ரூபாய், அயல்நாட்டுச் செலாவணிகளில் மாற்றுரிமை கொண்டதாகும். இந்தியச் செலாவணியின் நிகழ்கால அமைப் பின் தன்மைகளை இனிக் காணலாம் :

ரூபாய் நாணயம்–தசாம்சக் காசு முறையில் அமைந்துள்ள ரூபாய், இந்தியாவின் பண அலகு ஆகும். 1957ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் முதல் பின்பற்றப்படும் தசாம்சக் காசுமுறை இந்தியாவின் செலாவணி அமைப்பில் ஏற்பட்ட ஒரு புரட்சி கரமான மாறுதலாகக் கருதப்படுகின்றது. தசாம்சக் காசு முறையிலும் ரூபாயின் பெயரும் மதிப்பும் மாறாமலே இருக் கின்றன. அரை ரூபாய், மற்றும் கால் ரூபாய்க்கும் பழைய மதிப்பே நிலவுகின்றது. ஆனால், ஒரு ரூபாய்க்கு 16 அணாக்கள், ஓர் அணாவிற்கு 12 பைசாக்கள் என்பது மாறி, ஒரு ரூபாய்க்கு 100 காசுகள் என்று கணக்கிடப்படுகின்றது.

ஒரு ரூபாய் இந்தியாவின் நியமனப் பணமாகும். ஒரு காசு மிகவும் குறைவான மதிப்புடைய பண அலகாகும்.

இந்திய ரூபாய் நிக்கலில் அச்சிடப்படுகின்றது. அதன் உள்ளூறு மதிப்பைக்காட்டிலும் தோற்ற மதிப்பு அதிகமாகும். அஃது ஓர் அடையாளப் பணமாகும். இந்தியாவில் ஒரு ரூபாயும் அரை ரூபாயும் வரையற்ற சட்டச் செலாவணிகள் ஆயினும், அதற்கும் குறைந்த மதிப்புள்ள காசுகள் யாவும் வரையுள்ள சட்டச் செலாவணிகளேயாகும். நாட்டில் புழக்கத்திலுள்ள ரூபாய் நாணயங்கள், பைசாக்கள், ஒரு ரூபாய் காகிதப் பணம் ஆகியவற்றின் அளவு இந்திய ரிசர்வு பாங்கால் கட்டுப் படுத்தப்படுகின்றன. 1970-71-ல் இந்தியாவில் புழக்கத்தி லிருந்த ரூபாய் நாணயங்கள், மற்றும் துணைப்பணங்களின் மொத்த மதிப்பு ரூ. 390 கோடி ஆகும்.

இந்திய அரசின் உடைமையானதும், இந்திய அரசால் நிருவகிக்கப்படுவதுமான இந்திய ரிசர்வு பாங்கே காகிதப் பணத்தை வெளியிடும் முற்றுரிமை கொண்டதாகும். இந்திய ரிசர்வு பாங்கு 2 ரூபாய் முதல் ரூ. 10,000 வரை மதிப்புள்ள காகிதப் பணத்தை அச்சிட்டு வெளியிடுகின்றது. காகிதப்பண வெளியீட்டிற்கென ரிசர்வ் பாங்கில் வெளியீட்டுத்துறை ஒன்று உள்ளது. அதில் காகிதப் பண வெளியீட்டிற்கான காப்பு உள்ளது. குறைந்த அளவுக் காப்புத் திட்டத்தைப் பின்பற்றி ரிசர்வு பாங்கு காகிதப் பணத்தை வெளியிடுகின்றது. 1970-71 வரையில் இவ்வாறு வெளியிடப்பட்ட காகிதப்பணத்தின் மதிப்பு ரூ. 4050 கோடி ஆகும். 1977ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்தியாவில் புழக்கத்தில் உள்ள செலாவணியின் அளவு ரூ. 8158 கோடி ஆகும். மாண்புமிகு Y. B. சவான் அவர்களின் கருத்துப்படி, தற்பொழுதைய ஒரு ரூபாயின் மதிப்பு 1949ஆம் ஆண்டின் மதிப்பில் 42·4% ஆகும். 1973 ஜனவரியில் காகிதப் பண வெளியீடு ரூ. 4960 கோடி ஆகும்.

இந்தியாவில் பணத்தின் அளிப்பானது தொடர்ந்து அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றது. பணத்தின் அளிப்பு என்பது பொதுமக்களிடமிருக்கும் செலாவணியின் அளவையும், வங்கிகள் வசமிருக்கும் உடனடியாக எடுக்கப் படக்கூடிய தேவை வைப்புகளின் அளவையும் சேர்த்ததாகும். 1970-71-ல் இந்தியாவில் பணத்தின் அளிப்பு ரூ. 6900 கோடி. 1973 ஜனவரியில் அது ரூ. 8728 ஆகும் என்று மதிப்பிடப்படு கின்றது. பணத்தின் அளிப்பு இவ்விதம் அதிகரித்ததற்குக் காரணம், அரசு மேற்கொண்ட பற்றாக்குறை நிதியாக்கமும், பணத்திற்கான தேவை அதிகரித்தலுமே ஆகும்.

பன்னாட்டுப் பணநிதியின் உறுப்பினர் என்ற முறையில் இந்திய ரூபாயின் பொன் அல்லது அமெரிக்க டாலர் மூலமான முகப்பு மதிப்பானது நிலைப்படுத்தப்பட வேண்டும். இந்திய ரூபாயின் தற்பொழுதைய மதிப்பு 0·112067 கிராம் தூய பொன்னாகும். அமெரிக்க டாலருக்கும் இந்திய ரூபாய்க்கும் இடையேயான மாற்று வீதம் \$1 = ரூ. 7·28 ஆகும். இங்கிலாந்தின் பவுனுக்கும் இந்திய ரூபாய்க்கும் இடையேயான மாற்று வீதம் £1 = ரூ. 18·96 ஆகும். மேற்காணும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் ரிசர்வு பாங்கு பொன்னை வாங்கவும், விற்கவும், அயல்நாட்டுச் செலாவணியை வாங்கவும் தயாராக உள்ளது. இத் திட்டத்திற்குப் பொன் சமன் திட்டம் அல்லது பன்னாட்டுப் பொன் மாற்றுத் திட்டம் என்று பெயர்.

பன்னாட்டுப் பணநிதியின் உறுப்பினர் என்பதால், இந்திய ரூபாய் பலமுனை-மாற்றுரிமை கொண்டதெனினும், நடைமுறையில் நாணயமாற்றுக் கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப் படுகின்றன. வளர்ந்து வரும் இந்தியாவில் அயல்நாட்டுச் செலாவணிக்கான தேவையின் பெருக்கமும், அயல்நாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையுமே நாணயமாற்றுக் கட்டுப் பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்குக் காரணமாகும். நாட்டின் வசம் இருக்கும் அயல்நாட்டுச் செலாவணி இருப்பைப் பாது காக்கும் வகையில் ரிசர்வு பாங்கு முழுமையான நாணய மாற்றுக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றுகின்றது. இறக்குமதிகள் வெகுவாகக் கட்டுப்படுத்தப்படுவதுடன் அனாவசியமான இறக்குமதிகள் தடைசெய்யப்பட்டுள்ளன. அயல்நாட்டுச் செலுத்துதல்கள் யாவும் ரிசர்வு பாங்கால் அங்கீகரிக்கப் பட்டுள்ள விற்பனையாளர்கள் மூலமே நடைபெறவேண்டும். அயல்நாட்டுச் செலாவணிகள் கிடைப்பதற்கு ஏற்பவே பங்கீடு அளிக்கப்படுகின்றன. ஏற்றுமதியாளர்கள் தாம் பெற்ற அயல்நாட்டுச் செலாவணிகளை ரிசர்வு பாங்கால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விற்பனையாளர்களிடம் அளித்து, ரூபாயைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும், அயல் நாட்டுப் பத்திரங்களை இந்தியர்கள் வாங்குவதும், விற்பதுவும் விழிப்புடன் கட்டுப்படுத்தப்படுகின்றது. இவ்விதம் நாணய மாற்றுக் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்குக் காரணம், கிடைக்கும் அயல்நாட்டுச் செலாவணிகளைத் தவறாகப் பயன்படுத்தாமல் அவற்றைக்கொண்டு இயந்திரங்களையும் மூலப் பொருள்களையும் இறக்குமதிசெய்து, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவவேண்டுமென்பதே ஆகும்.

மேற்கோள் நூற்பட்டியல்
(Bibliography)

1. Chandler, Lester, V —'An Introduction to Monetary Theory'.
2. —, 'The Economics of Money and Banking'.
3. Clower, R.W.-'Monetary Theory' (Ed.).
4. Crowther, Geoffrey-'An Outline of Money'.
5. Day, A.C.L.-'Outline of Monetary Economics'.
6. Einzig, Paul-'How Money is Managed?'.
7. —, 'Inflations'.
8. Friedman, Milton-'Inflation : Causes and Consequences'.
9. Halm, George, N.-'Monetary Theory'.
10. Hansen, Alvin, H.-'Monetary Theory and Fiscal Policy'.
11. Hicks, J.R.-'Trade Cycles'.
12. Keynes, J.M.-'A Treatise on Money'.
13. —, 'Tract on Monetary Reforms'.
14. —, 'General Theory of Empolyment, Interest and Money'.
15. Kuri Hara, K.K.-'Introduction to Keynesian Economics'.
16. Newlin, W.T.-'Theory of Money'.
17. Paish, F.W.-'Studies in an Inflationary Economy'
18. Patinkin, Don-'Money, Interest and Price'.
19. Sayers, R.S.-'Modern Banking'.
20. Sen, S.N.-'Central Banking in Under-Developed Countries'.
21. Seth, M.L.-'An Introduction to Keynesian Economics'.
22. Sundharam, K. P. M.-'Money, Banking and International Trade'.
23. கோ. இராதாகிருஷ்ணன்-'பணம்-சிறு விளக்கம்'.
24. சி. வேலாயுதம்-'பணவியலும் பாங்கியலும்'.
25. 'Commerce'-Various Numbers.
26. 'Reserve Bank of India Bulletin'-Various Numbers.

கலைச்சொற்கள்

(Glossary)

A

Accelarator	—	முடுக்கி
Acceptance Market	—	ஏற்புச் சந்தை; ஏற்பு அங்காடி; ஏற்பு அகம்
Accepting House	—	ஏற்பகம்
Accounts	—	கணக்குகள்
Additional	—	கூடுதல்
Adverse Balance of Payments	—	சீர்கேடுற்ற அயல்நாட்டுச் செலுத்துநிலை இருப்பு
Aggregate	—	கூட்டு மொத்தம்
Anti-Inflationary Policy	—	பணவீக்க எதிர் கைகோள்
Approach	—	அணுகு முறை; ஆய்வு முறை
Assumptions	—	அனுமானங்கள்; எடுகோள்கள்
Authorised Dealers	—	அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்
Automatic Standard	—	தானியங்கு நாணயத் திட்டம்
Autonomous Investment	—	தன்னிச்சையான முதலீடு

B

Balance of Payments	—	அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை
Balance of Payments, Favourable	—	சாதக அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை
Balance of Payments, Unfavourable	—	பாதக அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை
Bank	—	வங்கி; பாங்கு
Bank Credit	—	வங்கிக் கடன்
Banker	—	வங்கியாளர்; பாங்கர்

Banker's Acceptance — வங்கியாளர் ஏற்பு; வங்கியின் ஏற்பு
Banking Principle — வங்கிமுறைக் கருத்து; பாங்கு முறைக் கருத்து
Bank Rate Policy — வங்கி வட்டிவீதக் கைகோள்
Barter Exchange — பண்டமாற்று
Bills — உண்டியல்கள்
Bills of Exchange — மாற்று உண்டியல்கள்; பரிவர்த்தனை உண்டியல்கள்
Bills, Treasury — கருவூல உண்டியல்கள்
Bimetalism — இரட்டை உலோகத் திட்டம்
Bonds — கடன் பத்திரங்கள்
Boom — பொருளாதார வீக்கம்; பூரிப்பு
Borrower — கடனாளி, கடன் பெறுவோர்
Borrowing — கைமாற்று
Budget — வரவு-செலவுத் திட்டம்
Budget, Deficit — பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டம்
Budget, Surplus — உபரி வரவு-செலவுத் திட்டம்
Business Cycle — வாணிபச் சுழல்
Business Motive — வாணிப நோக்கம்

C

Cambridge Equation — கேம்பிரிட்ஜ் சமன்பாடு
Capital — முதல்; மூலதனம்
Capital Formation — முதலாக்கம்; மூலதனத்திரட்சி
Capital Market — மூலதன அங்காடி; மூலதனச் சந்தை
Capitalism — முதலாளித்துவம்
Capitalistic Production — முதல்மய உற்பத்தி; மூலதன மய உற்பத்தி
Cash — ரொக்கம்
Cash-Balance Approach — ரொக்க-இருப்பு ஆய்வு முறை
Cheque — காசோலை
Claimatic Theory — காலநிலைக் கோட்பாடு
Claims — (பணம்) கோரும் உரிமை
Coins — காசுகள்
Coins, Subsidiary — துணைக்காசுகள்

Collateral Loans — துணைக்கடன்கள்
Constant Cost — மாறாச் (உற்பத்தி) செலவு
Construction Industries — கட்டுமானத் தொழில்கள்
Contingent functions — பிற வகைப் பணிகள்
Contraction — சுருக்கம்
Control — கட்டுப்பாடு
Consumer — நுகர்வோர்
Consumption — நுகர்ச்சி; துய்ப்பு
Convertible Paper Money — மாற்றுரிமையுள்ள காகிதப் பணம்
Cost — செலவு
Cost of Production — உற்பத்திச் செலவு
Creation of Credit — கடன் உற்பத்தி
Credit — கடன்
Creditor — கடன் ஈவோன்
Cumulative effect — தொடர் விளைவுகள்
Currency — செலாவணி
Currency, Hard — அருமைச் செலாவணி
Currency Principle — செலாவணி முறைக் கருத்து
Currency Reform — செலாவணிச் சீர்திருத்தம்

D

Decimal Coinage — தசாம்சக் காசுமுறை
Deficit Financing — பற்றாக்குறை நிதியாக்கம்
Deflation — பணவாட்டம்
Demand — தேவை
Demand, Aggregate — கூட்டு மொத்தத் தேவை
Demand, Derived — பிறப்பிக்கப்பட்ட தேவை; வழிவந்த தேவை
Demand, Effective — உறுதித் தேவை
Demand, Monetary — பணத்தேவை
Demand for Money — பணத்திற்கான தேவை
Demonetisation — உயர்மதிப்புச் செலாவணிகளைச் செல்லாதவையாக்குதல்
Deposit — வைப்பு
Deposit, Demand — தேவை வைப்பு
Deposit, Fixed — குறித்த கால வைப்பு; தவணை வைப்பு

Deposit, Recurring	— தொடர் வைப்பு
Deposit, Savings	— சேமிப்பு வைப்பு
Deposit, Time	— கால வைப்பு; காலங்குறி தவணை வைப்பு
Depositor	— வைப்பாளர்
Depression	— மந்தம்
Devaluation	— (நாணய) மதிப்புக் குறைப்பு
Discount	— கழிவு
Discount Houses	— கழிவு அகங்கள்; தீர்வகங்கள்
Disinflation	— பணச் சுருக்கம்
Disposable Income	— செலவிடப்படக்கூடிய வருமானம்
Draft	— பற்றுச்சீட்டு
Drawyee	— எழுதப்பெற்றவர்; பெறுபவர்
Drawyer	— எழுதுபவர்; அளிப்பவர்
Dynamic	— இயக்கநிலை

E

Economic Activity	— பொருளாதார நடவடிக்கை
Economic Effects	— பொருளாதார விளைவுகள்
Economic Growth	— பொருளாதார வளர்ச்சி
Economists	— பொருளாதாரிகள்; பொருளாதார அறிஞர்கள்
Economists, Classical	— தொன்மைப் பொருளாதாரிகள்
Economists, Modern	— புதுமைப் பொருளாதாரிகள்
Elasticity	— நெகிழ்ச்சி
Entrepreneur	— தொழில் முயல்வோர்; முயற்சியாளர்
Equalise	— சமநிலைப்படுத்து
Equation	— சமன்பாடு
Equation of Exchange	— பரிவர்த்தனைச் சமன்பாடு
Equillibrium	— சமநிலை
Excess	— மிகை
Exchange	— பரிவர்த்தனை; மாற்று
Exchange Controls	— (செலாவணி) மாற்றுக் கட்டுப்பாடுகள்
Exchange Equalisation Fund	— நாணயமாற்றுச் சமன்செய் நிதி

Exchange Value — மாற்று மதிப்பு
Expansion — பெருக்கம்
Export — ஏற்றுமதி

F

Factors — காரணிகள்
Factors of Production — உற்பத்திக் காரணிகள்
Financial Activities — நிதி நடவடிக்கைகள்
Financial Intermediaries — இடைநிலை நிதிநிறுவனங்கள்
Fiscal Policy — அரசிறைக் கைகோள்
Fixed Fiduciary System — மாறாத நம்பிக்கைத் திட்டம்; வரையறுக்கப்பட்ட நம்பிக்கைத் திட்டம்
Forced Saving — கட்டாயச் சேமிப்பு; திணிக்கப்பட்ட சேமிப்பு
Foreign Exchange — அயல்நாட்டுச் செலாவணி
Free Trade Policy — தடையிலா வாணிகக் கொள்கை
Full Employment — முழு வேலைமட்டம்; வேலை மட்ட நிறைவு

G

Gold — பொன்
Gold, Mobility of — பொன்னின் இடப்பெயர்ச்சி
Gold Bullion Standard — பொற்கட்டித் திட்டம்
Gold Coin Standard — பொற்காசுத் திட்டம்
Gold Drain — பொன் வெளியேற்றம்
Gold Exchange Standard — பொன் மாற்றுத் திட்டம்
Gold Parity Standard — பொன் சமன் திட்டம்
Gold Reserve — பொன் காப்பு
Gold Reserve Standard — பொன் காப்புத் திட்டம்
Gold Standard — பொன் திட்டம்
Gold Standard, Domestic — உள்நாட்டுப் பொன் திட்டம்
Gold Standard, International — பன்னாட்டுப் பொன் திட்டம்
Government — அரசு; அரசாங்கம்
Grants — மானியம்

Great Depression — பெரும் மந்தம்
Gresham's Law — கிரஷாமின் விதி

H

Hire Purchase — தவணைக் கொள்முறை
Hoarding — பதுக்கிவைத்தல்

I

Identical — முழுதும் ஒத்த; சிறிதும் வேறுபாடற்ற
Imports — இறக்குமதிகள்
Import Duties — இறக்குமதி வரிகள்
Import Quotas — இறக்குமதிப் பங்களவு
Income — வருமானம்
Income, Money — பண வருமானம்
Income, Motive — வருமான நோக்கம்
Income National — தேசீய வருமானம்
Income, per Capita — தனிநபர் தலா வருமானம்; தனிநபர் வருமானம்
Income, Real — மெய்யான வருமானம்
Income. Theory — வருமானக் கோட்பாடு
Inconvertible Paper Money — மாற்றுரிமையற்ற காகிதப் பணம்
Index Number — குறியீட்டு எண்
Indirect Taxes — மறைமுக வரிகள்
Inelastic — நெகிழ்ச்சியற்ற
Inflation — பணவீக்கம்
Inflation, Cost-push — செலவால் உந்தப்பட்ட பண வீக்கம்
Inflation, Creeping — தவழும் பணவீக்கம்
Inflation, Deficit Induced — பற்றாக்குறை நிதியாக்கத்தால் ஏற்பட்ட பண வீக்கம்
Inflation, Demand-pull — தேவையால் இழுக்கப்பட்ட பணவீக்கம்
Inflation, Galloping — தாவும் பணவீக்கம்
Inflation, Hypher — மிகையான பணவீக்கம்; மட்டற்ற பணவீக்கம்

Inflation, Peace-time — அமைதிக்காலப் பணவீக்கம்
Inflation, Post-war — போர்ப் பிற்காலப் பணவீக்கம்
Inflation, Running — ஓடும் பணவீக்கம்
Inflation, Walking — நடக்கும் பணவீக்கம்
Inflationary Gap — பணவீக்க இடைவெளி
Innovation — புத்தாக்கம்
International Monetary Fund — பன்னாட்டுப் பண நிதி
International Trade — பன்னாட்டு வாணிகம்
Intervention — தலையீடு
Inverse Ratio — தலைகீழ் விகிதம்
Investment — முதலீடு
Investment, Autonomous — தன்னிச்சையான முதலீடு
Investment, Induced — ஊக்குவிக்கப்பட்ட முதலீடு
Investment, Monetary — பணத்துறை முதலீடு

J

Joint Cost — கூட்டுச் செலவு
Joint Demand — கூட்டுத் தேவை
Joint Product — கூட்டு உற்பத்திவிளைவு
Joint Supply — கூட்டு அளிப்பு
Just Price — நியாய விலை

L

Labour, Theory of Value — மதிப்பின் உழைப்புக் கோட்பாடு; உழைப்பளவை மதிப்புக் கோட்பாடு
Lag, Time — காலப் பின்னடைவு
Laissez Faire — தலையிடாமை
Large Scale Production — பெருவாரி உற்பத்தி; பேரளவு உற்பத்தி
Leakages — கசிவுகள்
Legal Tender — சட்டச் செலாவணி
Legal Tender, Limited — வரையிட்ட சட்டச் செலாவணி
Legal Tender, Unlimited — வரையற்ற சட்டச் செலாவணி
Lender — கடனீவோன்

Liability — பொறுப்பு
Limping Standard — நொண்டித் திட்டம்
Liquid Assets — ரொக்கமாகக்கூடிய சொத்துகள்
Liquidity — ரொக்கநிலை
Liquidity Preference — ரொக்க விருப்பம்
Liquidity Theory — ரொக்கநிலைக் கோட்பாடு
Loanable Funds — கடன்தரும் நிதிகள்
Loans — கடன்கள்

M

Managed Currency Standard — நிருவகிக்கப்பட்ட செலாவணித் திட்டம்
Manufacture — பொறிசெய்பொருள்
Marginal — இறுதிநிலை
Marginal Efficiency of Capital — மூலதனத்தின் இறுதிநிலைத் திறன்
Marginal Income — இறுதிநிலை வருமானம்
Marginal Investment — இறுதிநிலை முதலீடு
Marginal Output — இறுதிநிலை வெளிப்பாடு
Marginal Product — இறுதிநிலை உற்பத்தி
Marginal Productivity — இறுதிநிலை உற்பத்தித்திறன்
Marginal Profit — இறுதிநிலை இலாபம்
Marginal Returns — இறுதிநிலை விளைவு
Marginal Revenue — இறுதிநிலை வருவாய்
Market — சந்தை, அங்காடி
Maximum Fiduciary System — உச்சவரம்பு நம்பிக்கைத் திட்டம்
Measure of Value — மதிப்பளவை; மதிப்பளவு கோல்
Medium of Exchange — பரிவர்த்தனைச் சாதனம்; இடையீட்டுக் கருவி
Minimum Reserve System — குறைந்த அளவுக் காப்புத் திட்டம்
Mint — நாணயச்சாலை
Mint par Value — நாணயச்சாலை முகப்பு மதிப்பு
Monetary Authority — பணவாக்கப் பொறுப்பினர்; பணவாக்க அதிகாரி

Monetary Phenomenon	—	பணவழிப் பிரச்சினை
Monetary Policy	—	பணவாக்கக் கைகோள்
Monetary Standard	—	பணத் திட்டம்
Monetary System	—	பணத் திட்ட அமைப்பு
Money	—	பணம்
Money of Account	—	கணக்கீட்டுப் பணம்
Money, Cheap	—	மலிவுப்பணம்
Money, Dear	—	அரும்பணம்
Money, Fiat	—	கட்டளைப் பணம்; ஆணைச் செலாவணி
Money, Fully-bodied	—	முழு உலோகப் பணம்; முற்றுருப் பெற்ற பணம்
Money, Hot	—	கடும் பணம்
Money Market	—	பணச்சந்தை, பண அங்காடி
Money, Mettalic	—	உலோகப் பணம்
Money, Near	—	நெருங்கிய பணம்
Money, Neutral	—	பொதுவான (பாதிக்காத) பணம்
Money, Paper	—	காகிதப் பணம்; தாள் பணம்
Money, Proper	—	நடைமுறைப் பணம்
Money, Representative	—	பிரதிநிதிப் பணம்; பிரதிப் பணம்
Money, Standard	—	நியமனப் பணம்; பிரமாணப் பணம்; திட்டப் பணம்; நிலையான பணம்
Money, Token	—	அடையாளப் பணம்
Monometalism	—	ஒற்றை உலோகத் திட்டம்; தனி உலோக நாணயத் திட்டம்
Mortgage Bank	—	அடைமான வங்கி
Multiple Rate of Exchange	—	பலமுனை நாணயமாற்று வீதம்
Multiplier	—	பெருக்கி
Multiplier, Employment	—	வேலைப் பெருக்கி
Multiplier, Income	—	வருமானப் பெருக்கி

N

Natural Rate	—	இயற்கை வீதம்
Net Value	—	நிகர மதிப்பு

Nominal Income — பெயரளவு வருமானம்
Normal Price — சாதாரண விலை; இயல்பான விலை
Normal Profit — இயல்பான இலாபம்
Note-issue — பணத்தாள் வெளியீடு
Notes — பணத்தாள்கள்
Notes, Currency — செலாவணித் தாள்கள்
Notes, Promissory — வெண்கடன் பத்திரம்; புரோ-நோட்டுகள்

O

Objective — குறிக்கோள்; நோக்கம்
Objectivity — தற்சார்பற்ற நிலை
Open Market Operation — வெளிச்சந்தை நடவடிக்கை; புற அங்காடி நடவடிக்கை
Output — உற்பத்தி; வெளிப்பாடு
Overdraft — அதிகப் பற்று
Over Issue of Notes — காகிதப்பணத்தின் மிகையான வெளியீடு
Over Production — அமித உற்பத்தி; மிகையான உற்பத்தி
Over Saving — அமிதச் சேமிப்பு; மிகையான சேமிப்பு

P

Paper Currency Standard — காகிதச் செலாவணித் திட்டம்
Par of Exchange — செலாவணி மாற்றுமதிப்பு
Par Value — முகப்பு மதிப்பு
Passive — அமைவான
Payments — செலுத்துகள்; செலுத்தினங்கள்
Payments, International — பன்னாட்டுச் செலுத்துகள்
Percent, Percentage — சதவீதம்
Precautionary motive — எச்சரிக்கை நோக்கம்
Price — விலை
Price Control — விலைக் கட்டுப்பாடு
Price Level — விலைமட்டம்
Price Mechanism — விலைப்பொறி

Price Spiral	—	விலைச் சுழலெறி
Price Support	—	விலை ஆதரவு
Primary	—	முதன்மையான
Producer	—	உற்பத்தியாளர்
Producer's Surplus	—	உற்பத்தியாளர் உபரி
Production	—	உற்பத்தி; ஆக்கம்
Profit	—	இலாபம்
Profit Motive	—	இலாப நோக்கம்
Promise	—	உறுதிமொழி
Propensity to consume	—	நுகர்ச்சி நாட்டம்
Propensity to consume, Marginal	—	இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம்
Propensity to save	—	சேமிப்பு நாட்டம்
Propensity to save, Marginal	—	இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம்
Proportional	—	வீதாசாரமான
Proportional Reserve System	—	வீதாசாரக் காப்புத் திட்டம்
Prosperity	—	செழிப்பு
Psychological Theory	—	உளவியல் கோட்பாடு
Purchasing Power	—	வாங்கும் திறன்

Q

Qualitative Control	—	தரக் கட்டுப்பாடுகள்
Quantitative Control	—	அளவுக் கட்டுப்பாடுகள்
Quantity Theory of Money	—	பண அளவுக் கோட்பாடு; பணக் கணியக் கோட்பாடு
Quotas	—	பங்களவுகள்

R

Rate of Exchange	—	அந்நியச்செலாவணி மாற்று வீதம்
Rate of Interest	—	வட்டி வீதம்
Rate of Interest, Money	—	பண வட்டி வீதம்
Rate of Interest, Real	—	மெய்யான வட்டி வீதம்
Ratio	—	வீதம்; விகிதம்
Ratio, Income-Cash	—	வருமான-ரொக்க வீதம்
Rationing	—	பங்கீடு
Recession (Revival)	—	மறுமலர்ச்சி; மீட்சி

Recommendations	—	பரிந்துரைகள்
Rediscounting	—	மறுகழிவு
Redistribution of Income	—	வருமான மறுபகிர்வு
Reflation	—	மீட்சி; மீட்சிப் பணப் பெருக்கம்
Reserve	—	காப்பு
Reserve Fund	—	காப்பு நிதி
Reserve, Gold	—	பொன் காப்பு
Reserve, Rupee	—	ரூபாய்க் காப்பு
Reserve, Secondary	—	பின்னணிக் காப்புநிதி; இரண்டாம் நிலைக் காப்புநிதி
Reserve Sterling	—	ஸ்டெர்லிங் காப்பு
Revenue	—	வருவாய்
Risk	—	ஆபத்து; இடர்

S

Saving	—	சேமிப்பு
Securities	—	பத்திரங்கள்; ஆவணங்கள்
Seigniorage	—	நாணய அச்சுத் தீர்வை
Selective Credit Control	—	தேர்வுக் கடனளிப்புக் கட்டுப்பாடு; பொறுக்குக் கடன் கட்டுப்பாடு
Short-dated Bills	—	குறுகிய நாளிட்ட உண்டியல்கள்
Short-period	—	குறுங்காலம்
Slump	—	மந்தம்
Socialism	—	சமதர்மம்
Speculation	—	ஊக வாணிகம்
Speculative motive	—	ஊக இலாபநோக்கம்
Stabilization	—	நிலைபேறாக்கம்
Standard of Deferred Payments	—	தள்ளிப்போட்ட செலுத்து சாதனம்
Standard of Value	—	மதிப்பளவுகோல்
Static	—	அசலன நிலை
Stock	—	இருப்புச் சரக்கு; இருப்பு
Stock Exchange	—	பங்குமாற்றுச் சந்தை
Subsidy	—	உதவிக் கொடை
Substitute	—	பதிலி
Suggestions	—	ஆலோசனைகள்

Supply — அளிப்பு
Supply, Aggregate — கூட்டுமொத்த அளிப்பு
Supply of Money — பணத்தின் அளிப்பு
System — முறை

T

Tariffs — சுங்கவரிகள்
Taxable Income — வரிக்குரிய வருமானம்
Taxation — வரிவிதிப்பு
Technology — தொழில் நுண்ணியல்
Theory — கோட்பாடு; கருதுகோள்
Time Element — காலக்கூறு; கால அமிசம்
Time, at a Point of — ஒரு குறிப்பிட்ட நேரத்தில்
Time, Over a Period of — ஒரு கால இடைவெளியில்
Traditional — மரபுவழியான
Transfer of Value — மதிப்பு மாற்றுச்சாதனம்
Treasury Bills — கருவூல உண்டியல்கள்
Turnover — விற்பனைப் புரள்வு

U

Under Consumption Theory — குறை நுகர்வுக் கோட்பாடு
Under developed Country — பின்தங்கிய நாடு
Under Employment — குறை வேலை
Unemployment — வேலையின்மை
Unemployment, Voluntary — தன்னிச்சையான வேலையின்மை
Unit Trust — 'யூனிட் டிரஸ்ட்'
Utility — பயன்பாடு
Utility, Additional — கூடுதல் பயன்பாடு
Utility, Average — சராசரிப் பயன்பாடு
Utility, Marginal — இறுதிநிலைப் பயன்பாடு
Utility, Total — மொத்தப் பயன்பாடு

V

Value — மதிப்பு
Value, Absolute — தனி மதிப்பு

Value-in-exchange	—	பரிவர்த்தனை மதிப்பு; விற்பனை மதிப்பு
Value-in-use	—	உபயோக மதிப்பு; பயன்பாட்டு மதிப்பு
Value, Relative	—	ஒப்பு மதிப்பு
Velocity	—	வேகம்
Velocity of Circulation	—	சுழல்வேகம்
Volume	—	பருமம்; அளவு

W

War Finance	—	போர் நிதி
Wealth	—	செல்வம்
Wealth Holding	—	செல்வ உடைமை
Weighted Index Number	—	நிறையிட்ட குறியீட்டு எண்
Welfare State	—	வளன்நிறை அரசு

Y

Yield	—	விளைவு
Yield on Securities	—	பத்திரங்களின் விளைவு

Z

Zero	—	பூஜ்யம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600 031

★

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்
(Tamil Medium Books for Colleges)

1980 ஏப்ரல் முடிய 899 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

★

மேலும் விரைவில் வெளிவருபவை

அகராதியியல்	—	1	நூல்
இயற்பியல்	—	3	,,
கணிதவியல்	—	1	,,
கல்வியியல்	—	2	,,
தாவரவியல்	—	1	,,
புவியியல்	—	1	,,
பொருளியல்	—	2	,,
மருத்துவவியல்	—	1	,,
வணிகவியல்	—	1	,,
வானியல்	—	1	,,

கிடைக்குமிடங்கள் :

1. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு
விக்ரம் சாராபாய் மின்னணு வளாகம்,
பலகை வாராவதி, திருவான்மியூர்,
சென்னை-600 041

2. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
62, ஸ்பர் டாங்க் சாலை, சேத்துப்பட்டு,
சென்னை-600 031

கிடங்கில் வாங்குவோர்க்கு 20% கழிவு வழங்கப்படும்.
பாடநூல் நிறுவனத்தில் ,, 10% கழிவு வழங்கப்படும்.